In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவமஞ்சரி

சிவமஞ்சரி 8 தொகுதி

பூசை. ச. அருணவசந்தன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

C.S.S.

உ

சிவமயம்

சிவமஞ்சரி

-எட்டாம் தொகுதி -

(பக்கங்கள்-1121 முதல் 1280 வரை)

ஆசிரியர்

சிவமஞ்சரிச் செம்மல், அருட்பணிஅரசு, சிவசேவா ரத்னம்

பூசை. ச. அருணவசந்தன்

சிவமஞ்ச்ரி - எட்டாம் தொகுதியின் இந்த இரண்டாம் பதிப்பு

திருவாவடுதுறை ஆதீன குருமகா சந்நிதானம்

சீர்-வளர்-சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சார்ய சுவாமிகளின் நல்லாசியுடன்

சென்னை சிவத்திரு. A.M.சுவாமிநாதன், (மேனாள் நிதித்துறைச் செயலளர், தமிழ்நாடுஅரசு) அவர்கள்,

சித்தாந்த ரத்தினம் விஸ்வ. ஆறுமுகம் அவர்கள் (மேனாள் விஞ்ஞானி சி.எல்.ஆர்.ஐ, சென்னை)

ஆகியோரின் துணையுடன் நந்தன ஆண்டு வைகாசி விசாக நன்னாளில் (05-06-2012) வெளியிடப்பட்டது.

சிவசுந்தரி கலைக்கூடம்

29, பீமண்ண முதலி தோட்டத் தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை-18

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நூலின் விவரம்

நூலின் பெயர்	சிவமஞ்சரி (எட்டாம் தொகுதி) 8
நூலின் ஆசிரியர்	பூசை. ச. அருணவசந்தன்
பதிப்பு ஆண்டு	முதற் பதிப்பு- 2006, இரண்டாம் பதிப்பு 2012
உரிமை	ஆசிரியருக்கு
பதிப்பாளர் / ஆசிரியர்	பூசை. ச. அருணவசந்தன்
முகவரி	ப. எண். 29, பீமண்ண முதலி கார்டன் தெரு ஆழ்வார்பேட்டை, சென்னை 600 018. அலைபேசி : 99411 24964
பக்கங்கள்	8+160 ஆக 168பக்கங்கள்
நூல் அளவு	கிரெளன் 1.4 -(24 c.m. x 18.2 c.m.)
அச்சிட்டுள்ள பரப்பளவு	21.5 செ.மீ x 15.2 செ.மீ
பயன்படுத்தப்பட்டுள்ள தாள்	பலாபூர் எச்.பி டபுள் கிரெளன் 11.6 கி.கி.
பயன்படுத்தப்பட்டுள்ள எழுத்துக்கள்	10.8 புள்ளிகள்
மின் அச்சுக் கோர்வை	சிவசுந்தரி , செங்கழுநீர் பிள்ளையார் கோயில்தெரு மயிலாப்பூர் சென்னை -4.
மறுதோன்றி அச்சகம்	ஸ்ரீ ஆப்செட் பிரிண்டர்ஸ் 3, பழைய ஜெயில்ரோடு,தங்கசாலை , சென்னை 1.போன் 25283554
நூலின் பொருள்	சிவபெருமானைப்பற்றி, புராணங்கள், வடமொழி தமிழ்வேதங்கள்,தலவரலாறுகள் ஆகியவற்றிலிருந்து தொகுக்கப்பட்ட செய்திகள் தனித்தனி தலைப்புகளில்
விலை	ரூபாய் 100/-
நூலகக் குறியீட்டு எண்	-

அட்டையில்-ஸ்ரீபிட்சாடனமூர்த்தி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவமயம்
திருச்சிற்றம்பலம்

முதற் பதிப்பின் முகவுரை

செம்பொருட் சோதியான சிவபெருமானின் திருவருளினால் சிவமஞ்சரியின் இந்த எட்டாவது தொகுதி மலர்ந்து தங்களின் திருக்கரங்களில் தவழ்கிறது. இதில் முதல் மலர் தீபங்களைப் பற்றியும், இரண்டாவது மலர் தலவிருட்சங்களைப் பற்றியும், மூன்றாவது மலர் இராஜ கோபுரம், பிராகாரங்கள், திருமதில்கள் பற்றியும் நான்காவது மலர் கருவறையான ஸ்ரீவிமானங்களைப் பற்றியும், ஐந்தாம் மலர் தீர்த்தங்களைப் பற்றியும், இயன்ற வரை தொகுக்கப்பட்ட செய்திகளைத் தாங்கி மலர்ந்துள்ளன.

இம்மலர்மலரும்வேளையில் இதனை உருவாக்கத் துணைநின்ற அனை வரையும் போற்றிப்பணிந்துவணங்கிஎமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின் றேன்.

சிவமஞ்சரியின் முதல் இதழைக் கண்ணுற்று நேரில் அழைத்து அதுமுதல் அன்பு பாராட்டி வரும் **குருமகா சந்நிதானம் சீர்–வளர்–சீர் சிவப்பிரகாச தேசிக பண்டார சந்நிதி** அவர்களின் பொன்னார் திருவடிகளைப் போற்றி பணிந்து வணங்குகிறேன்.

இந்தப் பணிக்கு அருளாசி தந்து அருள்பாலித்து வரும் வணக்கத்திற்குரிய குருநாதர் குருஜி திருப்பணிச் செல்வர் **சிவஸ்ரீ.ஆர்.துரைராஜன் (எ) பத்மநாபன்** அவர்களைப போற்றி வணங்குகிறேன். சிவபூஜா துரந்தரரான அவர் அனேக திருப்பணிகளைச் செய்து வருகிறார்.

அவரை அடியொற்றிச் சிவப் பணிகளைச் சிறந்த முறையில் ஆற்றி வரும் 'திருப்பணிச் செல்வர்' அருட்பணி அரசு சிவஸ்ரீ.**M.V. ஜெய்சங்கர்** அவர்கள் தொடர்ந்து நல்லாதரவு தந்து வருகிறார். இவர் சிவசுந்தரி அறக்கட்டளை என்ற அமைப்பை ஏற்படுத்தி அதன் மூலம் பல்வேறு திருப்பணிகளைச் செய்து வருகிறார். இவருக்கும் நல்லாதரவு தந்து வரும் இவருடைய குடும்பத்தினருக்கும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

எமது பணிகள் அனைத்திற்கும் எனது அன்பின்கினிய **சகோதரி திருமதி. வீ. அனந்த லட்சுமியும்,**அவருடைய கணவர் கயிலை நன்மணி **சிவஸ்ரீ வ.வீரராகவன்** அவர்களும், துணை நின்று உதவி வருகின்றனர். இத்தம் பதியருக்கு எனது நன்றி உரித்தாகுக.

முப்பத்தாறாவது மலரான தீப மங்களேசுவரர் **சிதம்பரம் டாக்டர் சோ.முருகன்** அவர்கள், அவ்வப்போது ஆய்வுப்பணிகளுக்கு அளித்துவந்த அருட் கொடைகளைக் கொண்டு வெளியாகி உள்ளது. இதன் இலவச வெளியீட்டிற்கு எனது சகோதரி திருஆதிரை திருமுறை மன்றச் செயலர்பொலம்பாக்கம் **திருமதி.நாக பூஷணன்சுதர்சனம்**அவர்கள் உதவினார்கள்.

முப்பத்து ஏழாவது மலரான தல விருட்சங்கள்(திருத்தல மரங்கள்) என்னும் மலருக்குத் தேவையான உதவிகளைபிரம்மஸ்ரீகயிலைநன்மணி **யாழ் கே.கே. கோபால சர்மா** அவர்கள் உதவினார்கள். நமது புரவலரான இவர் நமது பணிகள் அனைத் திற்கும் வேண்டிய உதவிகளை அவ்வப் போது செய்து வருகிறார்கள்.**டெல்லிவாழ் அன்பர் திரு. வீர ராகவன்** அவர்கள் இதன் இலவச வெளியீட்டிற்கு உதவி புரிந் தார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முப்பத்துஎட்டாவதுமலரான ஸ்ரீராஜ கோபுரமும் முப்பத்தொன்பதாவது மலரான ஸ்ரீ விமானேசுவரரும், காஞ்சீபுரம் சிற்பக்கலாமணி, தருமசீலர் கலை மாமணி சிவஸ்ரீ.சாமி சுப்பையா ஸ்தபதியார் அவர்களின் பொருட் துணை கொண்டு வெளிவந்தன. ஸ்தபதியார் அவர்கள் தனது மணி விழாவின் போது என்னை வாழ்த்தி ரூபாய் 5000/- அன்பளிப்பாக வாழ்த்தியளித் தார் கள். அத் தொகை இந்நூலுக்குப் பயன்பட் டது. இவருடைய குமாரர் சிவஸ்ரீ கயிலை மணி சிவா(எ) சாமிநாதன் அவர்கள் நமது பணி களுக்குப் பெருந் துகை புரிந்து வருகிறார் கள்.

அடையாறு கற்பகம் கார்டன்ஸ் பிரம்மஸ்ரீ. ஜி.எஸ்.நடராஜன் அவர்கள் சிவ மஞ்சரியின் அச்சுப் பிரதிகளைச் செம்மைப் படுத்தி உபகரித்து வருவ து டன்,இவர் தகுந்த அறிவுரைகளை வழங்கி இப்பணியை செ மருகேற்றி வருகின்றார். இவருடைய குமாரர் ஸ்ரீ என். குமார்(எ) பாலசுப்பிரமணியன் (ஸ்பீகல் பிரிண் டர்ஸ்) அனேக உதவிகளைச் செய்து வருகின்றார். மேலும் செய்தி களைத் திரட்டவும், படிகளைத் திருத்தி யும், சிவஸ்ரீத.பூமிநாதன்(உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், தரமணி) உதவினார்கள். இவர்களுக்கு நன்றி உரித்தாகுக. கருத்துக் களை ஒப்புநோக்கி உதவிய மஞ்சரி ஸ்ரீராம் அவர்களுக்கும் நன்றி.

இந்நூலில் இடம் பெற்றுள்ள படங்கள் பலவற்றை சிவஸ்ரீ சிவா(எ) சுவாமிநாத ஸ்தபதியார் ஆகியோர் வழங்கினார். மேலும் சிவஸ்ரீ மீனாட்சி சுந்தரம் (இந்து தர்ம மன்றம்) சிவஸ்ரீ ஸ்ரீதரன் (தொல்லியல் துறை) ஸ்ரீ ரகுநாதன் நிர்வாக அதிகாரி மதுரை ஹரி வாசுதேவ் ஆகியோர் அளித்தனர். வேண்டிய போதுதமிழ்நாடு தொல்லியல் துறையினர் படங்களை உதவி வரு கின்றனர். தல யாத்திரைகள் மேற் கொண்ட போது பல அன்பர்கள் தாங்கள் திரட்டி வைத்திருந்த பழைய படங்களைச் கொடுத்து உதவி யுள்ளனர். இவர்கள் யாவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

வரைபடங்களை ஓவியர்கள் சிவஸ்ரீ கோவி (கோவிந்தராசன்) சிவஸ்ரீ. திருமயிலை காசிஸ்தபதியார் ஆகியோர் வரைந்தளித் தனர். இவர்களுக்கு எமது நன்றி உரித் தாகுக.

இப்பணிக்கு ஆரம்பம் முதல் இன்று வரை தொடர்ந்து நல்லாதரவு தந்து வருபவர்களான சென்னை அண்ணா பல்லைக்கழகப் பேரா.டாக்டர்.சிவஸ்ரீ. ஆர். இராதாகிருஷ்ணன் கட்டுமானப் பொறி யாளர் தேனாம்பேட்டை திரு.வி. ஜெய ராமன், கோபாலபுரம், திரு.ராஜா (மேலாளர் ரிசர்வ் வங்கி அதிகாரி) சிவஸ்ரீ டாக்டர் வி.பி.ஆர். வரதராஜன்(ராமபாண்டியராஜ் கிளினிக்) திருமதி. விஜயா ஆனந்த். சிவஸ்ரீ முரளிதரன் (இம்ப்காப்ஸ்) சிவஸ்ரீ சுவர்ணகுமார் (டி.வி.எஸ்.) சிவஸ்ரீ கோபு (எ) கோபாலன் (தி.நகர்) மந்தைவெளி. திருமதி. திரிபுரவல்லி மாமி, சித்தாந்த ரத்தினம் கணேசன் சிவஸ்ரீ எம். சச்சி தானந்தன் (தனலட்சுமி வங்கி) புதுவை சி. ரவிசங்கர் (ஜெய்சற்குரு) பல் மருத்துவ மனை) சிவஸ்ரீ எல்.ஆறுமுகம், திருவல்லிக் கேணி, எம். சீனிவாசன், சிவலிங்கம், சிவ்ஸ்ரீ சுந்தரேசன் (சென்னை வானொலி நிலையம்) சென்னை ஆறுபடை வீடு ப்ரம்மஸ்ரீ ஏகாம்பர ஞானஸ்கந்த சிவாச்சாரியார்) மூர்த்தி கோடம் பாக்கம் புலியூர் சிவஸ்ரீ பாலச்சந்திர சிவாச்சார் யார் சத்தீஷ், சிவஸ்ரீ விசுவநாத குருக்கள் (காமேஷ்) சிவஸ்ரீ கமல் குருக்கள்ஆகியோ ருக்கும் எனது நன்றி உரித்தாகுக.

சிவமஞ்சரியைப் பல இடங்களில் அறிமுகப் படுத்தி நல்லாதரவைத் திரட் டித் தரும் சிதம்பரம் சிவஸ்ரீ பரமேஸ்வர தீக்ஷிதர் சிவத்திரு திருவாவடுதுறை ஆதீன சைவ சித்தாந்த நேர்முக பயிற்சி மைய இயக்குநர் ஈசானசிவம் சிவத்திரு கு.வைத்ய நாதன் புதுவை அன்பர்கள் சித்தாந்த ரத்தினம் ம. சேகர், சிவபூஜாதுரந்தரர் திரு.ஹரிவாசு தேவ்- ஜெகதீஸ்வரி தம்பதி யார்,கலைமகள் பத்திரி கை ஆசிரியர் கீழாம்பூர் திரு.சங்கர சுப்பிரமணியன் ஆகியோருக்கு எனது நன்றி உரித் தாகுக.

அச்சுப்பணியில் மின்னச்சு செய்த ளித்து வரும் சென்னை திருவான்மியூர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நன்றி மலர்கள்

பேரன்புடையீர்!

சிவமஞ்சரியின் எட்டாவது தொகுதியின் முதற்பதிப்பு 2006ஆம் ஆண்டில் பல்வேறு நண்பர்களின் நல்லாதரவுடன் வெளியானது. இப்போது (2012ல்) இரண்டாம் பதிப்பு வெளிவருகிறது. சென்ற பதிப்பு வெளிவரப் பேருதவி புரிந்த அன்பர்களுக்கும் தொடர்ந்து நல்லாதரவு தந்துவரும் சிவநேயச் செல்வர்களுக்கும் இந்த இனிய வேளையில் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இப்பதிப்புக்கு முன்வெளியீட்டுத் தொகை வழங்கிய அன்பர்களுக்க இனிய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டு எமது நன்றி மலர்களைச் சூட்டி மகிழ்கிறேன்.

அன்பர்கள் அனைவருக்கும் கற்பகவல்லி உடனாய கபாலீசுவரப் பெருமான் சகல செல்வயோக மிக்க பெருவாழ்வைத் தந்து பேரின்பத்தில் திளைத்திருக்கச் செய்ய வேண்டுமென்று அவர்தம் பொற்பாதங்களில் சதா பிரார்த்திக்கிறேன்.

இங்ஙனம் சிவப்பணியில் மீளா அடிமை

வாழி நலம் சூழ அன்பர் பூசை.ச.அருணவசந்தன்

வேதநிதி பிரம்மஸ்ரீ .ஜி.பரமேஸ்வரதீக்ஷிதர்,
சிதம்பரம்.

இருமொழிச்சீராளர்.திருவையாறு.வே.ரமணன்,
இருப்பு சிதம்பரம்

பிரம்மஸ்ரீ.P.B.வெங்கட்ராமன்,
'ஆஷியானா',சென்னை-18

திருமதி. பிரேமா வெங்கட்ராமன்,
ஈஞ்சம்பாக்கம், சென்னை-41.

திரு டி.கே. நீலகண்டன்,
அமைந்தகரை, சென்னை-29.

சிதம்பரம். சீனு.அருணாசலம்,
அமைப்பாளர், சைவ சித்தாந்தப் பயிற்சிமையம்

டாக்டர் வி.பி.ஆர். வரதராஜன்,
இராமவேல் பாண்டியன் கிளினிக், சென்னை-4

திரு. ஏ. வெங்கடேசன்,
கோரல் மினார், சென்னை-28

திரு.மோகனசம்பத்.இராஜ சிம்ம மகேந்திரன்,
பெருமாளகரம், சென்னை-4

சிவஸ்ரீ. எல். சங்கர், மாடம்பாக்கம், சென்னை-4

திரு.எம். சச்சிதானந்தம்,
தனலட்சுமி வங்கி, சென்னை

திருமதி. எஸ். பத்மா, தனலட்சுமி வங்கி, சென்னை

திருமதி. சியாமளா சீனிவாச கோபாலன்,
மேனாள் எஸ்பிஐ வங்கி அதிகாரி, சென்னை-41

சிவத்திரு என். கார்த்திகேயன், திருவல்லிக்கேணி

சிவத்திரு. மு. அபிராமன், கோவை

பேராசிரியர் டாக்டர் எம்.வி. சத்யநாரயணா,
ஐ.ஐ.டி கிண்டி, சென்னை

சித்தாந்த ரத்தினம். டாக்டர் சி. ரவிசங்கர்,
சற்குரு பல் மருத்துவமனை ரெட்டியார்பாளையம், புதுவை

டாக்டர் திருமிகு .டி.கே. தேவராஜன், திருமழிசை

வி.எஸ். கல்யாணராமன் ஐ.பி.எஸ்,(ஓய்வு)
சுக்ருதா, மாருதிநகர், பெங்களூரு

திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி, நெய்வேலி

திரு.கே.கே.கோபாலன்சர்மா,
பரமேஸ்வரி நகர், அடையாறு, சென்னை- 20

பிரம்மஸ்ரீ. சுந்தரம் கிருஷ்ணமூர்த்தி,
டிரஸ்ட் கொயர் அயன்புரம், சென்னை- 23

திருமதி. கலா(என்கிற) மண்ணாங்கட்டி,
திலகர் நகர், புதுவை-9

திரு.வி. சக்திகுமரன், சாந்திநகர், புதுவை 11

திரு.பஸ்டி. முருகய்யன்,
முத்தியால்பேட்டை, புதுவை 3

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திரு. என்.குமாரவிஜயன்,
இந்திராநகர், முதலியார்பேட்டை, புதுவை 4

திரு. வி. சி.கோபிநாத், புதுவை 1

செல்வத்திரு.ஆர். நர்மதா,பாண்டிச்சேரி

சிவஸ்ரீ எம்.எஸ். ராமகிருஷ்னன்,
ஈஸ்வரன் கோயில் தெரு, புதுவை

திரு. முத்துக்குமார் முதலியார், மதுரவாயல்

திருமதி. எச். கோமதி ஹரிஹரன், சென்னை-4

திரு. ஆர். சிவக்குமார், நெய்வேலி

திரு.ஆர்.ராமச்சந்திரன் நூம்பல், சென்னை-79

திருமதி. விமலா சுப்பிரமணியன், தூத்துக்குடி

திரு. நாடியன் செல்வன், பெங்களூரு

மயிலை,திரு. ஆனந்தன்,
இராமகிருஷ்ணா யாத்ரா சர்வீஸ்,சென்னை-4

திரு. தங்கவேலன்,
ஜேவிஎஸ்.. ஜுவல்லரி, சேலம்

திரு. சம்பத், திருமழிசை

திரு. விஸ்வநாதன், மேனாள் வங்கி உயர்அதிகாரி,
தேசிகாச்சாரி ரோடு, சென்னை 4

சிவஸ்ரீ எஸ். ஸ்ரீனிவாசன்,ராம் பிளாட்ஸ் ஸ்ரீநகர் காலனி, சென்னை 15

ஸ்ரீனிவாசா கிராபிக்ஸ் உரிமையாளர்கள் திரு. செந்தில், திரு. எம்.பாலாஜி ஆகியோருக்கும், தட்டச்சர் திரு. ஜே. ரமேஷ் குமார் திரு. சுந்தரமூர்த்தி (ஸ்ரீஆப்செட்) நிழற்பட பிரதியாளர் சத்யா பிராசஸ், திரு. இராதா கிருஷ்ணன் ஆகியோருக்கும் எனது நன்றி உரித்தாகுக.

ஆய்வுப் பணிக்கு வேண்டிய நூல் ஆதாரங்களைத் திரட்டி உதவியாக இருப்பதுடாக்டர்உ.வே.சா.நூலகமாகும்.இந் நூலகக் காப்பாட்சியாளர். சிவஸ்ரீ .ம. வே.பசுபதி அவர்களுக்கு எமது நன்றி உரித்தாகுக. இந்நூலக நூலகர் திரு.க.பாஸ்கர், உடனாளர் சாய்ராமன், எழுத்தர் நடராஜன் பணியா ளர்கள் பொன்னு வேலு, மணி, திருமதி. கன்னிகா, திரு. ராமஜெயம் ஆகியோருக்கு எமது நன்றி.

எனது வாழ்க்கைத் துணைவி திருமதி. கே.வசந்தா எனது சிவப் பணிக்கு உதவியாக அனைத்து இல்லப் பொறுப்புகளையும் ஏற்று குடும்பத்தை நன்முறையில் நடத்தி வருகிறாள். அவளுக்கு எனது அன்புகலந்து நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இவர்கள் எல்லோருக்கும் சகல நன்மைகளும் உண்டாகப் பிரார்த்திக்கிறேன். அன்பர்கள் அனைவருக்கும் உண்ணாமுலை அம்பிகை உடனாய அண்ணாமலையெம் அண்ணல் சகல செல்வ யோகமிக்கப் பெருவாழ்வை அளித்து அருள்பாலிக்க வேண்டுமென்று அவர்தம் பொற் பாதங்களில் பணிந்து வேண்டுகிறேன்.

இங்ஙனம் என்றும் சிவப்பணியில்,

பூசை. ச. அருணவசந்தன் '(எ)
பூசை.ச.ஆட்சிலிங்கம்

நந்தன ஆண்டு
ஞான பூர்ணிமா 05-06-2012 புத்த பூர்ணிமா
திங்கட்கிழமை அலைபேசி-9941124964

வாழ்க வளமுடன்!

சிவமஞ்சரி : சிவபெருமானின் பெருமைகளைப்பேசும் நூல்
சிவபெருமானுக்குச் சொல்லால் கட்டப்பட்ட திருக்கோயில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ
ஸ்ரீ பச்சையம்மன் துணை

நூலின் உள்ளே ...

மலர் 36	தீப மங்களேசுவரர்	பக்கம்	1121
மலர் 37	திருத்தல மரங்கள்	,,	1153
மலர் 38	ஸ்ரீ ராஜகோபுரங்கள்	,,	1185
மலர் 39	ஸ்ரீ விமானேசுவரர்	,,	1217
மலர் 40	ஸ்ரீ தீர்த்தேசுவரர்	,,	1249

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவசுந்தரி கலைக்கூடம்

29, பீமண்ண முதலிய தோட்டத் தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை–600 018.

பேரன்புடைய சிவநேயச் செல்வப் பெருந்தகையீர்,

சிவபெருமானின் எல்லையில்லாத பெருமைகளை இயன்றவரை விளக்கும் வகையில் சிவமஞ்சரி என்ற தொடர் நூலை எமது கலைக்கூடம் வெளியிட்டு வருகிறது. இதனை 60 தலைப்புகளில் சிறந்த புகைப்படங்கள் வரைப்படங்களுடன் நேர்த்தியாக அச்சிட்டு வெளியிட முனைந்து, செயல்பட்டு வருகிறோம். (தடித்த எழுத்தில் உள்ள ஐந்து நூல்கள் இந்த எட்டாம் தொகுதியில் இடம் பெற்றுள்ளன.)

1. சிவமே செம்பொருள்
2. மச்சேந்திரர்
3. திருவாவடுதுறை ஆதீனம்
4. முகலிங்கம்
5. பிரதோஷம்
6. பசுபதி
7. உமாமகேஸ்வரர்
8. ஐந்தும் சிவபெருமானும்
9. திருக்கயிலாயம்
10. மகாசிவராத்திரி
11. ஸ்ரீருத்திரர்
12. ஆதித்யேசுவரர்
13. சோமாஸ்கந்தர்
14. சைவ சமய சாத்திரங்கள்
15. ஸ்ரீதியாகராஜர்
16. சந்திரசேகரர்
17. அக்னீஸ்வரர்
18. சித்தீசுவரர்
19. அகத்தீசுவரர்
20. அதி(க) தியாகராஜர்
21. கேதார கௌரீசுவரர்
22. அம்பிகாபதீஸ்வரர்
23. அரம்பேசுவரர்
24. ஸ்ரீகாளீசுவரர்
25. ஸ்ரீ கல்யாணசுந்தரர்
26. ஸ்ரீ பிரம்மபுரீசுவரர்
27. பன்னிருதிருமுறைகள் அறிமுகம்
28. வேத, ஆகம, புராணேசுவரர்
29. திருமாலீசுவரர்
30. மூவராய்நின்ற முதல்வன்
31. ஸ்ரீவீரட்டகாசர்
32. ஸ்ரீகாலசம்ஹாரர்
33. ஸ்ரீமன்மதேசுவரர்
34. ஸ்ரீதிரிபுராந்தகர்
35. ஸ்ரீவீரபத்திரர்
36. **தீபமங்களஜோதீசுவரர்**
37. **தலவிருட்சங்கள்**
38. **ராஜகோபுரங்கள்**
39. **விமானேசுவரர்**
40. **ஸ்ரீ தீர்த்தேசுவரர்**
41. பூதலிங்கேசுவரர்
42. இராட்சதலிங்கம்
43. சப்தரிஷீசுவரர்
44. தட்சணாமூர்த்தி
45. சிவாசாரியர்கள்
46. புஷ்பரதீசுவரர்
47. கங்காதீசுவரர்
48. எட்டும் சிவபெருமானும்
49. விருந்திட்டீசுவரர்
50. சிவாலய திருவிழாக்கள்
51. சபாநாயகர்
52. ஆனந்ததாண்டவம்
53. ஊர்த்துவ தாண்டவர்
54. நாகநாதர்
55. இராஜலிங்கேசுவரர்
56. பறவைகளும் பரமனும்
57. ஐராவதீசுவரர்
58. சிவாயுதங்கள்
59. சிவாலயப் பரிவாரங்கள்
60. பைரவர் என்பனவாகும்

மொத்தம் 2000 பக்கங்களுக்கும் அதிகமான அளவில் வெளிவரும் இந்நூல்

சிவபெருமானுக்குச் சொல்லால் கட்டப்பட்ட திருக்கோயிலாகும்.

இந்நூல் ஆசிரியர் பூசை ச. அருணவசந்தன், ஓதுவார் மரபில் வந்த சைவநெறியாளர். சென்னை பல்கலைக்கழகத்தில் முதுகலைப்பட்டம் பெற்றவர். தமிழகமெங்கும் பயணம் செய்து ஏறத்தாழ 20,000 கோயில்களைத் தரிசித்தவர். தான் கண்டும் கேட்டும் உணர்ந்த செய்திகளைப் பதினெண்புராணங்கள். தெய்வத்திருமுறை நூல்கள், தலவரலாறுகள், கல்வெட்டுகள், செவிவழிச் செய்திகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஒப்புநோக்கித் தொகுத்து நூலாக அளிக்கின்றார். மேன்மைகொள் சைவ நெறி உலகெங்கும் விளங்க, குறைந்த விலையில் நிறைந்த செய்திகளைத் தாங்கி, சிவமஞ்சரி வலம் வருகிறது. இவருடைய பணியைப் பாராட்டி திருவாவடுதுறை ஆதீன குருமகா சந்நிதானம் சீர்–வளர்–சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் "சிவமஞ்சரிச் செம்மல்" என்ற பட்டத்தையும், அகில உலக பக்தி இலக்கியப் பேரவையினர் "அருட்பணி அரசு" என்ற பட்டத்தையும், சென்னை இந்து தர்ம மன்றத்தினர் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடதிபதி ஸ்ரீ ஜயேந்திரசரஸ்வதி சுவாமிகளின் பீடாரோகணப் பொன் விழா விருதையும் வழங்கிக் கௌரவித்துள்ளனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சோதியே போற்றி! சுடர் ஒளி விளக்கே போற்றி!! சுரிகுழல் மடந்தை பாதியே போற்றி! பரனே போற்றி!! போற்றி!!

ஸ்ரீ தீபமங்களேசுவரர்

"ஒளி" உலக வாழ்விற்கு ஆதாரமாகும். ஒளியின்றேல் ஒன்றுமே இல்லை. இறைவன் உலகிற்கு ஒளியாக இருக்கின்றான். அவனுடைய எண்பெரு வடிவங்களான சூரியனும் சந்திரனும் உலகிற்கு ஒளி வழங்குகின்றனர். சூரிய ஒளியால் பசி நீக்கும் உணவுப் பொருட்களும். சந்திர ஒளியால் நோய் தீர்க்கும் மூலிகைச் செடிகளும் வளர்கின்றன.

உலகப் பொருட்களை அறிவுக்குக் காட்டி அதன் கனபரிமாண அளவுகளையும், வண்ணம், குணம் முதலியவற்றின் தன்மைகளையும் விளக்கி நிற்பதால் ஒளியை விளக்கு என்று அழைக்கின்றனர். இறைவன் உயிர்களுக்குக் காணும் புலனான கண்களைத் தந்து அதன் மூலம் உலகப் பொருட்களைக் காட்டி அவற்றின் இயல்புகளை அறிவிப்பதால் பெரிய விளக்காகப் போற்றப்படுகின்றான். அருளாளர்கள் அவனை ஜோதியே சுடரே, சூழ்ஒளி விளக்கே என்று பாடிப்பரவு கின்றனர். அவனைப் போலவே அவனுடைய திருநாம மாகிய ஐந்தெழுத்தும் விளக்காகத் திகழ்கிறது என்பதை அப்பர்பெருமான் "நல்லக விளக்கது நமச்சிவாயவே" என்று கூறுகிறார். ஞானிகள் இறைவனைத் தமது அஞ்ஞானத்தைக்களையும் செம்பொருட் சோதியான "ஞானவிளக்கு" என்றே புகழ்கின்றனர்.

ஒளிவடிவாக விளங்கும் இறைவனை அருண கிரிப்பெருமான் "தீப மங்களஜோதி நமோ நம" என்று திருப்புகழில் போற்றுகின்றார்.

உலக சமயங்கள் யாவும் இறைவனை ஒளிவடிவ மாகவே போற்றுகின்றன. அதனை அடியொற்றி சிவமஞ் சரியின் இந்த மலர் பெருமானின் ஒளி வடிவத்தைச் சிந்தித்து ஒளிர்கிறது. இதில் சிவபெருமான் திரு விளக்காக நிற்பது. ஆலயங்களில் விளக்கிடு செய்து மேன்மை பெற்ற அடியவர்களின் வரலாறுகள், ஆலயங்களில் ஏற்றப்படும் பலவகையான விளக்குகள், தீபங்களால் செய்யப்படும் ஆராதனை கார்த்திகைத் தீபம் முதலிய அனேக தீபஒளித் தொடர்புடைய செய்திகள் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. இவற்றை அறிந்து மகிழத் தங்களை அன்புடன் அழைக்கிறோம்.

மங்கலநாயகி உடனாய தீபமங்களேசுவரரைப் பெருமான் அருளால் அன்பர்கள் சகல செல்யோக மிக்க பெருவாழ்வைப் பெற்று இன்பமுடன் வாழ இறையருளைப் பிரார்த்திக்கிறோம்.

– சிவசுந்தரி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காயத்ரி தீபம்

இயற்கை ஏற்றி வைத்த ஒளி விளக்கு சூரியன் ஆகும். சூரியனின் மத்தியில் பர்க்கன் என்ற பெயரில் வீற்றிருக்கும் சிவபெருமானையும் அவனுடைய திவ்ய மங்கள ஜோதியையும் துதிப்பது காயத்ரி மந்திரம். இந்த மந்திரத்தைக் குறிக்கும் தீபம் காயத்ரி தீபம் என்றுஅழைக் கப்படுகிறது. இதன் நடுவில் ஐந்து முகங்களும் பத்து கரங்களும் கொண்ட காயத்ரி தேவி அமர்ந்துள்ளாள். இவளைச் சுற்றியுள்ள பிரபா மண்டலத்தில் ஐந்து சுடர்கள் பிராகாசிக் கின்றன. இதை இறைவன் முன்பாகக் காட்டும்போது ஓம் பூர்: புவ: சுவ: என்று தொடங்கும் காயத்திரி மந்திரம் ஓதப்படுகிறது. இதன் பொருள் ஓம் பூலோகம், சுவர்க்க லோகம், பாதாள லோகம் ஆகிய மூன்று உலகங்களிலும் எவன் நம்முடைய புத்தியினை நன்றாக நடத்து கிறானோ அந்த ஒளி வடிவான (சூரியனின் மையத்தில் இருக்கும்) பர்க்கன் என்கிற தேவ னுடைய மகிமைகளைத் தியானிக்கிறேன் என்பதாகும். திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமி ஆலயத்தில் தினமும் பூசைவேளையில் ஆராதிக்கப்படும் தீபவரிசையில் காயத்ரி தீபமும் காட்டப்படுகிறது.

விளக்கு வழிபாடு

சிவவழிபாட்டின் ஓர் அங்கம் தீபலட்சுமியை வழிபடுவதாகும். சந்தனம், குங்குமம், இட்டு பட்டு அணிவித்து மாலை சூட்டி அலங்கரிக்கப்பட்ட விளக்கில் தீபலட்சுமியை (ஆவாகனம்) செய்து நிலைப்படுத்தி வணங்குகின்றனர்.

அவளிடம் அனைத்து வடிவங்களாக விளங்குபவளும் அனைத்திற்கும் தலைவியாக இருப்பவளும் செல்வம் ஆரோக்யம் ஆகியவற்றை அருளும் தேவியே! நீ எப்போழுதும் எம்மைவிட்டு நீங்காது நின்று ஒளி வீசுக! என்று பிரார்த்திக்கப்படுகிறது.

பூசையின் தொடக்கம் முதல் முடிவுவரை விளக்குகள் இடைவிடாது எரிய வேண்டியது மிகவும் அவசியமாகும்.

விளக்கு மாடங்கள்



சுவர்களில் முக்கோண வடிவில் மாடங்கள் அமைக்கப்பட்டு அவற்றில் தீபங்கள் வைக்கப்படுகின்றன. முக்கோணம் திருமகளின் வடிவமாகும். எனவே இந்த மாடங்கள் முப்பட்டை வடிவில் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த அமைப்பு காற்றின் வேகத்தால் தீபங்கள் அணையாமல் காக்கின்றன. வரிசை வரிசையான அமைந்த இத்தகைய மாடங்களில் தீபங்கள் பிரகாசிப்பது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். மதிற்சுவர்கள், திருக்குளங்களின் படிகள், கைப்பிடிச் சுவர்கள், என பல இடங்களில் பல வரிசைகளில் விளக்கு மாடங்கள் அமைக்கப்பட்டிருப்பதை தென்னகமெங்கும் காணலாம்.

★ விளக்குகள் இறைவனின் ஒளி வடிவம் என்பதால் அவற்றைத் தரையில் வைக்கக் கூடாது. மணையில் கோலமிட்டு அதன்மீது விளக்குகளை ஏற்றி வைத்து மலர்களைத் தூவி வழிபடுகின்றனர் கிராமிய வழிபாட்டில் பூசுணை அல்லது பூவரசு இலை மீது பசுஞ்சாண உருண்டையை வைத்து அதன் மீது விளக்கை ஏற்றி வைக்கின்றனர். பசுஞ்சாணம் லட்சுமியின் உறைவிடமாகும். ஸ்ரீசூக்தம் அவளை கர்ஷிணி சாணத்திலிருப்பவள்; ஆர்த்தரா – ஈரமாக இருப்பவள் என்று துதிக்கிறது. மேலும், அவள் அக்னியால் துதிக்கப்படுபவள் என்றும் உலகிலுள்ள தீபங்களுக்கெல்லாம் வித்தாக இருப்பவள் என்றும் அது போற்றுகிறது.

★ **மங்கல தீபம்** அஷ்ட மங்கலப் பொருள்களில் தீபமும் ஒன்றாகும். மங்கலச்சடங்குகளில் காமவர்தனி என்ற அப்சரப் பெண் திருவிளக்கை ஏந்தி நிற்கின்றாள். தரும சாசனக் கல்வெட்டுக்கள், செப்பேடுகள் ஆகியவற்றின் முகப்பில் தெய்வ உருவங்களும் அவற்றின் இருபுறமும் விளக்குகளும் பொறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். வீரர்களுக்கு எடுக்கப்பட்ட நடுகற்களிலும்கூட விளக்குகள் புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தீபப் பிரகாசர்

இறைவன் செம்பெருஞ் ஜோதியாகவும், உயிர்களுக்கு ஞான விளக்காகவும் திகழ்கின்றான். அடியவர்கள் பெருமானை சோதியே! சுடரே! சூழ் ஒளிவிளக்கே! என்று பாடிப் பரவுகின்றனர். இறைவன் சில தலங்களில் விளக்கு தொடர்புடைய பெயருடன் வீற்றிருக்கின்றான். அத்தகைய தலங்கள் சிலவற்றையும் அவற்றில் வீற்றிருக்கும் பெருமானின் சிறப்புக்களையும் அறிந்து மகிழலாம்.

ஆதிபிதேசம் காஞ்சி நகர் தீபப்பிரகாசர்

மோட்சபுரியான காஞ்சீபுரத்திலுள்ள சிவாலயங்களில் ஒன்று தீபப்பிரகாசர் ஆலயமாகும். இதைப் புராணங்கள் ஆதிபிதேசம் என்று அழைக்கின்றன. ஒரு சமயம் பிரமன் சரஸ்வதியை விலக்கி விட்டு பெரிய யாகத்தைச் செய்தான் கோபம் கொண்ட சரஸ்வதி அந்த யாகத்தைத் தடுக்க வேகவதி எனும் ஆறாகப் பெருக்கெடுத்து ஒடி வந்தாள். அவளுடைய ஓட்டத்தைத் தடைசெய்து பிரம்மனின் யாகசாலையைக் காக்கத் திருமால் பேரொளியுடன் நின்றார். அவரைத் தீபப்பிரகாசர் என்றழைக்கின்றனர்.

அப்பேரொளி வடிவில் இருந்தவாறே அவர் யாகத்திற்கு இடையூறு நேராதிருக்க மூலமுதற் பொருளான சிவலிங்கத்தை நிறுவி வழிபட்டார். அந்த சிவலிங்கம் விளக்கொளி நாதர் எனும் பெயரைப் பெற்றது. காஞ்சிப்புராணத்தில்.

(கமலத் தவிசுறைவோன் மகம் புரிவதனைக் கண்டு... முனிந்து கலைமாது...)

அளக்கர் என பெருநிசியில் அணைவதனைக் கண்ணுறும்மால்
விளக்கொளியாய் எழுந்ததனை விலக்குவதற்கு கிடையூற்றின்
துளக்கம் அறப் பெருஞ்சோதி சுடர்லிங்கம் அவண் நிறுவி
உளக் கருணை பெறப் பதவி உன்னியது பெற்றுயர்ந்தான்

என்று இது குறிக்கப்பட்டுள்ளது. இதன் பொருள் தாமரையில் உறையும் பிரமன் தன்னை நீக்கிவிட்டு வேள்வி புரிவதனைக் கண்டு கோபித்த சரஸ்வதி அதை அழிக்க நடுநிசியில் கடல் போல் பரந்த பெரிய ஆறாகப் பெருகி ஒடிவந்தாள். வேகவதி என்ற அந்த ஆற்றைக் கண்ட திருமால் அவளை அடக்கப் பெரிய விளக்கொளியாக எழுந்து நின்றார். அவளை விலக்கி வெற்றி கொண்டு மனமயக்கம் தீரும்படியாகச் சோதிச் சுடர்லிங்கத்தை அங்கே அமைத்து வழிபாடு செய்து சிவனருளால் வேண்டிய வரங்களைப் பெற்ற மகிழ்ந்தான் என்பதாம்.

சுடரொளியாக நின்ற திருமால் தீபப்பிரகாசர் (விளக்கொளிப் பெருமாள்) என்றும் அவர் வழிபட்ட லிங்கம் தீபேசுவரர் என்றும் அழைக்கப்படுகின்றன. இந்தச் சிவாலயம் ஆலடிப் பிள்ளையார் கோயில் தெருவில் கீரை மண்டபத்திற்கு அருகில் உள்ளது.

மோகனூர் அசலபதீபேசுவரர்

கொங்கு தண் குமரி என்று இலக்கியங்கள் சிறப்பிக்கும், வைப்புத் தலமான மோகனூர் சேலம் மாவட்டத்தில் நாமக்கல்லிருந்து 20 கி.மீ தொலைவில் உள்ளது. இறைவன் அசலதீபேசுவரர் இறைவி மதுகரவேணி. இங்கு இறைவன் முன்பு ஏற்றப்பட்டுள்ள தீபத்தின் சுடர், சூறாவளி அடித்தாலும் அசைவின்றி எரிந்ததால் சுவாமி அசலதீபேசுவரர் என்றழைக்கப்படுகிறார். இது சித்தர்களும் ஜீவன் முத்தர்களும் போற்றிய திருத்தலமாகும்.

ஆதியில் இத்தலம் வில்வ வனமாக இருந்தது. இக்காட்டிற்கு அருகிலுள்ள குமாரபாளையத்தில் தேனாயி என்பவள் வாழ்ந்து வந்தாள். அவளுக்கு நீண்ட நாட்களாகப் புத்திரப்பேறு வாய்க்கவில்லை. இதனால் அவள் மிகவும் மனம் வருந்தினாள்

ஒரு சமயம் அவள் இவ்வழியாக வந்த போது; பெண்ணே! எனக்கு நீ தினமும் ஒரு தீபம் ஏற்றிவந்தால் விரைவில் உனக்குப் புத்திரப்பேறு உண்டாகும் என்ற குரல் கேட்டது. அவள் குரல் வந்த திசையை நோக்கி

குமரிபூசித்த கொங்கு தண் குமரீஸ்வரர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நடந்தாள். அங்கு புதருக்குள் சுயம்புலிங்கம் இருப்பதைக் கண்டாள்.

மகிழ்ச்சியடைந்த அவள்தினமும் புதரில் இருக்கும் லிங்கத்திற்கு விளக்கு ஏற்றியதுடன் சற்று நேரம் இருந்து, பிரார்த்தனையும் செய்து வந்தாள். இறைவன் அருளால் சில வாரங்களில் கருவுற்றாள்.

அவள் மீது பொறாமை கொண்ட சிலர் அவளுடைய நடத்தையின் மீது சந்தேகம் வரும் வகையில் புரளி பரப்பினர். அவள் நடந்ததை ஊராரிடம் கூறினாள். அவர்கள் அதை நம்பவில்லை. அவளறியாமல் அவளைப் பின் தொடர்ந்து சென்று கண்காணித்தனர்.

அவள் வழக்கம்போல் புதருக்குள் சென்று சிவ லிங்கத்தின் முன்பாக விளக்கேற்றினாள். அவளுடைய பக்தியை உலகுக்கு உணர்த்த எண்ணிய பெருமான் அப்பொழுது பெரும் காற்றை வீசச் செய்தார். அந்த பெருங் காற்றில் தேனாயி ஏற்றிய தீபம் ஆடாது அசையாது எரிந்தது. அந்த அற்புதத்தைக் கண்ட ஊரார் மகிழ்ச்சியடைந்தனர்.

தேனாயி வழிபட்ட லிங்கத்திற்குப் பெருங்கோயில் எழுப்பினர். குமரி வழிபட்டதால் பெருமான் குமரீசர் என்றும் பெருங்காற்றிலும் அசையாது எரியும் தீபத்தைக் கொண்டிருந்ததால் அசலதீபேசர் என்றும் நடுங்கா நல்விளக்கு நாதர் என்றும் அழைக்கப்படுகிறார்.

காசி நகர்
தீபப்பிரகாசர் (ஜோதிரூபேஸ்வரர்)

வாரணாசியில் (காசி) மணிகர்ணிகேசுவரர் ஆலயத்தின் அருகிலுள்ள ஒரு வீட்டின் முற்றத்தில் இவர் எழுந்தருளியுள்ளார். இவருடைய சந்நிதியில் அப்சரப் பெண்கள் தீபங்கள் ஏற்றி வழிபட்டுப் பேறுபெற்றனர். இவருடைய சந்நிதியில் தீபதானம் செய்வது சகல ஐஸ்வர்யங்களையும் கொடுக்கும். ★

ஜோதிர் லிங்கங்கள்

அன்பர்கள் மேன்மைபெறச் சிவலிங்கம் அமைத்து சிவவழிபாடு புரிகின்றனர். பலசமயங்களில் சிவபெருமான் அன்பர்கள் வழிபட்ட லிங்கத்திலிருந்து ஜோதி வடிவமாக வெளிப்பட்டு அருள்புரிந்துள்ளார். அத்தகைய லிங்கங்கள் ஜோதிர் லிங்கள் என்று அழைக்கப்படுகின்றன. பாரத தேசத்தில் அநேக இடங்களில் ஜோதிர் லிங்கங்கள் உள்ளன. இவற்றில் பன்னிரண்டைத் தனிச்சிறப்புடன் கொண்டாடுகின்றனர். இவை துவாதச ஜோதிர் லிங்கங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவை ஓங்காரநாதர் (ஓங்காரம்); சோமநாதர் (சோமநாதம்); மல்லிகார்ச்சுனர் (ஸ்ரீசைலம்); வைத்தியநாதர் (வைத்தியநாத்); மகாகாளேஸ்வர் (மகாகாளம்); பீமசங்கரர்(பீமசங்கரம்); கேதாரீசுவரர் (கேதாரம்); விஸ்வநாதர் (வாரணாசி); ராமநாதர் (ராமேஸ்வரம்); குஸ்மேஸ்வரர்(குஸ்மேஸ்வர்) நாகேஸ்வரர்(நாகேஸம்); திரியம்பகர் (திரியம்பகம்) என்பனவாகும். காஞ்சிபுரத்தில் உள்ள கச்சபேசுவரர், திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமி முதலான சிவலிங்கங்களும் ஜோதிர்லிங்கங்களாகப் போற்றப்படுகின்றன. ★

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர்



19ஆம் நூற்றாண்டில் புரட்சித் துறவியாக விளங்கிய அருட்பிரகாச வள்ளலார் எனப்படும் இராமலிங்க சுவாமிகள் மாபெரும் சித்த புருஷராவர். இவர் இறைவனை ஒளிவடிவில் வழிபடும் முறையைத் தோற்றுவித்தார். கடலூர் மாவட்டத்திலுள்ள வடலூரில் அவர் அமைத்த சத்தியஞான சபையில் ஒரு தகர விளக்கை ஏற்றி வைத்துள்ளார். அது தேய்க்கப்பட்ட கண்ணாடியின் பின்புறம் வைக்கப்பட்டுள்ளது. இதனால் அந்த விளக்கின் சுடரொளி மட்டும் ஒளிப்பந்து போன்று காட்சி அளிக்கிறது. இப்படித் தெரியும் ஒளி வட்டத்தையே அருட்பெரும் ஜோதி ஆண்டவராக வழிபடும் வழக்கத்தை அவர் தோற்றுவித்தார். இந்த கண்ணாடியின் முன்பாக ஏழுதிரைகள் தொங்கவிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாத பூச நாளிலும் ஆறுதிரைகள் முழுவதுமாகவும், ஏழாவது திரை பாதி அளவிலும் விலக்கப்பட்டு ஜோதி தரிசனம் காட்டப்படுகிறது. தைமாதப் பூச நாளில் ஏழு திரைகளும் முழுவதுமாக விலக்கப்பட்டு ஆறுகால பூஜை நடத்தப்படுகிறது. ★

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விளக்குப் பணிசெய்த அடியவர்கள்

சிவாலயங்களில் விளக்கேற்றிப் பணிசெய்வது பெரும்பேறாகும். ஆலயங்களில் விளக்குப் பணி செய்து பேறு பெற்றவர்களின் வரலாறுகள் அனேக புராணங்களில் கூறப்பட்டுள்ளன.

பெரிய புராணத்தில் விளக்கீடு செய்து மேன்மை பெற்ற அடியவர்கள் மூவரைப் பற்றிய வரலாறுகள் குறிக்கப்பட்டுள்ளன. ஒருவர் நீராலேயே விளக்கெரித்தவர். இன்னொருவர் தன் உதிரத்தை ஊற்றி விளக்கெரிக்க முயன்றவர். மூன்றாமவர் தனது தலை முடியைத் திரியாக விளக்கில் இட்டு எரித்தவர். இவர்களுடைய வரலாறுகளை அறிவதே பெரும் புண்ணியம் என்பதால் அவற்றின் சுருக்கத்தை இங்கே காணலாம்.

நமிநந்தி அடிகள்

சோழ நாட்டுத் தலங்களில் ஒன்று ஏமப்பேருராகும். இவ்வூர் அந்தணர் குலத்தில் தோன்றியவர் நமிநந்தி அடிகளார். இவர் ஒரு சமயம் திருவாரூர் சென்று புற்றிடங் கொண்ட பெருமானை வணங்கினார். அங்கிருந்த அரநெறி என்னும் ஆலயத்தை அடைந்து வணங்கினார்

அவருள்ளத்தில் அங்கு எண்ணிலாத தீபங்களை ஏற்ற வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. உடனே அவர் அங்கிருந்த வீடுகளுக்கு சென்று கொஞ்சம் நெய் தருமாறு கேட்டார். அவ்வீடுகள் யாவும் சமணர்கள் வீடுகளாகும். அவர்கள் அவரை எள்ளி நகைத்து அன்பரே! உமது கடவுள் தனது கையில் நெருப்பை ஏந்துகின்றார். அவருக்கென தனியாக விளக்கு எதற்கு நாங்கள் நெய் கொடுக்கமாட்டோம் விளக்கெரித்தே ஆக வேண்டுமென்றால் நீங்கள் திருக்குளத்து நீரை வார்த்து விளக்கெரியுங்கள்" என்றனர்.

அடிகளார் மிகவும் வருத்தமுற்றார். திருவாரூர் மூலட்டானத்துள் சென்று பெருமானிடம் முறையிட்டார். அப்போது சிவபெருமான் வானொலியாக "அன்பரே! கவலையை விடுக. குளத்து நீரை முகந்து வந்து அதைக் கொண்டே விளக்கேற்றும் என்றார். அடிகளார் மிகவும் மகிழ்ந்து சிவநாமத்தைக் கூறிக்கொண்டே குளத்து நீரை முகந்து வந்து அகல்களில் ஊற்றித் திரியிட்டு ஏற்றினார். அவ்விளக்குகள் பிரகாசமான எரிந்தன. இரவு முழுவதும் அப்பணியைச் செய்தார்.

பல நாட்கள் இப்பணியை அவர் தொடர்ந்து செய்து வந்தார். இதைக் கண்டு எல்லோரும் அதிசயித்தனர். மன்னரின் துணையுடன் திருவாரூர் கோயிலின் பூசைகளையும் பங்குனி உத்திரம் முதலான விழாக்களையும் ஒழுங்குப்படுத்தி முறைப்படுதினார். இவர் வீடுபேறு பெற்ற நாள் வைகாசிமாதப் பூச நட்சத்திரமாகும்.

பெரிய புராணத்துள் இவருடைய வரலாற்றை நின்ற சருக்கத்தில் 32 பாடல்களில் சேக்கிழார் பெருமான் பாடிப் பரவியுள்ளார்.

அப்பர் பெருமான் இவர் தண்ணீர் கொண்டு விளக்கு எரித்ததை நமிநந்தி நீரால் விளக்கிட்டமை நீணாடு அறியுமன்றே" என்று குறித்துள்ளதுடன் இவரைத் "தொண்டர்க்காணி" எனவும் சிறப்பித்துள்ளார்.

கணம் புல்லர்

இறைவன் சந்நிதியில் விளக்கேற்றிப் பேறுபெற்ற அடியவர்களில் கணம்புல்லர் தலை சிறந்தவர். இவர் பிறந்ததால் பேறு பெற்ற ஊர் இருக்குவேளூர் ஆகும். இந்நாளில் அது பேளூர் என்று அழைக்கப்படுகிறது. (சேலம்–விருத்தாசலம் இருப்பாதையில் உள்ள ஆற்றூரிலிருந்து தெற்கே 3 கி.மீ தொலைவில் உள்ளது.



❖ நீரால் விளக்கெரித்த நமிநந்தி அடிகள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவ்வூரிலிருந்து செல்வக்குடியில் தோன்றியவர் நம்நாயனார். இவர் சிவாலயங்களில் விளக்கெரிப்பதை தலைமைப் பணியாகக் கொண்டிருந்தார். நாளடைவில் அவர் வறுமைக்கு ஆளானார். என்றாலும் ஆலயங்களில் விளக்கீடு செய்வதை நிறுத்தாமல் தொடர்ந்து செய்து வந்தார். கையில் போதிய செல்வம் இல்லாததால் மலைச் சாரலில் விளையும் மெல்லிய கணம் புல்லை அறுத்து விற்று அதில் கிடைத்த காசினால் விளக்கேற்றினார். சில காலத்திற்குப் பிறகு தில்லைக்கு வந்து அத் தலத்திலுள்ள புலீச்சரம் எனும் சிவாலயத்தில் தங்கி தனது விளக்கேற்றும் பணியைத் தொடர்ந்தார்.

ஒரு நாள் அவர் அறுத்த வந்த புல் விற்பனை யாகவில்லை. மனம் தளராத நாயனார். அப்புற்களையே விளக்கிலிட்டு எரித்தார். அவை அவர் குறிப்பிட்டுள்ள நேரம்வரை எரியவில்லை. முயற்சியில் தோற்காத நாயனார் தன் சடைமுடியை அரிந்து அவற்றை விளக்கி லிட்டு எரித்தார். அவருடைய தளராத பக்தியைக் கண்ட சிவபெருமான் அவருக்கு வீடுபேற்றை அளித்தார்.

கணம்புல்லைக் கொண்டு விளக்கெரித்தால் நாய னார் கணம்புல்லர் எனப்பட்டார். இவர் அவதரித்த பேளூர் ஆலயத்தில் கொடி மரத்தின் அருகில் விளக்கேந்தி யவாறு இவருடைய திருவுருவம் இருப்பதாகச் சிவஸ்ரீ சி.கே.எஸ். அவர்கள் தமது பெரிய புராண உரையில் குறித்துள்ளார்.

சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தில் கறை கண்டன் சருக்கத்தில் முதல் நாயன்மாராக எட்டு பாடல்களில் இவரைப் போற்றுகின்றனர்.

இவர் வீடுபேறு பெற்ற நாள் கார்த்திகை மாதத்துக் கிருத்திகை நட்சத்திரமாகும்.

கார்த்திகை மாதமும், கிருத்திகை விண்மீனும் விளக்கோடு தொடர்புடையது என்பது இங்கே சிந்திக்கத் தக்கதாகும்.

கலிய நாயனார்

சென்னையின் வடபகுதியாகத் திகழ்வது திருஒற்றியூர். இவ்வூரில் நீண்ட காலத்திற்கு முன்பாக சக்கரப்பாடி என்னும் பகுதி இருந்தது. அதில் செக்காட்டி எண்ணை எடுக்கும் தொழில் புரிவோர் இருந்தனர். அக்குடியில் தோன்றியவர் கலியநாயனார். அவருடைய குடும்பம் செல்வ செழிப்புடன் விளங்கியது.

அவர் சிவன்பால் அன்பு பூண்டு திருஒற்றியூர் படம் பக்கநாதர் ஆலயத்தில் விளக்கெரிக்கும் தொண்டைச் செய்து வந்தார். கால வெள்ளத்தில் பொருள் கரைந்து போக வறுமை வந்தது என்றாலும் நாயனார் விளக் கேற்றும் தொண்டைக் கைவிடவில்லை. செக்கடிகளில் வருந்தி உழைத்து அதன் மூலம் பெற்ற செல்வத்தை கொண்டு தம் பணியைத் தொடர்ந்தார். காலப்போக்கில் அதிலும் சிக்கல் வந்தது. தம்வீட்டையும் உரிமைப் பொருட்களையும் விற்றுப் பணி செய்தார். அதற்கும் இடர்பாடு நேர்ந்த போது தன் குடும்பத்தினரை அடிமையாக விற்க முனைந்தார். அவ்வெண்ணத்தை நிறைவேற்ற முடியவில்லை.

மனம் தளராத நாயனார் ஆலயத்திற்குள் சென்றார். அகலில் திரிகளையிட்டார். கைவசம் இருந்த எண் ணையை ஊற்றி விளக்கேற்றினார். இவைகள் அணை யுமாயின் என் குருதியைச் சொரிந்து இவ்விளக்குகளை ஏற்றுவேன். இதில் என் ஆவி பிரிந்தாலும் மகிழ்வேன் என்று கூறித் தொண்டைத் தொடர்ந்தார். ஒரு விளக்கு அணையும் தருவாயில் இருக்கக்கண்டார். தன் கழுத்தை அரிந்து குருதியை விட எண்ணிக் கத்தியை எடுத்துக் கழுத்தில் வைத்தார்.

அவ்வேளையில் சிவபெருமான் வெளிப்பட்டு அவரது கையைப் பிடித்து நிறுத்தினார். அவரைத்தம் திருவடியில் சேர்த்து பேரின்ப நிலையை அருளினார். கலிய நாயனார் வீடுபேறு பெற்ற நாள் ஆடிமாத கேட்டை நன்னாளாகும்.

சேக்கிழார் பிரான் இவருடைய வரலாற்றைப் பெரிய புராணத்தில் பொய்யடிமையில்லாத புலவர் சருக்கத்தில் பதினெழு பாடல்களில் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

திருஒற்றியூரில் படம்பக்க நாதர் ஆலயத்தின் தென் கிழக்கு மூலையில் வடக்கு நோக்கியவாறு கலிய நாயனார் எழுந்தருளியுள்ளார். இவருக்கு நேர் எதிரில் சந்திரசேகரர் அமைத்துள்ளார். நாயனார் சந்நிதிக்கு அருகில் அவர் வரலாற்றை விளக்கும் அண்மைக் கால ஓவியம் சிறப்புடன் திகழ்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விளக்கை தூண்டிய எலி மாமன்னாகியது

சிவாலயங்களில் விளக்கிடுவதால் புண்ணியம் கிடைப்பதைப் போலவே அணையும் தருவாயிலுள்ள விளக்குகளைத் தூண்டிவிடுதல், விளக்குகளின் பிசுக்குகளைத் துடைத்தல், விளக்குகளுக்கு எண்ணையிடல், முதலியனவும் சிறந்த புண்ணியச் செயல்களாகும். வேதாரண்யம் ஆலயத்தில் அணையும் தருவாயிலிருந்த தீபத்தைத் தூண்டிப் பிரகாசிக்கச் செய்த புண்ணியத்தால் ஓர் எலி மேன்மை அடைந்து அரசனான கதையைப் புராணங்கள் கூறுகின்றன.

வேதங்களால் பூசிக்கப்பட்ட கடற்கரைத் தலம் வேதாரண்யம் எனப்படும் திருமறைக்காடாகும். இங்கு கருவறையில் சிவபெருமான் உமாதேவியோடு திருமணக்கோலத்தில் வீற்றிருக்கின்றார்.

நீண்ட காலத்திற்கு முன்பு இக்கோவிலில் ஒரு கரிய எலி வசித்து வந்தது. ஒரு நாள் அந்த எலிக்குத் தின்ப தற்கு எதுவும் கிடைக்கவில்லை. பசியால் வாடிய அது மூலஸ்தானத்தில் அணையும் தருவாயிலிருந்த ஒரு விளக்கில் எண்ணையைக் குடிக்க முயன்றது. அதன் மூக்கின் நுனிபட்டு அந்த விளக்கின் திரி தூண்டப் பட்டது. அணையும் தருவாயிலிருந்த அந்த விளக்கு சுடர்விட்டுப் பிரகாசித்தது. எலி அஞ்சி ஓடிவிட்டது.

விளக்கைத் தூண்டிய புண்ணியத்தால் அந்த எலி மறுபிறப்பில் அசுரகுல அரசனாகப் பிறந்தது. அவனுக்கு மகாபலி என்பது பெயராகும். அவர் உலகங்களை வென்று பேரரசு செலுத்தினார். தன் பழைய் நினைவு மாறாமல் சிவாலயங்களில் அனேக விளக்குகளை ஏற்றி மேலும் மேலும் புண்ணியத்தைப் பெருக்கிக் கொண்டார். அதைக் கண்டு இந்திரன் பொறாமை கொண்டான். அவரை அழிக்கும்படித் திருமாலிடம் வேண்டினான். திருமாலும் சமயம் வருவதற்குத் காத்திருந்தார்.

ஒரு சமயம் மகாபலிச் சக்ரவர்த்தி பெரிய யாகம் ஒன்றைச் செய்தார். அதற்கு வந்த அந்தணர்களுக்கு வேண்டியதை வேண்டியவாறு அளிப்பேன் என்று கூறினார். திருமால் அந்த வேளையைப் பயன்படுத்தி கொள்ள விரும்பினார். குறளனாக (குள்ளனாக) வடிவம் கொண்டு கமண்டலம், குடை தாங்கி, மகாபலியின வேள்விச் சாலையை அடைந்தார்.

மன்னனே எனக்குத் தவம் செய்ய இடம் வேண்டி யுள்ளது. என் காலால் மூன்றடி மண் போதும் அதை எனக்குத் தருக என்றார். மன்னன் விருப்பமுடன் சம்ம தித்துத் தாரை வார்க்க, நீர்க் கரகத்தை எடுத்து தான மந்திரங்களைக் கூற ஆரம்பித்தான்.

அங்கிருந்த அசுர குலகுருவான சுக்ராச்சாரியார் மன்னனே! இதில் ஏதோ சூது உள்ளது. சற்று யோசிக் கவும் என்றார். மன்னனோ! "குருவே நான் இவருக்கு வாக்களித்துவிட்டேன் தானம் தந்தே தீருவேன் என்று கூறிவிட்டு வாமனரை நோக்கித் தானத்தை பெறுக" என்றான்.

திருமால் கையை நீட்ட மன்னன் உரிய மந்திரங்களைக் கூறி நீர் வார்த்து தானம் செய்யத் தொடங்கினார். அப்போது சுக்ராசாரியார் வண்டு உருவம் கொண்டு கெண்டியின் மூக்கிற்குள் சென்று அதிலிருந்து நீர் வராமல் வழியைத் தடுத்து அடைத்துக் கொண்டார். நீர் விழாமல் போகவே மன்னன் யோசித்தான். (நடந்ததை தனது ஞானத்தால் அறிந்த) திருமால் ஒரு தர்ப்பையை எடுத்து நீர் வரும் வழியைக் குத்தினார். அது வண்டாக இருந்த சுக்கிராச்சாரியாரின் கண்ணைத் துளைத்து ஊனமாக் கியது. இதனால் வருந்திய சுக்கிராச்சாரியார் விலகினார். தண்ணீர் வெளிப்பட்டது.

மன்னன் முறையாகத் தானம் செய்தான். தானம் பெற்றதும் திருமால் தன் உருவத்தைப் பெரிதாக்கிக் கொண்டு விண்ணுக்கும் மண்ணுக்குமாக நின்றார்.



❖ திருமறைக்காடர் சந்நிதியில் எலி விளக்கைத் தூண்டுதல்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஓரடியால்விண்ணையும் மற்றோர்அடியால் மண்ணையும் அளந்தார். மன்னனை நோக்கி, "அன்பனே! எனது மூன்றாவது அடியை வைக்க இடம் எங்கே?" என்றார்.

மன்னன் தான் மோசம் போனதை உணர்ந்தான். என்றாலும் சிவபெருமானை மனதுக்குள் வணங்கி மண்டியிட்டு, என் தலைமீது உமது மூன்றாவது அடியை வைத்துக் கொள்க, என்றான். திருமால் புன்னகைத்து தனது வலது காலை அவன் தலைமீது வைத்து அவனைப் பாதாளத்திற்குள் அழுத்திவிட்டார்.

அவன் பாதாளலோகம் சென்ற போதிலும், சிவாலய விளக்கைத் தூண்டிய புண்ணியத்தால் அதற்கு அரசனாக்கப்பட்டான்.

அசுரர்களை அழிக்கத் திருமால் கொண்ட பத்து அவதாரங்களில் ஒன்பது அவதாரங்களில் சோமுகன், இரணியாட்சகன்,இரணியன், கார்த்தவீரியன், கார்த்த வீரியார்ச்சுனன், இராவணன், கும்பகர்ணன், கம்சன், முதலியவர்களைக் கொன்றழித்தார்.

வாமன அவதாரத்தின் போது மட்டும் அசுரச் சக்கரவர்த்தியான மகாபலியை அழிக்காமல் பாதாளத்திற்கு அரசனாக்கினார். இது மகாபலி சிவாலயங்களில் விளக்கு ஏற்றிய புண்ணித்தால் நிகழ்ந்ததாகும்.

❖ திருமால் அவரை வஞ்சித்த பாவம் தீரத் தனது நரசிம்ம அவதாரத்திலொரு கூறைச் சுவேத நரசிம்மர் எனும் பெயரில் அவருடைய மாளிகைக்குப் பாதுகாவலனாக அமர்த்தினார்.

❖ மகா சிவபக்தனான மகாபலியை வஞ்சித்து அவன் தலைமீது காலைவைத்து பாதாள உலகத்திற்குச் செலுத்திய பாவம் நீங்கத் திருமால் திருமாணிக்குழி என்னும் தலத்திற்கு சென்று சிவ வழிபாடு செய்தார். இங்குள்ள சிவாலயச் சுவற்றில் சக்ரவர்த்தி எலியாக இருந்து விளக்கைத் தூண்டுதல், சக்ரவர்த்தி, குறள் வடிவத் திருமாலுக்கு நிலதானம் செய்தல், பின்னர் அவர் திருமாலால் பாதாளத்திற்கு அழுத்தப்படுதல் முதலியன தொடர் சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளன.

தேவாரத்துள் மகாபலியின் கதை

திருமறைக்காட்டில் விளக்கைத் தூண்டிய எலி மன்னாகும் பேறு பெற்றதைத் தேவாரம் சிறப்புடன் குறிக்கிறது திருநாவுக்கரசர், திருக்குறுக்கை வீரட்டத்தில் அருளிச் செய்த பதிகத்தில்

நிறைமறைக்காடு தன்னில் நீண்டெரி தீபந்தன்னை
கறைநிறத் தெலித்தன் மூக்குச் சுட்டிடக் கனன்று தூண்ட
நிறைகடல் மண்ணும் விண்ணும் நீண்ட வான்உலகமெல்லாம்
குறைவறக் கொடுப்பார் போலும் குறுக்கை வீரட்டனாரே

என்று அருளிச் செய்துள்ளார் இது ஆலயங்களில் விளக்கேற்றுவதின் மேன்மையைக் குறிப்பதாகும்.

தீப தானம்

சிவாலயங்களில் கார்த்திகை, மாதத்து இரவுகளில் தீப வரிசைகளை ஏற்றி வைத்து நிலவைப் பழிக்கும்படியான ஒளி வெள்ளத்தை எவன் உண்டாக்குகிறானோ அவன் நரகத்தினைப் பார்க்க மாட்டான். (சொர்க்கத்தில் சுகம் அனுபவித்துக் கொண்டிருப்பான்) கார்த்திகை மாதத்தில் தினந்தோறும் சிவாலயங்களில் விளக்கேற்றுபவர்கள் ஜோதிர் லோகத்தை அடைகின்றனர்.

—காசிக்கண்டம்

ஜல தீபங்கள்

ஓடும் நீரில் விளக்குகளை ஏற்றி விடுவதால் குலதெய்வங்கள் மகிழ்கின்றன. ஆடிப் பெருக்கன்று தீபங்களை ஓலையால் செய்த சிறு மண்டபங்களில் வைத்து காவிரியில் விடுவர். எண்ணற்ற தீபங்கள் அலையில் ஆடிச் செல்வது அழகாக இருக்கும். தண்ணீரில் அவை பிரதிபலித்துக் கொண்டே செல்வது கண்கொள்ளக் காட்சியாகும். காசியில் கங்கைக்கு தினமும் மாலையில் பூஜை நடக்கும். அப்போது அன்பர்கள் சிறிய அகல்விளக்குகளை ஏற்றி கங்கையில் விடுகின்றனர். கரை நெடுக எரியும் விளக்குகள் கங்கை மாதவுக்கு அணிவிக்கப்பட்ட தெய்வீகச் சுடர் மாலை போன்று காட்சியளிக்கின்றன. முருகப் பெருமான் கங்கையின் மகனாக இருப்பதால் காங்கேயன் என்று அழைக்கப்படுகிறார். அக்கோலத்தில் அவர் அகல்விளக்கு; நீலோற்பலமலர் ஆகியவற்றை ஏந்தி முதலை மீது அமர்ந்து கங்கை வெள்ளத்திடையே தோன்றுகிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாவை விளக்குகள்

"ஒளி" காட்டுவது உலகிலுள்ள புண்ணியங்களில் பெரும் புண்ணியம். இறைவன் முன்பு ஒளிகாட்டும் தீபங்களை ஏந்தி நிற்பது; அவை எல்லாவற்றிலும் உயர்ந்ததாகும். பெரும் தனவான்கள் அகல் விளக்கை ஏந்தி, தான் இறைவன் முன்னிலையில் நிற்பது போல வெண்கலத்தில் திருவுருவம் செய்து நிலைப்படுத்தினார். அதிலுள்ள விளக்கை எரிப்பதற்கு நிலக் கொடைகளையும் அளிந்திருந்தனர். சிதம்பரத்தில் விளக்கேந்தியவாறு நிற்கும் ஒரு பெரும் தனவானின் அழகிய திருவுருவம் சிற்சபையில் உள்ளது.

திருக்கோயில்களில் பணி புரிந்த பெண்கள் கோயில்களில் விளக்கேற்றுவதைப் பெரும்பேறாகக் கருதினர். தாம் விளக்கேந்தி நின்று பணிபுரிவதைக் குறிக்கும் வகையில் தங்களைப் போலவே பெண் உருவங்களைச் செய்து கோயில்களில் நிலைப்படுத்தினர். இவை பாவை விளக்குகள் என்று அழைக்கப்பட்டன. இப்பெண் வடிவங்களில் தலையில் கொண்டையும், நீண்ட சடைப்பின்னலும் தலை அலங்காரமாக நெற்றிச் சுட்டி, சூரியபிறை, சந்திரபிறை, ராக்கொடி, நாகபடம், முதலான அணிகளுடன் அமைக்கப்பட்டுள்ளன. கழுத்தில் பல வகையான சரங்கள், காசு மாலை, தோளில் வாகு வலையம், கைகளில் வளையல்கள், கங்கணம், இடுப்பில் ஒட்டியாணம், கால்களில் சிலம்பு, சதங்கை, கொலுசு, கால்களில் கை விரல்களில் மோதிரங்கள் ஆகியனவும் அலங்கரிகின்றன. இவை கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன.

இப்பெண் வடிவங்கள் இரண்டு கைகளாலும் பெரிய அகலைத் தாங்கியுள்ளன. இதில் நெய் விட்டு விளக்கேற்றுகின்றனர். இவர்களின் இருதோளிலும் கிளி உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பெண்களின் எல்லையற்ற சுகத்தில் வீற்றிருப்பதைத் தோளிலுள்ள கிளிகள் உணர்த்துகின்றன என்பர். தென்னகமெங்குமுள்ள அனேக ஆலயங்களில் பாவை விளக்குகள் சிறப்புடன் உள்ளன.

இராஜேந்திர சோழனிடத்தில் பேரன்பு பூண்டவள் அணுக்கியவர் பரவையார். இவளுடைய விருப்பத்தின் படியே திருவாரூரில் மண்தளியாக இருந்த பூங்கோயிலை இராஜேந்திரன் கற்கோயிலாக ஆக்கினான். இக்கோயிலின் திருமுழுக்கின்போது இராஜேந்திரன், பரவையாரைத் தேரில் தன்னுடன் ஏற்றிக் கொண்டு வீதிகளில் பவனி வந்து தியாகேசரைப் பணிந்தான். இவர்கள் இருவரும் நின்று தியாகேசரைத் தொழுத நினைவாக இரண்டு பாவை விளக்குகள் இங்கு நிலைப்படுத்தப்பட்டன. இவை நின்ற இடம் தெரியும் குத்து விளக்குகள் இங்கு என்றழைக்கப்பட்டன. மேலும் இந்த விளக்குப் பாவைகளுக்கு பச்சைப்பாவை, சரியாமுலை நங்கை எனும் பெயர்களும் வழங்கின என்பதைத் திருவாரூர் கல்வெட்டால் அறியமுடிகிறது.

❖ சுசீந்திரத்தில் உள்ள பெரிய பிராகார மண்டபத்தின் தூண்களில் வரிசையாகப் பாவை விளக்குகள் உள்ளன. சுவாமி உலாவரும் போது இப்பாவை விளக்கின் அகல்களில் எண்ணையூற்றி விளக்கேற்றி வைக்கின்றனர். குமரி மாவட்டத்தில் அனேக ஆலயங்களில் தூண்களில் வரிசையாக பாவை விளக்குகள் உள்ளன.

❖ திருவான்மியூர் திரிபுரசுந்தரி அம்பிகை சந்நிதியில் கலையழகு நிரம்பிய பாவை விளக்கு உள்ளது.

பாவை விளக்கை விளக்கு நாச்சியார் எனவும் அழைப்பர். இறைபணியில் ஈடுபட்ட பெண்கள் மறைந்த போது அவர்கள் வடிவை பாவை நாச்சியராக எழுந்தருளி வைப்பதும் வழக்கமாகும். இப்பாவை விளக்கின் பீடத்தில் அப்பெண்களின் பெயரும் பெருமையும் எழுதப்பட்டன.



அம்முனிபாய் தம்மையாக செய்து வைத்த பாவை விளக்கு – திருவிடைமருதூர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருவிடைமருதூரில் பாவை விளக்காய் நிற்கும் அம்முனி பாய் அரசி

திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமி ஆலயத்தில் ஏறத்தாழ 4 அடி உயரமுள்ள பாவை விளக்கு உள்ளது. இது அம்முனிபாய் என்னும் மராட்டிய அரசகுலப் பெண்ணின் திருவுருவமாகும்.

வெண்கலத்தால் செய்யப்பட்டுள்ள இச்சிலை வடிவில் அப்பெண்ணரசி ஏராளமாக அணிமணிகள் பூண்டு வனப்புடன் திகழ்கிறாள். தலையில் சூரியபிறை, சந்திரபிறை, புல்லகம், தொய்யகம், அளகசுஷடகம், காதில் ஜிமிக்கி, குண்டலங்கள் கழுத்தில் முத்தாரம், காசுமாலை கண்டசரம், தோள்களில் வங்கி தோள்வளை முன்கரங்களில் முத்து வளையல்கள் இடுப்பில் ஒட்டியாணம் கைகளில் காப்புகள், மோதிரங்கள், கால்விரல்களில் காலாழிகள் ஆகியவற்றை அணிந்துள்ளாள். இவளுடைய அழகுக்கு அழகு சேர்க்கும் வகையில் தோளில் ஒரு கிளியும் அமர்ந்துள்ளது. இந்தச் சிலையில் காட்டப்பட்டுள்ள அத்தனை அணிகலன்களையும் அவள் அணிந்திருந்தாள் என்றும் பெருமானை வழிபட்டபின் அவற்றை ஆலயப் பணிக்குக் கொடுத்து விட்டதாகவும் கூறப்படுகிறது.

இப்பெண்மணி திருவிடைமருதூர் ராஜாவான பிரதாப சிம்மனைக் காதலித்தவள். அவனுக்கும் இவளுக்கும் திருமண நிச்சயிக்கப்பட்டிருந்தது. விதிவசத்தால் திருமணமாகும் முன்பே பிரதாபசிம்மன் மாண்டு போக இவள் அவனையே தனது கணவனாக மதித்து வாழ்நாள் முழுவதும் கழித்தாள். இவள் கி.பி. 1593ல் பிரதாப சிம்மன் நினைவாக திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமி ஆலயத்தில் லட்சதீபம் ஏற்றுவித்தாள். அத்தீபங்களில் ஒன்றாக (விளக்கேற்றி நிற்கும்) தன் உருவத்தையும் செய்து வைத்ததுடன் அதன்கீழ் தனது வரலாற்றையும் எழுதி வைத்துள்ளாள். அதில் தன்னை பிரதாப சிம்மனின் மனசாலே வரிக்கப்பட்ட பார்யை என்று அறிவித்துக் கொள்கிறாள்.

கலைநயம் மிகுந்த இந்தப் பாவை விளக்கு இப்பொழுதும் மகாலிங்கசுவாமி ஆலயத்தில் ஒளிவீசிக் கொண்டிருக்கிறது. இந்தியாவில் எத்தனையோ பாவை விளக்குகள் இருந்தாலும் வரலாற்றுக் குறிப்புடன் நித்தியமாக ஒளிவீசிக் கொண்டிருக்கும் பாவை விளக்குகளில் இதுவே அளவால் பெரியதும் சிறந்ததும் ஆகும்.

லட்ச தீபம்

ஆலயங்களில் தினமும் அன்பர்களால் அனேக விளக்குகள் ஏற்றப்படுகின்றன என்றாலும் கார்த்திகைப் பௌர்ணமியில் அதிக அளவு விளக்குகள் ஏற்றப்படுகின்றன. சில ஆலயங்களில் லட்சதீபம் எனும் விழா ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது. ஒரு லட்சம் அகல்கள் ஏற்றப்பட்டு ஆலய மதில்கள் பிராகாரங்கள், கோபுரங்கள், விமானங்கள், மண்டபங்கள், முதலிய இடங்களில் வைக்கப்படுகின்றன. பிராகாரத்தில் தாமரை, இடபம், சிவலிங்கம், முதலிய வடிவங்கள் கோலங்களாக வரையப்பட்டு அதன்மீது வரிசையாக தீபங்கள் வைக்கப்படுகின்றன. திருக்குளங்களின் படிகட்டிகளிலும் வரிசை வரிசையாக தீபங்களை ஏற்றுகின்றனர். எண்ணற்ற தீபங்களின் ஒளியில் ஆலயம் பிரகாசமாக ஒளிர்வது கண்கொள்ளக் காட்சியாகும். மயிலாப்பூரில் ஆண்டுதோறும் லட்சதீபப் பெருவிழா கொண்டாடப்படுகிறது. திருக்கழுக்குன்றம் வேதகிரீசர், திரிபுரசுந்தரி ஆலயங்களில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை லட்சதீபம் ஏற்றப்படுகிறது.

லட்ச தீப மண்டபம்

பல தலங்களில் ஆலயங்களின் நேர் எதிரில் பெரிய மண்டபம் அமைக்கப்பட்டு அதில் ஏராளமான விளக்கு மாடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் ஆயிரத்திற்கும் குறைவாகவே விளக்கு மாடங்கள் இருப்பினும் அவை லட்சதீப மண்டபங்கள் என்று அழைக்கப்படுகின்றன. அச்சிறுப்பாக்கம், ஆட்சீசுவரர் ஆலயத்திற்கு எதிரில் இத்தகைய மண்டபம் ஒன்று உள்ளது. பெருந்திருவிழாவின் ஐந்தாம் நாள் இரவு திருக்கல்யாணம் முடிந்து சுவாமி அம்பிகையுடன் இங்கு எழுந்தருளும் போது இதிலுள்ள அனைத்து மாடங்களிலும் விளக்குகள் ஏற்றப்பட்டு பெரிய அளவில் உபசாரம் செய்யப்படுகிறது. திருப்பதி, திருமலை வேங்கடவன், உலாக்காணும் வேளையில் ஆலயத்தின் வெளியே தென்கிழக்கு முனையில் வடக்கு நோக்கி அமைந்துள்ளள தீப மண்டபத்திற்கு எழுந்தருள்கின்றார். முழுவதும் கண்ணாடி பதிக்கப்பட்ட இந்த மண்டபத்தில் வரிசை வரிசையாக அகல் விளக்குகள் ஏற்றப்படுகின்றன கண்ணாடிகளில் பிரதிபலிக்கும் தீபச்சுடர்கள் எண்ணற்ற தீபச் சுடர்கள் எரிவது போன்ற பிரமையை உண்டாக்கு கின்றன. இங்கு பெருமானுக்குத் தீப உபசாரம் நடத்தப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆலயங்களில் ஏற்றப்படும் விதவிதமான விளக்குகள்

விளக்குகள் இரவின் இருளைக் கடிந்து ஒளி காட்ட உண்டானவை. அவை பயன்பாட்டின் தன்மை, அளவு, அமைப்பு ஆகியவற்றிற்கேற்ப சரவிளக்கு நிலைவிளக்கு, குத்துவிளக்கு தோரணவிளக்கு, பாவை விளக்கு, எனப் பல்வேறு பெயர்களால் குறிக்கப்படுகின்றன. இவற்றில் சிலவற்றை இங்கே காணலாம்.

அகல் விளக்குகள்

குழிவான கிண்ணம் போன்ற சிறிய மண்பாத்திரங் களே அகல் எனப்பட்டன. இவற்றின் விளிம்பில் திரியை அமைக்கும் வண்ணம் மூக்கு போன்ற அமைப்பு இருக்கும். இதில் எண்ணை ஊற்றி தீபம் ஏற்றுவர். ஒளியின் தேவைக்கேற்ப பல வரிசைகளாக அகல் விளக்குகள் ஏற்றப்படுகின்றன.

கார்த்திகை தீபநாளில் இப்போதும் மண்ணாலான அகல் விளக்குகளை ஏற்றுவதே சிறப்பாகக் கருதப்படு கிறது. மண் அகல்களில் எண்ணைப் பிசுக்குப் ஏற்பட்டு கருப்பாக ஆகிவிடுவதாலும் எளிதில் உடைந்து விடுவ தாலும், இரும்பு, வெண்கலம், பித்தளை, ஆகியவற்றால் செய்த அகல் விளக்குகள் வழக்கத்தில் வந்தன. சிறப்புப் பூசைகளின் போது மண்ணாலான அகல்களில் விளக் கேற்றி வழிபடுவதே சிறந்ததாகக் கருதப்படுகிறது.

நிலை விளக்குகள்

அகல் விளக்குகளைத் தரையில் ஏற்றி வைத்தால் வெளிச்சம் குறைவான இடத்தில் மட்டுமே இருக்கும் என்பதால் உயரமான இடத்தில் வைக்க விரும்பினர். அடிபருத்த மரத்தண்டின் உச்சியில் வட்டமான மரத் தட்டை பொறுத்தி அதன் மீது அகல்களை வைத்தனர். அதன் வளர்ச்சியே இப்போது நாம் காணும் குத்து விளக்குகளாகும். மரத்தட்டில் ஐந்து, ஏழு, ஒன்பது, என்ற எண்ணிக்கைகளில் அகல்களை ஏற்றி வைத்தனர். பின்னாளில் உலோக விளக்குகள் வழக்கத்திற்கு வந்த போது ஒரே தட்டில், விளிம்பில் திரியிடுவதற்கு ஏற்ப சற்று உட்குழிகளை அமைத்துனர். இதுவே பல முகங் களைக் கொண்ட விளக்குகளாக வளர்த்தது. இந்த அமைப்பிலிருந்தே கிளைவிளக்குகள், விருட்ச தீபங்கள், யாவும் வளர்ந்தன.

கிளை விளக்கு

நடுவில் உள்ள நிலை விளக்கிலிருந்து நான்கு பக்கமும் கிளைத்துச் செல்வது போல் அமைந்திருப்பதால் இவை கிளை விளக்குகள் என அழைக்கப்படுகின்றன.

நடுவில் ஒன்றும் பக்கவாட்டில் இரண்டு, நான்கு ஆறு என்ற வகையில் கிளைத்துச் செல்லும் விளக்குகளை இறைவன் முன்றும் ஏற்றும் வழக்கம் உள்ளது. கேரளத்தில் கிளைவிளக்குகள் அதிக அளவில் ஏற்றப்படுகின்றன. இவை விருட்ச தீபத்தின் முன்னோடிகளாகும்.

விருட்சதீபம்

இறைவன் ஜோதி மயமானவன். அவன் விருட்சங் களாகவும் இருக்கின்றான். அடர்ந்த காடுகளில் ஜோதி விருட்சங்கள் உள்ளன. இரவில் ஒளி வீசிப் பிரகாசிக்கும் இந்த ஜோதி விருட்சங்களுக்கு இணையாக ஏற்றப்படு வதே விருட்ச தீபமாகும்.

இதில் அடிமரமும் அதிலிருந்து பிரிந்து செல்லும் அனேக கிளைகளும் உலோகத்தால் அமைக்கப் பட்டுள்ளன. கிளைகளில், இலைகள், கனிகள், மொட்டு

★ விருட்ச தீபம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



★ மலையாளக் கிளை விளக்கு

கள், ஆகியன, இடம் பெற்றுள்ளன. கிளைகளில் பஞ்ச முக விளக்குகள் தொங்கவிடப்பட்டுள்ளன. இதிலுள்ள அனைத்து விளக்குகளையும் ஏற்றிப் பார்க்கும்போது மரத்தில் சுடர்ப் பூங்கொத்துக்கள் ஒளிர்வது போல் இருக்கும்.

திருவண்ணாமலை, சிதம்பரம் முதலிய தலங்களில் விருட்சதீபங்கள் உள்ளன. குருவாயூர் ஆலயத்தில் விருட்சதீபங்கள் வைக்கப்பட்டிருப்பதுடன் தினமும் ஏற்றப் படுகின்றன. தீப விருட்சங்களின் அடியில் ஆமையின் உருவம் பீடமாக அமைக்கப்பட்டுள்ளது. கிளைகளில் நாகங்கள் பறவைகளின் உருவங்கள் இடம் பெற்றுள்ளன.

தூங்கா விளக்குகள்

"தூங்கு" என்பதற்குத் தூக்கிப்பிடிக்கப்பட்டது என்பது பொருள். தூக்கிப்பிடித்துப் பார்க்கும் வகையில் நீண்ட கம்பியுடன் இணைக்கப்பட்ட வட்டமான விளக் குகளே தூங்கா விளக்குள் ஆகும். நீண்ட கம்பியின் ஒரு முனையில் வளையம் பொருத்தப்பட்டு அதில் விளக்கு தொங்கவிடப்பட்டுள்ளது. கம்பியின் மறுமுனை கூராகவுள்ளது. இது தரையிலோ, சுவரிலோ, மரப் பொந் திலோ குத்தி வைக்க ஏதுவாக உள்ளது. குத்திவைக்கும் விளக்காதலின் இவை குத்து விளக்குகள் எனப்பட்டன. பின்னாளில் வீடுகளில் ஏற்றப்படும் நிலை விளக்குகளை குத்துவிளக்குகள் என்று அழைக்கத் தொடங்கிவிட்டனர். கேரளத்தில் சுவாமி புறப்பாட்டின்போது வரிசையாக இத் தகைய தூங்கா விளக்குகளை எடுத்துச் செல்லும் வழக்கம் இப்போதும் உள்ளது.

குத்துவிளக்கு

நடைமுறையில் வட்டமாக அடிப்பாகத்துடன் நீண்ட தண்டும் ஐந்து அல்லது ஏழு முகங்களும் உச்சியில் பூவுடன் (அன்னம்/லட்சுமி) கூடிய விளக்கைக் குத்துவிளக்கு என அழைக்கிறோம். இவை நிலை விளக்குகள் வகையைச் சேர்ந்ததாகும்.

நெடு நிலை விளக்குகள்

விளக்குகளை ஒளியின் தேவைக்கேற்ப ஆங்காங்கு எடுத்துச் சென்று வைத்துக் கொள்வது வழக்கம். அப்படியில்லாமல் நிலையாக ஓரிடத்தில் நிலைப்படுத்தப்பட்டுள்ள விளக்குகள் நிலை விளக்கு கள் என்று அழைக்கப்பட்டன. இவை அகன்ற அடிப் பரப்பையும் வட்டமாக பல எண்ணிகையில் அமைந்த அடுக்குகளையும் கொண்டவை. கேரள மாநிலங்களில் குமரி மாவட்டத்திலும், ஆலயத்தின் முன்புறம் கல்லால் செய்யப்பட்ட இத்தகைய நிலை விளக்குகள் உள்ளன. இவற்றில் ஏராளமான திரிகள் இடப்பட்டு தீபங்கள் ஏற்றப்படுகின்றன. கும்பகோணத்தை அடுத்த திருவலஞ்சுழி சுவேத விநாயகர் சந்நிதியில் கல்லாலான நிலை விளக்குகள் அனேகம் உள்ளன.

சர விளக்குகள்

பூக்களைத் தொடுத்துப் பூச்சரங்களாக்குவது போல் விளக்குகளை வரிசையாகச் சங்கிலியினால் இணை த்துச் சரய்போல் ஆக்கி அதில் தீபங்களை ஏற்றுகின்ற னர். இவை சரவிளக்குகள் என்று அழைக்கப்படுகின்றன (பார்க்க: தோரண தீபங்கள் பக் 1135)

தூண்டா மணி விளக்கு

இதில் பெரிய உருண்டையான அமைப்பில் எண்ணைக்குடம் அமைந்துள்ளது. குடத்தின் மேற் பகுதியில் அன்னமும் (அல்லது ஏதாவது உருவமும்) அதன்மேல் வளையமும் உள்ளது. இவை மேலிருந்து சங்கிலியால் தொங்கவிடப்பட்டுள்ளன. குடத்தின் கீழ்ப் பகுதியில் சிறு துளையிட்டு அதிலிருந்து வெளியேறும் எண்ணை தங்கும் வகையில் ஒரு அகல் இணைக் கப்பட்டிருக்கிறது. குடத்தில் எண்ணையை நிரப்பி கீழுள்ள அகலில் திரியிட்டு விளக்கேற்றுவர். இந்த தீபம் பத்துப் பதினைந்து நாட்கள் வரை (நிரப்பும் எண்ணை யின் அளவுகேற்ப) அணையாமல் எரிந்து கொண்டிருக் கும். தினமும் காலையிலும் மாலையிலும் திரியிலுள்ள சிட்டத்தைத் தட்டிவிட்டுத் திரியைத் தூண்டிவிட வேண்டும். தென்னகத்திலுள்ள அனேக ஆலயங்களில் இத்தகைய விளக்குகள் உள்ளன. இவை இரவு பகல் எப்போதும் எரிந்து கொண்டிருக்கும்.

கல்வெட்டுகளில் இவை நந்தா விளக்கு (நொந்தா விளக்கு) அணையாவிளக்கு எனப் பலவாறு குறிக் கப்பட்டுள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கண்ணாடி விளக்குகள்

கோயில் பிராகாரங்களில் வரிசை வரிசையாக கண்ணாடி விளக்குகளை ஏற்றும் வழக்கம் 18ஆம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் வந்தது. அகன்ற கண்ணாடிக் கூடுகளில் மெழுகுவர்த்திகளும் தேங்காய் எண்ணெய் விளக்குகளும் ஏற்றப்பட்டன. இவை கண் கவரும் வேலைப்பாடு கொண்டவை நீண்ட பூக்களை போல் வடிவமைக்கப்பட்டவை பல வண்ணங்களில் ஒளி ரும் இவற்றை லஸ்தர் விளக்குகள் என்று அழைக் கின்றனர். கொத்துகொத்தான ஊமத்தம்பூக்கள் அல்லி மலர்கள் போன்ற வடிவில் செய்யப்பட்ட இவ்விளக்குகள் கண்ணையும் கருத்தையும் கவருவதாகும். சுவாமி உலா வரும் போது கந்தர்வ பொம்மைகள் பீடத்தை சுற்றி நின்று இந்தவகை விளக்குகளை ஏந்தியிருப்பது போல் அமைத்திருந்தனர்.

திருவான்மியூர் மருந்தீஸ்வரர் ஆலயத்திலுள்ள இந்திர விமானம் என்னும் பெரிய வாகனத்தில் அமைந்துள்ள கந்தர்வப் பொம்மைகள் இத்தகைய கண் ணாடிவிளக்குகளை ஏந்தியிருப்பதைக் காண்கிறோம். விழாவின்போது இவற்றில் விளக்குகள் ஏற்றப் படுகின்றன.



பிரார்த்தனை விளக்குகள்

மாவிளக்குகள்

அரிசிமாவை வெல்லம், இளநீர் விட்டுப் பிசைந்து உருண்டையாக்கி இதன் மேற்பக்கத்தைக் குழிப்பர். இப்படி இரண்டு உருண்டைகளைச் செய்து குழிகளில் நெய்விட்டு அதில் தாமரைத் தண்டு திரியினால் விளக்கேற்றுவர். இவற்றை ஒரு தட்டில் வெற்றிலை பாக்கு பழம் தேங்காயுடன் சுவாமி முன்னிலையில் வைத்து வணங்குகின்றனர். இவை மாவிளக்குகள் என்று அழைக்கப்படுகின்றன. பெரும்பாலும் அம்பிகை ஆலயங்களில் மாவிளக்குகள் ஏற்றப்படுகின்றன. மாவிளக்கை ஏற்றுவதால் உடல் நோய்கள் நீங்கி தேக சுக உண்டாகும் என்று நம்புகின்றனர்.

தேங்காய் விளக்குகள்

தேங்காயைச் சமபாதியாக உடைத்து அம் மூடிகளில் நெய்விட்டு விளக்கேற்றுகின்றனர். இது சிறு தெய்வ வழிபாட்டில் அதிகம் காணப்படுகிறது.

எலுமிச்சைப் பழ விளக்குகள்

எலுமிச்சம் பழத்தை இரண்டாக வெட்டி சாறைப் பிழிந்து விட்டு மூடியை எதிர்புறம் திருப்பி அம்மூடியில் நெய் நிறைத்து விளக்கேற்றுகின்றனர். துர்க்கை சந்நிதியில் இவ்வகை விளக்குகள் அதிக அளவு ஏற்றப்படுகின்றன. இப்படி ஏற்றுவதால் வறுமை விலகும். தடைப்பட்ட திருமணம் விரைவாக நிகழும். எடுத்த காரியத்தில் வெற்றி அடையலாம் என்று நம்பப்படுகிறது. இவற்றைச் சுவர்ணதீபம் என்றும் அழைப்பர்.

மண்டை விளக்குகள்

மண்டுதல் என்பதற்கு நிறைந்திருத்தல் என்பது பொருள். ஒரு புதிய தூய மண்சட்டியைக் கழுவி காய வைத்து அரிசிமாவுடன் நாட்டுச் சர்க்கரையை கலந்து அதில் இட்டு அதன் நடுவில் குழி செய்து நெய்யூற்றி மலர்களுடன் வைப்பர் அதற்கு வெற்றிலை பாக்கு வைத்து கற்பூரம் காட்டி வணங்குவர். பின்னர் அதைத் தலையில் வைத்துக் கொண்டு ஆலயத்தை வலம் வருவர். இதற்கு மண்டை விளக்கெடுத்தல் என்பது பெயர்.

காஞ்சிபுரம் கச்சபேசுவரர் ஆலயத்தில் கார்த்திகை மாதத்து ஞாயிற்றுக் கிழமைகளில் மண்டை விளக்கு எடுக்கும் பிரார்த்தனை இன்றும் உள்ளது. ஆயிரக் கணக் கான அன்பர்கள் மண்டை விளக்கு எடுத்துக் கொண்டு ஆலயத்தை வலம் வருகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெய்வ (நவ) நல்விளக்கு வழியாடு

இறைவனை அருட்சோதி வடிவில் வழிபடுகின்றோம். சிவபெருமானை அப்பர் "செம்பொற் சோதியாகப் போற்று கின்றார்" இறைவனின் அருட்சோதியே சக்தியின் வடிவ மாகும் அதுவே சிவம் எனும் விளக்கில் பிரகாசிக்கிறது. சக்தி ஒன்பது வடிவங்களில் அன்பர்களுக்கு அருள் பாலிக்கிறாள். திருமூலர் திருமந்திரத்தில் அருள்ஒளி எனும் தலைப்பில்,

விளக்கினை ஏற்றி விளக்கினை அறிமின்
விளக்கின் முன்னே வேதனை மாறும்
விளக்கை விளக்கும் விளக்குடையார்கள்
விளக்கில் விளங்கும் விளக்கவார்தாமே

என்ற மந்திரத்தை அருளிச் செய்துள்ளார். இதில் ஒன்பது முறைவிளக்கு என்ற சொல் ஆளப்பட்டு வெவ் வேறு பொருள்களைக் தருகின்றன. இது பராசக்தி ஒன்பது நிலையில் நின்று அன்பர் களுக்கு அருள்பாலிப் பதை குறிக்கிறதென்பர். இவளுடைய ஒன்பது திருக் கோலங்களை நவசக்திகள் என்பர். நவசக்திகளை ஒன்பது தீபங்களின் வடிவில் வழிபடுகின்றனர்.

வேலூர் ஜலகண்டீசுவரர் ஆலயத்தில் ஒன்பது விளக்குகள் நவசக்தியாகப் போற்றி வணங்கப் படுகின்றன. இவை அணையா விளக்குகளாகும். அன்பர் கள் தொடர்ந்து எண்ணெய் ஊற்றி வழிபடுகின்றனர்.

திருப்பைஞ்ஞீலி என்னும் தலத்தில் கொடிமரத்திற்கு அருகில் ஒன்பது குழிகளில் தீபமேற்றி வழிபடுகின்றனர். இவை நவசக்தியரைக் குறிக்கும் சக்தி தீபங்கள் என்று சமய அறிஞர்கள் கூறுகின்றார். இவ்வூரில் நவக்கிர கங்கள் இல்லாததால் மக்கள் இவற்றை நவக்கிரகமாக வழிபடும் வழக்கம் தோன்றிவிட்டது.

மாகிஷ்மதி எனும் ஊரில் சிவாலயத்தில் பதினோரு தீபங்களை ஏற்றி வழிபடுகின்றனர். இவை ஏகாதச ருத்திரர்களைக் குறிப்பதால் உருத்திர தீபங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

கார்த்திகை தீபத்தின் போது ஏற்றப்படும் பரணி தீபத்தில் ஒன்பது தீபங்கள் ஏற்றப்பட்டு அவை நவசக்தி யராகப் போற்றப்பட்டு பூசிக்கப் படுகின்றன.

இதில் நடுவில் உள்ளது மனோன்மணி என்ற சக்தியாகவும் சுற்றியுள்ளவை வாமை, முதலிய அஷ்ட சக்தியராகப் போற்றி வணங்கப்படுகின்றன.

கை விளக்குகள்

சிறிய தீவட்டிகளைப்போலவே கைவிளக்குகளும் பயன்பட்டன. இதில் பெரிய திரியிட்டு குடம் போன்ற பகுதியில் எண்ணை நிறைத்து எரியவிடப்பட்டன. இவை இரவில் வழிகாட்ட உதவின. பெரிய மடாதிகள் துறவிகள் வரும் போது அவர்களுக்கு முன்பாக கை விளக்குகள் எடுத்துச் செல்லப்படுகின்றன. இவை கலையழகுடன் செய்யப் பட்டிருப்பதுடன் இவற்றின் மீது, கிளி, யாளி, பாயும் சிங்கம், முதலிய உருவங்களும் அமைக்கப்பட்டுள்ளன. தருமை, திருவாவடு துறை, முதலிய ஆதீனங்களில் வெள்ளிப்பிடியில் சிங்கம், புலி, அன்னம் முதலிய கண்கவர் உருவங்களைக் கொண்ட கைவிளக்குகளும் சிறு தீவட்டிகளும் உள்ளன.

❖ சிவபெருமான் மயானத்தில் நடமாடும் போது பிணம் எரியும் சிதையிலிருந்து கொள்ளிக் கட்டைகளைப் பிடுங்கிப் பேய்கள் கை விளக்குகளாக ஏந்தி ஒளி காட்டுகின்றன என்று திருமுறைகள் சில இடங்களில் குறிக்கின்றன. பேய் உயர்கொள்ளி கைவிளக்காகப் பெருமானர் தீயுகந்தாடும் என்று திருஞானசம்பந்தர் பாடியுள்ளார்.

தீவர்த்திகள்

சிவபெருமான் வீதி உலா அல்லது உட்பிரகார உலாவரும் போது எடுத்துச் செல்லப்படும் தோரணம், கொடி போன்ற விருதுகளில் முக்கியமானது தீவட்டி எனப்படும், தீப்பந்தமாகும். இது ஒற்றைத் தீ வட்டி, சூரிய தீவட்டி சந்திர தீவட்டி, படல் தீவட்டி எனப் பலவகைப்படுகிறது. இரவில் ஒளியூட்டப் பயன்பட்ட இவை பகலில் மரியாதைக்குரிய சின்னமாகக் கருதப்பட்டது. சிதம்பரம் திருவண்ணாமலை முதலிய தலங்களில் பழைய மரபுப்படி அமைந்த தீவட்டிகள் இப்போதும் வழக்கத்தில் உள்ளன.

❖ கார்த்திகை தீபத்தன்று திருவண்ணாமலையில் பன்னிரண்டு சூரிய வட்ட தீவட்டிகள் ஒளியூட்ட நடுவில் அர்த்தநாரீசுவரராகப் பெருமான் தாண்டவமாடுவது கண்கொள்ளக்காட்சியாகும்.

❖ கோவை பேரூர் பட்டீஸ்வரர் ஆலயத்திலும் அவிநாசி அவிநாசி அப்பர் ஆலயத்திலும் தீவட்டிசலாம் என்னும் நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தோரண தீபங்கள்

மங்கல நாட்களில் ஆலயம், அரண்மனை, வீடுகள் முதலியவற்றிலுள்ள வாயிலின் நிலை களின் இருபுறத்திலும் மேல் உத்திரத்திலும் மாவிலை, தென்னங்குருத்து முதலியவற்றைக் கட்டி அலங்கரிப்பர். இது தோரணம் எனப்பட்டது. பின்னாளில் மகர மீனின் வாயிலிருந்து புறப்படும் கொடிகள் பின்னியிருப்பது போன்ற கலை வேலைப்பாடுகள் கல், கதை, மரம் ஆகியவற்றால் செய்யப்பட்டன.

இதையொட்டி இந்த அலங்காரம் மகர தோரணம் எனப்படுகிறது. இவற்றில் வரிசையாக விளக்குகளை அமைக்கும் வழக்கம் வந்தது வாயிற்படிகளை ஒட்டி மேலே குறுக்காகவும் இரண்டு புறமும் நெடுகிலும் அமைக்கப்பட்ட தீபங் களின் வரிசை தோரண தீபங்கள் எனப்பட்டன. இவற்றைச் சரவிளக்குகள் எனவும் அழைக் கின்றனர். இவை வாயில்களை அலங்கரிக்கும் தீபமாலையாக இருப்பதால் "வாசல் மாலைத் தீபங் கள் என்றும் அழைக்கப்பட்டன.இந்நிலை வளர்ந்து (உச்சியில் யாளிமுகமும், இருபுறமும் மகர மீன்களும் கொண்ட அகலமான பெரிய திரு வாசிகள் அமைக்கப்பட்டு அதில் அனேக அகல்கள் பொருத்தப்பட்டு தீபங்கள் ஏற்றப்பட்டன. இவையும் தோரண தீபங்கள் என்று அழைக் கப்படுகின்றன. திருவண்ணாமலை, திருவிடை மருதூர் மயிலாப்பூர் முதலிய தலங்களில் இத்த கைய விளக்குகளைக் காணலாம். மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் அம்பிகை சந்நி திக்கு நேராக தீபத்திருவாசி உள்ளது.

தீபமாலை

இறைவன் திருவுருவத்திற்கு முன்பாக அரை வட்டவடிவில் சட்டத்தை பொருத்தி அதில் வரிசையாக விளக்கேற்றுகின்றனர். இவை இறைவனுக்கு சூட்டப்பட்ட மாலை போல் இருப்பதால் தீபமாலைகள் என்று அழைக்கப் படுகின்றன. இதனை சுவாமிக்கு பின்புறம் பிரபை போல் அமைப்பதும் உண்டு. திருக்கடவூர் அபிராமி ஆலயத்தில் அம்பிகைக்குப் பின்புறம், பிரபைபோல் அமைந்த தீப வரிசை உள்ளது.

திருமறைக்காட்டு மங்கல தீபங்கள்

தென்னாட்டுப் பழமொழிகள் ஒன்று திரு வாரூர் தேரழகு, திருவிரிஞ்சை மதிலழகு என்று அழகுகளை வரிசைப்படுத்திக் கூறு கிறது. இவ்வரிசையில் விளக்கழகால் பெருமை பெற்றது திருமறைக்காடு ஆகும்.

திருமறைக்காட்டில் மகாமண்டபம் அலங் கார மண்டபம், அர்த்தமண்டபம், கருவறை என்று வரிசையாக ஏழு இடங்களில் தோரண தீபங்கள் அமைக்கப்பட்டுள்ளன. முதல் தீப மாலைக்கு லிங்க தோரணம் என்பது பெயர். இதன் உச்சியில் சிவலிங்க வடிவில் தீபங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பிரபையில் உள்ள தீபங்களின் எண்ணிக்கை ஆயிரத்திற்கும் மேலாகும். இவற்றை ஏற்றச் சுமார் ஏழு கிலோ நல்லெண்ணை தேவைப்படுகிறது. மூன்று பேர் சேர்ந்து ஏற்ற வேண்டும். சுமார் ஒரு மணி நேரம் வரை எரியும் இந்த தீபக்காட்சி மிகவும் சிறப்பாக உள்ளது. முழுவதுமாக ஏற்றப்பட்ட பின் வெளி மண்டபத்திலிருந்து பார்த்து மகிழலாம். படிப்படியாகக் குறைந்து கொண்டே செல்லும் தீப மாலைகள் லிங்கத் தில் ஒடுங்குவது போல் தோன்றுகிறது. சிறப்பு நாட்களில் ஆலயத் தாராலும் மற்றைய நாட்களில் அன்பர்களின் வேண்டுதலின் பேரிலும் இவை ஏற்றப்படு கின்றன.

ஒரு சமயம் இத்தலத்தில் விளக்கில் நெய் குடிக்க வந்த எலியின் மூக்குப்பட்டு திரி தூண்டப்பட்டது. அதனால் விளக்கு ஒளி வீசியது. அப்புண்ணியத்தால் அந்த எலி ஒரு பேரரசனாகத் தோன்றியது என்று திருமுறை கள் குறிக்கின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆவுடையார் கோயில் அத்துவா தீபங்கள்

"ஊனினை உருக்கி உள்ஒளி பெருக்கும்" திருவாசகத்தை அருளிச் செய்த ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகளை இறைவன் ஆட்கொண்ட திருத்தலம் திருப்பெருந்துறையாகும்.

நீர் நிலைகளிலும், ஆறுகளிலும் அன்பர்கள் இறங்கி நீராட வசதியாக அமைக்கப்படும் வழிகளுக்குத் துறைகள் என்பது பெயர். சிவானந்த வெள்ளம் பொங்கி வரும் பேராற்றில் அன்பர்கள் இறங்கி நீராடும் துறையாக இவ்வூர் அமைவதால் இது பெருந்துறை எனப்பட்டது. இங்கு மாணிக்கவாசகர் தம்மை ஆட்கொண்ட இறைவனுக்குக் கட்டிய கோயிலே ஆவுடையார் கோயில் என்றழைக்கப்படுகிறது.

சிவபெருமானால் அருளப் பெற்ற ஞானநூலான ஆகமங்களின் தத்துவங்களை விளக்கும் நிலையமாக இக்கோயில் விளங்குகிறது. மாணிக்கவாசகர் சிவாகமங்களைச் சிறப்பித்துப் போற்றுவதைத் திருவாசகத்தில் பல இடங்களில் காண்கிறோம்.

இறைவன் ஆகமத்தைத் திருமேனியாகக் கொண்டிருப்பதை "ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான்" என்றும் சிவாகமங்களை மகேந்திர மலை மேல் இருந்து உபதேசித்ததை, "மன்னுமலை மகேந்திரம் அதனில் சொன்ன ஆகமம் தோற்றுவித்து அருளியும் என்றும் குறித்துள்ளார்.

சிவாகமங்கள் உலகம் பரவெளியில் இருந்து தோன்றி நடைபெற்று மீண்டும் ஒடுங்குவதற்குரிய காரணப் பொருட்களாக அத்துவாக்களைக் கூறுகிறது. அத்துவா என்பதற்கு வழி என்பது பொருள் உலகம் பரசிவத்திலிருந்து இறங்கி வந்து மீண்டும் அங்கேயே சென்று ஒடுங்கிவிடும் வழியையே ஆகமங்கள் அத்துவா என்று சொல்லால் குறிக்கின்றன. சித்தாந்த நூல்கள் மாயை தன் செயல்களால் ஆன்மாக்களைப் பற்றி நிற்கும் வழி என்று அத்துவாக்களுக்கு விளக்கம் கூறுகிறது.

அத்துவாக்கள் ஆறு வகைப்படும். அவை. 1 தத்துவம், 2. கலை, 3. புவனம், 4. வர்ணம், 5. பதம், 6. மந்திரம் என்பனவாகும். இவற்றில் தத்துவம் கலை, புவனம், என்ற மூன்றும் (காண்பதற்குரிய) பொருள் வடிவானவை. எஞ்சிய, வர்ணம், பதம், மந்திரம், ஆகிய மூன்றும் ஒலி வடிவானவை. இவற்றைப் பொருட் பிரபஞ்சம், சொற் பிரபஞ்சம் எனவும் கூறுவர்.

இவை ஒன்றை ஒன்று சார்ந்து நிற்பன. இணைந்த பற்சக்கரங்களைப் போன்று ஒன்று இயங்கினால் தான் மற்றது இயங்கும் தன்மை உடையது.

சிவபூசையின் போது இந்த அத்துவாக்களைச் சிவபெருமானின் திருமேனியாக உருவம் செய்து போற்றித் துதிக்கின்றனர். ஸ்ரீ குமரகுரு சுவாமிகள் கந்தர்கலிவெண்பாவில் சிவபெருமானுக்கு ஐந்து கலைகள் திருமுடிகளாகவும், மார்பு, குய்யம், முழந்தாளோடு பாதமும் ஆக உள்ளன என்று கூறுகிறார். மேலும் புவனங்கள் ரோமங்களாகவும், வண்ணம் தோலாகவும், மந்திரங்கள் ரத்தமாகவும், பதங்கள் நரம்புகளாகவும், தத்துவங்கள் எலும்பு மஜ்ஜை முதலான சப்த தாதுக்களாகவும் உள்ளன என்றும் குறித்துள்ளார். இது இறைவன் அத்துவாக்களில் நிறைந்திருப்பதைக் குறிப்ப தாகும். ஆலய வழிபாட்டிலும் இந்த அத்தவாக்கள் தனிச் சிறப்புடன் போற்றப்படுகின்றன. இவற்றின் வடிவம், வண்ணம், அமைப்பு ஆகியவற்றை ஆகம நூல்கள் விரிவாக கூறுகின்றன.

ஆவுடையார் கோயிலிலுள்ள கனகசபை எனப்படும் குதிரைச்சாமி மண்டபத்தில் ஆகமங்களில் கூறப்பட்டுள்ள இந்த ஆறு அத்துவாக்களின் திருவுருவங் களும் பெயர்களுடன் பொறிக்கப்பட்டுள்ளன. பஞ்ச கலைகளின் வடிவங்கள் கிழக்கிலும், தென்கிழக்கில், ஏகாதச மந்திரங்களும், 81 பதங்களும்; வடமேற்கில் 51 வர்ணங்களும்; மேற்கில் 224 புவனங்களும் வடக்கில் 36 தத்துவங்களும் அமைக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

மேலும் ஆகமங்களில் கூறப்படும் அஷ்ட மூர்த்தங்கள் மகாமண்டபத்தின் விதானத்தில் புடைப்புச் சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளன. இன்னும் அனேக வகையில்

நட்சத்திர தீபங்கள்

★ பேரண்டவெளியில் மின்னிக் கொண்டிருப்பவை எண்ணிக்கையற்ற நட்சத்திரக் கூட்டங்கள். இவற்றில் அசுவினி முதலான 27 நட்சத்திரங்களைச் சமய நூல்கள் போற்றுகின்றன. மனிதன் எந்த நட்சத்திரத்தில் பிறக்கிறான் என்பதை வைத்தே அவனது ஜாதகம் கணிக்கப்படுகிறது. சமய விழாக்கள் நட்சத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்படுகின்றன. ஆலயங்களி லுள்ள கருவறையை பிரபஞ்சத்தின் வடிவமாகப் போற்றப்படுவதால் அதில் நட்சத்திரங்களைக் குறிக்கும் வகையில் 27 தீபங்கள் ஏற்றப் படுகின்றன. ஆவுடையார் கோயிலிலும், திருப்பைஞ்ஞீலியிலும், கருவறையில் நட்சத்திர தீபமாலை உள்ளது. இறைவன் சந்நிதியில் நட்சத்திரங்கள் தீபங்களையும் சிவலிங்கத்திற்கு மாலை யாகவும் இருப்பதாகப் புராணங்கள் கூறுகின்றன. இறைவனுக்குச் செய்யும் தீபாராதனையின் போது நட்சத்திர தீபம் காட்டப்படுகிறது. இதில் வட்டமான தட்டில் 26 தீபங்களும் நடுவில் ஒன்றுமாக 27 தீபங்கள் உள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆகமங்களை விளக்கும் சிற்ப ஓவியக் காட்சிகளை இக்கோயிலில் தீட்டியுள்ளனர்.

இவை யாவற்றிலும் மேலாக ஆகமங்களின் சாரமான சைவ சித்தாந்தத்தில் கூறப்பட்டுள்ள அத்து வாக்களைக் குறிக்கும் வகையில் அனேக திருவிளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. இவை சித்தாந்த தீபங்கள் என்று போற்றப் படுகின்றன. அத்துவாக்களின் வகைக்கேற்ற எண்ணிக் கையில் இங்கு விளக்குகள் அமைக்கப்பட்டு தீபங்கள் ஏற்றப்பட்டுள்ளன. இவற்றின் விளக்கத்தை இக் கட்டுரை யில் கண்டுமகிழலாம்.

❖❖❖

பரவெளியைக் குறிக்கும் கருவறை

ஆதியில், உலகமும் பேரண்டமும் தோன்றுவதற்கு முன்பாக எல்லையற்ற பரந்தவெளி மட்டுமே இருந்தது. அந்தக் கடுவெளியில் இறைவன் முதலில் நட்சத்திரக் கூட்டங்களையும் கோள்களையும், உலகத்தையும் அவற் றில் உயிர்தொகுதிகளையும் படிப்படியாக உண்டாக் கினான். பரவெளியே எல்லாவற்றையும் தன்னுள் அடக் கிக்கொண்டுள்ள மகாசக்தி என்பதால் இங்குள்ள கருவறை பரவெளியாக சித்தரிக்கப்பட்டுள்ளது. அந்தப் பரவெளியான பேரண்டப் பெருவெளியைக் குறிக்கும் குறியீடு எண்ணிலாத நட்சத்திரங்களாகும். அனைத்து நட்சத்திரங்களையும் இங்குகாட்ட முடியாது என்பதால் இருபத்தேழு நட்சத்திரங்களை கருவறையில் இருபத் தேழு தீபங்களாகப் பிரபாவளியில் அமைத்துள்ளனர்.

இந்த அகண்ட வெளியில் உலகைப் படைத்து காத்து அழித்து வழி நடத்துவோர் பிரம்மா, விஷ்ணு, ருத்திரர், என்னும் மும்மூர்த்திகளாவர். இவர்கள் முறையே சூரிய, சந்திர, அக்னி, மண்டலங்களில் வீற்றிருக்கின்றனர். இதைக் குறிக்கும் வகையில் மஞ்சள்நிறம், பச்சைநிறம், சிவப்புநிறம், கொண்ட மூன்று விளக்குகள் பிரபாமண்டலத்தில் இடம்பெற்றுள்ளன. இவை மூன்று வண்ணம் கொண்ட கண்ணாடிகளுக்குப் பின்னே ஏற்றப்பட்டுள்ளன.

தத்துவ தீபங்கள்

அத்துவாக்களில் முதலில் இடம் பெறுவது தத்துவங்கள் ஆகும். தத்துவங்கள் 96 வகையானவை. இவை அகக்கருவி, புறக்கருவி என இருவகைப்படும்.

உலகத்திற்கு அடிப்படையான (நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்ற பஞ்சபூதங்கள் (5) உயிர்கள் கண்டு, கேட்டு, தொட்டு, ருசித்து, முகர்ந்து பெறும் அனுபவ மாகிய தன்மாத்திரைகள் (5) ஐந்து, பேசுதல், நடத்தல், பற்றுதல், கழித்தல், உபத்தம், ஆனந்தமடைதல் ஆகியவற் றிற்கான கன்மேந்திரியங்கள் (5) ஐந்து; சுரோத்திரம் முதலான ஞானேந்திரியங்கள் (5) ஐந்து ; மனம் அகங்காரம் புத்தி, சித்தம் எனும் அந்தக்கரணங்கள் (4) நான்கு; புருடன், அராகம், வித்தை, கலை, நியதி, காலம், மாயை எனும் (7) ஏழு; சுத்தவித்தை ஈச்சுவரம், சாதாக்கியம், விந்து நாதம், எனும் சிவதத்துவங்கள் (5) ஐந்து ஆகிய முப்பத்தாறு ஆகும். இவற்றை அகக் கருவிகள் என்று அழைக்கின்றனர்.

எஞ்சிய 60 தத்துவங்களை இரண்டாம் தொகுதி யாகக் கூறுவர். இவை பஞ்சபூதங்களின் செயல்களான (25) இருபத்தைந்து; வாக்காதி செயல்களின் வகைகள் (5) ஐந்து; நாடிகள் (10) பத்து; வாயுக்கள் (10) பத்து; வாக்குகள் (4) நான்கு; ஏடனை (3) மூன்று; குணங்கள் (3) ஆகிய அறுபதாகும். இவை புறக்கருவிகளாகும்.

முதலில் சொன்ன 36 தத்துவங்களைச் செயற்படுத்த 36 தத்துவ அதிபர்கள் உள்ளனர். இவர்களுடைய வண் ணம் வடிவங்களைப் பற்றிச் சித்தாந்த நூல்கள் விரிவாகக் கூறுகின்றன.

உலகமும் அதிலுள்ள பொருட்களும், அவற்றால் பெறும் பயன்களும் இந்த 96 தத்துவங்களுக்கு உட்பட்டே செயல்படுகின்றன.

மேலே முதல் தொகுதியில் கூறப்பட்ட 36 தத்துவங் களைக் குறிக்கும் (36) விளக்குகளைக் கொண்ட தீபமாலை தேவசபையில் உள்ளது. இந்த இடம் அமுது மண்டபம் என்று அழைக்கப்படுகிறது. தத்துவங்களுக்கு அதிபதியான தேவர்கள் இந்த விளக்குகளில் வீற்றிருந்து பிரகாசித்துக் கொண்டிருக்கின்றனர்.

கலாதீபங்கள்

தத்துவங்களுக்கு அடுத்தப்படியாக விளங்குவது கலைகள் ஆகும். கலைகள் என்பதற்கு ஒளிமிகுந்த பகுதிகள் என்பது பொருள். மேலே குறித்த தத்துவங்கள் இந்த ஐந்து கலைப் பகுதியில் நிறைந்துள்ளன. இவை நிவர்த்தி கலை, பிரதிஷ்டா கலை, வித்யா கலை, சாந்தி கலை, சாந்தியாதீத கலை என்ற ஐந்து பகுதிகளாகும். இவற்றிற்கு முறையே பிரம்மா, விஷ்ணு, ருத்திரர், மகேசர், சதாசிவர், என்பவர்கள் அதிபதிகளாவர்.

இவர்கள் யாவரும் ஐந்தொழிலை நடத்திக் கொண்டே இருக்கின்றனர் என்றாலும், பிரம்மாவுக்குப் படைத்தலும், விஷ்ணுவுக்குக் காத்தலும், ருத்திரருக்கு அழித்தலும், மகேசருக்கு மறைத்தலும், சதாசிவருக்கு அருளலுமே முதன்மைத் தொழில்கள் ஆகும். இவர்கள் ஒவ்வொருவருக்கும் வியூகர் எனப்படும் நான்கு உதவியாளர்கள் உள்ளனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இக்கோயிலில் கருவறை பரவெளியாகச் சித்தரிக் கப்பட்டிருப்பதால் அதனுள் வியாபித்துள்ள ஐந்து பாகங்களான ஐந்து கலைகளைக் குறிக்கும் வகையில் ஐந்து விளக்குகள் இங்கு ஒன்றின் கீழ் ஒன்றாக அமைக் கப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றிலும் அதி தேவதை யும் அவர்களுடைய நான்கு வியூக மூர்த்திகளும் ஐந்து தீபங்களாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றனர். இந்தக் கருவறை ஆனந்தசபை என்றழைக்கப்படுகிறது.

புவன தீபங்கள்

ஐந்து கலைகளால் பிரகாசிக்கும் இந்த மாயா கோளத்தில் எண்ணில்லாத புவனங்கள் உள்ளன. இவை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு அதிபர் உள்ளனர். இவர்களைப் புவனாதிபர்கள் என்று அழைப்பர். மேலே குறித்த புவனங்களைச் சுற்றி அனேக உபபுவனங்கள் உள்ளன. இவற்றின் பெயர்களும் இவற்றை வழிநடத்தும் அதிபர்களின் பெயர்களும் சிவாகமங்களில் கூறப் பட்டுள்ளன. இந்த புவனங்களில் உயிர்கள் தங்கி இன்ப துன்பங்களை அனுபவிக்கின்றன.

மேலே குறித்த 224 புவனங்களைக் குறிக்கும் வகை யில் ஆவுடையார் கோயிலில் தேவசபையின் வாயிலில் 224 விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. இவற்றில் புவனாதிபர்கள் ஒளி தீபங்களாகப் பிரகாசிக்கின்றனர்.

இனி அத்துவாக்களில் ஒலி வடிவாக இருக்கும். வர்ணம், பதம், மந்திரம், ஆகியவற்றைக் காணலாம்.

வர்ணதீபம்

வர்ணம் என்பது தலைப்பு எழுத்துக்கள், ஆதி மொழி யில் இவை அ முதல் க்ஷ வரையிலான 51 எழுத்துக்கள் ஆகும். இவை ஐந்து கலைகளில் பரவி நிற்கின்றன. இவை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு தேவதை உள்ள னர். இவர்கள் சிவம், சக்தி, பதினாறு வடிவமான கணேசர் சப்தமாதர் முதலியோராவர். இந்த வர்ணங் களைக் குறிக்கும்வகையில் 51 விளக்குகளைக் கொண்ட வர்ண தீபம் கருவறைக்கு முன்னால் அமைந் துள்ள அர்த்த மண்டபத்தில் உள்ளது. இம்மண்டபத்தை ஸித் சபை என்று அழைக்கின்றனர்.

பத தீபங்கள்

வர்ணங்கள் (எழுத்துக்கள்) சேர்ந்து பதங்கள் உருவாகின்றன. பதங்களே தனித்துக் குறிப்பிட்டு பொருட்களை அறியவும் கருத்துக்களைக் புரிந்து கொள்ளவும் துணை நிற்கின்றன. ஆகமங்களில் அடிப் படைப் பதங்களாக எண்பத்தியோரு பதங்கள் சொல்லப் பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே தேவதைகள் உள்ளனர். 81 தீபங்களைக் கொண்ட பத தீபமாலை கனக சபையில் எழுந்தருளியுள்ள குதிரைச் சுவாமியின் பின்புறம் அமைந்துள்ளது.

மந்திர தீபங்கள்

ஆகாயத்தில் பரவியுள்ள மந்திரங்கள் ஒலி வடிவாக உள்ளன. ரிஷிகள் இவற்றைத் தம் தவவலிமையால் உணர்ந்து வெளிப்படுத்தினர். இந்த மந்திரங்கள் பஞ்சப் பிரம்மங்களாகிய ஈசானம், தத்புருஷம், வாமதேவம் அகோரம், சத்யோஜாதம் ஆகிய ஐந்துடன் சிவ, அஸ்திர, கவச, சிகா, சிரோ, ஹ்ருதய என்ற ஆறும் கூடிய பதினொன்றாகும். இவை பதினொன்றையும் குறிக்கும் பதினோறு மந்திர தீபங்கள் நடன சபையில் உள்ளன.

இவ்வகையில் ஆகம சாரமான சைவ சித்தாந்த தத்து வத்தின் அடிப்படையான அத்துவாக்களைக் குறிக்கும் வகையில் திருவிளக்குளையும் அத்துவாக்களை அதிட்டித்து நடத்தும் தேவர்களை அதில் தீபங்களாகவும் அமைக்கப்பட்டுள்ளதை ஆவுடையார் கோயிலில் மட்டுமே காணமுடிகிறது.

கருவறைக்குள் நெய் தீபங்கள் மட்டுமே ஏற்றப்ப டுகின்றன. இந்தத் திருவிளக்குகளை புரூரவச் சக்கரவர்த்தி அமைத்தான் என்று புராணங்கள் கூறுகின்றன.

ஈசான்ய தீபம்

சிவாலயங்களில், கருவறையில் சிவலிங்கத்திற்குப் பின்புறம் சுவரில் ஒரு தீபம் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இதற்கு ஈசான்ய தீபம் என்பது பெயர். இது லிங்கத்திற்கு முன்புறம் ஏற்றப்பட்டுள்ள விளக்குகளால் லிங்கத்தின் பின்புறம் விழும் நிழலைத் தடுத்து அப்பகுதியில் ஒளியூட்டுகிறது. இறைவனின் மேல் நோக்கிய முகமான ஈசான்யத்தை உணர்த்துவதாக உள்ளது. காலப்போக்கில் இத்துடன் இரும்பு சட்டங்களில் சிவலிங்கம், சூரியன், சந்திரன் முதலிய வடிவங்களில் அகல்களைப் பொறுத்தி ஏற்றத் தொடங்கினர். அந்நிலை வளர்ந்து பலவரிசைகளில் பிரபாமண்டலம் போல் விளக்குகளை அமைக்கும் வழக்கம் வந்துவிட்டது. திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமி ஆலயத்தில் நிறைய விளக்குகளைக் கொண்ட பிரபாமண்டலம் சுவாமிக்குப் பின்புறத்தில் உள்ளது. திருக்கடையூரில் அபிராமி சந்நிதி, ஆவுடையார் கோயில் ஆத்மநாதர் சந்நிதி ஆகியவற்றிலுள்ள இத்தகைய தீபங்கள் தனிச்சிறப்பு கொண்டதாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருமுறைகளில் விளக்குகள்

தமிழ்வேதமாகிய திருமுறைகளில் விளக்குகள் தனிச் சிறப்புடன் போற்றப்படுகின்றன. அவை கண்ணால் காணும் வகையில் உள்ள ஒளிபரப்பும் விளக்கு, நாம் உணர்ந்து போற்றும் மன மணிவிளக்கு என்ற இரண்டு நிலைகளில் விளக்கப்படுவதைக் காண்கிறோம்.

திருஞானசம்பந்தர் பெருமானை ஒளிவிளக்காக பல இடங்களில் போற்றுவதுடன் அடியவர்கள் விளக்கேற்றி வழிபடுவதையும் குறிக்கின்றார். மயிலையில் அருளிச் செய்த பதிகத்தில் தளத்தேந்தி இளமுலைத் தையலர்கள் கொண்டாடும் விளக்கீடு என்று கார்த்திகை தீப விழாவைச் சிறப்பித்துள்ளதைக் காண்கிறோம்.

அப்பர் அடிகள், உலகெங்குமுள்ள ஒளி விளக்கு களாகப் பெருமான் இருப்பதை "தேசவிளக்கெல்லாம் ஆனாய்" என்று போற்றுகின்றார். மேலும், எண்டிசைக்கும் விளக்கு, ஞானச்சுடர் விளக்கு, துளக்கமில்லா விளக்கு, விண்ணுளோர் தொழுதேத்தும் விளக்கு என்று பலவாறு சிவனைக் குறித்து மகிழ்கிறார்.

அடிகளார், இறைவன் உயிரில் கலந்து உணர்வில் நிறைந்து ஒளிவெள்ளம் பரப்பும் விளக்காக இருப்பதை பல இடங்களில் குறிக்கின்றனர். உடல் என்னும் அகலில் அன்பு என்னும் நெய்வார்த்து உணர்வெனும் திரியிட்டு ஏற்றப்பட்ட விளக்காகப் பெருமானைப் போற்றுகிறார்.

ஆலயங்களில் விளக்கேற்றுவதால் வரும் புண்ணியத்தைப் பல பாடல்களில் குறிக்கின்றனர். விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ஞ்நெறி ஞானமாகும் என்று அருளிச் செய்வதன் மூலம் விளக்கீடு செய்பவர்களின் பெருமையையும், அவர்கள் பெயரைச் சொல்வதால் ஞானம் உண்டாகும் என்பதையும் குறித்துள்ளார்.

விளக்கிடும் புண்ணியப் பணியைச் செய்பவர்களுக்குச் சிவபெருமான் சர்க்கரைக் கட்டி போல் இருக்கின்றான் என்பதைத் திருக்கடவூர் பதிகத்தில், "விரும்பி நல் விளக்கு தூபம் விதியினால் இடவல்லார்க்குக் கரும்பினில் கட்டிபோல்வார் கடவூர் வீரட்டனாரே" என்று கூறியுள்ளார்.

திருவாரூரில் நீரால் விளக்கெரித்த நமிநந்தி நாயனாரைப் போற்றி அவரைத் "தொடர்க்காணி" என்று சிறப்பித்துள்ளார்.

மாணிக்கவாசகர், சோதியே, சுடரே, சூழ்விளக்கே என்று பெருமானை விளக்காகவும், அதில் சுடராகவும், சுடர் பரப்பும் பெரிய (சோதி) ஒளி வெள்ளமாகவும் போற்று கின்றார்.

ஒன்பதாம் திருமுறையின், முதற்பாடலே "ஒளிவளர் விளக்கே" என்று தொடங்குகிறது. இந்த பதிகத்தை அருளியவர் திருமாளிகைத்தேவர் எனும் சித்தராவார். திருவிசைப்பாவில் சேந்தனார் திருவீழிமிழலைப் பெருமானை மதிப்பவர் மன மணிவிளக்கு என்று போற்றுகின்றார். காற்றால் அலைப்புண்டு அணையாமல் இருக்க கூட்டுக்குள் ஏற்றி வைக்கப்படும் விளக்கே மணிவிளக்காகும். எண்ணக் காற்றுகளில் அலைப்புண்டு கிடக்கும் மனத்திடையே பாதுகாப்பான கூட்டில் வைக்கப்பட்டுள்ள விளக்காக அவன் ஒளி உமிழ்ந்து கொண்டிருப்பதை இது உணர்த்துகிறது.

பத்தாம் திருமுறையில் திருமூலர் பெருமானின் பூசைக்குரிய அங்கங்களைக் கூறும்போது மந்திரம், நன்மலர், தூபம், கவற்றியகந்தம், கவர்ந்தெரி தீபம் என்று வரிசைப்படுத்துகின்றார். அதில் விளக்கு (தீபம்) இடம் பெற்றுள்ளது.

சிவபூசை என்னும் தலைப்பில் உள்ளத்தைப் பெருங்கோயிலாகவும் ஊனுடம்பை ஆலயமாகவும். வாயைக் கோபுர வாயிலாகவும். தெள்ளந்தெளிந் தவர்களின் ஜீவன் சிவலிங்கமாவும் இருப்பதைக் கூறுகின்றார். அந்த ஆலயத்தின் கருவறையில் ஐம்புலன்களும் ஒளிவிளக்காக இருப்பதைக் "கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே" என்று குறிக்கின்றார்.

அருள் ஒளி எனும் தலைப்பில் விளக்கினைப் பல்வேறு நிலைகளில் போற்றுகின்றார். அறிவுதயம் என்னும் தலைப்பில்

> மாயவிளக்கது நின்று மறைந்திடும்
> தூயவிளக்கது நின்று சுடர்விடும்
> காயவிளக்கது நின்று கனன்றிடும்
> சேய விளக்கினைத் தேடுகின்றனே.

என்று பல்வேறு விதமான நிலைகளில் காணும் விளக்குகளைக் குறிக்கின்றார். திருமந்திரத்தில் வெவ்வேறு இடங்களில் விளக்கைப் பற்றிய பல்வேறு விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

பன்னிரெண்டாம் திருமுறையில் சேக்கிழார் ஆலயங்களில் விளக்கீடு செய்து பேறுபெற்ற கணம்புல்வர், நமிநந்தியார், கலியர் ஆகிய மூன்று நாயன்மார்களின் வரலாற்றை விவரித்துள்ளார். அவற்றில் விளக்கிடுதலில் கிடைக்கும் பயனும் பெருமையும் கூறப்பட்டுள்ளன.

சிவபெருமானைப்போலவே போலவே அவனுடைய திருமந்திரமாகிய "ஐந்தெழுத்தும்" நல்விளக்காக இருக்கிறது. அப்பர் சுவாமிகள் "சொல்லகவிளக்கது சோதியுள்ளது நல்லக விளக்கது நமச்சிவாயவே" என்றும், திருஞான சம்பந்தப் பெருமான், ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர் ஞான விளக்கினை ஏத்துவார்த்து இடர் கெடுப்பது அஞ்செழுத்துமே என்றும் கூறுகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தீபாராதனையின் தத்துவங்கள்

சிவாலயங்களை யோகவித்தையின் ரகசியங்களை விளக்கும் மையங்களாகவும்; மானுடயாக்கையின் தத்து வங்களை விளக்கும் தத்துவக் கூடங்களாகவும் அமைந் திருப்பதைப் போலவே இறைவனுக்கு முன்பாக செய்யப் படும் தீபாராதனையை உலகம் பரவெளியிலிருந்து உற்பத் தியாகி இறுதியில் அதனுள்ளேயே ஒடுங்குவதைக் குறிக்கும் தத்துவ விளக்கமாக அமைத்துள்ளனர்.

உலகம் எல்லையற்ற அகண்ட வெட்ட வெளியி லிருந்து படிப்படியாக உற்பத்தியாகி, முழுமை பெற்று சிறப்புடன் வாழ்ந்த பின் ஒரு காலத்தில் யாவும் எங்கி ருந்து உண்டானதோ அந்த வெளியிலேயே கலந்து ஒடுங்கி விடுகிறதென்று தத்துவ நூல்கள் கூறுகின்றன. லிங்கம் என்ற சொல்லுக்குத் தோன்றி நிலைபெற்று ஒடுங்குவது என்பது பொருள். இவ்வாறு தோன்றி ஒடுங்கும் நிலையை விளக்குவதாக ஆலயங்களில் நடத்தப்படும் தீபாராதனை அமைகிறது.

தீபாராதனையின் போது இறைவனுக்கு முன்புறம் பெரிய திரை தொங்கவிடப்பட்டுள்ளது. அது உட்புறம் சிவப்பாகவும் வெளிப்புறம் நீலநிறத்துடனும் இருக்குமாறு அமைந்தி ருக்கிறது. நீலநிறம் அகண்ட வெளியைக் குறிப் பதாகும். இதன் பின்புறத்திலிருந்து முதலில் மணி ஒலிக்கப்படு கிறது. இது நாதத்தத்துவம் ஆகும். அகண்ட வெளியிலி ருந்து பெரிய ஒலியுடன் உலகப் படைப்புக்கான ஆரம்பம் நிகழ்வதைக் குறிக்கிறது. புலன்களுக்கு எட்டாத ஒலியிருந்துதே மந்திரங்களும் மொழிகளும் உண்டாயின என்று புராணங்கள் கூறுகின்றன.

★ பஞ்ச தட்டு, குடதீபம்

ஒலியை, அடுத்துப் புகை மண்டலமான தூபம் காட்டப்படப்படுகிறது. இது உலக உற்பத்திக்கான அணுத் துகள்கள் உற்பத்தியாவதைக் குறிக்கின்றன. இதை யடுத்து ஒற்றைத்தீபம் காட்டப்படுகிறது. இது உலகைப் படைக்க ஜோதி வடிவம் கொண்ட இறைவனின் இச்சை வெளிப்படுவதைக் குறிக்கின்றது.

திரை விலகியதுடன் அடுக்கு தீபம் காட்டப்படுகிறது. இது உச்சியில் ஒற்றை தீபத்தையும் அதன் கீழ் சிறிய வட்டத்தில் ஐந்து தீபம், அதன் கீழ் வட்டத்தில் ஏழு தீபம் என்று படிப்படியாக அறுபத்து நான்கு தீபங்கள் வரை கொண்டதாகும். இது அனேக உயிர்கள் உலகில் பல்வேறுநிலைகளில் தோன்றியதைக் குறிக்கிறது.

இதையடுத்துக் காட்டப்படுவது பஞ்சதட்டு, குடம் ஆகும். இதில் ஐந்து தட்டில் வைக்கப்பட்ட தீபங்களும். குடத்தின் மீது ஏற்றப்பட்ட தீபமும், காண்பிக் கப்படுகின்றன. ஐந்து தட்டுகள் சிவனின் பஞ்சபிரம் மங்களைக் குறிக்கின்றன. இவை உயிர்களிடத்தில் ஐம் புலன்கள். அதனால் அனுபவிக்கப்படும் போகங்கள், உண்டானதைக் குறிக்கின்றன. உயிர்கள் போகங்களை அனுபவிக்கும் இடமான பூமண்டலத்தைக் குடதீபம் குறிக்கிறது. பூ மண்டலத்திற்கு வந்த உயிர்கள் பல்வேறு உடல்களைப் பெற்று அத்தன்மைக்கேற்ப இயங்குவதைக் குறிக்கும் வகையில் தொடர்ந்து மத்ஸ தீபம், கூர்ம தீபம், நாகதீபம், ரிஷப தீபம், அம்சதீபம், மயூரதீபம், புருஷாதீபம், கஜதீபம், அஸ்வதீபம், ரிஷி தீபம் என்று பல்வேறு உருவங்களுடன் கூடிய தீபங்கள் சுழற்றிக் காட்டப்படுகின்றன.

இதைத் தொடர்ந்து ஒன்று முதல் பத்து எண் ணிக்கை வரையுள்ள பத்து தீபங்கள் வரிசையாகக் காட்டப்படுகின்றன. இவை உலக உயிர்கள் பெற்றுள்ள பல்வேறு அறிவு நிலைகளைக் குறிக்கிறது என்பர். இதில் ஆறுவரை உள்ள தீபங்கள் ஓர் அறிவு முதல் ஆறறிவுகொண்ட மனிதன் வரையுள்ள உயிர்களின் நிலையைக் குறிப்பதாகும். ஏழாவது ஞானத்தை அறி தலையும் எட்டாவது அதில் திளைத்தலையும் ஒன்பதா வது அதிலிருந்து விடுதலை அடைதலையும், பத்தாவது இறைவனோடு இரண்டறக் கலந்து விடுதலையும் குறிக்கின்றன என்பர்.

இதையடுத்து, கண்ணாடி, ஆலவட்டம், சூரியன், சந்திரன், குடை, வெண்கவரி, ஸ்ரீவத்சம், விசிரி ஆகிய வற்றைக்காட்டி உபசாரம் செய்யப்படுகிறது. இவை உயிர்கள் சகல போகங்களையும் பெற்றுச் சுகமுடன் வாழ்வதைக் குறிக்கின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதையடுத்து மந்திரபுஷ்பம் ஓதுதல், பல்வேறு தேசங்களில் இருந்து வந்த பொருட்களைச் சமர்ப்பித்தல், முதலியன நடைபெறும். இது உயிர்கள் நாடு, மொழி, இனம் என்று பலவாறாக விரிந்து மேன்மையுடன் புகழ் பெற்று விளங்குவதைக் குறிக்கும் என்பர்.

இறுதியில் கற்பூரக்கிளை எனப்படும் ஏழு அல்லது ஒன்பது கிளைகளைக் கொண்ட அமைப்பில் கற்பூரம் ஏற்றிக் காண்பிக்கப்படும். கற்பூரம் காட்டப்பட்டதும் அதன் மீது விபூதியிடுவது போல் மடலிருந்து மூன்று முறை விபூதியை எடுத்துக் காட்டுவர். இதற்கு ரட்சை சாத்துதல் என்பது பெயர்.

இது உலக உயிர்கள் இறைவனின் அருட்கவசத்தைப் பெறுவதைக் குறிக்கிறது. இதையடுத்து பக்தர்களிடம் அந்த தீபம் வரிசையாகக் காட்டப்படுகிறது. பக்தர்கள் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொள்வர். கற்பூரதீபம் கரைந்து விடுவது உலகம் மீண்டும் அகண்ட வெளியில் உருவமற்றுக் கரைந்து விடுவதை உணர்த்துகிறது.

தீபாராதனை என்பது இறைவடிவின் முன்பாக தீபங்களை சுழற்றிக் காட்டும் வெற்றுச் சடங்கு என எண்ணாமல் உலகின் தோற்ற ஒடுக்கத்தைக் குறிக்கும் தத்துவக் குறியீடாக எண்ணவேண்டும். தீபாராதனையைக் காண்பதால் இல்லறத்தானுக்கு சுகபோகங்களும், ஞானிகளுக்கு ஆத்ம ஞானமும் பெருகும்.

★ கற்பூரக் கிளை ஆராத்தி

தீபாராதனை மண்டபத்தில் கூடியிருக்கும் பக்தர்கள் யாவரும் ஆன்மஞானத்தை விரும்பும் உயிர்கள், அவர்களுக்கு இறைவனைக் காட்டி அவனுடைய படைப்பாற்றலையும் உயிர்களின் நிலையையும் விளக்கும் குருவாக இருப்பவர் சிவாசாரியார். இதை உணர்பவர்களுக்கு இறைநாட்டம் உண்டாகும். ஞானம் பிறந்து மனம் அமைதியில் திளைத்து அளவில்லா ஆனந்தம் உண்டாகும் என்று பூஜாபத்தி நூல்கள் கூறுகின்றன.

❖ பரிசாரகர் எனப்படும் உதவியாளர் எடுத்துத் தரும் தீபத்தினைப் பெறுவதற்கு முன்பாக அருச்சகர் அந்த தீபத்திற்கு நிரீக்ஷணம் முதலான சமஸ்காரங்களைச் செய்து, பூவினால் அர்ச்சிக்க வேண்டும். பின்னரே அதை வாங்கி ஆராதிக்க வேண்டும். சுவாமிக்கு நேராக உயர்த்தி முதலில் இடது கண்ணுக்கு நேராகவும் பிறகு வலது கண்ணுக்கு நேராகவும், பின்னர் நெற்றிக்கு நேராகவும், காட்ட வேண்டும். பின்னர் கால் முதல் தலை வரை மூன்று முறை சுழற்றிக் காட்ட வேண்டும். தலை, நெற்றி, கழுத்து, மார்பு, கொப்பூழ் பாதம், ஆகியவற்றுக்கு நேராகத் தனித்தனியே பிரணவாகாரமாக சுழற்றிக் காட்ட வேண்டுமென்றும் பத்ததி நூல்கள் கூறுகின்றன.

❖ தீபங்களை மூன்று முறை சுழற்றிக் காட்ட வேண்டும். முதலில் காட்டுவது உலக நன்மைக்காவும், இரண்டாவதாகக் காட்டுவது கிராம நன்மைக்காகவும், மூன்றாவதாகக் காட்டுவது உயிர்கள் நன்மைக்காகவும் என்று ஆகம நூல்கள் கூறுகின்றன.

தாண்டவ தீபாராதனை

திருவாதிரை ஆனித் திருமஞ்சனம் முதலிய சிறப்பு நாட்களில் நடராசருக்குச் செய்யப்படும் தீபராதனையின் போது ரதாரத்தி எனப்படும் அடுக்கு தீபத்தை ஏற்றித் தாளலயத்துடன் சுழற்றிச் செய்யப்படும் தீபாராதனை தாண்டவ தீபராதனை எனப்படுகிறது. இது தென் மாவட்டங்களில் மட்டுமே உள்ளது. செப்பறை அழகிய கூத்தர் கோயில் குற்றாலம் குற்றாலநாதர் ஆலயம் ஆகியவற்றில் திருவாதிரை முதலிய சிறப்பு நாட்களில் இந்தத் தாண்டவ தீபாராதனை சிறப்புடன் நடைபெறுகிறது. இதற்குரிய தாளம் சாப்புதாளம், ராகம் ஆனந்தபைரவி ஆகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சோடஸ தீப உபசாரம் (16 வகை தீப வழிபாடு)

காரண ஆகமத்தில் பூஜையின் அங்கங்களாக 1. ஆவாஹனம், 2. ஸ்தாபனம், 3. பாத்யம், 4. ஆசமனம், 5. அர்க்யம், 6. அபிஷேகம், 7. வஸ்திரம், கந்தம் சாத்துதல், 8. புஷ்பஞ்சாத்துதல், 9. தூபதீபம் சமர்பித்தல், 10. நைவேத்தியம், 11. பலி, 12. ஹோமம், 13. நித்தியோத்ஸம், 14. வாத்யம், 15. நர்த்தனம், 16. உத்வாஸனம் ஆகியவை குறிக்கப்பட்டுள்ளன. இவற்றைச் சோடஸ உபசாரம் என்பர். இவ்வரிசையில் ஒன்பதாவதான தூபதீபம் சமர்பித்தல் என்பதில் மட்டும் 16 வகையான தீபங்கள் காட்டப்படுகின்றன.

கடல் ஆறு, குளம், விருட்சம் ஆகியவற்றிற்கு உரிய தேவர்கள் இருப்பதைப் போலவே இவை ஒவ்வொருன்றிற்கும் தனித்தனியான தேவர்கள் உள்ளனர். இவற்றை இறைவன் முன்பு காட்டும் போது அவர்கள் அங்கு தோன்றி இறைவனை வழிபடுவதுடன் நமக்கும் அருள் புரிகின்றனர். ஆதலின் தீபங்களைக் காட்டும் போது அதற்குரிய தேவர்களின் பெயரை ஓதி நமஸ்காரம் சொல்லப்படுவதுடன் அவர்களுக்குரிய மந்திரமும் ஓதப்படுகின்றன. அவற்றைக் கீழே காணலாம்.

வ.எண்	தீபத்தின் பெயர்	உருவம்	தீபத்திற்குரிய	தேவதை
1.	புஷ்ப தீபம்	அடுக்குதீபம்	ஸப்ரதஸபாம்பிமேகோபாய	ப்ரம்மன்
2.	புருஷா மிருகம்	புருஷாமிருகம்	புருஷாமிருகச் சந்திரமஸ	சரஸ்வதி
3.	நாக தீபம்	ஐந்து தலை நாகம்	நமோஸ்து ஸர்பேய்ய:	நாகராஜர்
4.	கஜ தீபம்	யானை	கணாநாம்த்வா	விநாயகர்
5.	வியாக்ர தீபம்	புலி	ஸிம்ஹேவ்யாக்ர	பராசக்தி
6.	ஹம்ச தீபம்	அன்னம்	ஹம்ஸச்சுசிஷத்	பிரம்மா
7.	வாஜ்ய தீபம்	குதிரை	ஆக்ரம்யவாஜிநட்ரதிவீ	சூரியன்
8.	ஸிம்ஹ தீபம்	சிங்கம்	யாதேவீ சுபகா சுபத்நீ	துர்க்கை
9.	சூல தீபம்	சூலம்	அபிஸமேதியத் ப்ரதிவ்யாகும்	மூம்மூர்த்திகள்
10.	துவஜ தீபம்	கொடி	கேதும் கிருண்வந்நகேதவே	வாயு
11.	வ்ருஷப தீபம்	ரிஷபம்	யஸ்ஸுசிருங்கல்ஸுவிருஷப:	ரிஷபர்
12.	பிரமா தீபம்	வண்டு	தேவீம் வாசமஜனயந்ததேவா:	துர்க்கா தேவி
13.	குக்குட தீபம்	கோழி	நிருகிருஷ்வைரஸமாயுதை	ஸ்கந்தர்
14.	கூர்ம தீபம்	ஆமை	இதம் விஷ்ணுர் விசக்ரமே	மகாவிஷ்ணு
15.	ஸ்ருக் தீபம்	சிருக்	ஆக்ன ஆயாஹிவீதயே	அக்னி
16.	சக்தி தீபம்	சக்தி	கௌரீமிமாய	பராசக்தி

சில தலங்களில் மயூரதீபம், மேருதீபம், கயிலாயதீபம், முதலியவை உள்ளன. இவற்றில் முறையே மயில், மேருமலை, கயிலாய மலை ஆகியவற்றின் உருவங்கள் இடம் பெற்றுள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சோடஸ தீபங்களில் சில...



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருவிளக்குகளில் அமைந்துள்ள தெய்வ உருவங்கள்

விளக்குகள் தெய்வங்களின் இருப்பிடமாகக் கொள்ளப்படுவதால், அதன் தெய்வீக நிலையை உணர்த்தும் வகையில் அதில் தேவர்கள் விலங்குகள் பறவைகள் முதலான உருவங்கள் அமைக்கப்பட்டு வருகிறது.



★ அம்பிகை ஆலய பதிவிளக்கு

விளக்குகள் அறிவின் குறியீடாக இருப்பதால் அறிவின் சின்னமாக அன்னத்தின் உருவம் அமைந்த விளக்குகளே அதிக அளவில் உள்ளன.

காலப்போக்கில் எந்த தெய்வத்தின் முன்பாக விளக்குகள் ஏற்றப்படுகிறதோ அதற்கேற்ப அதில் உருவங்கள் அமைக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக முருகன் முன்பாக ஏற்றப்படும் விளக்குகளில் மயில் வடிவமும் அம்பிகை சந்நிதி விளக்குகளில் கிளி வடிவமும் அமைக்கப்பட்டன.

இந்நிலை வளர்ந்து விளக்குகளின் உச்சியில் அமையும் பிரபா மண்டலத்தின் நடுவில் தாமரை மலர்மீது அமர்ந்திருக்கும் மகாலட்சுமி, விநாயகர், வீணைமீட்டும் கந்தர்வக் கன்னி, புருஷா மிருகம், முதலிய உருவங்களில் ஏதேனும் ஒன்றும் அமைக்கப்பட்டது.

சிறுதெய்வ ஆலயங்களில் கருவறையில் பதி விளக்கு எனப்படும் விளக்குகள் உள்ளன. இதில் அகண்டத்தின் விளிம்பில் அந்த ஆலயத்திற்குரிய தெய்வத்தின் உருவமும் சுற்றிலும் சூரியன், சந்திரன், நாகம், சிங்கம் முதலிய உருவங்களும் அமைக்கப்பட்டன. சென்னை திருவேற்காடு, கருமாரியம்மன் ஆலயம் செங்கல்பட்டு பச்சையம்மன் ஆலயம் முதலியற்றிலுள்ள இத்தகைய பதி விளக்குகள் மிகுந்த கலைச் சிறப்பு கொண்டவையாகும். இந்த விளக்குகளுக்கும் பூஜை செய்கின்றனர்.

ஆலயங்களில் இறைவன் முன்பு தொங்க விடப்பட்டுள்ள தூண்டா விளக்குகளின் உச்சியில் அன்னம், மயில் கருடன், சங்கு சக்கரம் முதலியவற்றில் ஏதாவது ஒரு உருவம் அமைக்கப் பட்டுள்ளன.

காலப்போக்கில் விலங்கு, பறவை உருவங்களுக்குப் பதிலாக ஓம், சிவசிவ முதலாக எழுத்துக்களை பொறிக்கும் வழக்கமும் உண்டானது.

கேரளாவிலுள்ள அனேக ஆலயங்களில் கோயிலின் முன்புறம் நிலை விளக்குகள் உள்ளன. இவற்றின் அடியில் ஆமை தாங்குவது போலவும் உச்சியில் கருடன், குதிரை, இடபம் என தெய்வங் களுக்கேற்ற உருவங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

தீபங்களும் நெய்யும்

தீபங்கள் பிரகாசிப்பதற்கு எரிபொருள் அடிப்படையாகும். ஆலயங்களில் அதிக அளவில் பசு நெய்யைக் கொண்டே விளக்கெரிக்கப்பட்டது. எருமை, நெய், ஆட்டு நெய், ஆகியவை எப்போதாவது பயன்படுத்தப்பட்டன விளக்கெரிக்க நிபந்தங்களை ஏற்படுத்தியவர்கள் பசுக்கள், எருமைகள், ஆடுகள், ஆகியவற்றைக் கொடுத்தனர். எருமைகள் ஆடுகளை ஏற்றுக் கொண்டவர்களும் பசு நெய்யையே கொடுக்கச் சம்மதித்திருக்கிறார்கள் என்பதைக் கல்வெட்டுக்களால் அறிகிறோம்.

வித்து (விதை) களிலிருந்து எடுக்கப்படும் எண்ணையால் விளக்கேற்றுவதை ஆகமங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. காலப்போக்கில் ஏற்பட்ட மாற்றத்தால் இலுப்பைக் கொட்டையிலிருந்து எடுக்கப்படும் எண்ணெயைக் கொண்டு தீபமேற்றும் வழக்கம் வந்தது. இலுப்பை நெய் உயர்ந்ததாகவும் போற்றப்பட்டது. பின்னாளில் எள்ளிலிருந்து கிடைக்கும் நெய் (நல்லெண்ணை) ஏற்றுக் கொள்ளப்பட்டது. இப்போது அதிக அளவில் நல்லெண்ணையைக் கொண்டே தீபங்கள் ஏற்றப்படுகின்றன. மணிலா (வேர்கடலை) எண்ணை, சூரியகாந்தி, எண்ணை முதலியவை முற்றிலும் விலக்கத்தக்கவைகள், முன்னாளில் நெய்யுடன் வாசனைப் பொருட்களைக் கலந்து காய்ச்சி தீபமேற்றினர். இதனால் பிரகாசமான ஒளியுடன் நறுமணமும் பரவியது.

❖ சனீசுவரனுக்கும் பைரவநாதருக்கும் நல்லெண்ணைய் தீபங்கள் ஏற்றப்படுகின்றன. இவற்றில் திரிக்குப் பதிலாக கருப்புத் துணியில் எள்ளைக் கட்டியும், சிவப்புத் துணியில் மிளகை வைத்துக் கட்டியும் தீபம் ஏற்றுகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தீப ஸ்தம்பம்

ஆலயங்களின் முன்பாகப் பெரிய கல்தூணை நட்டு அதன் உச்சியில் தீபத்தை ஏற்றிவைக்கும் வழக்கம் நெடுங்காலமாக இருந்துவருகிறது இதற்காக நடப்படும் தூண்கள் தென்னக மெங்கும் பரவலாக உள்ளன. இவற்றைத் தீபஸ்தம்பம் என்று அழைக்கின்றனர். கொங்கு நாட்டிலுள்ள அனைத்து ஆலயங் களின் முன்புறம் கருங்கல்லால் கலையழகுடன் செய்யப்பட்ட தீபஸ்தம்பங்கள் சிறப்புடன் திகழ்கின்றன.

அழகிய மேடைமீது நிலைப்படுத்தப்பட்டிருக்கும். இத் தூணின் அடிப்பாகம் நான்கு பட்டைகளாக உள்ளது. இதில் விநாயகர் உருவமும் தலவரலாற்றுக் காட்சிகளும் செதுக்கப்பட்டிருக்கும். மேற்பாகம் 8,16,32,64 பட்டைகளைக் கொண்டுள்ளது. உச்சியில் தாமரை மலர் போன்ற சும்மாட்டுக் கல் உள்ளது. அதன் மீது அகண்ட தீபம்வைக்கப் போதுமான பள்ளத்துடன் கூடிய சதுரமான கல் வைக்கப்பட்டுள்ளது.

சில தலங்களில் இதில் ஏறி விளக்கு வைக்க வசதியாகப் பாத மலர்களும் அமைந்துள்ளன. பெரும்பாலான இடங்களில் பக்கவாட்டில் இரும்பால் ஏணியை அமைத்துள்ளனர். கார்த் திகை தீபத் திருவிழாவின் போது இந்தத் தூணை நன்கு அலங்கரித்து உச்சியில் தீபமேற்றி வழிபடுகின்றனர்.



★ தீப ஸ்தம்பம் – ராஜகோபுரம், அவிநாசி

வைணவ ஆலயங்களில் தீபஸ்தம்பங்களைக் கருடகம்பம் என்று அழைக்கின்றனர். ஆலயங்களின் முன்புறம் மட்டுமின்றி மலை முகடுகளிலும் தீபஸ்தம்பங்களை நாட்டிக் கார்த்திகைத் தீப நாளில் விளக்கேற்றுகின்றனர்.

கொங்குநாட்டுத் தீபங்தம்பங்களில் உச்சியில் மட்டுமே விளக்கேற்றப்படுகிறது. கர்னாடக, கேரள மாநிலங்களில் அமைந்துள்ள தீபஸ்தம்பங்களில் தூண்களின் தண்டுப்பகுதியினைச் சுற்றி அடுக்கடுக்காக அகல்கள் பொருத்தப்பட்டு விளக்கேற்றப்படுகிறது. கேரளாவில் அதிக அளவில் கல்லாலும், பித்தளையாலும் தீபஸ்தம்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றை நிலைவிளக்குள் என்று அழைக்கின்றனர். கர்னாடகம், மராட்டிய மாநிலங்களில் செங்கல், சுண்ணாம்பு கொண்டு கட்டிய தீபஸ்தம்பங்கள் அதிக அளவில் உள்ளன. இவற்றில் ஏராளமான தீபங்கள் ஏற்றப்படுகின்றன.

திருசெங்கோட்டு தீப ஸ்தம்பம்

திருசெங்கோட்டில் மலைமீது அர்த்தநாரீசுவரர் எழுந்தருளியுள்ளார். ஊரின் நடுவில் நிலத்தம்பிரானார் கோயில் எனப்படும் கயிலாசநாதர் ஆலயம் உள்ளது. இக்கோயிலின் முன்புறம் அமைந்துள்ள தீபஸ்தம்பம் வரலாற்றுச் சிறப்புமிக்கதாகும். இந்த நெடியதூண் கலைச்சிறப்புடன் செதுக்கப்பட்டு பணி நிறைவு பெற்றுவிட்டது. ஆனால் அதைத் தூக்கி நிறுத்த முடியவில்லை. ஒரு முதியவர் கனவில் சிவபெருமான் தோன்றி கற்புடைய பெண் ஒருத்தி தொட்டுத் தூக்கினால் தூணை எளிதாக நிலைநிறுத்தி விடலாமென்று கூறி மறைந்தார்.

பெண்கள் யாரும் தன்னைச் சோதித்துக் கொள்ள விரும்பவில்லை. நாட்கள் கழிந்தன. ஒரு நாள் ஒரு சேரிப் பெண் அந்தத் தூணைத் தொட்டுத் தூக்கி நிறுத்த முன்வந்தாள். எல்லோரும் சம்மதித்தனர். அதன்படி நல்லவேளையில் அவள் கை கொடுக்கத் தூண் நிறுத்தப்பட்டது. இவள் வடிவத்தை இத்தூணுக்கு அருகிலுள்ள மண்டபத்தின் தூணில் அமைத்துள்ளனர் (என்று கூறுகின்றனர்). இந்தப் புடைப்புச் சிற்பத்தில் அவள் பெருங்கொண்டையிட்டு அதில் பிறைகள், நெற்றிச் சுட்டி, முதலியவற்றை அணிந்துள்ளாள். கையில் காப்புகளும் காலில் கொலுசுகளும் அணிந்திருக்கிறாள். இந்த உருவத்திற்கு மேல் இலச்சியப்பன் மகள் அம்மைப் பெண் என்று இவளுடைய பெயரும் பொறிக்கப்பட்டுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கார்த்திகை தீபத்திருநாள்

நமது சமய வாழ்வில் அனைவராலும் ஒரு சேரக் கொண்டாடப்படும் நிகழ்ச்சிகள் பண்டிகைகள், திருவிழாக்கள் என்று இருவகைப்படும். திருவிழாக்கள் கோயிலில் கொண்டாடப்படுவை. பண்டிகைகள் இல்லத்தில் நடைபெறுபவை. போகி, பொங்கல், தீபாவளி முதலியன இல்லங்களில் கொண்டாடப்படும் பண்டிகைகளாகும். சிவராத்திரி, பிரதோஷம், பிரம்மோற்சவங்கள் முதலியவை விழாக்களாகும். ஒரே சமயத்தில் கோயிலிலும், இல்லத்திலும் கொண்டாடப்படும் வகையில் விழாவாகவும் பண்டிகையாகவும் இருப்பது கார்த்திகை தீபம் மட்டுமேயாகும். அதன் தொன்மைச் சிறப்பை இக்கட்டுரை விளக்குகிறது.

தமிழர்களின் தொன்மையான பெருவிழா கார்த்திகை தீபம் ஆகும். இது தீபங்களுக்காகவே தோன்றியதாகும். கல்யாணமும் கார்த்திகையும் என்ற பழமொழி இவ் விழாவைச் சிறப்பிக்கிறது. இது இல்லங்கள்தோறும் தனிச் சிறப்புடன் கொண்டாடப்படுகிறது.

இந்நாளில் வீடுகளின் முகப்பு, திண்ணைகள், முற்றங்கள் ஆகியவற்றில் வரிசையாகவும் அடுக்குகளாகவும் தீபங்களை ஏற்றி வைப்பர். கிணற்றிலுள்ள மாடங்கள் மாடியிலுள்ள கைபிடிச்சுவர்கள் முதலிய வற்றிலும் வரிசையாக தீபங்களை ஏற்றுகின்றனர்.

கார்த்திகை கிருத்திகையன்று தீபங்கள் ஏற்றி வழிபடுவதை அண்ணாமலையார் தீபம் என்று அழைக்கின்றனர். அடுத்த நாள் விஷ்ணு தீபம் என்று திருமாலுக்கு உரியதாகக் கொண்டாடப்படுகிறது. மூன்றாம் நாளுக்கு நாட்டுக் கார்த்திகை என்பது பெயராகும். அந்நாளில் உறவினர்களுக்குப் பெரிய விருந்து வைக்கின்றனர். நான்காம் நாள் தோட்டக் கார்த்திகை என்று அழைக்கப்படுகிறது.

சிவாகமங்களில் உற்சவ விதிப் படலங்களில் கார்த்திகை தீப விழாவைப் பற்றிச் சிறப்புடன் கூறப்பட்டுள்ளது. இதன்படி சிவாலயங்களில் இது பெருந் திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது. அதிகாலை பரணி நட்சத்திரத்தில் ஐந்து தீபங்கள் ஏற்றப்பட்டு பஞ்சப் பிரம்ம தீபப்பூசை செய்யப்படும் இதனைப் பரணிதீபம் என அழைப்பர். இதனை ஆலயத்தைச் சுற்றி வலமாக எடுத்து வந்து கருவறையுள் வைத்து பூசிப்பர். சில பூஜா பத்ததி நூல்களில் நடுவில் ஒன்றும் சுற்றிலும் எட்டுமாக ஆக ஒன்பது தீபங்களை ஏற்றி அதில் நவசக்தியைப் பூசிக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

மாலையில் கருவறை, விமானம் கோபுரங்கள் ஆகியவற்றின் மீதும் கபோதம் மகாநாசிகை விருஷப ஸ்தலம் ஆகியவற்றிலும் வரிசையாக தீபங்கள் ஏற்றுகின்றனர். பிறகு பஞ்ச மூர்த்திகள் அலங்கரிக்கப்பட்டு ஆலய முற்றத்திற்குக் கொண்டு வரப்படுகின்றனர்.

அவர்களுக்கு முன்பாக பனை, தென்னை, பாக்கு, இவற்றின் ஓலைகளால் பெரிய தீபதண்டத்தை அமைத்து பூசை செய்து உச்சியில் காலையில் பூசித்து தீபத்தை அதன்மீது வைப்பர். பிறகு அந்த தீபதண்டத்தை கொளுத்துவர். கொழுந்து விட்டு எரியும் அந்த நெருப்பையே சிவபெருமானாக வழிபடுகின்றனர். இதில் நடுவிலுள்ள மரத்திற்குத் தண்டம் என்றும் அதில் கட்டப்படும் ஓலைகளுக்கு தீபகீலங்கள் என்றும் பெயர் வழங்குகிறது. நடைமுறையில் இதனைச் சொக்கப்பனை கொளுத்துதல் என்பர்.

இவ்விழாவின் போது மலைகளின் முகடுகளில் பெரிய தீபங்களை ஏற்றி வைப்பர். கார்த்திகை விரத மிருப்போர் நாள் முழுவதும் விரதம் கிடந்து அந்த மலை விளக்கின் சுடரைப் பார்த்த பின்னரே உண்ணுவது வழக்கம்.

கொங்கு மாவட்டத்தில் கார்த்திகை தீபத்திருவிழா சிறப்புடன் கொண்டாடப்படுகிறது. ஆலயத்தின் முன்னுள்ள தீபஸ்தம்பத்திற்கு அபிஷேகம் செய்து ஆடை, மாலை, தருப்பைகளால் அலங்கரிக்கின்றனர். மாலையில் மேளதாளத்தோடு அதன் உச்சியில் தீபமேற்றப்படுகிறது.

இந்நாளில் மலையைச் சார்ந்த கிராமங்களிலும் குக்கிராமங்களிலும் இவ்விழா சிறப்புடன் கொண்டாடப்படுகிறது. நகரங்களில் இவ்விழா தீபாவளியின் தாக்குதலால் சற்று பொலிவிழந்துள்ளது. நீலகிரி சேர்வராயன், கல்வராயன், கொடைக்கானல் முதலிய இடங்களில் வாழும் பழங்குடி மக்கள் கார்த்திகை தீபத்தை மிகவும் சிறப்புடன் கொண்டாடுகின்றனர்.

❖ கார்த்திகை தீபத்தன்று நெற்பொரியை வெல்லப் பாகில் கலந்து கூம்புபோல் செய்து அதன் உச்சியில் அகல் விளக்கேற்றி வழிபடுகின்றனர். இது மலை மேலிட்ட தீபத்தை வழிபடுவதைக் குறிக்கிறது.

❖ தீபத்திருவிழாவைப் போற்றி பல திரைப்படப் பாடல்கள் வெளிவந்துள்ளன. இவற்றில் கார்த்திகை தீபம் ஏற்றுக தீபம் போற்றுக தீபம், கார்த்திகை விளக்கு திருகார்த்திகை விளக்கு கந்தவேல கடம்பனுக்கு கார்த்திகை விளக்கு, மலைக்கோயில் வாசலில் கார்த்திகை தீபம் மின்னுதே, முத்து முத்து சுடரே (வீரா) என்பன இனிமை மிகுந்தனவாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருவண்ணாமலை கார்த்திகை தீபப் பெருவிழா

கார்த்திகை தீபம் சிவாகமங்களில் கூறப்பட்டுள்ள முதன்மையான விழா என்பதால் அனைத்து ஆலயங்களிலும் சிறப்புடன் கொண்டாடப்படுகிறது. குறிப்பாக இந்தவிழா திருவண்ணாமலையில் தனிச் சிறப்புடன் பெருந்திருவிழாவாகக் கொண்டாப்படுகிறது.

அண்ணாமலையார் ஆலயத்தில் கார்த்திகை மாதத்துக் கிருத்திகா நட்சத்திரத்தைக் கடை நாளாகக் கொண்டு பத்து நாட்கள் பெருந்திருவிழா கொண்டாடப் படுகிறது. முதல்நாள் கொடியேற்றத்துடன் விழா தொடங் குகிறது. தினமும் அண்ணாமலையார் பரிவாரங்களுடன் காலையிலும், இரவிலும் வீதிகளில் பல்வேறு வாகனங் களில் பவனி வருகின்றனர். இறுதிநாளான கார்த்திகைத் தீபத்தன்று அதிகாலையில் பரணிதீபம் ஏற்றப்பட்டு அதற்கு விரிவான பூசைகள் செய்யப்படும்.

மாலையில் சரியாக 6 மணிக்கு மலை உச்சியில் தீபம் ஏற்றப்படும். ஆறடிஉயரமுள்ள செப்பு (அண்டா போன்ற) பாத்திரத்தில் நெய்யில் நனைத்து கற்பூரத்தில் திரித்த திரிகளை இட்டு தீபம் ஏற்றுகின்றனர். அதே சமயம் கீழே கிளிகோபுரத்தை ஒட்டியுள்ள 16 கால் மண்டபத்தில் பஞ்ச மூர்த்திகள் சர்வ அலங்காரத்துடன் எழுந்தருளி வைக்கப்படுகின்றனர்.

மலைமீது தீபம் ஏற்றும் வேளையில் பஞ்ச மூர்த்தி களுக்கு ஏக காலத்தில் கற்பூரக்கிளை ஆரத்தி காட்டப் படுகிறது. அதே நேரத்தில் சுவாமி சந்நிதியிலிருந்து அர்த்தநாரீசுவரர் சிறிய விமானத்தில் புறப்பட்டு வெளி வருவார். வேகமாக வரும் அவர், சுவாமிக்கு முன்பாக கொடிமரத்தடியில் நடனம் ஆடுவார்.

அர்த்தநாரீசர் நடனம், பஞ்சமூர்த்தி தீபாராதனை மலைமேல் தீபம் ஏற்றுதல் ஆகிய மூன்றும் ஏககாலத்தில் நிகழும் அப்போது உச்சஸ்தாயியில் பக்தர்கள் எழுப்பும் அண்ணாமலையானுக்கு அரோகரா கோஷமும், உடலை (தோற்கருவி) பிரம்ம தாளம், சங்கு, எக்காளம் முதலிய இசைக் கருவிகளின் முழக்கமும் பெரிய மன அதிர் வினை உண்டாக்கும். அந்த கணப்பொழுதுகளில் ஆலய வளாகம் சிவலோகமாகவே விளங்கும்.

அதன் பின்னர் உட்பிரகாரத்தில் பஞ்ச மூர்த்திகள் புறப்பாடும் வாண வேடிக்கைகளும் நிகழும், இரவில் கொடி இறக்கப்படும். பின்னிரவில் பஞ்சமூர்த்திகள் திரு வீதி உலா நடைபெறும். பதினோராம் நாள் விழாவாக சுவாமி தெப்போற்சவம் நடைபெறும். 12ம் நாள் அண்ணா மலையார் மலைவலம் வருதலும் இரவு பராசக்தி தெப் பமும் நிகழும், பதிமூன்றாம் நாள் முருகன் தெப்பத்தில் உலா காண்பார்.

இலக்கியங்கள் காட்டும் தீபத்திருவிழா

ஆதிநாளில் மக்கள் கொண்டாடி வந்த விழாக்களைக் இப்போது நாம் அதே முறையில் கொண்டாடவில்லை என்பது ஆராச்சியாளர்களின் கருத்தாகும். விழாக்களின் தன்மையும் நோக்கமும் காலப்போக்கில் மறக்கப்பட்டுவிட்டன. காலங்கள் தோறும் அருளார்கள் புதிய விழாக்களையும் அதற்கான பழக்கவழக்கங்களையும் அறிமுகப்படுத்துகின்றனர். அவை மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு கொண்டாடப்படுகிறது. ஆனால் காலந்தெரியாத காலத்திலிருந்து கொண்டாடப்படும் ஒரே விழாவாக இருப்பது கார்த்திகை தீபம் மட்டுமே ஆகும். ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க இலக்கியங்களில் பல விழாக்கள் குறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் குறிப்பிடத்தக்க விழாக்கள் உறையூர் நடந்த பங்குனி உத்திரம், மதுரை ஆவணி அவிட்டம், கருவூர் உள்ளி விழா, கார்த்திகை தீபவிழா ஆகியவையாகும். இவற்றில் கார்த்திகைத் தீபம் மட்டுமே நிலைப்பெற்றிருக்கிறது. மற்றவை உருமாறி அழிந்துப்போயின. சங்க இலக்கியங்களில் ஒன்றான முத்தொள்ளாயிரத்தில் கார்த்திகைவிழாவில் மலைமுகடுகளில் விளக்கேற்றி வழிபட்ட செய்தி காணப்படுகிறது. "அணி மலையில் தீயைப் போல்" என வரும் தொடரால் இதை அறியமுடிகிறது. வேலிகளில் காந்தட்பூ பூத்திருக்கிறது. அடர்ந்த சிவப்பு நிறத்தில் வேலிகளில் வரிசையாக பூத்திருக்கும் இப்பூக்களை கார்த்திகை நாளில் வரிசையாக ஏற்றி வைத்த தீபங்களுக்கு உவமையாக சொல்லப்பட்டிருப்பதைக் காண்கிறோம். காந்தளைக் கோடல் என்றும் கூறுவர். கார்த்திகை மாதத்தில் பூப்பதால் இவை கார்த்திகைப்பூ எனவும் அழைக்கின்றனர். கார்த்திகை தீபம் பெண்களுக்கே உரியதாகும். இந்நாளில் பெண்கள் நிறைய விளக்குகளை ஏற்றி வைக்கின்றனர். வெப்பம் நிறைந்த பாலைவனத்தில் இலவம் பூக்கள் மலர்ந்திருப்பது பெண்கள் ஏற்றி வைத்த கார்த்திகை விளக்குகளைப் போல இருக்கிறதென்று ஔவையார் அகநானூற்றில் பாடுகிறார். அவருக்கு பின்னர் ஐநூறு ஆண்டுகள் கழித்து தோன்றிய ஞானசம்பந்தப் பெருமான் இளமுலைத் தையலர்கள் கொண்டாடும் விளக்கீடு என்று இதனைக் குறித்திருப்பது சிந்திக்கத்தக்கதாகும். இன்று வரை கார்த்திகை தீப விழா வீடுகளிலும் ஆலயங்களிலும் சிறப்புடன் கொண்டாடப்பட்டு வருகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கல்வெட்டுகளில் திருவிளக்குகள்

★ ஸ்ரீ அண்ணாமலையார், திருவண்ணாமலை

சிவாலயங்களில் விளக்கேற்றுவது பெரும் புண்ணிய மாகக் கருதப்பட்டதால் ஆலயங்களில் தினமும் அனேக விளக்குகள் அன்பர்களால் ஏற்றப்பட்டன.

காலை, நண்பகல், மாலை ஆகிய சந்திவேளைப் பூசை களின் போது ஏற்றப்படும் விளக்குகள் சந்திவிளக்குகள் ஆகும். இடைவிடாது எப்போதும் எரிந்து கொண்டி ருக்கும் விளக்குகள் நந்தா (நொந்தா) விளக்குகள் எனப் பட்டன. இவற்றைத் தொடர்ந்து ஏற்றிவர அனேக வித மான நன்கொடைகள் அளிக்கப்பட்டன.

தென்னக ஆலயங்களில் பொறிக்கப்பட்டுள்ள கல்-வெட்டுக்களில் பெரும்பாலானவை விளக்கெரிக்க அளிக்கப்பட்ட நன்கொடைகளைப் பற்றியே பேசுகின்றன. மாமன்னர்கள், அதிகாரிகள், பொதுமக்கள், கோயில் பணியாளர்கள் என்ற எல்லாத் தரத்தினரும் இறைவன் முன்பாக விளக்கெரிக்க நிபந்தங்களை ஏற்படுத்தி யிருந்தனர். அரசனின் நன்மைக்காவும் அவன் போர்க் களத்தில் வெற்றி பெறவும் பல விளக்குகள் ஏற்றப் பட்டன. மக்கள் நோய் நொடிகளிலிருந்து விடுபடவும் ஆலயங்களில் விளக்குகளை ஏற்றினர்.

அவர்கள் தம்மால் அளிக்கப்பட்ட விளக்குகளைத் தொடர்ந்து ஏற்றுவதற்கு வேண்டிய நெய்யைப் பெற ஆடு, மாடுகளை அளித்தனர். ஒரு விளக்குக்குத் தேவையான நெய்யைப் பெற 96 ஆடுகள் அல்லது 32 பசுக்கள் என்ற வீதத்தில் தானம் அளிக்கப்பட்டது. இப்பணிக்கு பசுக்கள் கொடுக்கப்பட்ட போது அவை விருத்தியாக ஒரு காளையையும் சேர்த்து அளித்தனர். இப்பணிக்கு அளிக்கப்படும் ஆடுகள், சாவ, மூவாப் பேராடுகள் எனப்பட்டன.

ஆடு, மாடுகளை ஆலயத்தின் சார்பில் சுரபி மன்றாடி கள், இடையர்கள் முதலியோர் பெற்றுக் கொண்டு அதற் கேற்ப ஆலயத்திற்குத் தேவையான நெய்யை அளந்தனர். பல கல்வெட்டுகளில் ஆடு மாடுகளை ஏற்றுக் கொண்ட வர்களின் பெயர்களுடன் அவர்களிடம் பணிபுரிந் தவர்களின் பெயர்களும் விவரமாகக் குறிக்கப்பட்டுள்ள தைக் காண்கிறோம்.

சில சமயம் விளக்கிற்கான நன்கொடைகள் பொன் னாகவும் நிலமாகவும் ஆலயங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

இத்தகைய நிலங்கள் விளக்குப்புறம் என்று அழைக் கப்பட்டன. நன்கொடைகளை ஏற்றுக்கொண்ட கோயில் தானத்தார், ஊரார் சிவப்பிராமணர்கள், ஊரார், ஊர் சபை யார், சுரபி மன்றாடிகள் (பசுக்களைக் காப்பவர்) இடையர், ஆகியோர் விளக்குகளை சூரிய சந்திரர் உள்ளவரை ஏற்றக் கடவோமாக சம்மதித்தோம் என்ற உறுதி மொழியை அளித்திருந்தனர். இந்தத் தருமத்திற்கு ஊறு விளைப்போர் கங்கைக் கரையில் காராம்பசுவைக் கொன்ற பாவத்தையும் தாயைப் புணர்ந்த பாவத்தையும் அடைவர் என்ற சாப மொழியைக் கூறி அதுவும் கல்வெட் டாகப் பொறிக்கப் பட்டது.

பொதுவாக மண் அகல்களில் விளக்கேற்றும் வழக்கமே இருந்தது. பின்னாளில் இரும்பு அகல் விளக்கு கள் வழக்கத்திற்கு வந்தன. வெண்கலம், பித்தளை, தரா, வெள்ளி, தங்கம், முதலியவற்றால் செய்யப்பட்ட விளக்குகளும் ஏற்றப்பட்டன.

திருவையாறு உத்திர கயிலாயம் ஆலயத்தில் குறிக்கப்பட்டுள்ள கல்வெட்டில் தூங்கு விளக்கு, தரா விளக்கு, ஈழச்சியல் விளக்கு, சோழச்சியல் விளக்கு, மலையாண் விளக்கு, ஆரக்குட விளக்கு முதலிய பல வகை விளக்குகள் குறிக்கப்பட்டுள்ளன.

ஈழம் (இலங்கை) ரோமபுரி, முதலிய இடங்க்ளில் இருந்து கொண்டுவரப்பட்ட விளக்குகளும் ஏற்றப்பட்டன. யவன தேசத்திலிருந்து விதவிதமான விளக்குகள் இறக்குமதி செய்யப்பட்டதை வரலாறு தெரிவிக்கிறது.

சிறப்புமிக்கக் கோயில்களில் பாவை விளக்குகள் அமைக்கப்பட்டன. ஆலயங்களில் பணிபுரிந்து வந்த பணிப் பெண்கள் விளக்கு ஏந்தி நிற்கும் வகையில் தம்மைப் போலவே உருவங்களைச் செய்து நிலைப் படுத்தினர்.

எடுத்துக்காட்டாக, இராஜேந்திரசோழன் தன் காதலியான பரவையாருடன் திருவாரூர் கோயிலுக்கு வந்த போது அவர்கள் நின்று வழிபட்ட இடத்தில் அதனை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நினைவுபடுத்திக் கொண்டிருக்கும் வகையில் பச்சைப் பாவை, சரியாமுலை நங்கை, என்ற இரண்டு பாவைவிளக்குகளை அமைத்தனர் என்று திருவாரூர் கல்வெட்டுகள் குறிக்கின்றன. அரசனும் அவனுடைய காதலியும் இங்கு வந்த போது விளக்குகளை ஏந்தி நின்ற பணிப் பெண்களின் பெயராலேயே இவை அமைக் கப்பட்டன என்று கருதப்படுகிறது. (இவை நின்ற இடம் தெரியும் குத்துவிளக்குகள் என்று குறிக்கப்பட்டுள்ளன)

தெய்வங்களின் மீது பக்தி கொண்டு விளக்கேற்றி யதைப் போலவே அரசன் அல்லது அன்புள்ளவர் களின் நன்மைக்காவும் விளக்கேற்றப்பட்டன.

தென்னகத்தில் அனேகருடைய நன்மைக்காகவும் அரசர்கள் போர்களில் வெற்றிப் பெறவும் கோயில்களுக்கு விளக்கு தானம் அளிக்கப்பட்டதைக் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. (இராஜராஜ சோழன் போர்களில் வெற்றிப் பெற்றவும் வெற்றிப்பெற்றதைக் கொண்டாடவும் பல கோயில்களுக்கு விளக்கு தானமளித்ததை ஆலயக் கல்வெட்டுக்களால் அறிகிறோம்.

இன்றும் ஆலயங்களுக்கு விளக்குகளைத் தானமாக அளிப்பதும் விளக்குகளை ஏற்றி வருவதும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

கோழிப்போரும் விளக்குகளும்

தஞ்சைப் பெரிய கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்களின் மூலம் நூற்றுக்கும் அதிகமான விளக்குகள் இக்கோயிலில் எரிக்கப்பட்டத்தை அறிகிறோம். இவற்றில் ஸ்ரீ ராஜராஜதேவர் கோழிப் போரில் தோல்வி அடையாதிருக்க வேண்டிக்கொண்டு அளிக்கப்பட்ட திருவிளக்குகள் பற்றிய செய்திகளை இருபதுக்கும் மேற்பட்ட கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. அவற்றில் இவை உடையார் ஸ்ரீ ராஜராஜதேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாதிருக்க வைத்த விளக்கு என்ற குறிப்பைக் காண்கிறோம். இவற்றில் அளித்தவர் பெயர்களும் இவர்கள் தந்த காசுக்களின் மூலம் வாங்கப்பட்ட ஆடு மாடுகளைப் பெற்றுக் கொண்ட இடையர்களின் பெயர்களும் விவரமாகக் குறிக்கப்பட்டுள்ளன.

❖ இதில் குறிக்கப்பட்டுள்ள கோழிப்போர் எது என்பதில் ஆராய்ச்சியாளர்கள் பல்வேறு கருத்துகளைக் கொண்டுள்ளனர். என்றாலும் ராஜராஜன் கோழிப்போரில் விரும்பப் கொண்டிருந்தான் என்றும் அவனுடைய கோழிகள் வெற்றிபெற அளிக்கப்பட்ட நிபந்தனைகளே இவை என்றே பலரும் கருதுகின்றனர்.

குற்றத்தைக் குணமாக்கும் விளக்கீடு

இறைவனிடம் அன்பு கொண்டும், அரசன் மீது அன்பு கொண்டும் ஆலயங்களில் விளக்கேற்றியதைப் போலவே அறியாமல் செய்த குற்றங்களுக்குத் தண்ட னையாகவும் கோயில்களில் விளக்குகளை தொடந்து ஏற்றிவரப் பணிக்கப்பட்டதைப் பல கல்வெட்டுகள் மூலம் அறிகிறோம்.

எடுத்துக்காட்டாக, கீழ்ப்பழுவூர் ஆலந்துறையீசர் ஆலயத்தில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுச் செய்தி யைக் காண்கிறோம். சூனிமான் நாட்டைச் சேர்ந்த வேசாலி நாடாழ்வான் என்பவனும், பள்ளி நாட்டாரைச் சேர்ந்த பட்டன் திருச்சிற்றம்பலவனும் கோல் எறிந்து கொண்டிருந்தனர். அவ்வேளையில் கைதவறுதலாக வேசாலி நாடாழ்வான் எறிந்த கோல்பட்டு திருச்சிற்றம் பலவன் மாண்டுபோனான். இதனால் சூனிமான் நாட்டார்க்கும் பள்ளிநாட்டாருக்கும் பகை மூண்டது. இரு நாட்டாரும் கூடிப் பேசித் தீர்த்து தமது பகையை விட்டனர். இதன்படி, ஆலந்துறை மகாதேவர் கோவிலில் வேசாலி நாடாள்வான் இறந்த சிற்றம்பலவன் பேரால் ஒரு நொந்தா விளக்கு எரிக்கவேண்டுமென்று தீர்ப்பளித்தனர். அதை ஏற்றுக்கொண்ட வேசாலி நாடாள் வான் 32 பசுக்களைப் பள்ளி நாட்டாரிடம் கொடுத்தான். அதை அவர்கள் கோயில் காணியுடைய சிவப் பிராமணர் களிடம் அளித்து பட்டன் தில்லை சிற்றம்பலவன் பெயரால் சூரிய சந்திரர் உள்ள வரையில் விளக்கேற்றும்படிக் கூறினர். இது விக்ரம சோழன் (கி.பி. 1127) ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியாகும்

இதுபோன்று கை தவறுதலாக கொல்லப்பட்ட இருவேறு வழக்குகளிலும் கோவிலில் விளக்குகேற்றும் படி ஆணையிடப்பட்டதை வடஆற்காடு மாவட்டம் சீயமங்கலம் தூணாண்டார் கோயிலுள்ள கல்வெட்டுகள் குறிக்கின்றன.

முதல் வழக்கின்படி இரண்டாம் குலோத்துங்கன் ஆட்சிகாலத்தில் (கி.பி. 1136) சம்புபுரத்தைச் சேர்ந்த பள்ளிச் செல்வன் என்பவன் அதே ஊரைச் சேர்ந்த பள்ளி வேணாட்டரையனைக் கை தவறுதலாகக் கொன்று விட்டான். அக்குற்றத்தை விசாரித்த நாட்டார்கள் பள்ளிச் செல்வனுக்குத் தண்டனையாக மேற்படி கோவிலில் அரை நுந்தா விளக்கு ஏற்ற வேண்டுமென்று தீர்ப்பளித்தனர். அதை அவன் ஏற்றுக் கொண்டு அவன் உருவம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொண்டவிளக்கையும் பதினாறு பசுக்களையும் தானமாக அளித்துள்ளான்.

இரண்டாவது வழக்கு, இதே மன்னின் 9–ஆம் ஆட்சிஆண்டின் (கி.பி.1142) நடைபெற்றுள்ளது. பேராவூர் நட்டுவன் வாசல் விண்ணவரையன் எழுவன் என்பவன் காட்டிற்கு வேட்டையாடச் சென்றான். அவன் எய்த அம்பு அங்கு வந்த வயலூரைச் சேர்ந்த காடவன் என்பவனின் மகனைக் கொன்றுவிட்டது. வழக்கை விசாரித்த ஊர் நாட்டு பெருமக்கள் விண்ணவரையன் எழுவன் மேற்படி கோவிலில் அரை நுந்தா விளக்கு ஏற்றவேண்டுமென்று தீர்ப்பளித்தனர்.

இதைப் போன்ற ஒரு வழக்கில் குற்றவாளி அண்ணா மலையார் ஆலயத்தில் விளக்கேற்றும்படி பணிக்கப் பட்டதைத் திருவண்ணாமலை அண்ணாமலையார் ஆலயத்தில் பொறிக்கப்பட்டுள்ள முதலாம் ராஜாதிராஜ தேவன் காலக் கல்வெட்டால் அறிகிறோம்.

வடாற்காடு மாவட்டத்தில், மடம் எனும் ஊரிலுள்ள தடாகபுரீசுவரர் ஆலயத்திலுள்ள ஒரு கல்வெட்டிலும் மான் வேட்டைக்குச் சென்ற இடத்தில் ஏய்த அம்பு குறிதவறி குறுக்கே வந்தவன் மீது பட்டு அவன் இறந்து போனதையும் அதற்குத் தண்டனையாக அம்பெய்தவன் மேற்படி ஆலயத்தில் நுந்தா விளக்கு வைத்தால் போதும் என்று தீர்ப்பளிக்கப்பட்டதும் குறிக்கப்பட்டுள்ளது. இவ் விளக்கினை ஏற்ற அவன் ஐம்பத்தெட்டு பசுக்களையும் ஒரு காளையையும் தானமாக அளித்துள்ளான்.

கங்கபுரம் என்ற இடத்தில் வாழ்ந்துவந்த சங்கரத்தடியான், பெரியான் என்கிற அண்ணன் தம்பியரிடையே கலகம் மூண்டது வாய் சண்டை முற்றி கைகலப்பாகியது. தம்பி அடித்த அடியில் அண்ணன் இறந்து விட்டான் இந்த எதிர்பாராத கொலை வழக்கு பஞ்சாயத்துக்கு வந்தது. பஞ்சாயத்தார் சண்டையிட்டுக் கொண்டவர்களின் தாய் தந்தையர் தள்ளாத வயதில் இருப்பது; அவர்களுக்குப் போதுமான சொத்துக்கள் இல்லாதது; அவர்களுக்கு அந்த மகனை (தம்பியை) விட்டால் வேறு ஆதரவு இல்லாதது முதலியவற்றை ஆராய்ந்துச் சீர்தூக்கிப் பார்த்தனர். முடிவில் தம்பிக்கு மரண தண்டனை அளித்தால் அவனுடைய குடிகெட்டு விடும் என்பதால் அவனைத் திருவண்ணாமலையை அடுத்துள்ள தாமரைப்பாக்கம் அக்னீசுவரர் ஆலயத்தில் அரை நுந்தா விளக்கேற்றும்படி பணித்தனர். மேலும் அவன் தனது வயதுமுதிர்ந்த தாய் தந்தையரைக் காப்பற்ற வேண்டுமென்று ஆணையிட்டனர்.

அவனும் அதை ஏற்றுக் கொண்டு 48 ஆடுகளை அளித்தான். இதனை ஊரார் ஏற்றுக் கொண்டனர். இச் செய்தி விரிவாக மேற்படி கோயிலில் கல்வெட்டாகவும் பொறித்து வைக்கப்பட்டது. இது ராஜேந்திரசோழன் காலத்தில் நடந்ததாகும்.

இப்படி, கை தவறுதலாகவும், ஆத்திரத்திலும் நடந்துவிட்ட பல்வேறு கொலை வழக்குகளில் குற்ற வாளிக்கு மரணதண்டனை வழங்காமல், ஆலயங்களில் விளக்கேற்றும்படி தீர்ப்பளிக்கப்பட்டதை காண்கிறோம். இதை ஏற்றுக்கொண்டு குற்றம் செய்தவர்கள் ஆலயங் களுக்கு ஆடு, மாடுகளைச் செலுத்தியுள்ளனர். இவற்றை விரிவாகக் கல்வெட்டாகவும் பொறித்துவைத்துள்ளனர். இத்தகைய விளக்கீடுகளால் இறந்தவனின் ஆன்மா சாந்தி அடையும் என்று நம்பினர்.

ஜம்பை, எலவானாசூர், திருவண்ணாமலை முதலிய தலங்களில் இத்தகைய கல்வெட்டுக்கள் உள்ளன.

மோட்ச தீபம்

இறைவனின் திருவடியை அடைவதே மோட்சமாகும். மோட்சம் என்பதற்கு விடுதலை என்பது பொருள். உலக வாழ்விலிருந்து விடுதலை பெற்ற ஆன்மாக்கள் இறைவன் திருவடியை அடைகிறது என்று நம்புகின்றனர். இதனால் அன்பர்கள் இறந்த பின்னர் அவர்கள் மோட்சம் பெறுவதை உணர்த்தவும் அவர்களின் நினைவைப் போற்றும் வகையிலும் நிறைய தீபங்களை ஏற்றி வழிபடுகின்றனர். மரணத்திற்குப்பின் பத்து அல்லது பதினாறாம் நாள் மோட்ச தீபம் ஏற்றுவதைச் சமயச் சடங்காகக் கொண்டுள்ளனர்.

இந்தச் சடங்கில் நண்பகலில் வீட்டில் சிவலிங்கவடிவில் விளக்கேற்றி பூஜை செய்யப்படுவதுடன் மாலையில் ஆலயக் கோபுரங்களின் உச்சியில் மோட்ச தீபங்கள் ஏற்றப்படுகின்றன. இப்போதும் கோபுரங்களின் உச்சியில் இறந்தவர்களின் பெயரால் மோட்ச தீபம் ஏற்றப்படுவதைக் காணலாம். திருவண்ணாமலை, சிதம்பரம், முதலிய தலங்களில் மோட்ச தீபம் வைக்கும் வழக்கம் உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யமவாதனை நீக்கும் புகை வழிபாடு

சிவாலயங்களில் தீபங்கள் ஏற்றுவதைப் போலவே நறுமணப் புகையிடுவதும் புண்ணியமாகக் கருதப்படுகிறது. துளையிட்ட மூடிகளைக் கொண்ட தூபக் கால் களில் நெருப்பையிட்டு நறுமணப் புகை தரும் பொருட் களை அதில் தூவி விசிறியால் வீசுவர். நெருப்பில் புகைப்பொருள் எரிந்து வரும். புகை சுற்றுப்புறங்களில் பரவும். இது நறுமணத்துடன் சுகாதாரத்தையும் தருகிறது.

ஆலயங்களில் தீபாராதனையின் தொடக்கத்தில் தூபத்தால் ஆராதனை செய்யப்படுகிறது. இதற்கென தூபக்கால் என்னும் பெரிய அகல் பிடியுடன் உள் ளது. தூபத்தைக் காட்டும் போது ஓம் ஹாம் சங்கராய நம: என்ற மந்திரம் ஓதப்படுகிறது. இதற்கு துன்பத்தை விலக்கி நன்மையைச் செய்பவன் என்பது பொருள்.

தூபமிடுதலைப் புராணங்கள் சிறப்புடன் பேசுகின்றன. அவற்றில் தூபம் இடுதல் யமபயத்தை நீக்கும் என்று கூறப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள பேரையூர் நாகநாதர் ஆலயப் புராணத்தில் பஞ்சமா பாதகங்களைச் செய்து வந்த ஒரு வேடன் நல்வினை வசத்தால் ஒருவேதியர் சிவபூசை புரிவதற்கு சாம்பிராணி அளித்ததால் பெருமான் அவனுக்கு யமவாதனை யிலிருந்து விடுதலை அளித்தார் என்று கூறப்பட்டுள்ளது.

யமவாதனையிலிருந்து விடுபடவே திருவையாற்றில் காலகாலரான ஆட்கொண்டார் சந்நிதியில் குங்குலியத்தைப் புகைக்கின்றனர். இது இங்கு பெரிய பிரார்த்தனையாகச் செய்யப்படுகிறது.

திருமுறைகளில் தூபமிடுதல் தனிச்சிறப்புடன் திரும்ப திரும்பக் கூறப்பட்டுள்ளது. பூவும் புகையும் என்றும்; தூபம், தீபம்; என்றும் சலம் பூவோடு தூபம் மறந்தறியேன் என்றும் பல நூறு இடங்களில் தூபமிடுதல் குறிக்கப் பட்டுள்ளதைக் காண்கிறோம்.

பெருமான் பவனி வரும் போது குங்குலியம் சாம்பி ராணி ஆகியவற்றைக் கொண்டு புகையிடுகின்றனர். முன்னாளில் இப்பணியில் இருந்தவர்கள் குங்குலிய ஆண்டார்கள் என்று அழைக்கப்பட்டனர். தில்லை நடராஜர், திருவாரூர் தியாகேசர் முதலான மூர்த்திகள் பவனிவரும்போது பெரியஅளவில் தூபம் இடப்படுகிறது.

தென்னகத்திலுள்ள அனேக கல்வெட்டுக்கள் ஆலயத்தில் நறும்புகையிட நிமந்தமளிக்கப்பட்ட செய்தி களைத் தெரிவிக்கின்றன. தூபமிடுதலை கல்வெட் டுக்கள் "சிதாரி" என்று அழைக்கின்றன. இராஜேந்திர சோழன் காலத்தில் சிதாரிக்காக (நறும் புகையிட) திருவிசலூர் ஆலயத்தில் நிலம் அளிக்கப்பட்டதை மேற் படி ஆலயக் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. திருக் கண்டியூரில் பொறிக்கப்பட்டுள்ள ஒரு கல்வெட்டு திருபுகைக்கு 90 பலம் குங்குலியம் அளிக்கப்பட்ட செய்தியைத் தெரிவிக்கிறது.

பஞ்சமுக தூபம்

சிவபெருமானின் ஐந்து முகங்களையும் பூசிக்கும் வகையில் ஐந்து வகையான பொருட்களால் தூபமிடப்படுகிறது. இதன்படி தூபக்காலில் அகோரமுகத்திற்கு வெள்ளை அகில், சத்யோஜாத முகத்திற்கு நீலோற்பலக்கிழங்கு, வாமதேவ முகத்திற்கு கார் அகில், தத்புருஷ முகத்திற்கு குங்குலியம், ஈசான முகத்திற்கு வெட்டிவேர், ஆகியவற்றைப் பொடித்து தூபமிட வேண்டும். சில நூல்களில் முறையே மல்லிகை, காரகில், சௌகந்திகம், குங்குலியம், வெண்ணகில், ஆகியன தூபப் பொருட்களாகக் கூறப்பட்டுள்ளன.

தூபதண்டம்

இந்த தண்டம் நீண்ட உருண்டையான மரத்தண்டின் உச்சியில் மூடியுடன் கூடிய அகன்ற கிண்ணத்தைக் கொண்டுள்ளது. கிண்ணத்திலும் மூடியிலும் காற்று எளிதில் நுழைந்து வெளியேற கலையழகு மிக்கத் துளைகள் இடப்பட்டுள்ளன. கிண்ணப் பகுதியில் நான்குபுறத்திலும் உச்சியிலும் நந்தி உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மூடியினை எளிதில் திறந்து மூட கீல்கள் பொருத்தப்பட்டுள்ளன. கிண்ணத்திலுள்ள தணலைக் கிளரிவிட நீண்ட மரக்குச்சி சங்கிலியுடன் இணைப்பட்டுள்ளது. சிலவற்றில் விசிறியைப் பொருத்தும் வளையமும் உள்ளது.

தூபத் திரவியங்கள்

நறும் புகையிட உதவும் மூலப்பொருட்களைத் தூபத் திரவியங்கள் என்று அழைக்கிறோம். பச்சைக்கற்பூரம், அகில், சந்தனம், தக்கோலம், சாதிக்காய், இலவங்கம், குந்துருக்கம்பிசின், ஜடாமாஞ்சை, கோரைக்கிழங்கு முதலியவை தூபத் திரவியங்களாக கொள்ளப்படுகின்றன. இவற்றைப் பல்வேறு வகைகளில் கலந்து தூபமிடுகின்றனர். இந்தக் கலவைகள் யக்ஷகர்த்தமம், பிராபத்யம், விஜயம், சீதாம்சு, கலியாணம், அமிர்தம், சுகந்தம் எனப்பலவகையாக அழைக்கப்படுகின்றன. நெய், சர்க்கரை, தேன், விளாமிச்சை வேர், கீழாநெல்லி முதலியவற்றையும் கலந்து தூபமிடப் பயன்படுத்துகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தூபமிட்டுப் பேறு பெற்ற குங்குலியக் கலயர்

மனைவி மகனுடன் குங்குலியக்கலயர்

ஆலயங்களில் தூப மிட்டும் பணி செய்து அனேக அடியார்கள் பேறு பெற்றி ருக்கின்றனர். அவர்களில் உயர்ந்தவராகக் குங்குலியக் கலயநாயனார் போற்றப் படுகிறார்.

சோழநாட்டிலுள்ள திருக் கடவூரில் அந்தணர் குடியில் பிறந்தவர் கலயனார். இவர் திருக் கடவூர் சிவபெருமா னுக்கு நித்தமும் குங்குலியம் கொண்டு புகையிட்டுப் பணிசெய்து வந்தார். இவருடைய பெருமையை உலகி னருக்கு உணர்த்த எண்ணிய சிவபெருமான் இவருக்கு வறுமை வரச் செய்தார்.

ஒரு நாள் இவருடைய மனைவியார் அன்பரே வீட்டில் உணவுப்பொருளேதும் இல்லை. இதைவிற்று நெல் வாங்கி வாருங்கள் என்று கூறித் தனது தாலியைத் தந்தார். அடிகளார் நெல்வாங்க கடைவீதிக்குச் சென்றார். அங்கு குங்குலிய வணிகன் ஒருவன் அவரிடம் நல்ல குங்குலியம் உள்ளது வாங்கிக் கொள்ளும் என்றான்.

அடியவர் மிகுந்த மகிழ்ச்சியுடன் தாலியைக் கொடுத்துக் குங்குலியத்தைப் பெற்றுக் கொண்டார். கடவூர் வீரட்டானேசுவரர் ஆலயத்திற்குச் சென்று அதைப் புகைத்தார். அதே வேளையில் சிவபெருமான் அவருடைய இல்லத்தில் குபேரன் மூலம் செல்வத்தைப் பெருகச் செய்தார்.

பின்னர் ஆலயத்துள் நிற்கும் கலயனாரிடம் அன்பரே! நீங்கள் பசியாக இருக்கின்றீர்கள். உமது வீட்டிற்குச் சென்று சோறு உண்டு பசியாறுங்கள் என்றார். அவரா ணைப்படியே வீடு திரும்பிய அடியவர் வீடெல்லாம் செல்வம் நிறைந்திருக்கக் கண்டார். இது சிவனருளே எனச் சிந்தித்து மகிழ்ந்தார்.

இவர் பல தலங்களை வணங்கி மகிழ்ந்து வரும் வேளையில் திருப்பனந்தாள் சென்றார். அந்நாளில் தாடகை என்ற பெண்ணுக்காகத் தலையைச்சாய்ந்த சிவ லிங்கம் மீண்டும் நிமிராமலேயே இருந்தது. அதைக் கண்டு வருந்திய அந்நாட்டு அரசன் சிவலிங்கத்தை நேராக நிறுத்த முயன்றான். யானைகளைக் கட்டி இழுத்தான் என்றாலும் சிவலிங்கம் நிமிராதது கண்டு வருந்தி நின்றான். அவ் வேளையில் அங்கு வந்த குங்குலியக் கலயர் கயிற்றின் ஒரு முனையைச் சிவலிங்கத்தில் கட்டி மறுமுனையை தன் கழுத்தில் கட்டிக் கொண்டு இழுத்தார். அவருடைய வருத்தத்தைப் பொறாத சிவபெருமான் நிமிர்ந்தார். அரசனும் அடியவர்களும் மகிழ்ந்தனர்.

அடிகளார் கடவூர் திரும்பி சிவபெருமான் சந்நிதியில் புகையிடும் பணியைத் தொடர்ந்து செய்து வந்தார் அந் நாளில் அங்கு வந்த திருஞானசம்பந்தரையும், திருநாவுக் கரசரையும் வரவேற்று உபசரித்துப் பேறு பெற்றார். நெடுநாள் சிவப்பணி செய்த குங்குலியக் கலய நாயனார் ஓர் ஆவணி மூலநாளில் தன் குடும்பத்தாருடன் சிவபதம் சேர்ந்தார்.

சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்துள் இலை மலிந்த சருக்கத்துள் குங்கிலியக்கலயர் வரலாற்றை 35 பாடல்களில் பாடியுள்ளார்.

❖ திருக்கடவூர் அமிர்தகடேசுவரர் (அபிராமி) ஆலயப் பிராகாரத்தில் குங்குலியக் கலயனார், அவருடைய மகன், மனைவி குங்குலிய வியாபாரியாக வந்த சிவபெருமான் ஆகியோரின் (கல்) திருவுருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

❖ திருப்பனந்தாள் செஞ்சடையப்பர் ஆலயத்தின் பிரா காரத்தில் குங்குலியக் கலய நாயனார்க்குத் தனிச்சந்நிதி அமைந்துள்ளது. இந்த சன்னதியை கட்டியவன் இவர்மீது பெறும் பற்றுக் கொண்டவனாவான். கல்வெட்டில் இவன் பெயர் திருக்கடவூர் குங்குலியக் கலயர் ஸ்ரீபாதத்திற்குப் பணி செய்திருக்கும் தீயிலும் பிரியாதான் அழியா விரதம் கொண்டவனான குங்குலிய கலயன் என்று குறிக்கப் பட்டுள்ளது. நாயனாரின் மனைவியார் பெயர் நீலாயி என்பதையும் இக்கோயிலில் பூசை செய்யும் பணியார் களைப் பற்றிய செய்திகளையும் இக்கோயிலுள்ள மூன்றாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டுக்களால் அறிய முடிகிறது.

ஸ்ரீ மங்கல நாயகி உடனாய தீப மங்களேசுவரர் அருளினால்
அன்பர்கள் ஒளிமயமான நல்வாழ்வைப் பெற்று இனிது வாழ்க! வாழ்க!!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ
காமவல்லியாம் இமயவல்லி தழுவும் கற்பகத் தருவே போற்றி! கபாலீசனே போற்றி! போற்றி!!



திருத் தலமரங்கள்

உலகில் உயிர்கள் மகிழ்சியுடன் வாழத் துணை நிற்ப வை இயற்கையின் அற்புதப் படைப்புக்களான ஆறுகளும், நீர் நிலைகளும் அதன் கரைகளிலுள்ள மரம், செடி, கொடிகளும் ஆகும். இவை தெய்வ வடிவங்களாகப் போற்றப்படுகின்றன.

ஆதியில் மரம், செடி கொடிகள் மனிதனுக்கு நிழல் தந்து காத்ததுடன் உண்ணக் கனிகளையும், மனம் மகிழ்ந்து சூட மலர்களையும் தந்தன. அவனுக்கு அவை தெய்வமாகவே விளங்கின. அவற்றையே அவன் போற்றி வழிபடவும் தொடங்கினான். சிவபெருமானும் சக்தியும் அவர்களுக்கு மரம், செடி கொடிகளாகக் காட்சி தந்து அருள்பாலித்தனர். கூட்டு வாழ்க்கை மரங்களின் அடியிலிருந்தே தொடங்கியது.

புராணங்கள், இறைவனைக் கற்பக மரமாகவும், அம்பிகை அதைச் சுற்றிப் படரும் காமவல்லி என்ற கொடி யாகவும் போற்றுகின்றன.

மக்கள் மரங்களை வணங்கியதுடன் அதன் அடியில் தெய்வ உருவங்களையும் அமைத்து வழிபடத் தொடங் கினர். முனிவர்களும் ரிஷிகளும் மரத்தின் அடியில் தவம் செய்தபோது இறைவன் சுயம்புலிங்கமாகத் தோன்றி அவர்களுக்கு அருள்பாலித்தான். எனவே மரங்களே ஆதியில் வழிபாட்டுக்குரியனவாக இருந்தன.

கட்டிடக் கலைகளின் வளர்ச்சியால் கோயில்கள் வளர்ந்த பின்னர் ஆதியில் வழிபாட்டில் இருந்த மரங்கள் தலமரங்கள் என்ற சிறப்பைப் பெற்றன. இவற்றின் பெருமைகளைத் தலபுராணங்கள் சிறப்பித்துக் கூறு கின்றன. ஒவ்வொரு ஆலயத்திற்கும் தனிப்பட்ட தல மரம் இருப்பதைக் காண்கிறோம்.சிலதலங்களில் ஒன்றுக்கும் மேற்பட்ட தல மரங்களும் உள்ளன.

பலவேறு சிறப்புகளைப் பெற்றுள்ள தலமரங்களைப் போற்றும் வகையில் சிவமஞ்சரியின் இந்த முப்பத்து ஏழாவது மலர் மலர்கிறது. இதில் தலமரங்கள், சிறப்பு பெற்ற பல்வேறு மரங்கள், தலமரசேவை, தலமரத்தின் அடியில் விளங்கும் ஐதீகக் கோயில்கள் முதலான பல செய்திகள் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. இவற்றை அறிந்து மகிழத் தங்களை அன்புடன் அழைக்கிறோம்.

காமக் கொடியான கற்பகவல்லித் தழுவிப் படர்ந் திருக்க அடியவர்க்குதவும் கற்பகத்தருவாக விளங்கும் கபாலீஸ்வரர் அருளால் அன்பர்கள் சகல செல்வயோக மிக்க பெருவாழ்வைப் பெற்று இன்பமுடன் வாழ இறை யருளைப் பிரார்த்திக்கிறோம். – சிவசுந்தரி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மரவழிபாடு சிந்தனைத் துளிகள்...

★ பாதுகாக்கப்படும் தலமரங்கள்

புனிதமானவை என்பதால் பட்டுப் போன பின்பும் தலமரங்கள் பாதுகாக்கப்படுகின்றன. மதுரையிலுள்ள கடம்பமரம், திருப்பாதிரிப்புலியூரிலுள்ள பாதிரிமரம், நயினார் கோயிலிலுள்ள மருதமரம் முதலியன பட்டுப் விட்டன, என்றாலும் இவற்றினை அழித்து விடாமல் இவற்றிற்குக் கவசமிட்டு வழிபட்டு வருகின்றனர்

★ விருட்சப் பிரதிஷ்டை- மரம் நடுதல்

மரங்களை நடுவதால் புண்ணியம் உண்டாகும். பாவம் தீரும் அதனால் நிழல்தரும் மரங்களைச் சாலை யோரத்தில் நட்டனர். ஆலயங்களில் தென்னை, வில்வம் முதலான வழிபாட்டுக்குரிய மரஞ்செடி கொடிகளை நட்டனர். புராணங்கள் மரம் நடுவதை விருட்சப் பிரதிஷ்டை என்று கூறுகின்றன. கூர்ம புராணத்தில் மரம் நடுவதால் உண்டாகும் பயன் கூறப்பட்டுள்ளது.

★ தெய்வங்களோடு இணைந்த மரங்கள்

அரசமரம் மும்மூர்த்திகளின் வடிவம் என்று புராணங்கள் கூறுகின்றன அரசமரம் விநாயகரோடு தொடர்புடையது.அவரைஅரசடிக் கற்பகம் என்பர்.

ஆலமரம் சிவனுடைய வடிவமாகும். பொதுவுடையார் கோயில் எனுமிடத்தில் ஆலமரமே நடராசப் பெருமானாக வழிபடப்படுகிறது.ஆறுகள் கூடும் சங்கமங்களில் பெருமான் ஆலமரமாக இருக்கிறான் என்று புராணங்கள் கூறுகின்றன.

வேம்பு பராசக்தியின் வடிவமாகும் பார்வதிதேவி மண்மீது தோன்றி வளர்ந்த பாண்டியர் குலத்திற்கு அது அடையாள மலரைத் தருகிறது.

கடம்பு முருகனின் வடிவமாகப் போற்றப்பட்டு அவனைக் கடம்பன் என்றே அழைக்கின்றனர். முருகப் பெருமானைத் தேவாரத்தில் நம்கடம்பன் என்று அப்பர் அழைத்து மகிழ்கின்றார். வேங்கை மரத்தையும் முருகனாகவே போற்றி வழிபடுகின்றனர்.

★ புடைப்புச் சிற்பங்களாகத் தலமரங்கள்

சிலதலங்களில் தலமரங்கள் பட்டுப்போன பின்பும் அவற்றின் வேர்களைப் பெட்டகத்திலிட்டுப் புதைத்து அதன்மீது கல்லில் அம்மரத்தைப் போலசெய்து நிலைப் படுத்தியுள்ளனர். இவற்றிற்கும் தினசரி வழிபாடுகள் செய்யப்படுகின்றன.

சிதம்பரத்தில் திருமூலட்டானருக்குப் பின்புறம் ஆலமரமும், திருவிடைமருதூர் உட்பிராகாரத்தில் மருத மரமும் புடைப்புச் சிற்பங்களாக அமைத்து வழிபடப் படுகின்றன.

மதுரையில் சாட்சி சொல்ல வந்த வன்னி மரம் வடக்குப்பிராகாரத்தில் இருந்தது. அது சுவாமி வலம் வரத் தடையாக இருந்தால் அதனை இடம் பெயர்த்து ஆடிவீதியில் அமைத்தனர். அது இருந்த இடத்தை நினைவு கூறும் வகையில் சிறிய மரத்தின் உருவத்தை அங்கு நிறுவியுள்ளனர்.

மரப்பெயர்களில் - ஆலயவகைகள்

ஆலயங்களுக்கு அதன் வடிவாலும் வனப்பாலும் சிறப்புப் பெயர்கள் வழங்குகின்றன. தஞ்சைப் பெரிய கோயில் மேருமலையைப்போல் உயர்ந்து அகன்றிருப் பதால் தட்சிணமேரு என்று அழைக்கப்படுகிறது. இது போன்று முன்னாளில் மரங்களின் பெயரால் ஆலயங்கள் சிறப்புப் பெயர் பெற்றிருந்தன.

அப்பரடிகள் சிவபெருமான் வீற்றிருக்கும் ஆலயங் களைப் பெருங்கோயில், மாடக் கோயில், கரக்கோயில், ஞாழற்கோயில், கொகுடிக்கோயில், இளங்கோயில், மணிக்கோயில், ஆலக்கோயில் என்று எட்டுவகையாகக் கூறுகிறார். இவற்றில் இரண்டு ஞாழல், ஆலம் என்ற மரங்களின் பெயராலும் ஒன்று கொகுடி என்ற முல்லைக் கொடியின் பெயராலும் அமைந்திருக்கின்றன.

ஆதியில் மரஞ்செடி கொடிகளின் அடியில் இருந்த சிவலிங்கங்களுக்குப் பின்னாளில் அதே அமைப்பில் ஆலயங்கள் அமைக்கப்பட்டதை இது உணர்த்துகிறது.

ஆலமரம் பல இடங்களில் விழுதுகளை ஊன்றி விசாலமான மண்டபத்தைப் போன்று விளங்கும். இது போல் பல கால்களைக் கொண்ட மண்டபங்கள் நிறைந்த இடமே ஆலக்கோயில் ஆனதென்பர். திருக்கச்சூர் ஆலயம் தேவாரத்திலும் சென்னை – கோடம்பாக்கம் புலியூர் பாரத்வாஜேஸ்வரர் கோயில் கல்வெட்டிலும் ஆலக்கோயில் என்று குறிக்கப்பட்டுள்ளன.

திருப்பாதிரிப்புலியூர் ஆலயம் கல்வெட்டில் கடை ஞாழற்கோயில் என்றும்; இறைவன் கடைஞாழல் மகாதேவரென்றும் குறிக்கப்பட்டுள்ளதாக T.A. கோபிநாத ராவ் அவர்கள் குறித்துள்ளார். பாதிரி மரத்தைக் கடைஞாழல் என்றும் கூறுவர்.

கொகுடி என்பது ஒருவகை முல்லையாகும். மரங்களின்மீது படர்ந்து வளரும் இவ்வகை முல்லையின் பந்தல் போன்ற ஆலயம் கொகுடிக் கோயில் எனப்பட்டது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மரத்தின்பெயர் சூடிய மகாதேவன்

சிவபெருமான் பூக்களின் பெயரால் செவ்வந்தீசுவரர், திருமலர் உடையார், ஷெண்பகேசுவரர், எனப் பொலிவதைப் போலவே மருதவாணன். ஏகாம்பரன், மாமூலன், ஆலமர் செல்வன், வேணுவனநாதன், வாசீசர், ஜம்புநாதர் என்று மரங்களின் பெயரால் அழைக்கப்படுகிறார். தலபுராணங்கள் அவருக்கு மரபெயர்கள் அமைந்திருப்பதன் காரணத்தை விளக்கமாகக் கூறுகின்றன. இப்பகுதியில் மரப்பெயர்களால் மகிமையுடன் விளங்கும் சிவபெருமானின் திருப்பெயர்கள் சிலவற்றின் விளக்கத்தைக் கண்டு மகிழலாம்.

மருதம் - மருதவாணன்

மருதமரம் தமிழர்வாழ்வோடு இணைந்ததாகும். தமிழ் இலக்கியங்களில் மருதக்கலி என்றொரு நூல் உள்ளது. பல தமிழ்ப் புலவர்கள் மருதன் என்ற பெயரைச் சூடியிருந்தனர். குறுங்குடி மருதன், மருதன் இளநா கனார், பெருமருதன் முதலான சங்கப் புலவர்களின் பெயர்கள் இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

சிவபெருமான் மருதமரத்தின் அடியில் வீற்றிருக் கின்றார். அதனால் மருதவாணன், மருதீசர், மருதப் பிரான் என்று அழைக்கப்படுகிறார்.

பல தலங்களில் மருதமரம் தலமரமாக உள்ளது. இத்தலங்கள் மருதவனங்கள் என்று அழைக்கப்படு கின்றன. இவற்றில் மூன்று முக்கியமானவை. இவை மல்லிகை மருதூர் (மல்லிகார்ச்சுனம்). திரு இடை மருதூர் (மத்தியார்ச்சுனம்) திருப்புடைமருதூர் (புடார்ச் சுனம்) என்று அழைக்கப்படுகின்றன. மல்லிகார்ச்சுனம், இறைவன் பெயரால் வழங்கும் தலமாகும். இது இந்நாளில் ஸ்ரீ சைலம் என்று அழைக்கப்படுகிறது. இவை பாடல் பெற்ற பதிகளாகும்.

ஜோதிலிங்கமாகப் பெருமான் வீற்றிருக்குமிடம் திரு விடைமருதூர் ஆகும். புராணங்கள் இப்பெருமானை மருதிடைத் தீங்கனி, மருதப்பொந்தில் தேன், மருத வாணன் எனப்பலவாறு போற்றுகின்றன. (ஜோதிர்லிங்கம் என்றதும் நமக்கு மகாபுராணங்களில் குறிக்கப்பட்டுள்ள பன்னி ரண்டு ஜோதிர் லிங்கங்களே நினைவுக்கு வருகின்றன. அவை தவிர காஞ்சீபுரம் கச்சபேசுவரர், திருவிடைமருதூர் மகாலிங்க சுவாமி முதலிய மூர்த்திகளும் ஜோதிர் லிங்கங்களேயாகும். பாரததேசத்தில் அனேக இடங்களில் ஜோதிர் லிங்கங்கள் உள்ளன).

மருதமரம் தலமரமாக உள்ளதால் நயினார்கோயில் என்ற தலமும் மருதூர் என்று அழைக்கப்படுகிறது.

அர்ச்சுனேசுவரர்

மருதமரத்திற்கு வடமொழியில் அருச்சுனம் என்பது பெயர். இப்பெயரால் சிவபெருமான் அர்ச்சுனேசுவரர் என்று அழைக்கப்படுகிறார். கொங்குநாட்டில் பல தலங்களில் அர்ச்சுனேசுவரர் எனும் பெயரில் பெருமான் வீற்றிருக்கிறார். இவற்றில் கடத்தூர் அர்ச்சுனேசுவரம் குறிப்பிடத்தக்கதாகும்.

மாமரம் - மாமூலன்

மாமரக்காடுகள் சமயவாழ்வில் சிறப்பிடத்தைப் பெற்றுள்ளன. மாமரத்தை வடமொழியில் சூதமரம் என்பர். மாங்காடுகள் புராணத்தில் சூதவனம் என்று அழைக்கப்பட்டன. மாங்காட்டில் வாழ்ந்தவரும் புராணங்களைப் பரவச் செய்தவருமான முனிவர் சூதமுனிவர் என்று அழைக்கப்பட்டார்.

சிவபெருமான் மாமரத்தடியில் வீற்றிருப்பதால் மாவடி யான். மாமூலன் முதலிய பெயர்களைப் பெற்றார். காஞ்சிபுரத்தில் பெருமான் உமாதேவியாரின் பூசனையை ஏற்று மாமரத்தடியில் மணல் லிங்கத்திலிருந்து தோன்றினர். பின்பு அவளைத் திருமணம் செய்து கொண்டார். அவரை ஏகாம்பரன் (ஒற்றை மாமரத் தடியில் இருப்பவன்) என்று அழைக்கின்றனர்.

பாடலி - பாதிரியப்பன் (பாடலீசர்)

பாதிரி மரம் அழகிய பொன்வண்ண மஞ்சள் நிறப் பூக்களை உடைய மரமாகும். பாதிரி மரத்தின் கீழ் வீற்றி ருப்பதால் பெருமான் பாதிரியப்பன் என்று அழைக்கப் படுகிறார்.

திருப்பாதிரிப்புலியூரில் பெருமான் பாதிரியப்பராக வீற்றிருக்கின்றார். பாதிரியை வடமொழியில் பாடலீ

★ விருட்ச தீபம் ★

ஆலயங்களில் பெரிய மரத்தின் வடிவில் செய்யப்பட்ட தீபங்களைக் காண்கிறோம். மரத்திலிருப்பது போலவே இலைகள், கிளைகள், பழங்கள், பூக்கள் முதலியன அமைக்கப்பட்டுள்ளன. கிளைகளில் பறவைகள், பாம்புகள், அணில் முதலிய உருவங்களும் அமைக்கப்பட்டுள்ளன. கிளைகளிலிருந்து விளக்குகள் தொங்க விடப்பட்டு அதில் தீபங்கள் ஏற்றப்படுகின்றன. சிதம்பரம் சபாநாயகர் ஆலயத்திலும், அண்ணாமலையார் ஆலயத்திலும் பல விருட்ச தீபங்கள் உள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்று அழைப்பர். பாதிரியப்பர் என்பதே பாடலீசுவரர் என்று ஆயிற்று.

முக்களாலிங்கம்

"களா" மலைவளர் பெருஞ்செடி வகைத் தாவரம். மிகச் சிறிய கொத்தான கனிகளைத் தருவது. பாவநாசம் தலத்தில் மூன்று களாச் செடிகள் தழைத்து வளர்ந்து தலமரமாக உள்ளன. இவற்றை முக்களா என்பர். இதனடியில் வீற்றிருப்பதால் பெருமான் முக்களா லிங்கம் என்று அழைக்கப்படுகிறார்.

ஒரு சமயம் நான்கு வேதங்களும் பெருமானுக்கு நிழல்பரப்பி வழிபட நினைத்தன. அதர்வணவேதம் ஆகாச ரூபத்துடன் அங்கு வழிபட்டது. மற்ற மூன்று வேதங்களும் மூன்று களா மரங்களாகி அங்கு சுயம்பு லிங்கமாக விளங்கிய பாவநாசப் பெருமானுக்கு நிழல் பரப்பின.

அவை தன்னிடம் பூக்கும் மலர்களை அர்ச்சனையாகவும், அதில் சுரந்து வழியும் தேனை அபிஷேகமாவும், கனிகளை நிவேதனமாகவும் செய்து பூசித்தன. வேதங்கள் இன்றளவும் தலமரங்களாக நின்று நிழல் பரப்புகின்றன. அதனடியில் தல வரலாற்றை விளக்கும் வகையில் சிவலிங்கம், அதனைப் பூசிப்பவர்கள் கல் திருமேனிகளாக நிலைபெற்றுள்ளனர். தலபுராணம் "மறைமூன்று முக்களா வாம் வடிவம் தாங்கி" என்றும், மதுரமான தேன் எனும் மஞ்சனமாட்டித், திருமுடியில் அரும்போது சிறப்புடன் சாத்தி, போனகம் பைங்கனியாக..... புகழ்ந்து பூசை செய்தன" என்றும் குறிக்கிறது.

கள்ளிக்காடர் என்ற கள்ளியப்பர்

பாலுள்ள பாலைவனத் தாவரம் கள்ளி. இதன் பால் விஷத் தன்மை கொண்டது. நாற்பட்டைவடிவுடன் கொத்தான முட்களை கொண்டது. கள்ளியின் பாலைச் சித்தர்கள் சித்தமருத்துவ முறையில் பதப்படுத்தி அருந்துகின்றனர். கள்ளி அடர்ந்து வளர்வது கள்ளிச் செடிகளை வேலிக்காக நடுவர். பெருமான் இக்காட்டில் ஆடுவதைத் திருஞானசம்பந்தர் கள்ளி முதுகாட்டில் ஆடி கண்டாய்" என்று தேவாரத்தில் குறிக்கின்றார்.

கள்ளிக்காட்டில் சுவாமி எழுந்தருளியுள்ள தலம் "திருக்கள்ளில்" ஆகும். கள்ளில் தலத்தில் (திருக் கண்டலம்) வீற்றிருக்கும் பெருமானின் பெயர் சிவானந் தேஸ்வரர் அம்பிகையின் பெயர் ஆனந்தவல்லி கடுவெளி எனும் தலத்தில் சதுரக் கள்ளியும் வேதாரண்யத்தை அடுத்த கள்ளிமேட்டில், திருகுக்கள்ளி, கொடிக்கள்ளி ஆகியவையும், திருத்துறைப்பூண்டியில் பூக்கள்ளியும் தலமரங்களாக உள்ளனவென்று உ.வே.சா. தமது நூலில் குறித்துள்ளார்.

கள்ளிக்கு வஜ்ரம் என்பதும் பெயர். கள்ளிக்காட்டை வஜ்ரவனம் என்றழைக்கின்றனர். இந்திரனின் வஜ்ராயுதம் கள்ளிச் செடியாக வடிவம் கொண்டு சிவபூசை செய்த தென்றும் அதன்கீழ் பெருமான் மகிழ்வுடன் வீற்றிருக்கின்றார் என்றும் கூறுவர். திருப்புனவாசலில் கள்ளி தலமரமாக உள்ளது. தலபுராணம் அதனை வஜ்ர வனம் என்று குறிக்கிறது.

காரைக்காடர்

இது பெரிய முட்செடித் தாவரம். உயரமாக வளர்வது உறுதியான முட்களைக் கொண்டது. காஞ்சிபுரத்தின் அருகில் பெரிய காரைக்காடு இருந்தது. அது காஞ்சிக்கு செல்லும் வழியாக இருந்ததால் கச்சிநெறிக் காரைக்காடு எனப்பட்டது. இந்த காரைக்காட்டில் இந்திரன் தவம் செய்தபோது பெருமான் சுயம்புலிங்கமாக அவன் முன்னே தோன்றி அவனுக்கு அருள்புரிந்தார். இந்தச் சிவபெருமான் சத்யவிரத நாதர் என்றழைக்கப்படுகிறார். இவர் பெயரால் காஞ்சிபுரம் சத்திய விரத க்ஷேத்திரம் என்றழைக்கப்படுகிறது. இதுவே ஆதியில் தோன்றிய தலமாகும். காரைக்கால், காரைக்குடி முதலியன யாவும் காரைச் செடியின் பெயரால் உண்டான ஊர்களேயாகும்.

பாலையப்பர்

தமிழரின் ஐவகை நிலங்களில் பாலை ஐந்தாவதாகும். இதனை மழை மறந்த பூமி என்பர். கொடிய வெப்பத்தால் தகிக்கும் இடம். கள்ளி, பாலை முதலிய மரங்கள் இதற்கு உரியதாகும். இதில் வளரும் ஒருவகை மரம் பாலையாகும். பாலைவனத்தில் பெருமான் உவந்து ஆடுகின்றார்.

பாலையில் பலவகை இருந்தாலும் எழிலைப்பாலை எனும் மரமே தெய்வீக மரமாகப் போற்றப்படுகிறது. இந்த மரத்திலிருந்து கிளையை வெட்டிவந்து நட்டபிறகே விழாவைத் தொடங்கும் வழக்கம் கேரளாவில் உள்ளது.

திருப்பாலைப் பந்தல், திருக்கழிப்பாலை, திருப்பாலைவனம் முதலிய தலங்கள் பாலையின் பெயரால் அமைந்த தலங்களாகும். திருப்பாலைப் பந்தலில் பெருமான் பாலைவனநாதராக எழுந்தருளியுள்ளார். இது திருக்கோவலூருக்கு அருகிலுள்ளது. தொண்டை நாட்டுத் திருத்தலம் திருப்பாலைவனம். இறைவன் பாலையப்பர். திருப்பாற்றுறை (திருப்பாலைத்துறை) யில் பெருமான் பாலைவனேசுவரர் என்னும் பெயரில் தவள வெண்ணகையாளுடன் வீற்றிருக்கின்றார்.

★ சிவாலயங்களில் மூலவராக விளங்கும் சிவலிங்கங்களுக்கு மரத்தினுடைய பெயர்கள் அமைந்திருப்பதைப் போல உலாத் திருமேனிகளாக விளங்கும் சோமாஸ்கந்த மூர்த்திக்கும் மரத்தின் பெயரால் திருநாமம் வழங்கப்படுகிறது. திருக்கழுக்குன்றத்து உற்சவருக்கு கதலி வசந்தர் என்பது பெயராகும். திருப்பைஞ்ஞீலி சோமாஸ்கந்தருக்கு ஆரணியவிடங்கர் எனும் பெயர் வழங்குகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வனப் பெயர்கள் கொண்ட இறைவன்

வனங்கள் பூமித் தாயின் அணிகலன். மழைகளை உருவாக்கும் தாய். உலக மக்கள் வாழ்வதற்கும், வளர்வதற்கும் தேவையான உணவுப் பொருட்களையும், மருந்துப் பொருட்களையும் அளித்துக் காக்கும் அட்சய பாத்திரம். ஆதலால் வேதங்கள் வனங்களைப் போற்றுகின்றன. ஒவ்வொரு வனத்திற்கும் உரிய காவல் தெய்வங்களை இறைவன் படைத்துள்ளான். அவர்கள் வனபாலர்கள், வன தேவதைகள் என்று அழைக்கப்படுகின்றனர்.

இறைவன் தானே வனங்களில் விரும்பி உறைகின்றான். வனத்தின் மத்தியிலுள்ள மரத்தின் கீழ் அமைந்த புற்றில் அவன் சுயம்புலிங்கமாகத் தோன்றி அருள் பாலித்ததைத் புராணங்கள் கூறுகின்றன. அத்தகைய லிங்கங்கள் அவை தோன்றிய வனங்களின் பெயராலேயே அழைக்கப்பட்டன. இவ்வகையில் சிவபெருமான் வில்வ வனேசர், பாரிஜாதவனேசர், பலாசவனேசர், மந்தார வனேசுவரர், எனப் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறார்.

மரஞ்செடி, கொடிகளின் அடர்த்தியான கூட்டமைப்பே வனங்கள் என்றாலும் அவற்றின் பரப்பு, அடர்த்தி, முதலிய தன்மைக்கேற்ப அவற்றிற்கு ஆரண்யம், காடு, அடவி, முதலான பெயர்கள் வழங்குகின்றன. இப் பெயர்களாலும் சிவபெருமான் அழைக்கப்படுகிறார்.

இவை அனைத்தையும் நாம் அறிந்து கொள்ள இயலாது என்பதால் சில தலங்களைப் பற்றிச் சிந்தித்து மகிழலாம்.

திருக்களர் தலம் முன்னாளில் பாரிஜாத வனமாக இருந்தது அதையொட்டி அங்கு எழுந்தருளியுள்ள சிவ பெருமான் பாரிஜாதவனேசுவரர் என்று அழைக்கப்படுகிறார். பவளமல்லிகை இதன் தலமரமாக உள்ளது.

திருநள்ளாற்றில் பெருமான் ஆதியில் தருப்பை காட்டில் எழுந்தருளியிருந்தார். அதனால் தர்ப்பாராண்யேசுவரர் என்று அழைக்கப்படுகிறார்.

மாங்காடு எனும் தலங்கள் வடமொழியில் ஆம்ர வனங்கள் என்று அழைக்கப்படுகின்றன. மாமரத்தின் அடியில் எழுந்தருளும் பிரானை ஆம்ரனேசுவரர் என்று அழைக்கின்றனர். மயிலாடுதுறையில் மாமரத்தடியில் அம்பிகை சிவபூஜை செய்தாள். அதையொட்டிப் பெருமானை ஆம்ரவனேசுவரர் என்று அழைக்கின்றனர்.

பாடல் பெற்ற திருத்தலங்களான அம்பர், திருப்புறம்பயம், மயிலாப்பூர், முதலிய தலங்கள் புன்னைவனம்



★ முல்லைவனநாதர் – திருக்கருகாவூர்

என்று புராணங்களில் குறிக்கப்பட்டுள்ளன. அம்பர்பெருங்கோயிலில் புன்னை மரத்தடியில் பிரமன் வழிபட்ட சிவலிங்கம் புன்னை வனநாதர் எனும் பெயரில் உள்ளார்.

பூக்களைத் தரும் மரஞ், செடி, கொடிகளைக் கொண்ட வனப் பகுதிகள் புஷ்பவனம் என்று அழைக்கப்பட்டன. மக்கள் பூக்களின் மேலிருந்த ஈடுபாட்டில் "புஷ்ப வனம்" என்ற பெயரைச் சூட்டிக் கொண்டனர், திருப்பூவணம் திருப்பெண்ணாகடம், முதலிய தலங்கள் புஷ்ப வனம் என்று புராணங்களில் போற்றப்படுகின்றன. இதையொட்டிப் பெருமான் புஷ்பவன நாதர் என்று அழைக்கப்படுகிறார்.

விளத்தொட்டி, திருத்தருப்பூண்டி, திருக்கடவூர், வில்வாரண்யம், திருவைகாவூர் முதலிய தலங்களில் பெருமான் வில்வ வனநாதராக எழுந்தருளியுள்ளார். திருவைகாவூரில் சுவாமி வில்வநாதர் என்றே அழைக்கப்படுகிறார்.

கூவிளம் என்று சொல்லும் வில்வத்தை குறிக்கிறது. தேவாரத்துள் வில்வம், கூவிளம் என்ற பெயராலேயே குறிக்கப்பட்டுள்ளது. கொள்ளம் பூதூர் என்ற தலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

★ ஜம்புகேசுவரர் – திருஆனைக்கா

ஆதியில் வில்வ வனமாக இருந்தது. கூவிளம் பூதூர் என்ற சொல்லே கொள்ளம்பூதூர் எனத் திரிந்தது. ஆதியில் திருக்கடவூரில் இருந்த பிரானின் ஆலயம் பிராகாரத்தில் வில்வ வனநாதர் எனும் பெயரில் தனிச் சந்நிதியாக உள்ளது.

இலுப்பைப்பட்டு என வழங்கும் பாடல் பெற்ற திருத் தலமான பழமண்ணிப் படிக்கரை புராணங்களில் மதூக வனம் என்றழைக்கப்படுகிறது. மதூகம் என்ற வட மொழிச் சொல் இலுப்பையைக் குறிக்கிறது. இங்குள்ள பெருமான் மதூகவனேசுவரர் என்று அழைக்கப்படுகிறார்.

எருக்கத்தம்புலியூரில் பெருமான் வெள்ளெருக்கு வனத்தில் வீற்றிருப்பதால் சுவேதார்க்க வனேசுவரர் என்று அழைக்கப்படுகிறார்.

இது போன்றே கொன்றை வன நாதர், சுவேத வனப் பெருமாள், வேதவனநாதர், வன்னிவனநாதர் தில்லை வனநாதர் முதலிய வனப் பெயர்களில் இறைவன் பல தலங்களில் எழுந்தருளியுள்ளார்.

வனங்களுக்கு "காடு" என்ற பெயரும்வழங்கிறது. அப் பரடிகள் காடு என்ற தலங்களை வரிசைப்படுத்திப் பாடி யுள்ளார். ஊர்தொகையில்,

மலையார் மகளோடு மாதேவன் சேரும்
மறைக்காடு வண்பொழில் சூழ் தலைச்சங்காடு
தலையாலங்காடு தடங்கடல் சூழ்ந்த
சாய்க்காடு தள்ளு புனல் கொள்ளிக்காடு
பலர்பாடும் பழையனூர் ஆலங்காடு
பனங்காடு பாவையர்கள் பாவம் நீக்க
விலையாளும் வளை திளைக்கக் குடையும் பொய்கை
வெண்காடும் அடைய வினைவேறாமன்றே

என்று அருளிச் செய்துள்ளார். காடுகளை இருப் பிடமாகக் கொண்டிருப்பதால் இறைவன் "காடன்" என்ற அழைக்கப்படுகின்றான். ஆலங்காடன், மறைக்காடன், வெண்காடன் என்ற பெயர்களைத் திருமுறைகள் வழங்கு கின்றன. இப்பெயர்களை மக்கள் சூட்டிக் கொள்கின்றனர்.

பெருமான் ஆலங்காட்டில் மகிழ்ந்து ஆடுவதால் "ஆலங்காடன்" என்று பெயர் பூண்டுள்ளான் திருவாலங் காட்டுப் பெருமானை ஆலங்காடன் என்று அழைக் கின்றனர். வடமொழியில் இது வடவாரண்யேசுவரர் என வழங்குகிறது. மயிலாடுதுறை கும்பகோணம் சாலையில் தென்திருவாலங்காடு என்ற தலம் அமைந்துள்ளது. இங்கும் பெருமான் வடவாரண்யேசுவரர் என்று அழைக்கப்படுகிறார்

வேதங்கள் மரங்களாகி மண்மேல் நின்று போற்றிய தலமே வேதவனம் இதனை திருமறைக்காடு என்றும் சுவாமியை மறைக்காடர் என்றும் அழைக்கின்றனர். இப்பகுதியில் மறைக்காடன் என்ற பெயரைப் பலர் சூடியுள்ளனர்.

ஆரண்யம் என்ற சொல்லும் வனத்தைக் குறிக்கிறது. இதனால் மேற்குறித்த வேதவனம், வேதாரண்யம் என்றும் அழைக்கப்படுகிறது பெருமான் வேதாரண்யேசுவரர் என்றழைக்கப்படுகிறார். (கீழைத்) திருக்காட்டுப்பள்ளி யிலுள்ள இறைவனுக்கு ஆரணிய சுந்தரேசுவரர் என்ற பெயர் வழங்குகிறது.

இதைப் போன்றே திருவெண்காடு, சுவேதாரண்யம், என்று அழைக்கப்படுகிறது. இப்பெயர்களால் வெண்கா டர், சுவேதவனேசுவரர், சுவேதாரண்யர் என்ற பெயர்கள் பெருமானுக்கு வழங்குகின்றன.

கிரிகுசாம்பிகையான கௌரி தேவி திருநாகே சுவரத்தில் பூசித்துப் பேறுபெற்றாள். ஆதியில் அவ் விடத்தில் ஷெண்பக மரங்கள் மிகுதியாக இருந்ததால் ஷெண்பக வனம் எனப்பட்டது. பின்னர் அம்பிகை அங்கு பூசித்ததால் அது அவள் பெயரால் "கிரிகன்னிகைவனம்" என்று சிறப்பிக்கப்படுகிறது.

இது போன்று கஜராஜனான ஐராவதம் பூசித்ததலம் கஜாரண்யம் என்றும் மான்கள் பூசித்த வனம் மான்காடு எனவும்; வனங்கள் பலவாறு அழைக்கப்படுகின்றன. இவற்றில் வீற்றிருக்கும் பெருமானும் கிரிகன்னி வனேசர், கஜாரண்யேசுவரர், மிருகவனேசுவரர் என்று அழைக்கப் படுகிறார்.

திருவானைக்காவல் யானை பூசித்துப் பேறுபெற்ற தலமாகும். புராணத்தில் யானையின் பல்வேறு பெயர் களான கஜம், தந்தி, இபம் எனும் பெயர்களால் இத்தலம் கஜாரண்யம், தந்திவனம், இபவனம் என்று குறிக்கப் பட்டுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வனப்பெயரில் அமைந்த தலபுராணங்கள்

ஆதியில் வனங்களுக்கிடையில் இருந்த மரங்களின் நிழலில் சிவபெருமான் வீற்றிருந்தார். பின்னாளில் வனங்கள் அழிக்கப்பட்டு நாடு நகரங்களாயின. அங்கே இறைவனுக்கு நிழல் அளித்து வந்த மரத்தை மட்டும் அழிக்காமல் தெய்வத்திற்கு இணையாகப் போற்றித் தலமரம் என்ற பெயரில் கொண்டாடி மகிழ்ந்தனர்.

இப்படித் தோன்றிய நகரங்களுக்கு மக்களும் மன்னர்களும் தமது விருப்பத்திற்கேற்ப புதிய பெயர்களைச் சூட்டி மகிழ்ந்தனர். ஆனால் சமய வரலாற்றில் அங்கிருந்த பழைய வனங்களின் பெயராலேயே புராணங்கள் பாடப்பட்டன. இவற்றில் அங்கிருந்த வனத்தின் பெருமையும் அங்கு வழிபட்டுப் பேறு பெற்றவர்கள் சிறப்புகளும், அதில் அமைந்துள்ள தீர்த்தங்களின் மகிமைகளும் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன.

மதுரையம்பதி ஆதியில் கடம்ப வனமாக இருந்தது. மதுரையின் பெருமைகளையும் இறைவனின் அருட்திறத்தையும் விளக்க எழுந்த நூலான மதுரைப் புராணம் "கடம்பவனபுராணம்" என்ற பெயருடன் திகழ்கிறது. வீமநாத பண்டிதர் என்பவர் இயற்றிய இந்நூல் 11 அத்தியாயங்களைக் கொண்டது. மதுரைக்கு கன்னி வனம் என்பதும் பெயராகும். திருப்பாதிரிப் புலியூருக்கு இப்பெயரால் கன்னிவன புராணம் என்ற நூல் இருந்ததை மட்டும் அறிய முடிகிறது.

வில்லியனூர், வில்வாரண்யம் முதலிய தலங்கள் ஆதியில் வில்வவனமாக இருந்தன. இவற்றிற்கு இயற்றப்பட்ட புராணங்கள் வில்வாரண்ய மகாத்மியம், வில்வ வனப் புராணம் எனப் பலவாறு அழைக்கப்படுகின்றன.

பாடல் பெற்ற திருத்தலமான திருஉசாத்தானம் இந்நாளில் திருக்கோயிலூர் என்று அழைக்கப்படுகிறது. இங்குள்ள மந்திரபுரீஸ்வரர் ஆலயமும் அதைச் சுற்றியிருந்த இடமும் முன்னாளில் மா மரங்கள் அடர்ந்து காடாக இருந்தது. இதன் காரணமாக இவ்வூரின் பெருமைகளை விளக்கும் புராணம் "சூதவன புராணம்" என்றழைக்கப்படுகிறது. வடமொழியில் மாமரத்தை சூதவிருட்சம் என்பர்.

யானையால் பூசிக்கப்பட்ட திரு ஆனைக்காவின் பெருமைகளைக் கூறும் நூல் "தந்தி வனபுராணம்" என்று அழைக்கப்படுகிறது. தந்தி என்பது யானையின் பெயராகும்.

மருதமரத்தைத் தலமரமாகக் கொண்ட திருவிடைமருதூரின் பெருமைகளைப் பேசும் நூல் மருதவன புராணம் ஆகும்.

திருவீழிமிழலைக்கு வடமொழியில் உள்ள புராணம் "தேஜினீ வன மகாத்மியம்" என்பதாகும்.

களப்பாள் என்னும் தலத்திலுள்ள சுவாமி மீது பின்னத்தூர் நாராயணசுவாமி ஐயரால் பாடப்பட்டுள்ள புராணம் "தேவதாரு வனத் தல புராணம்" என்று அழைக்கப்படுகிறது. இதன் அடியொற்றி தேவதாரு வன மகத்துவம் (வசனம்) எனும் நூல் வெளியாகியுள்ளது.

திருநெல்வேலியில் கோயில் கொண்டிருக்கும் பெருமான் நெல்லையப்பர். இத்தலத்தின் பெருமைகளைப் பேசும் புராணம் வேணுவன புராணமாகும். இதில் இறைவன் வேண்ட வளர்ந்த மகாலிங்கம், வேணுவன நாதர் வேணுவனலிங்கம் எனப் பலவாறு அழைக்கப்படுகிறார். இவர் இங்கு தோன்றிய வரலாற்றை விளக்கும் நூல் வேணுவன லிங்க உற்பத்தி சருக்கமாகும். வேணு என்பது மூங்கிலின் பெயராகும்.

இந்நாளில் சாக்கோட்டை என்றழைக்கப்படும் திருத்தலம் கலயநல்லூர் ஆகும். இதனைப் புராணம் வீரைவனம் என்றழைக்கிறது. இதன் பெருமைகளை விளக்கும் நூல் வீரவன புராணமாகும்.

அனேக தலங்களின் புராணங்கள் வனத்தின் பெயரால் அமைந்திருப்பது மக்கள் வனங்களின்மீது கொண்டிருக்கும் பக்தியின் அடையாளமாகும்.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒன்றுக்கு மேற்பட்ட தலமரங்கள்

ஆதியில் எந்தமரத்தின் கீழ் சிவலிங்கம் எழுந்தருளியிருந்ததோ அம்மரமே பெரும்பாலும் அக் கோயிலின் தலமரமாகக் கொள்ளப்படும். ஆயிரக் கணக்கான தலங்களில் ஏதாவது ஒருவகை மரமே தல மரமாக இருந்து வருகிறது.

சில தலங்களில் ஒன்றுக்கும் மேற்பட்ட தலமரங்கள் இருப்பதையும் காண்கிறோம். இன்னம்பர் எழுத்தறியும் நாதர் ஆலயத்தில் பலாவும். ஷெண்பகமும், திருஒற்றியூரில் அத்தியும், மகிழமரமும் தல மரங்களாக இருக்கின்றன. திருஒற்றியூரில் பெருமான் அத்திமரக் காட்டில் தியாகராஜ நடனத்தை மயிலானந்தர், அகத்தியர், நந்திதேவர் ஆகியோருக்குக் காட்டியதால் இத்தலம் அத்திசபை (ஔதூம்பரசபை) என்று அழைக்கப்படுகிறது. பின்னாளில் சுந்தரர் வேண்டிக் கொண்டபடி மகிழ மரத்தடியில் தங்கியதால் மகிழமரமும் தல மரமாகும் பேறு பெற்றது.

வேதாரண்யத்தின் ஆதித் தலமரம் புன்னை. பின்னாளில் துருவாச முனிவர் வன்னி மரத்தடியில் தவம் செய்தபோது அவருக்குச் சிவபெருமானும் உமாதேவியும் திருமணக் கோலம் காட்டியதையொட்டி வன்னியும் தல மரமானது. இத்தலத்தைப் புன்னையங்கானல் என்று தேவாரம் போற்றுகிறது.

திருமறைக்காட்டில் (வேதாரண்யம்) பன்னிரெண்டு தலமரங்கள் போற்றப்பட்டதாக திரு. உ.வே. சாமி நாதையர் தனது நூலில் குறித்துள்ளார். நான்கு வேதங்களும், அதன் அங்கங்கள் ஆறும் ஆக பத்தும் பலவகையான செடிகொடி, மர உருவங்களை எடுத்துக் கொண்டு அத்தலத்தில் வசித்து வந்தன என்று நம்பப் படுகிறது. அவற்றுடன் இப்போதுள்ள வன்னி மரமும், புன்னை மரமும் சேர்ந்து பன்னிரெண்டு தலமரங்கள் என்று கூறப்படுகிறது.

திருக்கடவூரில் ஆதியில் வில்வவனத்தில் பிரமன் பூசித்துப்பேறு பெற்றான். அதனால் வில்வமே திருக் கடவூரின் முதன்மைத் தலமரமாகும். பின்னாளில் மார்க் கண்டேயர் காசியிலிருந்து கொண்டுவந்து நட்ட பிஞ்சிலம் எனும் மல்லிகை வகைக் கொடியும் தல மரமாகக் கொள்ளப்பட்டது.

திருவெண்காட்டில் மூன்று மூர்த்திகள், மூன்று திருக்குளங்கள் இருப்பதைப் போலவே மூன்று தலமரங்களும் உள்ளன. இங்கு ஆலமரம், கொன்றை, வில்வம், ஆகிய மூன்றும் தலமரங்களாக உள்ளன. ஆக்கூரிலும் மூன்று தல மரங்கள் உள்ளன.

புள்ளிருக்குவேளூர் என்று திருமுறைகளில் போற்றப் படும் வைத்தீசுவரன் கோயிலில், யுகத்திற்கு ஒன்றுவீதம் நான்கு யுகங்களுக்கும் நான்கு மரங்கள் தலமரங்களாக இருந்தன. கிருதயுகத்தில் கடம்பமரமும் திரேயுகத்தில் வில்வமரமும், துவாபர யுகத்தில் வகுளமரமும் கலியுகத்தில் வேப்பமரமும், தலமரமாக விளங்குகின்றன. தல புராணத்தில் ஆதியிலிருந்த கடம்ப மரமே ஒவ்வொரு யுகத்திற்கும் ஏற்ப உருவம் மாறி இப்போது வேப்பமரமாக இருக்கிறதென்று கூறப்பட்டுள்ளது. இந்த இடத்திற்கு வேம்படிமால் என்பது பெயராகும்.

பாண்டிய நாட்டுப் பழம்பதிகளில் ஒன்றான திருப்புனவாசலில் நான்கு தலமரங்கள் உள்ளன. சதுரக்கள்ளி, குருந்து, மகிழம், புன்னை ஆகிய நான்கும் பிராகாரத்தில் உள்ளன.

மகாராஷ்டிராவிலுள்ள பஞ்சவடி எனும் தலத்தில் ஐந்து ஆலமரங்கள் தலமரங்களாக உள்ளன.

ஸ்ரீசைலத்தில் அர்ச்சுன (மருத) மரத்தோடு மலை மல்லி, கொடிமல்லி, செடிமல்லி, அடுக்குமல்லி, மரமல்லி என்ற ஐவகை மல்லிகையும் தலமரமாக உள்ளன. இவை ஆறும் தலமரங்களாகப் போற்றப்படுகின்றன.

திருநீலக்குடி மனோக்கியநாத சுவாமியைப் புராணம் பஞ்சவில்வவேனசர் என்று அழைக்கிறது. இங்கு வன்னி கூவிளம், நொச்சி, விளா, மாவிலங்கை ஆகிய ஐந்து தலமரங்கள் இருந்தன என்பர். இப்பொழுது பலாமரம் ஆறாவது தலமரமாக உள்ளது.

வனபோஜன உற்சவம்

இறைவன் வனத்தில் உறைவதில் மகிழ்கிறான். ஆதியில் அவன் வனங்களுக்கு இடையே மரங்களின் அடியில் சுயம்புவாகத் தோன்றி அருள்பாலித்ததைப் புராணங்கள் தெரிவிக்கின்றன. இதனால் ஆண்டுக்கொருமுறை இறைவனை வனத்திடையே எழுந்தருளிவைத்து விழா கொண்டாடும் மரபு தோன்றியது. இவ் விழாவில் பெரிய அளவில் பிரசாதங்கள் செய்து இறைவனுக்குப் படைத்து அன்பர்களுக்கு வழங்குகின்றனர். இதையொட்டி இது வனபோஜன உற்சவம் என்றும் அழைக்கப்படுகிறது. பலதலங்களில் இவ்விழா இன்றளவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இதற்காக அமைக்கப்பட்ட மண்டபங்கள் வனபோஜன மண்டபங்கள் என்றழைக்கப்படுகின்றன.

முன்நாளில் மக்கள் ஆண்டின் சிலநாட்களில் தாம் வசிக்குமிடத்திற்கு (நகரம் அல்லது ஊருக்கு) அருகேயுள்ள வனப் பகுதிகளுக்குச் சென்று கூட்டமாக உண்டு மகிழ்ந்து ஓய்வெடுப்பது வழக்கம். இதனை உண்டாட்டு என்பர். இது கொங்குமாவட்டத்தில் சில இடங்களில் பூ நோன்பு என்ற பெயரில் இப்பொழுதும் வழக்கத்தில் உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவமூர்த்தங்களோடு இணைந்துள்ள மரங்கள்

சிவபெருமானின் மகேசுவர வடிவங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மரத்தோடு இணைத்துப் பேசப்பட்டுள்ளன எடுத்துக்காட்டாக. தட்சணாமூர்த்தி கல்லால மரத்தின் கீழும். சோமாஸ்கந்தர் மாமரத்தின் கீழும் நடராசர் ஆலமரத்தின் கீழும் உள்ளனர். இத்தகைய செய்திகள் சிலவற்றைக் கீழே காணலாம்.

சிவபெருமான் ஆனந்த நடமாடும் இடங்களெல்லாம் ஆலங்காடுகளாகவே உள்ளன. எடுத்துக்காட்டாக எல்லையில்லா ஆனந்த நடனம் புரியும் இடங்களான திருவாலங்காடு, தென்திருவாலங்காடு, சிதம்பரம், நர்த்தனவல்லபேசுவரராக விளங்கும் தலையாலங்காடு ஆகிய யாவும் ஆலங்காடுகளேயாகும்.

சிதம்பரம் தில்லைவனம் என்று புராணத்தில் குறிக் கப்பட்டிருந்தாலும் தில்லைக் காட்டின் நடுவேயிருந்த பெரிய ஆலமரத்தின் கீழேயே பதஞ்சலியும் வியாக்ர பாதரும் மற்றுமுள்ளோரும் காணச் சிவபெருமான் நடன மாடியதாகச் சிதம்பர புராணம் கூறுகிறது.

சிவபெருமான் யோக தட்சிணா மூர்த்தியாக வீற்றி ருந்து நான்மறை ஆறங்களையும் ஆகமங்களையும் உபதேசம் செய்யும் வேளையில் கல்லால மரத்தின் கீழே வீற்றிருந்து உபதேசிக்கிறான். இதையொட்டி தட்சிணா மூர்த்தியின் திருவுருவங்களை அமைக்கும் போது பின்னணியில் கல்லால மரத்தையும் சேர்ந்தே அமைக் கின்றனர். இம்மரத்தின் பொந்தில் ஒரு ஆந்தையையும் அமைத்துள்ளனர்.

சந்திரசேகர மூர்த்தியோடு தொடர்பு கொண்டது மல்லிகைக் கொடி, மாதவிக் கொடிப் பந்தல்களின் கீழ் சந்திரசேகர மூர்த்தியை வழிபட்டால் மிகுந்த சுகம் உண்டாகும் என்று கூறப்படுகிறது. திருப்பாசூரில் சந்திரன் மல்லிகை தீர்த்தத்தை அமைத்ததுடன் மல்லி கைக் கொடியின் கீழ்ப் பெருமானை அமைத்து வழி பட்டான் என்று தலபுராணம் கூறுகிறது. சந்திரன் வழி பட்டுப் பேறு பெற்றதால் இங்குள்ள பெருமான் சந்திர சேகரர் என்று அழைக்கப்படுகிறார்.

பசுபதியாக இறைவன் கோலம் கொள்ளும் போது அரசமரத்தின் கீழ் வீற்றிருக்கிறார். அம்பிகை பசுவடிவில் வழிபட்ட திருவாடுதுறை கோமுத்தீசுவரர் ஆலயத்தில் படர் அரசமரம் தலமரமாக உள்ளது. இதையொட்டி இத்தலம் அரசவனம் என்று புகழப்படுகிறது. பசுக்களின் வருத்தம் தீர மூலன் உடலில் புகுந்தெழுந்த திரு மூலநாயனார் இங்குள்ள அரசமரத்தின் கீழே சிவ யோக நிலையில் வீற்றிருந்து திருமந்திரத்தினை அருளிச் செய்தார்.

சிவபெருமான் வைரவ மூர்த்தியாக வந்து அருளும் வேளையில் ஆத்திமரத்தின் கீழ் அமர்ந்து அன்பர் களுக்கு அருள்பாலிக்கின்றான். மகா வைரவத் தலமான திருச்செங்காட்டங்குடியில் வைரவமூர்த்திக்கு எதிரி



லுள்ள மண்டபத்தில் தொன்மையான ஆத்திமரம் உள்ளது. சித்திரை பரணி, ஐப்பசி பரணி ஆகிய நாட் களில் நடைபெறும் அன்னப்படையல் விழாவின் போது வைரவ மூர்த்தியை இம்மரத்தின் கீழுள்ள மேடையில் அமர்த்தி அபிஷேக அலங்காரம் செய்து வழிபடு கின்றனர்.

தென்னாற்காடு மாவட்டத்தில் சிறுத்தொண்டபக்தர் கதையை அடிப்படையாகக் கொண்டு அன்னக்கொடி உற்சவம் எனப்படும் அன்னப்படையல் விழா நடத்தப் படுகிறது. இவ்விழாவில் சிறுத்தொண்டரிடம் பிள்ளைக் கறி கேட்கவரும் வைரவ மூர்த்தியை எழுந்தருளச் செய்ய ஊர் மன்றத்தில் ஆத்திமரம் வளர்த்திருப்பதைக் காணலாம்.

பிட்சாடன மூர்த்தியைத் தாருகா (தேவதாரு) மரத் தின் கீழும் கௌரி வரப்பிரசாத மூர்த்தியை ஆலமரத் தின் அடியிலும் கஜசம்ஹார மூர்த்தியை அத்திமரத்தடி யிலும் உமாசகிதரை வில்வ மரத்தின் கீழும் அமைத்து வழிபடுகின்றனர்.

வீரபத்திரரோடு தொடர்புடையது வெற்றிலைக் கொடி. உக்ரம் தணிந்தபின் அவர் வெற்றிலைக் கொடிக் காலில் அமர்ந்ததாகக் கூறப்படுகிறது இதையொட்டி அவருக்கு வெற்றிலைப் படல் சார்த்துகின்றனர்.

திரிபுராந்தகரோடு தொடர்புடைய மரம் உருத்திராட் சமாகும். பெருமான் மகாசிவபக்தர்களான முப்புராதி களை அழிக்க வேண்டியுள்ளதே என நினைத்து வருந்தி னார். அவருடைய மூன்று கண்களிலிருந்தும் கண்ணீர்த் துளிகள் வெளிப்பட்டன. அவை பூமியில் விழுந்து மரங்க ளாயின. அவற்றின் விதைகளே உருத்திராட்சங்கள் என்று போற்றப்படுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தல மரங்களும் ஐதீகக் கோயில்களும்



★ முருக்கடி தலவரலாற்று ஆலயம் காஞ்சிபுரம்

ஆதியில் தலமரங்களின் அடியிலேயே சிவலிங்கங்கள் அமைக்கப்பட்டிருந்தன. கோயில்களை விரிவாக்கிக் கட்டும்போதும், கருவறையை விசாலமாக அமைக்கும் போதும் தலமரங்களை இடம்பெயர்க்க வேண்டியதாயிற்று.

சுயம்புலிங்கங்களாக இருந்தால் தலமரத்தைப் பெயர்த்து. அதற்கு வடக்கே நிலைப்படுத்தினர். பிரதிஷ்டா லிங்கங்களாக இருந்தால் லிங்கங்களை இடம் பெயர்த்துத் தல மரங்களுக்குத் தெற்கில் நிலைப்படுத்தினர். இதனால் ஆலயங்களிலுள்ள சிவலிங்கத்திற்கும் தலமரத்திற்கும் பெரிய இடைவெளி உண்டானது.

காலப்போக்கில் தலமரங்களின் முக்கியத்துவம் குறையாமலிருக்க அதன் அடிப்பகுதியில் சுற்றிலும் மேடை அமைக்கப்பட்டது. அதில் நாகர்கள், விநாயகர் ஆகியோர் எழுந்தருளி வைக்கப்பட்டனர். அனேக தலங்களில் தல வரலாற்றை விளக்கும் வகையில் ஐதீகக் கோயில்களும் அமைக்கப்பட்டன.

மயிலாப்பூரில் புன்னை தலவிருட்சமாக உள்ளது. செழித்து வளர்ந்துள்ள புன்னை மரத்தின் அடியில் அத்தல புராணத்திலுள்ள வரலாற்றை விளக்கும் காட்சி இடம்பெற்றுள்ளது. இங்கு முதலில் அம்பிகை மயில் வடிவில் சிவபெருமானைப் பூசிக்கும் காட்சி புடைப்புச் சிற்பமாக அமைத்து வழிபடப்பட்டது. பின்னர் அதற்கு தனியே சிறிய கோயில் கட்டினர். அதனுள் மேலே குறித்த புடைப்புச் சிற்பத்துடன் சிவலிங்கமும் மயில் வடிவிலான அம்பிகையின் வடிவமும் நிலைப்படுத்தப்பட்டன. இவற்றிற்குத் தினசரி வழிபாடுகள் நடத்தப்படுகின்றன.

அம்பர் எனும் தலத்தில், அன்ன வடிவுடன் பிரமன் சிவவழிபாடு செய்து பேறுபெற்றான். இதை நினைவூட்டும் வகையில் தலமரமான புன்னை மரத்தின் கீழ்ச் சிவலிங்கத்திற்குத் தனி ஆலயம் அமைந்துள்ளது. அப்பெருமான் புன்னை வனநாதர் என்று அழைக்கப்படுகிறார்.

காஞ்சிபுரத்தில் அம்பிகையின் வழிபாட்டை ஏற்றுச் சிவபெருமான் தழுவக் குழைந்த நாதரானார். சிவலிங்கத்திலிருந்து வெளிப்பட்டு அவளை மணந்தார். அவர்கள் இங்கிருந்த மாமரத்தின் கீழ் மணம் புரிந்து கொண்டு கந்தனைப் பெற்றனர். இதைக் குறிக்கும் வகையில் பெருமான் தலமரமான மாமரத்தின் கீழ் சோமாஸ்கந்தராக தனி ஆலயத்தில் உமாதேவியார் கந்தனுடன் எழுந்தருளியுள்ளார். இது திருமணம், குழந்தைப்பேறு நல்கும் பிரார்த்தனைத் தலமாக விளங்குகிறது.

ஆமை வடிவம் கொண்ட திருமால் காஞ்சிபுரத்தில் முருக்கமரத்தின் கீழிருந்து தவம்புரிந்தார். சிவபெருமான் அவருக்கு ஜோதிர் லிங்கமாகக் காட்சியளித்தார். திருமால் அவரை வழிபட்டு வரங்களைப் பெற்றார். காஞ்சிபுரம் கச்சபேசுவரர் ஆலயத்தில் இஷ்டசித்தி தீர்த்தத்தின் கரையிலுள்ள முருக்க மரத்தின் கீழ் ஐதீக ஆலயம் அமைந்துள்ளது. ஆலயத்தில் திருமால் சிவலிங்கத்தை நீராட்டி வழிபடும் காட்சி புடைப்புச் சிற்பமாகப் பெரிய அளவில் நிலைப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு தினசரி வழிபாடுகள் நடத்தப்படுகின்றன.

கோவை பேரூரில் ஆலயத்தின் எதிரே பெரிய அரச மரம் உள்ளது. இதன்கீழ் கேதாரீசுவரர் ஆலயம் உள்ளது. கேதாரம் என்பதற்கு வயல்வெளி என்பது பொருள். சுந்தரமூர்த்தி சுவாமிகள் இங்கு வந்தபோது பெருமானும் அம்பிகையும் உழவன் உழத்தியாக வேடம் தாங்கி அருகிலுள்ள வயல் வெளியில் பணி செய்து கொண்டிருந்தனர்.

அந்த இடத்திற்குச் சென்ற சுந்தரர் அவரைப் பாடி பொன் பெற்றார் என்று தல புராணம் கூறுகிறது. இதை நினைவூட்டும் கேதாரீசுவரர் ஆலயத்தில் பெருமான் மண் வெட்டியுடனும்; அம்பிகை நாற்றுக் கட்டுடனும் பெரிய புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளனர்.

இன்னும் அனேக தலங்களில் தல வரலாற்றைக் குறிக்கும் வகையில் அமைந்த ஆலயங்களைத் தலமரத்தின் அடியில் காணலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தலமரங்களும் ஐதீக விழாக்களும்

"ஐதீகம்" என்பதற்கு முன்பு நடந்த நிகழ்ச்சியை, அன்று நடந்தது போலவே இப்போது நடத்திக் காட்டுவது என்பது பொருள். ஆலயங்களில் தல புராணங்களில் உள்ள நிகழ்ச்சிகளை மீண்டும் நடத்திக் காட்டி விழாவாகக் கொண்டாடுகின்றனர். ஆண்டுதோறும் நடைபெறும் இவை ஐதீக விழாக்கள் என்று அழைக்கப்படுகின்றன.

மயிலையில் அம்பிகை மயில் உருவுடன் புன்னை மரத்தடியில் சிவபெருமானைக் குறித்து தவம் செய்தாள். அத்தவத்தினால் மகிழ்ந்த பெருமான் அவளுடைய மயில் வடிவை மாற்றி தெய்வவடிவு அடையச் செய்த, பின்பு யாவரும் காண அவளைத் திருமணம் செய்து கொண்டு அருள்புரிந்தார். இதை விளக்கும் ஐதீக விழா பங்குனி உத்திரப் பெருந்திருவிழாவின் 10ஆம் நாள் மாலையில் நடைபெறுகிறது.

மாலையில் தலமரமான புன்னை மரத்தின் கீழுள்ள ஐதீகக் கோயிலின் முன்மண்டபத்தில் தனி அம்பிகை சர்வ அலங்காரத்துடன் எழுந்தருளி வைக்கப்படுகிறாள். அவளுக்கு முன்பாக திரையிடப்பட்டு, முன்னுள்ள பீடத்தில் வெள்ளியால் ஆன மயிலும் சிவலிங்கமும் வைக்கப் படுகின்றன. தலவரலாற்றை ஓதுவார் எடுத்துரைப்பார். பின்பு சிவாச்சார்யார் அம்பிகை சார்பில் சிவபூசை செய்வார்.

பூசையின் நிறைவில் (சோமாஸ்கந்தர்) கபாலீசுவரர் எழுந்தருள்வார். அம்பிகைக்குக் காட்சி யளிப்பதை இது உணர்த்துகிறது. தீபாராதனைக்குப் பின் அம்பிகையின் முன்னுள்ள திரை விலக்கப்பட்டு மயிலும் லிங்கமும் மூடப்படும். அம்பிகை மயில் வடிவம் நீங்கி தெய்வப் பெண் வடிவு கொண்டதை இது குறிக்கும். அம்பிகை சுவாமியை மும்முறை வலம் வருவாள் இருவருக்கும் ஏக காலத்தில் தீபாராதனை நடைபெறும். பின்பு அலங்கார மண்டபத்தில் இருவரையும் இருத்தி திருமண விழா நடத்தப்படுகிறது.

அச்சிறுபாக்கத்தில் கொன்றையடி சேவை என்று ஐதீக விழா நடைபெறுகிறது. சித்திரைப் பெருந் திருவிழாவின் ஏழாம் நாள் காலையில் தேரோட்டம் நடைபெறும். அன்று மாலையில் சுவாமி தேரிலிருந்து இறங்கிய பின் கோபுர வாசலில் மகாதீபாராதனை நடைபெறும். பின்பு சுவாமியும் அம்பிகையும் தல மரமான கொன்றையடிக்கு எழுந்தருள்கின்றனர்.

அச்சமயம் திரிநேத்ரதாரி என்ற முனிவனுக்கு முப்புரம் எரித்த காட்சியைக் காட்டி அருள்புரியும் விழா கொண்டாடுவர். முன்னாளில் தல வரலாற்றை ஓதுவார் விளக்கிக் கூறும் வழக்கம் இருந்தது. இப்போது அது இல்லை. சுவாமிக்கும் அம்பிகைக்கும் திரிநேத்ரதாரி முனிவனுக்கும் ஏககாலத்தில் தீபாராதனை நடைபெறும். அன்று முதல் கொன்றை பூக்க ஆரம்பிக்கும் என்று கூறுவர். பின்னர் சுவாமியும், அம்பிகையும் அலங்கார மண்டபத்திற்கு எழுந்தருள்வர்.

திருச்செங்காட்டங்குடியில் உத்ராபதியார் ஆலயத்தின் முன்புறம் படர்ந்து செழித்து வளர்ந்துள்ள ஆத்திமரம் உள்ளது. இதற்கு முன்புறம் விசாலமான மண்டபம் உள்ளது. மண்டபத்தில் மரத்தை ஒட்டி பெரிய கல்மேடை அமைக்கப்பட்டுள்ளது. சித்திரை பரணியிலும் ஐப்பசி பரணியிலும்; நடைபெறும் அன்னப்படையல் விழாவின்போது உத்ராபதீசுவரர் இங்கு எழுந்தருள்கின்றார்.

நண்பகலில் இவர் சிறுத்தொண்டர் இல்லத்திற்குப் பிச்சை கேட்கச் செல்லுவார். அங்கு அவரைக் காணாமையால் நான் இங்கிருப்பேன் என்று கூறிவிட்டு வந்து இந்த மரத்தடியில் வீற்றிருப்பார். சிறுத்தொண்டர் வந்து



★ மேலே : மணப்பெண்ணாக கற்பகவல்லி
கீழே : மயில் வடிவில் சிவபூசை செய்தல்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவரை உணவுண்ண அழைப்பார். இரவில் இவர் விருந்துக்குச் செல்வார். இவருக்கு அன்று நடைபெற வேண்டிய அனைத்து பூசைகளும் இம்மரத்தடியிலேயே நடைபெறுகின்றன.

இப்படி தென்னக மெங்கும் அனேக விழாக்கள் தலமரத்தடியில் நடைபெறுகின்றன. தலமரங்களின் அடி புனிதமானது என்பதால் விழாக்கள் அதனடியிலேயே நடைபெற்றுவருகின்றன. இவ்விழாக்களில் தலமரத்தின் முக்கியத்துவம் உணரப்படுவதுடன் அவை பேணிக் காக்கப்பட்டு வணங்கப்படுகின்றன.

திருமணங்களும் - தலமரங்களும்

ஆதிநாளில் திருமணங்கள் ஆற்றங்கரை அல்லது குளக்கரையிலிருந்த மரத்தின் அடியில் நடத்தப்பட்டன. அந்த மரம் திருமணத்திற்குச் சாட்சியாக இருந்தது. அம்மரம் பூத்துக் குலுங்கிப் பழுத்து, செழித்து வளர்வது போல மணமக்கள் வாழ்வும் பல்கிப் பெருகிவளரும்படி வாழ்த்துவர்.

பின்னாளில் வசதிவாய்ப்பு கருதி இல்லங்களிலும் திருமணமண்டபங்களிலும் திருமணங்கள் நடைபெறுகின்றன. எனினும் திருமண மேடையின் ஓரத்தில் பழைமையை நினைவூட்டும் வகையில் அரசாணிக்கால் எனப்படும். மரம் நடப்படுகிறது. அரசங் கிளையும், மாங்கொத்தும் இணைத்துக் கட்டப்பட்டுள்ள பச்சை மூங்கிலே அரசாணிக்கால் என்று அழைக்கப்படுகிறது. திருமணத்திற்கு முன் ஐந்து அல்லது ஏழு பெண்கள் அரசாணிக்காலுக்குப் பால் விட்டு அபிஷேகம் செய்து காப்பு கட்டி வழிபடுகின்றனர்.

நீர்க் கரையில் திருமணம் நடைபெறுவதைக் குறிக்கும் வகையில் திருமண மேடையின் அருகில் நீர்நிரம்பிய புதுப்பானைகள் வைக்கப்படுகின்றன. தெய்வத் திருமணங்களும் மரத்தடியிலேயே நடத்தப்பட்டன. காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் (ஆலயத்தில் காமாட்சியாகிய) ஏலவார் பூங்குழலியின் திருமணம் மாமரத்தடியில் நடைபெற்றது. இதை நினைவூட்டும் வகையில் மாவடிசேவை கொண்டாடப்படுகிறது.

மதுரையில் மீனாட்சியம்பிகை சோமசுந்தரர் திருமணம் கடம்ப மரத்தின் கீழ் நடைபெற்றது. இதை நினைவூட்டும் வகையில் மீனாட்சி கல்யாண சிற்பங்களில் கடம்ப மரத்தின் கீழ்த் திருமால் தாரைவார்த்து சிவபெருமானுக்குத் திருமணம் செய்து கொடுப்பது போல் அமைத்துள்ளனர்.

திருஒற்றியூரில் மகிழமரத்தடியில் பெருமான் உமாதேவியைத் திருமணம் செய்து கொண்டு அன்பர்களுக்குக் காட்சியளித்தார். அதுவே மகிழடி சேவையாக இப்போது கொண்டாடப்படுகிறது. மாசிமாதப் பெருந் திருவிழாவின் எட்டாம் நாளில் ஐதீக நிகழ்ச்சியாகக் கல்யாணசுந்தரர் திருமணக்காட்சி நடத்தப்படுகிறது. பின்னர் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குக் காட்சியளிப்பதும் நடத்தப்படுகிறது.

தெய்வங்களின் திருமணக் காட்சியை விளக்கும் பழைய கால ஓவியங்கள் சிற்பங்கள் அனைத்திலும் பின்னணியில் ஒரு மரம் அமைந்திருப்பதையும் அதில் காப்புக்கயிறும் புத்தாடையும் கட்டியிருப்பதையும் காணலாம். திருமணம் நடைபெறும் இடங்களில் மாவிலைத் தோரணம். வாழைமரங்கள். தென்னம் பாளைகள், பாக்குப் பாளைகள் கட்டப்பட்டு அழகுபடுத்துவது ஆதியில் சோலைகளுக்கிடையே மரங்களின் அடியில் திருமணம் நடைபெற்றதைக் குறிக்கும் குறியீடுகளேயாகும்.

தலமரத்தடியில் இடம்பெற்றுள்ள இறைவன் திருவடிகள்

தெய்வீகத் திருத்தலங்களில் பிறந்து வளர்ந்த அம்பிகையைச் சிவபெருமான் மணக்க வந்த போது தனது திருவடியில் அணிந்திருந்த பாதக்குறடுகளை அவ்வூர்த் தலமரத்தின் கீழ் விட்டுவிட்டுச் சென்றதாகக்கூறுவர்.

எடுத்துக்காட்டாக குத்தாலம் என்றழைக்கப்படும் திருத்துருத்திக்கு அருகிலுள்ள வேள்விக்குடியில் காத்யாயினி எனும் பெயரில் தோன்றி வளர்ந்த அம்பிகையை மணக்க வந்த பெருமான் திருத்துருத்தி ஆலய முற்றத்திலுள்ள உத்தால மரத்தின் கீழ் பாதுகைகளை விட்டுச் சென்றார். அதை நினைவூட்டும் வகையில் அம்மரத்தின் கீழ் கல்லால் அமைந்த சுவாமியின் பாதக்குறடுகளுக்குச் செப்புக் கவசமிட்டுப் பூசித்து வருகின்றனர்.

திருஒற்றியூர் தலத்தில் உமா தேவியை மணக்க வந்த போது பாதக்குறடுகளை மகிழமரத்தின் கீழ் வைத்துவிட்டுச் சென்றதாகக் கூறப்படுகிறது. இதையொட்டி மகிழமரத்தின் கீழ் திருவடிகளை அமைத்து வழிபடுகின்றனர். பின்னாளில் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் சங்கிலி நாச்சியாரும் இம்மரத்தின் அடியில்தான் திருமணம் செய்து கொண்டனர்.

திருவிடைக்கழியில் தெய்வயானைப் பிராட்டியாரை மணக்கவந்த முருகன் தலமரமான குரா மரத்தின் கீழ் நின்றான். அதையொட்டி குராவடிப் பெருமான் என்று அழைக்கப்படுகிறார். திருவண்ணாமலையில் சுவாமியின் பாதங்கள் தலமரமான மகிழ மரத்தடியில் உள்ளன.

திருவெண்காட்டில் அட்சய வடத்தின் கீழ் உருத்திர மூர்த்தியின் பாதங்கள் உள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருமண சாட்சியாக வந்த மரம்

மரங்கள், தன் அடியில் நடைபெறும் திருமணம் முதலிய நிகழ்ச்சிகளுக்குச் சாட்சியாக விளங்குகின்றன. இதை விளக்கும் வகையில் திருவிளையாடற் புராணத்தில் ஒரு வரலாறு கூறப்பட்டுள்ளது.

சோழ நாட்டின் கிழக்குக் கடற்கரை ஓரத்தில் இருந்த நகரத்தில் ஒரு வணிகன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு நெடுநாட்களாக மகப்பேறு இல்லை. பல அறங்களைச் செய்து இறைவழிபாட்டில் திளைத்ததன் பயனாக அவனுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது.

அவன் அவளை நன்கு போற்றி மிகவும் செல்லமாக வளர்த்தான். அப்பெண்ணைத் தன் மருமகனுக்குத் திருமணம் செய்து கொடுக்க விரும்பினான். அவனும் அவன் மனைவியும் எதிர்பாராமல் இறந்து விட்டனர். சுற்றத்தினர் ஈமக்கிரியைகளைச் செய்து முடித்த பின்னர் மதுரையிலிருந்த அப்பெண்ணின் முறை மாமனுக்குக் கடிதம் எழுதி வரவழைத்தனர்.

நேரில் வந்த அவனிடம் இறந்துபோன வணிகனின் சொத்துக்களை அளித்ததுடன், மகளையும் அளித்தனர் மாமனின் விருப்பப்படி அப்பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளுமாறு கூறினர். அவன் ஏற்கனவே திருணம் ஆகி மக்களைப் பெற்றிருந்தான், எனவே அவன் தன் ஊருக்குச் சென்று பெற்றோரின் சம்மதத்தைப் பெற்றபின் திருமணம் செய்து கொள்வதாகக் கூறினான் சில நாட்களுக்குப் பின் சுற்றத்தாரிடம் விடைபெற்றுக் கொண்டு அவளுடன் மதுரையை நோக்கிப் பயணமானான்.

அவர்கள் திருப்புறம்பயம் என்ற ஊருக்கு வந்து இரவு தங்கினர். நடுஜாமத்தில் வணிகனைப் பாம்பு கடிக்க அவன் இறந்து விட்டான். அவனோடு வந்த மாமன் மகள் செய்வதறியாது திகைத்து அழுது அரற்றினாள்.

கோவிலின் அருகில் தங்கியிருந்த திருஞான சம்பந்தப் பெருமானின் செவியில் அவளுடைய அழு குரல் விழுந்தது. செய்தியை அறிந்த சம்பந்தர் அவள் மீது இரக்கம் கொண்டு சிவபெருமானின் திருவருளால் வணிகனை உயிர்ப்பித்தார். அவனிடம் அங்கு அப்போதே அவளை மணந்துக்கொள்ளும்படி கூறினார்.

அவன், ஐயனே உறவினர் சுற்றத்தினர் முதலான எவ்வித சாட்சியுமின்றி எப்படி இவளை மணம் புரிந்து கொள்வது என்றான்.

திருஞானசம்பந்தர் அத்தலத்தில் இருந்த சிவலிங்கம், வன்னிமரம், கிணறு (மடைபள்ளி) ஆகியவற்றைச் சாட்சியாக வைத்துத் தானே அவர்களுடைய திருமணத்தை நடத்திவைத்தார்.

அவர்கள் விடைபெற்றுக் கொண்டு மதுரையை அடைந்து நல்லறம் நடத்தி வந்தனர். அவர்களுக்கு ஓர் மகன் பிறந்தான். அவன் அழகிலும் அறிவிலும் சிறந்து விளங்கினான்.

ஒரு சமயம் மூத்தவள் பிள்ளைகளும் இளையவள் பிள்ளையும் விளையாடிக் கொண்டிருந்தான் அப்போது இளையவள் மகனை மூத்தவளின் பிள்ளைகள் அடித்து விட்டனர். அது கண்டு இளையவள் மூத்தவளின் பிள்ளைகளைக் கடிந்தாள்.

செய்தியை அறிந்து கோபம் கொண்ட மூத்தவள் இளையவளை நோக்கி நீ முறை தவறி என் கணவனோடு வாழும் காமக்கிழத்தி என்று பலவாறு இகழ்ந்து பேசினாள். இளையவள் அவளிடம் நான் என் கணவனை முறைப்படி மணந்து கொண்டவள். அதற்குத் திருப்புறம்பயத்து வன்னி மரமும் அதனடியில் உள்ள சிவலிங்கமும் கிணறுமே சாட்சி என்றாள்.

அதைக் கேட்ட மூத்தவள் எள்ளி நகைத்து அவை மூன்றும் இங்கு வந்து சாட்சி சொல்லுமா? என்று கேட்டாள்.

இளையவள் மதுரை சோமசுந்தரப் பெருமானைத் தியானித்துத் தன் குறையைக் கூறி அழுதாள். அன்றிரவு அவள் கனவில் தோன்றிய சுந்தரேசர், உனது திருமணத்திற்குச் சாட்சியாக இருந்தவை யாவும் நாளை நமது ஆலயத்தின் ஈசான பாகத்தில் தோன்றும் அதைக் காட்டி உன் துயரைத் தீர்த்துக்கொள்வாய் என்று கூறி மறைந்தார்.

மறுநாள் இளையவள் ஆலயத்திற்குச் சென்று பார்க்க அங்கே திருப்புறம்பயத்திலிருந்தது போலவே வன்னி மரம், லிங்கம், கிணறு ஆகிய மூன்றும் தோன்றி யிருந்தன. எல்லோரும் புதியதாகத் தோன்றியிருக்கும் அவற்றைக் கண்டு அதிசயித்தனர்.

இளைவள் மூத்தவளுக்கு அவற்றைக் காட்டினாள். மூத்தவள், இளையவளின் சிவபக்தியையும் அன்பையும் கண்டு அவளிடம் தன்னை மன்னிக்கும்படிக் கேட்டுக் கொண்டாள். இருவரும் ஒருவருக்கொருவர் அன்பு பூண்டு சேர்ந்து வாழ்ந்தனர்.

மதுரை இரண்டாம் பிராகாரத்தில் வன்னியும் கிணறும் லிங்கமும் தோன்றிய இடத்தில் அவற்றை நினைவூட்டும் வகையில் கல்லாலாகிய வன்னி மரத்தின் உருவமும் சிறிய கிணறும் லிங்கமும் அமைக்கப் பட்டுள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தலமரமங்களும் பாம்புவழிபாடும்

பாம்புகள் சமய வழிபாட்டில் முக்கியமான இடத் தைப் பெற்றுள்ளன. தெய்வங்கள் அனேக சமயங்களில் பாம்பு வடிவத்தில் தோன்றி அன்பர்களுக்கு அருள்புரி வதாக நம்புகின்றனர். முழுமுதற் கடவுளாகிய சிவ பெருமான், பராசக்தி, முருகன் மாரியம்மன் ஆகிய தெய்வங்கள் பாம்பு வடிவத்தில் அன்பர்களுக்கு அருள் புரிந்ததைப் புராணங்களும் வரலாறுகளும் கூறுகின்றன.

பாம்புகள் மரத்தின் அடியிலுள்ள பொந்துகளிலும், கிளை, அடிமரம் ஆகியவற்றின் போரைகளிலும் வசிக் கின்றன. இதையொட்டித் தலமரங்களின் அடியில் நாக வடிவச் சிற்பங்களை நிலைப்படுத்தி வணங்குகின்றனர். காஞ்சிபுரம் கச்சபேசுவரர் ஆலயத்திலுள்ள இஷ்டசித்தித் தீர்த்தக் கரையில் பெரிய அரசமரம் உள்ளது. இதன் அடியில் நூற்றுக்கணக்கில் நாகப் பிணையல்கள் அமைக் கப்பட்டுள்ளன.



★ காஞ்சிபுரம் இஷ்ட சித்தி தீர்த்தத்தின் கரையிலுள்ள அரசமரமும் அதன்கீழ் அமைந்துள்ள நாகப் பிணையல்களும்

நாகலிங்க மரம்

நாகலிங்கம் அபூர்வ வகை மரமாகும். செம்மை, பொன்நிறம் என்று பல வண்ணங்களின் கலவையாக விளங்கும் இம்மரத்தின் மலர்கள் கண்ணையும் கருத்தையும் கவர்வன. மலரின் நடுப்பகுதியில் கிரீடத்துடன் கூடிய லிங்கம் போன்று விதையும் அதற்கு ஆயிரம் தலைகொண்ட பாம்பு குடைவிரித்தது போல் வளைந்துள்ள மகரந்தக் கேசரங்களும் உள்ளன. விதையைச் சுற்றி வட்டமான படுக்கை போன்ற அமைப்பு உள்ளது. நன்கு மலர்ந்த மலர் நாகலிங்கம் போன்று இருக்கும்.நெடிய வகை மரமான இது அனேக தலங்களில் காணப்படுகிறது. சென்னை கோடம்பாக்கம் புலியூர் பாரத்வாஜேஸ்வரர் ஆலயத்தில் நாகலிங்கமரம் தலவிருட்சமாக உள்ளது.

சிற்பம், ஓவியம், வாகனம் முதலியவற்றில் இடம் பெற்றுள்ள மரங்களிலும் பாம்புகள் சுற்றிக் கொண்டி ருப்பது போன்று அமைத்துள்ளனர்.

ஜம்பு என்றால் நாவல் மரம். நாம் வாழும் இப்பூமி நாவல் மரங்களால் நிறைந்திருந்ததால் நாவலந்தீவு என்று அழைக்கப்படுகிறது. வடமொழியில் ஜம்பூத்வீபம் என்று அழைக்கின்றனர். நாவல் மரம் நாகர்களால் பூமிக்கு கொண்டு வரப்பட்டது என்று கூறப்படுகிறது. இம்மரத்தின் முதிர்ந்த கனிகள் நாகத்தின் விஷத் திரட்சி போல் கருநீலத்தில் காட்சியளிக்கின்றன. இக்கனிகள் உயிர்காக்கும் மருத்துவ குணங்களைக் கொண்டுள்ளன.

திருவானைக்காவில் சிவபெருமான் வெண்ணாவல் மரத்தடியில் எழுந்தருளியுள்ளார். வெண்ணாவலே இங்குத் தலமரமாக உள்ளது. தேவாரத்தில் இந்த வெண்ணாவல் மரம் சிறப்பித்து பேசப்பட்டுள்ளது. சுந்தரர் பிறந்த திருநாவலூரிலும் நாவல் மரம் தலமரமாக உள்ளது.

நயினார் கோயில் எனப்படும் தலத்தில் பெருமான் ஸ்ரீபூமிநாகநாதராக எழுந்தருளியுள்ளார். இத்தலத்தின் தலமரம் மருத மரமாகும். இதில் பாம்புகள் உறை கின்றன. தேவர்கள் பலர் இங்கு பாம்புவடிவில் வசிப்பதாகக் கூறுகின்றனர். இந்த மரம் பட்டுப்போய் உள்ளதால் அதன் மீது தகடு போர்த்தியுள்ளனர். பெரிய அளவிலான பாம்பு வடிவங்களைச் செய்து மரத்தைச் சுற்றிலும் வைத்துள்ளனர்.

புன்னை மரத்தைப் புன்னாகமரமென்றும் அழைப்பர் சங்கரன் கோயிலில் புன்னை தலமரமாக உள்ளது. இதனடியில் சங்கன் குளிகன் முதலிய நாகங்கள் சிவபெருமானை நோக்கித் தவம் புரிந்தன. அவற்றிற்கு சிவனும் திருமாலும் சேர்ந்து சங்கரநாராயணராகக் காட்சி அளித்தனர் என்று தலபுராணம் கூறுகிறது. இந்த தலமரத்தின் அடியில் பெரிய பாம்புப் புற்று உள்ளது. அதனருகில் பெரிய நாகவடிவங்கள் அமைக்கப் பட்டுள்ளன. நாகங்கள் தவழ்ந்த இந்த மரத்தடியின் மண் தெய்வீக மருத்துவ குணங்களைக் கொண்டது என்று கூறுகின்றனர். இவ்வூருக்கு நாகவனம் என்ற பெயரும் வழங்குகிறது.

தலமரங்களின் அடியில் ஆண், பெண் நாகப் பிணையல்களை அமைத்து வழிபடுவதால் விரைவில் பிள்ளைப் பேறு உண்டாகும் என்று நம்புகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தலமர சேவைக் காட்சிகள்

"சேவை" என்ற சொல் வணங்குதல் என்ற பொருளைத் தருகிறது. தலமரத்தடியில் இறைவனை அமர்த்தி உலாவரச் செய்து வணங்குவதே தலமர சேவையாகும்

பெருந்திருவிழாவின் ஓர் அங்கமாகத் தலமர சேவைக்காட்சி நடைபெறுகிறது. முதல் நாள் இரவில் பெருமானைத் தல மரத்தின் வடிவில் செய்யப்பட்ட வாகனத்தில் அமர்த்தி உலாவரச் செய்கின்றார்.

திருமயிலையில் புன்னை தல விருட்சமாதலின் புன்னை மர வாகனம் உள்ளது. இதில் அகன்ற பீடத்தின் மீது உறுதியான அடிமரமும் கிளைகளும் கிளைகளில் இலைகளும் பூக்களும் கனிகளும் இயற்கையான மரத்தில் உள்ளது போலவே செய்யப்பட்டுள்ளன. இதில் பெருமானை அமர்த்தி உலா வரச் செய்கின்றனர். இது புன்னை மரசேவை என்று அழைக்கப்படுகிறது.

காஞ்சியில் கம்பையாற்றங்கரையில் இருந்த மாமரத்தடியில் அம்பிகை மணலைத் திரட்டிச் சிவலிங்கமாக அமைத்து வழிபாடு செய்தாள். சிவபெருமான் திருவிளையாடல் புரியக்கருதி கம்பையாற்றைப் பெருகச் செய்தார். பெருகிய வெள்ளத்தைக் கண்டு அஞ்சிய உமாதேவியார் தான் பூசித்த லிங்கத்தை அணைத்து இறுகப் பற்றிக் கொண்டாள். அவளுடைய முலைகளும், வளையல்களும் அவர் மேனியில் அழுந்தித் தழும்புகளை உண்டாக்கின.

சிவபெருமான் அவளுக்குக் காட்சியளித்துப் பூசையை ஏற்றுக்கொண்டதுடன் திருமணம் புரிந்து கொண்டார். இதனை நினைவுகூறும் வகையில் மாவடிசேவை என்னும் விழா கொண்டாடப்படுகிறது. வெள்ளியால் மாமரத்தின் அடிப்பாகமும் சுற்று மண்டபங்களும் அகன்ற பீடத்தின் மீது அமைக்கப் பட்டுள்ளன. அடிமரத்தில் மாமரத்தின் கிளைகளை வெட்டிப் பொருத்தி வண்ண விளக்குகளால் அலங்கரிக்கின்றனர். சுவாமியைப் பீடத்தில் அலங்கரித்து அமர்த்தி பவனி நடைபெறுகிறது. இதனை மாவடி சேவை என்று அழைக்கின்றனர். இவ்விழாவைத் திரளான மக்கள் கண்டுகளிக்கின்றனர்.

காஞ்சிபுரத்தைச் சுற்றியுள்ள பெருநகர் பிரம்மபுரிசுவரர் ஆலயம் மானாமதி வானசுந்தரேசுவரர் ஆலயம் முதலியவற்றிலும் மாவடிசேவை கொண்டாடப் படுகிறது.

காஞ்சிபுரத்தில் கச்சபேசுவரர் ஆலயத்தில் முருக்க மரம் (பலாசமரம்) தலமரமாக உள்ளது. பெருந்திருவிழாவில் முருக்கமரவாகனத்தில் கச்சபேசுவரர் அமர்ந்து பவனி வருகிறார்.



★ மயிலாடுதுறை மாயூரநாதர் கற்பவிருட்சத்திலும் அபயாம்பிகை காமதேனுவிலும் பவனி வருதல்

குறிப்பு : கற்பக விருட்ச வாகனத்தின் மீது தலமரமான மாமரத்தின் கிளைகள் இணைத்து கட்டப்பட்டுள்ளன

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கற்பக விருட்ச வாகனம்



★ கற்பகவிருட்சத்தில் மதுரை
மீனாட்சி – சோமசுந்தரர் பவனி

பல தலங்களில் தலமரவாகனத்திற்குப் பதிலாக கற்ப விருட்ச வாகனத்தில் பெருமானை பவனிவரச் செய்கின்றனர். கற்பகமரம் தன்னிழலில் இருப்பவர்களுக்கு வேண்டியதை வேண்டியவாறு அளிக்கிறதென்று புராணங்கள் கூறுகின்றன. இதன் கிளைகளில் பல்வேறு வகையான கனிகளைக் கட்டி அழகுபடுத்துகின்றனர். மின்விளக்குகளால் ஒளியூட்டப்பட்ட கற்பகவிருட்சத்தின் கீழ் பெருமான் பவனிவருவது கண்கொள்ளாக் காட்சியாகும். திருவண்ணாமலை அண்ணாமலையார் ஆலயத்தில் நடைபெறும் பெருந்திருவிழாவில் நான்காம் நாள் இரவு கற்பக விருட்ச வாகனத்தில் பவனி வருகிறார். இந்த வாகனத்தின் அடிப்பீடத்தில் காமதேனு உச்சைசிவரஸ் (குதிரை) அஷ்டமாநாகங்கள் ஆகிய உருவங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

திருக்கழுக்குன்றத்தின் தலமரம் வண்டு வகை வாழையாகும். இங்கும் பெரிய பீடத்தில் நான்கு பெரிய வாழைமரங்களைப் போல் மரத்தால் செய்து வண்ணம் தீட்டியுள்ளனர். சுற்றிலும் கந்தர்வர்கள் உள்ளனர். விழாவின் போது நடுவே நிஜமான வாழை மரங்களையும் சேர்த்துக் கட்டுவர். விழாவில் ஐந்தாம் நாளன்று காலையில் பெருமானை இதில் அமர்த்தி உலாவரச் செய்கின்றனர். இது கதலீ விருட்ச வாகனசேவை என்று அழைக்கப்படுகிறது.

இப்படியே அனேக ஆலயங்களில் தலமரங்களைக் குறிக்கும் வகையில் வாகனங்களை அமைத்து விழா நடத்தப்படுகின்றன. இக்காட்சியைக் காண்பதால் வம்சம் விருத்தியாகும். செல்வச் செழிப்பு உண்டாகும். கடன் தொல்லைகள் நீங்கும். வியாதித் தொல்லைகள் நீங்கும்

★ நாகூர் தலபுராணத்தில் சந்திரன் திருவிழா செய்த சருக்கம் என்ற பகுதியுள்ளது. இதில் விழாவில் இறைவனைப் பலவகையான வாகனங்களில் அமர்த்தி உலா வரச் செய்து மகிழ்ந்தது விவரமாகச் சொல்லப் பட்டுள்ளது. சந்திரன், இரண்டாம் நாள் இரவில் பெருமானை ஆலமர வாகனத்திலும் அம்பிகையை அடும்புக்கொடி வாகனத்திலும், விநாயகரை அரசமர வாகனத்திலும், முருகனை வேங்கை மர வாகனத்திலும் அமர்த்தி உலா வரச் செய்தான் என்று கூறப்பட்டுள்ளது. (அடும்பு என்பது நெய்தல் நிலக் கொடியாகும் அழகிய பூக்களைக் கொண்டு படர்ந்து வளர்ந்துள்ள இக் கொடியின் கீழே அம்பிகையை அமர்த்தி உலாவரச் செய்தான் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.)

★ சென்னை கபாலீசுவரர் ஆலயப் பெருந் திரு விழாவின் போது முதல்நாள் இரவில் கபாலீசுவரர் புன்னை மர வாகனத்திலும், அம்பிகை கற்பகவிருட்ச வாகனத்திலும் முருகன் வேங்கைமர வாகனத்திலும் வீற்றிருந்து பவனி வருகின்றனர். கற்பகவல்லி பவனி வரும் கற்பக விருட்சத்தின் அடியில் அவளைச் சுற்றி அஷ்டதிக்பாலகிகளும் ஐராவதம் (யானை), காமதேனு (பசு), உச்சைசிரவஸ் (குதிரை) ஆகியனவும் இடம் பெற்றுள்ளன. இவை தங்கவர்ணம் பூசப்பட்டு பொலிவுடன் விளங்குகின்றன.

★ சென்னை கோடம்பாக்கம் புலியூர் பாரத் வாஜேஸ்வர சுவாமி ஆலயத்தில் நாகலிங்கமரம் தல மரமாகவுள்ளது. சித்திரைப் பெருவிழாவின் முதல் நாள் இரவில் இலைகளுடன் நாகலிங்கப் பூக்கள், பாம்புகள், பல்லிகள், பறவைகள் ஆகியவற்றுடன் கலையழகு மிக்கதாகத் திகழும். நாகலிங்க மர வாகனத்தில் பெருமானை அமர்த்தி உலா வரச் செய்கின்றனர்.

★ சிவாலயங்களில் சிவபெருமானை தலமர வாகனத்தில் அமர்த்துவது போல் பெருமாள் ஆலயங்களில் திருமாலை (கிருஷ்ணர் கோலத்தில்) அலங்கரித்துப் புன்னை மரத்தில் அமர்த்தி உலாவரச் செய்கின்றனர். மரத்தைச் சுற்றிப் பசுக்களும் கன்றுகளும் இடைச் சிறுவர்களும் அமைக்கப்பட்டுள்ளனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிற்பம், ஓவியங்களில் தலமரங்கள்

சமய வாழ்வில் மரங்கள் முக்கியமான இடத்தைப் பெற்றிருப்பதால் சமயத் தொடர்பான ஓவியங்களிலும் மரங்கள் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளன.

சிவபெருமான் ஆதியில் உயிர்களுக்கு ஞானத்தை கல்லாலமரத்தின் கீழ்அமர்ந்து அருளிச் செய்தார். இன்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க இலக்கியங்களில் அவர் "ஆலமர் செல்வன்" என்று புகழப்படுகிறார். அவற்றில் அவருடன், அவர் வீற்றிருக்கும் ஆலமரமும் அதன் கிளையில் மாட்டப் பட்டுள்ள (முடத்தாழையின் பழம்) போன்ற விபூதிப்பை (பொக்கணம்) கிளையில் அமர்ந்துள்ள ஆந்தை ஆகியனவும் சிறப்பிக்கப் பட்டுள்ளன.

தட்சிணாமூர்த்தி எனப்படும் ஆலமர் செல்வன் சிலையை, மரம், கல், சுதை, உலோகம் என்று எதில் செய்தாலும் அவருக்குப் பின்புறமுள்ள மரத்தையும் இணைத்தே செய்கின்றனர். கல்லால மரத்துடன் கூடிய தட்சிணா மூர்த்தியின் மர சிற்பங்களைத் தேர்களிலும்; சுதைச் சிற்பங்களைக் கோபுரம், விமானம் ஆகியவற்றிலும், கல் திருமேனிகளைக் கருவறைகோட்ட தெய்வமாகவும், உலோக சிற்பங்களை (உலாத் திருமேனிகளாக) ஆலங்குடி காளஹஸ்தி (திருக்காளத்தி) உத்தமர் கோயில் முதலிய தலங்களிலும் காணலாம்.

சிவபார்வதியாரின் திருமணக்கோலத்தில் அது நடந்த தலத்திற்கேற்ப பின்னணியில் மரங்கள் அமைக்கப்பட்டன. மதுரை சோமசுந்தரேசுவரர் மீனாட்சி கல்யாணத்தில் பின்னணியில் கடம்பமரமும்; ஏகாம்பரேசுவரர் – ஏலவார் குழலி திருமணத்தில் மாமரமும் அமைக்கப்பட்டிருக்கின்றன. திருமணக் காட்சிகளில் காட்டப்படும் மரங்களில் அதற்கு ஆடை, மாலை, தர்ப்பை ஆகியவற்றைக் கட்டி அழகுபடுத்துவர்.

திருவோத்தூரைக் குறிக்கும் புராண ஓவியங்களில் சிவலிங்கமும் பனைமரங்களும் அருகில் திருஞானசம்பந்தரும் இருப்பதைக் காணலாம்.

காஞ்சியில் அம்பிகை சிவலிங்கத்தைத் தழுவிக் கொண்டிருக்கும் காட்சிகளில் பின்னணியில் மாங்கனிகளுடன் கூடிய மாமரம் அமைக்கப்பட்டுள்ளது.

திருத்தலங்களுக்குத் தருமம் செய்தவர்கள் அந்த தருமத்தைச் சிலாசாசனம் அல்லது செப்பேடாக அமைத்த போது அதன் முகப்பில் இறைவடிவுடன் அத்தலத்திலுள்ள மரத்தின் உருவத்தையும் சேர்த்தே அமைத்துள்ளனர். சென்னை மயிலாப்பூர் கபாலீசுவரர் ஆலயத்திலுள்ள தர்மசாசனக் கல்வெட்டின் தலைப்பில் மயில் சிவபூஜை செய்தல் பின்னணியில் தலமரமான



★ திருமயிலையிலுள்ள தருமசாசனக் கல்வெட்டின் முகப்பில் இடம்பெற்றுள்ள புன்னை மரம் – லிங்கம் – அன்பர்கள்

புன்னைமரம் ஆகியன அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

ஆனாய நாயனாரைக் குறிக்கும் சிற்பங்களில் அவர் சிவமாக எண்ணி வழிபட்டுக் குழலூதிய கொன்றை மரமும் சேர்த்து அமைக்கப்பட்டுள்ளது. அவர் வாழ்ந்த திருமங்கலம் என்ற தலத்திலுள்ள ஆனாய நாயனார் கல்திருமேனியிலும், உலாத்திருமேனியிலும் பின்னணியில் கொன்றைமரம் அமைக்கப்பட்டுள்ளது.

பொதுவாகத் தலபுராணத்தைக் குறிக்கும் சிற்பங்கள், ஓவியங்கள் ஆகியவற்றில் தலமரமும் இடம் பெறும். திருப்புடைமருதூர் நாறும்பூ நாதசுவாமி ஆலயக் கோபுர நிலைகளில் பல ஆலயங்களின் வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. இவற்றில் ஆலயங்களுடன் தலமரமும் சேர்த்தே தீட்டப்பட்டுள்ளன. நெல்லையப்பர் ஆலயத்தில் மூங்கில், குற்றாலநாதர் ஆலயத்தில் பலாமரம் என்று கோயிலுடன் தலமரங்களும் சேர்த்து வரையப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

மாணிக்கவாசகர் உபதேசம் பெறுவதைக் குறிக்கும் வரலாற்றுக் காட்சிகளில் குருந்த மரம் பின்னணியில் இருக்கக் காணலாம்.

திருவானைக்கா தலவரலாற்றுக் காட்சிகளில் ஜம்பு முனிவரும் அவர் கபாலத்திலிருந்து கிளைத்து வரும் வெண்ணாவல் மரமும் உள்ளன. அதன்கீழ்ச் சிவலிங்கமும் சிலந்தி, யானை, ஆகியவை அமைந்துள்ளன. சிவலிங்கத்தைப் பூசிக்கும் அம்பிகையையும் காண்கிறோம். இக்காட்சி கல்லில் புடைப்புச் சிற்பமாகவும் தூண் சிற்பமாகவும் சுதைச் சிற்பங்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

களாகவும் இக்கோயிலில் பலஇடங்களில் அமைக்கப் பட்டுள்ளன.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அவதரித்த தலமான திரு நாவலூரில் அழகிய உமாமகேசுவரர் உலாத்திருமேனி உள்ளது. இதன் பின்னணியில் தலமரமான வெண் ணாவல் மரம் அமைக்கப்பட்டுள்ளது. நீண்ட கிளை களுடன் விளங்கும் இம்மரத்தில் பாம்புகள், கிளிகள், பறவைகள் முதலியனவும் அமைக்கப் பட்டுள்ளன.

திருமயிலை கபாலீஸ்வரர் கோபுரத்தில் இடம்பெற்றுள்ள மரத்தின் சிற்பங்கள்

திருமயிலை கபாலீஸ்வரர் ஆலய ராஜகோபுரத்தில் பலவகையான மரங்களின் சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன. சண்டேசுவரர் வரலாற்றினைக் குறிக்கும் இரண்டு காட்சிகளிலும் ஆத்திமரங்கள் இடம்பெற்றுள்ளன. சிறுத்தொண்டர் சீராளர், சந்தன நங்கை, வெண்காட்டு நங்கை ஆகியோருக்கு அருள்புரியும் உத்திராபதியாருக்குச் ஓர் ஆத்திமரம் நிழல்பரப்புகிறது. கண்ணப்பர் வேங்கை மரத்தடியில் கண்ணை இடந்து அப்புகிறார். அம்பிகை காஞ்சியில் பூசிக்கும் காட்சியில் மாமரமும், மயிலையில் பூசிக்கும் காட்சியில் புன்னை மரமும் இடம்பெற்றுள்ளன. மணிவாசகருக்கு குருந்த மரத்தடியில் இறைவன் தீக்ஷைசெய்கிறான். முருகன் சரவணப் பொய்கையில் தோன்றும் காட்சியில் கற்பகமரம் உள்ளது. இந்திரனும் தேவர்களும் கடம்ப மரத்தடியிலும்; ராமர் சீதை இலக்குவன் அனுமன் ஆகியோர் புன்னைமரத்தடியிலும் சிவ வழிபாடு புரிகின்றனர். அப்பூதி அடிகள் வரலாற்றில் வாழைத் தோப்பும்; சுந்தரர் கமலினி, அநிந்திதை ஆகியோரைக் கண்டு காமுறும் காட்சியில் சித்திர வனத்து மரங்களும், திருஞானசம்பந்தர் பூம்பாவைக் காட்சியில் புன்னைமரமும்; முருகன் பிரமதேவனைச் சிறைப்படுத்துவதில் குராமரமும் இடம்பெற்றுள்ளன. தெற்குநோக்கிய சாலைகளில் ஏழுவகையான தக்ஷிணாமூர்த்தியின் வடிவங்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் தேவதாரு இத்தி, ஆலமரங்களின் கீழ் பெருமான் வீற்றிருக்கின்றார்.

தலமரங்கள் இல்லாத தலங்கள்

பெரும்பாலான தலங்களில் இறைவன் அன்பர்களின் பூசனைக்கு மகிழ்ந்து அவர்கள் தவம் செய்த மரத்தடியில் சுயம்புலிங்கமாகத் தோன்றி அருள்பாலித்தார். அம்மரங் கள் தலமரங்களாயின. சில தலங்களில் முனிவர் களும், ரிஷிகளும், தேவர்களும் சிறப்புமிக்க மரத்தைத் தேடி அதனடியில் சிவலிங்கங்களை அமைத்து வழிபட்டனர். சிவபெருமான் அவர் களுடைய பூசைக்கு மகிழ்ந்து அந்த லிங்கத்திலிருந்து தோன்றி அருள் பாலித்தார். அந்த வேளையில் அங்கு நிழல் பரப்பிய மரங்களும் தலமரங்களாகும் பேறுபெற்றன. சிலசமயம் சில தேவர்கள் சாபத்தால் பூமியில் மரங்களாகத் தோன்றி னர். அவர்கள் சிவபெருமானுக்கு நிழல் பரப்பி நின்று அந்தப் புண்ணிய பலத்தால் மீண்டும் தமது நிலையை எய்தினார்.

இவ்வாறு அமைந்த மரங்களும் அதன் வழிவந்த மரங்களுமே தல மரங்களாகும் பேறுபெற்றன.

இந்நிலையின்றி அரசர்கள், பெரிய நகரங்களை நிர் மாணித்தபோது அதன் நடுவே கோயில்களை அமைத் தனர். இத்தகைய ஆலயங்களில் தலமரம் பொதுவாக இருப்பதில்லை, தஞ்சைப் பெரிய கோயில், மாமல்ல புரத்துக் கோயில்கள், காஞ்சி கயிலாயநாதர் கோயில், பல்லவர்கள் அமைத்த குடைவரைக் கோயில்கள் முதலியவற்றிற்கு தலமரமங்கள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கோயிலின் முக்கியமான அங்கம் தலமரம் என்பதால் காலப்போக்கில் இக்கோயில்களுக்கும் அருளாளர்கள் தலமரங்களை அமைத்தனர். காஞ்சி கயிலாயநாதர் ஆலயத்தில் வன்னிமரமும், வில்வமரமும், பிரகாரத்தின் தென்கிழக்கு முனையில் துர்க்கைக்கு அருகில் அமைந் திருக்கக் காணலாம். தஞ்சைப் பெரிய கோயிலில் கருவூ ரார் அமைத்த இலுப்பை மரம் மேற்குப் பிராகாரத்தில் உள்ளது. இதனடியில் கருவூரர் சமாதித்தலம் உள்ளது.

தலமரம் இன்னதென்று தெரியாத ஆலயங்களில் வில்வம் தலமரமாகக் கொள்ளப்படுகிறது. கொன்றை சிவமரம் என்பதால் அதையும் தலமரமாக அமைத்தனர்.

திருவண்ணாமலையில் சிவபெருமான் திருமாலும் பிரமனும் அடிமுடி தேடிக் காணமுடியாத அழல் (நெருப்பு) வடிவ மலையாகி நின்றார். பின்பு அவர்களுக்கு அருள் புரியத் திருவுருவத்துடன் வெளிப்பட்டார். அவர்கள் வேண்டுகோளை ஏற்று அழகிய லிங்கமாக அங்கே நிலைபெற்றார். எனவே அத்தலத்தில் தலமரம் இல்லை. பின்னாளில் தவம்புரிந்த அம்பிகைக்கு தனது மேனியில் இடப்பாகத்தை அளித்தார். அம்பிகை, மகிழமரத்தடியில் தவம்புரிந்ததால் அது தலமரமாயிற்று என்பர்.

திருச்செங்கோட்டில் மலைமீது சித்தர்கள் அர்த்தநாரீ சுவரர் வடிவை வெள்ளைப் பாஷாணத்தால் அமைத்தனர். எனவே அங்கும் தலமரம் இல்லை. பின்னாளில் இங்கு இலுப்பை தலமரமாகக் கொள்ளப்பட்டது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூலோக கற்பகவிருட்சம் எனப்படும் பனைமரங்கள்

தென்னிந்தியாவின் தொன்மையான மரங்களில் முதன்மைபெற்ற ஒன்று பனை மரம். இதன் அனைத்து பாகங்களும் பயன்படுகின்றன. ஓலைகள் கூரை வேய் வதற்கும், ஓலையின் அடிக்காம்புகள் நார் எடுக்கவும், பழங்கள் (நுங்குகள்) உணவாகவும் பயன்படுகின்றன. பனைமரங்களைப் பிளந்து வீட்டிற்கு உத்திரமாகப் பயன்படுத்துகின்றனர். பனையில் தாலி, கல்பனை, தாடகை எனப் பலவகைகள் உள்ளன.

பனைமரப் பாளையை வெட்டி அதிலிருந்து வடியும் நீரைப் பதனீர், கள் எனப் பலவகையான பானங்களாகப் பயன்படுத்து கின்றனர். இம்மரத்தைப் பூலோக "கற்பக விருட்சம்" என்று போற்றுகின்றனர்.

அனேக தலங்களில் இறைவன் பனை மரத்தின் கீழ் வீற்றிருக்கின்றார். இவற்றில் திருப்பனந்தாள். வன் பார்த்தான் பனங்காட்டூர் (திருப்பனங்காடு) புறவார் பனங் காட்டூர் (பனையபுரம்) திருவோத்தூர் (திருவத்திபுரம்) திருமழபாடி. பனையூர் ஆகியவை தேவாரப் பாடல் பெற்ற திருத்தலங்களாகும். இந்த ஆலயங்களின் வெளிப் பிரா காரத்தில் உள்ள நெடிய பனை மரங்கள் தலவிருட் சங்களாக உள்ளன.

தொண்டை நாட்டுத்தலமான திருவோத்தூரில் ஓர் அடியார் சிவபெருமானுக்குப் பனம் பழங்களைப் படைக்க விரும்பினார். அதற்காக ஆலயத்தில் பனைமரங்களை நட்டார். அவையாவும் ஆண் மரங்களாக இருந்து காய்க் காமல் போயின.

அவர் வருத்தமுற்றார். அச்சமயம் தலயாத்திரையாக, திருஞானசம்பந்தர் திருவோத்தூருக்கு எழுந்தருளினார். அந்த அடியவர் ஞானசம்பந்தரை வணங்கி சிவ வழிபாட்டிற்காக வைத்த பனைமரங்கள் ஆண் பனைமரங் களாகிக் காய்க்காமல் போனதைக் கூறிவருந்தினார்.

திருஞானசம்பந்தர் இத்தலத்துச் சிவபெருமானை வணங்கி "பூர்த்தேர்ந் தாயென" எனும் முதலடியைக் கொண்ட பதிகப் பாடலைப் பாடினார். இதன் இறுதி பாடலில் குரும்பை ஆண்பனை ஈன்குலை ஒத்தூர் என்று அருளிச் செய்தார். இப்பதிகம் முடியும் போது அங்கிருந்த ஆண் பனை மரங்கள் யாவும் பெண் பனைகளாகிப் பூத்து காய்த்து கனிந்து கனிகளை உதிர்ந்தன. இதைக் கண்ட அனைவரும் அதிசயித்தனர்.

இந்த வரலாற்றை நினைவுகூறும் வகையில் திரு வோத்தூர் வேதபுரீசுவரர் ஆலய மண்டபத்தில் பூத்துக் காய்த்து பழம் தந்த பனைமரம் அதனடியில் சிவலிங்கம் திருஞானசம்பந்தர் ஆகிய திருவுருவங்களைக் கருங் கல்லால் நுண்மையான வேலைப்பாட்டுடன் செய்து வைத் துள்ளனர்.

தேவாரத்துள் வலம்புரம் என்று போற்றப்படும் திருத்தலம் இந்நாளில் மேலைப் பெரும்பள்ளம் என்று அழைக்கப்படுகிறது. இதன் தலவிருட்சம் பனையாகும். வலம் எனும் சொல்லுக்குப் பனை என்பதும் பொருள்.

விழுப்புரத்திற்கு அருகில் பனைமலை என்னும் சிற்றூரும் அதையொட்டி ஒரு சிறுகுன்றும் உள்ளன. குன்றின் மீது பல்லவர்கள் கட்டிய கலையழகு மிக்க சிவாலாயம் உள்ளது. இறைவன் தாலகிரீசுவரர் (பனைமலை நாதர்) என்றழைக்கப்படுகிறார்.

சன்னாநல்லூருக்கு அருகிலுள்ள தேவாரப் பாடல் பெற்ற தலம் பனையூர் ஆகும். இறைவன் சௌந்தர் யேசுவரர், அம்பிகை பெரிய நாயகி இத்தலத்தில் ஆண் பனை பெண்பனைமரங்கள் இணைந்து வளர்ந்துள்ள அதிசயத்தைக் காணலாம். பிராகாரத்தில் பராசர முனிவர் வழிபட்ட தாலவனேசுவரர் உள்ளார்.



★ இடப்புறம் தலவிருட்சங்களான பனைமரங்கள் வலதுபுறம் திருஞானசம்பந்தர் பாட கனியுதிர்க்கும் பனைமரமும் சிவலிங்கமும் கல்லான ஐதீகக் காட்சி. திருஒத்தூர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காஞ்சீபுரத்தை அடுத்துள்ள திருப்பனங்காடு எனப் படும் வன்பார்த்தான் பனங்காட்டூரில் அகத்தியரும், புலத் தியரும் பனை மரத்தடியில் சிவலிங்கம் அமைத்து வழி பட்டதாகத் தலபுராணம் கூறுகிறது. இத்தலத்தில் உள்ள ஆலயத்தில் இரண்டு கருவறைகளும் இரண்டு பனை மரங்களும் உள்ளன. கருவறைச் சுவரில் பனை மரத் தடியில் சிவலிங்கத்தை அகத்தியரும் புலத்தியரும் பூசித்துக் கொண்டிருக்கும் காட்சி புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளது. இக்கோயிலுக்கு எதிரிலுள்ள தீர்த்தம் ஜடாகங்கை என்பதாகும். இதன் தென் கரையில் முனீசுவரர் ஆலயம் உள்ளது. இவரைப் பனையடியப்பன் என்றழைக்கின்றனர்.

பனையின் வகையிலிருந்து திரிந்தது கச்சூரி எனப் படும் ஈச்சமரமாகும். திருக்கச்சூர் கோயிலின் தலமரம் ஈச்ச மரமாகும். இவ்வூரிலுள்ள விநாயகர் கருக்கடி விநாயகர் என்று அழைக்கப்படுகின்றனர். கருக்கு என்பது கத்திபோன்ற கூரான நுனிகளை உடைய பனை மட்டையின் பெயர்.

வாழையில் கல்வாழை எனும் வகை இருப்பது போலவே பனையிலும் கல்பனை என்ற வகை உள்ளது. பாடல் பெற்ற திருத்தலமான கோயில் கன்றாப்பூரில் கல்பனை தலமரமாக உள்ளது.

கூந்தற்பனை எனும் வகை உள்ளது. இதன் பாளைகள் விரிந்து பெண்ணின் கூந்தலைப் போல் சடைசடையாகத் தொங்கும். இது பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும் இதன் பாளைகளைத் திருமணப் பந்தலில் கட்டி அழகுபடுத்துகின்றனர்.

அர்த்தநாரியாய் நிற்கும் பனைமரம்

திருஒத்தூரிலுள்ள பனைமரம் சிவ சக்தி வடிவாக விளங்குகிறது என்று ஒத்தூர்ப் புராணம் கூறுகிறது. இங்குள்ள பனைமரத்தின் விரிந்த ஓலைகள் சடை களாகவும் அதிலுள்ள வெள்ளை நிறமுள்ள பாளைகள் சந்திரப்பிறையாகவும். பூக்கள் பாம்புகளாகவும் மடல்கள் யானைத் தோலாகவும் பாளைகளில் ஊறிவரும் நீர் கங்கையாகவும் கனிகள் உமாதேவியின் தனங்களாகவும் கொள்ளப்பட்டு அப்பனை மரம் சிவசக்தி சாரூபத்துடன் விளங்குகிறதென்று தலபுராணம் கூறுகிறது.

தாலம் என்பது பனைமரத்தைக் குறிக்கும் வடமொழிச் சொல். தாலிப்பனை மரத்தின் ஓலைகளைப் பதப்படுத்தி ஓலைச் சுவடிகள் தயாரித்துவந்தனர். இவை எழுது வதற்குப் பயன் படுத்தப்பட்டன. இம்மரம் பூத்துக் குலுங்கி நிற்பது பூச்சக்கரக் குடையை நட்டுவைத்தது போல் இருக்கும் நூறு ஆண்டுகள் வாழும் இம்மரங்கள் பூத்துக் குலுங்கியபின் சில ஆண்டுகளில் பட்டுப்போய்விடும்.

பனை மரத்தின் பெருமைகளை விளக்கி திருக் குடந்தை அருணாசலக் கவிராயர் என்பவர் "தால விலாசம்" எனும் நூலைப் பாடியுள்ளார். இதில் 801க்கும் அதிகமான வகையில் பனைமரமும் அதன் பாகங்களும் மக்களுக்குப் பயன்படுவதுபற்றி விரிவாகக் குறிக்கப் பட்டுள்ளது.

தென்னை வளைந்து நீர் அளித்த தலம்

வடகுரங்காடுதுறை எனும் தலத்தில் தென்னை மரங்கள் சிறப்புப்பெற்றுள்ளன. இத் தலத்திற்கு ஒருவன் கர்ப்பிணியான தன் மனைவியுடன் வந்தான். அப்போது கோடைக் காலமாக இருந்ததால் வெய்யில் அதிகமாக இருந்தது. அருகில் குடிக்கத் தண்ணீரும் இல்லை. அப்பெண் வெய்யிலாலும் தாகத்தாலும் வருந்திச் சோர்ந்தாள். அவன் தனது மனைவியைக் கோயிலுக்கு அருகில் விட்டுவிட்டு தண்ணீர் வாங்கி வரச் சென்றான்.

மிகவும் வாடிய அவள் சிவபெருமானிடம் வருந்தி முறையிட்டாள். சிவபெருமான் அப்பெண்ணின் மீது இரக்கம் கொண்டு அருகிலிருந்து தென்னை மரங்களிடம் இளநீர் தரும்படிக் கூறினார். அவை வளைந்து இளநீரை அவள் முன்பு இட்டன. அந்த இளநீர்க் காய்கள் தானே வெட்டுண்டு எளிதில் பருகும்படியாயின. அவள் இளநீரைப் பருகிப் புதிய தெம்பை அடைந்தாள். எங்கோ தேடிப் பெற்ற தண்ணீருடன் வந்த கணவனிடம் நடந்ததைக் கூறினாள். அவன் அதை நம்பவில்லை. அவள் பெருமானை வேண்டினாள்.

அவளுடைய பக்தியை உலகினருக்கும் அவளுடைய கணவனுக்கும் உணர்த்தச் சிவபெருமான் தென்னை மரங்களுக்குக் கட்டளையிட்டார். அவை முன்போலவே வளைந்து இளநீர் தந்தன. அந்த நிகழ்ச்சியைக் கண்டு அனைவரும் அதிசயித்தனர். அன்று முதல் இத்தலத்திலுள்ள பெருமான் தயாநீதிசுவரர் என்றும் குலைவணங்கீசர் என்றும் அழைக்கப்படுகின்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொற்பனை

பனம் பழம் பொன்வண்ண மஞ்சள் கலந்த இளங் கருமைவண்ணம் கொண்டது. சிலதலங்களில் இறையருளால் பனைமரங்கள் பொற்பழங்களாக பழுத்து அடியவர்களுக்கு உதவியதையும் அறியமுடியகிறது. இதையொட்டி இம்மரங் களின் கீழ் வீற்றிருந்தருளும் சிவபெருமான் பொற்பனங்காடர் பொற்பனையான் என்று அழைக்கப்படுகிறார்.

சிவனுக்குக் குடைபிடிக்கும் புஷ்பதந்தன் என்பவன் சிவனுடைய ஆணையால் பூமிக்கு வந்து திருவரங்குளம் எனும் தலத்தில் பொற்பனையாக இருந்தான். அம்மரத்தின் காய்களை ஒரு வேடன் எடுத்துச் சென்று விற்க அவற்றை ஒரு செட்டிப் பெண் வாங்கி உண்டுவந்தாள். இதனால் அப்பெண்ணுக்கு அழகிய பெண் பிறந்தாள். அளவற்ற அழகுடன் விளங்கிய அவள் மணப்பருவம் அடைந்தாள். ஒரு நாள் இங்குள்ள திருகுளத்தில் மூழ்கினாள். அப்பெண் எழும் போது சிவபெருமான் அவளை அணைத்துக் கொண்டு எழுந்தார். இருவரும் திருமண கோலத்தில் அனைவருக்கும் காட்சியளித்தனர். இதனை விளக்கும் ஐதீக விழா ஆடிப்பூரத்திற்கு முன்னாளில் இத்தலத்தில் நடத்தப்படுகிறது

விரிஞ்சிபுரத்தில் பாலாற்றின் ஓரத்தில் பொற்பனையீசர் ஆலயம் உள்ளது. இங்கு அம்பிகை பனைமரத்தின் கீழ் வீற்றிருந்து தவம் செய்ததாகக் கூறுகின்றனர். தென்னகமெங்கும் பொற்பனையின் பெயரால் பொற்பனங்காடு பொற்பனங்கரனை பொற்பனையூர் முதலிய பெயர்களில் ஊர்கள் உள்ளன.

பரமனடி தொழுத பாவை தாடகை

தாடகை என்பது பனையின் வகைகளில் ஒன்று. இது தெய்வீக மரமாகப் போற்றப்பட்டதால் பெண்களுக்கு அப்பெயர் சூட்டப்பட்டது. குமரி மாவட்டத்தில் இவ்வகைப் பனை மரங்கள் மிகுதியாக உள்ள மலை தாடகை மலை என்றழைக்கப்படுகிறது. இம் மலையில் பிறந்து வளர்ந்த அசுரப்பெண் தாடகை என்று அழைக்கப்பட்டாள். இராவணனின் தங்கையான இவள் இராமனைக் கண்டு மோகம் அடைந்து இலக்குவனால் அவமானமடைந்தாள் என்று ராமாயணம் கூறுகிறது.

இப்போது நாம் மிகுந்த சிவபக்தி கொண்ட தாடகை என்ற பெண்ணைப் பற்றி அறிந்து மகிழலாம்.

சோழநாட்டில் தாடகை என்னும் பனை வகை மிகுதியாக வளர்ந்திருந்த தலம் திருப்பனந்தாள் என்றழைக் கபட்டது. இந்தப் பனங்காட்டின் நடுவில் சிவபெருமான் வீற்றிருந்த ஆலயம் தாடகையீச்சரம் என்று அழைக்கப் பட்டது. இவ்வூரில் பிறந்த ஒரு பெண் ஆலயத்தின் பெயரால் தாடகை என்று அழைக்கப்பட்டாள். சிவபக்தி நிரம்பிய இப்பெண் மிகுந்த ஈடுபாட்டுடன் சிவபூசை செய்வது வழக்கம்.

ஒரு நாள் அவள் சிவலிங்கத்திற்கு மாலை சார்த்த எழுந்த போது அவளுடைய மேலாடை நழுவி விட்டது. மாலையைக் கீழே வைக்க விரும்பாததால் மேலாடையைச் சரி செய்ய இயலாமல் திகைத்தாள். அவளுக்கு அருள்புரியவிரும்பிய சிவபெருமான் தன் தலையை வளைத்து மாலையை ஏற்றுக் கொண்டு அவளுக்குக் காட்சியளித்தார். அவள், அவரிடம் ஐயனே தங்களைப் பூசிக்கும் வேளையில் பதினாறு உபசாரங்களையும் ஒருசேர செய்து வழிபடுவதற்கு உதவியாக எனக்குப் பதினாறு கரங்களைத் தந்தருள்க என்று வேண்டினாள். அவள் வேண்டியபடி பெருமானும் அளித்தார். சிவபெருமான் அவளுடைய பக்தியை உலகினருக்கு உணர்த்தச் வளைத்த தலையை நிமிராமலேயே இருந்தார். பின்னாளில் குங்குலியக் கலய நாயனார் எனும் அன்பரின் வேண்டுதலால் தலையை நிமிர்த்தினார் என்று தல வரலாறு கூறுகிறது.

★ தாடகை சிவபூசை செய்தல் – திருப்பனந்தாள்

திருப்பனந்தாள் ஆலயத்தில் மகா மண்டபத்தின் விதானத்தில் ஓவியமாகவும் கருவறையின் தென் புறத்தில் சுதைச் சிற்பமாகவும் தாடகை பதினாறு கரங்களுடன் சிவபூசை செய்யும் காட்சி பெரிய அளவில் அமைக்கப்பட்டுள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கூவிளம் (வில்வம்)

சிவபெருமானின் ஐந்து முகங்களிலுள்ள திருக் கண்களிலிருந்து தோன்றிய ஐந்து மரங்கள். கூவிளம், நொச்சி, மாவிலங்கை, வன்னி, விளா, என்பனவாகும். இவற்றைப் பஞ்சவில்வம் என்று அழைக்கின்றனர்.

இவற்றில் கூவிளத்தை மட்டுமே நடைமுறையில் வில்வம் என்று அழைக்கின்றனர். பெருமான் கூவிள மலரையும், இலைகளையும் சூடியிருப்பதைத் தேவாரம் திரும்பத் திரும்பக் கூறுகிறது.

வில்வ மரத்தின் கீழ் பெருமான் விரும்பி உறைகின்றான். அதனால் வில்வநாதர் என்று அழைக்கப்படுகிறார். அனேக தலங்களில் வில்வம் தலமரமாக உள்ளது. தலமரம் இன்னதென்று தெரியாத ஆலயங்களில் வில்வத்தைத் தலமரமாகப் போற்றுகின்றனர்.

வில்வ இலைகளைக் கொண்டு பூசிப்பதால் பெருமான் மகிழ்கிறான். தன்னையும் அறியாமல், வில்வ இலைகளைச் சிவலிங்கத்தின் மீது இடுபவர்களுக்குக் கூட பெருமான் அருள் புரிகின்றான். ஒரு குரங்கு, புலிக்கு அஞ்சி வில்வமரத்தில் ஏறி அமர்ந்தது. தூக்கத்தில் தவறி கீழே விழுந்தால் புலி தின்றுவிடுமே என்று அஞ்சி இரவு முழுவதும் தூங்காமலும் பொழுது போக்கவும் இருக்க அது மரத்தின் இலைகளைப் பறித்துக் கீழே போட்டுக் கொண்டே இருந்தது. அம்மரத்தடியில் பெருமான் உமா தேவியுடன் வீற்றிருந்தார். தன்னையும் அறியால் தம்மீது வில்வதளங்களை இட்டபோதிலும் பெருமான் மகிழ்ந்து அதற்குப் பெரும்பேறு அளித்தார். குரங்கு மறுபிறவியில் முசுகுந்தப் பேரரசனாகப் பிறந்தது. அவன் சோழ மண்டலத்தை ஆண்டுவந்தான். அவனே திருவாரூரில் தியாகராசப் பெருமானைத் தேவலோகத்திலிருந்து கொண்டு வந்து பிரதிஷ்டை செய்தவன் ஆவான்.

ஒரு சமயம் தன்னைத் துரத்தி வந்த புலிக்கு அஞ்சி, வில்வமரத்தின் மீதேறி அமர்ந்திருந்த வேடன் பொழுது போக்க இலைகளைப் பறித்துக் கீழே போட்டுக் கொண்டிருந்தான் அம்மரத்தின் கீழிருந்த சிவலிங்கத்தின் மீது அவை விழுந்தன. அதையே வழிபாடாக ஏற்றுக் கொண்டுச் சிவபெருமான் அவனுக்கு அருள் புரிந்ததைச் சிவராத்திரி புராணக் கதைகளில் காண்கிறோம்.

★ வில்வத்தின் மகிமைகளை வில்வாஷ்டகம், வில்வ மகாத்மியம் முதலிய நூல்களால் அறியலாம். ஒரு வில்வ தளத்தை பெருமானுக்கு அணிவிப்பதால் மூன்று ஜென்மங்களில் செய்த பாவம் தீரும் என்று வில்வாஷ்டகம் கூறுகிறது.

★ வில்வத்தில் திருமகள் உறைகிறாள். துதிநூல்கள் அவளை வில்வ நிலையாயை நம: என்று துதிக்கின்றன.

★ ஐந்து இலைகளைக் கொண்ட வில்வம் பஞ்ச தளவில்வமாகும். கோவூர் திருமேனீசுவரர் ஆலயத்தில் பஞ்சதளவில்வ மரங்கள் நிறைய உள்ளன. பதினோரு தளங்களைக் கொண்ட வில்வம் மகாவில்வமென்றும், ஏகாதச ருத்ர வில்வமென்றும் அழைக்கப்படுகிறது. பர்வதமலையில் மகாவில்வமரங்கள் அனேகம் உள்ளன.

மரத்தடியின் சிறப்புக்கள்

தலமரங்களைப் போலவேஅம் மரங்களின் அடியில் அமையும் மேடையும் கொன்றையடி, மகிழடி, மாவடி புளியடி என்று சிறப்பிக்கப்பட்டுள்ளது. சுசீந்திரத்தில் கொன்றை மரத்தின்கீழ் மூன்று லிங்கங்கள் உள்ளன. இந்த இடம் கொன்றையடி என்று அழைக்கப்படுகிறது. இங்கு வழிபாடுகள் நடந்த பின்னரே மூலமூர்த்தியான தாணுமாலயருக்குப் பூசைகள் நடைபெறுவது வழக்கம்.

விருத்தாசலத்தில் இரண்டாம் பிராகாரத்தில் வன்னி மரம் உள்ளது. இதன் அடியை மட்டுமல்லாது இந்த பிராகாரத்தையே வன்னியடிப் பிராகாரம் என்று அழைக்கின்றனர்.

அம்பாசமுத்திரத்தில் புளியடி சிங்காதனம் என்ற இடம் உள்ளது. பாபநாசத்திற்குச் செல்வதற்கு முன்பாக இங்குள்ள புளிய மரத்தின் அடியில் அகத்தியர் தவம் புரிந்ததாகக் கூறுவர். இங்குக் கல்லால் பெரிய மேடை அமைக்கப்பட்டுள்ளது. மரத்தைச் சுற்றிலும் மதில் அமைத்துள்ளனர்.

சில தலங்களில் தல மரத்தடியிலுள்ள மண் மருந்தாகப் போற்றப்படுகிறது. சங்கர நாராயணர் கோவிலில் உள்ள புன்னையடி புற்றுமண், வைத்தீசுவரன் கோவிலில் உள்ள வேம்படி மண் முதலியவை இப்போதும் மருத்துவ குணம் கொண்டதாகப் போற்றப்படுகின்றன. இவற்றை மக்கள் மருந்தாக உண்கின்றனர்.

திருப்பெருந்துறைப் புராணத்தில் தலமரமான குருந்த மரத்தின் அடியிலிருந்து மண்ணை எடுத்து உண்டால் தீராத வியாதிகளும் தீருமென்று கூறப்பட்டுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆலமரமும் அருகம்புல்லும்

தென்னகத்துப் பழமொழிகளில் ஒன்று "ஆல்போல் தழைத்து அருகு போல் வேரோடி" என்பதாகும். ஆலமரம் தன் கிளைகளில் இருந்து தோன்றும் விழுதுகளைப் பூமியில் வேரோடிப் படர்ந்து விசாலமான இடத்தில் பரவி வளரும் இதன் அடியில் பல குடும்பங்கள் தங்கலாம். பரந்து வளரும் மரங்களில் இதுவே பெரியதாகும். இதற்கு நேர்மாறாக அளவால் சிறியது அருகம்புல். ஆல மரம் விழுதுகளை விட்டுப் பரந்து வளர்வதைப்போல அருகம்புல் வேர்களை விட்டு பரவுகிறது. ஒருவருடைய குடும்பம் பல்வேறு கிளைகளாகப் பிரிந்து நிலைபெற்றுக் ஒன்று கூடி வாழ வேண்டும் என்று வாழ்த்தவே மேலே கூறிய பழமொழி எழுந்தது.

சிவபெருமான் அளவிலா ஆற்றல் கொண்டவனாக இருப்பதைப் போலவே நுண்மைக்கும் நுண்மையானவன். அதுபோன்று பெரிய ஆலமரத்தின் அடியில் வீற்றிருப் பதைப் போலவே அருகம்புலின் அடியிலும் வீற்றிருக் கின்றான். இவ்விரண்டும் சிவ வழிபாட்டில் பெற்றுள்ள தனிச்சிறப்பைக் கீழே காணலாம்.

வட திருஆலங்காடு, தென் திருவாலங்காடு, தலையா லங்கானம், ஆலம்பொழில், திருக்கச்சூர் முதலிய தலங் களில் ஆலமரம் தலமரமாக உள்ளது. திருக்கச்சூர் ஆலயம் திருமுறைகளில் "ஆலக்கோயில்" என்று அழைக்கப்படுகிறது.

"அட்சயம்" என்பதற்கு அழிவற்றது என்பது பொருள் ஆலமரத்திற்கு வடம் என்பது பெயர். புனிதத்தலங்களில் ஒன்றான கயாவில் அட்சயவடம் (அழிவற்ற ஆலமரம்) உள்ளது இதன் கீழ் விஷ்ணு பாதம் உள்ளது.

ஐந்து ஆலமரங்கள் ஒன்றாக இருக்குமிடம் பஞ்சவடி எனப்படுகிறது. கோதாவிரிக் கரையிலுள்ள பஞ்சவடியில் பன்னிரண்டு ஜோதிர் லிங்கங்களில் ஒன்றான திரியம் பகலிங்கம் இதன் அருகில் உள்ளது.

ஆறுகளின் சங்கமத்துறையில் சிவபெருமான் பெரிய ஆலமரமாக விளங்குகிறான். பிரயாகை என்றழைக்கப் படும் (கங்கா, யமுனை, சரஸ்வதி) திருவேணி சங்கமத் திலும் அலகநந்தாவும் பாகீரதியும் கூடும் தேவப் பிரயா கையிலும்; தென்னாட்டிலுள்ள வெள்ளாறும் மணி முத்தாறும் மயூரநதியும் கூடும் கூடலை யாற்றூரிலும் உள்ள சங்கமத்துறைகளில் பெரிய ஆலமரங்கள் இருக் கின்றன. இவையாவும் சிவமாகவே போற்றப்படுகின்றன.

பொது உடையார் கோயில் எனும் தலத்தில் ஆல மரத்தையே சிவபெருமானாகப் போற்றி வழிபடுகின்றனர்.

கேதார கௌரிவிரதத்தின் போது கேதாரீசு வரரை ஆலமரத்தடியில் வைத்து வழிபடுவர்.



★ அண்டமுற நிமிர்ந்தாடும் ஆலங்காடன் – திருவாலங்காடு

தேவிகாபுரம் எனும் தலத்தில் அம்பிகை ஆல மரத் தின் கீழ் தவம் செய்தாள். அவளுக்குச் சிவபெருமான் சுவர்ணலிங்கமாகத் தோன்றினார். அவரைக் கனக கிரீஸ்வரர் என்று அழைக்கின்றனர். இங்குள்ள பிள்ளையார் ஆலடிப் பிள்ளையார் ஆவார்.

"பழு" எனும் சொல்லும் ஆலமரத்தைக் குறிக்கிறது. குடந்தைக்கு அருகிலுள்ள பழுவூரில் ஆலந்துறையீசர் ஆலயம் உள்ளது. இது பரசுராமர் வழிப்பட்ட தலமாகும்.

பல இடங்களில் பெருமான் ஆலமரத்தை இடமாகக் கொண்டிருப்பதைப் போலவே சில தலங்களில் எளிய நிலையிலுள்ள அருகம் புல்லின் அடியிலும் பெருமான் விரும்பி உறைகிறார். அருகம்புல்லைச் சூடிமகிழ் கின்றார். இதையொட்டி "அருகுசூடி" என்றழைக்கப் படுகிறார்.

தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள "பசுவந்தனை" எனும் தலத்தில் "புல்" தலச் செடியாக உள்ளது. இங்குள்ள இறைவன் கயிலாயநாதர் ஆவார்.

புல்லின் வகைகளில் ஒன்று காமப் புல்லாகும். இந்நாளில் காப்பலூர் என வழங்கும் தலம் காமப் புல்லூர் எனப்பெயர் பெற்றிருந்தது. இங்கு புல்லின் நடுவே தோன்றிய இறைவன் காமேஸ்வரர் என்று அழைக்கப் படுகிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அரச மரம் விருட்சராஜம்



★ அரசமரம் – காஞ்சிபுரம் கச்சபேசம்

மரங்களின் ராஜனாகப் போற்றப்படுவது அரச மரமாகும். பெருமான் அரச மரமாக இருக்கின்றார். இது ஞானத்தைத் தரும் என்பதால் போதி விருட்சம் என்று அழைக்கப்படுகிறது.

ஆற்றங்கரைகளிலும், குளக்கரைகளிலும் அரச மரம் செழித்து வளர்ந்திருப்பதைக் காணலாம். அரசமரத்துடன் வேம்பும் இணைந்து வளர்ந்தால் அங்கு தெய்வீக சக்தி நிலைத்திருக்கும் என்று நம்புகின்றனர். இரண்டு மரங்களுக்கும் திருமண விழாவை நடத்தி வைக்கின்றனர்.

பொதுவாக ஆலங்காட்டிடை ஆடும் நடராசப் பெருமான் பேரூர் பட்டீச்சரத்தில் மட்டும் அரச மரத்தின் கீழ் ஆடினான். அங்குள்ள நடராச சபை அரசம்பலம் என்றும்; நடராஜப் பெருமான் அரசம்பலவாணர் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

தொண்டை நாட்டுத்தலங்களில் ஒன்று அரசிலியாகும். இதன் தலமரம் அரசு. பெருமான் அரசிலி நாதர். அம்பிகை பெரியநாயகி

புராணங்கள் அரசமரத்தை மும்மூர்த்திகளின் வடிவாகப் போற்றுகின்றன.

வடமொழிச் சுலோகமொன்று,

மூலதோ ப்ரம ரூபாய மத்யதே விஷ்னு ரூபினே
அக்ரதச் சிவரூபாய வ்ருக்ஷராஜாயதே நம;

என்றுபோற்றுகிறது. இதன் பொருள், அடிப்பகுதியை பிரம்மாவாகவும், நடுபகுதி விஷ்ணுவாகவும் மேல்பகுதி சிவ வடிவமாகவும் விளங்கும் மரங்களின் அரசனுக்கு வணக்கம் என்பதாகும்.

கொங்கு நாட்டில் அனைத்து ஆலயங்களின் முன்புறமும் பட்டிமேடை என்றமேடை இருக்கக் காணலாம். இம்மேடையில் அரசமரமும் வேம்பும் செழித்து வளர்ந்துள்ளன. அதன் அடியில் விநாயகர் பாம்புப் பிணையல்களுடன் வீற்றிருக்கின்றார். சிறப்பு நாட்களில் இம்மரங்களும் வழிபடப்படுகின்றன.

திருவாவடுதுறையில் படர் அரசு தலமரமாக உள்ளது. இதன் கீழ் அமர்ந்து திருமூலர் திருமந்திரத்தை அருளிச் செய்தார் என்பர்.

இம்மரத்தின் பெயரால் திருவாவடுதுறை ஆதீனம் "அரசவனத்து அறநிலையம்" என்று அழைக்கப் படுகிறது.

அம்பிகை பசுவடிவுடன் வழிபட்ட தலங்களிலும் காமதேனு முதலான பசுக்கள் வழிபட்ட தலங்களிலும் அரசமரங்களே தலமரங்களாக உள்ளன. ஆவூர் பசுபதீசுவரம், பேரூர், நல்லம், திருக்கோழம்பம், திருவாவடுதுறை முதலிய பசுவழிபட்ட தலங்களில் அரசமரம் தலமரமாக உள்ளது.

அரசமரம் சூரியனோடு தொடர்புடையது. சூரியன் வழிபட்ட தலங்களில் அரசு தலமரமாக உள்ளது. எடுத்துக்காட்டாகப் பாடல் பெற்றத் திருத்தலமான பருதியப்பர் கோவில் சூரியன் வழிபட்ட தலமாகும். இறைவன் பாஸ்கரேஸ்வரர் தலமரம் அரசு. இதனை அரசவனம் எனவும் அழைப்பர்.

அரசிலியும் சூரியன் பூசித்த தலமாகும். இங்கு ஆலயத்தின் முன்புறம் பெரிய அரசமரம் உள்ளது.

சூரியன் வழிபட்டு பேறுபெற்ற தலமான காஞ்சிபுரம் இஷ்டசித்தீஸ்வரர் ஆலயத்தில் சூரிய தீர்த்தமும் (இஷ்டசித்திதீர்த்தம்) அதன் கரையில் பெரிய அரசமரமும் உள்ளன. இதன் அடியில் நூற்றுக்கணக்கான நாகலிங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. இது பெரிய பிரார்த்தனைத் தலமாக உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மூங்கிலில் முளைத்த முதல்வன்

வேய்முத்தநாதர்

உயரமாகவும் நெருக்கமாகவும் தாவரங்களில் ஒன்று மூங்கிலாகும். வீடுகட்டுவது முதல் காடு அடைவது வரை உபயோகப்படுத்தப்படுவது. மூங்கில் புதர்களுக்கு நடுவே சுயம்பு லிங்கமாகச் சிவபெருமான் தோன்றி அருள்பாலித்ததைச் சில தலபுராணங்கள் கூறுகின்றன. மூங்கிலில் முத்துகள் பிறக்கும் என்பர் மூங்கிலடியில் பிறந்த முத்தாகக் கருதப்படுவதால் திருநெல்வேலி நெல்லையப்பருக்கு வேய்முத்தநாதர் எனும் பெயர் வழங்குகிறது. (வேப் – மூங்கில்) மேலும் வேணுவன நாதர், வேணுவனலிங்கம் எனும் பெயர்களும் வழங்கப் படுகின்றன.

பாசு என்றால் மூங்கில். தொண்டை மண்டலத்தில் உள்ள திருப்பாசூரில் மூங்கிலடியில் முளைத்தெழுந்த முதல்வனாகப் பெருமான் வீற்றிருக்கின்றார். அதனடியில் தோன்றியதால் இவர் பாசூரப்பர் எனப்படுகிறார். வட மொழியில் வாசீசுவரர் என்றழைக்கின்றனர். பாசுபத நாதர் எனவும் கூறுவர்.

சீர்காழியில் பெருமான் மூங்கில் வனத்தில் தோன்றியதால் வேணுபுரநாதர் என்று அழைக்கப் படுகிறார். சீர்காழிக்குரிய பன்னிரண்டு பெயர்களில் ஒன்று வேணுபுரம் ஆகும்.

மூங்கில் தலமரமாக உள்ள திருநெல்வேலி, சீர்காழி முதலியவை இந்திரன் வழிபட்ட தலங்களாகும். இந்திரன் சூரபத்மனின் கொடுமைக்கு அஞ்சி இந்திராணியுடன் சீர்காழியிலிருந்த மூங்கில் காட்டில் மறைந்து வாழ்ந்து வந்தான் என்றும் அங்கிருந்த லிங்கத்தை வழிபட்டுப் பேறு பெற்றான் என்றும் கந்தபுராணம் கூறுகிறது.

திருநெல்வேலியில் அவன் பொற்றாமரைத் தீர்த்தம் அமைத்து வேய்முத்தநாதரை வழிபட்டுப் பேறு பெற்றான் என்று தலபுராணம் கூறுகிறது.

சிவபெருமான் ஆனந்தத் தாண்டவத்திலிருந்து தோன்றியது ஆடற்கலையாகும். ஆடற்கலையில் வல்ல ஆடலரசிகளைச் சிறப்பித்து அரசர்கள் தலைக்கோலி எனும் பட்டத்தை வழங்கினர். தலைக்கோல் மூங்கிலால் செய்யப்பட்டதாகும். தலைக் கோல் உருவாக்குவதைச் சிலப்பதிகாரம் விளக்குகிறது.

சோமங்கலத்திலுள்ள நடராசப் பெருமான் தலைக் கோலை ஏந்தியுள்ளார்.

முன்னாளில் புதிய நெடிய மூங்கிலை ஆலயத்தின் முன்புறத்தில் நட்டு அதில் கொடியை ஏற்றிய பின்னரே விழா நடத்துவது வழக்கம். பின்னாளில்தான் நிலையான கொடிமரங்களை அமைக்கும் வழக்கம் வந்தது. அதை யொட்டியே மூங்கிலில் இருந்த கணுக்களைப் போலவே கொடிமரத்திலும் கணுக்கள்போல் பட்டைகள் கட்டப் பட்டுள்ளன.

சிவாலயங்களில் உள்ள அபூர்வ மரங்கள்

உறங்காப் புளி

கொடுங்குன்றம் (பிரான்மலை)யில் தேனாயி தீர்த்த மெனும் மதுகர புஷ்கரணியின் அருகில் செழுமையுடன் நன்கு பரந்த விரிந்துள்ள புளிய மரம் உள்ளது. இதனை உறங்காப்புளி என்று அழைக்கின்றனர். இது மற்ற புளிய மரங்களைப் போல இலைகளை மூடிக் கொண்டு இரவில் உறங்குவதில்லை. மேலும் இது பூக்கும், காய்க்கும் ஆனால் காய்கள் பழமாவதில்லை.

பெயரில்லா மரம்

மேலே குறித்த பிரான் மலையில் மலைக்கோயிலுக்கு மேலுள்ள பெரிய பாறைக்கு அருகில் பெயரில்லா மரம் எனும் மரம் உள்ளது. இதன் பெயர் யாருக்கும் தெரிய வில்லை. தாவிரவியலாரும் இதற்கென பெயர் சூட்ட வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பிறவாப்புளியும்-இறவாப்பனையும்

கொங்கு நாட்டு சிவப்பதிகளில் முதன்மை பெற்றது கோயம்புத்தூரிலுள்ள பேரூர் பட்டீச்சரம் ஆகும். இத் தலத்தில் இறவாப் பனை, பிறவாப் புளி என்னும் இரண்டு மரங்கள் உள்ளன. பிறவாப்புளியின் பழத்தினின்று கிடைக்கும் கொட்டைகளை நட்டால் அவை முளைப் பதில்லை.

சிலந்தி மரம்

திருமருகலுக்கு அருகிலுள்ள தலம் "திருப்பயற் றங்குடி" இங்குள்ள பயற்று நாதர் ஆலயத்தில் தட்சிணா மூர்த்தி சந்நிதியில் தலமரமான சிலந்திமரம் உள்ளது. இதன் பூக்கள் மஞ்சள் நிறத்தில் சிலந்திப் பூச்சிகளைப் போல் இருக்கும். சித்திரை, வைகாசியில் பூக்கும் இம் மலர்கள் மணமற்றவை.

களர் - அகாய்

அப்பர்சுவாமிகள் அவதரித்த திருத்தலமான திரு வாய்மூரில் அவருக்கு அமைக்கப்பட்டுள்ள நினை விடத்தில் பெரிய மரமுள்ளது. ஆலம்விழுதுகள் பின்னி யதுபோல் அடியையும் நெருங்கிய கிளைகளுடன் அடர் ந்த இலைகளுடன் நெடிது பரந்த வளர்ந்துள்ள இம் மரத்தை களர் அகாய் என்று குறித்துள்ளனர். இதன் இலைகள் பலவிதமான சுவைகளைக் கொண்டுள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பரமனும் பலாமரமும்

தென்னகத்தின் சுவைமிக்க முக்கனிகளில் இரண்டாவது கனி பலா. இது வேர்ப்பலா, கிளைப்பலா எனப் பல வகைப்படுகிறது. முள்ளோடு கூடிய கெட்டியான மேல் தோலையும் சடைசடையான உள்தோலையும் அதனுள் கொட்டைகளையுடைய சுளைகளையும் கொண்டது.

குற்றாலம், திருநீலக்குடி, இடும்பாவனம், கற்பகநாதர் கோயில், திருவாலங்காடு, திருப்பூவணம், திருச்செந்துறை முதலிய தலங்களில் பலா மரத்தின் அடியில் பெருமான் வீற்றிருக்கின்றார். இதில் குற்றாலத்திலுள்ள பலாமரம் சிவபெருமானாகவும், சிவனின் இருப்பிடமாகவும், வேத வடிவாகவும் போற்றப்படுகிறது.

"குரும்பலா" என்று போற்றப்படும் இம்மரம் இருக்குமிடம் தனிச் சந்நிதியாகத் திகழ்கிறது. இம்மரத்திற்கு தினமும் வழிபாடு செய்யப்படுகிறது. திருஞானசம்பந்தர் பலதலங்களை சிவபெருமானுக்கு உரிய இடம் இதுவே என்று கூறி அருளியதைப் போலவே குற்றாலத்திற்கு வந்த போது நம்பனுக்குரிய இடம் "குறும் பலாவே" என்று கூறி இம்மரத்தைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். "திருந்தமதிசூடி" எனும் அப்பதிகம் "குறும்பலாவைக் கும்பிட்டு ஏத்தியது" என்று அறிஞர்களால் குறிக்கப்பட்டுள்ளது.

தெய்வீக இயற்கை எழிலை வியந்து பாடும் பதிகங்களில் இது முதன்மையானது. இதில் ஆண் யானை தனது பெண்யானையுடன் இம்மரத்தை வணங்குவதாகப் பாடியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

குற்றாலத் தலபுராணத்திலுள்ள, குறும்பலா சருக்கத்தில் வேதமே குரும்பலா வடிவில் செழித்து வளர்ந்து இறைவனுக்கு நிழல் பரப்பித் தவமியற்றி வருகிறது என்று கூறப்பட்டுள்ளது. பிரணவம் இதன் வேராகவும் கருமகாண்டம் ஞானகாண்டம் பெருங்கிளைகளாகவும் வேதமொழிகள் சிறு கிளைகளாகவும், வேதாந்த நுண்பொருளான உபநிடதம் தளிர்களாகவும் உள்ளதென்று போற்றப்படுகின்றன. கனிகள் நான்கு வேதங்களின் சாரமான அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்காம்.

இதற்குத் தண்ணீர் ஊற்றியவர் மும்மூர்த்திகளுக்கு அபிஷேகம் செய்த பயனைப் பெறுவர். இதன் கீழிருந்து ஓதப்படும் மந்திரம் ஒன்றுக்குக் கோடியாய் பயன் தரும். இதனடியில் செய்யும் தவம், தானம் யாவுமே பலமடங்கு பலன் தருமென்று புராணம் விவரிக்கிறது.

குற்றாலக் குறவஞ்சி எனும் நூலில் இம்மரத்தை புகழ்ந்து கீழ்வரும் பாடல் பாடப்பட்டுள்ளது.

கிளைகளாய் கிளைத்தபல கொப்பெலாம்
சதுர்வேதம் கிளைகளீன்ற
சுளையெல்லாம் சிவலிங்கம் கனியெல்லாம்
சிவலிங்கம் கனிகளீன்ற
சுளையெலாம் சிவலிங்கம் வித்தெலாம்
சிவலிங்க சொரூபமாக
விளையுமொரு குறும் பலாவின்முளைத்தெழுந்த
சிவக் கொழுந்ததை வேண்டுவமே

இதன் பொருள் : வேதமே மரமாக உள்ளது. கிளைகள், கனிகள், கனிகளிலுள்ள சுளைகள், சுளைக்குள்ளேயுள்ள விதைகள் யாவுமே சிவலிங்கம். இம்மரமே சிவக்கொழுந்தாக விளங்குகிறது. இம்மரத்தின் கனிகளை யாரும் உண்பதில்லை.

திருஞானசம்பந்தர் பாடிப் பரவிய மற்றோர் தலமான திருச்செந்துறை சந்திரசேகரர் ஆலயத்திலும் பலாமரம் தலவிருட்சமாக உள்ளது. இதன் பழங்களையும் மக்கள் உண்பதில்லை. குரங்குகளுக்கு உணவாகப் போட்டு விடுகின்றனர்.

வேதாரண்யத்தை அடுத்துள்ளதலம் இடும்பாவனம் இதற்கு அருகிலுள்ள கற்பகநாதர் குளம் எனப்படும் திருக்கடிகுளம் முதலியதலங்களிலும் பலா தல விருட்சமாக உள்ளது.

திருவிடைமருதூருக்கு அருகிலுள்ள திருநீலக்குடி மனோக்கிய நாதசுவாமி ஆலயத்தின் தலமரம் பலா மரமாகும். வடக்குப் பிராகாரத்தில் செழித்து வளர்ந்துள்ள இம்மரத்தின் கனிகளை இறைவழி பாட்டுக்கு மட்டுமே பயன்படுத்துகின்றனர். கோயிலுக்கு வெளியே எடுத்துச்சென்றால் அவை புழுத்துவிடுகிறது. இவற்றைத் திருடி உண்பவர்களின் தோலில் பலாப் பழத்தின் மேல் உள்ளது போல் முள்முள்ளாகச் சொறி உண்டாகித் துன்புறுத்துகிறது என்று பொதுவாக நம்பப்படுகிறது.

பலாவில் நூற்றுக்கும் மேற்பட்ட வகைகள் உள்ளன. வருக்கை, சக்கை, பனசம், பாகல், கோளிப்பாகல் என்பன போன்ற வகைகள் பாரதத்தில் விளைகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புன்னைவனம்

தமிழர் தொடர்பு கொண்ட மரம் புன்னை. அகன்ற கரும் நிறத்துடன் காணப்படும் கனமான புன்னை மர இலைகள் அழகானவை. மஞ்சள் நிறப் பூக்களையும் நீண்டகாம்புடன் கூடிய கொத்து கொத்தான சிறிய உருண்டையான காய்களையும் கொண்டது. மணல் மேட்டில் செழித்து வளரும் நெய்தல் நிலத்தாவரம். புன்னை மரங்கள் அடர்ந்த பகுதி புன்னையங்கானல் எனப்பட்டது.

மயிலாப்பூர், அம்பர், திருவெண்ணைய்நல்லூர், வேதாரண்யம், நாகூர் முதலிய தலங்களில் புன்னை தலவிருட்சமாக உள்ளது. மயிலாப்பூர் "மட்டிட்ட புன்னையம் கானல்" என்றும்; தேவாரத்தில் குறிக்கப்பட்டுள்ளது.

சென்னை மயிலாப்பூரில் அம்பிகை புன்னை வனத்தில் மயில் வடிவுடன் சிவனை பூசித்துப் பேறு பெற்றாள். இக்கோயிலில் தழைத்து வளர்ந்துள்ள, புன்னை மரம் உள்ளது, அதன் கீழ் மயில் வடிவுடன் அம்பிகை சிவபூஜை செய்யும் காட்சியைக் கொண்ட ஐதீக ஆலயம் உள்ளது.

அம்பரில் பிரமன் அன்ன வடிவுடன் பெருமானை வழிபட்டான். அவன் பெருமானை வணங்கி அன்னமாம் பொய்கையில் மூழ்கித் தன் தெய்வ வடிவை அடைந்தான் என்று தலபுராணம் கூறுகிறது. அம்பரில் பிரமன் வழிபட்ட லிங்கம் புன்னை வனநாதர் எனும் பெயரில் தனிச் சந்நதியில் உள்ளது.

சங்கரன் கோயிலுக்கு புன்னை வனம் என்பது பெயராகும். இங்குள்ள புன்னை மரத்தின் கீழ் நாக அரசர்களான சங்கபாலன், குளிகன், அனந்தன், வாசுகி, முதலியோர் தவம் செய்தனர். அவர்களுடைய புற்றுக்கு நடுவில் பெருமான் லிங்கமாகத் தோன்றினார். அந்த லிங்கத்தை அவர்கள் வழிபட்டனர். அதிலிருந்து வெளிப் பட்ட சிவபெருமான் திருமாலைத் தன்னுடன் இணைத்துக் கொண்டு சங்கரநாராயணராகக் காட்சியளித்தார். அந்த கோலத்துடனேயே அங்கே அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார். புற்றடியில் தோன்றிய பெருமான் வன்மீக நாதர், புன்னை வனநாதர் என்றழைக்கப்படுகிறார். இப் பகுதியில் மக்கள் புன்னைவனம் என்ற பெயரைச் சூட்டிக் கொள்கின்றனர்.

நாகப்பட்டினத்திற்கு அருகிலுள்ள தலம் நாகூர். இது நாகராஜன் வழிபட்ட தலம். ஒரு நாரை கொண்டு வந்த இட்ட புன்னைக் கொட்டையிலிருந்து ஒரு நாழிகை அளவில் பெரிய புன்னைமரம் தோன்றியது என்றும் அதன் கீழ் சிவபெருமான் அழகிய லிங்கமாகத் தோன்றினார் என்றும் தலபுராணம் கூறுகிறது. அந்த லிங்கத்தை நாகர்கள் வழிபட்டதால் பெருமான் நாகநாதர் என்று பெயர் பெற்றார். இந்த இடம் நாகூர் என்றும் அம்பிகை நாகவல்லி என்றும் அழைக்கப்படுகின்றனர்.

நாரை வழிபட்டுப் பேறுபெற்ற திருநாரையூரின் தலமரம் புன்னையாகும். புன்னைவிருட்ச வாகனங்களில் நீண்ட காலை உடைய நாரையின் உருவங்களையும் அமைத்துள்ளனர்.

மதுரை திருவிளையாடற்புராணத்தோடு தொடர்புடைய தலம் திருப்புறம்பயம். இது ஆதியில் வன்னி வனமாக இருந்தது. இங்கு பெருமான் வன்னீசர் என்று அழைக்கப்பட்டார். அந்த லிங்கமும் வன்னிமரமும் மதுரைக்கு சாட்சி சொல்ல சென்றன. அவை திரும்பி வரும் வரையில் வேறு லிங்கமும் புன்னை மரமும் இங்கே அன்பர்களுக்கு அருள் பாலித்தன. அவை திரும்பி வந்த பின்பு வன்னிமரம் தென்கிழக்கு முனையில் நின்றது. புன்னை மரம் வடமேற்கில் நின்றது. இடைப்பட்ட காலத்தில் அருள்புரிந்து வந்த லிங்கம் புன்னை மரத்தடியில் அமைந்தது. இந்த புன்னை மரத்தடி பிரார்த்தனைத் தலமாக உள்ளது. இதில் பிள்ளைப் பேறு வேண்டி மக்கள் தொட்டில் கட்டுகின்றனர்.

அனேக தலங்களில் புன்னை தலமரமாக உள்ளது.



★ புன்னை மரமும் ஐதீகக் கோயிலும் – மயிலை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வன்னியப்பன்

பஞ்ச வில்வங்களில் ஒன்றாக விளங்குவது வன்னி மரமாகும். வன்னி என்பது நெருப்பு; நெருப்பிலிருந்து தோன்றியதால் இம்மரமும் வன்னி என்று பெயர் பெற்றது. (புளியம் இலைகளைப் போன்ற) சிறிய இலைகளைக் கொண்டது. பூக்களும் சிறியவை.

வன்னிமரத்தடியில் வீற்றிருப்பதால் பெருமான் வன்னீசர், வன்னியடிநாதர் என்று அழைக்கப்படுகிறார்.

திருவன்னியூர் என்னும் தலம் வன்னிமரத்தின் சிறப்பால் வன்னியூர் என்று அழைக்கப்படுகிறது. பெருமான் அக்னீசுவரர்; அம்பிகை கௌரி.

திருமுதுகுன்றம் எனப்படும் விருத்தாசலத்தில் இரண்டாம் பிரகாரத்தில் வன்னிமரம் செழித்து வளர்ந்துள்ளது. இதன் பெயரால் இந்தப் பிரகாரம் வன்னி யடிப் பிரகாரம் என்று அழைக்கப்படுகிறது.

வேதாரண்யத்தில் வன்னி இரண்டாவது தலவிருட்சமாக விளங்குகிறது. இதனடியில் அமர்ந்து துருவாசர் தவம் செய்து இறைவன் இறைவியின் திருமணக் கோலத்தினைக் கண்டார் என்று தலபுராணம் கூறுகிறது. இதைச் சுற்றி கல்மேடை அமைக்கப்பட்டுள்ளது. மேடையில் துருவாசர் நாகர் வடிவங்கள் உள்ளன.

திருவான்மியூர் மருந்தீசுவரர் ஆலயத்தில் வன்னி தலமரமாக உள்ளது. இதனடியில் தவம் செய்து அகத்தியர் இறைவனின் திருமணக் கோலத்தைக் கண்டார் என்றும் தனது வயிற்று வலி நீங்கப்பெற்றார் என்றும் கூறப்படுகிறது. பின்னாளில் வால்மீகி முனிவர் இங்குத் தவம் செய்த போது அவருக்குச் சிவபெருமான் திருமணக் கோலத்தைக் காட்டியதுடன் இருந்தாடும் கூத்தினை ஆடிக்காட்டினார் என்றும் கூறுவர்.

காரைக்குடியை அடுத்துள்ள கோயிலூருக்குச் சமிவனம் என்பது பெயர். இதன் தலமரம் வன்னியாகும். சமீ என்பது வன்னியின் வடமொழிப்பெயர். இவ்வூர்த் தலபுராணம் சமீ வனபுராணம் என்றழைக்கப்படுகிறது.

ஆண்டார்கோயில் எனப்படும் வடுகூர் வடுகநாதர் ஆலயம்; கிராமம் (முண்டீச்சுரம்) ஆலயம்; திருவாமாத்தூர் அபிராமேசுவரர் ஆலயம் முதலிய அனேக தலங்களில் வன்னி தலமரமாக இருந்து வருகிறது.

★ மும்மூர்த்தி தலம் என்ற போற்றப்படும் திருப்பாண்டிக் கொடுமுடியில் வன்னி தலமரமாகத் திகழ்கிறது. இதன் கீழ் அறிவின் கடவுளான பிரம்ம தேவன் வீற்றிருக்கிறான். இவனுக்கு மூன்று முகங்களே உள்ளன. நாலாவது முகமே வன்னி மரமாகி இறைவனைத் துதித்துக் கொண்டிருக்கிறது என்பர்.

வன்னி குத்தும் விழா

நவராத்திரி முடிந்துவரும் விஜயதசமி நாளில் சுவாமி (சந்திரசேகரர்) குதிரைவானத்தில் பவனி வந்து ஊருக்குப் புறத்தேயுள்ள வன்னிமரத்தின் அடியில் எழுந்தருளி அம்பு போடுவார். இது அம்புத்திருவிழா என்றும் வன்னி குத்தும் விழா என்றும் அழைக்கப்படுகிறது. வன்னிமரம் உறுதியானது. அதில் அம்புகளைச் செலுத்தித் திறமைகளை சோதித்துப் பார்ப்பர். அதுவே அம்பு போடும் விழாவாயிற்று என்று கருதுகின்றார். இது அனைத்து சிவாலயங்களிலும் அம்பிகை ஆலயங்களிலும் நடைபெறும் விழாவாகும்.

வன்னியடி விநாயகர்

வன்னிமரம் ஞானத்தோடு தொடர்புடையதாகும். பல தலங்களில் ஞானமூர்த்தியான விநாயகர் வன்னியடியில் அமர்ந்து அருள்கிறார்.

குடந்தைக் கீழ்க்கோட்டம் என்று தேவாரத்தில் சிறப்பிக்கப்படும் கும்பகோணம் நாகநாதர் கோயிலில் ராஜகோபுரத்தைக் கடந்ததும் தெற்கில் ஓங்கி வளர்ந்துள்ள வன்னிமரத்தின் கீழ் வடக்கு நோக்கியவாறு சிறிய விநாயகர் ஆலயம் உள்ளது. இவரை வன்னியடி விநாயகர் என்று அழைக்கின்றார். தல புராணம் இவரைத் தனி சிறப்புடன் துதிக்கிறது.

★ திருவண்ணாமலையில் கிளிகோபுரத்தின் வடக்கில் அமைந்துள்ள நந்தவனத்தில் வன்னிமரம் உள்ளது. அதன்கீழ் வன்னியடி விநாயகர் வீற்றிருக்கிறார். வன்னி என்பது அக்னிவடிவமாதலின் அக்னித்தலமான இதற்குத் தலமரமாக அமைந்தது என்பர். பின்னாளில் அம்பிகை மகிழ மரத்தடியில் தவம் செய்யும்போது அவளுக்கு அங்கு அருள்புரிந்ததுடன் பெருமான் அவளைத் திருமணம் செய்து கொண்டார். அது முதல் அம்மரத்தினையும் சிறப்புடன் போற்றுகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வண்ணமலர் ஆத்தியப்பர்

வண்ணம் நிறைந்த மலர்களைப் பூக்கும் ஆத்தி பாரததேசத்தின் தொன்மை மரபைச் சேர்ந்த மரமாகும். படர்ந்து வளர்வது. திருமுறைகளில் பலஇடங்களில் குறிக் கப்பட்டுள்ள மரம். சண்டீசுவரநாயனார் ஆத்தி மரத்தின் கீழ் வழிபாடு செய்ததைத் திருநாவுக்கரசு சுவாமிகள். தழைத்ததோர் ஆத்தியின் கீழ் தாபர மணலாற் கூட்டி .. பாலைக்கறந்து ஆட்டி ... என்று பாடிப் பரவியுள்ளார்.

ஒரு சமயம் சிவபெருமான் சிறுத்தொண்டரிடம் உணவு கேட்டு அவருடைய வீட்டுக்குச் சென்றார். உத்ரா பதியாராக (வைரவகோலத்துடன்) அவர் சென்ற போது நாயனார் வீட்டில் இல்லை. பெருமான் வீட்டிலுள்ளோ ரிடம் நாம் "கணபதீச் சரத்தின் கண் வண்ணமலர் ஆத் தியின் கீழ் இருக்கிறோம்" என்று கூறிவிட்டு வந்தார். அதன்படியே ஆலயத்தின் தென்பகுதியிலுள்ள ஆத்தி மரத்தின் கீழ் வீற்றிருந்தார். அங்கு வந்து சிறுத் தொண்டர் அவரை விருந்துக்கு அழைத்துச் சென்ற தாகப்புராணம் கூறுகிறது.

திருப்புடைமருதூர் புராணத்தில் ஆத்திவனச் சருக்கத்தைக் காண்கிறோம். இப்பகுதி ஒருகாலத்தில் ஆத்தி வனமாக இருந்ததென்று கூறப்பட்டுள்ளது. இங்குள்ள விநாயகர் ஆத்திவிநாயகர் என்றழைக்கப் படுகிறார். ஆத்திவனத்தில் பெருமான் வைரவனாக வெளிப்பட்டு தனது சூலத்தைக் குத்தி வைரவத் தீர்த் தத்தை உண்டாக்கினார் என்று கூறப்பட்டுள்ளது.

சிவபெருமான் ஆத்தி மரத்தடியில் மகிழ்ந்து வீற்றிருப் பதைப் போலவே சிவமுனியான அகத்தியரும் ஆத்தி யினை விரும்பி அதன் கீழ் அமர்ந்து தவம் புரிகிறார். பாடல் பெற்ற திருத்தலமான அச்சிறுப்பாக்கத்தின் தெற்கிலுள்ள பெரும்பேர் கண்டிகையில் அகத்தியர் ஆத்திமரத்தின் கீழ் தவமிருந்தார் என்றும் அவருக்குப் பெருமான் தனது திருமணக் கோலத்தைக் காட்டினார் என்றும் வாய்மொழி வரலாறு கூறுகிறது.

இந்த ஆத்திமரம் ஊரின் தெற்கில் தான்தோன்றீ சுவரர் ஆலயத்தின் முற்றத்தில் உள்ளது. செழித்து வளர்ந்துள்ள இம்மரத்தின் நாற்புறமும் மேடை கட்டப் பட்டுள்ளது. மேடையில் அகத்தியர் உருவம் செய்து வழிபடப்படுகிறது. சித்திரை மாதம் ஆட்சீசுவரர் ஆலயத் தில் நடைபெறும் பெருந்திருவிழவின் இறுதி நாளில் பெருமான் இங்கு வந்து வழிபாடு கொள்ளுகின்றார். அப்போது ஆத்திமரத்தின்கீழ் அகத்தியருக்குத் திருமண கோலம் காட்டும் ஐதீக விழா நடத்தப்படுகிறது.

அகத்தியர் வழிபட்டு பேறுபெற்ற குமரிமாவட்ட அகத்தீசுவரம், தொண்டைமண்டலத்து கும்மங்கலம் முதலிய ஊர்களிலும் ஆத்திமரம் சிறப்புடன் போற்றப் படுகிறது.

ஆத்தி மலர்களையும், தழைகளையும் சிவபெருமான் விரும்பிச் சூடுகிறான். இதையொட்டி "ஆத்திசூடி" என்று அழைக்கப்படுகிறார். இப்பெயரால் ஔவையார் நீதி நூல் ஒன்றைப் பாடியுள்ளார்.

ஆத்திக்கு "ஆர்" என்பதும் பெயர். சோழ மன்னர்கள் ஆத்திமலரைத் தமது அடையாள மலராகச் சூடும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர்.

திருச்சிற்றேமம் என்ற தலத்திலும் ஆத்தி தலமரமாக உள்ளது. இது சித்தர்களுக்கு இறைவன் சுவர்ண பைரவராகத் தோன்றிப் பொன்தந்த தலமாகும். விநா யகர் ஆத்திமர விநாயகர். ஒரு கற்புடைய வணிகப் பெண்ணிற்கு உதவ இம்மரம் கோயிலுக்குப் பின்புற மிருந்து முன்புறம் வந்ததாக செவிவழிச் செய்தி கூறுகிறது.

★ வண்ண மலர் ஆத்தி – பெரும்பேறு கண்டிகை.

அத்தி சபை

ஆத்தி மரத்தினின்று வேறானது அத்தி, அது பூவாமல் காய்க்கும் மரமென்பர். அபூர்வமாகவே அத்தி தலமரமாக உள்ளது. திருஒற்றியூரில் பெருமான் அத்திமரக்காட்டின் நடுவே தமது இருந்தாடும். கூத்துகளை நந்தியம் பெருமானுக்கும் மயிலானந்த முனிவருக்கும் அடியவர்களுக்கும் காட்டினார் இதையொட்டி இங்குள்ள சபை ஔதூம்பர சபை. என்று அழைக்கப்படுகிறது. அத்திக்கு வடமொழியில் ஓதும்பரம் என்பது பெயராகும். இங்கு வெளிப் (மேற்கு) பிராகாரத்தில் அத்திமரம் ஒன்று உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேவாரத்தில் மரங்கள்

தேவாரத்தில் பல வகையான மரங்கள் குறிக்கப் பட்டுள்ளன. முதல்வகையில் தலங்களில் செழித்து வளர்ந்துள்ள மரங்களைச் சிறப்பித்து செருந்தி பொன் மலரும் சோலை திருவாரூர்; ஷெண்பகப்பொழில் சிவ புரம்; எனப் பலவாறு குறிக்கப்பட்டு உள்ளன.

இரண்டாவது வகையில் அடியவர்கள் மரத்தடியில் வழிபாடு செய்தது குறிக்கப்பட்டுள்ளது. தழைத்ததோர் ஆத்தியின் கீழ் சண்டீசர் வழிபாடு செய்து பேறு பெற்றதை அப்பர் குறித்துள்ளார்.

மூன்றாம் வகையில் தலங்களில் நெருங்கி வளர்ந்துள்ள மரக்கூட்டங்களில் பெயர்ப் பட்டியலைக் காண்கிறோம். எடுத்துக்காட்டாக அந்தண் மாதவி, புன்னை, நல்ல அசோகமும் அரவிந்தம் மல்லிகை பைந்தண் ஞாழல்கள் சூழ் புறவார் பனங்காட்டூர்; காரைகள்,கூகை, முல்லை, களவாகை, ஈகை, படர்தொடர் கள்ளி, காவிரிச் சூரைகள் பம்மிவிம்பும் சுடுகாடு... சோலைநகர் நனிபள்ளி இலவ ஞாழலும், ஈஞ்சொடு சுரபுன்னை இளமருது இலவங்கம் ... வடகரை மாந்துறை என்று திருஞானசம்பந்தர் அருளிச் செய்துள்ளதைக் காணலாம்.

நான்காம் வகையில் பெருமான் மரஞ்செடி கொடி களில் உறைவது குறிக்கப்பட்டுள்ளது. பூளைச் செடியை இடமாகக் கொண்டிருப்பதை இரும்பூளை இடம் கொண்ட ஈசன் என்றும்; கோரைக் காட்டில் உறைவதை சாய்க்காட்டெம் தலைவன் என்றும்; பலாவில் உறைந்து அருள் புரிவதைத் தண்புனலைத் தாங்கித் தேவி முலை பாகம் காதலித்த மூர்த்திஇடம் .... குரும்பலாவே என்றும்; நெல்லிவனத்தில் இருப்பது நெல்லிக்காவுள் நிலாயவன் என்றும் குறிக்கப்பட்டுள்ளன; வெண்நாவலில் மகிழ்ந்திருப்பது வெண்ணாவலில் உறை வேதியன் என்று போற்றப்படுகிறது.

ஐந்தாம் வகையில் பெருகிவரும் ஆற்று வெள்ளத்தில் அடித்து வரப்படும் மரங்களின் பெயர்பட்டியலைக் காண்கிறோம். சம்பந்தர் சந்தமார் அகிலொடு சாதிதேக்குமரம் முந்தும் ஆர் முகலி (பொன்முகலி) என்றும்; சுந்தரர், சந்தவேரும் காரகிற் குறடும் தண்மயிற்பீலியுங் வந்திழிபாலியும் என்றும்; பாடிப் பரவியுள்ளனர்.

ஆறாம் வகையில் இறைவன் திருமுடிமேல் சூடும் மலர், தளிர்களைத் தரும் செடி, கொடி மரங்களின் பெயர் வரிசையைக் காண்கிறோம். வன்னி கொன்றை மதமத்தம்எருக்கொடு கூவிளம் பொன்னியன்ற சடையில் பொலிவித்த புராணர் என்றும்; நொச்சியே வன்னி,கொன்றை,மதி,கூவிளம்,உச்சி புளைந்தவர் என்றும் திருஞானசம்பந்தர் அருளிச் செய்துள்ளார்.

சுந்தரர், மத்தமா மலர் கொன்றை வன்னியும்.. வெள்ளெருக்கச் சடையார்.. ஆரணீய விடங்கரே; என்றும் கரந்தை கூவிளமாலை கடிமலர்க் கொன்றையும் சூடி என்றும்; பாடிப்பரவியுள்ளார்.

ஐந்தும் - மரங்களும்

சிவ வழிபாட்டில் ஐந்து, எட்டு என்ற எண்கள் சிறப் பான இடத்தைப் பெற்றுள்ளன. சிவபெருமானின் திரு முகங்கள் ஐந்து, அவரால் உண்டாக்கப்பட்ட பஞ்ச பூதங்கள், அவருடைய திருமந்திரம் (பஞ்சாட்சரம்) முதலான யாவும் ஐந்து என்ற எண்ணிக்கையில் இருப்பதைக் காணலாம். அதைப் போலவே சிவத்தோடு தொடர்புடைய மரவழிபாட்டிலும் ஐந்து என்ற எண் சிறந்த இடத்தை பெற்றுள்ளது. பாற்கடலில் இறைவன் அருளால் தோன்றிய கற்பகத் தருக்கள் ஹரிசந்தணம், பாரிஜாதம், கற்பகம், மந்தாரம், சந்தனம் என்ற ஐந்தாகும். இவற்றின் அடியில் சிவபெருமான் அமர்ந்து அருள்பாலிக்கிறார். பஞ்ச தருக்களாகிய இவை ஐந்து நெல்லிமரங்களாகி நின்று இறைவருக்கு நிழல் பரப்பிய தலம் திருநெல்லிக் காவாகும்.

சிவபூசைக்குரிய பத்திரங்களைத் (இலைகளைத்) தரும் மரங்களில் முதன்மை பெற்றவை கூவிளம், நொச்சி, மாவிலங்கை, விளா, வன்னி என்ற ஐந்தாகும் இவற்றைப் பஞ்ச வில்வங்கள் என்பர். திருநீலக்குடியைத் தலபுராணம் பஞ்சவில்வாரண்யம் என்றழைக்கிறது.

சிவபெருமான் ஐந்து ஆலமரங்கள் சூழ வீற்றிருக்கும் இடம் பஞ்சவடி ஆகும்.

சிவபெருமான் அடுத்தடுத்து இருக்கும் ஐந்து வனங்களில் வீற்றிருக்கின்றார். இவை முல்லைவனமான திருக்கருகாவூர்; காசிகா வனமான இரும்பூளை, பாதிரிவனமான அவளிவள்நல்லூர், வன்னி வனமான அரதைப் பெரும்பாழி, வில்வவனமான திருக்கொள்ளம் பூதூர் ஆகிய ஐந்தாகும். இவற்றைப் பஞ்சாரண்யங்கள் என்று புராணங்கள் போற்றுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தலமரங்களும் தலங்களும்

திருத்தலங்களுக்குச் சிறப்பு சேர்ப்பவை தலமரங்கள், தலமரக் கூட்டங்களின் பெயரால் திருத்தலங்களுக்குப் பாரிஜாதவனம், கரவீரம், வன்னிக்காடு முதலிய பெயர்கள் அமைகின்றன. இப்பகுதியில் தலமரங்கள் சிலவற்றின் பெயர்ப் பட்டியலையும் அவற்றைத் தலமரங்களாகப் பெற்றுள்ள தலங்களின் பெயர்களையும் அறிந்துமகிழலாம்.

அகில் – திருக்காரவாசல்
அத்தி
திருமங்கலக்குடி, அத்தீச்சரம், கானாட்டுமுள்ளூர், திருஒற்றியூர்
அரசு – அரசிலி, திருவாவடுதுறை
அலரி – கரவீரம் (கரையபுரம்)
ஆச்சா –ஆச்சாள்புரம் (நல்லூர்பெருமணம்)
ஆத்தி – திருவாப்பாடி, திருச்செங்காட்டிங்குடி
ஆலம் – வடதிருவாலங்காடு, பழுவூர் தென்திருவாலங்காடு, ஆலந்துறை
ஆமணக்கு – கொட்டையூர்
இலந்தை – கீழ்வேளூர், பவானி உத்தரகோசமங்கை
இலுப்பை – பழமண்ணிப் படிக்கரை, திருச்செங்கோடு
ஈச்சம் – ஈச்சங்குடி
எருக்கு – எருக்கத்தம்புலியூர்
எலுமிச்சை – அன்னியூர்
கடம்பு – கடம்பர் கோயில், மதுரை,
கடுக்காய் – கொருக்கை வீரட்டம்
கருங்காலி – மயேந்திரபள்ளி
கள்ளி – கள்ளில், கள்ளிக்காடு
களா – பாவநாசம்
காரை – கச்சிநெறிக்காரைக்காடு
கிளுவை – கடைமுடி,
குத்தாலம் – குத்தாலம் (திருத்துருத்தி)
குரா – திருக்கோடிக்கா, திருவிடைக்கழி
குருக்கத்தி – அத்திப்புலியூர்
குருந்தம் – திருப்பெருந்துறை குன்றியூர்
ஒரிலைக்குருந்து – தண்டலை
கூவிளம் – திருக்கடவூர், திருத்தருப்பூண்டி,
கொன்றை – திருவதிகை, திருப்புத்தூர், அச்சிறுபாக்கம்
கோங்கிலவம் – திருமங்கலக்குடி, கைச்சினம்
சண்பகம் – திருநாகேச்சுரம், கும்பகோணம்,சிவபுரம்
சந்தனம் – ஸ்ரீ வாஞ்சியம்
சாய் (கோரை) – திருச்சாய்க்காடு
செங்கரும்பு – கோயில் வெண்ணி
ஸ்ரீலீ (வாழை) – திருப்பைஞ்ஞீலி
தருப்பை – திருநள்ளாறு
தாழை – மயேந்திரபள்ளி
திரிபலா – ஸ்ரீசைலம்
தில்லை – சிதம்பரம்
துளசி – திருவிற்குடி
தென்னை – வடகுரங்காடுதுறை, திருத்தெங்கூர்
தேவதாரு – பெருஞ்சேரி வழுவூர்
தேற்றமரம் – திருக்குவளை
நந்தியாவர்த்தம் – இடபேசுவரம் துறையூர்
நாகலிங்கம் – சென்னை புலியூர்
நாரத்தை – பேரையூர், ஓடத்துறை
நாவல் – திருநாவலூர், திருவானைக்கா
நெல்லி – நெல்லிக்கா, திருமணம்
பனை – பனையூர், பனங்காட்டூர், திருப்பனந்தாள்
பராய் – பராய்த்துறை
பலா – திருக்குற்றாலம், கடிகுளம்
பலாசு – கஞ்சனூர், புரசவாக்கம்
பாதிரி – அவிநாசி, திருப்பாதிரிப்புலியூர்
பாரிஜாதம் – திருக்களர், நறையூர் சித்தீச்சரம்
பாலை – பாலைத்துறை, திருப்பாலைப்பந்தல்
புங்கன் – திருப்புங்கூர்
புளி – கேகரை, கரிவலம்வந்தநல்லூர்
புன்னை – மயிலாப்பூர், திருப்புறம்பயம்
பூளை – இரும்பூளை
பெருங்காயம் – சின்ன கயிலாயம் (இமயம்)
மகிழ் – திருவொற்றியூர், நீடூர்
மந்தாரம் – ஆற்றூர், செதலப்பதி
மருது – திருவிடைமருதூர், நயினார் கோயில்
மல்லிகை – இலம்பையங்கோட்டூர், பாசூர், சிக்கல்
மா – காஞ்சி, மயிலாடுதுறை மாந்துறை
மாவிலங்கை – திருக்கேறை, நாட்டியத்தான்குடி
மூங்கில் – திருநெல்வேலி, சீர்காழி திருப்பாசூர், திருவேட்களம்
முல்லை – திருக்கருகாவூர், தென் வட திருமுல்லை வாயில்கள்
வன்னி – திருநள்ளாறு, விருத்தாசலம்
வாழை (மருகல்) – தேவூர், திருமருகல்
வாழை (கதலி) – திருப்பழனம், திருக்கழுக்குன்றம்
வாழை (வெள்) – தேவூர்
விருட்சி – கடவூர் மயானம்
விளாமிச்சை – விளநகர்
வெட்சி – கங்கை கொண்டானுக்கு அருகிலுள்ள சிவபுரம்
வேலம் – திருவேற்காடு, வேலம்புத்தூர்
வேம்பு – வைத்தீசுவரன் கோயில்,

குறிப்பு : வழிபாட்டில் முக்கியமான இடம் பெற்றுள்ள உருத்திராட்சம், கொன்றை, வாழை பற்றிய விவரங்கள் ஏற்கனவே வெளியாகிவிட்டதால் அவை இங்கு இடம் பெறவில்லை. வாழைவன நாதர் என்ற தலைப்பில் பக்கம் 27–லும்; கொன்றை எனும் தலைப்பில் பக் 19–லிலும்; உருத்திராட்சம் என்ற தலைப்பில் பக் 5–லும் செய்திகள் வெளியாகியுள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாதிரி வனத்து அருந்தவ நாயகி

தமிழகத்தின் தொன்மையான மரம் பாதிரி இம்மரம் அவிநாசியிலும், திருப்பாதிரிப்புலியூரிலும் சிறப்புடன் போற்றப்படுகிறது; இந்த இரண்டு இடத்திலும் அம்பிகை பாதிரி மரத்தின் கீழ் அருந்தவம் புரிந்துள்ளாள். திருப்பாதிரிப்புலியூரில் கருவறையின் வடமேற்கில் பட்டுப் போனநிலையில் தலமரமும் அதன்கீழ் ஐதீகச் சிற்றாலயமும் உள்ளன. இந்த சிற்றாலயத்தில் பீடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதில் அருவநிலையில் வீற்றிருந்து அம்பிகை தவம் புரிந்து கொண்டிருக்கிறாள். இவளை அருந்தவ நாயகி என்று அழைக்கின்றனர். திருமூலர் பராசக்தியை அருந்தவப் பெண்பிள்ளை என்று போற்றுவது இங்கு சிந்திக்கத் தக்கதாகும்.

திருபாதிரிப்புலியூரிலுள்ள பாதிரி மரம் பன்னிரு வகையான பூக்களை பூத்ததென்று தலபுராணம் கூறுகிறது. இம் மரத்தினடியில் அம்பிகை தவம் செய்த போது பாதிரி மலர்களுடன் இது 1. கோங்கு, 2. சண்பகம், 3. பிச்சி, 4. வெள்ளெருக்கு, 5. செங்குவளை, 6. தாமரை, 7. புன்னை, 8. தேன்கமழ் கொன்றை, 9. ஞாழல், 10. ஊமத்தம், 11. செழித்து, அலர்கின்ற தாழை, ஆகிய மலர்களையும் ஒரேசமயத்தில் பூத்து அவளுடைய பூசைக்கு உதவியதென்று அது கூறுகிறது.

அவிநாசியில் ஆலயத்திற்குத் தென்கிழக்கில் பாதிரி மரமும் அதன்கீழ் அம்பிகை தவக்கோலத்தில் வீற்றி ருக்கும் ஆலயமும் உள்ளன.

பற்பலகனி தரும் கற்பகத்தரு

★ மேலே குறித்த பாதிரியைப் போலவே கற்பகமரமும் தன்னிடமிருந்து அனேக வகையான பழங்களைத் தோற்றுவிக்கும் என்றும் உலகிலுள்ள அத்தனை வகை பழங்களும் இந்த மரத்தில் காய்த்துப் பலன் தரும் என்றும் புராணங்கள் கூறுகின்றன. இதையொட்டி கற்பக விருட்ச வாகனத்திலுள்ள மரத்தின் கிளைகளில் மா, பலா, வாழை, அன்னாசி, ஆப்பிள், திராட்சை என்று பலவகையான கனிகளைக் கட்டித் தொங்க விடுகின்றனர்.

★ (ஜோதி விருட்சம்) ஒளிவளர்மரம்

இரவில் ஒளி உமிழும் மரங்கள் சிவன்மலை, வெள்ளியங்கிரி முதலிய மலைகளில் உள்ளதாகக் கூறுகின் றனர். இவை ஜோதி விருட்சம் என்றும் அழைக்கப்படுகின்றன.பேரூர்ப் புராணத்தில் வெள்ளியங்கிரி மலையில் ஜோதி விருட்சம் உள்ளதென்று கூறப்பட்டுள்ளது. விஞ்ஞானிகள் பலர் இத்தகைய மரங்கள் உலகின் பலபாகங்களில் இருப்பதாகக் கூறுகின்றனர். சித்தர்கள் இம்மரத்தைச் சிறப்புடன் போற்றியுள்ளனர். இது போன்றே ஜோதிர் லதா என்னும் ஒளிரும் கொடிகளும் உள்ளன.

முத்திபெற்ற முள்ளிச்செடி

பல பிறவிகளில் நன்நெறியைக் கடைப்பிடித்து அரிய தவங்களையும் உயர்ந்த பக்தியைச் செய்தவர்களே மோட்சம் எனும் பேரின்ப உலகத்தை அடைய முடியும். ஆனால் ஒரு முள்ளிச்செடி ஒளியுடல் பெற்று மோட்சம் சென்றதையும் வரலாறு கூறுகிறது.

சிதம்பரத்தில் வாழ்ந்தவர் கொற்றவன்குடி உமாபதி சிவம் என்னும் பேரருளாளர். இவர் ஒருசமயம் தனது மடத்திற்கு விறகு வெட்டும் பணி செய்து வந்த பெற்றான் சாம்பன் என்பவனுக்கு இறைவன் ஆணைப்படி சிவஞான உபதேசம் செய்தார். அவன் ஒளியுடல் பெற்று மோட்சம் அடைந்தான். சாம்பனின் உறவினர்கள் அரசனிடம் சென்று விறகு தரும் பணியைச் சரிவரசெய்யாததால் உமாபதியார் அவனை தீயிட்டுக் கொன்று விட்டார் என்று வழக்கு கூறினார். அரசன் நேரில் வந்து அடியவரிடம் ஐயா உம்மை நான் நம்புகிறேன் என்றாலும் வழக்கை விசாரிக்க வேண்டியது எமது கடமை. நீங்கள் அவனை மோட்சத்திற்கு அனுப்பியது உண்மையா என்றான். அவர் அரசே அதற்குத் தகுதியானவர் இங்கே இருப்பின் அவர் விரும்பினால் அவரை மோட்சத்திற்கு அனுப்பமுடியும். யாராவது அதற்குத் தயாராக இருக்கிறார்களா? என்று கேட்டார். தகுதியுள்ள ஒருவரும் அங்கு இல்லை பின்னர் அவர் சுற்றிப் பார்த்து தனது உடையவருக்கு அபிஷேகம் செய்ய நீரில் செழித்து வளர்ந்திருந்த முள்ளிச் செடியைக் கண்டார். உரிய மந்திதரத்தை ஓதி அதன்மீது நீரைவார்த்தார். அந்த முள்ளிச் செடி ஒளிவடிவம் பெற்று யாவரும் காண விண்ணில் சென்று மறைந்தது. அதை கண்டு அனைவரும் அதிசயித்தனர்.



காமவல்லியான கௌரிதேவி தழுவி மகிழும் கற்பகவிருட்சமான
அண்ணாமலையெம் அண்ணல் அருளால்
எல்லோரும் எல்லாமும் பெற்று இனிது வாழ்க!!!



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

ஸ்ரீ ராஜகோபுரத்துறையும் ராஜராஜனே போற்றி! போற்றி!!



ஸ்ரீ ராஜகோபுரங்கள்

"செங்கண் விடையார் திருமேனி மணலால் ஆக்கிச் சிவாலயமும்
துங்க நீடு "கோபுரமும்" "சுற்றாலயமும்" வகுத்தமைத்தார்" – சேக்கிழார்

தென்னிந்திய ஆலயங்களுக்கு அழகுடன் கம்பீரத்தை அளிப்பது ராஜகோபுரங்களாகும். இவை தமிழர்களின் கட்டிடக் கலைக்கும். கலைத்திறனுக்கும் சான்றாக விளங்குகின்றன. நெடிய வாயிலின்மீது கட்டப்பட்டு இருக்கும் உயரமான கோபுரங்கள் வலிமையும் அழகும் கொண்டவைகளாகும்.

கோபுரங்களையே கோவில்களிலுள்ள தெய்வமாகப் போற்றி வணங்குகின்றனர். கருவறையில் உள்ள மூர்த்தம் சூட்சும லிங்கமென்றும் கோபுரத்தை ஸ்தூல லிங்கமென்றும் சமயநூல்கள் கூறுகின்றன. கோபுர தரிசனம் கோடிபுண்ணியம் என்பது பழமொழியாகும். கோபுர தரிசனம் பாபவிமோசனம் என்றும் கூறுவர். அதிகாலையில் எழுந்து கோபுரத்தை வணங்கும் வழக்கம் பலரிடம் உள்ளது.

கோபுரங்களை வழிபடுவது பிரபஞ்ச ரூபமாக விளங்கும் சிவபெருமானை வழிபடுவதற்கு ஒப்பாகும் என்று கூறுவர். கோபுரங்கள் சிவபெருமானின் பேரண்டத் திருமேனியாகும். அண்டங்களில் காணப்படும் விலங்குகள் பறவைகள் அட்ட திக்குப் பாலகர்கள், அஷ்டசத்திகள், அஷ்டபைரவர்கள் தேவர்கள் முனிவர்கள், பசுக்கள் மேய்ப்பவன் முதலிய வடிவங்கள் யாவும் இதில் இடம் பெற்றுள்ளன. மகா புராணங்கள், தல புராணங்கள் ஆகியவற்றில் கூறப்பட்டுள்ள வரலாற்றுக் காட்சிகளை விளக்கும் சுதைச் சிற்பங்களும் இதில் இடம் பெற்றுள்ளன.

இத்தகைய சிறப்புமிக்க ராஜகோபுரங்களின் பெருமைகளை விளக்குவதாகச் சிவமஞ்சரி முப்பத்தெட்டாவது மலரின் முதல் பகுதி திகழ்கிறது. ஆலயங்களில் அமைந்துள்ள ராஜ கோபுரங்கள் அவற்றின் சிறப்புகள், அவற்றிலுள்ள தெய்வத் திருமேனிகளின் விளக்கங்கள் முதலிய செய்திகள் இதில் இடம் பெற்றுள்ளன. இவற்றை அறிந்து மகிழத் தங்களை அன்புடன் அழைக்கிறோம்.

கோல கோபுரம் சூழ ஸ்ரீ விமானத்தில் பொற்கொடியான இமயவல்லியுடன் வீற்றிருக்கும் மகாதேவனான சிவபெருமான் அன்பர்கள் யாவருக்கும் சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வைத் தந்து அருள்புரிய வேண்டுமென்று அவருடைய பொற்பாதங்களைப் போற்றிப் பணிந்து வணங்குகிறோம். -சிவசுந்தரி

5

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தென்னிந்தியத் திருக்கோபுரங்கள் - சிந்தனைத்துளிகள்

★ சோழர்கள் காலம் வரை வாயில்களின் மீது அமைக்கப்படும் கோபுரங்கள் அளவால் சிறியதாகவும், கருவறை மீதுள்ள ஸ்ரீ விமானங்களே மிகப்பெரியதாகவும் அமைக்கப்பட்டன. இதனைத் தஞ்சைப் பெரிய கோயில் தாராசுரம் ஐராவதேசுவரம், திரிபுவன கம்பகரேசுவரம் முதலிய ஆலயங்களில் காணலாம்.

பிற்காலச் சோழர்களும் அவர்களுக்குப் பின் வந்த மற்ற மன்னர்களும் ஸ்ரீ விமானத்தைச் சிறியதாகவும் வாயில்மீது அமையும் கோபுரங்களை மிகப் பெரியதாகவும் அமைக்கத் தொடங்கினர். திருவண்ணாமலை, திருக்கழுக்குன்றம், காஞ்சிபுரம், மதுரை முதலிய தலங்களிலுள்ள ஆலயங்களில் இந்த அமைப்பைக் காணலாம்.

★ மயமதம் எனும் நூலில் 15 வகையான இராஜ கோபுரங்கள் குறிக்கப்பட்டுள்ளன. இவற்றின் பெயர்கள் 1. ஸ்ரீகரகம், 2. ரதிகாந்தம், 3. காந்தவிஜயம், 4. விஜய விசாலகம், 5. விசாலாலயம், 6. விப்ரதீகாந்தம், 7. ஸ்ரீகாந்தம், 8. ஸ்ரீகேசம், 9. கேசவிசாலகம், 10. சுவஸ்திகம், 11. திசாசுவஸ்திகம், 12. மர்தசம், 13. மாத்ர காண்டகம், 14. ஸ்ரீவிசாலம், 15. சதுர்முகம் என்பதாகும். சதுர்முக கோபுரத்தைத் திருவானைக்காவில் காணலாம்.

★ கோபுரங்களில் உள்ள நிலைகள் உயரமான இடத்தில் பாதுகாப்பாகவும் விசாலமாகவும் அமைந்திருந்ததால் அவற்றை ஆவணக் காப்பகங்களாகவும் பயன்படுத்தினர். தென் மாவட்டங்களில் பல ஆலயங்களின் கோபுரங்கள் ஆவணக்காப்பகமாக பயன்படுத்தப்பட்டதைச் செவிவழிச் செய்திகள் கூறுகின்றன.

★ கோபுர நிலைகள் கலைக்கூடமாகவும் விளங்குகின்ற சில கோபுரங்களின் தளங்கள், ஓவியங்களாலும் சிற்பங்களாலும் பொலிவு படுத்தப்பட்டுள்ளன. திருப்புடைமருதூர் நாறும்பூ நாதசுவாமி ஆலய கோபுரத்தில் தலவரலாற்றை விளக்கும் ஓவியங்களும் சமயக் குரவர்களின் வரலாற்றை விளக்கும் ஓவியங்களும் நுண்மையான கலை நுணுக்கத்துடன் தீட்டப்பட்டுள்ளன. இடையிடையே மரத்தாலான அழகிய சிற்பங்களும் இதில் இடம் பெற்றுள்ளன. பாண்டிய நாட்டுப் பழம்பதிகளான பதினான்கு ஆலயங்களும் அவற்றின் தலமரத்துடன் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளன.

ராஜகோபுரங்களின் வளர்ச்சி

20ம் நூற்றாண்டின் பின் பகுதியிலும் 21ஆம் நூற்றாண்டின் முன் பகுதியிலும் நூற்றுக்கும் அதிகமான ராஜ கோபுரங்கள் கட்டப்பட்டன. தொழில் நுட்ப வளர்ச்சி காங்க்ரீட் தொழில்நுட்பம் இவற்றால் இப்பணி எளிதாகியுள்ளது. சென்னை மாநகரில் அமைந்துள்ள திருமயிலை காரணீசம் சைதாப்பேட்டை காரணீசம், மயிலை வெள்ளீசம், மேற்கு மாம்பலம் காசிவிசுவேசம், திருவேற்காடு வேதபுரீசுவரம், தங்கசாலை ஏகாம்பரநாதம் முதலிய அனேக ஆலயங்களில் புதிய ராஜகோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தென்னகமெங்கும் ஏராளமான புதிய ராஜகோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

மிக உயரமான தென்காசி ராஜகோபுரம் இந்த நூற்றாண்டிலும் கோபுரக்கலை தொடர்ந்து செழித்து வளர்ந்து வருவதை உணர்த்துகிறது.

ராஜகோபுரங்களிலுள்ள சிற்பங்கள் உரிய வண்ணங்கள் தீட்டப்பட்டு வண்ணக்களஞ்சியங்களாகத் திகழ்கின்றன. இடைக்காலத்தில் ஒரே வண்ணம் தீட்டும் வழக் கம் வந்தது சுதைச் சிற்பங்கள் அலங்கரிக்கும் கோபுரங் களுக்கு ஒரே வண்ணம் தீட்டுவது அதன் அழகை எடுத்துக்காட்டுவதாக இல்லை. எனவே மீண்டும் பஞ்ச வர்ணம் தீட்டும் வழக்கம் வந்துள்ளது. இது மகிழ்ச்சி யான செய்தியாகும்.

அரச இலச்சினையான இராஜகோபுரம்

நமது இந்திய அரசின் இலச்சினையாக இருப்பது நான்கு திசைகளையும் நோக்கியவாறு அமர்ந்துள்ள சிங்கங்களாகும். இதன் பீடத்தில் அசோகச் சக்கரம் எனும் தர்மச்சக்கரங்கள் நான்கு யானை, குதிரை எருது ஆகியவையும் பொறிக்கப்பட்டுள்ளன. இவை சாரநாத்தில் அசோகர் அமைத்த நெடுந்தூணின் உச்சியில் இருந்த அமைப்பை ஒட்டி அமைந்ததாகும். இதுபோன்று தமிழ்நாட்டின் சின்னமாக விளங்குவது ஸ்ரீவில்லிபுத்தூர் ராஜகோபுரத்தை முன்மாதிரியாகக் கொண்டு அமைக்கப்பட்ட கோபுரமாகும். இதில் வட்டமான பகுதியில் தமிழ்நாடு அரசு என்ற வாசகமும், நடுவில் நெடிய கோபுரமும் அதற்கு முன்பாக இந்திய தேசியச் சின்னமான சிங்கமும் அதன் இருபுறமும் தேசியக் கொடிகளும் உள்ளன. கீழே சத்யமேவ ஜயதே என்பதின் தமிழ் வடிவமான வாய்மையே வெல்லும் என்ற தொடர் பொறிக்கப்பட்டுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பஞ்சகோபுரங்கள்

ஆலயங்களுக்கு அழகு சேர்ப்பது தலைவாயிலும் அதன்மீது அமையும் கோபுரங்களும் ஆகும். ஆதியில் ஆலயங்கள் சிறியதாக இருந்தபோது முன்வாயிலின் மீது எளிய சிறிய கோபுரம் கட்டப்பட்டது. அவை பல்வேறு பிராகாரங்களுடன் விரிவாக்கம் பெற்ற போது வாயில் களும் அதன் மீது கோபுரங்களும் புதிதாக அமைக்கப் படும் வழக்கம் வந்தது.

ஆலயங்களில் கருவறை வாயிலுக்கு நேராக முதன் மை வாயில் அமைக்கப்பட்டு அதன்மீது கோபுரம் கட்டப் பட்டது. இந்நிலை வளர்ந்து கோயிலுக்கு முன்னும் பின்னுமாகக் கோபுரவாயில்கள் அமைக்கப்பட்டன. இந் நிலையைத் திருமயிலைக் கபாலீசுவரர் ஆலயம், திரு வான்மியூர் மருந்தீஸ்வரர் ஆலயம், திருவிற்குடி வீரட்டே சுவரர் ஆலயம் முதலிய ஆலயங்களில் காணலாம்.

ஆலயம் மேலும் விரிவடைந்த போது நான்கு திசை களையும் நோக்கி நான்கு வாயில்கள் அமைக்கப்பட்டு அவற்றின் மீது கோபுரங்கள் கட்டப்பட்டன. இவை திசை களின் பெயரால் கிழக்குக் கோபுரம் (கீழைக் கோபுரம்); மேற்குக் கோபுரம் (மேலைக்கோபுரம்); வடக்குக் கோபுரம்; தெற்குக் கோபுரம் என்று அழைக்கப்பட்டன. இவற்றை முறையே பூர்வகோபுரம்; பச்சிமகோபுரம்; உத்தரகோபுரம்; தக்ஷிணகோபுரம் எனவும் அழைப்பர். இந்தப் பிராகாரத் தைக் கடந்து உட்சென்றதும் உள்வாயிலின் மீது சற்று அளவால் சிறிய கோபுரம் அமைக்கப்பட்டது. இதனைச் சிவாலயங்களில் ரிஷி கோபுரமென்றும், சக்தி ஆலயங் களில் கிளி கோபுரம்; சிற்ப நூல்களில் மத்திம கோபுரம் என்றும் அழைக்கின்றனர். இவை ஐந்தும் சேர்ந்து பஞ்ச கோபுரங்கள் ஆகும்.

திருக்கழுக்குன்றம் பக்தவத்சலர் ஆலயம், சீர்காழி பிரம்மபுரீசுவரர் ஆலயம், விருத்தாசலம் விருத்த கிரீ சுவரர் ஆலயம் முதலியவை பஞ்சக் கோபுரங்களைக் கொண்ட ஆலயங்களாகத் திகழ்கின்றன.

நான்கு திசைகளை நோக்கி கோபுரங்களை அமைக் காமல் ஐந்துபிராகாரங்களை அமைத்து அவை ஒவ் வொன்றிற்கும் ஒருவாயிலும் அதன்மீது கோபுரமும் அமைக்க வேண்டுமென்று பழைய சிற்பநூல்கள் கூறு கின்றன. இவ்வாறு இறைவனுக்கு முன்பாக ஒரே வரிசை யில் அமையும் ஐந்து கோபுரங்களை அந்த நூல்கள் துவாரசோபை, துவாரசாலை, துவாரப் பிரசாதம், துவார ஹர்மியம், துவாரமர்யாதை என்றழைக்கின்றன. இவற்றில் துவாரமர்யாதை கோபுரமே ராஜகோபுரம் ஆகும்.

இம் மாதிரியான, ஆலயங்களை அரிதாகக் காண கிறோம். திருவானைக்காவல் ஜம்புகேசுவரர் ஆலயத் தில் இவ்வாறு கோபுரங்கள் அமைந்துள்ளன. இந்த ஐந்தையும் கடந்து ஐந்து பிராகாரங்களில் சுவாமி பவனி வந்து விழா காண்கிறார்.

இக்கோயிலின் பரப்பு அதிகமாக இருப்பதால் கோயிலின் பின்புறமும் (கிழக்கில்) வாயில்கள் திறக்கப் பட்டு இரண்டு புதிய கோபுரங்கள் கட்டப்பட்டு உள்ளன. இப்போது ஜம்புகேசுவரர் ஆயலத்தில் ஏழுகோபுரங்கள் உள்ளன.



★ பஞ்ச கோபுரங்கள் திருமுதுகுன்றம் – விருத்தகிரீஸ்வரர் ஆலயம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதிக கோபுரங்களைக் கொண்ட ஆலயங்கள்

கோயில்களின் பரப்பிற்கேற்ப அதன் நாற்புறமும் வாயில்களும் கோபுரங்களும் அமைக்கப்பட்டுள்ளன. சிற்பநூல்கள் பஞ்ச கோபுரங்கள் கொண்ட ஆலயங் களை உத்தம வகைக் கோயில்கள் என்று போற்று கின்றன. காலப்போக்கில் கோபுரங்களின் எண்ணிக்கை மேலும் அதிகமாகிவிட்டதைக் காண்கிறோம். அதிக எண்ணிக்கையில் கோபுரங்களைக் கொண்ட ஆலயங் களையும் அவற்றிலுள்ள கோபுரங்களின் சிறப்புக் களையும் அறிந்து மகிழலாம்.

தென்னகத்தில் அதிகமான கோபுரங்களைக் கொண்ட சிவாலயம், மதுரை மீனாட்சியம்மன் ஆலய மாகும். இதன் வெளிமதிலில் நான்கு திசைகளையும் நோக்கியவாறு மிகப்பெரிய நான்கு ராஜ கோபுரங்கள் உள்ளன. இவற்றில் கிழக்குக் கோபுரம் இந்திர விமான மென்றும் மேற்குக் கோபுரம் வருண விமானமென்றும் பழைய நூல்களில் குறிக்கப்பட்டுள்ளன. வடக்கு கோபுரம் முன்னாளில் கிரீவப் பகுதியில் சேதமடைந்து இருந்தால் மொட்டைக் கோபுரம் என்று அழைக்கப் பட்டது. இப்போது நன்கு திருத்திக் கட்டி பொலிவுடன் விளங்கிய போதிலும் மக்கள் அதை மொட்டைக் கோபுர மென்றே அழைக்கின்றனர். தெற்குக் கோபுரம் கட்டிட வரலாற்றில் தனிச்சிறப்பு பெற்றதாகும். இது நெளிவாக உள்வளைவுடன் அமைகிறது. இவ்வகைக் கோபுரங் களைப் பெண்கோபுங்கள் என்பர். இவற்றைக் கடந்து உள்ளே சென்றதும் கிழக்கில், சுவாமிக்கும் அம்பிகைக் கும் தனித்தனியே கோபுரங்கள் உள்ளன. இதில் அம்மன் கோபுரம் சித்திரக் கோபுரம் என்று அழைக்கப்படுகிறது. இதே மதிலில் மேற்கில் சுவாமிக்கும் அம்பிகைக்கும் தனித்தனி மேலைக் கோபுரங்கள் உள்ளன.

இதையடுத்து உள்ளே சென்றால் சுவாமி சந்நிதி உள்கோபுரம் உள்ளது. இது போன்று மீனாட்சியம்ம னுக்கும் தனியே சந்நிதி கோபுரம் அமைந்துள்ளது. சுவாமி சந்நிதிக்கு மட்டும் உள்மதிலில் கிழக்கு, மேற் குடன் தெற்கிலும், வடக்கிலும் கோபுரங்கள் அமைந் துள்ளன. தெற்குக் கோபுரம் மீனாட்சி ஆலயத்திற்குச் செல்ல வசதியாக இடைக்கட்டில் இருப்பதால் இடைக்கட்டு கோபுரம் என்று அழைக்கப்படுகிறது.

இவ்வகையில் மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்தில் 12 கோபுரங்கள் உள்ளன.

இதற்கு அடுத்தபடியாக பத்து கோபுரங்களைக் கொண்ட ஆலயம் திருவண்ணாமலை அண்ணா மலையார் ஆலயமாகும். இதில் வெளிமதிலில் நான்கு திசைகளை நோக்கியவாறு நான்கு கோபுரங்கள் உள்ளன. கிழக்கில் உள்ளது பெரிய கோபுரமாகும் உயரம் 274 அடிகள். இது கிருஷ்ண தேவராயரால் கட்டப்பட்டதாகும். தெற்குக் கோபுரம் திருமஞ்சனக் கோபுரம் என்றழைக்கப்படுகிறது. மேற்குக் கோபுரம் மேலைக் கோபுரம் என்றழைக்கப்பட்டு அது மருவி பேய்க் கோபுரம் என வழங்குகிறது. வடக்குக் கோபுரம் அம்மணி அம்மாள் என்னும் பெண் துறவியால் திருப்பணி செய்யப்பட்டதால் அம்மணியம்மாள் கோபுரம் என்றழைக் கப்படுகிறது.

இதைக் கடந்ததும் உள் மதிலைக் அடைகிறோம். இதன் நான்கு புறமும் நான்கு கோபுரங்கள் உள்ளன. கிழக்கில் இருப்பது வல்லாள மகாராஜன் கோபுரமாகும். இதில் அவனுடைய திருவுருவச் சிலை அமைக்கப்பட்டு வீரவசந்த வைபோக வல்லாள மகாராஜன் என்று அவன் பெயர் எழுதப்பட்டு உள்ளது. எஞ்சிய மூன்று திசைகளிலுமுள்ள கோபுரங்கள் அளவில் சிறியதாதலின் (திசைப்பெயருடன் சேர்த்து) கட்டைக் கோபுரங்கள் என்றழைக்கப் படுகின்றன.

மூன்றாவது மதிலின் கிழக்கிலும் மேற்கிலும் வாயில் கள் அமைக்கப்பட்டுள்ளன என்றாலும் கிழக்கு வாயிலின் மீது மட்டுமே நெடிய கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. இதனைக் கிளி கோபுரம் என்றழைகின்றனர். இதனைக் கடந்து உட்சென்றால் கொடிமர வாயிலின் மீது சிறிய ராஜகோபுரம் உள்ளது. அளவில் சிறிய இது ரிஷி கோபுர மென்று அழைக்கப்படுகிறது. இவ்வாறு திருவண்ணா மலையில் பத்து கோபுரங்கள் உள்ளன. மகிழ மரத் தடியில் இருந்து பார்த்தால் ஒன்பது ராஜகோபுரங் களையும் பார்க்கலாம். இதனை நவகோபுர தரிசனம் என்பர்.

ஏழு கோபுரங்களைக் கொண்ட ஆலயம் திருவிடை மருதூர் மகாலிங்க சுவாமி ஆலயமாகும். இதில் வெளி மதிலில் நான்கு திசைகளையும் நோக்கியவாறு நான்கு கோபுரங்கள் உள்ளன. கிழக்கில் உள்ளது ராஜகோபுரம் என்றழைக்கப்படுகிறது. தெற்கிலுள்ளது மாணிக்கக் கோபுரம் இது மணிவாசகர் தினமும் வந்து வழிபட்ட வாயிலாகும். மேற்குக் கோபுரம் மேலைக் கோபுரம் என்றழைக்கப்படுகிறது. வடக்குக் கோபுரம் திருமஞ்சனக் கோபுரம் ஆகும். இதற்கு நேர் எதிரில் காவிரியும் அதன் கரையில் பூசத்துறை மண்டபமும் உள்ளது.

அடுத்து உள் மதிலில் சுவாமிக்கும் அம்பிகைக்கும் தனித்தனி கோபுரங்கள் உள்ளன. சுவாமி சந்நிதி கோபுரம் சோழன் கோபுரம் என்றழைக்கப்படுகிறது. இதில் சோழனைப் பற்றித் தொடர்ந்து வந்த பிரம்ம ஹத்தி அமர்ந்திருக்கிறது. இதற்கிணையாக அம்மன் சந்நிதியில் ஐந்து நிலைகளைக் கொண்ட பெரிய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கோபுரம் உள்ளது. சோழன் கோபுரத்தைக் கடந்து அடுத்த உள்வாயிலுக்குச் சென்றால் அதன்மீது பாண்டியன் கோபுரத்தைக் காண்கிறோம். இதனை யடுத்த உள் வாயிலின் மீது சிறிய கோபுரம் போன்ற அமைப்பு உள்ளது. ஆக இத்தலத்தில் ஏழு கோபுரங்கள் உள்ளன.

ஐந்து கோபுரங்கள் உள்ள ஆலயங்கள் அனேகம் உள்ளன.

குடந்தை நாகநாத சுவாமி ஆலயத்தில் கிழக்கிலும் மேற்கிலும் பெரிய வாயில்கள் அமைக்கப்பட்டு அவற்றின் மீது கோபுரங்கள் கட்டப்பட்டுள்ளன. பின்னாளில் தெற்கு நோக்கியுள்ள அம்பிகைக்காகத் தெற்கில் ஒரு கோபுரம் கட்டப்பட்டுள்ளது. ஆக இந்த ஆலயத்தில் மூன்று கோபுரங்கள் உள்ளன.

திருச்செங்காட்டங்குடி ஆலயத்திலும் கிழக்கு, மேற்கு, தெற்கு ஆகிய திசைகளில் கோபுர வாயில்கள் உள்ளன. பைரவர் ஆலயங்களுக்கு வடக்கு நோக்கி வாசல் அமைக்கப்படுவதில்லை என்பதால் இந்த ஆலயத்தில் வடக்கு வாசல் இல்லை. எனவே இங்கு மூன்று கோபுரங்கள் உள்ளன. இப்படி மூன்று பக்கம் கோபுரங்களைக் கொண்ட ஆலயங்களும் சில உள்ளன.

கிழக்கிலும் மேற்கிலுமாகக் கோபுரங்களைக் கொண்ட அனேக ஆலயங்கள் தென்னகமெங்கும் உள்ளன.

★ திருவண்ணாமலை அண்ணாமலையார் ஆலயக் கோபுரங்கள்



இரண்டு ராஜகோபுரங்கள்

ஒரே ஆலயத்தில் பல்வேறு பெயர்களில் சிவலிங்கமூர்த்தி தனித்தனிச் சந்நிதிகளில் அமைந்திருக்கக் காண்கிறோம். இவற்றில் முதன்மை பெற்று விளங்கும் மூர்த்திக்கே கருவறையும் அதற்கு எதிரில் ராஜகோபுரமும் அமைக்கப்படும்.

வன்பார்த்தான் பனங்காட்டூரில் இரண்டு லிங்கங்களுக்குச் சமமான நிலையில் சந்நிதிகள் கட்டப்பட்டுள்ளன. இவை இரட்டைத் தளிகள் என்று அழைக்கப்படுகின்றன. இத்தகைய தலங்களில் ஏதாவது ஒரு சந்நிதிக்கே தனித்தனியே ராஜகோபுரம் அமைப்பர். அபூர்வமாக சிலதலங்களில் இரண்டு சந்நிதிக்குமே ராஜகோபுரம் அமைக்கப்படுவதும் உண்டு.

எடுத்துக்காட்டாகக் காளையார் கோயிலில் ஒரே மதிலுக்குள் மூன்று சிவாலயங்கள் உள்ளன. இவற்றில் சோமேசருக்கும், சுவர்ணகாளீசுவரருக்கும் ஒரே மதிலில் அடுத்தடுத்து ராஜகோபுரங்களை அமைத்துள்ளனர். சோமேசர் ராஜகோபுரம் அளவால் பெரியதாகும். இதைக் கட்டியவர்கள் மருது பாண்டியர்களாவர். இதனை மதுரை தெரியக் கோபுரம் கட்டிய மருதுபாண்டியர் என்று நாட்டுப்புற பாடல் குறிக்கிறது.

ஒரே வரிசையில் அமைந்த மூன்று ராஜகோபுரங்கள்

கொடுமுடி (எ) திருப்பாண்டிக்கொடுமுடி மகுடேசுவரர் ஆலயத்தில் ஒரே வரிசையில் மூன்று ராஜகோபுரங்கள் உள்ளன. இவை மகுடேசுவரர், வீரநாராயணப்பெருமாள், வேதாம்பிகை ஆகியோரின் சந்நிதிக்கு எதிரில் அமைக்கப்பட்டுள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ராஜ கோபுரங்களும் சுதைச் சிற்பங்களும்



வானுற நிமிர்ந்து நிற்கும் நெடிய கோபுரங்களுக்கு வனப்பூட்டுபவை அதிலுள்ள சுதைச் சிற்பங்கள் ஆகும். கோபுரத்தின் நீள அகல உயரங்களுக்கேற்பச் சுதைச் சிற்பங்கள் அமைக்கப்படுகின்றன. வடிவாலும் வனப்பாலும் கண்ணையும் கருத்தையும் கவரும் இவை புராண வரலாற்றையும் தலவரலாற்றையும், அடிப்படையாகக் கொண்டவைகளாகும்.

கோபுரங்களில் ஐந்து வகையான சிற்பங்கள் அமைக்கப்படுகின்றன. முதல் வகை சிற்பங்கள் அனைத்து கோபுரங்களுக்கும் பொதுவானதாகும். இவை துவார பாலகர்கள், கோபுரம் தாங்கிகள், கோடிப் பாளைகள், யாளிகள், மகாநாசிகள் முதலியனவாகும்.

கோபுர நிலைத் துவாரங்களான அடுக்குகளின் இரு புறமும் வாயில்கள் அமைந்துள்ளன. இந்த வாயில்களின் இருபுறமும் துவாரபாலகர்கள் உள்ளனர். கீழ்த்தளத்திலுள்ள துவாரபாலகர்களுக்குக் கைகள் அதிகமாக உள்ளன. மேலே செல்லச் செல்லக் குறைந்து உச்சித் துவாரத்திலுள்ள துவார பாலகர்களுக்கு இரண்டு கைகளே உள்ளன. இவர்களின் பக்கத்தில் அஷ்டமங்கலங்களை ஏந்திய அப்சரப் பெண்கள் நிற்கின்றனர்.

இவர்களை அடுத்து ஒவ்வொரு தளத்தையும் தன் தோளில் சுமந்து தாங்குவது போல் கோபுரத் தாங்கிகள் உள்ளனர். கோபுரங்களின் உச்சியில் இருபுறமும் மகா நாசிகள் எனப்படும் பிரபைகள் அமைந்துள்ளன. இவற்றில் வட்டவட்ட அடுக்குகளாக பூதங்கள், பூக்கள், அன்னங்கள், கந்தர்வக் குழந்தைகள் ஆகிய வடிவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கோபுரங்களின் முகப்பில் கஜலட்சுமியையும், அவளுடன் விநாயகர் சரஸ்வதி ஆகியோரையும் அமைக்கும் வழக்கம் உள்ளது.

இரண்டாவது வகைச் சிற்பங்கள் மகாபுராணத்திலும் தோத்திரங்களிலும் கூறப்பட்டுள்ள தெய்வ வடிவங்களாகும். இவ்வகையில் கோபுர அடுக்குகளின் மூலைகளில் அஷ்டதிக்குப்பாலகர்கள், அஷ்டருத்திரர்கள், அஷ்டவசுக்கள், அஷ்டபைரவர்கள் ஆகியோர் அமைக்கப் பட்டுள்ளனர். கோபுரத்தின் தென்பகுதியின் நடுவில் தட்சிணாமூர்த்தி அமைக்கப்படுகிறார். தட்சிணம் என்ற சொல்லுக்கு அளவில்லாத ஆற்றல் என்பது பொருள். சிவபெருமான் வீரம் விளைத்து வெற்றி பெற்றதைக் குறிக்கும் காட்சிகளான காமதகனம். சூர்மசங்காரம். கஜசம்ஹாரம். திரிபுரமெரித்தல் முதலியவை தெற்கில் அமைக்கப்படுகின்றன.

மேற்குப் பக்கம் திருமாலின் லீலைகளும், திருமாலுக்குச் சிவபிரான் அருள்புரிந்த வரலாறுகளும் குறிக்கப்பட்டுள்ளன. வடக்குப் பக்கத்தில் பிரம்ம தேவன் அவனது தேவியர், சிவன் காளியோடு ஆடியது துர்க்கைக்கு அருள் புரிந்தது முதலியனவும் காணப்படுகின்றன.

கிழக்குப் பக்கத்தில் பெருமானின் அருளும் கோலங்களான கல்யாணசுந்தரர் இடபாரூடர் பஞ்ச மூர்த்திகள் முதலியன இடம் பெறுகின்றன.

மூன்றாம் வகைச் சிற்பங்கள் அந்தத் தலத்திற்குரிய வரலாறுகளைக் குறிக்கும் சிற்பங்கள் ஆகும். எடுத்துக்காட்டாக மயிலாப்பூர் கோபுரத்தில் அம்பிகை மயில் வடிவில் பூசித்தல், பிரம்மனுக்குக் காட்சியளித்தல் முதலிய சிற்பங்கள் உள்ளன.

திருக்கடையூரில் அபிராமி, அபிராமி பட்டருக்காகக் காதுத் தோட்டைவீசி நிலவாகப் பிரகாசிக்கச் செய்ததைக் குறிக்கும் கதைச் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. அபிராமி (நிலவு போன்று உயரத்தில் பிரகாசிக்கும்) தோடு, மன்னன், மந்திரி, அபிராமிபட்டர், சேவர்கள் ஆகியோருடைய சிற்பங்கள் இதில் இடம் பெற்றுள்ளன.

நான்காம் வகையில் அமைந்தவை அடியவர்களின் பெருமைகளை விவரிக்கும் காட்சிகளாகும். குறிப்பாக சமய குரவர்களான திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், ஆகியோரின் வாழ்வில் நடைபெற்ற அற்புதங்களை விளக்கும் காட்சிகள் சிறப்புடன் அமைக்கப்பட்டுள்ளன. திருஞானசம்பந்தர் முத்துப் பல்லக்கில் பவனிவருதல் சமணர் பௌத்தர்களுடன் வாதிடுதல், அனல் வாதம் புனல்வாதம் செய்தல் முதலியனவும்;

அப்பர் வாழ்வில் நடைபெற்ற கல்தெப்பமாக மிதத்தல் எதிர்த்து வந்த யானையை வெருட்டுதல். அப்பூதி அடிகளின் மாண்ட பாலகனை உயிர்மீட்பது முதலியனவும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுந்தரரின் திருமண சமயத்தில் இறைவன் வல்வழக் கிடுதல், சுந்தரர் முதலைவாய்ப் பிள்ளையை மீட்பது முதலியனவும், மாணிக்கவாசகர் ஊமைப் பெண்ணைப் பேசவைத்தல், நடராசர் கேட்கத் திருவாசகம் கூறுதல் அதை நடராசர் ஏட்டில் எழுதிக்கொள்ளுதல், முதலி யனவும் இடம்பெற்றுள்ளன.

ஐந்தாம் வகையில் இடம்பெறுவது துணைச் சிற்பங் களான கோடி பூதங்கள், இடபங்கள் கொடிப் பாளைகள் சிம்மங்கள் முதலியனவாகும். கோபுரங்கள் யாவும் சிற்பக் கலைஞர்களின் கற்பனை வளத்திற்கும் கலைத்திற னுக்கும் சான்றாக விளங்கி வருகின்றன.

★ ராஜகோபுரம் பிரபஞ்சத்தின் வடிவமென்பதாலும் உலக விருத்திக்குக் காமம் அடிப்படை என்பதாலும் அதில் காம விகாரங்களை வெளிப்படுத்தும் வகையில் ஆண்களும் பெண்களும் முறையற்ற வகையற்ற நிலையில் கூடி மகிழும் மிதுன சிற்பங்களும் இடம் பெறுகின்றன. இவை உலகின் கீழ்மட்ட ஆசைகள் என்ப தால் அடி நிலையில் மட்டுமே அமைக்கப்படும்.

காலப்போக்கில் அவற்றைக் குறைத்து விட்டனர். அதற்கிணையான பிட்சாடனர், அவரைத் தொடர்ந்து வரும் கவர்ச்சி மிகுந்த மோகினி, ரிஷி பத்தினிகள், மற்றும் கண்ணன் கோபிகைகளின் ஆடைகளைக் கவர் ந்து கொண்டு மரத்தில் அமர்ந்திருக்க அந்தப் பெண்கள் கைகூப்பிக் கெஞ்சுதல் முதலான சிற்பங்கள் அமைக்கப் பட்டன. பின்னாளில் அவையும் விலக்கப்பட்டு விட்டன. ★

சுதைச் சிற்பங்களால் பொலியும் கோபுரங்கள்

தன்னிடமிருக்கும் சுதைச் சிற்பங்களால் சிறப்புப்பெற்ற ராஜகோபுரங்கள் தென்னகத்தில் பல உள்ளன. இவை ஒவ்வொன்றும் தனது கலைச் சிறப்பாலும் அழகாலும் வரலாற்றில் தனியிடத்தைப் பெற்றுள்ளன. மயிலாடுதுறை மாயூரநாதர் கோபுரம். திருமயிலை கபாலீசுவரர் ராஜகோபுரம். மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் ராஜகோபுரங்கள், திருவீழிமிமலை வீழிநாதர் கோபுரம், முதலியவை அதிகமான சிற்பங்களைக் கொண்டுள்ளன. இவை ஒவ்வொன்றின் பெருமைகளையும் விளக்கத் தனித்தனி நூல்களை எழுத வேண்டியிருக்கும். இங்கு மயிலை கபாலீசுவரர், மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலய கோபுரங்களின் சிற்பச் சிறப்புகளைப் பற்றிய சிறு குறிப்பைக் காணலாம்.

மதுரைக் கோபுரங்கள்

மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்திலுள்ள நான்கு பெரிய கோபுரங்களிலும் அனேக சுதைச் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. இவை அளவால் பெரியன. இவை ஒவ்வொன்றும் நிலைக் காட்சிகளைக் குறிக்கின்றன. இவற்றிலுள்ள அகோரவீரத்திரர் விஸ்வரூப முருகன் மகா சதாசிவர், கல்யாண சுந்தரமூர்த்தி முதலிய சிற்பங்கள் கலையுலகத்தில் குறிப்பிடத்தக்க சிறப்புப் பெற்றவை.

சிவபெருமான் உமாதேவியுடன் இடப வாகனத்தில் பவனிவரும் கோலமான இடபாரூடக் காட்சி ஏறத்தாழ ஏழுபதுக்கும் மேற்பட்ட இடங்களில் இக் கோயிலில் தனிச்சிறப்புடன் அமைக்கப்பட்டுள்ளன. இத்திருக் கோலம் கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன. அள வால் பெரிய இச்சிற்பங்கள் கலையுலகச் சாதனையாவே போற்றப்படுகின்றன.

மேலும் சிவபெருமானின் அஷ்டாஅஷ்ட(64) மூர்த்தங் களான மகேஸ்வர வடிவங்கள் தனிச்சிறப்புடன் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவற்றுடன் அந்நாளைய நடைமுறைகளான நாக வல்லி முகூர்த்தம் திருமணங்கள், வேள்விகள், முதலிய வற்றை விளக்கும் காட்சிகளும் இடம் பெற்றுள்ளன.

இங்குள்ள கோபுரங்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுதைச் சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன என்பது பெருமிதத் திற்குரிய செய்தியாகும்

★ மதுரை ஸ்ரீ மீனாட்சியம்மன் கோயில் – தெற்குக் கோபுரம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



திருமயிலைக் கோபுரம்

மயிலாப்பூர் கபாலீச்சுவரர் ஆலய ராஜகோபுரம் சிற்ப வரலாற்றில் தனிச்சிறப்பு கொண்டதாகும். இதில் காம தகனர், வீணாதர தட்சணாமூர்த்தி, மச்சஹரர், கூர்ம சங்காரர், அரியார்த்தர் முதலான அனேக சிவபராக்கிரம வடிவங்கள் இடம்பெற்றுள்ளன. இவையாவும் நடந்து கொண்டிருக்கும் நிகழ்ச்சியை உணர்த்தும் ஐதீகச் சிற்பங்களாகும்.

எடுத்துக்காட்டாகக் காம தகன சிற்பத்தில் பெரு மான் அலட்சியமாகக் காமனை எரிக்கிறார். காமன் உடலில் தீப்பற்றி எரிகிறது. அவனுடனிருக்கும் ரதி கண்ணீருடன் முந்தானையை ஏந்தி கணவனின் உயிரைப் பிச்சையாகக் கேட்கிறாள். திருமால் பிரமன் முதலியோர் செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர். இது போன்று ஒவ்வொரு சிற்பக் காட்சியும் கதையோட் டத்துடன் அமைந்துள்ளன.

மேலும், இதில் அமைந்துள்ள நாயன்மார்களின் வர லாற்றுச் சிற்பங்கள் தனித்தன்மை கொண்டவை களாகும். எடுத்துக்காட்டாக, சுந்தரர் கயிலை மலைச் சாரல், நந்தவனத்தில் மலர்பறிக்கும்போது கமலினி அநிந்திதை ஆகியோரைக் கண்டு காமுறுதல் சிவபெருமான் அவருடைய திருமணத்தைத் தடுத்து நிறுத்துதல், சுந்தரர் வேண்டுகோளையேற்றுச் சோமாசி நாயனாரின் யாகத்திற்குப் புலையனாக எழுந்தருளுதல் ஆகியனவும்; திருஞானசம்பந்தர் முத்துப்பல்லக்கில் பவனி வருதல் அவரைத் திருநாவுக்கரசர் சந்தித்தல் பாண்டியனின் நளிர்ச் சுரத்தை நீக்குதல் ஆண் பனை யைப் பெண்பனை ஆக்குதல், மயிலையில் எலும்பைப் பெண்ணாக்குதல் முதலியனவும்; திருநாவுக்கரசு நாயனார் அப்பூதி அடிகளின் அரவு தீண்டி இறந்த மகனை உயிர்ப்பித்தல், முதலியனவும்

மாணிக்கவாசகருக்காக இறைவன் குதிரைச் சேவக னாக வருதல், பிட்டுக்கு மண்சுமத்தல் திருவாசகத்தை ஏட்டில் எழுதுதல் தில்லை மூவாயிரவர்க்குத் திருவாசக த்தின் பொருள் இதுவே என்று கூத்தப்பிரானைக் காட்டி யருளுதல், முதலியனவும் அழகிய சுதைச் சிற்பங் களாகச் செய்யப்பட்டு வண்ணம் தீட்டிப் பொலிவுடன் திகழ்கின்றன.

இக்கோபுரத்தில் இடம் பெற்றுள்ள சிவபராக்கிரம லீலைகளை விளக்கும் சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவை. இவை சிவபரத்துவத்தைச் சிறப்பாக விளக்குகின்றன. எங்கும் காணக்கிடைக்காத சிற்பமாக ஹரதத்த சிவாச்சார்யார் வரலாற்றுச் சிற்பம் உள்ளது. இதில் அவர் மழுவின்மீது அமர்ந்து சிவபரத்துவத்தை நிலை நாட்டுதல் திருமால் அதற்குச் சான்று கூறுதல் அதைக் கேட்டு நிற்கும் திருமாலடியார் முதலியோர் இடம்பெற்று உள்ளனர்.

மேலும் புதுமைக்குப் புதுமை சேர்க்கும் வகையில் ராஜாரவிவர்மா முதலிய தலைசிறந்த கலைஞர்களின் ஓவியங்களான சிவகுடும்பம், கங்கா வதரணம், ரிஷபகுஞ்சரம் (தனித்தனி உடலுடன் யானையும் மாடும் முகத்தில் இணைந்திருப்பது) ராமர் லெட்சுமணன், குகன், மேனகை விஸ்வாமித்திரர் முதலான ஓவியங்களும் இங்கே சிற்பங்களாகியுள்ளன. கலை அன்பர்களின் கண் ணுக்கு விருந்தாக இந்தக் கோபுரம் விளங்குகின்றது.

இதுபோன்று அதிக அளவில் கலை நுணுக்கத்துடன் அடியவர்களின் வரலாற்றுச் சிற்பங்களைக் கொண்ட கோபுரம் வேறு எங்கும் இல்லை என்று கூறப்படுகிறது.

★ சென்னையை அடுத்துள்ள கோவூர் சுந்தரேசுவர் ஆலயம் ராஜராஜசோழனின் திருப்பணியைப் பெற்ற தாகும். இங்கு அமைந்துள்ள இராஜகோபுரத்தில் ஸ்ரீராம உபாசகரான ஸ்ரீமத் தியாகராஜவாமிகளின் வாழ்க்கை வரலாறு முழுவதும் சுதைச் சிற்பங்களாக அமைக்கப் பட்டுள்ளன. இதில் அவருடைய அவதாரம் பிள்ளைப் பருவத்து நிகழ்ச்சிகள், இராமபிரானின் அருள் பெறுதல், கோவூர் பெருமான் மீது பஞ்சரத்தினம் பாடுதல், வனத்தில் ராமர், லெட்சுமணன் அவருக்குத் துணையாக வருதல், கோவூர் சுந்தர முதலியார் அவரை ஆதரித்தது முதலிய காட்சிகள் இடம்பெற்றுள்ளன. இப்படித் தியாகராஜ சுவாமிகளின் வரலாற்றைக் கொண்ட சிவாலய கோபுரம் வேறெங்கும் இல்லை.

★ அதிக அளவு சுதைச் சிற்பங்களைக் கொண்ட கோபுரங்களில் திருச்செந்தூர் முருகனாலய கோபுரமும் ஒன்றாகும். ஒன்பது நிலைகளுடன் 127 அடி உயரம் கொண்ட இக்கோபுரத்தில் நெருக்கமாகவும் நுணுக் கமாகவும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கோபுரங்களிலுள்ள குடவரைத்தெய்வங்கள்

கோபுரங்களின் உள்ளே செல்லும்போது உட்பகுதியில் இருபுறமும் பெரிய திண்ணைகள் இருக்கக் காண்கிறோம். இவற்றைக் குடவரை, குடகரை எனப்பலவாறு அழைக்கின்றனர். பெரும்பாலும் இவை வெற்றிடமாகவே இருக்கும் கோபுரத்தின் மேல்தளங்களுக்குச் செல்ல இங்கே படிகள் அமைக்கப்பட்டிருக்கும். அபூர்வமாகச் சில தலங்களில் இந்தக் குடவரைப் பகுதிகளில் தெய்வங்களை நிலைப்படுத்தி வணங்கி வருகின்றனர். அத்தெய்வங்களில் சிலரைப் பற்றி இங்கே அறிந்து மகிழலாம்.

ஆலங்குடி கலங்காமற் காத்த பிள்ளையார்.

குரு தலம் என்றழைக்கப்படும் ஆலங்குடி (இரும் பூளை) ஆபத்சகாயேசுவரர் ஆலயத்தின் தலை வாயில் தெற்கு நோக்கியுள்ளது. இதிலுள்ள குடவரையில் கிழக்கு நோக்கியவாறு விநாயகர் வீற்றிருக்கிறார். தேவர்கள் மனங்கலங்கி நின்றபோது அவர்களுக்கு அபயமளித்துக் காத்ததால் இவர் கலங்காமற் காத்த பிள்ளையார் என்று அழைக்கப்படுகிறார். இவருக்கு வழிபாடுகளும் சிறப்புப் பூசைகளும் நடைபெற்று வருகின்றன. தலபுராணத்தில் இவர் துதிக்கப்படுகிறார்.

சுசீந்திரம் நடராசர்

மும்மூர்த்தித் தலமான சுசீந்திரத்தில் இராஜகோபுரக் குடைவரையில் சபாபதியான நடராசப்பெருமான் எழுந்தருளியுள்ளார்.

குடைவரைக் காளி

பாண்டியநாட்டுப் பழம்பதிகள் பதினான்கில் ஒன்று திருப்புனவாயில். இங்குள்ள பெரியநாயகி அம்பிகை சந்நிதிக் கோபுரக் குடைவரையில் ஒரு சூலம் நடப்பட்டு உள்ளது. இதனைக் காளி தேவியாகப் போற்றி வணங் குகின்றனர். இக்காளி மிகவும் வரப்பிரசாதியாவாள். இந்தச் சந்நிதி பிரார்த்தனைத் தலமாக விளங்குகிறது.

அதிகார நந்திதேவர்

சிவபெருமானின் முதன்மை அணுக்கத் தொண்டராக விளங்கும் அதிகார நந்திதேவர் தனது தேவியான சுயம்பிரபையுடன் பலதலங்களில் குடவரைத் தெய்வமாக வீற்றிருக்கின்றார். திருக்கழுக்குன்றம் திருக்கழிப்பாலை முதலிய தலங்களில் இக்காட்சியைக் காண்கிறோம். குடவரையில் அமைக்க இயலாத போது, அருகிலுள்ள சுவற்றில் இவர்கள் இருவரும் புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளனர்.

மதுரை குரு ஞானசம்பந்தர்

மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் சுவாமி சந்நிதி கோபுரத்தின் குடவரையில் தருமையாதீனக் குரு முதல்வரான குரு ஞானசம்பந்தரின் திருவுருவம் நிலைப் படுத்தி வணங்கப்பட்டு வருகிறது.

திருவண்ணாமலை அரம்பை

திருவண்ணாமலை கிளிகோபுரக் குடவரையின் வட பகுதியில் தெற்கு நோக்கியவாறு சுவாமிக்கு நாட்டிய அஞ்சலி செய்யும் தெய்வப் பெண்ணான அரம்பையின் திருவுருவம் உள்ளது. இக்காலத்தில் இது வண்ணம் தீட்டப்பட்டுப் பொலிவுடன் விளங்குகிறது.

திருக்கடவூர் முனீஸ்வரர்

திருக்கடவூர் அமிர்தகடேசுவரர் ஆலய கிழக்குக் கோபுரக் குடவரையில் பெரிய சூலங்களையும் தண்டங் களையும் வைத்துள்ளனர். இவற்றில் கோபுரமுனீசுவரன் எழுந்தருளியுள்ளார். மிகச்சிறப்பான முறையில் இவருக்கு ஆண்டுதோறும் விழா கொண்டாடப்படுகிறது.

★ அதிகாரநந்தி–சுயம்பிரபை –சிதம்பரம்

படம் உதவி : G. பிரம்மஸ்ரீ பரமேஸ்வரதீக்ஷிதர் ஐயா அவர்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருவிடைமருதூர்

பட்டினத்தாரும் - பத்ரகிரியாரும்

பரம ஞானியான பட்டினத்தார், தனது சுற்றத்தையும் செல்வங்களையும் துறந்து, பலதலங்களை வணங்கியபின் திருவிடைமருதூருக்கு வந்து தங்கியிருந்தார். கிழக்குக் கோபுரத்தின் குடைவரையில் வீற்றிருந்து சிவயோகத்தில் ஆழ்ந்திருந்தார்.

வடநாட்டு அரசரான பத்ரகிரியாரும் இறைநாட்டம் கொண்டு அரச போகங்களைத் துறந்து, பரதேசியாகத் தென்னாட்டுக்கு வந்தார். அவர் திருவிடைமருதூரில் பட்டினத்தாரைச் சந்தித்து குருவாக ஏற்று அவருக்குச் சீடரானார். மேற்குக் கோபுரத்தில் இருந்த குடவரையில் வீற்றிருந்து தவம் புரிந்தார். பத்திரிகிரியார் குருவருளால் விரைவில் முக்தி பெற்றார். அதன் பின்னர் பட்டினத்தார் இறையருள் கூட்டியவண்ணம் பலதலங்களைத் தரிசித்த பின் திருவொற்றியூரை அடைந்து அங்கு முக்தி பெற்றார். திருவிடைமருதூரில் இருவரும் தவம் புரிந்த இடங்களில் அவரவர் திருவுருவங்கள் நிலைப்படுத்தப்பட்டுப் பூசை செய்யப்படுகின்றன. கிழக்குக் கோபுரத்தில் பட்டினத்தார் உருவமும், மேற்குக் கோபுரக் குடைவரையில் பத்திர கிரியார் உருவமும் நிலைப்படுத்தப்பட்டுள்ளன.

வண்ண ஓவியங்கள்

குடவரையில் தெய்வ உருவங்களை நிலைப்படுத்தி வணங்குவதைப் போலவே வண்ண ஓவியங்களையும் தீட்டியுள்ளனர். மதுரை மீனாட்சி சுந்தரேசர் ஆலயத் திலுள்ள கோபுர குடவரையில் கண்ணாடி ஓவியமாக மீனாட்சியின் கொலுக் காட்சி, மீனாட்சியின் கல்யாணம் ஆகியவை இடம் பெற்றுள்ளன. இவற்றை மக்கள் வழிபடு கின்றனர். ★

கோபுரங்களும் முனீசுவரர்களும்

அனேக கோபுரங்களில் முனீசுவரர்கள் வாழ்வதாக மக்கள் நம்புகின்றனர். இவர்கள் இந்த ஆலயங்களைத் தீயசக்திகளிடமிருந்து காப்பாற்றிப் பாதுகாக்கத் தன்னைத் தானே மாய்த்துக் கொண்டு பின்னர், தெய்வ வடிவம் பெற்று இங்குக் காவலர்களாக விளங்கு

★ அருள்தரும் முனீஸ்வரர் – மதுரை

கின்றனர் என்று செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. திருக்கடவூர் அமிர்த கடேசுவரர் ஆலய மேற்குக் கோபுரத்திலும், மதுரை மீனாட்சியம்மன் ஆலய வடக்குக் கோபுரத்தின் அடியிலும் எழுந்தருளியுள்ள முனீசுவரர்கள் மிகச் சிறப்புடன் கொண்டாடப்படுகின்றனர். இச்சந்நிதிகள் பிரார்த்தனைத் தலமாக விளங்குகின்றன. மதுரையிலுள்ள முனீசுவரர், திருக்கயிலாயத்திலிருந்து மீனாட்சியின் திரு மணத்திற்கு வந்தவராவார். அவர் இப்பட்டினத்தின் அழகைக் கண்டு வியந்து இந்தக் கோபுரத்தினடியில் தங்கிவிட்டார் என்று கூறப்படுகிறது. இவருக்கு நிலை மாலை சார்த்துதல் என்ற பிரார்த்தனையை நிறை வேற்றுகின்றனர். ஒன்பது நிலைகளைக் கொண்ட கோபுரத்தின் உச்சியிலிருந்து இரண்டு மலர்ச் சரங்கள் இவருடைய சந்நிதிவரை தொங்கவிடப் படுவதே நிலை மாலை போடுவதாகும். இந்த கோபுர முனீசுவரர் அனேக அற்புதங்களை நிகழ்த்தியுள்ளதாகக் கூறுகின்றனர். இவரிடம் குழந்தைப்பேறு வேண்டியும், சுகப் பிரசவம் நடக்கவும், உடல் நலம் பெறவும், கால் நடைகள், வியாபாரம் விருத்தியாகவும், நேர்ந்து கொண்டு மக்கள் காணிக்கைகளை செலுத்துகின்றனர்.

மயிலாடுதுறை மாயூரநாத சுவாமி ஆலயத்தின் கிழக்குக் கோபுர குடவரையில் வடக்கு மாடத்தில் தெற்கு நோக்கியவராகத் தங்க முனீசுவரர் எழுந்தருளியுள்ளார். இவருக்குத் திருவுருவமாகப் பெரியவேல் நடப்பட்டுள்ளது. முன்புறம் கண்ணாடியில் வண்ண வேலைப்பாடுகளுடன் வரையப்பட்ட முனீசுவரர் படம் வைக்கப்பட்டுள்ளது. இவருக்கு அவ்வப்போது சிறப்பு வழிபாடுகள் நடைபெறு கின்றன. ★

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கோபுர மாடங்களில் வீற்றிருக்கும் தெய்வங்கள்

ராஜகோபுரத்தின் அடிப்பகுதி கல்ஹாரம் என்று அழைக்கப்படும். இதில் நெடிய வாயிலும் புறச் சுவர்களில் மாடங்கள் கூடு, பஞ்சரம், அரைத் தூண்கள், ஆகியவற்றையும் அமைத்து அழகுபடுத்தியுள்ளனர். இந்த மாடங்களில் இறையுருவங்களை அமைப்பது வழக்கம்.

சிதம்பரத்திலுள்ள நான்கு ராஜகோபுரங்களிலும் அமைந்துள்ள அடித்தளமான கல்ஹாரத்தின் மாடங்களில் சிவபெருமானின் மகேசுவர வடிவங்களான சோமாஸ்கந்தர், கல்யாணசுந்தரர், வைரவர், பிட்சாடனர், முதலிய உருவங்கள் கற்சிலைகளாக அமைக்கப்பட்டு உள்ளன. மேலும் புராணங்களில் கூறப்பட்டுள்ள சிவசூரியன், அன்னப்பிரமன், சதுர்முக சண்டிகேசுவரர் முதலிய சிற்பங்களும் இடம் பெற்றுள்ளன. இவை கோபுரங்களின் தெய்வத் தன்மையைப் புலப்படுத்தவும், அழகை மேம்படுத்தவும், அமைக்கப்பட்டவைகளாகும்.

காலப்போக்கில் இவற்றிலுள்ள சிலமூர்த்தங்கள் வழிபாட்டிற்குரியனவாக ஆகிவிட்டன. எடுத்துக் காட்டாகச் சிதம்பரம் சபாநாயகர் ஆலயத்தின் தெற்கு, மேற்கு ஆகிய கோபுரங்களின் கல்ஹாரத்தின் மாடத்தில் முருகப் பெருமான், அலங்காரச் சிற்பமாக வீற்றிருக்கிறார். இவர் பின்னாளில் வழிபடுகடவுளாக ஆகியுள்ளார். இவர் வீற்றிருக்கும் மாடத்தை முன்புறம் வளர்த்தித் தனிக்கோயிலாக மாற்றியுள்ளனர். இவ்வகையில் இரண்டு முருகன் ஆலயங்கள் சிதம்பரத்தில் இடம் பெற்றுள்ளன.

திருவண்ணாமலை, பெரிய கோபுரத்தின் கல்ஹாரத்திலுள்ள துர்க்கையும், இரண்டாவதான வல்லாளன் கோபுரத்தின் வாயிற்கோட்டத் தெய்வமான முருகப் பெருமானும் சிறப்புடன் வழிபடப்படுகின்றனர்.

ஒருசமயம் வல்லாள மகாராஜா கோபுரத்தின் மேலிருந்து, அருணகிரி நாதர் குதித்து உயிரை மாய்த்துக் கொள்ள முயன்றார். முருகன் அவரைக் கீழே விழாமல் தாங்கிப் பிடித்ததுடன் அவருக்குத் திருப்புகழ் பாடும் திறமையை அருளினார். அத்தகைய சிறப்புப் பெற்ற முருகன் எழுந்தருளியுள்ள மாடத்தை வளர்த்திக் கட்டி பெரிய மண்டபமாக ஆக்கியுள்ளனர். இந்த முருகப் பெருமான் கோபுரத்து இளையனார் என்று அழைக்கப் படுகிறார். இவரைப் புகழ்ந்து திருப்புகழில் அருணகிரிநாதர் பலபாடல்களைப் பாடியுள்ளார்.

இவருடைய சந்நிதியைக் கடந்து சென்றால் கிளி கோபுரத்தை அடைகிறோம். இங்குக் கோபுரத் துவார கணபதியாகத் தென்புறமாடத்தில் "ஆனைத்திரை கொண்ட விநாயகர்" எனும் பெயரில் சிறிய நர்த்தன கணபதி எழுந்தருளியுள்ளார். அருணாசலப் புராணம் சோணசல மாலை முதலிய நூல்கள் இவரைச் சிறப்புடன் துதிக்கின்றன.

இது போன்றே, திருக்கழுக்குன்றத்திலுள்ள கோபுரங்களில் வீற்றிருக்கும் விநாயகர், முருகன் ஆகியோரும் திருவையாற்றில் துவாரபாலகராக விளங்கும் ஆட்கொண்டாரும்; காஞ்சிபுரம் ஏகாம்பர நாதர் ஆலய கோபுரத்திலுள்ள பைரவர், உருத்திரர், ஆகியோரும் சிறப்புடன் வழிப்படப்பட்டு வருகின்றனர்.

கோபுரங்களுக்கும், கோட்டைகளுக்கும் பைரவரும் துர்கையும் காவல் தெய்வங்களாக விளங்குகின்றனர். காஞ்சிபுரம் காமாட்சி ஆலயத்தில் கிழக்குக் கோபுரத்தின் உட்பகுதியிலுள்ள கோட்டங்களில் துர்க்கையும், பைரவரும், பெரிய உருவுடன் எழுந்தருளி உள்ளனர். இவர்களுக்குத் தினமும் சிறப்பான பூசைகள் நடைபெறுகின்றன. ★



★ சிதம்பரம் மேற்குக் கோபுரமும் அதன் கல்ஹாரத்தை ஒட்டி அமைந்துள்ள முருகன் ஆலயமும்

★ திருநாகேச்சரம் நாகேசுவரசுவாமி ஆலயத்தில் இரண்டாம் கோபுரத்தின் கல்ஹாரத்தில் கிழக்கு நோக்கியவாறு கணநாதர் பீடம் என்ற வழிபாட்டிடம் உள்ளது. இதில் அருவ நிலையில் பைரவர் வீற்றிருந்து காவல் புரிகிறார். இவருடைய சந்நிதியை முன்புறம் வளர்த்தி மண்டபம் கட்டியுள்ளனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கோபுரங்களுக்கு வழங்கும் சிறப்புப்பெயர்கள்

★ திரு ஆனைக்கா கோபுரங்கள்

ஆதியில் கோபுரங்கள் அவை நோக்கியிருக்கும் திசைகளின் பெயரால் கிழக்குக் கோபுரம், மேற்குக் கோபுரம் என்று அழைக்கப்பட்டன. பின்னாளில் அவற்றிற்குச் சிறப்புப் பெயர்களை இட்டழைத்தனர்.

தஞ்சைப் பெரியகோயிலில் அமைந்துள்ள வாசல்கள் இராஜராஜன் திருவாசல், கேரளாந்தகன் திருவாசல், திருஅணுக்கன் வாசல் என்று அழைக்கப்பட்டன.

சிதம்பரத்தில் கோப்பெருஞ்சிங்கன் எழுநிலைக் கோபுரத்தைக் கட்டினான். அதற்கு அவனுடைய பட்டப் பெயரால் சொக்கசீயன் திருவாசல் என்று பெயர் சூட்டி னான். அதனை மராமத்துச் செய்ய ஆத்தூரில் நிலம்விட்டு அதை ஆத்தூர் முக்தீசுவரர் ஆலயத்திலும் கல்வெட்டாகப் பொறித்து வைத்துள்ளான்.

திருவானைக்காவல் ஜம்பு கேசுவரர் ஆலயத்தில் ஏழுக்கும் மேற்பட்ட கோபுரங்கள் உள்ளன. மேற்கில் அமைந்துள்ளது கார்த்திகைக் கோபுரம் என்றழைக் கப்படுகிறது. கார்த்திகைத் தீபம் இதன்மீது ஏற்றப் படுவதால் இப்பெயர் பெற்றது. அடுத்தது ஆரம்விட்டான் கோபுரம் என்று அழைக்கப்படுகிறது. இதனைக் கட்டிய சோழமன்னன் பெயர் ஆரம்விட்டான் என்பதாகும். இவன் வரலாறு தேவாரத்தில் குறிக்கப்பட்டுள்ளது. அது...

சோழமன்னன் ஒரு நாள் தனது தேவியுடன் காவிரி யில் நீராடிக் கொண்டிருந்தான். அவ்வேளையில் அவனு டைய தேவி அணிந்திருந்த முத்துமாலை தண்ணீரில் விழுந்துவிட்டது. அவன் சிவபெருமானே இம்மாலையைக் கொண்டருளும் என்றான். பின்னர் நீராடி மகிழ்ந்து ஆலயத்திற்குத் தன்தேவியுடன் சென்று ஜம்புகேசுவரரை வழிபட்டு நின்றான். அவ்வேளையில் அருச்சகர், பெரு மானுக்கு நீராட்டினார். குடத்து நீருடன் மன்னனின் தேவி ஆற்றில் விட்ட முத்து மாலையும் சேர்ந்து வந்து பெருமான்மீது விழுந்தது. அந்த அதிசயத்தைக் கண்டு மன்னரும் தேவியும் மகிழ்ந்தனர். இதனால் பெருமானுக்கு ஆரம் கொண்டருளிய பெருமான் என்ற பெயர் வழங்குகிறது. அந்த மன்னனுக்கு ஆரம் விட்டான் என்பது பெயராயிற்று. இவன் கட்டிய கோபுரம் ஆரம்விட்டான் கோபுரம் என்பதாகும்.

மேலும் இக்கோயிலில் ராஜகோபுரம், மல்லப்பன் கோபுரம் மணிமண்டப கோபுரம் சங்கரேசுவரகோபுரம் என்ற பெயரில் கோபுரங்கள் உள்ளன. இதில் மல்லப்பன் என்பவனால் கட்டப்பட்டது மல்லப்பன் கோபுரமாகும். மற்ற கோபுரங்கள் மணிமண்டபம் சங்கரேசுவரர் ஆலயம் ஆகியவற்றின் அருகில் இருப்பதால் இப்பெயர் பெற்றன.

திருவக்கரை சந்திர மௌலீசுவரர் ஆலயத்திலுள்ள இராஜகோபுரம் கண்டர் சூரியன்திருக்கோபுரம் என்று கல் வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது.

திருவண்ணாமலையிலுள்ள பெரிய கோபுரங்க ளுக்குச் சிறப்புப் பெயர்கள் உள்ளன. கிழக்கில் உள்ளது பெரிய கோபுரமென்றும், தெற்கிலுள்ளது திருமஞ்சனக் கோபுர மென்றும்; வடக்கிலுள்ளது அம்மணியம்மாள் கோபுர மென்றும் மேற்கிலுள்ளது பேய்க் கோபுரம் என்றும் அழைக்கப்படுகின்றன. உள்மதில்சுவரில் அமைந்த கோபு ரங்கள் கட்டைக் கோபுரங்கள், வல்லாள மகாராஜன் கோபுரம் என்று அழைக்கப்படுகின்றன. உள் மதிலி லுள்ள கோபுரம் கிளிகோபுரம் என்றழைக்கப்படுகிறது இதில் பெரிய கிளியின் சுதைவடிவம் அமைந்துள்ளது. கொடி மரத்தினை அடுத்துள்ளது ரிஷி கோபுரமாகும்.

ரிஷிவந்தியத்திலுள்ள ராஜகோபுரம் சிவகணங் களால் போற்றப்படுவதால் சிவகண கோபுரம் எனப் படுகிறது. பூவாளூர் கோயிலுள்ள ராஜகோபுரத்திற்குக் கல்யாண சிகரம் என்பது பெயராகும்.

தினமும் திருமஞ்சனத்திற்குப் புனித நீர் கொண்டு வர உபயோகமாகும் கோபுரவாசல் திருமஞ்சனக் கோபுர வாசல் என்றழைக்கப்படுகிறது.

திருவிடைமருதூரில் சோழன் கோபுரம் பாண்டியன் கோபுரம், மாணிக்கக் கோபுரம் திருமஞ்சனக்கோபுரம் என்ற பெயர்களில் கோபுரங்கள் உள்ளன.

முன்னாளில் பெரும்பாலான கோபுரங்களுக்குச் சிறப்புப் பெயர்கள் வழங்கிவந்துள்ளன. முறையாகப் போற்றாததால் அவற்றைப் பற்றி அறிந்துகொள்ள முடியவில்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கோபுர தரிசனம்

கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பது நம்பிக்கையாகும். கோபுரத்தைக் கண்டவுடன் வணங்க வேண்டும். கோபுர தரிசனம், கருவறையில் வீற்றிருக்கும் பெருமானைத் தரிசிப்பதற்கு இணையானதாகும். பெரியோர்கள் கோபுரத்தைக் கண்டவுடன் கைகூப்பி வணங்குவதையும், ஆலயத்திற்குள் செல்லுமுன் வாயில் மீதுள்ள கோபுரங்களை வணங்கி மகிழ்வதையும் வழக்கமாக் கொண்டிருந்தனர் என்பதைப் புராணங்களாலும் தோத்திரங்களாலும் அறிகிறோம்.

சேக்கிழார், பெரியபுராணத்தில் திருஞானசம்பந்தர் ஆலயங்களுக்குச் சென்றபோது திருக்கோபுரங்களைக் கண்டு பணிந்தபின் ஆலயத்துள் சென்று வழிபட்டார் என்பதைத் திரும்பத் திரும்பக் கூறுகின்றார்.

பெரியபுராணத்தில், திருஞானசம்பந்தர் சிதம்பரத்தை அடைந்து கோபுரங்களைக் கண்டு வணங்கியதைப் பலன்கொள்ள மைந்தனார் ஏழுநிலைக் கோபுரம் பணிந்தெழுந்தனர் போற்றி என்றும், நீடு நீள் நிலைக் கோபுரத்துள் புகுந்தார் என்றும், அரத்துறை வந்தணைந்த போது ... வந்து கோபுர மணி நெடுவாயில் ... தாழ்ந்து... கோயிலுள் அடைந்தார் என்றும், பழவூரை அடைந்த போது மகிழ்பெரும்பழவூர்... ஆங்கணைந்து... பொங்கெழில் கோபுரம் தொழுது (புகுந்தார்) என்றும், துங்க நிலைக் கோபுரத்தை இறைஞ்சினார் என்றும், (வலஞ்சுழி) பொலங்கொள் நீள் சுடர்க் கோபுரம் இறைஞ்சி உட்புகுந்தார் என்றும் திருவாரூரில் கூடு காதலினால் கோபுரம் பணிந்து கை குவித்தார் என்றும் திருவாலவாய் மருங்கணைந்து நீடுயர் செல்வக் கோபுரம் இறைஞ்சி... ;என்றும் காஞ்சிபுரத்தில் கம்பவாணர் கோயில் வாயில் கண்டு கை குவித்தெடுத்து உம்பரோங்கு கோபுரத்தின் முன் இறைஞ்சி என்றும் திருக்கபாலீச்சரம் அணைந்து நீடு கோபுரத்தெதிர் மணிச் சிவிகை நீக்கி (வணங்கினார்) என்றும் திருவான்மியூர் கோபுரத்தை வணங்கி வியன்முன்றில் சென்றார் என்றும் குறித்துள்ளார்.

திருநாவுக்கரசு சுவாமிகள், சிதம்பரம் ஆலயத்திற்கு வந்தபோது "ஞாலத்திகழ் திருமறையின் பெருகொலி நலமார் முனிவர்கள் துதியோடும் ஒலம் பெருகிய நிலையேழ் கோபுரம் உறமெய்கொடு தொழுது" உள்புக்கார் என்று குறித்துள்ளார்.

சுந்தரமூர்த்திகள், திருவாரூர் கோயிலை அடைந்து, கார்விரவு கோபுரத்தைக் கை தொழுதேத்தினார் என்றும்; அவர் தில்லைக்குச் சேரமான் பெருமாளுடன் வந்து. சிந்தை மகிழ எழுநிலைக் கோபுரத்தை அணைந்தார் என்றும் பலவாறு கோபுர தரிசனம் செய்ததைக் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறே பல நாயன்மார்களும் அடியார்களும் தூரத்தில் இருந்து கோபுரங்களைக் கண்டபோது வணங்கிப் போற்றி மகிழ்ந்ததை அவரவர் வரலாற்றால் அறிகிறோம்.

அருணகிரிப் பெருமான் கோபுர தரிசனத்தால் பாவங்கள் நீங்கும் என்பதைத் தூரத் தொழுதெழுவார் வினை சிந்திடும் தாதுற்றெழு கோபுரம் என்று திருத்தணிகைத் திருப்புகழில் குறித்துள்ளார்.

சிதம்பரத்தில் நால்வர் பெருமக்கள் வந்து வழிபட்ட வாயில்கோபுரங்கள்

ஆலயங்களுக்கு வழிபடச் செல்பவர்கள் முதன்மை கோபுரத்தினைக் கண்டு வணங்கி அதன் வழியாகவே உள்ளேசென்று வலம் வந்து பெருமானை வழிபடுவது மரபு. சிதம்பரத்தில் நான்கு வாயில்கள் வழியாகவும் நால்வர் பெருமக்கள் வந்து வழிபாடு செய்தனர் என்று கூறுகின்றனர்.

★ கிழக்கு வாயில் வழியாக வரும் மாணிக்கவாசகரும் அவரை எதிர்கொண்டழைக்கும் தீக்ஷிதர்பெருமக்களும்

கிழக்கு வாயில்வழியாக மாணிக்கவாச சுவாமிகளும்; மேற்கு வாயில் வழியாக அப்பர் சுவாமிகளும்; வடக்கு வாயில் வழியாக சுந்தரமூர்த்தி சுவாமிகளும்; தெற்கு வாயில் வழியாக திருஞானசம்பந்த சுவாமிகளும் ஆலயத்திற்கு உள்ளே வந்து பெருமானை வழிபட்டுப் பேறுபெற்றனர். இதைக் குறிக்கும் வகையில் ஒவ்வொரு வாயிலிலும் அவ்வழியாக வந்த நாயன்மாரையும் பூரணகும்பம் கொடுத்து வரவேற்கும் தில்லை மூவாயிரவ (மூவர்) ரையும் சுதைச் சிற்பமாக அமைந்து வண்ணம் தீட்டிப் பொலிவுபடுத்தியுள்ளனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சகோபுரக் காட்சிகள்



★ சகோபுரக்காட்சி

சகோபுரம் என்ற சொல்லுக்குக் கோபுரத்துடன் சேர்த்து பெருமானை வழிபடுவது என்பது பொருள். பெருமான் தேரில் பவனி வருவது கருவறையுடன் பவனி வருவதையும், விருட்ச வாகனத்தில் வருவது தலமரத்துடன் சேர்ந்து பவனி வருவதையும் குறிக்கின்றன. இது போலவே சகோபுரத்தில் வருவது ராஜகோபுரத்துடன் பவனி வருவதைக் குறிக்குமென்பர். அகன்ற சகடத்தில் (வண்டியில்) முன்புறம் பனை ஓலைகளைக் கொண்டு பெரிய கோபுரம் போன்று கண்கவரும் விதத்தில் அமைக்கின்றனர். இதில் சுவாமி ஒரு இடபத்திலும், அம்பிகை மற்றோரு இடபத்திலும் (ஒரே பீடத்தில்) எழுந்தருளி காட்சி யளிக்கின்றனர். முகப்பில் பஞ்சமூர்த்திகள், பூதம், இடபம் முதலிய வற்றையும் கோபுரத்திலுள்ளது போலேவே நிலைகளையும், மகா நாசி வளைவுகளையும் உச்சியில் கலசங்களையும் அமைத்துள்ளனர்.

இது மிக அகன்ற காட்சியாக இருப்பதால் தெருவடச்சான் விழா என்றும்; ஓலைகளைக் கொண்டு அமைக்கப்படுவதால் ஓலைச் சப்பரமென்றும் அழைக்கப்படுகிறது. சோழநாட்டுச் சிவாலயங்களில் இந்த விழா மிகவும் சிறப்புடன் கொண்டாடப்படுகிறது. ★

கோபுர வாசல் தரிசனம்

பெருந்திருவிழாவின் போது இறைவனையும் பரிவார மூர்த்திகளையும் அலங்கரித்து வாகனங்களில் அமர்த்தி ராஜகோபுரத்தின் வழியாக வெளியே கொண்டுவருவர். அப்போது கோபுரவாயிலில் நிறுத்தி கற்பூரக் கிளையால் பெரிய தீபாராதனை செய்து மலர்களைத் தூவி வழிபடுகின்றனர். இது கோபுரதரிசனம் என்று அழைக்கப்பபட்டு முக்கியமான நிகழ்ச்சியாகப் போற்றப்படுகிறது. சென்னை கபாலீசுவரர் ஆலயத்தில் கோபுரதரிசனம் காணத் திரளான மக்கள் கூடுவர். அழைப்பிதழிலேயே கோபுர தரிசன நேரமும் வெளியிடப்படுகிறது. கோபுரத்தின் நடுவாயிலில் பெருமானை நிறுத்தி வழிபடுவது பெருஞ்சிறப்பாகப் போற்றப்படுகிறது. இது பிரபஞ்சத்தின் நடுவில் பெருமானைத் தரிசித்துப் போற்றுவதற்கு ஒப்பாகும்.

நாற்புறமும் கோபுரங்களைக் கொண்ட ஆலயங்களில் ஏதாவது ஒரு கோபுரவாசலே முதன்மையானதாகக் கொள்ளப்பட்டு அதன் வழியாகவே சுவாமி உலா நடைபெறும். இதற்கு முற்றிலும் மாறாக நான்கு திசைகளை நோக்கியுள்ள நான்கு வாயில்களின் வழியாகவும் சுவாமி வெளிவந்து அருள்பாலிப்பதைத் திருக்கழுக்குன்றத்தில் காண்கிறோம். இங்குக் கொடியேற்றிய பின்னரும் திருத்தேருக்கும் கிழக்கு வாயில் வழியாகப் பெருமான் வருகிறார். நான்காம் நாள் நாகவாகனத்தில் மேற்குக்கோபுர வாயில் வழியாகவும் மற்றைய நாட்களில் தெற்குக் கோபுரம் வழியாகவும் மூன்று ஆறு ஆகிய நாட்களில் வடக்கு வாசல் வழியாகவும் உலாவருகிறார். ★

திருமுறைகளில் கோபுரங்கள்

திருமுறைகளில் கோபுரங்கள் சிறப்புடன் போற்றப்படுகின்றன. அப்பர் சுவாமிகள் கோலக் கோபுரங்கள் சூழா கால்களால் என்ன பயன் என்று கேட்கின்றார். சுந்தரர் வெஞ்சமா கூடல் பதிகத்தில் வளங்கொள் மதில், மாளிகை கோபுரம், மணிமண்டபம், ஆறு ஆகிய ஐந்தும் ஊருக்குச் சிறப்புத் தருவன என்று பாடுகிறார்.

திருமூலர் தேகமே சிவாலயம் என்றும் அதற்கு வாய் கோபுரவாசலாக இருக்கிறதென்றும் குறிக்கின்றார். சேக்கிழார் பெருமான் சண்டேசுவரநாயனார் ஆத்தியின் கீழ் மணலால் சிவாலயம் அமைத்தார் என்று சொல்லும்போது அங்குக் கோபுரத்தையும் பிராகாரங்களையும் அமைத்ததைத் துங்க நீடு கோபுரமும் சுற்றாலயமும் வகுத்தமைத்தார் என்று கூறுகின்றார். திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் முதலியோர் கோபுரங்களை வணங்கிய பின்னரே கோயிலுக்குள் சென்றனர் என்பது பல இடங்களில் திரும்பத்திரும்பச் சொல்லப்பட்டுள்ளது. ★

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தியாக பீடங்களாக விளங்கும் திருக்கோபுரங்கள்

காந்தியடிகள் உண்ணா நோன்பு, ஒத்துழையாமை முதலிய அறவழிப் போராட்டங்களை நடத்தி நாட்டுக்குச் சுதந்திரம் வாங்கி கொடுத்ததை அறிவோம். இது அஹிம்சை வழிப் போராட்டமாகும். இதற்கு நேர்மாறாகக் கொள்கையை வலியுறுத்தித் தன்னையே மாய்த்துக் கொள்ளும் மறப்போராட்டமும் வரலாற்றில் அவ்வப்போது நிகழ்ந்துள்ளது. அதற்குச் சில ராஜகோபுரங்கள் நிலைக் களன்களாக விளங்கியதை வரலாறுகள் கூறுகின்றன.

மக்களின் நல்வாழ்வுக்காகவும் சமுதாய உரிமை களை நிலைநாட்டிக் கொள்ளவும் எண்ணற்ற அன்பர்கள் கோபுரத்தின் மீதேறி, தனது மரணத்துக்கான காரணங் களை உணர்ச்சி பொங்க மக்களுக்கும் அதிகாரவர் கத்திற்கும் விளக்கிக் கூறித் தெரிவித்தபின் அங்கிருந்து குதித்துத் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். அவர்களைத் தியாகிகள் என்று வரலாறு போற்றுகிறது. எடுத்துக்காட்டாகச் சிலவற்றைக் காண்போம்.

சிதம்பரத்தில், ஆதியில் தில்லை கோவிந்தராசர் சபையின் மேலுள்ள திண்ணையில் வைக்கப்பட்டிருந்தார். இவரைத் தில்லைத் மூவாயிரவர்களே பூசித்து வந்தனர். குலோத்துங்க சோழன் நடராசரின் சபையை விரிவு படுத்தக் கோவிந்தராசரைப் பெயர்த்துக் கடலில் விட்டு விட்டான்.

நீண்ட நாட்களுக்குப் பின்னர் கோவிந்தராசர் மீண்டும் அங்கு எழுந்தருளி வைத்து வணங்கப்பட்டு வந்தார். விஜயரங்க சொக்கநாதன் இக்கோயிலைத் தரிசித்து கோயில் பணிக்காகப் பெருந்தொகையை அளித்தான். பின்னர் கி.பி 1539ல் அச்சுதராயன் என்ப வனும் பெரிய அளவில் கோவிந்தராசருக்குப் பொருள் அளித்தான் 1539ல் கொண்டமநாயக்கன் என்பவன் பெரு மாள் சந்நிதியை விரிவுப்படுத்தத் தொடங்கினான். இதைத் தில்லை மூவாயிரவர் (தீக்ஷிதர்கள்) தீவிரமாக எதிர்த்தனர். அந்த எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் அவன் பெருமாள் ஆலயப் பணியை விரிவுபடுத்தினான்.

தீட்சிதர்கள் தங்களின் உரிமையை நிலை நாட்ட தினமும் ஒருவர் வீதம் கோபுரத்தின் மீதேறி வீழ்ந்து உயிர் துறப்பதென முடிவு செய்தனர். அதன்படியே இருப துக்கும் மேற்பட்டவர்கள் உயிர்துறந்தனர். கொண்டம நாயக்கன் கோபுரத்தின் மீதேறுபவர்களைச் சுட்டுக் கொல்லும்படி ஆணையிட்டான். அதன்படி இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர். தமது இனத்து ஆண்மக்கள் அநியாயமாக உயிர்துறப்பதைக் கண்டு மனம் பொறாத பெண்மணி ஒருத்தி தன் கழுத்தை அறுத்துக் கொண்டு மாண்டாள். இச்செயல்களால் பெருங்கலகம் மூண்டது. பின்னர் உடன்படிக்கை ஏற்பட்டுத் தீக்ஷிதர்களின் உரிமை காப்பாற்றப்பட்டது.

இந்த வரலாற்றை அந்நாளில் சுற்றுப் பயணம் மேற் கொண்டு இந்தியாவுக்கு வந்திருந்த ஜெசுயட் பாதிரி யார் பிமென்டா என்பவர் நேரில்கண்டு குறித்துள்ளார்.

அந்நிய மதத்தினரான ஐரோப்பியர் 1793ல் தென்னக மெங்கும் படை நடத்திக் கொள்ளையிட்டு வந்தனர். மதுரைமீனாட்சியம்மன் கோயிலும் கொள்ளையர்களால் சூரையாடப்பட்டது. அவர்கள் படை திருப்பரங்குன்றத்தை நோக்கி வருவதாகக் தகவல் கிடைத்தது. அந்நாளில் முத்துக்கருப்பன் மகன் குட்டியாப்பிள்ளை இக்கோயிலில் வைராவிச் சேவை செய்துவந்தார். ஊர் கூடிமுடிவெடுத் தபடி குட்டியாப்பிள்ளை இக்கோயிலைக் காக்கக் கோபுரத்திலிருந்து குதித்து உயிர் நீத்தார். அச்செய்தி யை அறிந்த கொள்ளையர்கள் அவருடைய ஆவியால் தங்களுக்குத் தீங்கு நேருமென்று அஞ்சி வேறுவழியாகப் போய் விட்டனர். கோயிலும் மக்களும் காப்பாற்றப் பட்டனர். உயிர்த் தியாகம் செய்த குட்டியாப்பிள்ளையின் உறவினர்க்கு உதிரப்பட்டியாக (இரத்தம் சிந்தி தியாகம் புரிந்ததற்காக) நிலம் அளித்த செய்தியை அக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டால் அறிகிறோம். குட்டியாப்பிள்ளைக்கு சிலை யொன்று உள்ளது.

மேலும் இங்கு அண்டாபரண முதலி என்னும் செங்குந்த முதலியார் கோயில் நிலங்களில் நடந்த முறை கேடுகளைக் களைந்து உரிமைகளை நிலைநாட்ட கோபுரத்திலிருந்து வீழ்ந்து உயிர்த் தியாகம் செய்ததையும் வரலாறு கூறுகிறது.

மதுரையை ஆண்டு வந்த விஜயரங்க சொக்கநாதன் அரசு ஊழியர்களுக்கும், பொதுமக்களுக்கும், தாங்க முடியாத அளவுக்கு வரிச்சுமையை ஏற்றினான். இதை எதிர்த்த ஒருவன் கிழக்குக் கோபுரத்தின் மீதேறி வீழ்ந்து உயிர் நீத்தான் என்றும் பின்னர் வரிச்சுமைகள் குறைக் கப்பட்டன என்றும் செவிவழிச் செய்திகள் கூறுகின்றன.

பாடல் பெற்ற திருத்தலமான அச்சிறுப்பாக்கத்தில் செங்குந்தர் குல பெருமக்கள் மூவர் ஆலயத்தில் தமது சமுகத்திற்குரிய உரிமையை நிலைநாட்டக் கோபுரத்தின் மீதேறி வீழ்ந்து பிராணத்தியாகம் புரிந்ததாகச் செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. அவர்களில் ஒருவ ருக்கு மதிலில் சாவாரக்கல் அமைக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

இன்னும் அனேக வரலாறுகள் ராஜகோபுரங்கள் மறப் போராட்டத்தின் பலிக்களமாக இருந்ததை விவரித்துக் கூறுகின்றன ★

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மன்னர்கள் அமைத்த கோபுரங்கள்



மன்னர்கள் சிவபக்தியால் அனேக ஆலயங்களுக்குத் திருப்பணி செய்ததுடன் புதியதாக ராஜ கோபுரங்களையும் எழுப்பியுள்ளனர். அவற்றில் சிலவற்றை இங்கே காணலாம்.

திருவெண்ணெய் நல்லூர் கோபுரம் காடவராயர் வம்சத்தவரால் கட்டப்பட்டது. இதனை இக்கோபுரவாசல் செய்வித்தான் கூடல் மோகன் அவனியாளப் பிறந்தான் அரச நாராயணக் காடவராயன் என்னும் கல்வெட்டால் அறிகிறோம்.

திருவையாற்றுக் கோயிலில் விக்கிரம சோழனால் கோபுரம் அமைக்கப்பட்டுள்ளதை இக்கோபுரம் விக்ரம சோழனதே என்ற கல்வெட்டால் அறிகிறோம்.

காஞ்சீபுரம் ஏகாம்பரநாதர் ஆலய பெரிய ராஜ கோபுரம் விஜயநகரப்பேரரசரான கிருஷ்ண தேவரால் கட்டப்பட்டதாகும். இதனை கிருஷ்ண மாதேவராயர் பண்ணுவித்த திருக்கோபுரம் என்று அதில் பொறித்து வைக்கப்பட்டுள்ள கல்வெட்டால் அறிகிறோம்.

திருவண்ணாமலையில் 11 நிலைகளைக் கொண்ட முதன்மைப் பெரியராஜ கோபுரமும் கிருஷ்ணதேவ ராயரால் கட்டப்பட்டதேயாகும். மேலும் அவர் இங்கு நெடிய மதிலையும், ஆயிரக்கால் மண்டபத்தையும் அமைத்தார் என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

தொண்டை நாட்டுத் திருத்தலம் திருவக்கரை. இங்கு உள்ள சந்திரமௌலீசுவரர் ஆலயத்தின் முன்புறம் பெரிய ராஜகோபுரம் உள்ளது. அம்மையப்பன் பாண்டி நாடு கொண்டானான கண்டர் சூரியன் சம்புவரையன் என்பான் இத்திருக்கோபுரத்தை அமைத்து 'கண்டர் சூரியன் திருக்கோபுரம்' என்று பெயர் சூட்டினான். இதை இக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள ராஜாதிராஜன் கல் வெட்டால் அறிகிறோம்.

சகல புவனச் சக்ரவர்த்தியான கோப்பெருஞ்சிங்கன் தில்லையில் தெற்குக் கோபுரத்தை ஏழு நிலைக் கோபுர மாக்கி அதற்கு சொக்க சீயன் திருநிலை என்று பெயரிட்டான் அதற்காக தொண்டைமண்டலத்திலுள்ள (செங்கற்பட்டு) ஆத்தூரின் வருவாயை அளித்துடன் ஆற்றூர் முக்தீசுவரர் ஆலயத்திலும் சிதம்பரம் நடராசர் ஆலயத்திலும் அச்செய்தியை கல்வெட்டாகவும் பொறித்து வைத்துள்ளான்.

★ மன்னர்களேயன்றி துறவிகளும் தமது தெய்வீகச் அருள்பலத்தால் பழைய கோபுரங்களை புதுப்பித்தும் புதிய கோபுரங்களைக் கட்டியும் திருப்பணிகளைச் செய்துள்ளனர். குடந்தை நாகநாத சுவாமி ஆலயத்திலுள்ள ராஜகோபுரம் உள்ளிட்ட பணிகளை பாடகச்சேரி ராமலிங்க சுவாமிகள் என்றும் துறவி திருப்பணி செய்தார். திருச்செந்தூரிலுள்ள ஒன்பது நிலை ராஜ கோபுரம் அடிகளார் தேசிகமூர்த்தித் தம்பிரானால் கட்டப்பட்டதாகும். திருவண்ணாமலை வடக்குக் கோபுரம் அம்மணி அம்மாள் என்னும் பெண்துறவியால் திருத்திக் கட்டி திருப்பணி செய்யப்பட்டுள்ளது. அது அவர் பெயரால் அம்மணி அம்மாள் கோபுரம் என்றழைக்கப்படுகிறது.

★ திருக்கோயிகளில் முப்போதும் திருமேனி தீண்டி பூசிக்கும் சிவாச்சார்யார்களால் சில கோபுரங்கள் கட்டப்பட்டுள்ளன. திருப்புத்தூர் திருத்தளி நாதர் கோயிலில் உள்ள அம்பிகை சந்நிதி ராஜகோபுரம் சிவாச்சார்யார்களின் கூட்டமைப்பால் கட்டப்பட்டதாகும். 1882ல் சிவஸ்ரீ மிருத்துஞ்ஜய குருக்கள் என்பவரால் தொடங்கப்பட்ட இக்கோபுரம் பலவேறு காரணங்களால் தடைப்பட்டு நின்றது. பின்னர் பிள்ளையார்பட்டி சிவாகமஸ்ரீ. கே. பிச்சை குருக்கள் அவர்களின் முயற்சியால் நிறைவு பெற்று குடமுழுக்கு செய்யப்பட்டது. ♟

சிவமஞ்சரியின் புரவலர்களான சிவஸ்ரீ. குருஜி பத்மநாபன் (எ) துரைராஜன் அவர்களாலும் திருப்பணிச்செல்வர் திரு. எம்.வி.ஜெய்சங்கர் அவர்களாலும் திருவிடைமருதூர் திருமஞ்சனக் கோபுரம் திருப்பணி செய்துவைக்கப்பட்டது. மேலும் திரு. ஜெய்சங்கர் அவர்கள் திருநீலக்குடியில் புதியதாகக் கல்ஹாரத்துக்கு மேல் ராஜகோபுரம் கட்டியும் திருவாலி கல்யாணரங்கநாதர் – திருமங்கையாழ்வார் ஆலய ராஜகோபுரத்தைப் புதுப்பித்தும் திருப்பணி செய்துவருகிறார். என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். ♟

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெற்றிப் பரிசாக எடுக்கப்பட்ட கோபுரங்கள்

★ அரசர்கள் போரில் வெற்றி பெற்ற பின் அந்த வெற்றியைப்பின் வரும் எதிர்காலச் சந்ததியர் அறிந்து போற்ற வேண்டும் என்பதற்காக வெற்றித் தூண்களை நாட்டினர். இவை ஜெயஸ்தம்பங்கள் என்று அழைக்கப்படுகின்றன. காஞ்சி காமாட்சி ஆலயம், காளத்தீசுவரர் ஆலயம் ஆகியவற்றின் முன்புறம் நெடிய ஜெயஸ்தம்பங்களைக் காண்கிறோம். சில மன்னர்கள் வெற்றியைக் கொண்டாட (வெற்றித் தூண்களை நாட்டுவதற்குப் பதில்) நெடிய கோபுரங்களைக் கட்டியுள்ளனர்.

வடாற்காடு, மாவட்டத்தில், மடம் எனும் ஊரிலுள்ள தடாகபுரீசுவரர் ஆலயக் கோபுரம் வெற்றியைக் கொண்டாடக் கட்டப்பட்டதாகும். இக்கோயிலுள்ள கல்வெட்டில் சோமையடணாய்க்கனின் மகன் கண்டரகூளி மாராய நாயக்கன் இப்பகுதியை ஆட்சிசெய்து வந்த வென்று மண்கொண்ட சம்புவராயனை வென்று அவனுக்குரிய இராஜகம்பீர மலையையும் நாட்டையும் கைப்பற்றிய பின் அந்த வெற்றியின் நினைவாக இக்கோபுரத்தைக் கட்டி "கண்டர கூளி மாராய நாயக்கன் திருக்கோபுரம்" என்று பெயர் இட்டான் என்ற செய்தி காணப்படுகிறது. இந்தக் கோபுரம் இப்பொழுது சிதைந்து நிலையில் காணப்படுகிறது.

ராஜகோபுரத்தின் விதானச் சிற்பங்கள்

இராஜகோபுரங்களின் நெடிய வாயிலின் உட்புறம் அமைந்துள்ள விதானத்தில் பெரிய அளவில் வண்ணப் பூக்களை வரைந்து பொலிவூட்டியுள்ளனர். பூக்களின் நாற்புறமும் நான்கு கந்தவர்கள், குழந்தைகள், மலரேந்தும் பெண்கள் ஆகிய உருவங்களும் தீட்டப்பட்டுள்ளன.

சிலதலங்களில் உள்விதானத்தின் மையத்தில் அனேக இதழ்களைக் கொண்ட பெரியதாமரை மலரும் அதைக் கொத்தும் கிளிகளும் புடைப்புச் சிற்பங்களாக அமைக்கப்பட்டிருக்கின்றன. சென்னையை அடுத்துள்ள திருமணம் (சித்தர்காடு) நெல்லியடிநாதர் ஆலயத்தில் அழகிய ராஜகோபுரம் உள்ளது. இதன் விதானத்தில் சிவபெருமானின் சோடச மூர்த்தங்கள் சுற்றியிருக்கப் பஞ்சமூர்த்திகள் அமைக்கப்பட்டுள்ளனர். இக்காட்சி வேறெங்கும் இல்லாத புதுமையாகும்.

கோபுர வாயில்களின் மையத்தில் நான்கு கால்களுக்கு இடையில் அமைவது மைய விதானமாகும். இதற்கு முன்னும்பின்னுமாகச் சிறிய விதானங்கள் அமைந்துள்ளன. இவற்றிலும் அனேக ஓவியங்களும் சிற்பங்களும் அமைக்கப்படுகின்றன. இவற்றில் குறிப்பிடத்தக்கது சந்திரக் கிரகணம் சூரியக் கிரகணம் முதலியனவாகும்.

கொடி அடியில் மடக்கொடி

கோபுரவாயில்களில் அதன் மீதுள்ள நெடிய கூம்பு வடிவக் கட்டுமானத்தின் பளுவைத்தாங்கும் வகையில் உட்புறம் (குறைந்தபட்சம்) நான்கு நெடிய தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தத் தூண்களில் வளைந்த கொடிகளைப் பற்றிக் கொண்டு ஒயிலாக நிற்கும் பெண் வடிவங்களை அமைத்துள்ளனர். இப்பெண்கள் பிடித்துள்ள கொடியிலிருந்து மேல் நோக்கிச் செல்லும் கொடியின் வளைவுகளில் விநாயகர், திருமாலின் தசாவதாரங்கள், மகேஸ்வர வடிவங்கள் முருகன், துர்க்கை, காளி முதலான தெய்வ வடிவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தக் கொடிப் பெண்கள், ஜலதேவதைகள் ஆவர். இவர்கள் மகரத்தின் மீது நிற்க இந்த மகரத்தின் வாயிலிருந்தே மேல் நோக்கிச் செல்லும் வகையில் கொடிகள் அமைகின்றன. இப்பெண்களை இலக்கியங்கள் கொடியடியில் மடக்கொடி என்று போற்றுகின்றன.

108 தாண்டவ கரண சிற்பங்கள்

நெடிய கோபுரத்தின் பளுவைத் தாங்கும் வகையில் வாயிலின் இருபுறமும் நான்கு நெடிய தூண்களை சுவற்றோடு அணைத்தவாறு நிறுத்துவர். உயரமும் எடையும் கூடக்கூட இந்த தூண்களின் எண்ணிக்கையும் அதிகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் தூண்களில் சிறுசிறு மண்டபங்களைப் போல் அமைத்து அதில் நாட்டியமாடும் பெண்களை அமைத்துள்ளனர். இவை தாண்டவத்திலுள்ள நூற்றி எட்டு கரணங்களை விளக்குவதாகும். சிதம்பரம், திருவண்ணாமலை முதலிய ஆலயங்களில் இத்தகைய நாட்டிய கரணச் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. சிலவற்றில் நாட்டிய கரணத்தின் பெயரும் பொறிக்கப்பட்டுள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருமஞ்சனக் கோபுரங்கள்

★ திருமஞ்சனக் கோபுரமும்,கட்டைக் கோபுரமும் திருவண்ணாமலை உள்ளிருந்து பார்வை

தென்னிந்தியக் கோயில் நடைமுறைகளின்படி ஆலயங்களில் பூஜை முடிந்ததும் இறைவன் பள்ளியறைக்குச் செல்லுவார். அப்போது அவருடைய சடையில் வீற்றிருக்கும் கங்கை அவரிடம் விடைபெற்றுக் கொண்டு நீர்நிலைகளை அடைந்து விடுவாள். அவள் தூங்காமல் இரவு முழுவதும் சிவத்தியானத்தில் இருப்பாள். அர்ச்சகர் அதிகாலையில் கோயிலுக்கு அருகிலுள்ள ஆறு அல்லது (ஆலயத்திற்குச் சொந்தமான) குளத்திற்குச் சென்று அவளைப் பூசித்துக் குடத்தில் எழுந்தருளும்படி வேண்டி நீர்முகந்து கொள்வார். முகந்த குடத்து நீரை யானையின் மீது வைத்தோ, ஊழியன் தலையின் மீது சுமந்து கொண்டோ ஆலயத்திற்குக் கொண்டு வருவர். அப்படிக் கங்கை ஆலயத்திற்குள்ளே வரும் கோபுரம் தனிச் சிறப்பு பெற்றதாகும். அது கங்கை திருமஞ்சன மாட்டும் பொருட்டு வரும் வாயில் ஆதலால் திருமஞ்சன வாயில் என்றும் அதன்மீது அமையும் கோபுரம் திருமஞ்சனக் கோபுரம் என்றும் அழைக்கப்படுகிறது. இதற்கு நேர் எதிரிலுள்ள வீதி திருமஞ்சனக் கோபுரவீதி என்று அழைக்கப்படுகிறது.

திருவண்ணாமலையிலுள்ள தெற்குக் கோபுரம், திருவிடைமருதூர் வடக்குக் கோபுரம் முதலியவை திரு மஞ்சனக் கோபுரங்கள் என்று அழைக்கப்படுகின்றன. சோழமண்டலத்தில் ஆலயங்களில் தினமும் காவிரியிலிருந்து நீர்முகந்து வந்து நீராட்டும் வழக்கம் இருந்தது என்பதைப் பலநூல்களின் மூலம் அறிகிறோம்.

திருவாசலும் - திட்டிவாசலும் திட்டிவாசற் கோபுரங்களும்

ஆலயங்களில் கோபுரத்துடன் கிழக்கில் அமையும் நெடியவாயில் திருவாசல் எனப்பட்டது. இதற்கு வடக்கில் இதற்கிணையாகப் பெரிய வாயில் அமைந்திருப்பதைத் திருவண்ணாமலை, சிதம்பரம், திருவாரூர் முதலிய தலங்களில் காணலாம். இதற்குத் திட்டிவாசல் என்பது பெயராகும். மேலே குறித்த மூன்று ஆலயங்களிலும் கிழக்கில் பெரிய ராஜகோபுரத்துடன் கூடிய நெடிய வாயில்கள் அமைந்திருப்பினும் பெருமான் பரிவாரங்களுடன் திட்டி வாசல் வழியாகவே வெளியே போவதும் உள்ளே வருவதுமாக இருக்கின்றார். பொதுவாக ஆலயத்தில் திட்டி வாசலின் மீது கோபுரம் அமைப்பதில்லை எனினும் திருவாரூரில் அழகிய கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது.

சிவமகாபுராணம் திட்டிவாசலை ஈசானத்துப் பெரு வாசல் என்று குறிக்கின்றது. இதுவே சிவபெருமானுக்கு அணுக்கத் தொண்டர்களாக விளங்கும் பூதர்கள் வீற்றிருக்கும் வாசலாகும். (மேலும் விளக்கத்தை சிவமஞ்சரி 9... பக்கம் காண்க)

மதுரை மீனாட்சி சுந்தரேசர் ஆலயத்தில் நான்கு திசையிலும் பெரிய ராஜகோபுரங்கள் இருந்தபோதிலும் பெருமான் அவற்றின் வழியாக உலா செல்வதில்லை. கிழக்கு உட்கோபுரவழியாக வெளிவந்து அஷ்டசக்தி மண்டபத்தினை அடைவார். அங்கிருந்தே வீதி யுலாவிற்கு வெளியே செல்கின்றார். திருவண்ணாமலை, சிதம்பரம் திருவாரூர் முதலிய தலங்களிலும் இவ் வழக்கத்தைக் காணலாம்.

இடைக்கட்டுக் கோபுரங்கள்

தென்பாண்டிநாட்டில் அம்பிகை ஆலயமும் சுவாமி ஆலயமும் அடுத்தடுத்து தனித்தனிச் சுற்றுப் பிரகாரங்களுடனும் தனித்தனி வாயில்களுடனும் விளங்குகின்றன. இந்த வாயில்கள் மீது பெரிய ராஜகோபுரங்கள் சிறப்புடன் அமைக்கப்பட்டுள்ளன. அம்பிகை சந்நிதிக்கும் சுவாமி சந்நிதிக்கும் நடுவில் அமைந்துள்ள மதிலில் இரண்டு சந்நிதிகளுக்கும் பொதுவான பெரிய வாயில் அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் இரண்டு சந்நிதிகளுக்கும் எளிதில் சென்று வரமுடிகிறது.

இந்த வாயில் இடைக்கட்டு வாயில் என்றும் இதன் மீது அமையும் கோபுரம் இடைக்கட்டுக் கோபுரம் என்றும் அழைக்கப்படுகின்றன. மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தில் அமைந்துள்ள இடைக்கட்டுக் கோபுரம் அளவில் பெரியதாகும். இது சுவாமி சந்நிதிக்குத் தெற்குக் கோபுரமாகத் திகழ்கிறது. இதுபோன்று திருநெல்வேலி நெல்லையப்பர் ஆலயம் முதலிய ஆலயங்களில் இடைக்கட்டுக் கோபுரங்கள் சிறப்புடன் திகழ்கின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கோபுரங்களும் அதன் அங்கங்களும்

கட்டுமானம்

நெடியவாயிலுடன் கூடிய கோபுரங்களின் அடிப்பகுதி கல்ஹாரம் என்று அழைக்கப்படுகிறது. இதன்மீது அமையும் அடுக்குகள் (தளங்கள்) ஒவ்வொன்றும் நிலைகள் என்று அழைக்கப்படுகின்றன. தளங்கள் எனப்படும் நிலைகளின் முன்னும் பின்னும் வாயில்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தளங்கள்

நிலை வாயில்களின் இருபுறமும் துவாரபாலகர்கள், அஷ்டமங்கலங்களை ஏந்திய அப்சரப் பெண்கள் ஆகியோர் அமைக்கப்பட்டுள்ளனர். தளங்களின் முடிவில் அமைந்துள்ளது தளம் ரிஷபதளமாகும். இதன் நான்கு மூலைகளிலும் எட்டு ரிஷபங்களும் நான்கு அதிகார நந்திதேவர்களும் பூதங்களும் அமைக்கப்பட்டுள்ளனர். அதன்மீது அமையும் பகுதி களகூடம் (எ) கழுத்துப் பகுதியாகும். இதில் நாற்புறமும் வாயில்கள் அமைந்துள்ளன. இதன்மீது அமையும் வண்டிக் கூரைபோன்ற வளைவான அரைவட்டக் கூரை, பண்டியல் எனப்படுகிறது. இதன் பக்கவாட்டில் இரண்டு புறமும் வட்டமான பிரபைகள் உள்ளன. இவற்றை மகாநாசிகள் என்று கூறுவர். இவற்றில் பூதவரி, அன்னவரி, சிங்கவரி முதலியவை அமைக்கப்படுகின்றன. பண்டியல் மீது அமைவது தாமரைப் பீடமாகும். இதன்மீது வரிசையாகக் கலசங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

தளங்களை இரட்டைப் படையில் அமைப்பர். இவற்றில் அமையும் வாயில்களுடன் களகூடத்தில் அமையும் வாயிலையும் சேர்ந்து ஒற்றைப் படையில் வாயில்கள் அமையும் இவற்றைக் கண்கள் என்றும் அழைப்பர். காலப்போக்கில் இரட்டைப்படை எண்ணிக்கையிலும் கண்கள் அமைக்கப்பட்டன.

ஐந்து நிலைக்கோபுரங்களே அதிக எண்ணிக்கையில் அமைந்துள்ளன. சிதம்பரத்தில் அமைந்துள்ள நான்கு பெரிய கோபுரங்களும் ஏழுநிலைகளைக் கொண்டதாகும். மதுரையில் அமைந்துள்ளவை ஒன்பது நிலைகளைக் கொண்டவை. திருவண்ணாமலைக் கோபுரம் பதினோரு நிலைகளைக் கொண்டதாகும் பதினாறு நிலைகளைக் கொண்ட கோபுரமே உத்தமமானதென்று சிற்ப நூல்கள் கூறுகின்றன. இத்தகைய கோபுரம் எங்கும் இல்லை.

கலசங்கள்

கோபுரங்களுக்கு அழகைத் தருவது அதன் உச்சியில் வரிசையாக வைக்கப்பட்டுள்ள கலசங்களேயாகும் குறைந்த பட்சம் 3 கலசங்களும் அதிகபட்சமாக 13 கலசங்களும் வைக்கப்படுகின்றன. கலசத்தின் அடிப் பகுதி தாமரைப்பீடமென்றும் அதற்குமேலே தண்டை போல் அமைவது கீழ்க்கண்டமென்றும், அதற்குமேல் பெரிய உருண்டையான பகுதி குடமென்றும் அதன்மேலே யுள்ள தண்டை போன்ற பகுதி மேற்கண்டமென்றும் அதன்மீதுள்ள கூம்பிய உச்சிப்பகுதியான தாமரை மொட்டு என்றும் அழைக்கப்படுகின்றன. ஆதியில் கருங் கல்லால் கலசங்கள் அமைக்கப்பட்டன. பிறகு சுதையால் சமைக்கப்பட்டன. இப்போது செப்புக் கலசங்களை அமைக்கின்றனர். பொன்முலாம் பூசப்பட்ட கலசங்களை வைக்கும் வழக்கம் உள்ளது. தங்கக் கலசங்கள் மின்னுவதைத் திருமயிலைக் கபாலீசுவரர் ஆலயத்தில் காண்கிறோம்.

கலசங்களுக்குள் வரகு தானியத்தை முழுவதுமாக நிரப்பி மூடியபின்னரே உச்சியில் வைக்கப்படும். அதில் வெள்ளி (அ) செப்புத்தகட்டில் குடமுழுக்கு செய்யப்பட்ட நாள் முன்னின்று செய்தவர்களின் பெயர்களை எழுதி இடுவதும் உண்டு. கலசங்களின் இவற்றின் சிறப்பு இடி, மின்னல் போன்ற சீற்றங்களை உள்வாங்கிக் கொண்டு கோபுரங்களைக் காப்பதேயாகும்.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அம்பிகை சந்நிதி ராஜகோபுரங்கள்



ஆதியில் சுவாமிக்கு மட்டுமே ராஜ கோபுரம் அமைக்கப்பட்டது. பின்னாளில் அம்பிகைக்குத் தனியே ராஜகோபுரம் அமைக்கும் வழக்கம் வந்தது. இதை முதலில் உள்மதிலிலேயே அமைத்தனர். இந்நிலையை மதுரை மீனாட்சியம்மன் திருவிடைமருதூர் பெரிய நாயகி அம்மன் ஆலயம் முதலியவற்றில் காணலாம். பின்னாளில் சுவாமி சந்நிதி கோபுரத்திற்கு இணையாக வெளிமதிலிலேயே அம்பிகைக்கும் தனிவாசல் அமைத்து அதன்மீது பெரிய கோபுரங்களைக் கட்டினர். இதனைத் திருப்பூவணம் புஷ்பவனேசுவரர், திருவேடகம், ஏடகநாதர், நெல்லை நெல்லையப்பர் ஆலயம் முதலியவற்றில் காணலாம். தென்பாண்டி நாடு முழுவதிலும் ஒரேமதிலில் இணையாக உள்ள சுவாமி, அம்மன் கோபுரங்களைக் காண்கிறோம்.

மதுரை மீனாட்சியம்மனுக்கு உள் மதிலில் கட்டப்பட்டுள்ள கோபுரம் சித்திரக் கோபுரம் என்றழைக்கப்படுகிறது. இதில் பெயருக்கேற்ப அழகிய சுதைச் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன.

திருவிடைமருதூர் அம்பிகை சந்நிதியின் பெரிய ராஜ கோபுரம் ஐந்து நிலைகளுடன் அமைந்துள்ளது.

சிதம்பரத்தில் காமகோட்டமுடைய நாச்சியாரான சிவகாமி அம்மனுக்கு ஆலயமும் சுற்றுமாளிகையும் ராஜகோபுரமும் காளிங்க ராயன் என்பவனால் அமைக்கப்பட்டதாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. மேலும் மூன்றாம் குலோத்துங்கன் சிதம்பரம் அம்பிகை ஆலயத்திற்கு பொன்வேய்ந்ததை, "இறைவி கோபுரம் பொன்வேய்ந்து" எனவரும் அவனது மெய்கீர்த்தியால் அறிகிறோம்.

சிவனோடு இணைத்துப் போற்றப்பட்ட போதிலும் தனிக்கோயில் கொண்டு அருள்பாலிக்கும் அம்பிகையர் காஞ்சீபுரத்திலுள்ள காமாட்சி அம்மன் தேவிகாபுரம் பெரியநாயகி முதலியோர் ஆவர். இவர்களுக்குத் தனி ஆலயம் ராஜ கோபுரங்களுடன் அமைந்திருக்கின்றன. தேவிகாபுரம் பெரிய நாயகிக்கு ஏழு நிலைகோபுரம் சிறப்புடன் அமைந்து உள்ளது. காஞ்சீபுரம் காமாட்சியம்மனுக்குப் பஞ்சகோபுரங்கள் அமைந்துள்ளன.

குடந்தையை அடுத்துள்ள திருநாகேஸ்வரம் நாகநாத சுவாமி ஆலய வெளிப்பிராகாரத்தில் குன்றுமாமுலையம்மை என்னும் மகாகௌரிதேவி ஆலயம் உள்ளது. இந்த அம்பிகை சந்நிதிக்கு ஐந்து நிலைகளைக் கொண்ட தெற்கு நோக்கிய ராஜகோபுரமும் மூன்று நிலைகளைக் கொண்ட கிளிகோபுரமும் அமைந்திருப்பதைக் காண்கிறோம்.

கோபுரத்தைக் கட்டிய சிற்பியின் திருவுருவங்கள்

கோபுரங்களின் கம்பீரத்தையும் அழகையும் கண்டு வியக்கும் நாம் அதனைத் திட்டமிட்டுக் கட்டிய உன்னத சிற்பிகளை அறியமுடிவதில்லை அவர்கள் எங்குமே தம் பெயரைப் பொறித்து வைக்கவில்லை. கோபுரத்தைக் கட்டி வைத்தவர்களும் அதுபற்றிச் சிந்திக்கவில்லை அபூர்வமாகச் சிலதலங்களில் மட்டுமே கோபுரத்தைக் கட்டிய சிற்பிகளுக்கு ஏற்றம் கொடுத்து அவர்களுடைய உருவங்களையும் அதில் அமைத்துள்ளனர்.

சிதம்பரம் வடக்குக் கோபுரத்தில் அதனைக் கட்டிய சிற்பிகளின் திருவுருவங்களும் அவர்களுடைய பெயர்களான விருத்தகிரியில் சேவுகப்பெருமான் அவன்மகன் விசுவமுத்து திருபிறைக் கோடை ஆசாரி அவன் தம்பி காரணாச்சாரி என்பன பொறிக்கப்பட்டு உள்ளன. கிழக்குக் கோபுரத்தில் இரண்டு சிற்பிகளின் உருவங்களையும் அவர்கள் பயன்படுத்திய அளவு கோலையும் காண்கிறோம்.

பின்னாளில் கோபுரத்தைக் கட்டித் திருப்பணிச் செய்தவர்களின் திருவுருவங்களை அதில் அமைத்தனர். எடுத்துக்காட்டாகச் சிதம்பரம் கிழக்கு ராஜ கோபுரம் பழுது பட்டிருந்த போது காஞ்சிபுரம் வள்ளல் பச்சையப்ப முதலியார் தன் சகோதரியான சுப்பம்மாளின் பெயரால் அதனைத் திருப்பணி செய்ததுடன் அந்த அம்மையாருடைய திருவுருவத்தையும் ஒரு மாடத்தில் அமைத்துள்ளார். வள்ளல் பச்சையப்பன் ஏற்படுத்திய அறக் கட்டளைகள் இன்றளவும் சிதம்பரத்தில் நடத்தப்பட்டு வருவது மிகவும் குறிப்பிடத்தக்கது. ★

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

"அரன்கோயில் வலம் வந்து கோலகோபுரம் சூழா கால்களால் பயனென்ன?"



மதுரைக் கோபுரங்கள் படம் உதவி சிவஸ்ரீ. ஜெகதீஸ்வரீ ஹரிவாசுதேவ் அவர்கள்

பிராகாரங்கள்

ஆலயங்களில் கருவறையில் வீற்றிருக்கும் பெருமானை வலம் வந்து வணங்குவது பெரும் புண்ணியமாகப் போற்றப்படுகிறது. அரன்கோயில் வலம் வந்து கோல கோபுரக் கோகரணம் சூழாக் கால்களால் பயன் என்ன? என்று அப்பரடிகள் கேட்கிறார். ஆலயங்களில் அன்பர்கள் இறைவனைச் சுற்றி வலம் வந்து வழிபட இருக்கும் பகுதியே பிராகாரங்களாகும். இவற்றை வீதிகள், சுற்றாலைகள், ஆவரணங்கள் எனப் பலவாறு அழைக்கின்றனர். விழா நாட்களில் உலாத் திருமேனியாக விளங்கும் பெருமான் கருவறையைச் சுற்றி வலம் வந்து அருள் புரியவும் பிராகாரங்கள் பயன்படுகின்றன. ஆலயங்களில் பிராகாரங்கள் சிறப்பான இடத்தைப் பெறுகின்றன.

பிராகாரங்களுக்கு அவற்றை அமைத்தவர், அதன் பயன்பாடு அதில் வலம் வருவதால் அடையப்படும் பலன் முதலிய காரணங்களையொட்டிச் சிறப்புப் பெயர்கள் வழங்குகின்றன.

பிராகாரங்களில் தலங்களுக்குரிய தீர்த்தங்களும் விநாயகர், முதலான பரிவார தெய்வச் சந்நிதிகளும் இடம் பெற்றுள்ளன.

சிவமஞ்சரியின் இந்த முப்பதெட்டாவது மலரின் இரண்டாம் பகுதி, பிராகாரங்களைப் பற்றிய செய்திகளைத் தாங்கி வருகின்றது. இதில் சிவாலயங்களிலுள்ள பிராகாரங்கள், அதன் பயன்பாடு சிறப்பு முதலிய செய்திகள் விரிவாக இடம் பெற்றுள்ளன. இவற்றை அறிந்து மகிழத் தங்களை அன்புடன் அழைக்கிறோம்.

திருவீதி வலம் வந்து நடமாடி மகிழும் செம்பொற் சோதி யாகிய சிவபெருமானும் உமாதேவியும் அன்பர்களுக்குச் சகலசெல்வயோகமிக்க வாழ்வை அளித்து அருள்பாலிக்க வேண்டுமென்று அவர்தம் பொன்னார் திருவடிகளைப் போற்றி வணங்குகிறோம். -சிவசுந்தரி

அன்பர்களின் கருத்திற்கு...

பிராகாரங்கள் எனும் தலைப்பில் இங்கு வெளியாகியுள்ள செய்திகள் பல்வேறு சமயங்களில் பல அன்பர்களிடத்திலிருந்து சேகரிக்கப்பட்ட கருத்துக்களின் தொகுப்பு. இவற்றைப் பலர் நடைமுறையில் அப்படியே ஏற்றுக் கொள்வதில்லை. எடுத்துக்காட்டாக கருவறைக்குள் லிங்கத்தைச் சுற்றி அமையுமிடத்தை முதலாவரணம் என்றும் அங்கு உருத்திரர், பீடசக்திகள் முதலானோர் வீற்றிருக்கின்றனர் என்றும் குறிக்கின்றனர். பலர் இந்த கருத்தினை ஏற்றுக் கொள்வதில்லை. அது போன்றே நீராழி பத்தி, நடவாணம், திருமாளிகைப் பத்தி ஆகிய மூன்றும் ஒரே கூரையின் கீழ் அல்லது ஒரே மதிலுக்குள் இருப்பதால் மூன்றையும் சேர்த்து ஒரே பிராகாரமாக எண்ணுகின்றனர். உண்மையில் அவை தனித்தனி பிராகாரங்களே ஆகும். இங்குள்ள கட்டுரைகளில் கருவறையுள் முதல் சுற்று இருப்பதாகவும் நீராழிபத்தி, நடவாணம், திருமாளிகைப்பத்தி, ஆகிய மூன்றும் தனித்தனிப் பிராகாரங்களாகவும் இருப்பதாகக் கொண்டே பிராகாரங்கள் எண்ணிக்கைஇடப்பட்டிருக்கின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிராகாரங்கள் சிந்தனைத் துளிகள்



★ மதுரை ஸ்ரீ மீனாட்சியம்மன் ஆலயத்திலுள்ள பொற்றாமரைக் குளமும் மண்டபத்துடன் கூடிய பிராகாரம்

உலகிலேயே மிக நீண்ட பிராகாரம் ராமேசுவரத்திலுள்ள மூன்றாம் பிராகாரமாகும். இதன் நீளம் கிழக்கு மேற்காக 640 அடிகளும் வடக்கு தெற்காக 400 ஆகும். மூன்று பிராகாரங்களின் மொத்த நீளம் 3850 அடியாகும். ஏறத்தாழ (5கி.மி) ஆகும். வெளிப் பிராகாரத்தில் 1200 தூண்கள் உள்ளன. ஒவ்வொரு தூணும் 17 அடி உயரம் கொண்டவை. இவை ஐந்தடி உயரம் கொண்ட திருமாளிகைப்பத்தியின்மீது நிறுத்தப்பட்டு உள்ளன. தரையிலிருந்து உட்கூரையின் உயரம் 30 அடிகளாகும்.

★ சிதம்பரத்திலுள்ள சிவகங்கை தீர்த்தம், திருவண்ணாமலையிலுள்ள பிரம்மதீர்த்தம், சிவகங்க்கை தீர்த்தம், திருக்கழுக்குன்றத்திலுள்ள நந்தி தீர்த்தம் மதுரை பொற்றாமரை தீர்த்தம் முதலியவை பிராகாரங்களில் அமைந்துள்ள தீர்த்தங்களாகும். தீர்த்தங்களைச் சுற்றிலும் பிராகாரமும் மண்டபமும் அமைக்கப்பட்டு உள்ளன. மக்கள் நீராடி ஆடைகளைத் தரித்துக் கொள்ளவும், சிவபூசை செய்யவும் இவற்றைப் பயன்படுத்துகின்றனர்.

பிராகாரங்களில் அனேக துணைச் சந்நிதிகளும் தீர்த்தங்களும் அமைக்கப்படுகின்றன. அதிக அளவு துணைச் சந்நிதிகளைக் கொண்ட பிராகாரம் திருவாரூர் ஆலய மூன்றாம் பிராகாரமாகும். விநாயகர் கொடிமரம், சதுர்வேத லிங்கங்கள் ஆயிரக்கால் மண்டபமான தேவ வாசிரியம், நூற்றுக்கால் மண்டபம் துர்க்கை சந்நிதி, பஞ்சலிங்கங்கள், கமலாம்பிகை சந்நிதி, நீலோற்பலாம்பிகை சந்நிதி, முத்தீசுவரம், விஸ்வகர்மேசுவரம், முதலியவை இதில் இடம்பெற்றுள்ளன.

★ பெரும்பாலான ஆலயங்களின் வெளிப்பிராகாரத்தில் தென்மேற்கு முனையில் அலங்கார மண்டபமும், வடகிழக்கில் வசந்த மண்டபமும், தென்கிழக்கில் மடைப்பள்ளியும் அமைந்துள்ளன.

★ சுவாமியைச் சுற்றிப் பிராகாரங்கள் அமைந்திருப்பதைப் போலவே அம்பிகை ஆலயங்களிலும் பிராகாரங்கள் உள்ளன. அம்பிகை ஆலயப் பிராகாரங்களில் பரிவார தேவதைகள் எழுந்தருளியுள்ளனர். திருவாரூர் கமலாம்பிகை சந்நிதிப் பிராகாரத்தில் விநாயகர் முருகன் அட்சரபீடம் ஆகிய அந்நிதிகள் அமைந்திருக்கின்றன.

★ திருவிடைமருதூர் அம்பிகை சந்நிதியில் அம்பிகை சந்நிதிக்கென தனியே உட்பிராகாரமும் வெளிப்பிராகாரமும் அமைந்துள்ளன. உட்பிராகாரத்தில் விநாயகர் முருகன் உள்ளனர். வெளிப்பிராகாரத்தில் அன்பிற்பிரியாள் சந்நிதி, வைரவா, கணநாதர் பீடம், யோகலிங்கம் ஆகியவை உள்ளன.

★ சிதம்பரம் நடராசர் ஆலயத்தில் சிற்சபையைச் சுற்றியுள்ள பிராகாரத்தில் சபையை ஒட்டி நீராழிப் பிராகாரம் உள்ளது. இதில் சிவலிங்கமும் நந்தியும் மாறி மாறி அமைந்துள்ளன. இதையடுத்து நடவாண சுற்றும், திருமாளிகைப் பத்தி சுற்றும் உள்ளன. திருமாளிகைப் பத்தியில் விநாயகர், முருகன் லிங் கோற்பவர், பள்ளியறை, பிட்சாடனர், சூரியன், பைரவர் முதலிய திருவுருவங்கள் அமைத்து வழிபடப்படுகின்றன.

நீராழிப் பிராகாரம்

★ முன்னூர் ஆடவல்லீச்சுரம், மாகறல் மாகறலீச்சரம், பெருநகர் பிரம்மபுரீசுவரம் முதலிய ஆலயங்களில் உள்ள நீராழிப் பிராகாரம் அபூர்வமான சிறப்பு வாய்ந்ததாகும். இதில் நடுவில் கருவறை கணிசமான அளவு உயரே தூக்கிக் கட்டப்பட்டுள்ளது. சுற்றிலும் வேண்டிய இடைவெளிவிட்டுத் திருமாளிகைப் பத்திப் பிராகாரம் கருவறைக்கு இணையான உயரத்தில் கட்டப்பட்டுள்ளது. இடைப்பட்ட பகுதியில் நீரைத்தேக்கி வைக்க வகைசெய்யப்பட்டுள்ளது. வேனிற்காலத்தில் இதில் நீரைத் தேக்கி வைப்பது வழக்கம் இது நீர் நிலையின் நடுவே சிவாலயம் அமைந்துள்ளதைப் போல் உள்ளது. இது கண்ணுக்குக் குளிர்ச்சியான காட்சியாக உள்ளது. இப்பிராகாரத்தில் மக்கள் வலம் வருவதில்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மானுட தேக விளக்கமும் பிராகாரங்களும்

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம், வள்ளல் பிரானார்க்கு வாய்க்கோபுரவாசல்" என்பது திரு மந்திரமொழியாகும். சித்தர்கள் உடம்பையே கோயிலாகவும் அதனுள் அமைந்துள்ள கோசங்களைப் பிராகாரங்களையும் கண்டு மகிழ்கின்றனர். அவர்கள் கூறும் தத்துவ வடிவமான பிராகாரங்களை நாமும் கண்டு மகிழலாம்.

பஞ்சகோசப் பிராகாரம்

நமக்கு மூன்று உடல்கள் உள்ளனவென்று தத்துவ நூல்கள் கூறுகின்றன. இவை ஸ்தூலம் (கண்ணுக்குப் புலனாவது) சூட்சுமம் (புலனாகாதது) காரணம் என்று மூவகைப்படும். இம் மூன்றும் அன்னமயகோசம், பிராணமய்கோசம், மனோமயகோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமயகோசம் என்று ஐந்து வகையாக உள்ளன.

அன்னமயகோசம் பருஉடலாகும் இது அன்னத்தால் (உணவால்) வளர்வதால் இப்பெயர் பெற்றது. உடலிலுள்ள மெய், வாய், கண், மூக்கு, செவி முதலிய கர்மேந் திரியங்கள் பிராணனோடு சேர்ந்து இயங்கி, தொடுதல், சுவைத்தல், பார்த்தல், முகர்தல், கேட்டல் முதலிய செயல்களைச் செய்வதுடன் மனம் சித்தத்தைத் தொழிற் படுவதால் பிராணமயகோசம் எனப்பட்டது. உடலினை நடத்துவது (மனத்தில்) சித்தத்தில் தோன்றும் ஞானேந்திரியச் செயல்பாடுகள் ஆதலின் இத்தொகுப்பு மனோமய கோசம் எனப்பட்டது.

உயிரைச் செயலில் செலுத்தும் புத்தியும் அதன் செயல்பாடுகளும் விஞ்ஞானமயகோசமாகும். இவற்றின் துணைகொண்டு பெரும் அனுபவத்திற்குத் துணை செய்பவை (ஆனந்தித்தல்) ஆனந்த மயகோசம் எனப் பட்டது.

அன்னமயமான தேகத்தை இயங்குவது பிராணன் அவற்றின் ஓட்டத்தை ஊக்குவிப்பது மனது இதனால் பெறப்படுவது அறிவாகிய விஞ்ஞானம் இவற்றில் கிடைக்கும் அனுபவம் ஆனந்தம் இந்த ஐந்து கோசங்களுக்கு உள்ளே உள்ள இருதய மண்டலத்தில் இறைவன் நீலநிற ஜோதி வடிவமாக நடமாடிக் கொண்டிருக்கின்றான் என்று தத்துவ நூல்களில் கூறப்பட்டுள்ளது.

ஆலயங்களில், வெளிப்பிராகாரம் (மாடவீதி) அன்ன மய கோசமாகவும், கோபுரத்துள்ளேயுள்ளது பிராணமய கோசமாகவும், திருமாளிகைப்பத்தி மனோமய கோச மாகவும் நடவாணம், விஞ்ஞானமய கோசமாகவும் கரு வறைக்குள் அமையும் பிராகாரம் ஆனந்த மயகோச மாகவும் விளங்குவதாகக் கூறப்படுகின்றன. பஞ்சகோசங்கள் ஒன்றுக்கொன்று இணைந்து இயங்குவதாகும்.

எடுத்துக்காட்டாகச், சிதம்பரம் திருநகரை மானுட தேகமாக எண்ணிப்பார்க்கும் போது, தேரோடும் நான்கு மாடவீதிகள் அன்னமய கோசமாகவும், (விக்ரமசோழன் வீதி) என்று குறிக்கப்படும், பெரிய வெளிப் பிராகாரம் பிராணமய கோசமாகவும், உள்சுற்றாகிய (மூலட்டநாதர் கோவிந்தராசர் முதலியோர், எழுந்தருளியுள்ள) பிராகாரம் மனோமய கோசமாகவும் தில்லைச் சிற்றம்பலத்தையும், கனகசபையையும், சுற்றியுள்ள பிராகாரம் விஞ்ஞானமய கோசமாகவும் கொள்ளப் படுகின்றன. ஐந்தாவதான ஆனந்தமயகோசம் சபையின் மேலே உள்ளது. இதன் வெளிவரும் வழி அடைக்கப் பட்டுள்ளது. ஆனந்தம் முடிவற்றது என்பதால் இப்பிரகாரம் சுற்றிமுடிக்கும் அமைப்பில் இல்லை என்று கூறுகின்றனர். இதன் பொருள் இன்பத்தில் நிலைபெற்றி ருத்தல் என்பதாகும்.

நடுவிலுள்ள கருவறையான சிற்சபையே இருதய கமலமாகும். அதில் பெருமான் எப்போதும் என்றும் நடன மாடுகிறார். இந்த வகை ஆலயங்களை ஆகமநூல்கள் ஹ்ருதய கமலப் பிரஸ்தார ஆலயம் என்று அழைக் கின்றன.

சப்த தாதுக்களே பிராகாரம்

சில நூல்களில் உடலிலுள்ள சப்த தாதுக்கள் எனப்படும் தோல், மாமிசம், இரத்தம், மேதை, நரம்பு, எலும்பு, சுக்கிலம், ஆகிய ஏழும் ஆலயத்தில் பிராகாரங் களாக உள்ளன என்று கூறப்பட்டுள்ளது.

இப்படி அமையும் ஆலயத்தைச் சரீரப் பிரஸ்தார ஆலயமென்று அழைக்கின்றனர். இவ்வகையில் சுக்கிலம் கருவறைக்குள்ளேயுள்ள சுற்றாகவும், இரத்தம் கருவறைச் சுற்றி அமையும் நீராழி அமைப்பாகவும், மாமிசம் நட வாணமாகவும், மேதை, அஷ்டபரிவாரங்கள் அமைந் துள்ள திருமாளிகைப் பத்திச் சுற்றாகவும், வெளிச்சுற்றும் மதிலும் எலும்பாகவும், மதிலைச் சுற்றி அமையும் மட வளாகம் நரம்பாகவும், மாடவீதிகள் தோலாகவும் கொள்ளப்படுகின்றன.

இம்முறையில் திருத்தலமே ஒரு புருஷனாக உருவகம் செய்யப்படுகிறது. புருஷனின் இருதயமே கருவறை. அதனுள் விளங்கும் ஜீவனே சிவன்.

சித்தர்களும் யோகிகளும் இத்தகைய கருத்துக் களின் மூலம் திருக்கோயில் மானுடதேகத்தின் வடிவ மென்று தெளிவுபடுத்திக் கூறியுள்ளனர். இவற்றை "தேகாலய" விளக்கம்" முதலிய நூல்களில் காணலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிறப்புப் பெயர்கொண்ட பிரகாரங்கள்

ஆலயங்களில் ஆண்டவனை வலம் வந்து போற்றுவதற்காகப் பிராகாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றிற்குத் தனிச்சிறப்பான பெயர்களும் வழங்குகின்றன. இறைவனைச் சுற்றிப் பிராகாரங்கள் அமைப்பதைப் போலவே தலவிருட்சங்களைச் சுற்றியும், தீர்த்தங்களைச் சுற்றியும் கூடப் பிராகாரங்கள் அமைக்கிப்படுகின்றன. இத்தகைய பிராகாரங்கள் சிலவற்றை அறிந்து மகிழலாம்.

நீராழிப் பத்திப் பிராகாரம்

கருவறையைச் சுற்றிலும் நீர் நிறைத்து வைக்கச் சற்று பள்ளமான அமைப்பு உள்ளது. இது சக்தி மண்டலமாகும். சில ஆலயங்களில் இந்த அமைப்புக்குக் கைப்பிடி சுவர் அமைத்து அதன்மீது வரிசையாக நந்திகளை அமைத்துள்ளனர். சோழமண்டலத்திலுள்ள அனேக ஆலயங்களில் கருவறையோடு இணைந்தவாறு உள்ள இத்தகைய பிராகாரத்தைக் காணலாம். இதற்கு மண்டபம் கட்டியுள்ளனர். இது நீராழிபத்தி மண்டபம் என்று அழைக்கப்படுகிறது.

ஜடாமண்டலப் பிராகாரம்

திருவையாற்று ஐயாறப்பர் ஆலயத்தில் கருவறையைச் சுற்றி அமைந்துள்ள பிராகாரத்தில் மக்கள் வலம் வருவதில்லை. இதில் பூமிக்கடியில் இறைவனின் ஜடா மண்டலம் விரிந்து பரவி இருப்பதாகக் கூறப்படுகிறது. இதில் தட்சிணாமூர்த்தி உமாமகேசுவரர் சப்தமாதர், விநாயகர், முதலியோர் நிலைப்படுத்தப்பட்டுள்ளனர். இதனை ஜடாமண்டலப் பிராகாரம் என்றழைக்கின்றனர்.

சித்திரப் பிராகாரம்

பிராகாரச் சுவர்களில் உலக உற்பத்தி சிவலீலைகள், அடியவர் வரலாறுகள், தலபுராணக் காட்சிகள் ஆகிய வற்றை ஓவியங்களாகத் தீட்டி வைப்பது பண்டைய வழக்கம்.

திருக்கடையூரில் உட்பிராகாரத்தின் வடபகுதியில் சுவர் நெடுக, தலபுராணத்தை விளக்கும் காட்சிகளைச் சித்திரங்களாகத் தீட்டி வைத்திருப்பதைக் காண்கிறோம். மதுரையில் பொற்றாமரைக் குளத்தினைச் சுற்றி உள்ள பிராகாரத்தில் திருவிளையாடற்புராணக் காட்சிகள் தீட்டப்பட்டுள்ளன.

பிராகாரம் நெடுகவும் சுதைச் சிற்பங்களை அமைத் திருப்பதைத் திருவிடைமருதூர் மகாலிங்க சுவாமி ஆலயத்தில் காண்கிறோம். பிராகாரம் சித்திரப் பிராகாரம் என்று அழைக்கப்படுகிறது. இதில் ஆயிரத் துக்கும் மேற்பட்ட சுதைச் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன.

காஞ்சி கயிலாயநாதர் ஆலயத்து

சிற்றாலய சித்திரப் பிராகாரம்

காஞ்சி கயிலாயநாதர் ஆலயத்தில் கருவறையைச் சுற்றி அமையும் மதிலின் உள்வரிசையில் 52 சிற்றால யங்கள் உள்ளன. அவற்றில் பல்லவமன்னர்களின், உருவங்களும், சோமாஸ்கந்தர் வடிவங்களும் உள்ளன. அட்ட வீரட்டக்காட்சிகளான கால சம்ஹாரம், கஜசம் ஹாரம், ஜலந்தரவதம், மகாபாரதக் காட்சியான அர்ச் சுனன் கிராதசிவன் யுத்தம், மகாபுராணக் காட்சியான இராவணன் மலையைப் பெயர்த்தல், திருமால் கண்ணை இடந்து அர்ச்சித்தல், முதலியன இடம் பெற்றுள்ளன. இந்த வரிசையில் ஒவ்வொரு சிற்றாலயத்திற்கும் தனித்தனியே விமானங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதில் கொடிகள் பறக்கவிடக் கல்துளைகள் அமைக்கப் பட்டுள்ளன.

சுவர்க்கப் பிராகாரம்

காஞ்சீபுரம் கயிலாய நாதர் கோயில், தஞ்சைப் பெரிய கோயில் முதலிய சில கோயில்களில் கருவறை மீதுள்ள விமானத்தைத் தாங்கும் வகையில் இரட்டைச் சுவர்கள் கட்டப்பட்டுள்ளன. இந்த இரண்டு சுவர்களுக்கும் நடுவே அமைவது சுவர்க்கப் பிராகாரம் என்று அழைக்கப் படுகிறது. அந்தராளம் எனப்படும் இடைக்கட்டில் இதற்கு உள்ளே செல்லவும் வெளியே வரவும் வாயில்கள் அமைந்துள்ளன.

தஞ்சாவூர் பெரியகோயிலில் அமைந்துள்ள இந்த வகைப் பிராகாரத்தில் சுந்தரர் யானைமீதும், சேரமான் பெருமாள் குதிரைமீதும் கயிலாயம் செல்லுதல், பெரிய ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது. மற்றும் நடனமாதர், இராஜராஜனுடன் கருவூர்த் தேவர் ஆகிய காட்சிகள் வண்ண ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. அத்துடன் மனோன்மணி சதாசிவர் முதலிய சிற்பங்களும் இடம் பெற்றுள்ளன. இதில் வலம் வருவது பெரும் புண்ணி யமாகக் கருதப்படுகிறது.

தீர்த்தப் பிராகாரங்கள்

மூர்த்தி தலம், தீர்த்தம், தலவிருட்சம் ஆகிய நான்குமே சிவபெருமானாக எண்ணப்படுகின்றன. திருத்தலங்களுக்கு மாடவீதியே பிராகாரமாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிலதலங்களில் தீர்த்தங்களைச் சிவபெருமானாக எண்ணி வலம் வந்து மூழ்குகின்றனர். தீர்த்தங்களைச் சுற்றிவர அதன் நாற்புறமும் தளவரிசையும் வேலியும் இடப்பட்டுள்ளன.

சிதம்பரம் சிவகங்கைத் தீர்த்தம், திருவண்ணாமலை சிவகங்கை தீர்த்தம் திருநெல்வேலி சிவகங்கைத் தீர்த்தம், மதுரை பொற்றாமரைக்குளம் முதலிய தீர்த்தங்களில் அதனைச் சுற்றி மண்டபத்துடன் கூடிய பிராகாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மதுரை பொற்றாமரைக் குளத்தினைச் சுற்றி நான்குபக்கமும் பிராகாரமும் மண்டபங்களும் அமைந்துள்ளன. இவற்றில் தலபுராணக் கதைகளை விளக்கும் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. மதுரை திருப்பதிகங்கள் திருக்குறள் ஆகியவை கல்வெட்டாக பொறிக்கப்பட்டு உள்ளன. இது வரலாற்றுக் களஞ்சியப் பிராகாரமாக விளங்குகிறது.

விருட்சப் பிராகாரங்கள்

கருவறையை வலம் வருவதைப்போலவே தலமரங்களையும் வலம்வந்து வணங்குகின்றனர். அதனால் தல மரங்களின் அடியில் மேடையும் அதைச் சுற்றி பிராகாரமும் அமைக்கப்படுகின்றன. காஞ்சீபுரத்தில் ஏகாம்பர நாதர் ஆலயத்தில் மாமரத்தை சுற்றித் தளவரிசையுடன் கூடிய பெரிய பிராகாரம் அமைக்கப்பட்டுள்ளது. திருமணச் சடங்குகள் இங்கு நடத்தப்படுகின்றன.

கிரிவலப் பிராகாரங்கள்

தெய்வத்தன்மை பெற்ற மலைகளையும் அன்பர்கள் சிவமாகவே போற்றி வலம் வந்து வணங்குகின்றனர். மலைகளைச் சுற்றிவரப் பாதைகள் அமைக்கப்பட்டன. திருவண்ணாமலையில் மலையைச் சுற்றிபாதை அமைக்கப் பட்டுள்ளது (அதில் தூரத்தை அளந்து அளவீட்டுக் கற்கள், மைல்கற்கள் பதிக்கப்பட்டிருந்தன). இவ்வீதிக்கு விக்கிரம சோழன் வீதி என்பது பெயராகும். பௌர்ணமிதோறும் லட்சக் கணக்கான மக்கள் இதில் வலம் வருகின்றனர். கார்த்திகைத் தீபத்திற்குப் பின்னரும் (12ம் நாள் விழாவிலும்) காணும் பொங்கலன்றும் அண்ணாமலையார் இதில் எழுந்தருளி வலம்வந்து அருள்பாலிக்கிறார்.

திருக்கழுக்குன்றத்திலுள்ள "வேதகிரி" மலையைச் சுற்றிப் பாதை அமைக்கப்பட்டுள்ளது. இதில் பெருமான் சித்திரைமாதப் பெருந்திருவிழாவின் மூன்றாம் நாளில் அறுபத்து மூன்று நாயன்மார்கள், பரிவாரங்களுடன் அதிகார நந்தியில் அமர்ந்து பவனிவருகின்றார். இத்தகைய காட்சி வேறெங்கும் இல்லை. அச்சிறுபாக்கம் ஆட்சீசுவரர் சித்திரைப் பெருந் திருவிழாவில் கொடி இறங்கிய பின்னரும், திருக்காளத்தியில் (காளஹஸ்தி) காளத்தி நாதர் மாசிமாதத்திலும் மலை வலம் வருகின்றனர்.

திருச்செந்தூரிலும் ஆலயத்தைச் சுற்றி அமைந்துள்ள பிராகாரம் கிரிவலப்பாதை என்றழைக்கப்படுகிறது.



★ சித்திரப் பிராகாரம் – திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமி ஆலயம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆலயங்களில் நடைமுறையில் காணப்படும் பிராகாரங்கள்

சிவாகமங்கள், பூஜாபத்ததிகள், சிற்ப சாத்திரங்கள் முதலான நூல்களில் கருவறையைச் சுற்றியுள்ள பிராகாரங்களின் சிறப்பும் அதற்குரிய பெயர்களும் கூறப்பட்டுள்ளன. இவற்றை நடைமுறையில் காண முடியவில்லை. நடைமுறைப் பழக்க வழக்கங்களுக்கு ஏற்பவும் அவ்வட்டாரத்துச் சான்றோர் துறவியர், சித்தர் முதலியோரின் வழிகாட்டுதலின்படியும், ஆலயங்களில் பிராகாரங்கள் அமைக்கப்படுள்ளன.

ஆலயங்களில் பஞ்சப் பிராகாரங்கள் அமைக்க வேண்டும் என்று சிற்ப நூல்களில் கூறப்பட்டுள்ளது. அவற்றின் பெயர்களும் அதில் இடம் பெற்றுள்ளன. இவை ஐந்திலும் வலம் வந்து பெருமானை வணங்கவேண்டுமென்று கூறுவர். அதே முறையில் இப்போது ஆலயங்களில் பிராகாரங்கள் இல்லை. நடைமுறையில் இருக்கும் பிராகாரங்களைப் பற்றிய செய்திகள் இங்குக் கூறப்பட்டு உள்ளன.

சிவாலயங்களில் முதற்பிராகாரம் என்பது கருவறைக்குள் சிவலிங்கத்தைச் சுற்றி அமைவதாகும். இதில் சிவாசாரியார் மட்டுமே வலம் வரலாம். இது அகநாழி எனப்படும். இரண்டாம் பிராகாரம் சக்தி மண்டலமாகும். இது கருவறையைச் சுற்றி நீர் நிரப்பி வைக்க ஏதுவாகச் சற்றுத் தாழ்வாக உள்ளது. இதனை நீராழிபத்தி என்றும் அழைக்கின்றனர். முன்னாளில் இது ஆலயத்தைச் சுற்றி நாற்புறம் அமைந்திருந்தது. காலப்போக்கில் முன்பகுதி மூடப்பட்டு, சுற்றியுள்ள மூன்று புறங்களில் மட்டுமே அமைக்கப்படுகிறது. இதிலும் அன்பர்கள் வலம் வரஇயலாது.

மூன்றாம் பிராகாரம், நடவாணம் எனப்படும் இதுவே பக்தர்கள் வலம் வரும் பகுதியாகும். மகாபக்த சிகாமணியான சண்டேசுவரர் இதில் வீற்றிருக்கின்றார்.

நான்காம் பிராகாரம் தேவபதமாகும். இது மேடை மீது சற்று உயர்த்திக் கட்டப்பட்டிருக்கிறது. இதில் ஆங்காங்கு உரிய திசையில் பரிவார தேவதைகள் அமைக்கப்பட்டிருக்கின்றனர்.

ஐந்தாம் பிராகாரம் என்பது வெளிப்பிரகாரமாகும். இதில் அம்பிகை சந்நிதி, யாகசாலைகள் தீர்த்தங்கள் முதலியவை அமைந்துள்ளன. ஆலயத்தின் மதிலைச் சுற்றி வெளியில் அமையும் மடவிளாகத்தை ஆறாம் பிரகாரமாகவும் சுவாமி பவனிவரும் மாட வீதிகளை ஏழாம் பிராகாரமாகவும் கொள்கின்றனர்.

பிரதோஷம் நித்தியோற்சவம் முதலிய விழாக்களில் ஐந்தாம் பிராகாரத்திலும், அமாவாசை, பௌர்ணமி கிருத்திகை ஆகியவற்றில் ஆறாம் பிராகாரமான மடவளாகத்திலும் பெருந்திருவிழாவில் மாட வீதிகளான ஏழாம் பிராகாரத்திலும் சுவாமி உலாவந்து அருள் பாலிக்கிறார்.

கருவறைக்கும் உள்மதில் சுவருக்கும் இடையேயுள்ள, நீராழிபத்தி, நடவாணம். திருமாளிகைப் பத்தி ஆகிய மூன்றும் ஒன்றாக ஒரே கூரைக்குள் அமைந்திருப்பதால் இவற்றை ஒரே பிராகாரமாக எண்ணுகின்றனர். உண்மையில் மூன்றும் தனித்தனித் தன்மை கொண்ட பிராகாரங்களாகும்.

பஞ்ச தேக மூர்த்திப் பிராகாரங்கள்

மேலே முதலில் குறிக்கப்பட்டுள்ள ஐந்து பிராகாரங்களைச் சித்தர்களும் யோகிகளும் முறையே உருத்திரப் பிராகாரம், விஷ்ணுப் பிராகாரம், பிரம்மப் பிராகாரம் மகேசுவரப்பிராகாரம், சதாசிவப் பிராகாரம் எனவும் அழைக்கின்றனர். கருவறைக்குள் அமைவது உருத்திரப் பிராகாரமாகும். இதனை ஆனந்தப் பிராகாரம் எனவும் குறிப்பர். இங்கு ஆனந்த ருத்திரர்கள் சதா இறைவனைப் பூசைசெய்து கொண்டு இருக்கின்றனர். இரண்டாவது பிராகாரமான சக்தி மண்டலம் நீர்மயமாக உள்ளது. நெருப்பு மயமான இறைவனைச் சூழ்ந்து நீர்மயமாக விளங்கும் சக்தி, நாராயணராக (நாரா– நீர்) இதில் இடம் பெற்றுள்ளாள். மூன்றாவதான பிரம்மப் பிராகாரம் அகண்ட பெருவெளியைக் குறிக்கின்றது. அதில் பக்தர்கள் வலம் வருகின்றனர்.

பரிவாரங்கள் வீற்றிருக்கும் நான்காம் பிராகாரம் மகேசுவரப் பிராகாரமாகும். இதில் மகேசுவர மூர்த்தங்களான சோமாஸ்கந்தர் நடராஜர் முதலியோரும், சூரியன், சப்தமாதர், கணபதி, முருகன், திருமகள், பைரவர் முதலிய பரிவாரங்களும் அமைக்கப்பட்டுள்ளனர். இதனை, தேவபதம் எனவும் அழைப்பர். வெளிப் பிராகாரமான ஐந்தாம் பிராகாரத்தைச் சதாசிவப் பிராகாரம் என்பர்.

இறைவனின் பஞ்சமூர்த்தங்களே பிராகாரங்களாக அமைவது ஆலயம் பேரண்டமாக விளங்குவதைக் குறிக்கும் என்பர்.

பஞ்சபூதமே பிராகாரங்கள்

சிலர் வெளிப்பிராகாரத்தை ஆகாசமாகவும், அதனுள் அமையும், நான்காவதான திருமாளிகை பிராகாரத்தைக் காற்று மண்டலமாகவும் மூன்றாம் பிராகாரமான நடவாணத்தை மண் மண்டலமாகவும், இரண்டாம் பிராகாரமாகிய நீராழிபத்தியை நீர் மண்டலமாகவும், உள்சுற்றை தீயாகவும், கொள்வர். இது இறை வனிடமிருந்து ஆதியில் தீயும், அதிலிருந்து நீரும், நீரிலிருந்து பூமியும், பூமியைச் சுற்றி காற்றும், காற்று விரிந்து ஆகாசமும் தோன்றிய தத்துவத்தை விளக்குகிறதென்பர்.

மையத்தில் கருவறையில் வீற்றிருக்கும் லிங்கத் திருமேனி உலகம் தோன்றி ஒடுங்குவதற்குக் காரணப் பொருளாக இருக்கிறதென்பர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிராகாரங்களும் விழாக்களும்

அனைத்து விழாக்களிலும் சிவபெருமான் பரிவாரங்களுடன் பிராகாரங்களில் பவனி வந்து அன்பர்களுக்கு அருள்பாலிக்கின்றார் என்றாலும் பிராகாரங்களை மையப்படுத்திப் பஞ்சப்பிராகார விழா சப்தப் பிராகாரவிழா முதலியவை நடத்தப்படுகின்றன. இவற்றில் திருவானைக்காவில் நடைபெறும் பஞ்சப் பிராகார விழாவும், திருவிடைமருதூரில் நடைபெறும் சப்தப் பிரகார விழாவும் புகழ்பெற்றவைகளாகும்.

பஞ்சப் பிராகார விழா

திருச்சி, திருவரங்கத்திற்கு இடையே அமைந்துள்ள தலம் திருவானைக்கா. இங்குள்ள ஜம்புகேசுவரர் ஆலயத்தில் ஐந்துபிராகாரங்கள் உள்ளன. மாசி, பங்குனி மாதங்களில் ப்ரம்மோற்சவம் எனப்படும் பெருந்திருவிழா நடைபெறுகிறது. இதன் இறுதி நாளான பங்குனி மாத சித்திரை நட்சத்திரத்தில் பஞ்சப் பிராகாரவிழா நடைபெறுகிறது. அந்நாளில் சுவாமி, புடவை அணிந்து பெண் வேடத்திலும், அம்பிகை வெள்ளாடை அணிந்து ஆண் வேடத்திலும் ஐந்து பிராகாரத்திலும் பவனி வருகின்றனர். சிறப்பு இசைக் கச்சேரிகள் நடைபெறுகின்றன. இந்த விழாவைப் பிரம்மதேவன் தொடங்கி வைத்தான் என்று தலபுராணம் கூறுகிறது. இந்நாளில் எட்டுத் திக்கிலும் கொடியேற்றப்படுகிறது. அதையொட்டி இதனை அஷ்டகொடி உற்சவம் என்றும் அழைக்கின்றனர்.

சப்தப் பிராகார உற்சவம்

சிவபெருமானை இடபவாகனத்தில் அமர்த்தி ஏழு பிராகாரங்களிலும் வரிசைப்படி முதலில் வேதகோஷம் முழங்கியும்; இரண்டாவதில் திருமுறைகளை இசைத்தும்; மூன்றாவதில் நாட்டிய அஞ்சலி செய்தும், நான்காவதில், மௌனமாகவும் ஐந்தாவதில் முக வீணையுடனும், ஆறாவதில் வீணை புல்லாங்குழல் இசைத்தும், ஏழாவதில் சர்வ வாத்தியங்களை முழக்கியும் வலம் வரச் செய்வதே சப்தப் பிராகார உற்சவம் அழைக்கப்படுகிறது.

நடைமுறையில் வெளிப்பிராகாரத்தில் சுவாமி பரிவாரங்களுடன் ஏழுமுறை வலம் வருவதையும் சப்தப் பிராகார உற்சவம் என்று கூறுகின்றனர். திருவிடைமருதூரில் அஷ்ட கொடி உற்சவத்தையும் சப்தப் பிராகார உற்சவத்தையும் சேர்த்து ஒன்றாக வைகாசி மாதத்தில் நடத்துகின்றனர். இவை முன்னிரவில் தொடங்கி விடியும் வரை நடைபெறும் விழாக்களாகும்.

பிராகாரங்களுக்கு அமைந்த சிறப்புப் பெயர்கள்

இறைவனை வலம்வர அமைக்கப்பட்டுள்ள பிராகாரங்களுக்கு அவற்றின் தன்மையால் பல்வேறு சிறப்புப் பெயர்கள் வழங்குகின்றன. சிலவற்றிற்கு அதில் வலம் வருவதால் கிடைக்கும் புண்ணியத்தையொட்டியும்; சில வற்றிற்கு அவற்றை அமைத்தவர்களின் பெயர்களை இட்டும் அழைக்கின்றனர்.

எடுத்துக்காட்டாகத் திருவிடைமருதூரிலுள்ள பிராகாரங்களுக்கு முறையே அசுவமேதப் பிராகாரம் கொடுமுடிப்பிராகாரம், பிரணவாகாரப் பிராகாரம் கயிலாயப் பிராகாரம் என்ற பெயர்கள் வழங்குகின்றன.

இதில் குறிக்கப்பட்டுள்ள முதல் பிராகாரத்தை வலம் வருவதால் அசுவமேத யாகம் செய்த புண்ணியம் கிடைக்கும் என்று தலபுராணம் கூறுகிறது.

திருமுதுகுன்றம் எனப்படும் விருத்தாசலம் விருத்தகிரீசுவரர் ஆலயத்திலுள்ள பெரிய பிராகாரம் கயிலாயப் பிராகாரம் என்று அழைக்கப்படுகிறது. இது பாழ்பட்டிருந்ததால் முன்பு ஜில்லா கலைக்டராக இருந்த சார்லஸ் ஹட் துரை என்பவர் திருத்திக் கருங்கல் தளவரிசை இட்டார். இதனால் அந்தத் தளவரிசைக்கு ஹட்தளவரிசை என்ற பெயர் வழங்குகிறது.

இரண்டாம் பிராகாரத்தில் தலமரமான வன்னிமரம் இருப்பதால் அதனை வன்னியப்படிப் பிராகாரம் என்று அழைக்கின்றனர். மூன்றாவதான உட்பிராகாரம் அறுபத்து மூவர் பிராகாரம் என்றழைக்கப்படுகிறது.

மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்தைச் சுற்றி மாதங்களின் பெயரால் வீதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவை ஆடிவீதி, ஆவணிமூலவீதி, மாசிவீதி, சித்திரைவீதி என்று பெயர் பெற்றுள்ளன. ஆடிவீதி என்று கோயில் மதிலுக்கு உள்ளேயுள்ள பெரிய பிராகாரமாகும். விழாக்களில் இதில் சுவாமி வலம் வருகின்றார். முன்னாளில் அந்தந்த மாதங்களுக்குரிய விழாக்கள் அம்மாதப் பெயரால் அமைந்த வீதிகளிலேயே நடைபெற்றன என்றும் காலப்போக்கில் அவை மாறிவிட்டன என்றும் கூறுகின்றனர்.

இது போன்று தென்னகமெங்குமுள்ள அனேக ஆலயங்களில் பிராகாரங்களுக்குச் சிறப்புப் பெயர்கள் வழங்கி வந்திருக்கின்றன. உரிய பதிவு இல்லாததால் அவற்றின் பெயர்களை இப்போது நாம் அறிந்து கொள்ள முடியவில்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருமாளிகைகள்

நாம் வழக்கத்தில் அளவால் பெரிய வசிப்பிடங் களையே மாளிகைகள் என்கிறோம். அதற்கு முற்றிலும் வேறானது ஆலயங்களில் அமைந்துள்ள திருமாளிகை கள் ஆகும்.

சுற்றுமதிலை ஒட்டிய உட்புறம் மேடைகட்டி அதில் கால்கள் நிறுத்தி, அமைக்கப்படும் மண்டபங்களே திருமாளிகைகள் எனப்படும். பிராகாரங்களின் முக்கியமான அங்கமாகத் திருமாளிகைகள் உள்ளன. சிறிய ஆலயங்களில் இதில் அஷ்டபரிவார மூர்த்திகளை அமைத்து வழிபடுகின்றனர். பெரிய ஆலயங்களில் களஞ்சியங்கள், பரிவட்ட அறை முதலியவையும் இடம் பெற்றுள்ளன.

திருமாளிகைகள் கருவறையை நாற்புறமும் சூழ்ந்துள்ளன. கீழே ஓர் அடுக்கும் அதற்குமேலே ஓர் அடுக்குமாக இரண்டு தளங்களை உடைய திருமாளிகை களையும் காண்கிறோம். இத்தகைய இரண்டடுக்குத் திருமாளிகைகள் சிதம்பரம், சபாநாயகர் ஆலயம், சிவகாமி அம்மன் ஆலயம், திருவண்ணாமலை, அண்ணாமலையார் ஆலயம் திருவிடைமருதூர் மகாலிங் கசுவாமி ஆலயம், திருஒற்றியூர் தியாகராஜசுவாமி ஆலயம் முதலியவற்றில் உள்ளன.

திருமாளிகைகளுக்குச் சிறப்புப் பெயர்கள் வழங்கி வந்ததைக் கல்வெட்டுக்களின் மூலம் அறிகிறோம். சிதம்பரத்தில் கனக சபையைச் சுற்றியுள்ள இரண்டு அடுக்குத் திருமாளிகை விக்ரமசோழன் திருமாளிகை என்றும்; திருமூலட்டானரைச் சேர்த்து சுற்றிவரும் மாளிகை, குலோத்துங்க சோழன் திருமாளிகை என்றும் மூன்றாம் பிராகாரத்தில் நடு மதிலையொட்டி அமைந்து உள்ளது இராசாக்கள் தம்பிரான் திருமாளிகை என்றும் அழைக்கப்பட்டதை அக்கோயில் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.

திருமாளிகைப் பத்திகளின் இரண்டாம் அடுக்கிலும் இறையுருவங்களை அமைத்து வழிபடுகின்றனர். அம்பர் மாகாளத்தில் வைரவமூர்த்தியும், சிதம்பரத்தில் ஆகாசலிங்கமும் இரண்டாம் அடுக்கில் அமர்ந்துள்ள மூர்த்திகளாவர்.



★ சிதம்பரம் மேற்குக் கோபுரமும் – மதிலையொட்டி அமைந்துள்ள இரண்டடுக்குகளுடன் கூடிய திருமாளிகையும்
படம் உதவி சிதம்பரம் பிரம்மஸ்ரீ G. பரமேஸ்வர தீக்ஷிதர் அவர்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நீறளித்து நெடுமதில் கட்டிய எல்லாம் வல்ல சித்தனே போற்றி! போற்றி!!

திருவண்ணாமலை அண்ணாமலையார் ஆலயத்தின் உள் மதிலில் இடம்பெற்றுள்ள அரச சிற்பவரிசை : இதில் மீன், செண்டு ஆகியவற்றின் நடுவில் அமைந்துள்ள பள்ளிக்கட்டிலில் இருவர் அமர்ந்துள்ளனர். ஒருவர் வஜ்ராயுதத்தை ஏந்தியுள்ளார். மற்றவர் அவரை ஆசீர்வதிக்கிறார். இதே சிற்பம் திரும்பத்திரும்ப வரிசையாக மதில் நெடுக அமைக்கப்பட்டுள்ளன.

திரு மதில்கள்

ஊருக்கு ஆறும், கோட்டைக்கு மதிலும் அழகுடன் வனப்பைத் தருகின்றன. மதில்கள் காவலின் சின்ன மாகும். நாடு, நகரம், கோட்டைகள் ஆகியவற்றைத் திருடர்கள், கொள்ளையர்கள், பகைவர்களிடமிருந்து காக்க அவற்றைச் சுற்றி நெடிய மதில்கள் கட்டப்பட்டன.

மாமன்னர்கள் தங்கள் அரண்மனை, கோட்டை ஆகியவற்றைச் சுற்றிலும் மதில்களை எழுப்பியதைப் போலவே சிவபெருமானின் அரண்மனையான சிவா லயத்தைச் சுற்றியும் பெரிய மதில்களை எழுப்பினர்.

சிவபெருமானே சித்தராக எழுந்தருளி நெடிய மதில் அமைத்ததைத் திருவானைக்கா வரலாறு கூறுகிறது.

புலவர்கள் நாட்டு வளம், நகர் வளம் மக்களின், செல்வச் சிறப்பு ஆகியவற்றைப் பாடியதைப் போலவே மதில்களின் பெருமையும் சிறப்பையும் புகழ்ந்து பாடி யுள்ளனர். தேவாரத்தில் அனேக இடங்களில் மதில்கள் புகழப்பட்டுள்ளன.

சிவமஞ்சரியின் இந்த முப்பத்துயெட்டாவது மலரின் மூன்றாம் பகுதி ஆலயங்களில் அமைந்துள்ள மதில் களின் பெருமையை விளக்குவதாக மலர்கிறது.

கபாலி நீண்மதில் சூழ் கயிலாயபுரியின் நாயகனும் இமயவல்லியும் அன்பர்களுக்குச் சகலசெல்வ யோக மிக்க பெருவாழ்வைத் தந்தருள வேண்டுமென்று அவர் திருவடிகளைப் பிரர்த்திக்கிறோம். -சிவசுந்தரி

மதிலின் பல்வேறு பெயர்கள்

மதிலுக்குரிய பல்வேறு பெயர்களைக் நிகண்டு நூல்கள் குறித்துள்ளன. நாமதீப நிகண்டில் வேலி, இஞ்சி, ஆரை, நொச்சி, வேணகை, கோட்டை, சிறைசாலம், எயில், ஓதை, அரணம், கடகம், வாரி, காப்பு, உவளனம், சிகரம், வேதி, பிராகாரம், அகப்பா, புரிசை என்ற பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மதில்கள் -சிந்தனைத் துளிகள்

★ திருஞானசம்பந்தர் பவனி – திருமதில் சிற்பம்

திருவிரிஞ்சை மதில் அழகு

வேதாரண்யம் விளக்கழகு. திரு வாரூர் தேரழகு, திருவிரிஞ்சை மதில் அழகு என்று அழகினைப் பட்டிய லிட்டுக் காட்டும் பழமொழி ஒன்று தென்னாட்டில் வழங்கிவருகிறது. இதன் மூலம் விரிஞ்சிபுரம் மார்க்க சகாய சுவாமி ஆலயத்திலுள்ள மதிலின் வனப்பையும் சிறப்பையும் அறியமுடிகிறது, மதுரை மதிலும் அழகு பொருந்தியதாகும். மதுரை மதிலழகு மன்னார்குடி மதிலழகு என்ற பழமொழிகளும் வழங்குகின்றன.

கொடி தவழ் மதில்

மதில்களின் உச்சியில் வரிசையாகக் கொடிகளை ஏற்றி வைப்பர். இதனால் கொடி மதில் என்று இவை சிறப்புடன் அழைக்கப்பட்டன. திருவண்ணாமலை பெரிய மதிலில் வரிசையாக சமச்சீரான இடைவெளியில் கொடிக் கம்பங்களைப் பொருத்த அமைக்கப்பட்ட கற்களையும் மன்னர் திருவுருவங்களையும் காண்கிறோம்.

மதிலில் கொடிபறக்கும் காட்சி தேவாரத்தில் பல இடங்களில் குறிக்கப்படுள்ளது.

நந்திகள் இல்லாத மதில்

மதில்களின் மீது அழகூட்டுவதற்காகவும் சிவாலயம் என்பதைத் தெரிவிப்பதற்காகவும் வரிசையாக இடபங் களின் உருவங்களை அமைக்கின்றனர். அனைத்து சிவா லய மதில்களிலும் இத்தகைய இடப வரிசையைக் காண் கிறோம். இதற்கு முற்றிலும் மாறாக திருவாவடுதுறை கோமுத்தீசுவர் ஆலயத்தில் மதிலின்மீது நந்திகள் இல்லை. இது பற்றி இப்பகுதியில் வழங்கிவரும் வரலாறு

ஒரு காலத்தில் திருமாளிகைத் தேவர் என்ற மா பெரும் சித்தர் இவ்வூரில் இருந்தார். அவர்மீது கோபம் கொண்ட சோழ மன்னன் அவரைப் பிடித்துக் கொண்டு வருமாறு சேவகர்களை அனுப்பினான். அவர்களால் சித்தரை நெருங்க முடியவில்லை. அவர்கள் மன்னரிடம் சென்று முறையிட்டனர். மன்னன் கோபித்து பெரும்படையை அனுப்பினான். அந்தப் படை மிகுந்த ஆரவாரத்துடன் திருவாவடுதுறையை நோக்கி வந்தது. அதைக் கண்டு கோபம் கொண்ட சித்தர் மதிலின் மீதிருந்த இடபங்களுக்கு உயிர் கொடுத்து அனுப்பினர். படைகளை விரட்டிய பின் அந்த நந்திகள் திருகயிலா யத்திற்குச் சென்றுவிட்டன. அன்று முதல் அந்த மதிலில் நந்திகள் இல்லையென்று கூறப்படுகிறது.

சித்தர்கள் வீற்றிருக்கும் மதில்

சிவயோக ராஜதானியான திருவாரூர் தியாகேசர் சந்நிதியைச் சுற்றியுள்ள மதிலில் வரிசையாக, புலித் தோலில் அமர்ந்து யோகம் புரியும் சிவயோகிகளைக் காண்கிறோம். இக்காட்சி வேறு மதிலில் இல்லை.

திருமதிலின் சிறப்புப் பெயர்கள்

திருவானைக்காவில் சிவபெருமானே சித்தராக எழுந்தருளி பெரிய மதிலைக் கட்டினார் என்று புராணம் கூறுகிறது. அவர் கூலியாட்களுக்கு, பொன்னுக்குப் பதிலாக விபூதியைக் கூலியாகக் கொடுப்பாராம். அது அவர்களுடைய உழைப்புக்கேற்ற பொன்னாக மாறும். இப்படி விபூதியை அளித்துக் கட்டப்பட்டதால் அது விபூதி மதில் என்றும் அதையொட்டி அமைந்த பிராகாரம் விபூதிப் பிராகாரம் என்றும் அழைக்கப்படுகின்றன. இதனை இலக்கியங்கள் "நீறிட்டான் மதில்" என்று அழைக்கின்றன.

சித்தனாக வந்த சிவபெருமான் இதனுள் சித்திகளை அளிக்கக் கூடிய பொருட்களை வைத்துக் கட்டியுள்ளான் என்றும் இதனை வலம் வருவதால் புத்திரப்பேறு, செல்வச் செழிப்பு முதலியன உண்டாகுமென்றும் தலபுராணம் கூறுகிறது.

மதிலுக்கு வழங்கும் சிறப்புப் பெயர்கள்

மதுரையில் ஒருமதிலுக்கு "காபாலி" என்ற பெயர் வழங்கியதை அறிகிறோம். தேவாரத்துள் ஞானசம்பந்தர் "கபாலி நீண்மதில்"என்று இதனைப் பாடி உள்ளார்.

அரசர்களும் திருப்பணி செய்தவர்களும் மதிலுக்குத் தம்பெயரை இட்டனர். திருவண்ணாமலையிலுள்ள மதில்களுக்கு வீரராகவன் திருமதில், வாணாதிராயன், திருமதில், ஏகம்பமுடையான் திருமதில், எனப் பெயர்கள் வழங்கியதைக் கல்வெட்டுகள் குறிக்கின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மதிலில் விளங்கும் தெய்வங்கள்

ஆலயத்திலுள்ள மதில் சுவர் கோயிலின் பாதுகாப்புகாக அமைக்கப்பட்டது எனினும் அதில் பல இடங்களில் தெய்வ உருவங்களை வைத்து வழிபட்டு வருகின்றனர். அவற்றில் சில இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.

கொத்தளவிநாயகர்

திருமதிலில் கொத்தளமிடும் போது வைக்கும் முதல் கல்லில் விநாயகர் உருவத்தை அமைக்கும் வழக்கம் உள்ளது. இவரைக் கொத்தள விநாயகர் என்று அழைக்கின்றனர். திருவண்ணாமலை ஆலய மதிற்சுவரில் நான்கு புறமும் கொத்தள விநாயகர்கள் அமைக்கப் பட்டுள்ளனர். இதில் மேற்கிலுள்ள விநாயகருக்குத் தனி ஆலயமே அமைக்கப்பட்டு வழிபாடுகள் நடத்தப் படுகின்றன.

காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் ஆலய மதிற்சுவரில் நான்கு புறங்களிலும் அமைந்துள்ள கொத்தள விநாயகர் களுக்குத் தனித்தனிச் சந்நிதிகளைக் கட்டிச் சிறப்பு வழிபாடுகள் செய்து வருகின்றனர்

நவகண்ட வீரன்

திருக்கோயிலின் நன்மைக்காகத் தனது இன்னுயிரைத் தந்த வீரர்களின் உருவங்களை ஆலயமதிலில் அமைப்பதும் வழக்கம். அச்சிறுப்பாக்கம் ஆட்சீ சுவர சுவாமி ஆலயத்தில் மேற்குப் பக்க மதிலில் மேற்கு நோக்கியவாறு ஒரு மாடம் அமைக்கப்பட்டு அதில் சாவாரக்கல் வீரனின் உருவத்தைக் கல்திருமேனியாக அமைத்துள்ளனர். முன்பு இந்த வீரனுக்குப் பூசை செய்யப் பட்டு வந்ததாகச் சொல்லப்படுகிறது.

வேதாளங்கள்

செய்யூர் முருகன் ஆலயப் பிராகாரத்தில் மதிலின் உட்புறம் வரிசையாக மாடங்கள் அமைக்கப்பட்டு அதில் வேதாளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அருணகிரி நாதர் "வேதாள கணம் புகழ் வேலவனே" என்று முருகனைப் போற்றுவது இங்கு எண்ணத்தக்கதாகும்.

பூதங்கள்

சிவாலய மதில்களின் மீது நான்கு மூலைகளிலும் இரட்டை இடபங்களுக்கு நடுவே பூதம் அல்லது அதிகார நந்தி திருவுருவங்களை அமைப்பது வழக்கமாகும். இவ் வகையில் கன்னிமூலையான தென்மேற்கு முனையிலும் ஈசான மூலையான வடகிழக்கு முனையிலும் பூதங்களை அமைக்கின்றனர். காலப் போக்கில் இப்படி அமைக்கப் பட்ட பூதம் வழிபாட்டிற்குரியதாக ஆகியுள்ளது.

எடுத்துக்காட்டாக திருநெல்வேலி நெல்லையப்பர் ஆலயத்தில் தென்கிழக்கு முனையில் மதிலின் உச்சியில் விளங்கும் பூதத்தார் சிறப்புடன் வழிபடப்படுகிறார். இவருக்கு அன்பர்கள் பிரார்த்தனை செய்து கொண்டு சிறப் வழிபாடு செய் கின்றனர். நெடியமதிலின் மீது விளங்கும் இவரை அருகில் சென்று வழிபடு வதற்கு ஏதுவாகப் படிக் கட்டுக்கள் அமைக்கப் பட்டு உள்ளன. இந்த வட்டாரத்தில் இந்த சங் கிலி பூதத்தார் மிகுந்த சக்தியுள்ளவராகப் போற் றப்படுகிறார்.

★ மகாபூதன்

நெடிய மதில்களும், பகைவர்களால் வந்த தீங்கும்

உயர்ந்த பாதுகாப்பான மதில்களைக் கொண்டிருந்தால் ஆலயங்களை மாற்றுச் சமயத்தினர் பல சமயங் களில் கைப்பற்றித் தமது கோட்டைகளாக்கிக் கொண்டனர். எடுத்துக்காட்டாக (திருமுதுகுன்றம்) விருத்தாசலம் விருத்தகிரீசுவரர் ஆலயத்தை 18 ஆம் நூற்றாண்டில் முகமதியரும் பிரெஞ்சு நாட்டு வீரர்களும் கைப்பற்றினர். அங்கு வாயிலுக்கு வெளியில் 16ஆம் நூற்றாண்டில் முத்துகிருஷ்ணநாயகர் அமைத்திருந்த பஞ்சாவரணப் பிராகாரத்தை அழித்து வாயிலுக்கு அகழி யாக்கிக் கொண்டனர். நெடுநாட்கள் போர்த்தளவாடங் களை வைக்குமிடமாக இந்த ஆலயம் பயன்படுத்தப் பட்டது. 1760ல் ஆங்கிலேயர் இந்த ஆலயத்தைக் கைப் பற்றினர். 1803ல் பதவி ஏற்ற கர்ரோ என்னும் ஆங்கிலேய கலெக்டர் அகழியைத் தூர்த்துப் பழையபடி பிராகார மாக்கினார்.

ஆங்கிலேயர்களுக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் நடைபெற்ற போரில் சிதம்பரம் ஆலயம் கோட்டையாக பயன்படுத்தப்பட்டதை அறிகிறோம். திருவண்ணாமலை, திருப்புகலூர் முதலிய ஆலயங்கள் பலவேறு சமயங்களில் கோட்டைகளாகப் பயன்படுத்தப்பட்டதை வரலாறுகள் தெரிவிக்கின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மதில்களில் அமைந்துள்ள வரலாற்றுக் காட்சிகள்

திருவண்ணாமலையை ஆண்ட அரசர்கள்

திருவண்ணாமலை மதிலில் வெளிச்சுவரில் சீரான இடைவெளியில் அமைந்துள்ள கற்களில் திருப்பணி செய்த மன்னர்களின் திருவுருவங்கள் அமைக்கப்பட்டு உள்ளன.

காஞ்சிபுரத்துச் சமண சிற்பங்கள்

காஞ்சீபுரம் ஏகாம்பரநாதர் ஆலயத்தில் திட்டி வாசலையொட்டியுள்ள மதிற்சுவரில் சமண புத்த சமய தெய்வத் திருவுருவங்கள் அமைந்துள்ளன. இவை இந்த மதிற் சுவரைக் கட்டும்போது அருகிலிருந்த பிறசமயக் கோயில்களிலிருந்துகொண்டு வந்து பொருத்தப்பட்டவை என்று கூறுகின்றனர்.

ஆண்பனை பெண்பனையான கதை

திருஒத்தூரான (செய்யாறு) திருவத்திபுரம் வேதபுரீசுவரர் ஆலயத்தின் தென்புறம் ஆற்றை ஒட்டி அமைந்துள்ள மதிலில் திருஞானசம்பந்தருக்கும் சமணர்களுக்கும் வாதம் நடைபெறுதல் சமணர் கழுவேறல், ஆண்பனை, பெண்பனையாதல், முதலான காட்சிகள் புடைப்புச் சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளன.

குன்றக்குடி ஆதீன வரலாறு

திருவண்ணாமலை அண்ணாமலையார் ஆலயத்தின் பிராகாரத்தின் தென்பகுதியில் குன்றக்குடி திருவண்ணா மலை ஆதீனத்தின் தோற்றம் பற்றிய வரலாற்றுக் காட்சி கள் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டு உள்ளன.

அரசச் சின்னங்கள்

வேலூர் மாவட்டம் தேவிகாபுரம் பெரிய நாயகி ஆலய மதிலில் அந்நகரை ஆண்ட அரசர்களின் சின்ன மான பன்றி, கத்தி, சூரிய, சந்திரர் தொகுப்பும் அரச ஊர் வலமும் கோலாட்டம், யானைவரிசை, குதிரை வரிசை ஆகியன தொடர்சிற்பங்களாக நான்கு மதில்களிலும் இடைவெளிவிடாது செதுக்கி அமைக்கப்பட்டன.

மதிற்சுவரில் அமைந்துள்ள சாளரங்கள் (பலகணி)

ஆலயத்திலுள்ள துணைச் சந்நிதிகளில் வீற்றிருக்கும் தெய்வங்களை வெளியிலிருந்தே தரிசித்து மகிழ மதிலில் சாளரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்தகைய ஜன்னல்களைத் தென்னகமெங்கம் அனேக ஆலயங்களில் காண்கிறோம்.

திருக்காளத்தி காளத்தியப்பர் ஆலயத்தில் கருவறைக்கு நேராக வாயில் இல்லை. மதிலில் பெரிய ஜன்னல் அமைந்துள்ளது. அதன் வழியாக அன்பர்கள் பெருமானைத் தரிசித்து வழிபடுகின்றனர்.

மயிலாடுதுறை மாயூரநாத சுவாமி ஆலயத்தில் அம்பிகை சந்நிதி வடக்குப் பிராகாரத்தில் அமைந்துள்ளது. இந்த சந்நிதிக்கு நேரே மதிலில் பெரிய சாளரம் அமைந்துள்ளதைக் காணலாம். இந்த சாளரத்தைச் சுற்றிக் கோபுரவாசல் போன்று புடைப்புச் சித்திரவேலை செய்யப்பட்டுள்ளது. இதுபோன்ற கலையழகு மிக்க சாளரம் பல தலங்களில் உள்ளன.

மதிற்சுவரில் அமைந்த துளைகள்

கொங்கு நாட்டுத் தலமான (நணா) பவானியில் பண்ணார் மொழியாள் (வேதாம்பிகை) சந்நிதிக்கு நேர் எதிரில் உள்ள மதிற்சுவரில் துளைகள் இடப்பட்டுள்ளன. இது பற்றிய வரலாறு.

கி.பி. 1779 ஆம் ஆண்டில் கொங்குநாடு ஆங்கிலேயர் வசமானது. கி.பி. 1802ல் கேரோ எனும் ஆங்கிலேயதுரை கலைக்டராக நியமிக்கப்பட்டார். அவர் இக்கோயில் அம்பிகையான வேதவல்லி மீது பக்தி பூண்டிருந்தார். ஒரு நாள் கடும் மழை பொழிந்து கொண்டிருந்தது. அவ்வேளையில் தூங்கிக் கொண்டிருந்த அந்தத் துரையின் கனவில் சிறு பெண்ணாக அவள் தோன்றி அன்பனே இந்தக் கட்டிடம் இடிவிழுந்து உடனே அழிய உள்ளது. உடனே வேறிடம் செல் என்று கூறினாள். திடுக்கிட்டெழுந்த கலெக்டர் துரை கட்டிடத்தை விட்டு வெளியே வந்தார். உடனே பெருத்த ஓசையுடன் இடிவிழுந்து அக்கட்டிடம் தீப்பிடித்து எரிந்தது. தான் உயிர் பிழைக்கக் காரணமாயிருந்த அம்பிகைக்கு ஏராளமான ஆபரணங்களையும், யானைத் தந்தத்தால் செய்த கட்டில் ஒன்றையும் துரையவர்கள் காணிக்கையாக்கினார். அவர் தினமும் அம்பிகையைத் தொழ ஏற்படுத்தப்பட்டதே மதிலிலுள்ள துளைகள் என்று வரலாறு கூறுகிறது.

ஸ்ரீ ராஜகோபுரம் அணிசெய்ய நெடுமதிலிடையே கோல சித்திரப் பிராகாரம் சூழ பொற்கோயிலில் நம்பிராட்டியுடன் விளங்கும் தம்பிரான் அருளினால் எல்லோரும் எல்லாமும் பெற்று இனிது வாழ்க!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

ஸ்ரீவிமானத்து வேந்தே போற்றி! பொன் மண்டபத்துறை புனிதா போற்றி! போற்றி!!

ஸ்ரீ விமானேசுவரர்

தெய்வங்கள் கொலுவீற்றிருக்குமிடம் கோயில், ஆலயம், பஸ்தி என்ற பல பெயர்களால் அழைக்கப் படுகின்றது. இதன் மையப்பகுதியாகவும், கோயிலுக் குரிய முதன்மைத் தெய்வம் வீற்றிருக்கும் இடமாகவும் இருப்பது கருவறையாகும். இதன்மீது கலைநுணுக்கம் மிக்க கூம்பு வடிவில் உச்சியில் கலசத்துடன் கூடிய கட்டிட அமைப்பே ஸ்ரீ விமானம் எனப்படும். சிற்பநூல் கள் கருவறை முழுவதையுமே "ஸ்ரீவிமானம்" என்று குறிப்பிடுகின்றன.

கருவறையிலுள்ள சிவலிங்கமூர்த்தியைச் சூட்சும லிங்கமென்றும், ஸ்ரீவிமானத்தை ஸ்தூல லிங்கமென்றும் அழைக்கின்றனர். தூரத்திலிருந்தே ஸ்ரீவிமானத்தை வழிபட்டாலும் அவை புண்ணியத்தை அளிக்குமென்று பூஜாபத்ததி நூல்கள் கூறுகின்றன.

ஆதிநாட்களில் விமானங்கள், கூம்பு வடிவில் எளிய முறையிலேயே அமைக்கப்பட்டன. கலை வளர வளர இக்கட்டிட அமைப்பு பல நுணுக்கங்களுடன் விரிவாக்கம் பெற்றது. இதன் மீது மந்திரபூர்வமாக வழிபடப்படும் தெய்வங்களுக்குத் திருவுருவங்கள் அமைக்கப்பட்டன. அத்துடன் கலையழகு மிளிர மூலை களில் நந்தி, சிங்கம் முதலியனவும், அடுக்குகளைத் தாங்கும் கோபுரந்தாங்கிகளும், கொடிகள், மலர்களுடன், கீர்த்தி முகங்கள் எனப்படும் சிங்கமுகம் கொண்ட பிரபைகளும் அமைக்கப்பட்டன.

ஸ்ரீவிமானங்களில் தெய்வங்களின் பல்வேறு அவதாரக் கோலங்கள் சிறப்பாக அமைக்கப்பட்டு வண்ணம் தீட்டப்பட்டுப் பொலிவுபடுத்தப்பட்டன. இவை தரிசன பிம்பங்கள் (பார்த்து மகிழத்தக்கவை) என்ற நிலையில் உள்ளவையாகும். அபூர்வமாகச் சில தலங்களில் விமானங்களில் அமைக்கப்பட்டுள்ள சில சிற்பங்கள் வழிபாட்டுக்கு உரியதாகவும் விளங்கு கின்றன.

விமானங்கள் தெய்வாம்சம் பொருந்தியவைகள் ஆகும். கும்பாபிஷேகத்தின்போது மூல மூர்த்திக்குப் புனித நீரால் அபிஷேகம் செய்வதற்கு முன்பாக ஸ்ரீ விமானத்தின் உச்சியிலுள்ள கலசத்திற்கு குடமுழுக்கு செய்யப்படுகிறது.

பல நிலைகளில் புகழ்பெற்று விளங்கும் ஸ்ரீவிமா னங்களைப் பற்றிய செய்திகளைத் தாங்கி, சிவமஞ்சரி யின் முப்பத்தொன்பதாவது மலர் விரிகிறது. இதில் தென்னகச் சிவாலய ஸ்ரீவிமானங்களின் அமைப்பு, அங்கு அமைந்திருக்கும் பொதுவான தெய்வங்கள், வழிபாட்டுக்குரிய தெய்வங்கள், யானை, சிங்கம் முதலிய வற்றால் தாங்கப்படும் விமானங்கள் அவற்றில் கலை அழகு மிளிரச் செய்யப்பட்டுள்ள திருவுருவங்கள், ஆகமங்கள் கூறும் விமானங்கள், யோக நெறியில் ஸ்ரீ விமானங்களுக்கான விளக்கங்கள் முதலான செய்திகள் தொகுத்து அளிக்கப்பட்டுள்ளன.

இதன் இரண்டாம் பகுதி ஆலயங்களிலுள்ள பல வகையான மண்டபங்களைப் பற்றிய செய்திகளை விளக்குகிறது. இவற்றை அறிந்து மகிழத் தங்களை அன்புடன் அழைக்கிறோம்.

பொன்மயமான ஸ்ரீவிமானத்தில் வீற்றிருக்கும் இமயவல்லி உடனாய செல்வப்பிரான் அன்பர்களுக்குச் சகல செல்வயோகமிக்க பெருவாழ்வை அளித்தருள வேண்டுமென்று அவர்தம் பொற்பாதங்களைப் போற்றிப் பணிந்து வணங்குகின்றோம். – *சிவசுந்தரி*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ விமானங்கள் - சிந்தனைத்துளிகள்

❖ மானம் என்றால் அளவு. விமானம் என்பதற்கு மேலான அளவு என்பது பொருள். ஞானிகள், தங்களுடைய அனுபவங்களால் அறியப்பட்ட அளவுகளைக் கொண்டு மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் இறைவழிபாட்டிற்கென அமைக்கப்பட்ட கட்டிடங்களே விமானங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவற்றின் இறையம்சம் காரணமாக "ஸ்ரீ" எனும் அடைமொழியுடன் "ஸ்ரீவிமானங்கள்" என்று அழைக்கப்படுகின்றன.

❖ ஸ்ரீ விமானத்தின் கிரீவப் (கழுத்து) பகுதியில் நான்கு திசைகளையும் நோக்கியவாறு இறைவனின் நால்வகை நிலைகளை உணர்த்தும் திருவுருவங்களை அமைத்துள்ளனர். இவை இட வலமாக, குமாரர், பிரம்மா, விஷ்ணு, ருத்திரர் என்னும் நான்கு திருமேனிகளாகும்.

❖ சிவாகமங்களில் ஸ்ரீ விமானங்களின் ஏழு வகையான அமைப்புகள் குறிக்கப்பட்டுள்ளன. இவை 1) விஜயம், 2) ஸ்ரீபோகம், 3) ஸ்ரீவிலாசம், 4) ஸ்கந்த காந்தம், 5) ஸ்ரீகரம், 6) ஹஸ்தி பிருஷ்டம் 7) கேசரம் எனப்படும்.

❖ தினசரி பூசையில் விமானத்தின் அடிப்பகுதியிலிருந்து உச்சிக்கலசம் வரையுள்ள பகுதிகளின் பெயர்கள் வரிசையாகக் கூறப்பட்டு பூசை செய்ய வேண்டுமென்று பூஜா பத்ததி நூல்கள் கூறுகின்றன. இதன்படி ஸ்ரீவிமானத்தின் அங்கங்களாகக் கீழிருந்து அதிஷ்டானம், உபபீடம், கமலம், பட்டிகை, கால்கள், கோட்டம், கும்பபஞ்சரம், மகரதோரணம், கபோதவரி, தளம், நிலை, கிரீவம்,சிகரம்,கலசம் என்று உச்சிவரை கூறப்பட்டுள்ளது.

❖ ஸ்ரீ விமானங்கள், கல்வெட்டுக்களில் மூலஸ்தானங்கள் என்று குறிக்கப்பட்டுள்ளன. இதையொட்டி கருவறையில் வீற்றிருக்கும் பெருமானை ஸ்ரீமூலஸ்தானத்துப் பரமசாமி, ஸ்ரீமூலஸ்தானத்துப் பரமேட்டிகள் போன்ற பெயர்களால் அழைக்கின்றனர். தேவாரத்துள், திருவாரூர், சிதம்பரம் முதலிய தலங்களிலுள்ள மூலஸ்தானங்கள் சிறப்பிக்கப்பட்டுள்ளன. மேலும் மூலஸ்தானங்களை ஸ்ரீதளி, கருப்பக்கிருகம், கருவறை, எனப்பல பெயர்களால் அழைக்கின்றனர்.

❖ சில ஸ்ரீவிமானங்கள் மனிதர்களால் அமைக்கப்படாமல் தேவர்களால் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்திரன், தனது உலகத்திலிருந்து இந்திரவிமானத்தைக் கொண்டு வந்து மதுரையில் சோமசுந்தரருக்கு அமைத்தான் என்று கடம்பவன புராணமும் திருவிளையாடற் புராணமும் கூறுகின்றன. திருமால் விண்ணகத்திலிருந்து விமானத்தைக் கொண்டுவந்து திருவீழிமிழலையில் அமைத்தார் என்று தேஜினீவன தலபுராணம் கூறுகின்றது. இந்த விண்ணிழி விமானம் தேவாரத்துள் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

❖ ஸ்ரீவிமானமாகிய கருவறை, தாயின் கருப்பத்தைப் போன்றது. அதனால் காற்று வசதியும், இயற்கை வெளிச்சமும் தேவையில்லை என்ற கருத்து நிலவுகிறது. இதையொட்டி இதில் ஜன்னல்கள் அமைக்கப்படுவதில்லை. இக்கருத்துக்கு மாறாக பெண்ணாகடம் பிரளய காலேச்சரம், காஞ்சி ஜ்வரஹரேச்சரம் முதலிய ஆலயங்களில் கருவறைக் கோட்டங்களில் ஜன்னல்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் காற்றுவசதியும் வெளிச்சமும் கருவறைக்குள் உள்ளன. அத்துடன் நாற்புறங்களில் இருந்தும் பெருமானைத் தரிசிக்க முடிகிறது.

❖ சதுர் முகலிங்கங்களுக்கு அமையும் ஸ்ரீவிமானங்களுக்கு நான்கு புறமும் வாயில் அமைக்கப்படுகிறது. இதனை சர்வோபத்ராலயம், சதுர்முகாலயம் என்று அழைக்கின்றனர். திருவதிகையில் சதுர்முகாலயம் இருந்ததைக் கல்வெட்டால் அறிகிறோம். அக் கோயில் அழிவுற்றபிறகு அங்கிருந்த நான்குமுக லிங்கத்தைப் பெயர்த்து வந்து வீரட்டகாசர் ஆலயப்பிராகாரத்தில் நிலைப்படுத்தியுள்ளனர்.

❖ ஆதிநாளில் ஸ்ரீ விமானங்கள் ஒற்றைத் தளங்களையே கொண்டிருந்தன. பின்னர் தளங்களின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட்டது. சோழர்கள் தஞ்சாவூர்-பெரியாவுடையார் கோயில், திரிபுவனம் கம்பஹரேசுவரம், தாராசுரம்-ஐராவதேசம், கங்கை கொண்ட சோழபுரம்-சோழீச்சுவரம் முதலிய ஆலயங்களில் அதிகஅளவு அடுக்குகளைக்கொண்ட ஸ்ரீ விமானங்களை அமைத்து மகிழ்ந்தனர்.

பின்னாளில் பழையபடியே கருவறை மீது அமையும் விமானத்தை இரண்டு அல்லது மூன்று அடுக்குகளுடன் ·அமைத்து விட்டு வாயிலின்மீது அமையும் கோபுரங்களைப் பெரியதாகக் கட்டத் தொடங்கினர். விஜயநகர மன்னர்கள் அளவால் பெரிய கோபுரங்களை அமைத்து ஆலயங்களுக்குப் பெருமை சேர்த்தனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீவிமானத்தில் வீற்றிருக்கும் சிறப்புத் தெய்வங்கள்

ஆலயங்களில் கருவறையின் மீது அமையும் ஸ்ரீவிமானத்தின் அங்கங்களான கோஷ்டங்கள், கூடங்கள், சாலைகள், பஞ்சரங்கள், மூலைகள், கிரீவங்கள் முதலானவற்றில் பிரம்மா, தென்முகக் கடவுள், திருமால், அட்ட திக்குப் பாலகர்கள், அட்ட பைரவர்கள் முதலான தெய்வ வடிவங்கள் அமைக்கப்பட்டு வண்ணம் தீட்டப் பட்டுப் பொலிவுடன் விளங்குகின்றன. இவற்றிற்குத் தனிப் பூசையோ சிறப்பு அபிஷேக ஆராதனைகளோ நடத்துவதில்லை.

சில தலங்களிலுள்ள ஸ்ரீ விமானத்தில் வீற்றிருக்கும் சிறப்புத் தெய்வங்களுக்குத் தினப்பூசையும் சிறப்பு நாட்களில் சிறப்பு வழிபாடும் செய்யப்பட்டுவந்து, காலப் போக்கில் கைவிடப்பட்டன என்பதைக் கல்வெட்டு களாலும் செவிவழிச் செய்திகளாலும் அறிகிறோம்.

நடைமுறையில் சீர்காழி, கருப்பறியலூர் (தலைஞாயிறு) அம்பர், திருப்புறம்பியம் முதலிய தலங்களில் ஸ்ரீவிமானத்திலுள்ள சட்டநாத சுவாமிக்குச் சிறப்பு வழிபாடுகள் செய்யப்படுகின்றன. திருவீழிமிழலையில் தோணியப்பர், குடந்தைக் கீழ்க்கோட்டத்தில் செல்வப் பிரானான உமாமகேசர், திருத்துறையூரில் இடபாருடர் முதலிய ஸ்ரீவிமானத்து மூர்த்தங்களுக்கு நடைபெற்று வந்த வழிபாடுகள் நாளடைவில் நின்றுவிட்டன என்றாலும், இம்மூர்த்தங்கள் தனிச்சிறப்புடன் போற்றப்படுகின்றன. இவற்றைப் பற்றிய செய்திகளைத் தொடர்ந்து காணலாம்.

குடந்தைக் கீழ்க்கோட்டத்துச் - *செல்வப்பிரான்* -

குடந்தைக் கீழ்க்கோட்டம் என்னும் தேவாரத் தலம் இந்நாளில் நாகநாதசுவாமி ஆலயம் என்றழைக்கப் படுகிறது. இக்கோயில் ஸ்ரீவிமானத்தில் சிவபெருமான் உமாதேவியாருடன் (உமாமகேசுவர மூர்த்தியாக) பெரிய திருவுருவில் எழுந்தருளியுள்ளார். இவரைச் சுற்றிலும் பெரிய அழகான திருவாசி உள்ளது. கருங்கல்லால் கலையழகு நிரம்பியதாக அமைக்கப்பட்டுள்ள இத் திருவுருவம் கண்ணையும், கருத்தையும் கவர்கின்றது.

இப்பெருமானுக்குச் "செல்வப்பிரான்" என்பது பெயராகும். முன்னாளில் இப்பெருமானுக்குத் தினசரி பூசைகள் நடந்து வந்துள்ளன. இவருக்கு முன்பாக நின்று பூசைசெய்யும் வகையில் மேடையிருந்ததை அங்கே நிற்கும் நான்கு கல்தூண்களால் அறிய முடிகிறது.

ஸ்ரீ விமானத்து செல்வப்பிரான் - குடந்தை

இராஜராஜ சோழனின் மகனான உடையார் இராஜேந்திரசோழன், செல்வப்பிரானுடைய பூசைக்காக நிலம் அளித்ததை இக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

திருநாவுக்கரசுப்பெருமான் இத்தலத்தில் அருளிய "சொன்மலிந்த" எனத்தொடங்கும் பதிகத்தின் ஆறாம்பாடல் இப்பெருமானின் அழகைப் போற்றுவதாக உள்ளது. "திருக்குடந்தை மான்மியம்" எனும் நூலில் "உமாபாகர்" ஸ்ரீ விமானத்தில் எழுந்தருளிய வரலாறு குறிக்கப்பட்டுள்ளது.

ஒரு சமயம் தேவர்கள் எல்லோரும் சிவபெருமானிடம் சென்று அவருடைய பெருங்கூத்தைக் காட்டியருளுமாறு வேண்டினர். சிவபெருமான், நீங்கள் பூவுலகில் குடந்தை நாகேசுவரத்தில் சென்று கூடியிருங்கள். நாம் அங்கு வந்து உமக்கு எமது நடனத்தைக் காட்டுவோம் என்றார். தேவர்கள் நாகேசுவரத்தை அடைந்து புனிதப்புனல்களில் மூழ்கிச் சிவபூசை செய்து களித்திருந்தனர். மார்கழி மாதத் திருவாதிரை நாளில் சிவபெருமான் உமாதேவியுடன் பொன்மயமான விமானத்தில் கயிலையிலிருந்து குடந்தை நாகநாதத்தை அடைந்து தேவர்களுக்குக் காட்சியளித்த பின்னர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவர்கள் கண்டு மகிழ ஆனந்த நடனமாடினார். பிறகு ஸ்ரீவிமானத்தில் உமையுடன் எழுந்தருளினார். அதை யொட்டி ஸ்ரீவிமானத்தில் அவருடைய திருவுருவம் அமைக்கப்பட்டது. ஸ்ரீவிமானங்களில் அமைந்துள்ள உமாமகேசுவரர் வடிவங்களில் இதுவே பெரியதாகும்.

திருத்துறையூர்
- விடையூர்திச் செல்வன் -

திருத்தளூர் என வழங்கும் திருத்துறையூர், சுந்தர மூர்த்திசுவாமிகளால் பாடப்பட்ட பதியாகும். திருவெண்ணைநல்லூரில் இறைவனால் தடுத்தாட் கொள்ளப்பட்ட சுந்தரமூர்த்தி சுவாமிகள் அத்தலத்தைப் பாடிப் பரவியபின் திருநாவலூர் தொழுது இத்தலத்திற்கு வந்தார். அவர் தூரத்தில் வரும்போதே இறைவன் ஸ்ரீ விமானத்தில் இடபாரூடராகக் காட்சியளித்தார். அதைக் கண்டு மகிழ்ந்த அவர் "மலையார் அருவித்திரள்" எனத் தொடங்கும் பதிகம்பாடி, தமக்கு தவநெறியை அருளுமாறு வேண்டினார். இதைக் குறிக்கும் புடைப்புச் சிற்பமொன்று கருவறையின் தெற்கு சுவரில் உள்ளது. இதையொட்டி இக்கோயில் "தவநெறி" என்று அழைக் கப்படுகிறது. இக்கோயில் மேற்கு நோக்கியதாகும்.

கருவறையிலுள்ள சிவலிங்க மூர்த்தி சிஷ்டகுரு நாதர் என்று அழைக்கப்படுகின்றார். ஸ்ரீவிமானத்தில் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு, "உமா தேவியுடன் இடபாரூடராக" காட்சியளித்த சிவபெருமானுக்கு தினமும் உச்சிகாலபூசை சிறப்பாக நடைபெற்று வந்தது. பின்னாளில் திருப்பணி செய்தவர்கள் இந்த விமானத் தின் அமைப்பையே மாற்றிவிட்டனர். (அதனால் இப்போது காட்சிகொடுத்த நாயகரைக் காண முடிய வில்லை)

திருவீழிமிழலை - "தோணியப்பர்"

அப்பர் சுவாமிகளும், திருஞானசம்பந்தப் பெரு மானும் நெடுநாட்கள் அடியவர்களுடன் தங்கி வழிபட்ட திருத்தலம் திருவீழிமிழலை. அந்நாளில் நாட்டில் பஞ்சம் வந்து அடியவர் துன்புறவே, பெருமான் இருவருக்கும் தினமும் படிக்காசு அளித்து வந்தார். அதைக்கொண்டு அவர்கள் அடியவர்களின் பசிப்பிணியைப் போக்கினர்.

ஒருநாள் திருஞானசம்பந்தரைத் தரிசிக்க, அவரு டைய ஊரிலிருந்து அன்பர்கள் வந்தனர். அவர்கள் ஞானசம்பந்தரிடம் தோணிபுரப் பெருமானைத் தரிசிக்கச் சீர்காழிக்கு வரும்படி வேண்டினர். அவருக்கும் சீர்கா ழிக்குச் சென்று தோணியப்பரை வழிபட வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது.

அவர் திருவீழிமிழலை ஆலயத்திற்குச் சென்று, பெருமானிடம் தனது விருப்பத்தைத் தெரிவித்தார். சிவபெருமான், இதற்காகச் சீர்காழிக்குச் செல்ல வேண் டாம். அங்குள்ள காட்சியை இங்கேயே காட்டுவோம் என்று கூறி ஸ்ரீவிமானத்தின் அக்னி மூலையில் சீர் காழிக்கு ஒப்ப தோணிமீது உமாதேவியுடன் அமர்ந்து காட்சியளித்தார்.

அதைக்கண்டு மகிழ்ந்த திருஞானசம்பந்தர் சீர்காழியையும் (காழி) திருவீழிமிழலையையும் (வீழி) இணைத்து "மைம்மரு பூங்குழல்" என்ற பதிகத்தைப் பாடி அருளினார்.

இதை நினைவுகூரும் வகையில் திருவீழிமிழலை ஸ்ரீவிமானத்தில் தோணியப்பர் திருவுருவம் சுதைச் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளது. சிலசமயம் இதற்கு வழிபாடு செய்யப்படுகிறது. இக்கோயில் திருவாவடு துறை ஆதீனத்தின் அருளாட்சிக்கு உட்பட்டதாகும்.

சட்டநாதர்கள்

சட்டநாதர் எனப்படும் வைரவமூர்த்தி பரம ஆகா சத்தில் விளங்குபவர். அதனால் அவருக்கு ஆகாச பைரவர் என்பதும் பெயராயிற்று. ஆகாசமான அந்தர வெளியில் அவருக்குக் கோயில் அமைக்க முடியாது என்பதால் ஸ்ரீவிமானத்தின் தெற்குக் கிரீவத்தில் அவரை அமைக்கின்றார்கள். அங்கு மேலேசென்று அவரை வழிபடுவது இயலாது என்பதால் அவருக்கு நேராகக் கீழே பிராகாரத்தில் பலிபீடத்தை அமைத்து அதற்கே அனைத்துச் சிறப்பு வழிபாடுகளும் செய்யப் படுகின்றன. அவருக்கென விழாக்கள் கொண்டாடு வதற்கு உலாத்திருமேனி அமைத்துள்ளனர். சீர்காழி, அம்பர் முதலான தலங்களில் சட்டநாதரின் உலாத் திருமேனிகள் எழுந்தருளி வைக்கப்பட்டுள்ளதுடன், விழாக்களும் கொண்டாடப்படுகின்றன.

சீர்காழி - சட்டநாதர்

அஷ்டவைரவத்தலமான சீர்காழியில் உமா மகேசு வரர் ஸ்ரீ விமானத்தில் சட்டநாதர் எழுந்தருளியுள்ளார். இந்த மூர்த்திக்குப் புகுனுசட்டம் மட்டுமே சார்த்தப் படுகிறது. வெள்ளிக்கிழமை நள்ளிரவில் இவருக்குப் பூசை நடைபெறுகிறது. பரமாகாசமூர்த்தியாதலின் காற்றுமழை வெய்யில் முதலியன இவர்மீது படுதல் அவருக்கு இயற்கையாக நிகழும் பூசையாக முன்னாளில் நினைத்தனர். காலப்போக்கில் அவருடைய தனித்தன்மை யைக் கருதி அவர் வீற்றிருக்குமிடத்தைத் தனிச்சந்நிதி யாக மாற்றி, அங்குச் செல்லப் படிகள் அமைத்துள்ளனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அம்பர், திருக்கருப்பறியலூர், திருப்புறம்பியம்
- சட்டநாதர்கள் -

அம்பர், திருக்கருப்பறியலூர் (தலைஞாயிறு) திருப்புறம்பியம் முதலிய தலங்களிலும் ஸ்ரீவிமானத்தின் தெற்குக்கோட்டத்தில் சட்டநாதர் எழுந்தருளியுள்ளார். இத்தலங்களில், இவருக்கு முன்புறமுள்ள சந்நிதியை வளர்த்தி, மண்டபம் அமைத்ததுடன், அங்கு எளிதில் சென்று தரிசிக்கப் படிகளும் அமைத்துள்ளனர்.

❁ சைவ ஆலயங்களில் மட்டுமின்றி வைணவ ஆலயங்கள் சிவவற்றிலும் ஸ்ரீவிமானத்திலுள்ள தெய்வ வடிவங்கள் தனிச்சிறப்பைப் பெறுகின்றன. ஸ்ரீரங்கம் ரங்கநாதசுவாமியின் பிராணவாகார விமானத்தின் முகப்பில் ஸ்ரீபரவாசுதேவன் எழுந்தருளியுள்ளார். இவரை அன்பர்கள் தரிசித்துப் போற்றுகின்றனர். திருப்பதி திருமலையில் திருவேங்கடப் பெருமாளின் ஸ்ரீவிமானமான ஆனந்த நிலையத்தில் உள்ள திருமால் தனிச்சிறப்புடன் வணங்கப்படுகின்றார். இவரை தங்கவிமானத்திலிருந்து பிரித்துக் காட்ட வெள்ளியால் பிரபையிட்டு அம்புக்குறியால் அடையாளம் காட்டப்பட்டுள்ளது.

யானை, சிங்கம், பறவைகள் தாங்கும் ஸ்ரீவிமானங்கள்

சில தலங்களிலுள்ள ஸ்ரீவிமானங்களைச் 1) சிங்கங்கள், 2) யானைகள், 3) பறவைகள், 4) யாளிகள் தாங்குவதைக் காண்கிறோம். இவை தெய்வீகத்தன்மை வாய்ந்தவைகளாகும். இவை விண்ணிலிருந்தும், கயிலையிலிருந்தும் கொண்டுவரப்பட்டு மண்ணின்மீது நிலைப்படுத்தப்பட்டவை என்று நம்பப்படுகின்றன.

விண்ணிழி விமானம்

தெய்வீகத் திருவிமானங்களில் முதலிடம் பெறுவது திருவீழிமிழலை ஸ்ரீவிமானமாகும். சக்ராயுதத்தைப் பெறவேண்டித் தவம்புரிந்த திருமால் விண்ணிலிருந்து விமானத்தைக் கொண்டு வந்து வீழிவனத்தில் ஒளிவடிவமாக விளங்கும் பெருமானுக்கு அமைத்தார். இது பன்னிரண்டு சிங்கங்களால் தாங்கப்படும் பெருமை உடையதாகும். திருமுறையில் விமானம் திருமாலால் கொண்டுவரப்பட்டதென்பதை. (மாலவன்) ஆற்றுலுக்கு ஆழிநல்கி அவன் கொணர்ந்து "இழிச்சும கோயில்" என்று திருநாவுக்கரசரும், சிங்கங்களால் தாங்கப்படுவதை "மடங்கல் பூண்ட விமானம்" என்று சுந்தரரும் அருளிச் செய்துள்ளார்கள்.

இந்திர விமானம்

இந்திரன் மயன் எனும் தேவதச்சனைக் கொண்டு மதுரைச் சோமசுந்தரருக்கு அஷ்டதிக்கஜங்களைக் குறிக்கும் எட்டு யானைகளால் தாங்கப்படும் ஸ்ரீவிமானத்தை அமைத்து வழிபட்டான். இந்த யானைகள் ஒவ்வொன்றும் பெரிய யானையின் அளவுள்ளதாகும். இதில் ஒரு யானை எல்லாம்வல்ல சித்தரான சோமசுந்தரரின் அருட்பார்வையால் உயிர்பெற்று மன்னன் தந்த கரும்பை உண்டது எனப் புராணம் கூறுகிறது.

இந்திரன், இங்கு ஸ்ரீவிமானத்தை அமைத்து சோமசுந்தரரை வழிபட்டதையும், இந்த விமானத்தை எட்டு யானைகளும் முப்பத்திரண்டு சிங்கங்களும் அறுபத்து நான்கு பூதகணங்களும் தாங்குவதாகத் திருவிளையாடல் புராணம் விரிவாகக் கூறுகிறது.

❁ கோவையை அடுத்துள்ள காரமடை நஞ்சுண்டேசுவரர் ஆலயத்திலும், மதுரையில் உள்ளது போல் எட்டு பெரிய யானைகள் கருவறையைத் தாங்கும் வகையில் அமைக்கப்பட்டது. (இப்போது ஆறு யானைகளே உள்ளன).

❁ கோவை பட்டீசர் ஆலய ஸ்ரீவிமானத்தின் கிரீவப் பகுதியை எட்டுயானைகள் தாங்குவதுபோல் அமைத்துள்ளனர்.

பறவை சுமந்தோங்கும் கோயில்

சீர்காழியில் உமாமகேசுவரசுவாமி எழுந்தருளியுள்ள கட்டுமலையை இருபது பறவைகள் தாங்குகின்றன. இதனை, "தொல் பறவை சுமந்தோங்கும் திருக்கோயில்" என்று குறிக்கின்றனர். ஊழிக்காலத்தில் கடல் பொங்கி உலகை அழித்தபோது. இருபது பறவைகள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



பறவை சுமக்கும் ஸ்ரீவிமானம்-சீர்காழி

இங்கு வழிபட்டு உய்ந்தன. இதனைத் திருநாவுக்கரசர் "பார்முடிக் கடல்கொண்ட ஞான்று நின்பாத மெல்லாம் நாலஞ்சு புள்ளினம் ஏத்தின" என்று தேவாரத்துள் குறித்துள்ளார். இம்மலை இங்கு வந்ததனைச் சீர்காழித் தலபுராணத்தில் "மலைவந்த வரலாறு" எனும் பகுதியில் குறிக்கப்பட்டுள்ளது.

ஒருமுறை தங்களில் யார் பலசாலிகள் என்பதில் வாயுதேவனுக்கும். ஆதிசேடனுக்கும் போட்டி ஏற்பட்டது. ஆதிசேடன் கயிலைமலையை எனது ஆயிரம் படங்களாலும் மூடிக்கொள்வேன் நீ உனது திறமையால் அதனை அசைத்துப்பார் என்றான். ஆதிசேடன் கயிலையைத் தன் பணாமுடிகளால் மூடிக்கொள்ள மலையைப் பெயர்க்க வாயு பலவாறு முயன்றான் அவனால் ஏதும் செய்ய முடியவில்லை. மக்கள் காற்று வேகத்தால் தவித்தனர். ஆகவே தேவர்கள் ஆதிசேடனிடம் ஒரு மலைச்சிகரத்தை மட்டும் விடும்படி கேட்டனர். அவன் ஒருதலையைச் சற்று தூக்க, காற்று வேகத்தால் ஒரு பெரிய சிகரமும் பதினாறு கிளைச் சிகரங்களும் பெயர்ந்து வீழ்ந்தன. அவற்றில் பெரிய சிகரத்தை இருபது பறவைகள் கொண்டு வந்து இத்தலத்தில் வைத்தன. காலவித்து என்னும் அரசன் அதைக்கண்டு துதித்து புத்திர தோஷம் நீங்கி நல்ல மகனைப் பெற்றான். அதன் பின்னர் மலை மறைந்தது. இந்நிகழ்ச்சியை விளக்க அம்மன்னன் இருபது பறவைகள் தாங்குவதுபோல் ஒரு கட்டுமலையை அமைத்து அதன்மீது உமாமகேசுவரரை எழுந்தருளிவித்தான்.

சிங்கம் தாங்கும் விமானம்

காஞ்சிபுரத்தில் பல்லவ மன்னனான மூன்றாம் இராஜசிம்மனால் கட்டப்பட்ட ஆலயம் கயிலாய நாதர் ஆலயமாகும். இது புராணங்களில் சொல்லப்பட்டபடி 32சிம்மங்கள் தாங்குவதுபோல் அமைக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ இராஜசிம்மனின் முப்பாட்டனாகிய மகேந்திரவர்மப் பல்லவன் திருவதிகையில் அமைத்த வீரட்டேசுவரர் ஆலயமும். 32சிங்கங்களால் தாங்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

ஸ்ரீவிமானக்கோயில்

திருவெண்ணைநல்லூர் கிருபாபுரீசுவரர் ஆலயத்தில் மண்டபத்திற்குமேல் "ரிஷபாரூடமூர்த்திக்கு" சிறு ஆலயம் உள்ளது. இது ஸ்ரீவிமானத்தோடு இணைந்து இல்லாமல் தனியே முன்புறம் இருந்தாலும். இதனை விமானக்கோயில் என்றழைக்கின்றனர். இது சுந்தரரை இறைவன் ஆட்கொண்டு காட்சி கொடுத்ததன் நினைவாக அமைக்கப்பட்டுள்ளது. கீழே அதற்கு எதிரில் அடிமை ஓலையுடன் நிற்கும் சுந்தரர் சந்நிதி உள்ளது.

கபோதவரி வியாளவரி

கபோதம் என்பதற்குப் புறா என்பது பொருள். அந்நாளில் ஆலயங்களில் புறாக்கள் வளர்க்கப்பட்டன. புறாக்களின் இனிய ஓசை தெய்வீகமானதாகக் கருதப்பட்டது. ஆலயங்களில் புறாக்கள் வசிக்க இடம் வசதி செய்து தரப்பட்டது. குறிப்பாக ஸ்ரீவிமானத்தில் மேல் தளத்திற்குக் கீழாக இடைவெளி விட்டு கூடுகள் போல் கற்கள் அமைத்துக் கட்டப்பட்ட. அதற்கும் மேலே மழைநீர் புகாதிருக்கவும் வெய்யில் வருத்தாதிருக்கவும் கொடுங்கை எனும் வளைவான காப்புப் பகுதி அமைக்கப்பட்டது. இவை கபோதவரி என்று அழைக்கப்பட்டன. கோயில் மாடங்களில் மணிப்புறாக்கள் வசித்துவந்ததைச் சங்கப் பாடல்கள் கூறுகின்றன.

காலப்போக்கில் புறாக் கூடுகளை அமைப்பது கைவிடப்பட்டது. அந்த இடத்தில் வரிசையாகப் பூதங்களின் உருவங்கள் அமைக்கப்பட்டன. சில பூதங்கள் விலங்குகளின் முகத்துடனும், சில வாத்தியங்களை இசைக்கும் கோலத்திலும் சில குதித்தாடி மகிழ்வதாகவும் அமைக்கப்பட்டன என்றாலும், பழைய பெயரில் இந்தப்பகுதி கபோதவரி என்றே அழைக்கப்படுகின்றது.

❁ இந்நாளில் பனையபுரம் என்றழைக்கப்படும் தலம் தேவாரத்துள் "புறவார்பனங்காட்டூர்" என்று குறிக்கப்பட்டுள்ளது. இதற்குப் புறாக்கள் ஆர்ப்பரிக்கும் பனங்காட்டூர் என்று பொருள். ❁ வியாளம் என்றால் புலி, கபோதவரிக்கு மேலாக கொடுங்கையும் அதற்கும் மேலான தளவரிசையில் வரிசையாகத் திரும்பிப் பார்க்கும் கோலத்தில் புலி உருவங்களும் அமைக்கப்பட்டன. இதற்கு வியாளவரி என்பது பெயராகும். ❁ கருவறை அதிட்டானமாகிய அடிப்படைப் பகுதியில் வாய் திறந்த யாளிகளும் புலிகளும், அதன் வாயிலிருந்து வெளிப்படும் போர் வீரனும் வரிசையாக அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இதுவும் வியாளவரி என்று அழைக்கப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீவிமானத்தில் அமைந்துள்ள சிறப்புமிக்க திருவடிவங்கள்

பொதுவாக அனைத்து ஆலயங்களிலும் ஸ்ரீ விமானத்தின் கிழக்கில் உமாமகேசரும், தெற்கில் (தக்ஷிணாமூர்த்தியும்) மேற்கில் திருமாலும், வடக்கில் பிரம்மதேவனும் அமைக்கப்படுகின்றனர். ஸ்ரீ விமானங்களின் அடுக்குகளும் அகலங்களும் கூடும்போது மூர்த்திகளின் அவதாரங்களும் அவர்கள் தொடர்புடைய புராணங்களை விளக்கும் திருவுருவங்களும் அமைக்கப்படுகின்றன.

எடுத்துக்காட்டாக, விமானம் ஒரு தளமாக இருக்கும்போது அதன் மேற்குப்பக்கத்தில் திருமால் ஸ்ரீதேவி பூதேவியுடன் அமைக்கப் படுகின்றார். தளங்களும் அங்கங்களும் விரிவாகும்போது, திருமாலின் தசாவதாரங்கள், கிருஷ்ணனின் லீலைகள், மகாபாரதக் காட்சிகள் இராமாயணக் காட்சிகள் முதலியன இடம் பெறுகின்றன.

இவ்வாறே ஒற்றைத் தள விமானத்தின் தெற்குப் பகுதியில் ஆலமர்செல்வனான தட்சிணாமூர்த்தி அமைக்கப்படுகிறார். இப்பகுதி விரிவடையும்போது வீணாதர தட்சிணாமூர்த்தி, காமதகனர், யோக தட்சிணா மூர்த்தி முதலிய தட்சிணாமூர்த்தி வடிவங்களும், சிவ பெருமானின் தெற்குமுகமான அகோர முகத்திலிருந்து தோன்றிய உக்கிர வடிவங்களான கால சம்ஹாரர், கஜ சம்ஹாரர் முதலிய திருவடிவங்களும் அமைக்கப் படுகின்றன.

இவ்வாறு அமைக்கப்படுவது பொதுவானதாகும். மாறாகச் சில சிறப்புமிக்க திருவுருவங்கள் ஸ்ரீவிமானங்களில் அமைந்துள்ளதையும் காண்கிறோம். இந்த அமைப்பு கலைஞரின் ஆழ்ந்த புலமை, கோயிலை அமைத்தவரின் விருப்பம், அருட்காட்சி பெற்றவர்களின் விருப்பம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைக்கப்பட்டனவாகும். இவை அந்தந்த தலங்களுக்கே உரியதாகும். பிற ஆலயங்களில் இவற்றைக் காண்பது அரிது. எடுத்துக்காட்டாக, திருஒற்றியூர் ஸ்ரீவிமானத்தில் தட்சிணாமூர்த்திக்குப் பதிலாக லகுளீச மூர்த்தியும், திருமழிசை விமானத்தில், அறுபத்துமூன்று நாயன்மார்களுடன் தொகையடியார்களும், சோழர்கள் அமைத்த ஸ்ரீவிமானங்களின் மேற்குக் கோட்டத்தில் யோகநரசிம்மரும், கழுகுமலையில் மிருதங்கம் வாசிக்கும் சிவபெருமானும் இருக்கின்றனர். இத்தகைய அருமைமிக்க மூர்த்தங்கள் சிலவற்றை இங்கே அறிந்து மகிழலாம்.

ஸ்ரீவிமானத்தில் அறுபத்து மூவர்

சென்னைக்கு மேற்கே திருத்தணிகை செல்லும் சாலையில் அமைந்துள்ள தலம் திருமழிசை ஆகும். இங்குள்ள ஒத்தாண்டேசுவரர் ஆலய ஸ்ரீவிமானம் கஜப் பிருஷ்ட வடிவமானது. இந்த ஸ்ரீவிமானத்தின் கிரீவப் பகுதியில் சோமாஸ்கந்தரும் அவரைத் தொடர்ந்து வலமாக சுந்தரமூர்த்திகள் தொடங்கி சேக்கிழார்வரை அறுபத்துமூன்று நாயன்மார்களும் தொகையடியார்களும் அமைக்கப்பட்டுள்ளனர். இத்தகைய காட்சி வேறெந்த ஸ்ரீவிமானத்திலும் காணக் கிடைக்கவில்லை.

மிருதங்கம் வாசிக்கும் சிவன்

வீணைமீட்டும் நிலையில் தென்முகக் கடவுளாகவும், பிட்சாடன மூர்த்தியாகவும் சிவபெருமான் பல இடங்களில் ஸ்ரீவிமானத்தில் இருக்க, அபூர்வமாக மிருதங்கம் வாசிக்கும் தட்சிணாமூர்த்தியின் வடிவம் கழுகுமலை ஸ்ரீவிமானத்தில் மட்டுமே உள்ளது.

யோகநரசிம்மர்

சோழர்கள் அமைத்த அனேக சிவாலயங்களின் ஸ்ரீவிமானத்தின் மேற்குப் பகுதியில் யோக நரசிம்மரை அமைத்துள்ளனர். திரிபுரமெரித்த சிவபெருமானின் கரத்தில் அம்பாகத் திகழ்ந்த திருமால் உக்ர நரசிம்மராக இருக்கின்றார். இதை உணர்த்தவே சிவாலயங்களின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விமான மேற்குக் கோட்டங்களில் நரசிம்மர் அமைக்கப் பட்டுள்ளார் என்று கூறப்படுகிறது.

லகுளீசர் (கௌளீசர்)

சைவசமயத்தின் மாபெரும் பிரிவுகளில் ஒன்று லகுளீச பாசுபதமாகும். இந்தச் சமயத்தின் ஆதிகுரு கௌளீச மூர்த்தியாவார். லகுளீச பாசுபதர்கள் அமைத்த சிவாலயங்களில் தட்சிணாமூர்த்திக்குப் பதிலாக கௌளீச மூர்த்தியை அமைத்துள்ளனர். இச்சமயத்தின் குருமார் களின் வேண்டுகோளின்படி, இராஜேந்திர சோழனால் கல்லால் புதுப்பித்துக்கட்டப்பட்ட திருஒற்றியூர் படம் பக்கநாதர் ஸ்ரீவிமானத்தின் தெற்குக் கோட்டத்தில் "லகுளீச மூர்த்தி" அமைக்கப்பட்டுள்ளார்.

அர்த்தநாரி தட்சிணாமூர்த்தி

மன்மதனைச் சம்ஹரித்த யோகமூர்த்தியாகவே அனைத்து ஆலயங்களிலும் தட்சிணாமூர்த்தி விளங்குகின்றார். சில தலங்களில் உமையுடன் கூடிய சாம்பவி தட்சிணாமூர்த்தியைக் காண்கிறோம். திருப்பாற்கடல் பிரசன்ன வெங்கடேசப்பெருமாள் ஆலயம், கருவூர் பசுபதீசுவரர் ஆலயம் முதலிய வற்றின் ஸ்ரீவிமானத்தின் தெற்குக் கோட்டத்தில் மாதொரு பாதியனாக (அர்த்தநாரீசரராக) வீணை மீட்டிக் கொண்டிருக்கும் தட்சிணாமூர்த்தியைக் காண்கிறோம்.

நீலகண்டர்

சிவபெருமானின் தியாகத் திருக்கோலங்களில் முதன்மைபெற்றது, திருநீலகண்டர் கோலமாகும். இது விஷஅபகரணர் என்று போற்றப்படுகிறது. தேவர்களும் அசுரர்களும் கூடி அமுதம் வேண்டிப் பாற்கடலைக் கடைந்தபோது விஷம் வெளிப்பட்டு துன்புறுத்த, எல்லோரும் அஞ்சி சிவபெருமானைச் சரணடைந்தனர். சிவபெருமான், சுந்தரரை அனுப்பி விடத்தைத் திரட்டிக்கொண்டு வரும்படி கூறினார். அவர் சென்று பொங்கிவரும் விஷத்தைத் திரட்டி வந்து பெருமானின் கரத்தில் அளித்தார். சிவபெருமான் அதை வாயிலிட்டுக் கண்டத்தில் தேக்க அவர் கழுத்து நீல நிறமாகியது. அதனால் பெருமான் நீலகண்டர் எனப்பட்டார். சிற்ப நூல்கள் இவர் வடிவைப் பலவாறு குறித்தாலும் நடை முறையில் வலதுகையில் வாசுகி என்ற பாம்பையும் இடதுகையில் விஷத்தையும் ஏந்தியவராகப் பெருமான் அமைக்கப்படுகின்றார். கழுகுமலை வெட்டுவான் கோயில் ஸ்ரீவிமானத்தில் விடமுண்ணும் பெருமானைக் காணலாம்.

ஸ்ரீ விமானமும் கோட்டங்களும்

கோட்டம் என்ற சொல் ஆதியில் தனிக்கோயிலையே குறித்தது. காலப்போக்கில் தனிக்கோட்டங்களில் இருந்த விநாயகர், ஆலமர்செல்வன், திருமால், பிரமன், துர்க்கை ஆகியோர் சிவாலய கருவறை புறச்சுவர் மாடங்களில் எழுந்தருளி வைக்கப்பட்டபோது அந்த மாடங்களும் கோட்டங்கள் என்றழைக்கப்பட்டன.

ஆதியில் பிரம்மா, விஷ்ணு, உருத்திரர் (தட்சிணாமூர்த்தி) ஆகிய மூவரே கோட்ட தெய்வமாக கருவறையின் இடம், பின்புறம், வலம், ஆகியவற்றில் அமைத்த மாடங்களில் எழுந்தருளியிருந்தனர். பின்னாளில் உள்மண்டபத்தின் புறச்சுவரில் மேலும் இரண்டு மாடங்கள் அமைக்கப்பட்டு அவற்றில் விநாயகரும், துர்க்கையும் எழுந்தருளி வைக்கப்பட்டனர். இவர்கள் சிவபெருமானின் ஐந்து முகங்களிலிருந்து வெளிப்பட்ட சக்திகளாகக் கருதப்பட்டனர். கருவறையாகிய ஸ்ரீவிமானத்தினைச் சுற்றி ஐந்து கோட்டங்கள் அமைப்பதும், அவற்றில் விநாயகர், தென்முகக்கடவுள் (ஆலமர்செல்வன்), திருமால் (அல்லது இவருக்குப் பதிலாக லிங்கோத்பவர்) பிரம்மா, துர்க்கை ஆகியோரை அமைப்பதும் நிலையான கொள்கையாக இருந்து வருகின்றது.

சோழர்கள் காலத்திய கோயில்களில் மேலும் அதிகமாக அகத்தியர், நடராஜர், முருகன், காலசம்ஹாரர், பிட்சாடனர், அர்த்த நாரீசுவரர் முதலான கோட்ட தெய்வங்களும் அமைக்கப்பட்டனர். சோழர்கள் இருபத்தியோரு கோட்டங்கள் வரை அமைத்து மகிழ்ந்துள்ளனர்.

சில ஆலயங்களில் கோட்டத் தெய்வங்கள் தனிப் புகழ் பெற்றுள்ளனர். மாயூரம் வள்ளலார் கோயில் தட்சிணாமூர்த்தி, கோவிந்தவாடி அகரம் தட்சிணாமூர்த்தி, தப்பளாம் புலியூர் திரிபாததிரிமூர்த்தி, திருஐயாறு கௌளீசர் (தட்சிணாமூர்த்தி) முதலியோர் புகழ் பெற்ற கோட்ட தெய்வங்களாவர்.

✤ தாராசுரம் ஐராவதேசுவரர் ஆலயத்தில், சிவசூரியன், ஆதிசண்டேசுவரர், கங்கை, தும்புரு, நாரதர், வைஸ்ரவனன், சந்திரன், மகாசாஸ்தா, நாகராஜா, வாயுதேவி, ருத்ராணி, வைஷ்ணவி, பிராமி, வருணன், நந்தி, பெரியதேவன், சாந்தியாத்ததேவி, சாந்திதேவி, வித்யாதேவி, பிரதிஷ்டாசத்தி, நிவிர்த்திசத்தி, தட்சப்பிரஜாபதி, யமுனா, இரதிமன்மதன், ஈசானதேவர் ஆகியோர் கோட்டதெய்வங்களாக எழுந்தருளிவைக்கப்பட்டுள்ளனர். கோட்டங்களுக்கு மேலே இவர்களுக்கு உரிய பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. (இவற்றில் பல சிற்பங்களை இன்று காண முடியவில்லை)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ விமானமும் - யோகத்தானங்களும்

நடைமுறையில் இன்று நாம் காணும் கருவறையான ஸ்ரீவிமானங்கள் கலைச் சிறப்பாலும், கட்டிடக் கலை உத்திகளாலும் கலைஞர்களின் கற்பனை வளத்தாலும் பல நிலைகளைக் கடந்து புதிய வடிவங்களைப் பெற்றுள்ளன. ஆதியில் இவை ஒரு மனிதன் யோகாசனத்தில் வீற்றிருப்பதற்கு இணையான எளிய வடிவங்களையே கொண்டிருந்தன. (அதையே கீழேயுள்ள படம் விளக்குகிறது.)

சிவயோகத்தில் நிலைபெற்றிருக்கும் யோகியின் மூலாதாரப் பகுதியே கருவறையின் மையத்தில் (மூலவர் சிலைக்கு) நேர் கீழே அமைந்த மூல இடமாகும்.

ஆலயங்களை அமைக்கத் தொடங்கும்போது இந்த இடத்தில் கருப்ப நியாசம் என்னும் சடங்கு நடத்தப்படுகிறது. இங்குத் தங்கத்தாலான ஆமை வடிவமும் அதன் மீது நவரத்தினங்களும் அமைக்கப்பட்டு, அதன் மீது "வலம்புரிச் சங்கு"ம் அமைக்கப்படுகிறது. இதனைச் "சங்குஸ்தாபனம்" என அழைப்பர். இது மண்தத்துவம் ஆகும்.

இதற்கும் மேலே அமையும் உபபீடத்தின் மையத்தில் வெள்ளியால் செய்யப்பட்ட ஆமையும் அதன்மீது வெள்ளித் தாமரையும் அமைக்கப்படுகின்றன. இந்த இடம் நீர்தத்துவமாகும். உபபீடம் யோகியின் பத்மாசன கோலத்தில் கால்பகுதி வரை உள்ள பகுதியைக் குறிப்பதாகும். இதன் மையத்திலேயே சுவாதிஷ்டான நிலையம் உள்ளது.

இதற்கும் மேலே கருவறைக்குள் அமையும் ஆதாரபீடமே யோகநிலையில் சொல்லப்படும் மணிபூரகமாகும். இங்கு நாம் அர்ச்சாமூர்த்தியாக வழிபடும் சிவலிங்கம் அமைந்துள்ளது. இதுவே நாபித்தானம் எனப்படும் அக்கினித் தானமாகும். இதையொட்டியே சிவலிங்கம் அக்னிவடிவாகப் போற்றப்படுகிறது.

இதனையடுத்து, சிவலிங்கத்திற்கும் மேல்தளத்திற்கும் இடையே அமைந்தபகுதி, யோக நிலையின் நான்காவது நிலையமான அநாகதத்தைக் குறிப்பதாகும். இதயத்தானமான இந்த இடம் எப்பொழுதும் இயங்கிக் கொண்டிருப்பதை உணர்த்த சிவலிங்கத்திற்குப் பின்னணியில் ஒரு தீபம் ஏற்றப்படுகிறது. இந்தத் தானத்திற்கு அதிபதி உருத்திரன். ஆகையால் இது உருத்திரதீபம் என்றழைக்கப்படுகிறது. இது காற்று தத்துவமாகும்.

இதையடுத்ததான விசுக்தி என்பது ஸ்ரீவிமானத்தில் சற்று உள்ளடங்கிய பகுதியைக் குறிக்கிறது. மனித உடலில் விசுக்தித் தானம் கழுத்து என்பதால், விமானத்தில் இது கண்டம் அல்லது கிரீவம் என்றழைக்கப்படுகிறது. இது ஆகாசத்திற்கும் காற்று மண்டலத்திற்கும் இடையிலுள்ள வெட்டவெளியைக் குறிப்பதாகும்.

ஸ்ரீவிமானத்தின் இந்த கிரீவத்தில் நான்கு புறத்திலும் நான்கு தேவர்கள் அமைக்கப்படுகின்றனர். இவர்கள் பிரமன், திருமால், உருத்திரன், மகேசன் என்னும் நால்வராவர். இவர்கள் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல் எனும் நான்கு செயலுக்கு உரியவர்



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

களாவர். இவர்களிடம் மறைப்பு சக்தி இல்லை. இது யோக வித்தையில் ஐந்தாம் நிலையமாகும் இது குண்டலினி சக்திஎழுந்து உயிருக்கு படைத்தல், காத்தல்,அழித்தல், அருளல் என்னும் நான்கு தொழிலையும் ஆற்றும் ஆற்றலை உண்டாக்கிவிட்டதை உணர்த்துகிறது.

இதற்கு மேலுள்ள பகுதி சிகரம் எனப்படும். இதில் நான்கு புறமும் நாசித்தலைகள் பொருத்தப்படும். இந்த இடமே ஆக்ஞாபீடமாகும். இதில் மூன்று பக்கங்களில் உள்ள நாசித்தலைகளை (அல்லது கீர்த்திமுகங்கள்) சிறியதாக அமைத்துவிட்டு, கிழக்கு நோக்கியதை மட்டும் பெரியதாக அமைத்து, அதில் உமாமகேசுவரரை எழுந்தருளிவைப்பர். இது மனித உடலின் முகத்தில் புருவ மத்தியிலுள்ள ஆக்ஞாசக்கரம் ஆகும். இங்கு உள்ள மறைப்பை நீக்கினால் சிவசத்தி தரிசனம் கிடைக்கிறது. இதையே மேலே குறித்த உமாமகேசுவரர் உருவத்தின் மூலம் விளக்கியுள்ளனர். (சில இடங்களில் உமாமகேசுவரருக்குப் பதிலாக இங்கு காட்சி கொடுத்த நாயகரை அமைத்துள்ளனர்.) இதுவே ஆகாசமண்டலம் ஆகும்.

இதற்கும் மேலே அமைவது கபால வாயிலாகும். இதுவே யோக நிலைகளில் கூறப்படும் பிரமரந்திரம் ஆகும். சாதகன் மேற்கொள்ளும் யோகசாதனையின் இறுதியில் குண்டலினி சக்தியால் கபால வாயிலைத் திறந்து கொண்டு தலைக்குமேல் பன்னிரண்டு விரற்கிடை இடைவெளியில் உள்ள சிதாகாசப் பெருவெளியை அடைந்து அங்கு சிவசக்தியின் திருநடனத்தை சாதகன் கண்டு அனுபவிக்க அங்கு அமுதத்தாரை பொங்கும். அது கபாலவாயில் வழியாக உள்நாக்கை (மனோன்மணி) அடையும். அதைச் சுவைக் கும் சாதகன் துக்கக் கலப்பற்ற பேரானந்தத்தில் திளைத்திருப்பான். பிரமரந்திரமான கபால வாயிலைக் குறிக்கும் விமானத்தின் உச்சிப்பகுதி சந்தனக்கல்லால் மூடப்பட்டிருக்கும்.

சந்தனக்கல் அமுதத்தின் அடையாளமாகும். கபாலவாயில் வழியாகச் சொட்டும் அமுதத்தை அருந்தியவனே சாகாவித்தையையும் வேகாக் கலையையும் அறிந்தவனாகிறான். இதுவே அமுதக்கலை நிலை எனப்படும்.

இதற்கும் மேலே ஸ்தூபி எனப்படும் கலசம் அமைகிறது. இதற்குள் எண்ணற்ற தேவர்கள் உறைகின்றனர். இது பூரணமானது, நிறைவானது என்பதால் பூரணகும்பம் போல் (நிறைகுடம்) அமைக்கப்பட்டுள்ளது. இதன் நுனிப் பகுதி பரமாகாசப் பெருவெளியைக் குறிக்கின்றது.

இவற்றை நோக்க ஸ்ரீவிமானம் ஒரு யோகியின் தியானக்கோலத்தின் அமைப்பாக வடிவமைக்கப்பட்டது என்பது தெளிவாகும்.

❀ கருவறையுள் சிவலிங்கத்திற்கு முன்புறம் சுழற்றிக் காட்டப்படும் தீபங்கள், ஆன்மா யோகநிலையில் இறைவனை அறிவதை உணர்த்தும் குறியீடேயாகும். அங்கு ஒலிக்கப்படும் மணி, மிருதங்கம், சங்கு முதலான அனைத்து இசைக்கருவிகளின் ஓசைகளும் சாதகன் யோக சாதனையின் பல்வேறு நிலைகளில் கேட்டு அனுபவிக்கும் ஓசைகளேயாகும்.

❀ கருவறையுள் அருவுருவமாகவும் (லிங்கத் திருமேனி) அதற்கு மேல் ஒளிவடிவிலும், ஸ்ரீவிமானத்தில் உமாமகேசுவர உருவமாகவும், அதற்கு மேல் கலசத்தின் நுனியில் சிதாகாசப் பெருவெளியில் பெருஞ் சோதி வடிவிலும் சாதகன் இறைவனைக் காண்கிறான் என்று யோகிகள் குறிக்கின்றனர். இதன் மூலம் ஒடுங்கிய நிலையிலிருந்து தீப ஒளிப் பிழம்பையும், அதிலிருந்து அழகிய தோற்றமுடைய கடவுளையும் பேரொளி நிலையையும் படிப்படியாக சாதகன் அனுபவித்து நிர்விகல்ப சமாதி நிலை எய்துகிறான் என்பது அறிஞர்கள் கருத்து.

❀ தென்குடித் திட்டை என்னும் தலத்திலுள்ள வசிட்டேசுவரர் ஆலயம் ஸ்ரீவிமானத்தில் கபாலக்கல்லாக சந்திரகாந்தக்கல் உள்ளது. இது சந்திர ஒளியிலிருந்து பெற்ற நீரை இருபத்தி ஐந்து மணித்துளிகளுக்கு ஒரு சொட்டு வீதம் நீரை வெளிவிடுகிறது. இந்நீர் சிவலிங்கத்தின் உச்சியில் விழுகிறது.

அஷ்டாங்க விமானம்

பல்லவர்கள் கருவறையை விசாலமாக அமைத்ததுடன் அதன்மீது பெரிய விமானத்தையும் அமைத்தனர். மேலும் இந்த ஆலயத்தில் வாயிலைத் தவிர ஏழுதிசைகளிலும் கட்டிடத்தை வளர்த்திக்கட்டி தனிச்சிற்றாலயங்களை அமைத்தனர். இவை அங்காலயங்கள் என்றழைக்கப்பட்டன. இவைகளின் விமானங்கள் ஸ்ரீ விமானங்களுடன் இணைந்த நிலையில் அமைந்திருப்பதுடன் உச்சியில் கலசங்களையும் கொண்டிருக்கின்றன. மூலத்தான விமானத்துடன் ஏழுதுணை விமானங்களைத் தன்னுள் கொண்டிருக்கும் இந்த கட்டிட அமைப்பு அஷ்டாங்க விமானம் என்றழைக்கப்படுகிறது. திருவதிகை வீரட்டேசுவரம், காஞ்சிக் கயிலாயநாதம், முதலியன இதற்கு எடுத்துக் காட்டுகளாகும். இதுவே மாற்றம் பெற்று வடநாட்டில் நவரத்தின விமானங்கள் எனும் ஆலய அமைப்பாயிற்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நீராழி ஸ்ரீ விமானங்கள்

சிவபெருமான் நிமிர்ந்த நெடும் பெருஞ்சுடராக இருக்கின்றான். அவனுடைய அருளாக வெளிப்பட்ட தேவி கீழ்நோக்கிப் பாயும் நீராக இருக்கின்றாள். நீரும் நெருப்பும் இணைந்தே பூமியும் உயிர்த் தொகுதிகளும் தோன்றியதாக வேதங்கள் கூறுகின்றன. சிவலிங்கத்தின் ஆவுடையாராகிய சத்திபாகம் நீர்மயமாகவும், அதன் நடுவில் அமைந்துள்ள உருத்திரபாகம் நெருப்பு மயமாகவும் உள்ளதென்று யோகியர் குறிக்கின்றனர். நெருப்பு நிமிர்ந்த முக்கோணமாகவும், நீர் கவிழ்ந்த முக்கோணமாகவும் குறியிட்டுக் காட்டப்படுகின்றன. இரண்டும் இணையத் தோன்றுவது அறுகோணம். இது நீரும் நெருப்பும் இணைவதால் உண்டாகும் பிரபஞ்சத் தைக் குறிக்கிறது. இதையொட்டியே சித்தர்கள் அறு கோணச் சக்கரத்தைச் சிறப்பிக்கின்றனர்.

புதிய கட்டிடங்களை எழுப்பும்போதும், குளம், கிணறு முதலிய நீர்நிலைகளைத் தோண்டும்போதும் நடைபெறும் தொடக்கப் பூசையில் வட்டமாகப் பள்ளம் செய்து அதில் நீர் நிரப்பி, நடுவில் அமைந்துள்ள திட்டில் சாணப்பிள்ளையாரை வைத்து வழிபடுவதை இன்றும் காணலாம். வட்டமான பள்ளத்திலுள்ள நீரில் வெற்றிலையில் கற்பூரத்தை ஏற்றிவைத்து மிதக்கவிடு வர். அது வலம் சுழித்து வந்தால் எடுத்தகாரியம் விரை வாகவும் சிறப்பாகவும் நடைபெறுமென்று நம்புகின்றனர்.

ஆதியில் தெய்வங்கள் நீரின் மத்தியில் இருந்த ஆலயங்களில் இருந்ததாகவே நம்பினர். விநாயகர் இட்சுசாகரம் என்னும் கருப்பஞ்சாற்றுக்கடலின் மத்தி யில் "ஆனந்தபவனம்" எனும் மாளிகையில் வீற்றி ருப்பதாக விநாயக புராணம் கூறுகின்றது.

சிவ பூஜா நூல்களில் சப்த சாகரங்களுக்கு மத்தி யில் ஆதார சக்தியான ஆமையாலும், அஷ்டதிக்கஜங் கள், அஷ்டநாகங்கள் முதலியவற்றாலும் தாங்கப்படும் மகாசிவபுரத்தில் சிவபெருமான் வீற்றிருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

வைணவர்கள் பாற்கடலின் நடுவில் பாம்பணை யில் திருமால் பள்ளிகொண்டுள்ளதாகக் கருதுகின்றனர்.

இத்தகைய பல கருத்துக்களை ஒப்புநோக்க இறைவன் நீரிடை கோயில் கொண்டுள்ளான் என்ற கருத்து மக்களிடையே நெடுங்காலமாக நிலவி வரு வதை அறியமுடிகிறது.



● நீராழி, நீராழி மண்டபம் சூழவுள்ள திருவீழிமிழலை விண்ணிழி விமானம்.

இதைக் கருத்திற்கொண்டு பல தலங்களில் சுற்றி லும் நீர்தேங்கி நிற்கும் வகையில் கருவறையையும் மண்டபத்தையும் அமைத்துள்ளனர். காலப்போக்கில் முன்புறம் படிகள் அமைக்கப்பட்டு எஞ்சிய மூன்று புறங்களிலும் நீர் நிறைந்து நிற்கும் வகையில் கைப்பிடிச் சுவர் அமைக்கப்பட்டன.

சோழ மண்டலத்தில் அமைந்துள்ள அனேக ஆலயங்களில் கருவறையைச் சுற்றிலும் நீரைத்தேக்கும் வகையில் கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலே மண்டபமும் உள்ளது. இதனை நீராழி மண்டபம் என்பர்.

தில்லை சிற்றம்பலமான நடராசரின் சிற்சபையைச் சுற்றி நீர்தங்கும் அமைப்பும் அதன்மேல் மண்டபமும் உள்ளன. இங்கு நீர்தங்கும் பகுதியில் பலிபீடமும் நந்தியும் மாறிமாறி அமைக்கப்பட்டுள்ளன.

பெருநகர் பிரம்மபுரீசுவரம், முன்னூர் ஆடவல் லீசுவரம், மாகறல் மாகறலீசுவரம் முதலிய ஆலயங்கள் நீராழி அமைப்புக்குச் சிறந்த உதாரணங்களாகும். இதில் கருவறை ஓர் ஆள் உயரமுள்ள உயர்ந்த மேடை மீது கட்டப்பட்டுள்ளது. கருவறையின் மூன்று பக்கமும் விசாலமான இடத்தை விட்டுவிட்டு, திருமாளிகைப் பத்தி மேடையும் அதன்மீது மண்டபமும் கருவறைக்கு இணையான உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கருவறைக்கும் திருமாளிகைப்பத்தி மண்டபத்திற்கும் இடையே நீரைத் தேக்கி வைக்க வழிசெய்யப்பட்டுள் ளது. இதில் சுமார் ஒரு மீட்டர் உயரத்திற்கு நீரைத்தேக்கி வைக்கமுடியும். கோடைகாலத்தில் இதில் நீரைத்தேக்கி வைத்துப் பெருமானுக்கு ருத்திராபிஷேகம் செய்வது வழக்கமாகும். காலப்போக்கில் கருவறை மட்டுமின்றி ஆலயத்தையே நீர்சூழ அமைக்கும் வழக்கமும் வந்தது.

❁ அப்பர் சுவாமிகள் வீடுபேறுபெற்ற திருப் புகலூர் வர்த்தமானீசுவரர் ஆலயத்தைச் சுற்றிலும் பெரிய அகழி இருக்கிறது. இதில் எப்போதும் நீர் நிறைந்துள்ளது. சித்திரை மாதம் நடைபெறும் அப்பர் சுவாமிகள் விழாவின் போது இதில் தெப்பஉற்சவம் நடைபெறுகிறது. பாடல்பெற்ற திருத்தலமான திருந்து தேவன் குடியிலும் (நண்டாங்கோயில்) ஆலயத்தைச் சுற்றிலும் அகழி உள்ளது. இறைவன் கற்கடகேசுவரர் அம்பிகை அபூர்வநாயகி..

❁ இதையொத்ததாக ஆற்றுக்கு இடையிலும், குளத்திற்கு நடுவிலும் கோயில்களை அமைக்கும் வழக்கமும் இருந்து வருகிறது.

ஊறல் அமர்ந்த உமாபதி

இந்நாளில் தக்கோலம் என்றழைக்கப்படும் சிவத்தலம் முன்னாளில் திரு ஊறல் என்றழைக்கப்பட்டது. இத்தலத் தில் சோமநாதேசுவர், மாம்பழேசுவரர், கங்காதீசுவரர் முதலான சிவாலயங்கள் உள்ளன. இதில் குறிப்பிடத்தக்கது, கங் காதீசுவரர் ஆலயமாகும். இந்த ஆலயத்தின் மேற்கே கண்டுபிடிக்கமுடியாத இடத்திலுள்ள ஒரு மேட்டில் பொங்கி வரும் ஊற்று நீர் மூடப்பட்ட கால்வாயின் வழியாக ஆலயத்தின் மேற்கில் அமைந்துள்ள ஒரு நந்தியின் வாய்வழியாக வெளிப்பட்டு கருவறையின் இடமும் வலமுமாகச் சூழ்ந்த பின்னர் ஆலயத்தின் கிழக்கே அமைந்துள்ள இன்னொரு நந்தியின் வாய் வழியாக வெளியேறி குளத்தில் விழுந்து, அங்கிருந்து ஒரு கால்வாய்வழியாக ஓடி அருகிலுள்ள ஆற்றில் சென்று சேர்கிறது. இத்தகைய அமைப்பு வேறெங்கும் இல்லை. முன்னாளில் கருவறையைச் சுற்றி எப்போதும் தண் ணீர் ஒடிக்கொண்டேயிருந்தது என்று கூறுகின்றனர். (இப்போது தண்ணீர் வருவதில்லை) தலபுராணத்தில் இந்தத் தீர்த்தம் அகோராஸ்திர தீர்த்தம் என்றழைக்கப்படுகிறது.

கலசங்கள்



ஸ்ரீவிமானத்தின் உச்சியில் பூரணகும்ப வடிவில் அமைவதே கலசமாகும். பெரும்பாலும் விமானங்களின் மீது ஒற்றைக் கலசமே அமைகிறது. நீள் சதுர வடிவில் அமைந்த விமானங்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட கலசங்கள் அமைகின்றன. தில்லை நடராசர் கருவறை விமானத்[illegible] ஒன்பது கலசங்கள் உள்ளன. கலசங்களை ஒற்றைப்படை எண்ணிக்கையில் அமைக்கின்றனர். கலசத்தின் உள்ளே வரகரிசியை இட்டு நிறைக்கின்றனர். அதனுள் வெள்ளித் தகட்டில் கும்பாபிஷேகம் நடைபெற்ற விவரத்தை எழுதி வைப்பதும் உண்டு. கலசத்தை செம்மரத்தில் செய்த தண்டில் பொருத்தி விமானத்துடன் இணைக்கிறார்கள்.

❁ வசதிமிக்க ஆலயங்களில் தங்கத் தகடுகளால் பொதிக்கப்பட்ட கலசங்கள் அல்லது தங்க முலாம் பூசிய கலசங்கள் அமைக்கப்படுகின்றன. சிதம்பரம், திருவீழிமிழலை முதலிய அனேக தலங்களில் தங்கத்தால் செய்யப்பட்ட கலசங்கள் உள்ளதைக் காணலாம்.

❁ யோக சாதனையாளர்கள் கலசமானது ஆன்மாவைப் பரவெளியோடு இணைக்கும் சத்தி என்று கூறுவர். தில்லை திருச்சிற்றம்பலத்தின் மீதுள்ள ஒன்பது கலசங்களும் நவசக்திகளாகக் கருதப்படுகின்றன.

❁ ஆதியில் கருவறை மீது மட்டுமே ஸ்ரீ விமானமும் கலசங்களும் அமைக்கப்பட்டன. பின்னாளில் மண்டபங்களின் மீது வௌவால் நெற்றி முகடுகள் அமைக்கப்பட்டு அவற்றின்மீதும் தனியாகவோ வரிசையாகவோ கலசங்கள் அமைக்கப்படுகின்றன.

❁ பல்லவர்கள் காலத்தில் கலசங்களை கருங்கல்லால் செய்து அமைத்தனர். பின்னாளில் வந்தவர்கள் சுதையாலும், மரத்தாலும் கலசங்களை அமைத்தனர். இந்நாளில் உலோகத்தாலான கலசங்களே அமைக்கப்படுகின்றன.

❁ கும்பாபிஷேக விழாவின் முக்கியமான வழிபாடாக ஸ்ரீகலசவழிபாடு திகழ்கிறது. விழாவின் முன்னாளில் கலசங்கள் விமானத்தின் உச்சியில் உரிய சடங்குகளுடன் நிலைப்படுத்தப்படுகின்றன. கும்பாபிஷேகத்தின் போது ஸ்ரீ விமானத்தின் உச்சியில் விளங்கும் கலசத்திற்கு மாலை, தர்ப்பை, கொடி முதலியவற்றால் அலங்காரம் செய்யப்படுகிறது. யாகசாலையில் விமானத்திற்கென தனியாகக் கும்பம் நிறுவி வேள்விசெய்து அந்த பூரணகும்பத்தால் கலசத்திற்கு திருமுழுக்காட்டுகின்றனர். ஸ்ரீ கலசங்களுக்கு மந்திரிக்கப்பட்ட பூரணகும்பத்தால் நீராட்டுவதே கும்பாபிஷேகத்தின் முக்கியமான சடங்காகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பலவகை ஸ்ரீ விமானங்கள்

காலமும் கலையும் வளரவளர ஸ்ரீவிமானங்கள் பலவேறு வளர்ச்சிகளை அடைந்து அழகாக அமைக்கப்பட்டன. ஆதியில் சதுரம், வட்டம், நீள்வட்டம், நீள்சதுரம் ஆகிய அடிப்படைகளின் மீது சுவர்களும் வாயிலும் வைத்து அதன் மீது விமானங்கள் அமைக்கப்பட்டன. காலம் செல்லச்செல்ல சதுரமான அடிப்படைமீது வட்டம், எண்பட்டை, அறுகோணம் முதலிய விமானங்கள் அமைக்கப்பட்டன. சதுரமான தளங்களின்மீது அமையும் விமானங்களின் கிரீவம் வட்டமாகவும், எண்பட்டையாகவும் அமைக்கப்பட்டன. இவை மிஸ்ரஜாதி (கலப்படமான) விமானங்கள் என்று அழைக்கப்படுகின்றன. நடைமுறையில் நாம் காணும் சில விமானங்களைப் பற்றிய செய்திகளைச் சுருக்கமாகக் காணலாம்.

சதுர அடிப்படை மீதான சதுரவிமானம்

சதுரமான அடிப்படையைக் கொண்ட ஸ்ரீ விமானங்களே அதிக அளவில் உள்ளன. இவற்றைச் சிற்ப நூல்கள் நாகரவிமானமென்று கூறுகின்றன. இவை அடி முதல் நுனிவரை சதுரமான அமைப்பையே கொண்டவைகளாகும்.

சதுர அடிப்படை மீது வட்டமாக அமைந்தவை

இவை சதுரமான அடிப்படையின்மீது சதுர வடிவில் சுவர்கள் கட்டப்பட்டு தளமிடப்படுகிறது. அதன்மீது வட்டவடிவில் கிரீவமும், அதன் மீது குவியும் வட்டமான சிகரமும், அதன் மீது ஒற்றைக் கலசமும் அமைகின்றன. சோழ மண்டலத்திலுள்ள அனேக ஆலயங்கள் இத்தகையனவேயாகும்.

வட்ட அடிப்படை மீதான வட்டவிமானம்

வட்டவடிவ விமானங்களைச் சிற்ப நூல்கள் திராவிட விமானம் என்றழைக்கின்றன. இவற்றின் அடிப்படையைப் போலவே சுவர்களும் வட்ட வடிவில் அமைக்கப்படுகின்றன. அதன் மீது விமானங்களும் வட்ட வடிவமாக அமைக்கப்பட்டன.

வட்டமான அடித்தளத்தைக் கொண்ட கோயில்கள் தென்னகத்தில் இல்லை. கேரளாவில் இத்தகைய சிவாலயங்களை அதிகம் காணலாம்.

ஸ்ரீ குமரி மாவட்டத்திலுள்ள பன்றிக்கோடு மகாதேவர் கோயில் இரண்டடுக்கு வட்ட வடிவ விமானத்தைக் கொண்டதாகும்.



• தூங்கானை மாடம்



• சாலஹார விமானம்



• சதுர விமானம்

சதுரமான அடுக்குகளும் வட்டமான கிரீவமும் கொண்டவை

இவ்வகை விமானங்களில் சதுரமான அடுக்குகளின்மீது வட்டமான கிரீவமும் அதன்மீது குவியும் வட்டம் அல்லது எண்பட்டை வடிவில் சிகரமும் அமைகிறது. சிகரத்தில் கோடிப்பாளைகளும் நான்கு திசைகளை நோக்கியவாறு நாசித்தலைகளும் அமைகின்றன. இதனை கபாலீசுவரர் ஆலயம் முதலியவற்றில் காணலாம்.

நீள்சதுர அடிப்படை மீது அமைந்தவை

நீள்சதுரமான (செவ்வக) அடிப்படையின் மீது கட்டப்பட்ட விமானங்கள் பலவகைப்படுகின்றன. இவற்றில் குறிப்பிடத்தக்கவை சாலஹார விமானம், சபாஹார விமானம் என்பனவாகும்.

சாலஹார விமானம் : இவை ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அடுக்குகளும் உச்சியில் வண்டிக் கூரை போன்ற வளைந்த கூரையும், அதன்மீது வரிசையாக மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒற்றைப்படை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

• வட்ட விமானம். படம் உதவி : தமிழ்நாடு தொல்லியல் துறை

எண்ணிக்கையில் கலசங்களும் கூரையின் இருபுறமும் பெரிய பிரபைகளுடன் கூடிய மகாநாசியையும் கொண்டுள்ளன. அடுக்குகளில் சாலை, கும்பம், பஞ்சரம் ஆகிய அமைப்புகளும் அவற்றின் இடையிடையே தெய்வ உருவங்களும் இடபம், சிம்மம் போன்ற உருவங்களும் இடம் பெறுகின்றன. சிவாலயங்களில் அம்பிகை சந்நிதியின் மீது இத்தகைய விமானங்களே அமைக்கப்படுகின்றன.

சபாஹார விமானம் : நீண்ட சதுரத்தின் மீது செம்மைப்படுத்திய நாற்புறமும் சரிவான கூரையைக் கொண்ட ஸ்ரீவிமானங்கள் சபாஹார விமானங்களென்று அழைக்கப் படுகின்றன. இவற்றின் உச்சியில் வரிசையாக கலசங்கள் அமைகின்றன. பெரும்பாலும் நடராசர் சந்நிதி மீதே இத்தகைய விமானங்கள் அமைக்கப்படுகின்றன. இவற்றில் பஞ்சரம் கூடு, கீர்த்திமுகம் போன்றவைகளோ தெய்வத் திருவுருவங்களோ இடம் பெறுவதில்லை.

நீள்வட்ட வடிவம் கொண்டவை

நீள்வட்ட வடிவிலான சிவாலயம் ஒன்றே ஒன்று தான் தமிழகத்தில் உள்ளது. காஞ்சீபுரத்திலுள்ள ஜுரஹரேசுவரர் ஆலயமே இத்தகையதாகும். இதன் அடித்தளம் தொடங்கி சுவர்கள் விமானம் உச்சியான கபாலக்கல் வரை நீள்வட்டமாகவே அமைந்துள்ளன. உச்சியில் மூன்று கலசங்கள் உள்ளன.

அரைவட்டமும் சதுரமும் இணைந்தவை

இக்கோயில்களைச் சிற்ப நூல்கள், தூங்கானை மாடக்கோயில்கள் என்று அழைக்கின்றன. வடமொழியில் இதனை அஸ்திப்பிருஷ்டம் எனக் குறிப்பர். தொண்டை மண்டலத்திலுள்ள திருவொற்றியூர் படம் பக்கநாதர், திருக்கழுக்குன்றம் – பக்தவத்சலர் திருவலிதாயம் (பாடி) வல்லீசுவரர், திருமுல்லைவாயில் – மாசிலாமணீசுவரர், நடுநாட்டிலுள்ள பெண்ணாகடம் (பிரளயகாலேசர்) முதலிய ஆலயங்கள் இத்தகையவை ஆகும்.

இவற்றின் அடித்தளம் சதுரமும் அரைவட்டமும் கூடி லாடம் போல் ∩ அமைந்ததாகும். இதன் மீது கட்டிடமும் மேற்கூரையும் அடித்தளத்தைப் போலவே அமைகின்றன. கிரீவத்திற்கு மேலுள்ள சிகரத்தை வட்டமாக அமைத்து முன்புறத்தில் பெரிய கீர்த்தி முகத்தை அமைத்துள்ளனர். கீர்த்தி முகத்தின் மையத்தில் சிவனும் உமையும் வீற்றிருக்கின்றனர்.

ஆதியில் எளிய வகையில் அமைந்திருந்த ஆலயங்கள் கலைஞர்களின் கைவண்ணத்தில் பல்வேறு புதுமைகளைப் பெற்றன. கலைஞர்களின் உள்ளத்தில் வீற்றிருந்து செம்மையாக இவற்றை விளக்கமுறச் செய்து வருபவன் சிவபெருமானே என்பது ஞானிகளின் கருத்தாகும்.

இந்நாளில் பலநாடுகளில் உள்ள கலைப் பணிகளைப் பின்பற்றியும் தென்னிந்திய மரபுகளுக்கு மாறாமலும் புதிய விமானங்கள் கட்டப்படுகின்றன.

மாமல்லபுரத்து ஐவகை கோயில்கள்

மாமல்லபுரத்தில் இந்நாளில் பஞ்சபாண்டவர் இரதங்கள் என்றழைக்கப் படும் ஐந்து கோயில்களைக் கொண்ட தொகுதி இருக்கிறது. இதில் சதுர அடிப்படையில் அமைந்தவை மூன்றும், நீள்சதுர அடிப்படை கொண்டது ஒன்றும், தூங்கானை மாட வடிவம் கொண்டது ஒன்றும் ஆகும். இதிலுள்ள முதல் சதுரக் கோயிலின் மேற்கூரை குடிசை அமைப்பிலானது. இது துர்க்கைக்கென அமைக்கப்பட்டதாகும். இரண்டாவது சதுர அமைப்புக் கோயிலின் மீதுள்ள விமானம் நாற்கோண வடிவானது. இது முருகப் பெருமானுக்குரியது. மூன்றாவதான கோயிலின் மேற்கூரை எண்பட்டை சிகரத்தைக் கொண்டதாகும். இது சிவபெருமானுக்குரிய ஆலயமாகும். நீள் சதுரமான அடிப்படை கொண்ட கோயிலின் மேற்கூரை வண்டிக்கூரை போன்றது. இது திருமாலுக்குரிய ஆலயமாகும். ஐந்தாவதான தூங்கானை மாடக் கோயில் விநாயகருக்கு உரியதாகும். இவை அந்நாளில் அமைக்கப்பட்ட ஆலயங்களுக்கான மாதிரிக் கோயில்களாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கருங்கல்லால் அமைந்த ஸ்ரீவிமானங்கள்

ஆதியில் ஸ்ரீவிமானங்கள் மண்ணாலான சுவர்களின் மீது மரத்தால் கட்டப்பட்டன. பல்லவர்கள் காலத்திற்குப் பிறகு ஸ்ரீவிமானங்கள் கருங்கல்லால் அமைக்கப்பட்டன. சோழர்கள் அனேக ஸ்ரீவிமானங் களை அடி முதல் கலசம் வரை கருங்கல்லால் அமைத் தனர். காஞ்சீபுரத்திலுள்ள சொக்கீசர், கணியூர் சோழீசர், தஞ்சைப் பிரகதீசுவரர், குடந்தை நாகேசுவரம், திருஒற் றியூர் படம்பக்கநாதர், திருவானைக்காவல் ஜம்புகே சுவரர் முதலான அனேக ஆலயங்கள் முழுவதும் கருங்கல்லால் கட்டப்பட்டவைகளாகும்.

அடிமுதல் நுனிவரை முழுவதுமாக கருங்கல்லால் கட்டப்பட்டுள்ள கலைச்சிறப்பு மிக்க மிகப்பெரிய விமானம் தஞ்சைப் பெரியகோயில் விமானமாகும். இதன் உச்சியில் அமைந்துள்ள சிகரம் எண்பது டன் எடையுடை யதாகும். உச்சியில் நான்கு மூலைகளிலும் அமைக்கப்பட் டுள்ள நந்திகள் ஒவ்வொன்றும் கருங்கல்லால் நுண்ணியவேலைப்பாடுகளுடன் செய்யப்பட்டுள்ளன.

திரிபுவனம் கம்பகரேசுவரர் ஆலயம், கங்கை கொண்ட சோழபுரம் சோழீசுவரர் ஆலயம், தாராசுரம் ஐராவதீசுவரர் ஆலயம் முதலானவையும் கருங்கல்லால் கட்டப்பட்டு மேலே சுதையால் அழகுபடுத்தப்பட்டுள் ளன. இவை சோழர் கலைத்திறனுக்கும் கட்டிடக்கலைக் கும் எடுத்துக்காட்டுகளாக அமைந்துள்ளன.

❁ ஆலயங்களுக்கு ஆதியில் "தளி" என்ற பெயர் வழங்கி வந்தது. கருங்கல்லால் கட்டப்பட் பின்னரும் திருவாரூரில் உள்ள ஒரு ஆலயம் "ஆரூர் பறவையுண் மண்டளி" என்று அழைக்கப்பட்டதை தேவாரத்தால் அறிகிறோம்.

❁ ஆலயங்கள் மண்ணால் கட்டப்பட்டிருந்த போது மண்தளி என்று அழைக்கப்பட்டன. பின்னாளில் அவை கருங்கல்லால் மாற்றிக் கட்டப்பட்டபோது கற்றளி என்று பெயர் பெற்றன. கோயில்களைக் கருங்கல்லால் அமைக்கும் பணியில் ஈடுபட்ட ஒருவர் தன்னை கற்றளிப்பிச்சன் என்று அழைத்துக் கொண்டதைத் திருவாவடுதுறைக் கல்வெட்டுக்களால் அறிய முடிகிறது.

❁ மகா சிவபக்தரான கண்டராதித்த சோழரின் மனைவி செம்பியன்மாதேவியார் அனேக ஆலயங்க ளைக்கற்றளியாக மாற்றினார். அவர் நல்லம் (கோனேரி ராஜபுரம்) உமாமகேசுவரர் ஆலயத்தின் ஸ்ரீவிமானத்தை கற்றளியாக மாற்றியதுடன் தன் கணவர் சிவபூசை செய்யும் கோலத்தையும் அதில் பொறித்து வைத்துள்ளதைக் காண்கிறோம். இதனை இக்கோயிலி லுள்ள ஸ்வஸ்திஸ்ரீ கண்டராதித்த தேவர் தேவியார்



★ சொக்கீசர் கோயில் - காஞ்சிபுரம்

மாதேவ அடிகளான ஸ்ரீ செம்பியன் மாதேவியார் ...... தம்முடையார் ஸ்ரீ கண்டராதித்த தேவர் திருநாமத்தால் திருநல்லமுடையாருக்கு திருக்கற் றளி எழுந்தருளிவித்து திருக்கற்றளியிலே திருநல் லம் உடையாரைத் திருவடி தொழுகின்றாராக எழுந்தருளிவைத்த ஸ்ரீ கண்டராதித்த தேவர் இவர் எனும் கல்வெட்டால் அறிகிறோம். கல்வெட்டின் கீழ் சிவலிங்கத்தைத் தொழுபவராகக் கண்டராதித்தரின் திருஉருவமும் அமைக்கப்பட்டுள்ளது.

❁ கற்றளியில் எழுந்தருளியுள்ள சிவபெரு மானை கற்றளி மகாதேவர், கற்றளி பட்டாரகர், கற்றளி ஆழ்வார் என்பன போன்ற பெயர்களால் அழைத்தனர்.

❁ கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் நகரத்தார்கள் (நாட்டுக்கோட்டை செட்டியார்கள்) அனேக செங்கல்லா லான ஆலயங்களை கற்கோயில்களாக மாற்றிச் சைவப் பணி செய்துள்ளனர். காளையார் கோயில், நகரத்தார் களின் ஒன்பது கோயில்கள், திருவாடானை முதலிய அனேக ஆலயங்கள், செட்டிநாட்டுக் கலைஞர்களின் கல்லைப் பேசவைக்கும் அரிய கலைத் திறனுக்குச் சான்றாக அமைந்துள்ளன.

❁ சுந்தரர் அவதரித்த திருத்தலமான திருநாவ லூரில் அமைந்திருக்கும் ஆலயம் திருத்தொண்டீச்சரம் என்று கல்வெட்டுக்களில் குறிக்கப்படுகின்றது. இதனை முதலாம் பராந்தகனின் மகனான இராஜாதித்தன் கற்கோயிலாக மாற்றி இராஜாதித்தேசுவரம் என்று பெயர் சூட்டினான். என்றாலும் கல்வெட்டுக்களில் பழைய பெயரையும் சேர்த்து திருத்தொண்டீச்சரமான இராஜாதித் தேசுவரம் என்று குறித்துள்ளான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தங்கவிமானங்கள்

•சிதம்பரம் பொற்கோயில் நன்றி தமிழ்நாடு தொல்லியல்துறை

ஆதியில் விமானத்தின் மேற்கூரை மரத்தால் அமைக்கப்பட்டிருந்தன. இந்தக் கூரையை மழை வெய்யில் முதலானவற்றிலிருந்து காக்க அதன் மீது உலோகத் தகடுகளைப் போர்த்தினர். பின்னாளில் ஸ்ரீவிமானத்தின் மேல்தளங்கள் கருங்கல்லாலும். சுதையாலும் அமைக்கப்பட்டபோதும் அவற்றின் மீதும் நுண்மையாக கலைநுணுக்கத்துடன் செய்யப்பட்ட உலோகத் தகடுகள் போர்த்தப்பட்டன. மாமன்னர்கள் ஸ்ரீவிமானங்களை பொன்னால் மெழுகினர். மூன்றாம் குலோத்துங்கன், காஞ்சி ஏகாம்பரேசம், மதுரை ஆல வாய் ஆலயம், தாராசுரம் ராஜராஜேஸ்வரம், திருவாரூர் வன்மீகநாதர் ஆலயம் ஆகியவற்றை பொன்மயமாக் கினான் என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன. திருவீழிமிழலை ஆலயத்தை விஜயராஜேந்திர தேவரின் அணுக்கியார் பல்லவன் பட்டாளி நங்கை என்பவர் பொன்னால் வேய்ந்தார் என்று அவ்வூர்க் கல்வெட்டு கூறுகின்றது. இன்னும் அனேக ஆலயங்கள் பொன்னால் மெழுகப்பட்டதை வரலாறு கூறுகிறது. காலப்போக்கில் இவை அந்நியர் படையெடுப்புக் களாலும் இயற்கை சீற்றத்தாலும் அழிந்தன. என்றாலும் தொடர்ந்து வந்த மன்னர்களும் அன்பர்களும் பழைய வற்றை புதுக்கியதுடன் சில விமானங்களை பொன்னால் பொதிந்தனர்.

மாறவர்மன் பராக்கிரம பாண்டியன் ஆட்சிக் காலத்தில் நரலோக வீரன் எனும் சிற்றரசன் தில்லை சிற்றம்பலத்திற்குப் பொன் வேய்ந்ததுடன் அனேக திருப்பணிகளைச் செய்தான். இதையொட்டி அவன் பொற்கோயில் தம்பிரான் என்று அழைக்கப்படுகிறான். இப்போது தில்லையில் பொன்தகடுகளால் பொதியப் பட்டு பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீவிமானம் இவனுடைய திருப்பணியேயாகும். திருவரங்கத்திலுள்ள பிரணவாகார பொன்விமானமும் சோழர் கலைப் பணியேயாகும்.

❁ 19-20ஆம் நூற்றாண்டுகளில் அனேக தங்கவிமானங்கள் அமைக்கப்பட்டன. புதுவை மணக்குளவிநாயகர், பழனி தண்டாயுதபாணி, காஞ்சீ புரம் காமாட்சியம்மன் முதலான ஆலயங்களின் ஸ்ரீவிமானங்களின் மீது அண்மைக்காலத்தில் தங்கத் தகடுகள் அமைக்கப்பட்டு விமானங்கள் பொலிவுடன் விளங்குகின்றன.

❁ காசியிலுள்ள, ஸ்ரீவிசுவநாதர் ஆலயத்தை இராஜா மான்சிங் பொன்னால் அமைத்துள்ளார்.

தேர் வடிவிலான ஸ்ரீவிமானங்கள்

புராணங்களில் வானத்தில் பறக்கும் தேர்களைப் பற்றிய அனேக குறிப்புகளைக் காண்கிறோம். இவை புஷ்பக விமானம், கந்தர்வ விமானம், தேவ விமானம் எனப் பலவாகும். தேவேந்திரன் தனது புஷ்பக விமானமான தேரை பூமியில் கொண்டுவந்து ஆலயமாக அமைத்தான் என்று, மேலைக்கடம்பூர் தலபுராணம் கூறுகின்றது. இங்குள்ள ஸ்ரீவிமானம் தேர்வடிவில் உள்ளது. இத்தகைய ஆலயங்களைச் சிற்பநூலார் கரக்கோயில் என்று அழைக்கின்றனர்.

மேலைக்கடம்பூர் அமிர்தகடேசர் ஆலயத்தில் ஸ்ரீவிமானத்தின் இருபுறமும் இரண்டு சக்கரங்கள் வீதம் நான்கு சக்கரங்கள் உள்ளன. தேரை இழுக்கும் வகையில் இரண்டு கலைச்சிறப்பு மிக்க குதிரைச் சிற்பங்களும் உள்ளன. விமானத் தின் அடிப்படை, நடுப்பகுதி, மேல் தளங்கள் ஆகிய மூன்று பகுதிகளும் மிகமிக நுண்மையான கலை வேலைப்பாடுகளுடன் திகழ்கின்றன. 32 யாளிகள் தாங்குவது போல் அமைக்கப்பட்டுள்ளதும் இதன் தனிச் சிறப்பாகும்.

கடம்பூரில் மட்டுமே ஸ்ரீவிமானம் தேர்வடிவில் அமைக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம். குடந்தை நாகநாத சுவாமி ஆலயத்தில் நடராசர் சந்நிதி சென்னை நங்கநல்லூர் அர்த்தநாரீசுவரர் ஆலய துர்க்கை சந்நிதி முதலிய சந்நிதிகள் தேர் வடிவில் அமைந்துள்ளன. தேர் வடிவில் அமைந்துள்ள மண்டபங்களின் சிறப்பை பக்கம் 1242ல் காண்க. இவற்றில் அமைந்துள்ள சக்கரங்களும், அதன் ஆரக்கால்களும், இழுத்துச் செல்லும் நேர்த்தியான குதிரைகளும் தென்னிந்திய சிற்பக்கலைஞர்களின் அதியற்புதமான கலைப்படைப்புக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ மண்டபங்கள்

ஆலயத்தின் முக்கியமான அங்கங்களாகத் திகழ் பவை மண்டபங்களாகும். கருவறைக்கு முன்னுள்ள கட்டிடம் அர்த்த மண்டபம் என்றும், அதையடுத்து விசாலமாக அமைந்த பகுதி மகாமண்டபம் என்றும் அழைக்கப்படுகின்றன. அனைத்து சிவாலயங்களிலும் குறைந்தபட்சம் இந்த இருமண்டபங்கள் இருக்கின்றன.

ஆகமங்கள், சிவாலயங்களில் இருக்க வேண்டிய பலவகையான மண்டபங்களைக் குறிப்பிடுகின்றன. அவை அனைத்தையும் அமைக்க முடியாவிட்டாலும் அவற்றில் சிலவற்றையாவது அமைத்துள்ளனர்.

"மண்டுதல்" என்றால் நிறைந்திருத்தல் என்பது பொருள் அன்பர்கள் நிறைந்துநின்று தொழுமிடமாகவும் வேத, திருமுறை ஒலிகளும் இன்னிசைக் கருவிகளின் இனிய ஓசைகளும் நிறைந்திருக்கும் இடமாக இருப்ப தாலும் இவை "மண்டபங்கள்" என்று அழைக்கப்படு கின்றன என்பர்.

மண்டபங்களுக்கு, அவற்றில் நடைபெறும் நிகழ்ச் சிகளையொட்டி அலங்கார மண்டபம், அபிஷேக மண்ட பம், வாத்திய மண்டபம் என்றும், எழுந்தருளும் காலத்தை ஒட்டி, பௌர்ணமி மண்டபம், அமாவாசை மண்டபம், கிருத்திகை மண்டபம் என்றும் கால்களின் எண்ணிக் கையையொட்டி நான்கு கால், எட்டு கால்........ நூற்றுக் கால், ஆயிரங்கால் மண்டபங்கள் என்றும் அதைக்கட்டிய மன்னர்களின் பெயரால் இராஜநாரா யணன் மண்டபம், இராஜேந்திர சோழ மண்டபம் என்றும் பலவாறு பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.

சில மண்டபங்கள் தேர் போன்று பக்கவாட்டில் சக்கரங்களுடன், அதை இழுக்கும் குதிரை, யானை ஆகியவற்றையும் கொண்டுள்ளன.

மண்டபங்களின் தூண்களில் கண்ணைக் கவரும் சிற்பங்கள் கதைப்போக்கில் அமைக்கப்பட்டுள்ளன. மண்டப விதானங்களில் தாமரை மலர், நவக்கிரகங்கள், விசுவத்தேவர்கள், அஷ்டசத்திகள் ராசிகள், அட்டதிக் பாலகர்கள் முதலிய திருவுருவங்கள், வடிவமைக்கப் பட்டுள்ளன. பெரிய பெரிய பூக்கள், தல வரலாற்றுக் காட்சிகள், புராணக் காட்சிகள் ஆகியனவும் ஓவியங்க ளாகத் தீட்டப்பட்டிருப்பதையும் காணலாம்.

சில தலங்களில், மண்டபத் தூண்களில் அமைந் துள்ள தெய்வ உருவங்கள் அளப்பறிய சக்தி பெற் றுள்ளன. அவற்றிற்குத் தினசரி வழிபாடு செய்யப்படுவ துடன் பிரார்த்தனை செய்து கொண்டு காணிக்கைகளும் செலுத்தப்படுகின்றன.

முன்நாளில் ஊர் வழக்குகள், கோயில் வழக்குகள் முதலியவற்றைக் கோயில் மண்டபங்களிலேயே கூடியி ருந்து விசாரித்து தீர்ப்பு வழங்கப்பட்டதைக் கல்வெட்டு கள் கூறுகின்றன. இவ்வகையில் இவை அறங்கூறும் அம்பலங்களாகவுமிருந்து வந்துள்ளன. திருவெண்ணை நல்லூரில் "வழக்குவென்ற அம்பலம்" எனும் பெயரில் மண்டபம் இருப்பதைக் காண்கிறோம். இப்படிப் பல்வேறு சிறப்புகளைப் பெற்றுத் திருக்கோயிலின் முக்கியமான அங்கமாகத் திகழும் மண்டபங்களைப் பற்றிய செய்திகள் இப்பகுதியில் விவரிக்கப்படுகின்றன.

பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து புவனி யெல்லாம் விளங்க, அன்னநடை மடவாளான உமை யோடு வீற்றிருக்கும் சிவபெருமான் அன்பர்களுக்குச் சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வை அளித்தருள வேண்டுமென்று அவர்தம் பொன்னார் திருவடிகளைப் போற்றி வணங்குகின்றோம்.

– சிவசுந்தரி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆகமங்கள் கூறும் மண்டபங்கள்

சிவாகமங்களிலும் அதையொட்டி எழுந்த பூஜாபத்ததி நூல்களிலும் அனேக வகையான மண்டபங்கள் சொல்லப்பட்டுள்ளன. சிறப்பு வழிபாடுகளில் தீபாராதனையின்போது சொல்லப்படும் ஆசீர்வாதத்தில் அனேக மண்டபங்களின் பெயர்கள் வரிசையாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

இவை 1) ஸ்நபன மண்டபம், 2) கேய மண்டபம், 3) வாத்ய மண்டபம், 4) முக மண்டபம், 5) சோபான மண்டபம், 6) கோபுரத்துவாரசாலா மண்டபம், 7) ஆஸ்தான மண்டபம், 8) யாகசாலை மண்டபம், 9) புஷ்ப மண்டபம், 10) பூஜா மண்டபம், 11) விஜய மண்டபம், 12) பிரதட்சண மண்டபம், 13) உத்யான மண்டபம், 14) ஸ்ரீவல்லி மண்டபம், 15) ஸ்ரீசூர்ண மண்டபம், 16) கிருஷ்ணகந்த மண்டபம், 17) ஜலக்கிரீடா மண்டபம், 18) அறுபத்துநான்கு கால் மண்டபம், 19) நூற்றுக் கால் மண்டபம், 20) ஆயிரங்கால் மண்டபம், 21) கந்த மண்டபம், 22) சுவர்ண மண்டபம், 23) அபிஷேக மண்டபம், 24) அலங்கார மண்டபம், 25) வசந்த மண்டபம், 26) உபசார மண்டபம், 27) டோளோஹார (ஊஞ்சல்) மண்டபம், 28) அத்யயனமண்டபம், 29) ஆகம மண்டபம், 30) புராண மண்டபம், 31) தீக்ஷா மண்டபம், 32) வீணா மண்டபம், 33) துவஜாரோகண மண்டபம், 34) ரதாரோகண மண்டபம் என்பனவாகும். மேலும், மன்னர்களின் அன்பினாலும் ஆதரவினாலும் அனேக விதமான மண்டபங்கள் கட்டப்பட்டன. இவற்றிற்கு அவற்றின் உபயோகத்தையொட்டி பல்வேறு பெயர்கள் வழங்குகின்றன. இவற்றின் விளக்கங்களை இங்குக் காணலாம்.

1. ஸ்நபன மண்டபம்

நாள் வழிபாட்டிற்காகப் புனிதநீரை ஆறு, குளம் முதலியவற்றிலிருந்து எடுத்துவந்து பூரணகும்பத்தில் நிறைத்து நித்தியாக்கினியுடன் வழிபடும் இடம் ஸ்நபன மண்டபமாகும். இது பூரணகும்ப (நீர்) வடிவில் இறைவனை வழிபடுமிடமாகும்.

2. கேய மண்டபம்

கேயம் என்பதற்கு வாய்ப்பாட்டு (அ) கீதம்பாடுதல் என்பது பொருள். இறைவனின் புகழை இன்னிசையுடன் பாடும் மண்டபம் கேய மண்டபம் எனப்பட்டது.

3. வாத்ய மண்டபம்

தினமும் வழிபாட்டின்போது மங்கள வாத்தியங்கள் முழங்கப்படும். வாத்திய ஒலிகளால் தேவர்கள் மகிழ்ந்து அங்கு கூடுகின்றனர் என்று புராணங்களும் ஆகமங்களும் கூறுகின்றன. வாத்யங்களை (இசைக் கருவிகளை) அதற்குரிய கலைஞர்கள் வீற்றிருந்து இசைக்குமிடமே வாத்ய மண்டபம் ஆகும்.

திருக்கழுக்குன்றம் பக்தவத்ஸலர் ஆலயத்தில் சர்வவாத்ய மண்டபம் உள்ளது. இதில் பெருந்திருவிழாவின் போது அனைத்து விதமான வாத்யங்களும் இசைக்கப்பட்டுவந்தன.

4. முக மண்டபம்

ஆலயத்தின் முகப்பில் இருக்கும் மண்டபம், முக மண்டபம் எனப்படும். சுவாமி புறப்படும் முன் இந்த இடத்திலிருந்து கட்டியம் கூறப்படும்.

5. சோபான மண்டபம்

இது இறைவனுக்குப் பக்தர்கள் மங்கல மொழிகளைக் கூறி, தமது விருப்பங்களை நிறைவேற்றித் தருமாறு கேட்கும் மண்டபமாகும். மங்கலமொழிகளை வடமொழியில் சோபானம் என்பர். சோபானத்தின் போது பாடப்படும் பாடல்கள் தனி இசையுடன் உள்ளன.

6. கோபுரத் துவாரசாலா மண்டபம்

கோபுரத்திற்கு முன்பாக அதனுடன் இணைந்த நிலையில் இருப்பதுடன், அன்பர்கள் கூடி நின்று கோபூஜை, கஜபூஜை இவற்றைக் காணுமிடமாகும்.

7. ஆஸ்தான மண்டபம்

இறைவன் மகாராஜாவாகக் கொலுவீற்றிருந்து, அன்பர்களின் பலவகையான உபசாரங்களை ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு அருள்புரியுமிடமாகும். இதனைக் கொலு மண்டபம், தர்பார் மண்டபம் எனவும் அழைப்பர். தியாகராஜருக்கு முன்னுள்ள மண்டபம் தர்பார் மண்டபமாகும்.

8. யாகசாலா மண்டபம்

தினமும் இறைவனை அக்னி வடிவில் வழிபடும் இடமே யாகசாலா மண்டபம் ஆகும். இது ஆலயத்தின் வடகிழக்கு முனையில் மேற்கு நோக்கியவாறு அமையும். தினமும் வேள்வி செய்ய முடியாத நிலையில் பெருந்திருவிழாவின் பத்துநாட்களிலும் இங்கு வேள்வி செய்யப்பட்டு சிறப்பு வழிபாடுகள் நடத்தப்படுகிறது. தென்னகத்திலுள்ள பெரும்பான்மையான ஆலயங்களில் யாகசாலை மண்டபம் உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

9. புஷ்ப மண்டபம்

நந்தவனத்திலிருந்து மலர்களைப் பறித்துவந்து சுத்தம் செய்து மாலைகளாகக் கட்டுமிடமே புஷ்ப மண்டபமாகும். பெரியபுராணத்தில் இம்மண்டபம் "திருப்பூமண்டபம்" என்று குறிக்கப்பட்டுள்ளது. சிலர் புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்ட மண்டபம் என்றும் கூறுவர்.

10. பூஜா மண்டபம்

இது சிவாசார்யர்கள் ஆத்மலிங்க பூஜை செய்வ தற்கும், உடையவரை எழுந்தருளிவைத்து பூஜை செய்வ தற்கும் உரிய இடமாகும்.

11. விஜய மண்டபம்

இது சிவபெருமானின் வீரவெற்றிகளை அன்பர் களுக்கு எடுத்துக்கூறும் இடமாகும். இதிலிருந்து கொண்டு பெருமானுக்கு வெற்றி உண்டாகுக என்று வாழ்த்துக் களைக் கூறுவர்.

12. பிரதட்சண மண்டபம்

அன்பர்கள் வெய்யில், மழையால் துன்புறாமல் ஆலயத்தை வலம்வர அமைந்தவை பிரதட்சண மண்ட பங்களாகும். இதில் ஆங்காங்கு தெய்வத் திருவுருவங் கள் அமைத்து வழிபடப்படுகின்றன.

13. உத்யான மண்டபம்

உத்யானம் என்பது அழகிய பூஞ்சோலையாகும். பூஞ்சோலைக்கு நடுவில் பெருமான் குளிர்ச்சியையும் பல்வேறு பூக்களின் நறுமணத்தையும் அனுபவித்தவாறு வீற்றிருக்குமிடமாகும்.

14. ஸ்ரீவல்லி மண்டபம்

வல்லி என்பதற்கு கொடி என்பது பொருள். முல்லை, மல்லிகை, சண்பகம், கொகுடி முதலான பூங்கொடிகள் சூழ்ந்து படர்ந்துள்ள, மனதிற்கு இனிமையான மண்டபமே வல்லி மண்டபமாகும்.

15. ஸ்ரீசூர்ண மண்டபம்

இது இறைவன் பொன்வண்ணமான வாசனை கொண்ட பொடிகளை உடலில் பூசிக்கொண்டும் பன்னீரைத் தெளித்துக் கொண்டும் மகிழ்ச்சியில் திளைக்கும் இடமாகும். இங்கு உரலும் உலக்கையும் இருக்கும். கோரைக் கிழங்கு, கிச்சிலிக் கிழங்கு முதலான வாசனைப் பொருட்களை அன்பர்கள் இதில் இட்டு இடிப்பர். இதனைத் தமிழ் இலக்கியங்கள் பொற்சுண்ண மிடித்தல் என்று கூறுகின்றன. பெருந்திருவிழாவின் ஓர் அங்கமாக இதில் ஸ்ரீ சூர்ணோற்சவம் நடைபெறுகிறது.

★ முக மண்டபம் திருவீழிமிழலை

16. கிருஷ்ணகந்த மண்டபம்

கிருஷ்ணகந்தம் என்பது கருஞ்சாந்து ஆகும். சந்தனச் சருகுகளுடன் நறுமணப் பொருட்களை இட்டு எரித்த கரியுடன் புனுகு, சவ்வாது, குங்குமப்பூ ஆகிய வற்றைக் குழைத்து இதனைத் தயாரிக்கின்றனர். திருவாரூர்ப் பெருமானுக்கு பதினெட்டு மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட கிருஷ்ணகந்தம் அணிவிப்பது தனிச் சிறப்புடன் போற்றப்படுகிறது.

17. ஜலக்கிரீடா மண்டபம்

இது ஜலத்தின் மத்தியில் மேடை அமைத்து இறைவனை இருத்தி வழிபடும் இடமாகும். இத்தகைய மண்டபம் வசந்த மண்டபம் எனும் பெயரில் சுசீந்தி ரத்தில் உள்ளது.

18. அறுபத்துநான்குகால் மண்டபம் (பக் 1245)

19. நூற்றுக்கால் மண்டபம் (பார்க்க பக் 1245)

20. ஆயிரங்கால் மண்டபம் (பார்க்க பக் 1245)

21. சுகந்த மண்டபம்

கந்தம் என்பது வாசனைப் பொருட்களைக் கலந்து அரைத்த விழுதாகும். சந்தனம், கோரோசனை முதலிய வற்றைச் சந்தனக்கல்லில் இட்டு பன்னீர்விட்டு அரைத்துத் தயாரிக்கப்பட்டதாகும். சுவாமிக்கு மெல்லிய ஆடை அணிவித்து, கந்தக் குழம்பால் அபிஷேகம் செய்து, மருக்கொழுந்து, ஷெண்பகம், மல்லி, முல்லை மலர்களால் அலங்கரித்து வழிபடுவர். இதற்குரிய மண்ட பம் கந்த மண்டபம், கந்தகுடி மண்டபம் எனப் பலவாறு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அழைக்கப்படுகின்றது. இதனை பூஞ்சோலைகளுக்கு நடுவே அமைப்பர். இதன் நாற்புறமும் தூபக்கால்கள் அமைக்கப்பட்டு அதில் நறுமணப் பொருட்களை இட்டுப் புகைக்கின்றனர்.

22. சுவர்ண மண்டபம்

பொன்னால் செய்யப்பட்டு நவமணிகளால் இழைக்கப்பட்டு முத்துமாலைத் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ள இடமே சுவர்ண மண்டபமாகும். இந்த இடத்தில் சுவாமியை அமர்த்தி தங்கக் கவசம் அணிவித்து. நவமணிகள் இழைத்த ஆபரணங்களால் அலங்கரித்து தீபாராதனை செய்வர். பொற்காசுகள், பொன்னால் செய்யப்பட்ட பூக்கள் இவற்றால் சுவர்ணாபி ஷேகமும் செய்வர்.

23. அபிஷேக மண்டபம்

இது பால், பன்னீர், பஞ்சகவ்யம், இளநீர், பழரசங் கள் முதலிய பொருட்களால் இறைவனை நீராட்டுமிடமா கும். இதன் நடுவில் அபிஷேக மேடையும் அதிலிருந்து நீர் வெளியேறக் கோமுகமும் அமைக்கப்பட்டிருக்கும். பெரிய அபிஷேகப் பாத்திரங்களை இங்கு வைத்திருப்பர்.

24. அலங்கார மண்டபம்

திருவிழா நாட்களில் சிவபெருமானையும் பரிவார தேவர்களையும் அபிஷேகம் செய்து அணிமணி ஆபரணங்களாலும் வண்ண மலர்மாலைக ளாலும் அலங்கரித்துப் பெரிய அளவில் தீபாராதனை செய்வர். இதனை ஏராளமான அன்பர்கள் கண்டுகளிப் பர். இதன் பிறகே சுவாமி வீதியுலா காண்பார். இதற்கெ னப் பெரிய அளவில் அமைக்கப்பட்ட மண்டபமாத லின் இது அலங்கார மண்டபம் என்றழைக்கப்படுகின் றது.

இது பெரும்பாலும் ஆலயத்தின் தென்மேற்கு முனையில் கிழக்குநோக்கியவாறு சற்று உயரமான அளவில் விசாலமாக அமைக்கப்படும். திருவண்ணா மலை, அச்சிறுபாக்கம், திருமழிசை, வேலூர் முதலிய தலங்களில் அமைந்துள்ள அலங்கார மண்டபங்கள் தனிச்சிறப்பு வாய்ந்தவை. இந்த மண்டபத்தின் மேற்குப் பகுதியில் உயரமான மேடையமைத்து அதன்மீது உலா மூர்த்திகளை எழுந்தருளச் செய்கின்றனர். இது அன்பர் களும், பக்தர்களும் இறைவனைத் தடையின்றிக் கண் ணாரக் கண்டுகளிக்க ஏதுவாக அமைக்கப்பட்டுள்ளது.

திருவண்ணாமலையிலுள்ள அலங்கார மண்டபத் தில் விதானத்திலும் சுவர்களிலும் தல புராண வரலாற்றை விளக்கும் வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன.

திருக்கழுக்குன்றம் பக்தவத்சலேசுவரர் ஆலயத் தில் வெளிப்பிராகாரத்தின் தென்மேற்கு முனையில் பெரிய அளவிலான அலங்கார மண்டபமும், அதனுள் சுவாமி எழுந்தருள்வதற்கான பீடமும் உள்ளன. இந்த

மண்டபம் நிறைவுபெற இன்னுயிர் தந்த இளவெண்மதி சூடினான்

நடுநாட்டுப் பாடல்பெற்ற திருத்தலம் அறையணிநல்லூர் ஆகும். இது இந்நாளில் அரகண்டநல்லூர் என்று அழைக்கப்படுகின்றது. இங்கு எழுந்தருளியுள்ள பெருமான் அறையணிநாதேசுவரர் என்றும் அம்பிகை அருள்நாயகி என்றும் அழைக்கப்படுகின்றனர்.

இக்கோயிலின் வெளிப்பிராகாரத்தில் உள்ள மண்டபம் பணி நிறைவுறாமல் தடைப்பட்டு இருந்தது. மனையடி சாத்திர வல்லுனர்கள் சோதித்து, இதன் அமைப்பில் குற்றம் உள்ளதென்றும், எவராவது தன் உயிரைத் தருவதாக உறுதியளித்தால் இந்த மண்டபம் தடையின்றி கட்டிமுடிக்கப்படும் என்றும், பணி நிறைவு பெற்றதும், அவர் தான் உறுதியளித்தபடி அவர் தன் தலையை வெட்டி உயிரை அளிக்கவேண்டும் என்றும் கூறினர்.

இக்கோயிலில் பணிபுரிந்து வந்த "பொன்னாண்டை" என்ற தேவரடியாளின் மகனான "இளவெண்மதி சூடினான்" என்பான், இந்த மண்டபம் நிறைவுபெறத் தன்னுயிரைத் தருவதாக உறுதியளித்தான். மண்டபமும் கட்டிமுடிக்கப்பட்டது. அவன் தன் வாக்குறுதியின்படி தன் தலையைத் தானே வெட்டி வீரபலியாக அளித்தான்.

இந்நிகழ்ச்சி மாறவர்மன் திரிபுவனச் சக்ரவர்த்தியான சுந்தரபாண்டிய தேவனின் பத்தாவது ஆட்சியாண்டில் நடந்ததாகும். ஊரார்கள் இளவெண்மதி சூடினானின் வீரம் செறிந்த பக்தியைப் பாராட்டி அவன் சந்ததியார்க்கு உதிரப் பட்டியாக ஆயிரம்குழி நிலத்தை அளித்தனர். கோயிலுக்கு முன்னால் இளவெண்மதி சூடினான் தன் தலையை அரிந்துகொடுக்கும் நிலையில் சாவாரக்கல்லை நாட்டி அதற்குத் தொடர்ந்து வழிபாடு நடைபெற ஏற்பாடு செய்தனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பீடம் ஆமை தாங்குவதுபோல் அமைக்கப்பட்டுள்ளதால், இதனை ஆமை மண்டபம் என்றழைக்கின்றனர்.

சில தலங்களில் அலங்கார மண்டபத்திலேயே சுவாமியின் திருக்கல்யாண வைபவமும் நடப்பதால் இம்மண்டபத்தைக் கல்யாண மண்டபம் என்றும் அழைக்கின்றனர். வேலூர் ஜலகண்டேசுவரர் ஆலயக் கல்யாண மண்டபம் உலகப்புகழ் பெற்றதாகும்.

25. வசந்த மண்டபம்

இது ஆலயத்தின் வடகிழக்குப் பகுதியில் தென்றல்வீசும் வகையில் தெற்கு நோக்கிக் கட்டப்பட்ட விசாலமான மண்டபமாகும். வசந்த காலத்தில் பெருமான் தனது பரிவாரங்களுடன் இங்கே எழுந்தருளி அன்பர்களுக்கு அருள்பாலிக்கின்றார். அனைத்து தியாகராஜத் தலங்களிலும் வசந்த மண்டபம் தனிச் சிறப்புடன் அமைந்துள்ளது.

26. உபசார மண்டபம்

சுவாமியை உயர்ந்த பீடத்தில் அமர்த்தி, பாத்தியம், அர்க்கியம், ஆசமனம் முதலானவற்றை அளித்து பழங்கள் பட்சணங்களைப் படைத்து, கவரி, விசிறி, ஆலவட்டம் முதலியவற்றால் வீசி மந்திரங்களால் உபசரிக்கின்ற இடமே உபசார மண்டபம் ஆகும். உபசாரம் செய்த பிறகு பெரிய தீபாராதனை செய்யப்படும்.

27. ஊஞ்சல் ம்ண்டபம்

நித்திய பூசையின் ஓர் அங்கம், பெருமானை ஊஞ்சலில் அமர்த்திப் பாடி ஆலம் சுற்றுவதாகும். இதனைத் தமிழில் பொற்றாப்பு என்பர். ஆலயங்களில் வசந்த மண்டபத்திலேயே ஊஞ்சல் அமைந்திருக்கிறது. இதில் பெருமானையும் உமாதேவியையும் அமர்த்தி ஊஞ்சலாட்டுவர். தொண்டை நாட்டு தியாகராஜத் தலங்கள் மூன்றிலும் அம்பிகை சந்நிதிக்கு நேர் எதிரில் விழாக்காலங்களில் தியாகராஜர் ஊஞ்சல் விழாக்காணும் மண்டபங்கள் உள்ளன. வாசுதேவநல்லூர் அர்த்தநாரீஸ்வரர் ஆலயத்தில் வெள்ளிக்கிழமை திங்கட்கிழமைகளில் ஊஞ்சலாட்டுதல் சிறப்பாக நடத்தப்படுகிறது. இதற்கென மேடை மீது ஊஞ்சல் மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. திருப்பெருந்துறையில் ஊஞ்சல் மண்டபம் உள்ளது. இதில் விழா நாட்களில் மணிவாசகர் எழுந்தருள்கின்றார்.

28. அத்தியயன மண்டபம்

வேதவித்துக்கள் அமர்ந்து வேதம் ஓதவும், மாணவர்களுக்கு ஓதுவிக்கவும் உரிய இடம் அத்தியயன மண்டபம் ஆகும். சுவாமி உலா வரும்போது இங்கு இருந்தவாறு அந்தணர்கள் வேத மந்திரங்களிலுள்ள



★ உலகப்புகழ் பெற்ற வௌவால் நெத்தி மண்டபம் (எ) கல்யாண மண்டபம் திருவீழிமிழலை

வாழ்த்துகளைக் கூறுவர். ஆலயங்களில் அத்தியயன பட்டர் வீற்றிருந்து வேதம் ஓதும் இடமாகும்.

29. ஆகம மண்டபம்

சிவபெருமானால் அருளப்பட்ட இருபத்தெட்டு ஆகமங்களைச் சிவாசாரியார்கள் அமர்ந்து ஓதுவதற்கும், மாணவர்களுக்குக் கற்பிக்கவும் உள்ள மண்டபம் ஆகம மண்டபமாகும். ஆகமங்களிலுள்ள சில பகுதிகளையாவது தினமும் பாராயணம் செய்ய வேண்டும். விருத்தாசலத்தில் ஆகம மண்டபம் இருபத்தெட்டு லிங்கங்களுடன் ஆகமக் கோயிலாகவே திகழ்கிறது.

30. புராண மண்டபம்

மகாபுராணங்களாகிய பதினெட்டு புராணங்களையும் தல புராணங்களையும் ,மக்களுக்கு விளக்கிக் கூறும் மண்டபங்கள் புராண மண்டபங்களாகும். இவை மக்கள் அமர்ந்து கேட்கத்தக்க வகையில் விசாலமாகவும், காற்றோட்டமாகவும் அமைக்கப்பட்டிருந்தன.

தல புராணங்களை அரங்கேற்றுவதற்காக அமைக்கப்பட்ட மண்டபங்களும் புராண மண்டபங்கள் என்று அழைக்கப்பட்டன.

31. தீக்ஷா மண்டபம்

சிவநெறியாளர்களுக்குத் தீட்சை பெறுவது முக்கியமானதாகும். தீட்சை பெற்றவர்களே கோயில் சிவவழிபாடு செய்யும் உரிமை உடையவர்கள் ஆவர். அம்முறையில் ஆலயங்களில் சிவதீட்சை அளிப்பதற்கென மண்டபங்கள் இருந்தன.

இதன் நடுவில் மேடையின்மீது வண்ணப் பொடிகளால் வரையப்பட்ட தீட்சா மண்டலங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இது இறைவனை மண்டல

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(வண்ணக்கோல) வடிவில் வழிபடுமிடமாகும்.

(திருப்பெருந்துறை) ஆவுடையார் கோயிலில் மாணிக்கவாசகருக்குச் சிவபெருமான் தீட்சைசெய்து வைத்த மண்டபம் உள்ளது.

32. வீணா மண்டபம்

சிவபெருமான் வீணா கானப்பிரியன். அவன் உருத்திர வீணையை வாசித்து மகிழ்கின்றான். ஸ்ரீ கயிலாயத்தில் வீணா மண்டபம் உள்ளது. இதிலுள்ள வீணை தன்னைத் தானே மீட்டி சாமகானத்தைப் பொழிந்து கொண்டேயிருக்கின்றது. இதையொட்டி ஆலயங்களிலும் வீணாமண்டபம் அமைக்கப்படுகிறது. ஆவுடையார் கோயிலில் முன்னாளில் தினமும் வீணா மண்டபத்தில் வீணை வாசிக்கப்பட்டதென்று கூறுகின்றனர்.

33. துவஜாரோகண மண்டபம்

பெருந்திருவிழாக்களின் முக்கியமான நிகழ்ச்சி விழாவின் தொடக்கத்தில் கொடியேற்றுவதும், விழா முடிந்தபின் அதை இறக்குவதுமாகும். கொடியேற்றும்போதும் இறக்கும்போதும் கொடிமரத்திற்கு முன்பாகப் பஞ்சமூர்த்திகளும், சூலதேவரும் எழுந்தருள்கின்றார். அவர்கள் எழுந்தருளும் இடமே துவஜாரோகண மண்டபம் எனப்படுகிறது. சென்னை மயிலாப்பூர் கபாலீசுவரர் ஆலயத்தில் பெரிய அளவிலான துவஜாரோகண மண்டபம் உள்ளது. இம்மண்டபத்தூணில், கொற்றவன்குடி உமாபதி சிவாச்சார்யார் கொடிக்கவி பாடி, சிதம்பரம் ஆலயத்தில் கொடியேற்றியதை விளக்கும் புடைப்புச் சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் கொடிமரத்தைச் சுற்றிலும் பெரிய மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் பெரிய அளவில் மகேசுவர வடிவங்கள் தூண்களில் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மண்டபம் கம்பத்தடி மண்டபம் என்று அழைக்கப்படுகிறது. இது உலகப் புகழ்பெற்றதாகும்.

34. ரதாரோகண மண்டபம்
(தேர்முட்டு மண்டபம்)

பெருந்திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சி பெருமான் தேரில் உலா வருதலாகும். இது கருவறையே சக்கரங்கொண்டு வீதிகளில் பவனி வருவதற்கு ஒப்பான தாகும். சுவாமியைத் தேரின்மீது ஏற்றுவதற்கும் இறக்குவதற்கும் உள்ள மண்டபம் தேர்முட்டு மண்டபம் என்றழைக்கப்படுகிறது. இது ஆலயத்திற்கு வெளியே தேர் நிற்குமிடத்தில் இருப்பதாகும். தேரின் தட்டு அளவுக்கு உயரமாக அமைக்கப்பட்ட மேடைமீது இந்த மண்டபம் அமைகிறது. இதன்மீது ஒற்றைக் கலசம் கொண்ட விமானம் அமைந்துள்ளது. இங்கு ஏறிச்செல்லப் படிக்கட்டுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

சிதம்பரம், திருவாரூர் முதலிய அனேக தலங்களில் தேர்முட்டு மண்டபங்கள் உள்ளன. பஞ்ச மூர்த்திகளுக்காக ஐந்து தேர்கள் உள்ள இடங்களில் ஐந்து தேர்முட்டு மண்டபங்களும் அமைந்துள்ளன.

ஆகமங்களில் சொல்லப்படாவிட்டாலும் நடைமுறையில் இன்னும் அனேக மண்டபங்கள் ஆலயங்களில் இருக்கின்றன. அவற்றுள் சிலவற்றைத் தொடர்ந்து காணலாம்.

35. நந்தி மண்டபம்

சிவாலயங்களில் கருவறைக்கு நேர் எதிரில் பலிபீடம், கொடிமரம் ஆகியவற்றை அடுத்து பெரிய நந்திதேவர் எழுந்தருளியிருப்பார். இவருக்குப் பெரும்பான்மையான கோயில்கள் ஒற்றைக் கலசம் கொண்ட விமானத்துடன் நான்குகால் மண்டபம் அமைந்திருக்கும். இது நந்தி மண்டபம் என்று அழைக்கப்படுகிறது. இதில் "காளைமாட்டின்" வடிவில் நந்திதேவர் எழுந்தருளி உள்ளார்.

❁ சிதம்பரத்தில் நடராசர் சந்நிதிக்கு முன்பாகவும், மூலஸ்தானநாதர் சந்நிதிக்கு முன்பாகவும் வெளிப்பிராகாரத்தில் பெரிய சுதை நந்திகள் அமைந்திருப்பதைக் காணலாம். இவை நீள்சதுர மண்டபமாகவும் சபாஹார விமானத்துடன் ஐந்து கலசங்கள் கொண்டதாகவும் உள்ளன.

❁ தாராசுரம் முதலிய சில தலங்களில் நந்திக்கு எண்கோண மண்டபம் அமைந்துள்ளதையும் காண்கிறோம்.

36. எண்ணெய்க் காப்பு மண்டபம்

வாசனைத் திரவியங்களால் மணமூட்டப்பட்ட எண்ணெயை உடலில் தேய்த்து, அது ஊறிய பிறகு சிகைக்காய், உழைமண் முதலியவற்றைத் தேய்த்து எண்ணெய்ப்பசை நீங்கக் குளிப்பதே எண்ணெய்க்குளியலாகும்.

பிறந்தநாள், தீபாவளி முதலான நாட்களில் எண்ணெய் தேய்த்துக் குளிப்பது உடல் தூய்மையையும் மனத்தூய்மையையும் அளிக்கிறது. பெண்கள் வெள்ளிக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கிழமைகளிலும், ஆண்கள் சனிக் கிழமைகளிலும், குழந்தைகள் புதன்கிழமைகளிலும் எண்ணெய்க் குளியல் செய்தால் நன்மையுண்டாகும்.

ஆலயங்களில் மூலத்திருமேனிகளான விக்கிரங் களுக்குத் தினமும் எண்ணெய்க் காப்பிடுவர்.

சிறப்பு நாட்களில் உற்சவ மூர்த்திகளுக்கும் எண்ணெய்க் காப்பு இடப்படும். திருவாரூரில் தியாகேசப் பெருமான் எண்ணெய்க்காப்பு கொண்டருள்வதற் கென்று தனிமண்டபம் உள்ளது. இதனை எண்ணெய்க் காப்பு மண்டபம் என்று அழைக்கின்றனர். இதனருகில் எண்ணெய் சேகரிப்பதற்கென எண்ணெய்க் கொப்பரை இருக்கிறது. இதனையொத்ததாகத் திருநள்ளாறு தர்ப்பாரண்யேசுவரர் ஆலயத்திலும் தியாகராசர் எண்ணெய்க்காப்பு மண்டபம் உள்ளது.

❁ வானமாமலையில் பெருமாளுக்குச் சிறப்பு நாட்களில் எண்ணெய்க்காப்பு நடத்தப்படும். குடம் குடமாகத் திருமஞ்சனம் செய்யப்படும் நல்லெண்ணெய் ஒரு வாய்க்கால் வழியாக ஓடி தனியே கிணற்றில் சேகரிக்கப்படுகிறது. நோய்தீர்க்கும் மருந்தாக இதனை அன்பர்கள் வாங்கிப் பயன்படுத்துகின்றனர்.

❁ வேந்தன்பட்டி என்னும் தலத்தில் நந்தியம் பெருமானுக்கு குடம்குடமாக நெய் அபிஷேகம் செய்யப்படுகிறது. இந்த நெய்யும் தனியிடத்தில் சேகரிக்கப்பட்டு மருந்தாக பயன்படுத்தப்படுகிறது.

37. பக்த காட்சி மண்டபம்

பெரிய சிவாலயங்களில் நடைபெறும் பெருந் திருவிழாவின் இறுதியில் கோயிற் பணியாளர்கள் ஒரு பெரிய மண்டபத்தில் மங்கலப் பொருட்களை ஏந்தி, மங்கல வாழ்த்துகளைக் கூறிக்கொண்டு நிற்கச் சிவ பெருமான் அலங்காரத்துடன் நடனமாடியவாறே அவர்களை மும்முறை வலம் வந்து அருளும் கோலமே பக்தகாட்சி வைபவம் எனப்படும். பக்தகாட்சி அருளிய பின் விழா முடிவுற்றதை உணர்த்தும் வகையில் பெருமான் யதாஸ்தானத்தை அடைவார். இவ்விழாவில் பக்தர்கள் வீற்றிருக்கும் மண்டபமே பக்தகாட்சி மண்டபம் என்றழைக்கப்படுகிறது.

❁ திருவாரூரில் பக்தகாட்சி மண்டபம் சிறப்புடன் அமைந்துள்ளது. வசந்தகால விழாவின் இறுதிநாளில் பக்தகாட்சி உற்சவம் சிறப்பாக நடைபெறுகிறது. அன்று இந்த மண்டபம் அலங்கரிக்கப்பட்டு பொலிவுடன் விளங்க, தியாகராசர் வசந்த மண்டபத்திலிருந்து புறப் பட்டு நடனமாடியவாறே இதனை மும்முறை வலம் வந்து பூங்கோயிலான தமது சன்னதியை அடைகின்றார்.

38. நீராழி மண்டபம்

சுற்றிலும் நீரால் சூழப்பட்ட மண்டபங்கள் நீராழி மண்டபங்கள் என்று அழைக்கப்படுகின்றன. பெரும்பா லும் திருக்குளங்களின் நடுவில் அமைந்திருக்கும் மண்டபங்களே நீராழி மண்டபங்கள் என்று அழைக் கப்படுகின்றன. தெப்போற்சவத்தின்போது மட்டும் சிவ பெருமான் உமாதேவியுடன் இதனுள் எழுந்தருள்வது வழக்கம். இதன் மீது ஒற்றைக் கலசத்துடன் பல அடுக்கு களைக் கொண்ட விமானங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மயிலை கபாலீசுவரர் கோயில், வைத்தீசுவரன் கோயில் முதலான திருக்கோயில்களின் குளங்களுக்கு மத்தியில் கண்ணைக் கவரும் நீராழி மண்டபங்களைக் காணலாம்.

திருவாரூர் கமலாலயத் திருக்குளத்தின் மையத் தில் இருந்த இத்தகைய மண்டபம் பல்வேறு திருப்பணி களைப் பெற்றுத் தனி சிவன் கோயிலாகவே மாறி நடுவணநாத சுவாமி கோயில் என்றழைக்கப்படுகிறது. குளங்களின் மத்தியில் மட்டுமின்றி ஆறுகளின் மத்தி லும் நீராழி மண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளன. காவிரியின் நடுவில் அனேக மண்டபங்கள் அமைக்கப் பட்டிருப்பதையும் அதில் இறைவன் எழுந்தருளி வசந்த விழா காண்பதுடன் தீர்த்தமும் அளிக்கின்றார்.

கருவறையைச் சுற்றி நீராழியை அமைத்து அதன்மீது மண்டபம் கட்டியுள்ளதையும் காண்கிறோம்.
காண்க பக் : 1227

39. தட்டம் சுற்றி மண்டபம்

திருவிழாவில் பெருமான் வீதிகளில் வலம் வந்த தும், ஆசாரியர்கள், இசைக்கலைஞர்கள் அவரை வலம் வருவர். இறுதியில் கோயிற் பெண்களான தேவரடி யார்கள் முக வீணையை வாசித்துக்கொண்டு தீபமேந் திய தட்டுகளை ஏந்தி வலம் வருவர். இதனை தட்டம் சுற்றி மண்டபம் என அழைப்பர். பெரும்பாலும் இது ஆலயத்திற்கு எதிரில் பதினாறு கால்களுடன் அமைக் கப்படுவதாகும்.

40. பரணி மண்டபம்

இது சிவபெருமான் செய்த வீரச்செயல்களை விவரித்துக் கூறும் மண்டபமாகும். பரணிபாடுதல் வீரனின் ஒப்பற்ற வீரத்தைப் புகழ்ந்து பாடுவதாகும். வைராவிகள் எனப்படும் வீரச் சேவையாளர்கள் இதனைப் பாடுவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

41. தீபாலங்கார மண்டபம்

இதில் மண்டபத்தின் மூன்று சுவர்களிலும் முக்கோண வடிவிலான எண்ணற்ற மாடங்களை அமைத்து, அதில் அகல் விளக்குகளைப் பொருத்துவர். இந்த தீபாலங்காரத்திற்கு நடுவில் பெருமானை எழுந்த ருளுவித்து உபசாரங்களைச் செய்வர். அச்சிறுபாக்கத் தில் ஆட்சீசுவரர் ஆலயத்திற்கு எதிரில் ஆலயத்தை நோக்கியவாறு தீபாலங்கார மண்டபம் உள்ளது.

42. திருமாளிகைப்பத்தி மண்டபம்

கருவறை, மகாமண்டபம் ஆகியவற்றைச் சுற்றி லும் விசாலமான இடத்தை விட்டு விட்டு நான்கு புறமும் (வாயில் நீங்கலாக) மேடை அமைத்து அதன் மீது மண்டபம் அமைப்பர். இந்தமேடை திருமாளிகைப் பத்தி என்றும், அந்த மண்டபம் திருமாளிகைப் பத்தி மண்டபம் என்றும் அழைக்கப்படும். ஆதியில் இது பக்தர்கள் அமர்ந்து தியானம் புரிய அமைக்கப்பட்ட தாகும். காலப்போக்கில் இந்த மேடையில் அஷ்ட பரிவாரங்களான சூரியன், சந்திரன், பைரவர், சப்தமாதர் கள், விநாயகர், முருகன், மகாலட்சுமி ஆகியோரை அமைத்துவிட்டனர்.

43. அர்த்த மண்டபம்

கருவறைக்கு முன்பாக, அதில் பாதியளவுள்ள மண்டபம் அமைகிறது. இதனை அர்த்த மண்டபம் என்பர். தமிழில் உள்நாழி எனப்படும். இதில் நித்யோத் சவ மூர்த்தியும், போகசக்தி அம்பிகையும் எழுந்தருளி வைக்கப் பட்டிருக்கின்றனர்.

44. மகா மண்டபம்

சிவாலயங்களில் கருவறைக்கு முன்பாக அர்த்த மண்டபமும் அதற்கும் முன்பாக விசாலமான பெரிய மண்டபமும் அமைகின்றன. இதுவே மகா மண்டபம் ஆகும். இதனுள் வடபகுதியில் (கிழக்கு மேற்காக) மேடை அமைக்கப்பட்டு அதில் வரிசையாக உற்சவமூர்த்திகள் எழுந்தருளி வைக்கப்படுகின்றனர்.

45. நவாப் மண்டபம்

இசுலாமிய அரசர்கள் அன்பின் மிகுதியால் சிவாலயங்களில் மண்டபங்களை அமைத்துத் தந்துள்ளனர். இவை நவாப் மண்டபங்கள் என்று அழைக்கப்படுகின்றன. திருத்தணியில் நவாப் வாத்திய மண்டபம் இருக்கின்றது. சில ஆண்டுகளுக்கு முன்புவரை இசுலாமியர் இங்கே பூசையின்போது "நகார்" (முரசு) வாசிக்கும் வழக்கம் இருந்து வந்துள்ளது.

46. பிராகார மண்டபம்

ஆலயத்தைச் சுற்றிவரும் வகையில் பிராகாரங் கள் அமைந்துள்ளன. பெரும்பான்மையான பிராகாரங் கள் திறந்த வெளிப் பிராகாரமாகவே உள்ளன. சில தலங்களில் மட்டும் அன்பர்கள் வெய்யில் மழையால் துன்புறாமல் வலம்வர பிராகாரத்தில் மண்டபங்கள் அமைக்கப்படுகின்றன. உலகத்திலேயே நீளமான மண்ட பத்துடன் கூடிய பிராகாரம் இராமேசுவரத்தில் உள்ளது.

47. ருத்ரபாத மண்டபம்

உருத்திர மூர்த்தியின் பாதத்திற்கு நான்குகால் மண்டபம் அமைத்திருப்பதை உருத்திரத் தலங்களில் காண்கிறோம். திருவண்ணாமலையில் கிரிவலப் பாதை யில் ஆங்காங்கும், திருக்கழுக்குன்றத்தில் சிறிய மலை யின்மீதும் உருத்திரபாதம் நாலுகால் மண்டபத்துடன் அமைந்துள்ளன.

48. முக்தி மண்டபம்

இதில் அமர்ந்து பஞ்சாட்சர ஜபம் செய்தால் மோட்சம் செய்வது உறுதி என்று புராணங்கள் கூறுகின் றன. இத்தகைய முக்தி மண்டபம், நாகப்பட்டினம், திருவையாறு, காசி(வாரணாசி) ஆகிய இடங்களில் மட்டுமே உள்ளது. திருவையாற்றில் இந்த மண்டபம், தட்சிணாமூர்த்தி சந்நிதியில் அமைந்துள்ளது. மண்டபத் தில் அமர்ந்து அன்பர்கள் ஜெபம் செய்கின்றனர். இந்த மண்டபத்தின் பெருமைகளைத் திருவையாற்றுத் தலபுராணம் தனிச்சிறப்புடன் விவரிக்கின்றது. இதனை ஜெபேச மண்டபம் எனவும் வழங்குகின்றனர்.

50. மன்னர்கள் பெயரால் அமைந்தவை

மாமன்னர்களும், அவர்களுடைய அதிகாரி களும் பிரதிநிதிகளும் மிகுந்த சிவபக்தியால் சிவாலயங் களில் மண்டபங்களை அமைத்தனர். அவை அவர்கள் பெயரால் அழைக்கப்படுகின்றன. திருவாரூரில் சோழ மன்னனின் படைத்தலைவனாக இருந்த இராஜநாரா யணன் பெயரால் பெரிய கொலுமண்டபம் உள்ளது. திருவக்கரையில் கண்டார் சூரியன் என்பவன் அமைத்த "கண்டார் சூரியன் மண்டபம்" என்னும் நூற்றுக்கால் மண்டபம் உள்ளது. திருப்பெருந்துறையில் அச்சுத பூபாலன் என்பவன் கட்டிய மண்டபம் "அச்சுத பூபால மண்டபம்" என்று கல்வெட்டுக்களில் குறிக்கப்படுகிறது. இந்நாளில் இதனை தியாகராஜர் மண்டபம் என அழைக்கின்றனர்.

தாராசுரம் ஐராவதேசுவரர் ஆலயத்தில் முன்னுள் மண்டபம் தேர் வடிவில் உள்ளது. இதனை அமைத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தவன் இரண்டாம் ராஜராஜனாவான். இவனுடைய விருதுப் பெயர்களில் ஒன்றான "இராஜகம்பீரன்" என்ற பெயரால் இம்மண்டபம் இராஜகம்பீர மண்டபம் என்றழைக்கப்படுகிறது. திருப்புகலூரில் "நரலோகவீரன்" என்பவன் அமைத்த நரலோக வீரன் மண்டபம் உள்ளது. இப்படி அனேக தலங்களில் மன்னர்களாலும் அரசப் பிரதிநிதிகளாலும் அமைக்கப்பட்ட மண்டபங்கள் இருப்பதைக் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.

51. தீர்த்தவாரி மண்டபம்

சிவபெருமான் பரிவாரங்களுடன் குளம், ஆறு முதலியவற்றிற்கு எழுந்தருளி சிறப்பு நாட்களில் தீர்த்தம் கொடுத்தருளுவார். அந்த வேளையில் சுவாமி தங்கவும் அபிஷேகம் முதலியன கொள்ளவும் அமைக்கப்படும் மண்டபங்கள் தீர்த்தவாரி மண்டபங்கள் என்று அழைக்கப்படுகின்றன. காவிரி, தாமிரபரணி முதலிய அனேக ஆறுகளின் கரைகளில் தீர்த்தவாரி மண்டபங்களைக் காண்கிறோம். தில்லையில் சிவகங்கைத் தீர்த்தக்கரையிலும், திருவண்ணாமலையில் அக்னி தீர்த்தக் கரையிலும் தீர்த்தவாரி மண்டபங்கள் உள்ளன.

52. துலாபார மண்டபம்

அன்பர்கள் தங்கள் விருப்பம் நிறைவேற வேண்டிக்கொண்டு துலாபாரம் அளிக்கின்றனர். துலாபார தானம் என்பது, பொன், மணி, தானியங்கள் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றைத் தன் எடைக்கு எடை கொடுப்பதாகும். இதற்கென அமையும் மண்டபம் துலாபார மண்டபம் எனப்படும். இதன் நடுவில் பெரிய தராசு நிறுவப்பட்டிருக்கும். ஒரு தட்டில் அன்பர்கள் அமர்ந்து கொள்ள எதிர்த்தட்டில் தானப்பொருளையிடுவர். அன்பர்களின் நிறைக்கு பொருட்களை எடையிட்டு ஆலயத்திற்கு அளிப்பர். கேரளாவிலுள்ள அனேக ஆலயங்களில் துலாபார மண்டபம் உள்ளது. கும்பகோணம் மகாமகக் குளக்கரையில் கோவிந்த தீட்சிதர் துலாபார தானம் செய்த மண்டபம் உள்ளது.

53. சொக்கட்டான் மண்டபம்

தமிழகத்து விளையாட்டுக்களில் ஒன்று சொக்கட்டான் ஆகும். இருவர் அல்லது நால்வர் ஆடும் ஆட்டமாகும். இதற்கென கூட்டல்குறி அமைப்பில் கட்டங்களை வரைந்து அதில் காய்களை வைத்து ஆடுவர். இந்தக் கட்டம் போலத் தாழ்வாரமும் நான்கு புறமும் உயரமான மேடையும் கொண்டதாக சொக்கட்டான் மண்டபம் அமைகிறது. ஒரு சில ஆலயங்களில் மட்டுமே சொக்கட்டான் மண்டபம் உள்ளது. உமையும் சிவனும் சொக்கட்டான் ஆடி மகிழ்வதாகப் புராணங்கள் குறிக்கின்றன. சிவபெருமானுக்குச் சதுரங்க (சொக்கட்டான்) வல்லபர் என்ற பெயர் வழங்குகிறது. திருவையாறு ஐயாறப்பர் சந்நிதியில் சொக்கட்டான் மண்டபம் உள்ளது.

54. நிருத்த மண்டபம்

பெருமானுக்கு முன்பாக ஆடல் மகளிர் நிருத்தத்தின் அடவுகளை ஆடிக்காட்டும் மண்டபம் நிருத்த மண்டபம் எனப்பட்டது. தில்லை சிற்றம்பலத்தின் முன்புறம் பெரிய நிருத்த மண்டபம் உள்ளது.

56. நாட்டிய மண்டபம்

சிவபெருமான் கண்டு களிக்கும் வண்ணம் ஆடல் மகளிர் குறவஞ்சி, கூடலிழைத்தல் முதலான நாட்டியங்களை நிகழ்த்தும் இடமாகும்.

57. சங்கு மண்டபம்

தெய்வீக மங்கலச் சின்னங்களில் ஒன்று சங்காகும். தானியங்களைப் பரப்பி, அதன்மீது 108 அல்லது 1008 சங்குகளை வரிசையாக அடுக்கி, அதில் நீரைவார்த்து, மாவிலை தர்ப்பை ஆகியவற்றை இட்டு, இரண்டு காலங்களுக்குக் குறையாமல் ஹோமங்கள் ஜபங்கள் செய்து, இறைவனுக்கு அந்தச் சங்கு நீரால் அபிஷேகம் செய்கின்றனர். இதற்காக சங்குகளை அடுக்கும் மண்டபம் சங்கு மண்டபம் என்றழைக்கப்படும்.

❁ சிவ பூசைகளில் ஒரு அங்கமாக லட்சுமி பூசை எனப்படும் தனபூசை செய்யப்படும். இதில் லட்சுமியின் திருவுருவத்திற்குப் பதிலாக வலம்புரிச் சங்கை வைத்து பூஜிப்பர். இந்தச் சங்கு வைக்கப்படும் மண்டபமும் சங்கு மண்டபம் என்று அழைக்கப்படுகிறது.

❁ சில ஆலயங்களில் அதிகாலை நேரத்தை உணர்த்த துறவிகள் வெண் சங்குகளை ஊதும் வழக்கம் இருந்தது. இவர்களிருந்து சங்கை முழக்கும் மண்டபமும் சங்கு மண்டபம் என்றழைக்கப்பட்டது.

❁ திருக்கழுக்குன்றத்தில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பிறக்கும் சங்குகளைச் சேமித்து வைத்துள்ளனர். இதுவும் சங்கு மண்டபம் என்றழைக்கப்படுகிறது.

58. வலம்புரி மண்டபம்

இப்பெயரால் சீர்காழி சிவாலயத்தில் மூன்றாம் பிராகாரத்தில் ஒரு மண்டபம் உள்ளது. இது வைரவத் தானமாகும். இதில் நடுவில் ஊஞ்சலையும், சுற்றிலும் அமைத்துள்ள உள்மாடங்கள் எட்டிலும் எட்டு வைரவ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மூர்த்திகளையும் அமைத்துள்ளனர்.

59. அமாவாசை - கிருத்திகை மண்டபம்

அமாவாசைதோறும் இறைவனை எழுந்தருளி வைத்து உச்சி வேளையில் அபிஷேகம் செய்து உபசாரம் செய்யுமிடமாகும். திருவண்ணாமலை அண்ணாமலையார் ஆலயத்தில் அமாவாசை மண்டபம் உள்ளது.

கிருத்திகைதோறும் பெருமானை மாலையில் எழுந்தருள வைத்து தீபாராதனை செய்து வழிபடுமிடமாகும். திருவண்ணாமலை அண்ணாமலையார் ஆலயத்தில் கிருத்திகை மண்டபம் உள்ளது.

60. தேர்வடிவிலான மண்டபங்கள்

ஆலயங்களில் அமைந்துள்ள சில மண்டபங்கள் தேர்வடிவில் அமைக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். இவற்றிற்குப் பெரிய சக்கரங்கள் இருபுறமும் அமைந்துள்ளன. இவற்றை இழுத்துச் செல்லும் வகையில் யானை, குதிரை உருவங்களும் அமைக்கப்பட்டுள்ளன. குடந்தை நாகேசுவரத்திலுள்ள நடராஜர் சபை, சிதம்பரம் பாண்டிநாயகம் சந்நிதி, நிருத்தசபை, தாராசுரம் முகமண்டபம் ஆகியன தேர்மண்டபங்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். இவை வானுலகிலிருந்து பறந்து வந்து பூவுலகில் நிலைபெற்றன என்று மக்கள் நம்புகின்றனர்.

❀ சூரியன் வழிபட்ட தலமான குடந்தை நாகேசுவரசுவாமி ஆலயத்திலுள்ள தேர்ச்சக்கரத்தில் பன்னிரண்டு சூரியர்களும் அமைக்கப்பட்டுள்ளனர்.

61. வௌவால் நெத்தி மண்டபம்

இது. மண்டபத்திற்கு அதன் தள அமைப்பை ஒட்டி வந்த பேராகும். இதில் தூண்களை அமைத்து அதன் மீது உத்திரங்களை இட்டபின், கருங்கல்லைப் பரப்பிச்சமதளமாக அமைக்காமல், செங்கல் சுண்ணாம்பு கொண்டு யானையின் முதுகு போன்று வளைந்த கூரையாக அமைத்துள்ளனர். இது வௌவால் நெற்றிபோன்ற முகட்டைப் பெற்றிருப்பதால் இப்பெயர் பெற்றதென்பர். சோழ மண்டலத்திலுள்ள அனேக ஆலயங்களில் இந்த வளைந்த கூரை அமைப்பைக் கொண்ட மண்டபங்களைக் காண்கிறோம். கூரையின் உச்சிப் பகுதியில் வரிசையாக கலசங்கள் அமைகின்றன.

இன்னும் அனேக பெயர்களில் மண்டபங்கள் உள்ளன. அன்பர்கள் தல வரலாறுகளிலும், மகாபுராணங்களிலும் அவற்றைப் பற்றி அறிந்து கொள்ளலாம்.

பவனி வரும் விமானங்கள்

வெள்ளி இந்திரவிமானத்தில் அன்னாமலையார்

பெருந்திருவிழாக்களின் ஓர் அங்கமாகச் சிவபெருமான் வீதிகளில் தேரில் பவனி வருகின்றார். பெருமான் கருவறையான ஸ்ரீ விமானத்துடன் சேர்ந்து வீதிகளில் பவனிவருவதை உணர்த்துவதே திருத்தேர்விழா என்று கூறுவர். மேலும் பெருமான் பவனி வருவதற்கென பலவகையான விமானங்களும் உள்ளன. இவை நான்கு (எட்டு பன்னிரண்டு/முப்பத்திரண்டு/ அறுபத்துநான்கு) கால்களும் அதன்மீது சதுரம் அல்லது எண்பட்டையான கூம்புவடிவக் கூரையுடன், உச்சியில் கலசங்களையும் கொண்டுள்ளன. இவற்றின் அமைப்பையொட்டி இவைகளுக்கு இந்திர விமானம், பவ ழக்கால் விமானம், அஸ்தமானகிரி விமானம், உதயகிரி விமானம் என்றும், செய்யப்பட்ட பொருட்களையொட்டி கண்ணாடி விமானம், தங்க விமானம், ருத்ராட்ச விமானம் என்றும் பெயர்கள் வழங்குகின்றன. விமானங்களில் மலர்மாலை ஏந்திய கந்தர்வர்கள் பெரிய பூக்கள், கிளிகள், மூலைகளில் இடபம், அதிகாரநந்தி, பீடத்தைச் சுற்றிலும் தும்புரு, நாரதர் பதஞ்சலி, வியாக்ரபாதர் முதலிய திருஉருவங்கள் இடம் பெற்றுள்ளன. கபாலீசுவரர் ஆலயத்தில் வெள்ளியால் செய்யப்பட்ட இந்திர விமானம் உள்ளது. ராமேஸ்வரத்தில் தங்க விமானத்தில் சுவாமி பவனி வருகிறார்.

சபைகள்

மண்டபங்களுக்கு சபைகள், அம்பலங்கள் என்ற பெயர்களும் வழங்கிவருகின்றன. தில்லை சிற்றம்பலத்திலுள்ள சோமாஸ்கந்தர் மண்டபம்-தேவசபை என்றும், பெருமான் நின்றாடும் கருவறை - சிற்சபை என்றும், அதற்கு முன்னுள்ள மண்டபம் கனகசபை என்றும், கொடிமரத்திற்கு எதிரிலுள்ள தேர்வடிவிலான மண்டபம்-நிருத்தசபை என்றும், ஆயிரங்கால் மண்டபம்-ராஜசபை என்றும் அழைக்கப்படுகின்றன. இவை பஞ்சசபைகள் என்றழைக்கப்படுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மண்டபத் தூண்கள்

மண்டபங்களுக்குரிய அங்கங்களில் முதன்மை பெற்றது தூண்களாகும். இவை கால்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. கால்களின் எண்ணிக்கையை ஒட்டி மண்டபங்கள், பதினாறுகால் மண்டபம், நூற்றுக்கால் மண்டபம் ஆயிரங்கால் மண்டபம் என்று பலவாறு பெயர் பெறுகின்றன.

ஆகமங்களிலும் சிற்ப நூல்களிலும் மண்டபத் தூண்களுக்கு அவற்றின் கலைச் சிறப்பை ஒட்டி பலவேறு பெயர்கள் வழங்குகின்றன.

தூண்கள் வட்டம், சதுரம், நீள்சதுரம், எண்பட்டை, பதினாறுபட்டை என்று பலவகைப்படுகின்றன. இவை ஒவ்வொன்றிற்கும் உரிய சிறப்புப் பெயர்களை ஆகம நூல்களிலும் சிற்பநூல்களிலும் விவரிக்கப்பட்டுள்ளன.

பல்லவர்கள் யாளி அல்லது சிங்கங்கள் தாங்குவதுபோல் தூண்களை அமைத்தனர். இவற்றை மாமல்லபுரம், காஞ்சீபுரம் முதலான தலங்களில் காணலாம்.

கலை வளரவளர மிகப்பெரிய அளவில் தூண்களை அமைக்கும் வழக்கம் வந்தது. பாண்டியர்கள் காலத்தில் பாய்ந்து வரும் குதிரை, பாயச் சித்தமாக உள்ள யாளி முதலிய உருவங்களைக் கொண்ட தூண்கள் வரிசையாக அமைக்கப்பட்டன. இவற்றில் இடம் பெற்றுள்ள பாய்ந்துவரும் குதிரை, அதனைச் செலுத்துவோன், அதன்கீழ் பாயும்புலி, குதிரை வீரனின் ஈட்டியால் குத்தப்படும் சிறுத்தை போன்ற துணை உருவங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

சில தூண்களில் பெரிய அளவில் ரதி, மன்மதன், வாலி, சுக்ரீவன், அர்ச்சுனன், அவனோடு போரிடும் வேடன் சிவபெருமான், குறத்தி, குறவன், புருஷாமிருகம் முதலான உருவங்கள் அமைக்கப்பட்டன. இவற்றை மதுரை மீனாட்சியம்மன், திருநெல்வேலி நெல்லையப்பர், பிரம்மதேசம் பிரம்மபுரீசுவரர் முதலான கோயில்களில் காணலாம்.

கோவை பேரூர் பட்டீசர் ஆலய நடராசர் சபையில் பெரிய அளவில் ஊர்த்துவதாண்டவர், கஜசம்ஹாரமூர்த்தி, காளி, நடராசர், விநாயகர், ஆறுமுகப்பெருமான், பிட்சாடனர் முதலிய திருவுருவங்கள் இடம்பெற்றுள்ளன. மதுரை மீனாட்சி ஆலயத்தில் கொடிமரத்தைச் சுற்றி அமைந்துள்ள கம்பத்தடி மண்டபத் தூண்களில் மகேசுவர மூர்த்தங்கள் மிகப் பெரிய அளவில் அமைக்கப்பட்டுள்ளன. சில மண்டபங்களில் வாயில் தனித்து உருளும் வகையில் உருண்டைக் கல்லைக் கொண்ட சிம்மங்கள், கல்லாலான சங்கிலிகள் முதலியன அமைக்கப்பட்டுள்ளன. இவை தனிச்சிறப்புகளைக் கொண்டதாகும். சில மண்டபத் தூண்களிலுள்ள துணைத் தூண்களைத் தட்டினால் சப்த சுவரங்கள் ஒலிக்கும்படி அமைத்துள்ளனர். இவை மாபெரும் கலைச் சின்னங்களாகும்.

மண்டபத் தூண்களில் சில கலை அழகுக்காகச் செய்யப்பட்ட சிற்பங்கள் தெய்வநிலை பெற்று வழிபாட்டுக்கு உரியதாகவும் ஆகிவிடுகின்றன. சிவமஞ்சரியின் இப்பகுதியில் மண்டபங்களிலுள்ள தூண்களின் சிறப்புக்களைக் கண்டு மகிழலாம்.

- சிவசுந்தரி

சங்கீதத் தூண்கள்

மண்டபங்களில் பெரிய தூண்களுக்குத் துணையாக அதில் சிறுசிறு தூண்கள் அமைத்திருக்கின்றனர். இந்தத் துணைத் தூண்களும் மிகுந்த கலைச் சிறப்புடன் அமைக்கப்பட்டிருக்கின்றன. மதுரை, திருநெல்வேலி சுசீந்திரம், கிருஷ்ணாபுரம் முதலிய தலங்களில் பெரிய தூண்களுடன் இசை கூட்டும் துணைத் தூண்களும் அமைந்துள்ளன. இவற்றைச் சிறுகட்டையால் தட்டினால் இன்னிசை எழுகிறது. இவை சப்தஸ்வரத் தூண்கள் அல்லது, சங்கீதத் தூண்கள் என்று அழைக்கப்படுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(தூண்களின்) கால்களின் எண்ணிக்கை அடிப்படையில் "மண்டபங்கள்"

ஆலயங்களிலுள்ள மண்டபங்கள் பலவற்றிற்கு அவற்றைத் தாங்கும் கால்களின் எண்ணிக்கையை ஒட்டிப் பெயர்கள் அமைகின்றன. அவற்றுள் சில :-

ஒற்றைக் கால் மண்டபம்

பெரும்பாலும் மண்டபங்கள் குறைந்த பட்சம் இரண்டு கால்களையாவது கொண்டிருக்கும். மாறாக சிதம்பரத்தில் மூன்று பக்கம் சுவர்களை ஆதாரமாக வைத்து ஒற்றைக்காலை நிறுத்தி மண்டபம் அமைத்துள் ளனர். மக்கள் இதனை ஒற்றைக்கால் மண்டபம் என அழைக்கின்றனர். இது துர்க்கை சந்நிதியில் உள்ளது.

மூன்றுகால் முக்கோண மண்டபம்

இத்தகைய அபூர்வமான மண்டபம் சென்னை மயிலாப்பூர் திருக்குளத்தின் வடமேற்கு முனையில் உள்ளது. இது மூத்தாளாகிய ஜேஷ்டாதேவிக்கு அமைக்கப்பட்டதாகும்.

நான்கு கால் மண்டபம்

அதிக அளவில் உள்ளவை இவ்வகை மண்டபங் களே. ஊஞ்சல் மண்டபம், நந்தி மண்டபம் முதலிய எண்ணற்ற மண்டபங்கள் இத்தகையனவாகும்.

ஆறுகால் மண்டபம்

ஆறுகால்களைக் கொண்ட மண்டபங்களை முக மண்டபங்களாகவே காணமுடிகிறது. மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் இத்தகைய ஆறுகால் மண்ட பங்கள் இருக்கின்றன. பாண்டிய நாட்டுத் தலங்களி லுள்ள அனேக ஆலயங்களின் முகமண்டபங்கள் ஆறு கால்கள் கொண்டுள்ளன.

எட்டுக்கால் மண்டபம்

சில ஆலயங்களில் நந்தியம்பெருமானுக்கு எண்கோணத்தில் எட்டுக் கால்களைக் கொண்ட மண்டபம் உள்ளது. திருப்பனந்தாளில் எட்டுக்கால் களைக் கொண்ட அஷ்டசக்தி மண்டபம் உள்ளது. இதன் ஒவ்வொரு காலிலும் ஒவ்வொரு சக்தியின் வடிவம் அமைக்கப்பட்டுள்ளது.

பதினாறுக்கால் மண்டபம்

நல்வாழ்வுக்கு அடிப்படையானவை பதினாறு செல்வங்களாகும். பதினாறு செல்வங்களையும் இறை வன் அருள்வதைக் குறிப்பாக உணர்த்த பதினாறு கால்களுள்ள மண்டபம் அமைக்கப்படுகின்றது. மயிலாப்பூர், திருமுல்லைவாயில், காஞ்சி ஏகாம்பரம் முதலிய தலங்களில் ஆலயத்திற்கு முன்பாக பதினாறு கால் மண்டபம் அமைக்கப்பட்டிருக்கின்றது. பெருந்திரு விழாவில் சுவாமி வீதி புறப்பாட்டுக்கு முன்பாக இம்மண்டபத்தில் பஞ்சமூர்த்திகள் காட்சி நல்குவர். வீதியுலா முடிந்ததும் இதனுள் எழுந்தருளி பரிவேட பூசை நடத்தப்பட்ட பின் சுவாமி ஆலயத்திற்கு எழுந்த ருள்வார்.

திருவான்மியூரில் பங்குனி மாதம் நடைபெறும் பெருந்திருவிழாவின் பத்தாம் நாள் இரவில் தியாகேசர் பதினாறுகால் மண்டபத்தைச் சுற்றி நடனம் ஆடிய படியே வான்மீகி மகரிஷிக்குக் காட்சி கொடுக்கும் ஐதீகவிழா நடைபெறுகிறது.

பதினெட்டுக் கால் மண்டபம்

தில்லை சிற்றம்பலத்தின் முன்புறமுள்ள கனக சபை பதினெட்டுபுராணங்களைக் குறிக்கும் பதினெட்டுக் கால்களைக் கொண்டதாகும். இதனைப் பதினெண் புராண மண்டபம் என்கின்றனர்.

இருபத்தெட்டுக் கால் மண்டபம்

ஆதியில் சிவபெருமான் இருபத்தெட்டு ஆகமங் களை உமாதேவியாருக்கு உபதேசித்தார். இவையே சைவசமயத்திற்கு ஆதார நூல்களாகும். இருபத்தெட்டுக் கால்களைக் கொண்ட மண்டபம் ஆகம மண்டபம் என்று அழைக்கப்படும். திருமாணிக்குழியில் இத்தகைய ஆகம மண்டபம் இருக்கிறது.

அறுபத்துநான்கு கால் மண்டபம்

அறுபத்துநான்கு கலைகளைக் குறிக்கும் வகையில் அறுபத்துநான்கு கால் மண்டபம் அமைக்கப்படுகிறதென்பர். அம்பிகை ஆலயங்களில் அமையும் அறுபத்துநான்கு கால் மண்டபங்கள் அறுபத்துநான்கு யோகினிகளைக் குறிக்கும் என்பர். திருப்பெருந்துறை ஆன்மநாத சுவாமி ஆலயத்தின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முன்புறம் அறுபத்துநான்கு கால்களைக்கொண்ட பெரிய மண்டபம் உள்ளது. (இதனை மக்கள் ஆயிரங்கால் மண்டபம் என்றழைக்கின்றனர்.)

நூற்றுக்கால் மண்டபம்

பெரிய ஆலயங்களில் நூற்றுக்கால் மண்டபங் களைக் காண்கிறோம். இவை நூறு உருத்திரர்களையும் கால்களாகக்கொண்ட மகா உருத்திர மண்டபம் என்பர். திருவக்கரை, திருப்புலிவனம், காஞ்சிபுரம் முதலிய தலங்களில் நூற்றுக்கால் மண்டபங்கள் உள்ளன.

திருவையாற்றிலுள்ள நூற்றுக்கால் மண்டபம் இந்நாளில் தண்டபாணிக் கோயிலாகத் திகழ்கிறது.

ஆயிரங்கால் மண்டபம்

ஆயிரங்கால்களைக் கொண்ட மண்டபங்கள் திருவாரூர் திருவண்ணாமலை, சிதம்பரம் முதலிய தலங்களில் உள்ளன. சிதம்பரம் நடராசர் ஆலயத்தி லுள்ள ஆயிரங்கால் மண்டபம் "ராஜசபை" என்றழைக் கப்படுகிறது. இங்கு மார்கழி திருவாதிரை, ஆனி த்திரு மஞ்சனம் ஆகிய நாட்களில் நடராசரை எழுந்தருளி வைத்து மகா அபிஷேகமும் லட்சார்ச்சனையும் நடை பெறுகின்றன. இங்கிருந்து நடனமாடியபடியே நடராச ரும் சிவகாமியும் சிற்சபைக்கு எழுந்தருள் கின்றனர்.

...ஆயிரங்கால் மண்டபம்
உதவி தமிழ்நாடு தொல்லியல் துறை

திருவாரூரில் உள்ள ஆயிரங்கால் மண்டபம் "வசந்த மண்டபம்" என்று அழைக்கப்படுகிறது. சிறப்பு அபிஷேகங்களை ஏற்றுக்கொண்டு தியாகராஜர் வசந்த காலப் பெருவிழாவின்போது இதில் கொலுவீற்றிருந்து காட்சியளிக்கிறார். இந்த மண்டபத்தைப் புராணங்கள் "தேவாசிரியம்" என்றழைக்கின்றன. இதற்கு தேவர்கள் விரும்பிப் பூசிக்குமிடம் என்பது பொருள். தேவாச்ரயம் தமிழில் தேவாசிரியம் ஆகியது. ஆச்ரயம் என்றால் சரணம் அடைதல், பூசித்தல் எனப் பொருள்.

மண்டபமும் அதன் அங்கங்களும்

மண்டபங்கள் யாவும் சற்று உயரமான பீடத்தின் மீது அமைக்கப்படுன்றன. இதிலுள்ள ஒவ்வொரு தூணின் அடியிலும் ஆதார சிலை எனப்படும் பலகைக் கல் உள்ளது. தூணின் மீது குறுக்கும் நெடுக்குமாக உத்திரங்களைப் பொருத்த உதவும் வகையில் போதிக்கல் எனப்படும். அகன்றபாரம் தாங்கும் கல் உள்ளது. இந்த போதிகைக்கற்களிலும் உத்திரங்களில் தொடர்சிற்பங்களும், நடன மங்கையர் வடிவங்களும் அமைக்கப்படு கின்றன. உத்திரங்களின் மீது பாவுகற்கள் இடப்படுகின்றன. இதன்மீது செங்கல் சுண்ணாம்புக் கலவை இட்டு கெட்டிப்படுத்தப்பட்டு ஓடுகள் வேயப்படுகின்றன. நான்கு புறமும் மழைநீர் வழிந்தோடவும் சாரல் அடிக்காதிருக்க வும் கொடுங்கைகள் எனும் வளைவான அமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. கொடுங்கைகளை மிகுந்த கலை யழகுடன் அமைத்திருப்பதை ஆவுடையார் கோயில் திருநெல்வேலி முதலிய இடங்களில் காணலாம். ஆவுடையார் கோயிலில் அமைந்துள்ள கொடுங்கைகள் உலகப் புகழ் பெற்றதாகும். இந்தக் கொடுங்கைகளில் மரத்தால் செய்யப்பட்டதுபோல் நுண்மையான வேலைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

தூணின் மீது அமையும் போதிகைக் கற்களில் சிங்கம், பூதம், யாளி முதலியன உத்திரத்தைத் தாங்குவது போலவும், அவற்றின் முனைகளை நீட்டி வளைந்த வாழைப் பூவைப் போலவும் அமைக்கின்றனர். கலைஞர்களின் கற்பனை வளத்திற்கேற்ப போதிகைக் கற்கள் சிறந்த அழகைப் பெற்றுள்ளன. உட்கூரையான பாவுகற்களின் மீது காரைபூசி வண்ணம் தீட்டுகின்றனர்.

மண்டபத்தின் நடுவில் சுவாமி அமர பெரிய மேடை அமைக்கப்படுகிறது. இதனை அலங்கார பீடம் என்பர். இதனை ஆமை, பூதங்கள், மலைகள், பாம்புகள், அப்சரஸ்கள் தாங்குவதுபோல அமைக்கின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தூண்களில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் தெய்வங்கள்

❁ வீரபத்திரர் - மதுரை

சிவாலயங்களின் மண்டபத் தூண்களில் கலையழகுக்காகப் பெரிய அளவில் தெய்வத் திருவுருவங்கள் அமைக்கப்பட்டன. காலப்போக்கில் இந்தத் திருவுருவங்கள் தனித் தன்மை பெற்று வழி பாட்டுக்குரியதாகி விட்டன. இவற்றில் சில வற்றைக் காணலாம்.

❁ மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்துக் கம்பத்தடி மண்டபத்தூணில் நெடும் சிலைகளாக அமைந்துள்ள அகோர வீரபத்திரர், அகோர காளி, அக்னி வீரபத்திரர், அக்னி காளி ஆகிய உருவங்கள் இப்போது வழிபாட்டுக்குரியதாக உள்ளன. மக்கள் வெண்ணை உருண்டைகளை இவற்றின் மீது வீசி பிரார்த்தனைகளை நிறைவேற்றுகின்றனர்.

❁ தொண்டைமண்டலத்தில் ஆலயத்தூண்களில் விளங்கும் சரபேசுவரருக்கு சிறப்பு வழிபாடுகள் செய்து பிரார்த்தனைகளைச் செலுத்துகின்றனர். கோயம்பேடு குசலவபுரீசுவரர் ஆலயத்தின் முன்னேயுள்ள 16கால் மண்டபத்தில் அமைந்துள்ள சரபேசுவரர் தனிச் சிறப்புடன் வழிபடப்படுகின்றார். ஞாயிற்றுக்கிழமைகளிலும் பிரதோஷவேளையிலும் ஏராளமான மக்கள் இங்கு வழிபடுகின்றனர்.

❁ ஆவுடையார் கோயில் என அழைக்கப்படும் திருப்பெருந்துறை ஆத்மநாத சுவாமி ஆலயத்தின் முகமண்டபத் தூணில் பெரிய குதிரை வீரனின் சிலை உள்ளது. இது மாணிக்கவாசகருக்காக இறைவன் குதிரைச் சேவகனாக வந்த வடிவமாகும். இவரைக் குதிரைச்சாமி என அழைக்கின்றனர். இவருக்குச் சிறப்பு வழிபாடுகள் செய்யப்படுகின்றன.

இதேகோயிலில் தூணில் எழுந்தருளியுள்ள வீரபத்திரர் பல குடும்பங்களுக்குக் குலதெய்வமாக இருக்கின்றார். இவர் மீது "வீரமாலை" எனும் நூல் ஸ்ரீ கேசவபாரதி அவர்களால் பாடப்பட்டுள்ளது.

❁ சிதம்பரம் நடராஜர் ஆலயத்தில் தூண்களில் எழுந்தருளியுள்ள சோமாஸ்கந்தர், தண்டபாணி ஆகிய திருமேனிகளுக்குச் சிறப்பு அபிஷேகங்களும் வழிபாடுகளும் நடத்தப்படுகின்றன.

❁ திருவாரூரில் தியாகராஜர் சபா மண்டபத் தூணில் அமைந்துள்ள மூலாதார கணபதிக்குச் சிறப்புப் பூசைகள் செய்யப்படுகின்றன.

❁ திருவண்ணாமலை அண்ணாமலையார் ஆலயத்தில் சிவகங்கை தீர்த்தக் கரையில் பதினாறுகால் மண்டபம் உள்ளது. இதன் ஈசான மூலையிலுள்ள தூணில் முருகப்பெருமான் அருணகிரிநாதரின் வேண்டு கோளின்படி, பிரபுடதேவ மகாராஜன் உள்ளிட்ட பலரும் காண காட்சியளித்தபின் அதில் கல் திருமேனியாக எழுந்தருளினார். அந்தத் தூணை மையப்படுத்தி கருவறை உள் மண்டபம் மகாமண்டபம் ஆகியவற்றை அமைத்துள்ளனர். இது "கம்பத்திளையனார்" சந்நிதி என்ற தனிக் கோயிலாகப் போற்றப்படுகிறது.

❁ திருப்புகலூர், சிருங்ககிரி முதலிய தலங்களில் தூண்களிலுள்ள விநாயகர் ஸ்தம்ப கணபதி எனும் பெயரில் சிறப்புடன் வழிபடப்படுகின்றார்.

❁ ஆயிரம் சிவலிங்கங்களைத் தன்னுள் கொண்ட ஆயிரம் (சகஸ்ர) லிங்கத்தை பல தலங்களில் காண்கிறோம். இதனைப் போலவே ஆயிரம் சிறு தூண்களைத் தன்னுள் கொண்ட பெருந்தூண் ஆவுடையார் கோயிலில் ஆத்மநாத சுவாமி ஆலயத்தில் உள்ளது.

❁ சிவாலயங்களில் அனுமாருக்கென தனிச் சந்நிதி அமைக்கப்படுவதில்லை. அன்பர்கள் தூண்களில் அமைக்கப்பட்டுள்ள அனுமாரை பக்தியுடன் போற்றுகின்றனர். திருஒற்றியூர் தியாகராஜசுவாமி ஆலய முக மண்டபத் தூணில் அமைந்துள்ள அனுமாருக்கு சிறு ஆலயம் அமைந்துள்ளது.

❁ குமரி மாவட்டத்திலுள்ள (சுசீந்திரம் முதலான) ஆலயங்களில் மண்டபங்களின் தூண்களில் வரிசையாக விளக்குப்பாவைகள் அமைக்கப்பட்டிருப்பதை காண்கிறோம். இவை ஏந்தியுள்ள அகல்களில் சிறப்புநாட்களில் அகல்விளக்குகளை ஏற்றுகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தூண்களும் - கதைச் சிறப்பங்களும்



சிவபெருமான் பார்வதியிடம் வீரநாயகரை அளிக்கும் புராண கதை சிற்பம்
நன்றி - தமிழ்நாடு தொல்லியல் துறை

ஆலயத் தூண்களில் ஆரம்பத்தில் அழகுக்காக சிறுசிறு சிற்பங்கள் அமைக்கப்பட்டன. காலமும் கலையும் வளர வளர புராணங்களை அடிப்படையாகக் கொண்ட சிற்பங்கள் அமைக்கப்பட்டன. இதுவும் வளர்ந்து ஒரு கதையில் வரும் பல்வேறு காட்சிகளைத் தொடர்ந்து அமைக்கும் வழக்கம் உண்டாகியது. இவ்வகையில் தல புராணக் காட்சிகள், மக்கள் வழக்கில் இருந்த மார்க்கண்டேயன் கதை, சிறுத்தொண்டர் கதை, வள்ளி திருமணம், அருச்சுனன் தபசு முதலானவை தனித்தனியான காட்சிகளைக் கொண்ட தொடர் சிற்பங்களாக அமைக்கப்பட்டன.

தொண்டைநாட்டுச் சிவாலயத் தூண்கள் பல வற்றில் மனுநீதிச் சோழனின் கதை தொடர் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளது. இவற்றில் பசு, தேர், தேரின்கீழ் அடிபட்டுக் கிடக்கும் கன்று, ஆராய்ச்சி மணியை அடிக்கும் பசு, பசுவின் சோகத்தைக் கண்டு இரங்கும் மன்னன், பசுவை தேர்மீது அமர்த்தி தேர்க்காலில் முன் தமது மகனைப் படுக்கவைத்து, அவன் மீது தேரை ஓட்டுதல் முதலான காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன. திருக் கழுக்குன்றம் நிருத்த மண்டபம், பெருநகர். பிரம்ம புரீசுவரர் ஆலய பட்டுவதனாம்பிகை மண்டபம் ஆகிய வற்றில் அமைந்துள்ள தூண்களில் மனுநீதிச்சோழன் கதைகள் சிறப்புடன் வடிக்கப்பட்டுள்ளன.

காஞ்சீபுரம் ஏகாம்பரநாதர் ஆலயத்தில் கோபுரத் துக்கு முன் உள்ள பதினாறுகால் மண்டபத்தூண்களில் முப்புரம் எரித்தல், யமனை உதைத்தல், யானையை உரித்தல் முதலிய சிவபராக்கிரமக் காட்சிகள் இடம் பெற்றுள்ளன. இவற்றில் வேதத்தில் கூறப்பட்டுள்ளபடி சிவபெருமான் கொக்கு வடிவம் கொண்டு பாதிமீன் உடல் கொண்ட திருமாலை அலகால் கௌவித்தூக்கிக் கொண்டிருப்பதை விளக்கும் சிற்பம் தனித்தன்மை கொண்டதாகும்.

திருக்கழுக்குன்றம் தூண்களில் சுரகுரு மன்ன னின் கதை, கழுகுகள் உணவருந்துவது முதலான தல புராணத்தை விளக்கும் கதைகள் இடம் பெற்றுள்ளன.

தூண்சிற்பங்களில் அதிக அளவில் இடம் பெற் றுள்ள கதை சிறுத்தொண்டர் கதையாகும். இதில் சிறுத் தொண்டர் வைரவரைக் கண்டு விருந்துக்கு அழைத்தல், மகனை பள்ளியிலிருந்து அழைத்து வருதல், அவனு டைய அன்னை அவனைக் குளிக்க வைத்தல், மனைவியுடன் சேர்ந்து அவனை அரிந்து சமைப்பது, சிறுத்தொண்டர் அழைக்க வானத்திலிருந்து சீராளன் வருதல், இறைவன் காட்சியளிப்பது முதலியன தனித்தனியாகக் கதைப்போக்கில் அமைக்கப்பட்டுள் ளன. மரக்காணம் பூமிசுவரர் ஆலயம், வழுவூர் பிரம்ம புரீசுவரம், காஞ்சிநகர் ஆலயங்கள் முதலியவற்றில் இச்சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன.

வடாற்காடு மாவட்டம் வழுவூர் பிரம்மபுரீசுவரர் தூணில் வள்ளியின் கதை உள்ளது. இதில் மானின் வயிற்றில் முனிவன் அருளால் வள்ளி பிறத்தல், விளையாடுதல், தினைப்புனம் காத்தல், முருகனைக் கண்டு காதல் கொள்ளுதல், முருகன்-வள்ளி கல்யாணம் ஆகியன தனித்தனியாகக் காட்டப்பட்டுள்ளன.

ஸ்ரீ தாராசுரம் ஐராவதேசுவரர் ஆலயத் தூண் களில் முருகன் திருமணம், சிவனுடைய திருமணம், தேவர்கள் ஊர்வலம், தெய்வயானைத் திருமணம் முதலியன தொடர் சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளன. இவற்றை ஒத்ததாக, மார்க்கண்டேயன் கதை, தாருகாவ னத்து ரிஷிகள் கர்வ பங்கக் கதை முதலான கதைகள் தூண்களில் தொடர் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மண்டப விதானங்களில் மிளிரும் கலைக்கோலங்கள்

மண்டபங்களின் உட்கூரை, விதானம் என்று அழைக்கப்படுகிறது. விதானத்தை அழகுபடுத்தும் கலை படிப்படியாக வளர்ந்துள்ளது. விதானத்தில் காரையைப் பூசி வண்ணம் தீட்டி, பெரிய பெரிய வட்டமான தாமரை மலர்களை வரைகின்றனர். கலைஞர்களின் கற்பனைத் தினுக்கேற்ப விதானங்களில் தலபுராணங்கள், அட்ட வீரட்ட நிகழ்ச்சிகள், மகேசுவர வடிவங்கள் முதலிய காட்சிகளும் பலவகை வண்ணங்களில் தீட்டப் பட்டுள்ளன.

ஓவியமாகத் தீட்டுவதற்கு மாறாக விதானங்களின் மையத்தில் புடைப்புச் சிற்பமாக தாமரை மலரைச் செதுக்கி அதைக் கொத்தும் கிளிகளையும் அமைத்தனர். இதனை விரிவுபடுத்தி நடுவில் தாமரை மலரைச் சுற்றிலும் அஷ்டதிக்பாலகர்கள், அவர்களைச் சுற்றிலும் பன்னிரண்டு இராசிகள், இராசி அதிபர்கள் அமைக்கப்பட்டுள்ளனர். சின்னச் சேலத்தை அடுத்துள்ள குகையூர் ஆலய முகமண்டபத்தின் விதானத்தில் விசுவத்தேவர்களும் உருத்திரர்களும் அமைக்கப்பட்டுள்ளனர்.



1008 லிங்கம் திருவாரூர்

❀ திருவாரூர் வசந்த மண்டபத்தில் தஞ்சை மராட்டிய மன்னர்கள் காலத்தில் தீட்டப்பட்ட ஓவியங்களைக் காணலாம். தியாகராஜரை முசுகுந்தன் தன் நாட்டுக்கு எடுத்துவந்த வரலாறு, வசந்த விழாவில் நடைபெறும் கண்கவர் வண்ணக் காட்சிகள், வாண வேடிக்கை ஊர்வலம் முதலியன இடம் பெற்றுள்ளன. இதில் இந்த ஓவியங்களை வரைந்த ஓவியனின் பெயரும், திருவுருவமும் இடம்பெற்றிருப்பதைக் காண்கிறோம். இது எங்குமில்லாத ஒன்றாகும். இந்த ஓவியங்களில் ஆங்காங்கு பெயர் விளக்கக் குறிப்புகளும் உள்ளன.

❀ சிதம்பரம் நடராசர் ஆலய மூலட்டானர் சந்நிதியின் நீராழி மண்டபத்தின் விதானத்தில் மகேஸ்வர வடிவங்கள் பல வண்ணங்களில் தீட்டப்பட்டுள்ளன. இதே ஆலயத்தில் சிவகாமி அம்மன் சந்நிதி மகா மண்டப விதானத்தில் தலபுராணக் காட்சிகள் வரையப் பட்டுள்ளன.

சில சமயங்களில் விதானங்களில் அமையும் சிற்பங்களும் வழிபாட்டுக்குரியதாகி விடுகின்றன. எடுத்துக்காட்டாக சுசீந்திரம் தாணுமாலயர் ஆலய வசந்த மண்டப விதானத்தில் அமைக்கப்பட்டுள்ள நவக்கிரகங்கள் வழிபடப்படுகின்றன. இதற்கு நேர்கீழே விளக்குகளை ஏற்றிவைத்து வழிபடுகின்றனர்.

❀ திருவாரூரில் கொடிமரத்துக்கு அருகிலுள்ள மண்டப விதானத்தில் ஆயிரத்துஎட்டு லிங்கங்கள் ஒரு சேர உள்ளன.

❀ திருவண்ணாமலை அருணாசலேசுவரர் ஆலய அலங்கார மண்டபத்தில் தலபுராணக் காட்சிகளும், வேதமூர்த்தி வடிவங்களும் தொடர்ச்சியாக வரையப்பட்டுள்ளன.

❀ மண்டப விதானங்களில் சூரியன், சந்திரன், அவர்களைப் பீடிக்கும் ராகு, கேதுக்கள், மகரமீன்கள், எதிரெதிரான மீன்கள், ஆமை, சந்திரனின் மத்தியில் மான் அல்லது முயல் முதலான உருவங்கள் அமைக்கப்பட்டிருப்பதை அனேக தலங்களில் காணலாம்.

❀ ஆவுடையார் கோயில் விதானத்தில் ஆகமங்களில் சொல்லப்பட்டுள்ள ஆறு அத்துவாக்கள் அஷ்ட மூர்த்தங்கள், பஞ்சப் பிரமங்கள், நட்சத்திரக் கூட்டங்கள் முதலிய அனேக சிற்பங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

❀ குகையூர் சிவாலயத்திலுள்ள முன் மண்டபம், திருக்கொடுங்குன்றம் (பிரான்மலை), மங்கைபாகர் ஆலய முன்மண்டபம், தில்லைச் சிற்றம்பலத்திலுள்ள நிருத்தசபை மண்டபம் ஆகியவற்றிலுள்ள உள் விதானங்கள் பல சிறு கட்டங்களாகப் பிரிக்கப்பட்டு அதில் பல தேவர்களின் சிற்பங்கள் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இவர்களின் பெயர்களை மகா புராணங்கள் விரிவாகக் கூறுகின்றன.

பொன் மாமணி மண்டபங்கள் சூழ் தங்க விமானத்தில் வீற்றிருக்கும் பொற்கொடி உடனாய சிவபெருமான் அருளினால் அனைவரும் இன்புற்று இனிது வாழ்க!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நீராய் நின்ற நிமலா போற்றி! தீர்த்தமாய் நின்ற செழுந்திரளே போற்றி! போற்றி!

ஸ்ரீ தீர்த்தேசுவரர்

"மூர்த்தி, தலம், தீர்த்தம்" எனும் மூன்றையும் தொழுவார்க்கு வார்த்தை சொல்ல சற்குரு வாய்க்குமே என்பது ஸ்ரீதாயுமானவ சுவாமிகள் திருமொழியாகும். தீர்த்தங்கள் யாவும் சிவபெருமானாகவே எண்ணத்தக் கவை ஆகும். சிவபெருமான் தீர்த்தவடிவில் இருக்கின் றான் என்பதை மணிவாசகப் பெருமான், "தீர்த்தன் நல் தில்லை சிற்றம்பலத்தே தீயாடும் கூத்தன்" என்றும் அப்பர் சுவாமிகள், "சென்றாடு தீர்த்தங்கள் ஆனார் தாமே" என்றும் அருளிச் செய்துள்ளதைக் காண்கிறோம்.

சிவபெருமான் தீர்த்தத்தின் வடிவாக விளங்கு வதால் தீர்த்தேசுவரர் என்றும் பெயர் பெறுகின்றார்.

மண்ணின் வளத்திற்குத் தண்ணீர் ஆதாரமாகும். வான்மழை எப்போதும் பொழிவதில்லை. அதனால் பொழிந்த மழைநீரைத் தேக்கி வைத்திருந்து உயிர் களுக்குத் தாகத்தைத் தணிப்பவை நீர்நிலைகளாகிய தீர்த்தங்களேயாகும். இவை தம்மில் நீராடுவார்க்கு உடல் தூய்மையை அளிப்பதுடன் மனத்தூய்மையையும் அளிக்க வல்லன.

அனைத்து சிவாலயங்களிலும் அமைந்துள்ள தீர்த்தக் குளங்கள் தனிச்சிறப்பைப் பெறுகின்றன. திருத்தலங்களில் தேவர்களாலும், முனிவர்களாலும் அரசர்களாலும் அமைக்கப்பட்ட அனேக தீர்த்தங்கள் உள்ளன. தலபுராணங்களில் தீர்த்தங்களின் மகிமையும் அவற்றில் மூழ்குவதால் கிடைக்கும் பலனும் விரிவாகச் சொல்லப்பட்டிருப்பதைக் காணலாம்.

ஆண்டுதோறும் நடைபெறும் திருவிழாவின் இறுதியில் இறைவனே எழுந்தருளி முதன்மைத் தீர்த்தத் தில் நீராடித் தீர்த்தம் அளிப்பதைக் காண்கிறோம். இதனைத் தீர்த்தவாரி உற்சவம் என்றழைக்கின்றனர்.

தீர்த்தக்குளங்களைச் செப்பனிடுதல், படிகட்டுதல், தூர்வாருதல், அதில் நீரில் வளரும் மலர்ச் செடிகொடி களை வளர்த்தல் முதலிய யாவுமே சிவ புண்ணியச் செயல்களாகப் போற்றப்படுகின்றன. குளத்தைப் பேணிக்காப்பதைச் சிவபெருமானைப் போற்றுவ தாகவே எண்ணுகின்றனர். அறுபத்து மூவரில் ஒருவ ரான தண்டியடிகள் திருக்குளப்பணி செய்து மேன்மை பெற்றதைப் பெரியபுராணத்தால் அறிகிறோம். சிலதலங் களில் அடியவர்களின் நன்மைக்காகச் சிவபெருமானே தீர்த்தங்களை உண்டாக்கியதாகத் தலபுராணங்கள் கூறு கின்றன.

ஆதிநாளில் திருத்தலங்களுக்கு மேற்கொள்ளும் யாத்திரையைத் தீர்த்தயாத்திரை என்றே அழைத்தனர். அர்ச்சுனன் தீர்த்தயாத்திரை செய்து, பாரத நாட்டிலுள்ள அனேக சிவத்தலங்களை வழிபட்டானென்றும், பாரத யுத்தத்தில் கலந்துகொள்ள விரும்பாத பலராமர் தீர்த்த யாத்திரை மேற்கொண்டார் என்றும், மகாபாரதம் கூறுகிறது. சிலப்பதிகாரத்தில், கீரந்தை எனும் அந்தணன், மாடல மறையவன் முதலியோர் தீர்த்தயாத்திரை மேற் கொண்டு இமயம் முதல் குமரிவரை சென்று திரும்பிய தைக் காண்கிறோம்.

பொதுவாகத் தீர்த்தங்கள் என்றதும் நமக்கு திருக் குளங்களே நினைவுக்கு வருகின்றன. ஆனால் நதிகள், சுனைகள், தலத்தை ஒட்டியுள்ள கடல் பகுதிகள் யாவுமே தெய்வத்தன்மை பெற்றுத் தீர்த்தங்களாக விளங்குகின்றன.

சிவமஞ்சரியின் இந்த நாற்பதாவது மலர் தீர்த்தங் கள் வடிவாக விளக்கும் சிவபெருமானைப் பற்றியும், தீர்த்தங்களின் மகிமைகள் பற்றியும், தீர்த்தங்களோடு தொடர்புடைய விழாக்கள் பற்றியும் உள்ள செய்தி களைத் தாங்கி "தீர்த்தேசுவரர்" எனும் பெயரில் மலர் கிறது. இதிலுள்ள செய்திகளை அறிந்து மகிழ அன்பர் களை அன்புடன் அழைக்கிறோம்.

குளிர்ந்த கோலமலர்க் கண்ணி உடனாய தீர்த்தம் சடைக் கரந்த செல்வனாகிய தீர்த்தேசுவரப் பெருமானின் அருளினால் அன்பர்கள் சகல செல்வ யோகமிக்கப் பெருவாழ்வைப் பெற்று இன்பமுடன் வாழ இறையருளைப் போற்றிப் பணிந்து வணங்கு கிறோம்.

– சிவசுந்தரி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தீர்த்தங்கள் - சிந்தனைத் துளிகள்

❖ அன்பர்கள் "மூர்த்தி, தலம், தீர்த்தம்" எனும் மூன்றையும் சமமாகவே போற்றுவதுடன் இம்மூன்றையும் தேடித்திரிந்துத் தரிசித்து மகிழ்கின்றனர்.

❖ இறைவனின் எண் பெருவடிவங்களில் ஒன்று தண்ணீராகும். நீர் மயமான இறைவனை ஜலகண்டேசுவரர், ஜலநாதேசுவரர், தீர்த்தேசுவரர் எனப் பலவாறு அழைக்கின்றனர். இறைவன் ஆலயத்தில் சிவலிங்கமாகவும், வேள்விக் குண்டங்களில் தீயாகவும், தீபச்சுடர்களில் ஒளியாகவும், திருக்குளங்களில் தீர்த்தமாகவும் விளங்குகின்றான்.

❖ தண்ணீராக இருக்கின்ற சிவபெருமான் உயிர்களின் தாகத்தைத் தணிப்பவனாகவும் விளங்குகின்றான். பெண்ணாடகத்தின் மேற்கில் அமைந்துள்ள இறையூரில் இறைவன் தாகந்தீர்த்தேசுவரர் எனும் சுயம்புலிங்கமாக எழுந்தருளியுள்ளார். இங்குள்ள அம்பிகை அன்னபூரணி என்றழைக்கப்படுகிறாள்.

❖ தீர்த்தங்களில் மூழ்குவதால் கொலை, களவு, பொய்பேசுதல் முதலியவற்றால் உண்டாகும் பாவங்கள் தீரும், புண்ணியம் பெருகும்.

❖ புனித தீர்த்தத்தில் அறியாமலேயே மூழ்கினாலும், அது தனது பலனைத் தருகிறது. தீர்த்தத்தின் துளிகள்பட்டு மேன்மை பெற்றவர்களின் வரலாறுகளைப் புராணங்களில் காண்கிறோம். தீர்த்தங்களின் புனிதத் துளிகள் பட்டுப் பேயுருவம், பூத பிசாசு உருவங்கள் நீங்கின என்று மகாபுராணங்கள் கூறுகின்றன. இவை கபாலமோசனம், பிசாசு மோசனம், பூத மோசனம், பூத வேதாளத் தீர்த்தங்கள் எனப் பல பெயர்களைப் பெற்றுள்ளன. காசி நகரில் இப்பெயர்களில் பல தீர்த்தங்கள் உள்ளன.

❖ புனிதத் தலங்கள் யாவும் தீர்த்தக்கரையில் அமைந்திருப்பதால் திருத்தலங்களுக்கே தீர்த்தங்கள் என்றபெயர் வழங்குகிறது. எடுத்துக்காட்டாக திருக்கழுக்குன்றத்திற்குப் பட்சி தீர்த்தம் என்பது பெயராகும்.

❖ அனைத்து தல புராணங்களிலும் தீர்த்தங்களின் பெருமைகளை விளக்கும் பகுதியைக் காண்கிறோம். இதில் தீர்த்தங்களை அமைத்தவர், அதில் மூழ்கிப்பேறு பெற்றவர்களின் வரலாறு, மூழ்கவேண்டிய காலம் ஆகியன விவரித்துக் கூறப்பட்டுள்ளன.

❖ தீர்த்தங்கள் ஆலயத்திற்கு ஒப்பாக விளங்குபவை. ஆலயங்களுக்குக் காவலர், தலமரம் முதலியன இருப்பது போலவே தீர்த்தங்களுக்கும் தனித்தனியே அதிதேவதை, தேவதை, காவலர், மரம் ஆகியன உள்ளன. எடுத்துக்காட்டாக, வைத்தீசுவரன் கோயிலில் ஐந்து தீர்த்தங்கள் உள்ளன. இதில் கோதண்டராம தீர்த்தத்திற்கு அதிதேவதை ராமர், காவல் தெய்வம் இலக்குவன், விருட்சம் வன்னி, கௌதம தீர்த்தத்திற்கு அதிதெய்வம் வாயுபகவான், காவல் தெய்வம் சந்திரன், விருட்சம் மாமரம், வில்வதீர்த்தத்திற்கு அதிதெய்வம் இந்திரன், காவல் தெய்வம் தண்டபாணி, விருட்சம் வில்வம், முனிவர் தீர்த்தத்திற்கு அதிதெய்வம் சந்திரசேகரர், காவல் தெய்வம் கருடன், விருட்சம் ஆலமரம், அங்கசந்தான தீர்த்தத்திற்கு அதிதெய்வம் வைத்யநாதர், காவல் தெய்வம் அஸ்திரதேவர், விருட்சம் விளா, என்று புராணங்கள் கூறுகின்றன. பொதுவான நிலையில் தீர்த்தங்களின் காவலராக பைரவர் விளங்குகின்றார். அவருடைய அனுமதியைப் பெற்ற பின்னரே தீர்த்தங்களில் நீராட வேண்டும்.

❖ ஆறுகள் வடக்கு நோக்கித் திரும்பி ஓடும் இடங்கள் மிகவும் சிறப்புடன் கொண்டாடப்படுகின்றன. இவ்விடங்கள் உத்திரவாகினி என்றும் கங்கையிலும் வீசம் (1/16) அளவு அதிகம் புண்ணியம் தருபவை என்றும் போற்றப்படுகின்றன.

❖ தீர்த்தங்களை அமைப்பதால் மிகுந்த புண்ணியம் கிடைப்பதுடன், பழியும், பாவமும் விலகும் என்பதால் தேவர்கள், அசுரர்கள், மாமன்னர்கள், முனிவர்கள், யக்ஷர், கின்னரர் முதலான எல்லோரும் இப்பூமண்டலம் முழுவதிலும் சிறப்புடன் தீர்த்தங்களை அமைத்துச் சிவபெருமானை வழிபட்டுள்ளனர். இவை அமைத்தவர்களின் பெயரால் சிறப்புப்பெற்று விளங்குகின்றன. ஆயுதங்கள், விலங்குகள், பறவைகள் கூட பூர்வபுண்ணிய வினைப் பயனால் தீர்த்தங்களை அமைத்துப் பேறுபெற்றுள்ளன. (சிவமஞ்சரியின் பல்வேறு மலர்களில் காளி, உருத்திரர், அக்னி, சந்திரன், சூரியன், அம்பிகை, துர்க்கை, திருமகள், ஆயுதபுருஷர்கள், சித்தர்கள், விலங்குகள், பறவைகள், முதலானோர் அமைத்த தீர்த்தங்களைப் பற்றிய செய்திகள் விரிவாக உள்ளன. அதனால் இம்மலரில் பொதுவான செய்திகள் மட்டுமே இடம் பெற்றுள்ளன. மேலே குறித்தவர்கள் அமைத்த தீர்த்தங்களைப் பற்றிய செய்திகளை அந்தந்த மலர்களில் கண்டு மகிழ்க.)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தீர்த்தேசுவரங்கள்

உயிர்களைப் பற்றியுள்ள வினைகளைத் தீர்த்து இன்பம் அருளும் இறைவன் தீர்த்தேசுவரன் என்று அழைக்கப் படுகின்றான். நடைமுறையில் தண்ணீர் வடிவாக விளங்கும் பெருமானை "தீர்த்தேசுவரர்" என்று அழைக்கின்றோம். மேலும் பூமியால் வழிபடப்பட்டபோது இறைவன் பூமீசுரர் என்றும், அக்னியால் வழிபடப்பட்ட போது அக்னீசர் என்றும் வாயுவால் வழிபடப்பட்ட போது வாயுவேசர் என்றும் அழைக்கப்பட்டது போலவே தீர்த்தங்களால் வழிபடப்பட்ட போது தீர்த்தேசுவரர் என்று அழைக்கப்படுகிறார். தீர்த்தக் கன்னியர்களும் கடலரசர்களும் சிவலிங்கம் அமைத்து வழிபட்ட தீர்த்தேசுவரங்கள் எனப்படும் சிவாலயங்களைப் பாரததேசம் முழுவதிலும் காண்கிறோம். அவற்றில் சில வற்றை இங்கே காணலாம்.

திருக்கயிலை தீர்த்தபுரி

❁ கயிலைமலைச் சாரலிலுள்ள சிவத்தலங்களில் ஒன்று தீர்த்தபுரியாகும். இது கயிலைமலையின் சுற்றுப் பாதையில் உள்ளது. பஞ்சாபில் பாயும் ஐந்து நதிகளில் ஒன்றான சட்லட்ஜ் நதி இமயத்தில் தொடங்கி ஓடுமிடத்தின் கரையில் உள்ளது. இதற்கு அருகில் தீர்த்தபுரி மலைச் சிகரங்கள் உள்ளன. சிவபெருமான் பஸ்மாசுரனை சங்கரித்த இடம் இதுவேயாகும். இங்கு, ஆங்காங்கே வெந்நீர் ஊற்றுக்கள் உள்ளன. இவற்றில் குளிப்பதால் மனஅமைதியும் உடல் தூய்மையும் உண்டாகிறது. தீர்த்தபுரிச் சிகரங்களில் இருந்து உற்பத்தியாகும் தீர்த்தபுரிநதி சட்லட்ஜ் நதியோடு கலக்கிறது. இங்குள்ள வெந்நீர் ஊற்றுக்களில் வெந்நீரோடு வெண்மையான பொடி வருகிறது. அதைமக்கள் விபூதிப் பிரசாதமாக எடுத்துச் செல்கின்றனர். இம்மலைத் தொடருக்கு அருகில் 'வஜ்ர வராகி தேவி' ஆலயம் உள்ளது.

திருக்கயிலை மலை யாத்திரையின் ஓர் அங்கம் "தீர்த்தபுரி" தரிசனமாகும்.

மயிலை தீர்த்தபாலீச்சரம்

உருத்திரர்கள் தீர்த்தத்தினை விரும்பி அதில் உறைவதுடன் அதன் காவல் தேவதையாகவும் விளங்குகின்றனர். அதையொட்டி உருத்திரத்தலமான மயிலாப்பூரில் உருத்திரர்கள் அமைத்து வழிபட்ட சிவாலயம் உள்ளது. இதில் பெரிய சிவலிங்கமாகத் தீர்த்தபாலீசுவரர் எனும் பெயரில் சிவபெருமான் எழுந்தருளியுள்ளார். அம்பிகையின் பெயர் திரிபுரசுந்தரி என்பதாகும். இது மயிலையில் உள்ள ஏழு சிவாலயங்களில் ஒன்றாகும்.

காசிநகர் தீர்த்தேசரம்

காசிநகருக்குத் தீர்த்தராஜன் என்னும் பெயர் வழங்குகிறது. இங்குத் தீர்த்தராஜர் எனும் பெயரில் சிவபெருமான் எழுந்தருளியுள்ளார். மேலும் நதிதேவதைகள் அமைத்த யமுனேசர், கங்கேசர், சரஸ்வதீசர் முதலிய சிவாலயங்களும், கடலரசர்கள் அமைத்த சப்தசாகரேசம், சதுஸ்ர சாகரேசம் முதலிய சிவாலயங்களும் மணிகர்ணிகா முதலிய தீர்த்தங்கள் அமைத்து வழிபட்ட மணிகர்ணிகேசர் முதலான சிவாலயங்களும் உள்ளன.

"செழுநீர்த்திரள்"

தீர்த்தங்களே திரண்டு சிவலிங்கமானதைப் பஞ்சபூதத்தலங்களில் ஒன்றான திருவானைக்காவலில் காண்கிறோம். இது திருச்சியின் ஒரு பகுதியாகத் திகழும் திருத்தலமாகும். காஞ்சியில் மணலால் சிவலிங்கம் அமைத்து வழிபட்டதைப் போலவே அம்பிகை இங்கு தண்ணீரைத் திரட்டிச் சிவலிங்கமாக்கி வழிபட்டாள். இதையொட்டி பெருமான் அப்புலிங்கம், "செழுநீர்த்திரள்" நீரானார் என்ற பெயர்களில் அழைக்கப்படுகின்றார். இங்குள்ள கருவறை காவிரியாற்றின் நீர்மட்டத்திற்குக் கீழே உள்ளது. இதனால் இதில் நீர்சுரந்து கொண்டே இருக்கின்றது. முன்னாளில் இங்கு அதிகமாக நீர் சுரந்து லிங்கத்தை மூடிக் கொள்ளும் என்றும் அதை இறைத்துவிட்டே தினப்பூசைகள் நடைபெற்றதென்றும் கூறுகின்றனர். இந்நாளில் நீர் சுரப்பது அதிக அளவு இல்லையென்றாலும் கருவறை எப்போதும் ஈரமாக ஓரளவு நீருடனேயே உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காஞ்சி நகர் தீர்த்தேசம்

காஞ்சிபுரத்தில் ஏகாம்பரநாதர் ஆலயத்திற்கு அருகில் சர்வதீர்த்தம் என்ற பெரிய திருக்குளம் உள்ளது. இதன் கரையிலுள்ள தீர்த்தேசுவரம் என்ற சிவாலயத்தில் சிவபெருமான் தீர்த்தேசுவரர் எனும் பெயரில் சிவலிங்கமாக எழுந்தருளியுள்ளார். (பார்க்க பக்கம்...1254)

❈ தென்பாண்டி மண்டலத்தில் தாம்பரபரணி ஆறு, குற்றால அருவி முதலான இடங்களில் நீராடும் ; துறைகளிலுள்ள பாறைகளில் சிவலிங்கம், நந்தி வடிவங்கள் செதுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இவையும் தீர்த்தேசுவரர் என்று அழைக்கப்படுகின்றன. வெள்ளப் பெருக்கின்போது புரண்டோடும் தண்ணீர் இந்தத் திருவுருவங்களைத் தழுவிச் செல்கின்றன. திருக்குற்றாலத்தில் அருவியை ஒட்டியுள்ள பாறைகளில் நூற்றுக்கும் மேற்பட்ட லிங்கங்கள் செதுக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

❈ திருக்குளங்களைச் சிவனின் நீர்வடிவமேனியாகவே போற்றி வணங்க வேண்டும். இதைக்குறிக்கும் வகையில் திருக்குளங்களின் நீர்மட்டத்தில் சிவலிங்கத்தை அமைத்துள்ளனர். இவருக்குத் தீர்த்தேசுவரர் என்ற பெயர் வழங்குகிறது.

சிதம்பரம் சிவகங்கைத் தீர்த்தத்தில் தண்ணீர் மட்டத்தில் லிங்கம் அமைந்துள்ளதைக் காண்கிறோம். திருவள்ளூரில் திருமால் ஆலயத்திற்குச் சொந்தமான பெரிய திருக்குளத்தின் வடமேற்குக் கரையில் தீர்த்தேசுவரர் எனும் பெயரில் சிவபெருமான் தனிக்கோயிலில் எழுந்தருளியுள்ளார்.

❈ சென்னை-போரூருக்கு அருகிலுள்ள பரணி புத்தூர்; காஞ்சிமாவட்டம் கயப்பாக்கம், திருவள்ளுவர் மாவட்டம், திருவள்ளூர், நாமக்கல் மாவட்டம் வெண்ணாந்தூர், பெரம்பலூர் மாவட்டம் சென்னிவனம் முதலிய இடங்களில் தீர்த்தேசுவரர் ஆலயங்கள் உள்ளன. இராமநாதபுரம் மாவட்டம் கடம்பனூரில் பெருமான் சர்வதீர்த்தேசுவரர் எனும் பெயரில் வீற்றிருக்கிறார்.

❈ இறைவன் தீர்த்தங்களால் வழிபடப்பட்ட தீர்த்தேசனாக எழுந்தளியுள்ள ஆலயங்கள் மட்டுமின்றி புராணங்களில் சொல்லப்பட்டபடி முறையாக தீர்த்த யாத்திரை மேற்கொண்டு, காசி-ராமேசுவரம், கன்யாகுமரி வரை சென்று ஊர் திரும்பியவர்களும் தீர்த்தேசுவரர் எனும் பெயரில் சிவலிங்கம் அமைத்துக் கட்டியுள்ள சிவாலயங்களையும் காண்கிறோம்.

தீர்த்தபுரிகள்

சில தலங்கள் தீர்த்தங்களால் சிறப்புப் பெற்று, தீர்த்தபுரி, தீர்த்த நகர் எனப் பலவாறு அழைக்கப்படுகின்றன. திருத்துறைப்பூண்டிக்கு நவகோடிதீர்த்தபுரம் எனும் பெயர் புராணத்தில் வழங்கப்படுகிறது. இவ்வூர்த்தல புராணத்தில் இங்குள்ள மூலமூர்த்தி நவகோடி தீர்த்தேசுவரர் என்றும், தியாகேசர் தீர்த்தவிடங்கர் என்றும் அம்பிகை தீர்த்தவல்லி என்றும் குறிக்கப்பட்டுள்ளனர்.

தீர்த்தமலை

❈ தருமபுரி மாவட்டத்தில் அருருக்கு அருகில் தீர்த்தமலை எனும் திருத்தலம் உள்ளது. இங்குள்ள 3200 அடி உயரமுள்ள மலையின்மீது சிவபெருமான் தீர்த்தேசுவரர் எனும் பெயரில் பெரிய சிவாலயத்தில் எழுந்தருளியுள்ளார். அம்பிகையின் பெயர் வடிவாம்பிகை என்பதாகும். இம்மலையில் குளம், சிற்றோடை, சுனை எனப்பல வடிவில் ஏராளமான தீர்த்தங்கள் உள்ளன. இதையொட்டி இம்மலை தீர்த்தமலை என்றழைக்கப்படுகிறது. இங்குள்ள தீர்த்தங்களில் இராமதீர்த்தம், அகத்தியதீர்த்தம், அக்னிதீர்த்தம், குமாரதீர்த்தம் கௌரிதீர்த்தம் என்ற ஐந்தும் முதன்மை பெற்றதாகும். இராமபிரான் இங்கு வந்து தங்கியபோது சிவபூசை செய்ய விரும்பினார். பூசைக்கு நீர் கிடைக்காததால் அனுமனிடம், கங்கை நீரைக் கொண்டு வரும்படிக் கூறினார். அனுமன் இமயத்திற்குச் சென்று ஒரு குடத்தில் கங்கையை எடுத்துக்கொண்டு வந்தார். அவர் வருவதற்குள் பூசைக்குரிய காலம் நெருங்கிவிட்டதால் இராமர் தனது பாணத்தைப் பூமியில் செலுத்தித் துளையிட்டார். அதன் மூலமாக கங்கை பொங்கிவந்தாள். இராமர் மகிழ்வுடன் அந்நீரால் சிவபூசை செய்தார். நேரம் கழித்து வந்த அனுமன் காலதாமதமாகி விட்டதற்கு வருந்தினான். இராமர், அனுமனே, "அதோ தெரியும் மலையின்மீது நீ எடுத்துவந்த குடத்தினை வை அதிலிருந்து கங்கை பொங்கி வழிவாள்". அந்தப் பொங்கும் புனல் உன்பெயரால் அனுமதீர்த்தம் என்றழைக்கப்படும் என்று கூறினார். அதன்படியே அனுமான் அமைத்த அனுமதீர்த்தம் உள்ளது. அது தீர்த்தகிரியிலிருந்து 9கி.மீட்டர் தொலைவில் உள்ளது. சைவ எல்லப்ப நாவலர் பாடிய தீர்த்தமலை மான்மியம் எனும் நூலில் இத்தலத்திலுள்ள தீர்த்தங்களின் சிறப்பும் மகிமையும் விவரிக்கப்பட்டுள்ளன. இம்மலையின் அருகில் பெண்ணையாறு ஓடுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இறைவன் அழைத்த தீர்த்தங்கள்

திருத்தலங்கள் தோறும் தீர்த்தங்களை அமைத்துத் தேவர்களும், மனிதர்களும் புண்ணியம் பெற்றுள்ளனர். சில தலங்களில் பக்தர்களின் பக்திக்கு இரங்கிச் சிவபெருமானே திருக்குளத்தை உண்டாக்கி அளித்ததையும் காண்கிறோம். அத்துடன் அதன் கரைகளில் அவர் தீர்த்தராஜன் எனும் பெயரில் எழுந்தருளியுள்ளார். இப்பகுதியில் இறைவன் சமுத்திரம், பாற்கடல் சர்வதீர்த்தங்கள் முதலியவற்றை அழைத்து தீர்த்தங்கள் உண்டாக்கிய வரலாறுகளையும் அதன் கரையில் அமைந்துள்ள சிவாலயங்களையும் பற்றி அறிந்துக்கொள்ளலாம்.

பாற்கடலை அழைத்தது

தில்லை சிதம்பரத்தில் நடராசப் பெருமானின் பொன் தில்லை கூத்தைக் கண்டு பேறுபெற்றவர் வியாக்ர பாதர். இவருடைய குமாரர் உபமன்யு.

ஒரு சமயம் பசியால் வருந்திய உபமன்யு மிகவும் அழுதார். சிவபெருமான் அவருக்காக இரங்கிப் பாற்கடலை அழைக்க, அங்கே பாற்கடல் தோன்றியது அதன் பாலைப் பருகிய உபமன்யு முனிவர் பசிதீர்ந்து மகிழ்ச்சி அடைந்தார். இதனை, மணிவாசகர் "பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்" என்று குறித்துள்ளார்.

இந்தத் தீர்த்தம் பின்னாளில் மறைந்துவிட்டது. சிதம்பரம் வந்த மாணிக்கவாசகர் அது இருந்த இடத்தி னையொட்டி ஆன்மநாதசுவாமி ஆலயத்தை அமைத் தார். அங்கு அவர் தங்கியிருந்தபோது ஒருநாள் இர வில் இறைவன் ஒரு வேதியர் வடிவில் அவர் முன்னே தோன்றினார். "அன்பரே! இதுவரை தாங்கள் அவ்வப் போது அருளிச்செய்த திருவாசகத்தை மீண்டும் அருளிச் செய்க" என்றார். மணிவாசகர் சிவயோகத்தில் நிலைபெற்று மீண்டும் திருவாசகத்தை அருளிச் செய் தார். சிவபெருமான் அவற்றைப் பட்டோலையில் எழு திக்கொண்டார்.

பின்னர் பெருமான் அவரிடம் "பாவை பாடிய வாயால் கோவையும் படுக" என்று கேட்டார். மணிவாச கரும், 400 பாடல்களைக் கொண்ட "திருச்சிற்றம்பலக் கோவையார்" எனும் நூலைப் பாடி அளித்தார். இடையி டையே அவருக்குத் தொண்டை வற்றியது. சிவபெரு மான் முன்னிருந்த இடத்திலேயே பாற்கடலை மீண்டும் தோற்றுவித்தார். அந்தக் குளத்தின் பாலை அருந்தி அவர் பாடலைத் தொடர்ந்து பாடினார் என்று கூறப் படுகிறது. (இக்குளம் இந்நாளில் ஆக்கிரமிக்கப்பட்டு வீடுகள் கட்டப்பட்டுள்ளன).

இந்தத் தீர்த்தம் திருப்பாற்கடல் தீர்த்தம் என்று அழைக்கப்பட்டது. இதன் கரையில் அமைந்த ஆலயம் இந்நாளில் ஆவுடையார்கோயில் என்றழைக்கப்படு கிறது. இதில் ஆவுடையார், ஆவுடைநாயகி, (ஓடு ஏந்தி கவந்தி கட்டிய) மாணிக்கவாசகர், நந்தி ஆகிய திருவுருவங்கள் உள்ளன. இப்பெரியகோயில் திருப்பணி செய்ய வேண்டிய நிலையிலுள்ளது.

ஏழுகடலை அழைத்தது

மதுரையில் பார்வதிதேவி, பாண்டிய மன்னனுக் கும் காஞ்சனமாலை தேவிக்கும் மகளாகத் தோன்றி தடாதகைப் பிராட்டி எனும் பெயரில் வளர்ந்து வந்தாள். பாண்டியன் மாண்ட பிறகு அவள் அந்நாட்டு அரசியா னாள். சிலநாட்கள் சென்றதும் அவளுக்கும் சோமசுந்தர பாண்டியனாகத் தோன்றிய சிவபெருமானுக்கும் திரு மணம் நடைபெற்றது. அவர்களுக்கு முருகப் பெருமான் மகனாகத் தோன்றினார். அவருக்கு "உக்ர குமாரர்" எனும் பெயரிட்டுக் கொஞ்சி மகிழ்ந்தனர்.

ஒரு சமயம் பாண்டிமாதேவியான காஞ்சன மாலையாரின் அரண்மனைக்குக் கௌதம முனிவர் வந்தார். அவள் அவரை வணங்கி வரவேற்றுத் தான் செய்ய வேண்டிய தவங்களைப் பற்றிக் கூறுமாறு வேண்டினாள். அவர் புண்ணியச் செயல்களில் முதன் மைபெற்றது சிவத்தலங்களில் சென்று நீராடுதலாகும். அதனினும் சிறந்தது கங்கை முதலிய நதிகளில் நீராடு தல். எல்லோரோலும் எல்லா நதிகளுக்கும் சென்று நீராட முடியாது என்பதால் எல்லா நதிகளும் கலக்கும் கடலில் நீராடுதல் மிகவும் சிறப்புடையது என்றார். அவளுக்கு, கடலில் நீராட வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. அதைத் தன் மகளான தடாதகைப் பிராட்டி யாரிடம் கூறினாள். அவள் தாயின் விருப்பத்தை நிறை வேற்றுமாறு தமது கணவனான சோமசுந்தரபாண்டியரி டம் தெரிவித்தாள்.

சிவபெருமான், நீராட நீங்கள் கடல்களைத் தேடிச் செல்ல வேண்டாம் உமக்காக அவற்றை நாம் இங்கேயே அழைப்போம் என்றார். பின்னர் ஏழு கடல்களையும் ஒரு சேர, "இங்கே வருக!" என அழைத்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அக்கணமே ஏழுகடல்களும் ஏழுவண்ணங்களுடன் மதுரையின் கிழக்குப் பக்கத்திலிருந்த ஒரு குளத்தில் திரண்டன. அலைவீசும் அந்தக் கடல்களைக் கண்டு அனைவரும் மகிழ்ந்தனர்.

மீனாட்சி .(தடாதகைப்) பிராட்டியார் தாயை அழைத்து உனது விருப்பம்போல் இங்கு நீராடி மகிழ்க என்றார். அப்போது அவள், "தீர்த்தங்களில் கணவனின் கையைப் பற்றிக்கொண்டு நீராட வேண்டுமென்று சாத்திரங்கள் கூறுகின்றன. உனது தந்தையார் உடனிருந்தால் நான் இன்னும் மகிழ்வுடன் நீராடுவேன்" என்றாள்.

அதைக் கேட்ட சுந்தரபாண்டியரான சிவபெருமான் சுவர்க்கத்தில் வீற்றிருக்கும் தன் மாமனாகிய மலையத்துவஜபாண்டியனை, "இங்கே வருக" என்றார். அவனும் அந்த சப்த சாகரக் கரையில் தோன்றினான். அவனிடம், "நீ உமது மனைவியுடன் கை கோர்த்து நீராடுக" என்றார்.

காஞ்சனமாலை தனது கைம்பெண் கோலத்தை விலக்கி மங்கலக்கோலத்தில் கணவனுடன் சேர்ந்து நீராடி மகிழ்ந்தாள். அவர்கள் கரையேறியதும் புண்ணியப் பயனால் சிவசாரூப வடிவம் பெற்றனர். பின்னர் சோமசுந்தரப் பெருமானை வணங்கி யாவரும் காணச் சிவலோகம் புகுந்தனர்.

ஏழுகடலும் ஒன்றாகத் தோன்றிய அந்தத் திருக்குளம், மதுரையில் மீனாட்சி ஆலயத்திற்கு அருகில் சப்தசாகர நீர்த்தம் எனும் பெயரில் இருந்தது. (இந்நாளில் அந்தக் குளத்தைத் தூர்த்துப் பெரிய வணிக வளாகம் கட்டப்பட்டுள்ளது.) இதன் கரையில் சப்தசாகரேசுவரர் ஆலயமும் அதனுள் காஞ்சனமாலையார் திருவுருவமும் உள்ளன. இக்கோயில் நன்கு பராமரிக்கப்படுகிறது.

இந்த ஆலயத்தின் அருகில் திருவிளையாடற் புராண வரலாற்றை விளக்கும் ஐதீக சிற்பத் தொகுதியைக் காணலாம். சிம்மாசனத்தில் பெருமான் மீனாட்சி தேவியுடன் வீற்றிருக்கின்றார். அருகில் கௌதம முனிவர் நிற்கின்றார். சிறுகுளமான கடல் தீர்த்தத்தில் மூழ்குவது போன்று மலையத்துவஜ பாண்டியனின் கையைப் பிடித்துக் கொண்டு நிற்கும் காஞ்சனமாலை உள்ளாள். அடுத்து ஏழுகடல் மங்கையர் உள்ளனர். இவை கண்ணையும் கருத்தையும் கவர்வனவாகும். விரிவான வரலாற்றைத் திருவிளையாடற் புராணத்திலுள்ள ஏழுகடல் அழைத்த படலம், மலையத்து வசனை அழைத்தபடலம் முதலிய வற்றால் அறியலாம்

❁ பாண்டிமாதேவியான காஞ்சனமாலையார் ஏழு கடலில் நீராடியதைப் போலவே, பஞ்சபாண்டவர்களின் அன்னையான குந்திதேவியும் ஏழு கடலில் நீராடி மகிழ்ந்தாக நல்லூர்ப் புராணம் கூறுகிறது.

❁ **மோட்டூர்** எனும் ஊரில் ஓர் அரசனுக்காகச் சிவபெருமான் சப்தசாகரங்களையும் அழைத்ததாக டாக்டர். உ. வே.சாமிநாதய்யர் அவர்கள் குறித்துள்ளார். இறைவன் உன்னதபுரீசுவரர் இறைவி சிவப்பிரியா தல மரம் பனை (இவ்வூர் எங்குள்ளது என்ற குறிப்பு இல்லை)

சர்வதீர்த்தங்களை அழைத்தது

பராசக்தி இறைவன் திருமேனியில் ஒரு பாகமாகித் திகழும் வரம்வேண்டி காஞ்சிபுரத்தில் கம்பாநதிக் கரையில் மணலால் சிவலிங்கம் அமைத்து வழிபாடு செய்து கொண்டிருந்தாள்.

அப்போது சிவபெருமான் திருவிளையாடல் புரியக்கருதி உலகிலுள்ள தீர்த்தங்களெல்லாம் திரண்டு கம்பை நதியில் பெருக்கெடுத்து வருமாறு செய்தார். பெருகிய வெள்ளம் தான் பூசிக்கும் லிங்கத்தை அழித்து விடுமோ என்று அஞ்சிய உமாதேவியார், லிங்கத்தைத் தாவி அணைத்துக் கொண்டாள். அவளுடைய வளைகளும் முலைக் காம்புகளும் லிங்கத்தில் அழுந்தின. சிவபெருமான் வெளிப்பட்டு அவளை அணைத்துக் கொண்டு அவளுக்கு அருள்புரிந்தார்.

இறைவன் ஆணைப்படி பெருகிவந்த தீர்த்தங்கள் யாவும் காஞ்சியில் ஓரிடத்தில் தங்கி இறைவனை வழிபட்டன. அவை தங்கிய திருக்குளம் சர்வதீர்த்தம் எனப் பெயர்பெற்றது. அதன் கரையில் அந்தத் தீர்த்தங்கள் அமைத்து வழிபட்ட சிவபெருமான் சர்வ தீர்த்தேசுவரர் எனும் பெயரில் வீற்றிருக்கின்றார்.

இந்த ஆலயம் காஞ்சிபுரத்தில் சர்வதீர்த்தக் கரையில் அமைந்துள்ளது. இதனை காஞ்சிப் புராணத்திலுள்ள தீர்த்தேசப் படலத்தால் அறியலாம்.

இப்படி அனேக தலங்களில் இறைவன் புனித தீர்த்தங்களையும் கடல்களையும் அழைத்துத் திருக்குளங்களை உண்டாக்கியதைத் தலபுரணங்களால் அறிய முடிகிறது.

இறைவன், தீர்த்தங்களை அழைத்ததைப் போலவே முனிவர்களும் தீர்த்தங்களை அழைத்து ஆறு,குளம் முதலியவற்றை உண்டாக்கினர்.இது பற்றிய செய்திகளை அனேக தலவரலாறுகளால் அறிய முடிகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சப்தரிஷிகள் அழைத்த நிவாநதி

ஒரு சமயம் சப்த ரிஷிகளான அத்ரி, பிருகு, குத்ஸர், வசிஷ்டர், கௌதமர், காஸ்யபர், ஆங்கீரசர் ஆகிய ஏழு முனிவர்களும் நடுநாட்டில் ஏழு இடங்களில் வந்து தங்கினர். அனைவரும் பூசைக்கு நீர் வேண்டி புதிய ஆற்றை சிருட்டித்தனர். அந்த ஆறே வெள்ளாறு என்னும் நிவாநதியாகும். தேவாரத்துள் இந்த ஆறு குறிக்கப்பட்டுள்ளது. இது முனிவர்கள் தங்கியிருந்த இடங்களின் வழியாக ""ஓடி மணிமுத்தாற்றில் கலந்தது. ஏழு முனிவர்களும் நீராடவும் நீரெடுக்கவும் ஏழு துறைகளை உண்டாக்கினர். இவை 1)ஆதித்துறை (காரியனூர்) 2)திருஆலந்துறை 3)திருமாந்துறை, 4)ஆடுதுறை 5)திருவதிட்டத்துறை (திட்டக்குடி) 6)திருவரத்துறை 7)திருக்கைத்துறை (முடவன்துறை) என்ற ஏழாகும். இவை ஒவ்வொன்றிலும் சப்தரிஷிகள் நிறுவி வழிபட்ட லிங்கங்கள் உள்ளன. இங்கு குறிக்கப்பட்டுள்ள அரத்துறை மூவராலும் தேவாரப் பாடல்பெற்ற திருப்பதியாகும். இறைவன் புராணத்தில் தீர்த்தேசுவரர் என்றும் நடைமுறையில் ஆனந்தீசுவரர் என்றும் அழைக்கப்படுகின்றார். அம்பிகை அரத்துறை நாயகி என்கிற திரிபுரசுந்தரி.

(மேலே குறிக்கப்பட்டுள்ள ஆலந்துறை, மாந்துறை, ஆடுதுறை எனும் ஊர்கள் வெள்ளாற்றின் கரையில் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ளனவாகும். இதே பெயர்களில் காவிரியற்றின் கரையில் திருவிடைமருதூர் வட்டத்திலும் சிவத்தலங்கள் உள்ளன. இவற்றின் வேறுபாட்டை அன்பர்கள் அறிந்து இந்த இடங்களுக்குச் சென்று வழிபட்டு மகிழ வேண்டுகிறோம்)

நீரிடை நின்ற நிமலன்

தெய்வங்கள் நீரின் நடுவிலுள்ள தீவில் தனிமாளிகையில் வீற்றிருப்பதாகப் புராணங்கள் கூறுகின்றன. மகா கயிலாயத்தைச் சுற்றி பெரிய கடல்கள் இருப்பதாகச் சிவபுராணம் கூறுகிறது. விநாயகர் இட்சுசாகரம் எனும் கருப்பஞ் சாற்றுக் கடலின் மத்தியில் அமைந்துள்ள ஆனந்த பவனம் எனும் திருமாளிகையில் வீற்றிருப்பதாக விநாயகபுராணம் கூறுகிறது. திருமால் பாற்கடலின் மத்தியில் பள்ளி கொண்டுள்ளார். இவ்வாறு அனேக தெய்வங்கள் நீரிடை வாழ்வதாகப் புராணங்கள் கூறுகின்றன. இதையொட்டி நீர் நிலைகளின் நடுவே ஆலயங்களை அமைக்கும் வழக்கம் வந்தது.

சில தலங்களில் குளத்திற்கு நடுவே ஆலயங்களை அமைத்துள்ளனர். திருவாரூரில் கமலாயத் திருக்குளத்தின் நடுவே பெரிய சிவாலயத்தில் பெருமான் நடுவணநாதர் எனும் பெயரில் வீற்றிருக்கக் காண்கிறோம். திருப்பனந்தாள் காசி மடத்தில் குளத்தின் நடுவே விநாயகர் ஆலயம் உள்ளது.

ஆற்றின் நடுவே அமைந்த திட்டுகளிலும், ஆறுகளுக்கிடையே மேட்டுப் பகுதிகளிலும் ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஈரோடு மாவட்டம் காங்கேயன் பாளையத்தை ஒட்டி ஓடும் காவிரி ஆற்றின் நடுவில் உள்ள பெரிய பாறையில் சிவாலயம் உள்ளது. அகத்தியர் வழிபட்டுப் பேறுபெற்ற இத்தலம் நட்டாற்றீசுரர் கோயில் என்று அழைக்கப்படுகிறது.

பாலாறு கடலோடு கலக்குமிடத்திற்குச் சற்று முன்பாக உள்ள பரமேசுவரமங்கலத்தில் ஆற்றுக்கு நடுவே மணல் திட்டில் கயிலாயநாதர் ஆலயம் உள்ளது. வெள்ளம் பெருகி வரும் காலங்களில் கரையில் இருந்தபடியே பூசனை செய்கின்றனர்.

காவிரி ஆற்றின் நடுவே மணல் திட்டில் அமைந்தலூர் திருத்துருத்தி எனப்பட்டது. குத்தாலம் எனப்படும் அத்தலத்தில் பெருமான் 'சொன்னவாறு அறிவார்' எனும் பெயரில் உள்ளார். காவிரியின் கரையில் பூந்துருத்தி எனும் தலம் உள்ளது. தாமிரபரணி ஆற்றின் நடுவே உள்ள பாறையில் குறுக்குத்துறை சுப்ரமணியர் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது.

பல்லவ மன்னர்கள் நீரின் நடுவில் கோயில்களை அமைத்து மகிழ்ந்துள்ளனர். மாமல்லபுரத்தில் உள்ள கடற்கரைக் கோயிலில் கடல் நீர் சுற்றித் தேங்கும்படி அமைக்கப்பட்டிருந்தது. அந்த நீரில் நாகர்கள் வந்து வழிபடுவதைக் குறிக்கும் வகையில் சுற்றிலும் நாகர்களின் சிலைகளும் அமைக்கப்பட்டுள்ளன. திருச்சியை அடுத்துள்ள திருப்பைஞ்சீலி எனும் தலத்தில் பல்லவர்கள் சிறுகுடைவரைக்கோயிலை அமைத்துள்ளனர். முத்துமலைத் தியாகர் வீற்றிருக்கும் இந்தச் சிற்றாலயத்தில் காவிரியில் வெள்ளம் வரும்போது சுற்றிலும் நீர் நிரம்பிவிடும்.

திருந்துதேவன்குடி (நண்டாங்கோயில்), திருப்புகலூர், ஆலங்குடி முதலிய அனேக தலங்களில் சிவாலயங்களைச் சுற்றி அகழியை அமைத்துள்ளனர். இப்போது அந்த அகழியின் சில பகுதிகளைத் தூர்த்து ஆலயத்திற்கு நிரந்தரமான வழியை அமைத்துள்ளனர்.

● ஜோதிர் லிங்கங்களில் ஒன்று மகா காளேஸ்வரர் ஆகும். இவர் அன்பர்களைக் காக்கப் பெரிய குளத்தின் மத்தியில் இருந்து ஜோதிவடிவமாக வெளிப்பட்டார் என்று சிவபுராணம் கூறுகிறது.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவலிங்கங்களோடு இணைந்த சிறப்புமிக்க தீர்த்தங்கள்

சில சிறப்புமிக்க ஆலயங்களில் மூலமூர்த்தியான சிவலிங்கத்திற்குக் குறிப்பிட்ட கிணற்றிலிருந்து கொண்டு வருகின்ற தண்ணீரால் மட்டுமே அபிஷேகம் செய்யப்படுகிறது. வேறு தீர்த்தங்களைக் கொண்டு அபிஷேகம் செய்தால் இந்தச் சிவலிங்கங்கள் சில்லு சில்லாகப் பெயர்ந்து விடும் என்கின்றனர். இவ்வாறான சில செய்திகளை இங்குக் காணலாம்.

❁ அட்டவீரட்டத் தலங்களில் ஒன்றான திருக்கடவூரில் மார்க்கண்டேயரால் பூசிக்கப்பட்ட சிவலிங்கம் அமிர்தகடேசுவரர் எனும் பெயரில் உள்ளது. இந்த மூலத்தான லிங்கம் அமுதத்தால் ஆனது. இந்த லிங்கத்திற்கு, இக்கோயிலுக்கு நேர் கிழக்கில் ஏறத்தாழ ஒரு கி.மீட்டர் தொலைவில் அமைந்துள்ள (திருக்கடவூர்மயானம்) திருமெஞ்ஞானம் பிரம்மபுரீ சுவரர் ஆலயத்திற்குத் தெற்கிலுள்ள அசுபதி தீர்த்தத்தால் மட்டுமே இந்த லிங்கத்திற்கு அபிஷேகம் செய்யப்படுகிறது. இத்தீர்த்தம் நான்குபுறமும் சுவர் எழுப்பிப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இதிலிருந்து தினமும் மாட்டுவண்டி மூலம் பெரிய செப்புப் பாத்திரங் களில் தண்ணீரைக் கொண்டு வந்து அபிஷேகம் செய்கின்றனர்.

❁ காளத்தியிலுள்ள காளத்தியப்பர் லிங்கம் நாகங்களின் பாஷாணத்தால் உண்டாக்கப்பட்டதென்று கூறுகின்றனர். இதற்குச் சூரிய தீர்த்தம் எனும் கிணற்று நீரால் மட்டுமே அபிஷேகம் செய்யப்படுகிறது. இந்த நீருடன் பச்சை கற்பூரம் சேர்த்து அபிஷேகம் செய்கின் றனர். இந்தத் தீர்த்தத்தை சங்கு வடிவமான செப்புப் பாத்திரத்தில் முகந்து அன்பர்களுக்குப் பிரசாதமாக அளிக்கின்றனர். இந்த சூரியதீர்த்தம், ஆலயத்திலிருந்து சொர்ணமுகி ஆற்றிற்குச் செல்லும் வழியில் சிறு மண்டபத்திற்குள் உள்ளது. இதனையொட்டி அமைந் துள்ள சிறு சந்நிதியில் சிவபெருமான் சிவசூர்யனாக எழுந்தருளியிருக்கிறார்.



காவிரியாற்றில் இருந்து இரத்தினகிரி வாட்போக்கி நாதருக்கு சுமார் 8கி.மீ. பயணம் செய்து திருமஞ்சன நீர் எடுத்து வரும் அன்பர்
படம் உதவி கே. ஸ்ரீதரன் தமிழ்நாடு தொல்லியல் துறை

❁ தொண்டைநாட்டுத் திரிபுராந்தகத் தலமான திருவிற்கோலம் இந்நாளில் கூவம் என்று அழைக்கப் படுகிறது. இங்கு வீற்றிருக்கும் சிவலிங்கமூர்த்திக்குத் திரிபுராந்தகேசுவரர் என்பது பெயராகும். இந்தச் சிவலிங்கமூர்த்திக்கு இரண்டு கி.மீட்டர் தொலைவில் ஓடும் கூவம் ஆற்றிலுள்ள திருமஞ்சன மேடை என்ற இடத்திலிருந்து நீர் கொண்டு வந்து நான்கு காலங்களிலும் அபிஷேகம் செய்யப்படுகிறது. வேறு தண்ணீரைக் கொண்டு அபிஷேகம் செய்தால் சுவாமி மீது சிற்றெறும்புகள் படர்ந்து விடும் என்கின்றனர்.

காவிரிக் கரையிலுள்ள தலம் வாட்போக்கி எனும் இரத்தினகிரி மலையாகும். இங்குள்ள மலைமீது பெருமான் இரத்தினகிரீசுவரர் எனும் பெயரில் எழுந் தருளியுள்ளார். இப்பெருமானுக்கு தினமும் காவிரி யாற்றிலிருந்து தண்ணீர் எடுத்து வந்து அபிஷேகம் செய்கின்றனர். அபிஷேக பண்டாரத்தார் எனும் வகுப்பார் ஆண்டாண்டு காலமாகக் காவிரியிலிருந்து மலைக்கோயிலுக்கு நீர் எடுத்துச் சென்று அபிஷேக சேவை செய்து வருகின்றனர்.

இவ்வாறு அனேகத் தலங்களில் சிவலிங்கங்க ளோடு இணைந்த வகையில் தீர்த்தங்கள் உள்ளன. குறிப்பிட்ட சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்ய மட்டுமே இவை பயன்படுத்தப்படுகின்றன. இவற்றின் சிறப்புகருதி இவற்றைச் சுற்றி மதில்களும் மண்டபங் களும் அமைத்துப் பாதுகாத்து வருகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருத்தலங்களில் நிறைந்திருக்கும் தீர்த்தங்கள்

குளங்களை அமைப்பது, பராமரிப்பது; முதலியன மிகுந்த புண்ணியச் செயல்களாகும். முப்பத்தியிரண்டு அறங்களில் ஒன்று குளம் வெட்டுவதாகும். இக்கருத்துக்களை ஒட்டிப் பெரிய தலங்களில் பல தீர்த்தங்கள் அமைக்கப்பட்டன. பெருந்தலங்களில் அதிக அளவு மக்கள் கூடி வழிபடுவதால் அவர்களின் தேவைக்கு ஏற்ப குளங்களும், நீர்நிலைகளும் இருக்க வேண்டியதும் அவசியமாகிறது.

ஒவ்வொரு தலத்திற்கும் பாடப்பட்டுள்ள தலபுராணங்களில் தீர்த்த மகிமை குறித்த அத்தியாயத்தில் அத்தலத்திலுள்ள தீர்த்தங்களின் சிறப்பும், அது உண்டாக்கப்பட்டதற்கான காரணம், அதை உண்டாக்கியவரின் சிறப்பு, அதில் இன்னின்ன காலங்களில் மூழ்குவதால் கிடைக்கும் பலன் ஆகியவை விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. திருத்தலங்கள் தோறும் தேவர்கள், முனிவர்கள், அப்சரஸ்கள், விலங்குகள், பறவைகள், மனிதர்கள், அரசர்கள், நாகர்கள், ஆயுதபுருஷர்கள் முதலியோர் சிறப்புடன் வழிபட்டு, தீர்த்தங்கள் அமைத்ததைத் தலபுராணங்களால் அறிய முடிகிறது. இவற்றில் சிலவற்றைப் பற்றி இங்கே காணலாம்.

புலவர்கள் ஒரு நாட்டின் நீர்வளத்தைக் குறிப்பிடுவதன் மூலம் அந்நாட்டின் செல்வச்சிறப்பையும் வளமையையும் உணர்த்துகின்றனர் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

தீர்த்த யாத்திரை என்றதுமே மக்களின் நினைவுக்கு வருவது காசியும்-ராமேசுவரமும் ஆகும். காசித் தலம் வருணா-அசி என்னும் இரண்டு ஆறுகள் கங்கையோடு கலக்குமிடத்தில் உள்ளது. இரண்டு நதிகளின் நடுவில் இருப்பதால் காசிக்கு "வாரணாசி" எனும் பெயர் வழங்குகின்றது. காசி நகருக்குள் நூற்றுக்கும் மேற்பட்ட தீர்த்தங்கள் உள்ளன. இவை ஒவ்வொன்றின் கரையிலும் சிவமூர்த்தி, விநாயகர், சூரியன், பைரவர் முதலிய பரிவாரங்களுடன் வீற்றிருக்கின்றார்.

இவற்றில் ஆனந்த கூபம், லோலார்க்க குண்டம், துர்க்காகுண்டம், பைரவகுண்டம், கௌரிகுண்டம் என்பன மிக முக்கியமானவையாகும். அன்பர்கள் தினமும் கங்கையில் நீராடி சிறிய கரகத்தில் கங்காநீரை எடுத்துக் கொண்டு சென்று விசுவநாத சுவாமிக்கு அபிஷேகம் செய்து வழிபடுகின்றனர். இங்குப் பஞ்ச குரோச யாத்திரை மேற்கொண்டு ஆங்காங்குள்ள தீர்த்தங்களில் நீராடி அவற்றின் அருகிலுள்ள சிவமூர்த்தங்களை வழிபடுகின்றனர். இந்தத் தீர்த்தங்களைத் தவிர கங்கைக் கரையில் 64 கட்டங்கள் உள்ளன. இவை ஒவ்வொன்றிலும் தனித் தனி பெயர்களுடன் சிவபெருமான் விநாயகர், பைரவர், அம்பிகை ஆகியோருடன் வீற்றிருக்கின்றார்.

கங்கைக் கரையிலுள்ள பஞ்ச கங்கா காட், அனுமன் காட், ஹரிச்சந்திரா காட், தசாஸ்வமேதா காட், மணி கர்ணிகா காட் என்பன சிறப்புடன் திகழ்கின்றன.

சேது எனப்படும் இராமேசுவரம் ஜோதிர்லிங்கத் தலங்களில் ஒன்றாகும். இங்கு இராமர், இராவணனைக் கொன்றதால் உண்டான பிரம்மஹத்தி தோஷத்தைச் சிவலிங்க வழிபாடு செய்து போக்கிக் கொண்டார். அவர் சிவபூசை செய்ய சீதாதேவி வெண்மணலால் உருவாக்கிய லிங்கமே இந்நாளில் இராமலிங்கேசுவரராகத் திகழ்கிறது. இத்தலத்தில் ஆலயப்பிராகாரங்களில் தேவர்களும், தேவியர்களும் உண்டாக்கிய 36 தீர்த்தங்கள் உள்ளன. இவை ஒவ்வொன்றும் சிறு கிணறுவடிவில் உள்ளன. சில இடங்களில் இரண்டு மூன்று கிணறுகள் அடுத்தடுத்து உள்ளன. அக்னிதீர்த்தமாகிய கடலில் மூழ்கிய பின், இவை அனைத்திலும் மூழ்கி இறுதியில் ஆலயத்தின் உட்பிராகாரத்திலுள்ள கோடிதீர்த்தத்தில் மூழ்குகின்றனர். இந்தத் தீர்த்தங்கள் அளவால் சிறியதாக தொட்டிபோல் இருப்பதால் இவற்றுள் இறங்கி நீராட முடியாது. வாளியால் நீரை முகந்து குளிக்கின்றனர். மூன்றாம் பிராகாரத்திலுள்ள லட்சுமிதீர்த்தம் பெரிய திருக்குளமாக விளங்குகிறது. இதன் கரையில் மகா லட்சுமி ஆலயம் உள்ளது.

காசி-ராமேசுவர தீர்த்தயாத்திரை மேற்கொள்பவர்கள் காசியில் விசுவநாதரை வழிபட்டுப் பிரயாகை என்னும் அலஹாபாத் திரிவேணியில் கங்கை நீரை எடுத்து வந்து இராமேசுவரம் இராமநாதருக்கு அபிஷேகம் செய்கின்றனர். அங்கே கடலாகிய அக்னிதீர்த்தத்தில் மூழ்கிக் கொஞ்சம் மண்ணெடுத்து அதைச் சிவலிங்கமாக பூசிக்கின்றனர். பின்னர் அந்த லிங்கத்தை எடுத்துக் கொண்டு, மீண்டும் பிரயாகைக்குச் சென்று அங்கு கங்கை நீரில் கரைத்து விடுகின்றனர். அக்னிதீர்த்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மணல் லிங்கத்தைக் கங்கையில் விடுவதும், கங்கை நீரால் இராமநாதரை நீராட்டி வழிபடுவதுமே காசி-ராமேசுவர யாத்திரையின் முதன்மை நிகழ்ச்சிகளாகும்.

❁ காஞ்சீபுரத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட தீர்த்தங்கள் உள்ளன. இவற்றில் முக்கியமானவை நவக்கிரகங்களால் அமைக்கப்பட்ட பருதிதீர்த்தம், சோம (சந்திர) தீர்த்தம், மங்கள தீர்த்தம் முதலான ஒன்பது தீர்த்தங்களும், முனிவர்களால் அமைக்கப்பட்ட அகத்திய தீர்த்தம், வசிட்டதீர்த்தம், வாமதீர்த்தம் முதலியனவும் சித்தர்களால் அமைக்கப்பட்ட சித்தாமிர்தம், இஷ்டசித்தி தீர்த்தம் முதலியனவும், பார்வதி சிவலிங்கம் அமைத்து வழிபட்ட உலகாணி தீர்த்தம், கம்பாநதி, அவள் நீராடிய போது உண்டான மஞ்சளாறு முதலியனவும், சரஸ்வதி, லட்சுமி முதலியோரால் அமைக்கப்பட்ட லட்சுமி தீர்த்தம், சரஸ்வதிதீர்த்தம், துர்காதீர்த்தம், காளி தீர்த்தம் தேவமாதர்களால் அமைக்கப்பட்ட ஐவர் அரம்பையர் தீர்த்தம், பாம்புகளால் அமைக்கப்பட்ட வாசுகி தீர்த்தம், அனந்ததீர்த்தம், ஆதிசேட தீர்த்தம், மகாகாள தீர்த்தங்களும், ஐராவதத்தால் உண்டாக்கப்பட்ட ஐராவத தீர்த்தம் முதலியனவும் ஆகும். இவற்றின் விளக்கத்தைக் காஞ்சிப் புராணத்தில் காணலாம்.

ஒரு சமயம் உலகிலுள்ள அனைத்து தீர்த்தங்களும் இங்குக் கூடிசிவவழிபாடுசெய்தன. அவை ஒன்று கூடித்திரண்ட இடம் சர்வதீர்த்தம் எனும் பெருங்குளமாக விளங்குகிறது. இதன் கரையில் தீர்த்தங்கள் அமைத்து வழிபட்டலிங்கம் "தீர்த்தேசுவரர்" எனும் பெயரில் தனி ஆலயத்தில் உள்ளது.

❁ நளன் வழிபட்டுப் பேறுபெற்ற திருநள்ளாற்றில் பதிமூன்று தீர்த்தங்கள் உள்ளன. இவற்றில் எட்டு அட்டதிக்குப் பாலகர்களால் உண்டாக்கப்பட்டனவாகும். எஞ்சியவை பிரமன், வாணி, அன்னம், நளன், கங்கை ஆகிய ஐவரால் அமைக்கப்பட்டனவாகும். இவற்றின் பெருமைகளையும், இவற்றில் மூழ்குவதால் உண்டாகும் பலன்களையும் தலபுராணம் விரிவாகக் கூறுகிறது.

❁ வேதாரண்யத்தில் (திருமறைக்காட்டில்) 96 தீர்த்தங்கள் இருந்ததாகப் புராணம் கூறுகின்றது. இவற்றில் கடல்தீர்த்தம், காசிக்கு இணையான மணிகர்ணிகா, வேதாமிர்தம் எனும் ஏரி, விசுவாமித்ர தீர்த்தம், விக்னேசுவரதீர்த்தம் முதலியன முக்கியமானவை. இவற்றில் பெரும்பாலானவை இப்போது காணக்கிடைக்கவில்லை.

❁ திருவண்ணாமலையில் 360 தீர்த்தங்கள் இருந்ததாகச் செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. புராணங்களில் திக்பாலகர்களால் உண்டாக்கப்பட்ட எட்டு தீர்த்தங்களுடன், சக்ரதீர்த்தம், சிவகங்கை தீர்த்தம், திருமுலைப்பால் தீர்த்தம், பவளப்பாறை தீர்த்தம், பிரம்மதீர்த்தம், சூரியதீர்த்தம், அஸ்வினிதீர்த்தம், முதலிய குளங்களும், திருநதி, சோனைநதி, சேயாறு முதலிய ஆறுகளும் தீர்த்தங்களாகக் கூறப்பட்டுள்ளன. இவற்றில் மூழ்கி அண்ணாமலையாரை வழிபடுவதால் உண்டாகும் பலன்கள் அருணாசல புராணத்தில் விரிவாகக் குறிக்கப்பட்டுள்ளன.

❁ திருவிடைமருதூரில் 36 தீர்த்தங்கள் இருந்ததாகத் தலபுராணம் கூறுகிறது. இவற்றில் முதன்மை பெற்று காவிரியில் படித்துறையாக உள்ள இடம் கல்யாணதீர்த்தமாகும். இங்கு, சுவாமி தைப்பூசத்தில் தீர்த்தமளிப்பார். இதற்குப் பூசத்துறை, கல்யாண சிந்து என்பன பெயராகும்.

தென்னகமெங்கும் உள்ள சிறப்புமிக்கத் திருத்தலங்கள் ஒவ்வொன்றிலும் அனேக தீர்த்தங்கள் உள்ளன. இவைகளின் பெருமையும் சிறப்பும் அளவிட்டு அறிய முடியாததாகும்.

பலபெயர்கள் கொண்ட ஒரே தீர்த்தம்

ஒரு தலத்தில் பல தீர்த்தங்கள் இருப்பதைப்போலவே ஒரு பெரிய தீர்த்தக் குளத்துக்குள் பலபெயர்களுடன் பல தீர்த்தங்கள் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக குடந்தை மகாமக தீர்த்தத்திற்குள் கிணறு வடிவில் பதினெட்டு தீர்த்தங்கள் உள்ளன. இவை கங்கை, யமுனை, சரஸ்வதி, நர்மதை, காவேரி, குமரி, பாலி, சரயு, கோதாவரி, அக்னி, யம, வருண, வாயு, குபேர, ஈசான, இந்திர ஆகியனவாகும். இக்குளத்தின் நடுவில் 66 கோடி கன்னியர்களால் அமைக்கப்பட்ட கன்னி தீர்த்தம், தேவ தீர்த்தம் முதலியனவும் உள்ளன. இதன் கரையில் மேலே குறிக்கப்பட்ட தேவதைகள் வழிபட்ட பதினாறு சிறு சிவாலயங்கள் உள்ளன.

சில தீர்த்தங்களின் நான்கு படித்துறைகளுக்கும் நான்கு பெயர்கள் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, காஞ்சி கச்சபேசுவரர் ஆலயத்தில் உள்ள தீர்த்தத்தின் நான்குபடித்துறைகள் தர்ம சித்தி, மோட்ச சித்தி, அர்த்த சித்தி, காம சித்தி என்றும் நடுப்பகுதி இஷ்ட சித்தி என்றும் அழைக்கப்படுகின்றன. மேலும் இதற்குத் தேவி தீர்த்தம், பிரம்ம தீர்த்தம், சூரிய தீர்த்தம் எனும் பெயர்களும் உள்ளன. சில தீர்த்தங்களுக்கு ஒவ்வொரு யுகத்திலும் ஒவ்வொரு தனிப் பெயர் வழங்குவதையும் காண்கிறோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நவநதி தேவியர் ஆலயம்

"நவம்" என்பதற்கு ஒன்பது என்பதுடன் புதியது என்பதும் பொருளாகும். வற்றாது நீர் ஓடிக் கொண்டே இருக்கும் ஜீவநதிகள் - நவநதிகள் என்று அழைக்கப்பட்டன. ஆறுஓடிக் கொண்டே இருப்பதைக் காணும் போது நிரந்தரமான பரந்த நீர்ப்பரப்பைக் காண்கிறோம். குறிப்பிட்ட இடத்திலிருந்து நோக்கினால் கணந்தோறும் பழைய நீர் ஓடிடப் புதிய நீர் வந்து கொண்டே இருக்கிறது. எனவே தண்ணீர் எப்போதும் புதியது (நவம்) ஆகும். இதையொட்டி ஓடிக் கொண்டே இருக்கும் ஆற்றை நவநதி என்ற அழைக்கிறோம்.

இங்குக் கூறப்படும் நவநதிகள் அகண்ட பாரத தேசத்தில் ஓடும் ஒன்பது புனித நதிகளாகும். இவற்றின் பெயர்கள் முறையே 1) சிந்து, 2) கங்கை, 3) யமுனை, 4) சரஸ்வதி, 5) காவேரி, 6) கோதாவரி, 7) குமரி, 8) சரயூ, 9) நர்மதா என்பனவாகும்.

பூசைகளின் ஆரம்பத்தில் செய்யப்படும் சங்கல்பத்தில் இந்த நதிகளின் பெயர்கள் கூறப்படுவதுடன் நாம் மேற்கொள்ளும் பூசையை இவற்றின் கரையில் செய்வதால் என்ன பலன் கிடைக்குமோ, அந்த ""பலனைத் தருமாறு நதிதேவதைகளிடம் பிரார்த்தனையும் செய்யப்படுகிறது.

ஒரு முறை இந்த நதிகள் தமது துணை நதிகளுடன் சிவபெருமானை அடைந்து. "பெருமானே மக்கள் எங்களிடம் மூழ்கிப் பாவங்கள் நீங்கித் தூய்மை பெறுகின்றனர். ஆனால் அவர்களிடமிருந்து விலகிய தீமைகள் எங்களைப் பற்றி வருத்துகின்றன. அதனால் நாங்கள் மிகுந்த துன்பம் அடைகிறோம். எங்களிடம் சேர்ந்துள்ள பாவங்களைக் கழிக்க வகை கூறுங்கள் என்றனர்.

அவர், "நதிப்பெண்களே நீங்கள் சிலகாலம் காசியில் தங்கியிருங்கள். நாம் குரு சிம்மராசியில் பிரவேசிக்கும் மகநக்ஷத்திர வேளையில் தென்பாரதத்தின் நடுவிலுள்ள குடந்தை மாநகருக்குச் செல்வோம். அங்கு அறுபத்தாறுகோடி கன்னியர்கள் உண்டாக்கிய கன்னி தீர்த்தம் உள்ளது. அதன் நடுவில் நாமும் தீர்த்தமாக விளங்குவோம். அப்போது நீங்கள் எம்முள் மூழ்கி உமது பாவங்களை நீக்கிக் கொள்ளலாம் என்றார். அந்த நதிகளும் துணை நதிகளும் காசியில் தங்கி விசுவ நாதரை வழிபட்டன.

பின்னர், ஓர்நல்ல நாளில் அவருடன் குடந்தைக்கு வந்தனர். அங்கு. சிவபெருமான் காட்டிய குடந்தை கும்பேசர். பாணபுரேசர். வில்வேசுவரர். பிரமேசர் முதலான திருக்கோயில்களை வழிபட்டபின் அங்குள்ள மகாமக தீர்த்தத்தின் கரைகளில் தத்தம் பெயரால்



• கங்கை - யமுனை - நர்மதா - சரஸ்வதி - காவேரி - கோதாவிரி - துங்கபத்திரா - கிருஷ்ணா - சரயூ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தனித்தனியாகத் தீர்த்தமும் கோவிலும் அமைத்தனர். அவர்களுடன் அஷ்ட திகுபாலகர்களும் தத்தம் பெயரால் தீர்த்தங்களை அமைத்தனர். (ஆக பதினெட்டு தீர்த்தங்கள் அங்கு அமைந்தன.) பின்னர், சிம்மராசியில் குருபகவானும் மகநக்ஷத்திரத்தில் சந்திரனும் நிற்கும் புனித வேளையான "மகாமக காலத்தில்" அந்த நதிப் பெண்கள் கன்னி தீர்த்தத்தில் மூழ்கினர். அவர்களின் பாவங்கள் தொலைந்தன. புனிதம் பெற்ற அவர்களின் உடல் பொன்னொளி வீசிப் பிரகாசித்தது. அவர்கள் சிவபெருமானை வணங்கி விடைபெற்றுக் கொண்டு, தனது அம்சத்தில் ஒரு கூற்றை அத்தலத்தில் விட்டு விட்டுத் தமதிருப்பிடம் சென்றனர்.

நதிக் கன்னியர் குடந்தைக் கன்னி தீர்த்தத்தில் மூழ்கிப் பேறு பெற்ற காலம் மகாமக புண்ணிய காலம் என்று அழைக்கப்படுகிறது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வரும் அந்நாள் மகாமகம் என்று பெரிய விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

குடந்தை (கும்பகோணம்)யிலுள்ள மகாமக தீர்த்தத்தின் வடகரையில் இருக்கும் காசி விசுவநாதர் ஆலயத்தில் ஒன்பது நதி தேவதைகளின் பெரிய கல் திருவுருவங்கள் தனிச் சந்நிதியில் நிலைப்படுத்தப்பட்டு தினப்பூசைகள் செய்யப்படுகின்றன. ஒன்பது பெண்களும் தெய்வவுருவில் ஒரே சந்நிதியில் வரிசையாக மகாமக தீர்த்தக் குளத்தை நோக்கியவாறு எழுந்தருளியிருப்பது கண்கொள்ளாக் காட்சியாக உள்ளது. இவர்களைப் போற்றும் நூற்றெட்டு போற்றிகள் தலபுராணத்தில் உள்ளது.

வேதாரண்யத்திற்கு அருகிலுள்ள திருத்தலம் திருஉசாத்தனம் ஆகும். இந்நாளில் வடகாடு கோயிலூர் என்று அழைக்கப்படுகிறது. இங்குள்ள மந்திரபுரீசுவரர் ஆலயத்தின் வடக்குப் பிரகாரத்தில் நவதீர்த்தங்களைக் குறிக்கும் நவகன்னியர் திருவுருவம் நிலைப்படுத்தி வணங்கப்படுகின்றது. இதில் கங்கையும் காவிரியும் நான்குகரங்கள் கொண்டுள்ளனர். இராமருக்கு சிவபெருமான் மந்தர உபதேசம் செய்த போது நவதீர்த்தங்களும் இங்கு வந்ததாகக் கூறுகின்றனர்.

❁ தேவாரத்துள் குடந்தையில் கீழ்க்கோட்டத் துப்பிரான் பொங்கிவரும் காவிரி, நல்ல யமுனை; கங்கை, சரஸ்வதி, பொற்றாமரை, புஷ்கரணி, தெள்ளிய நீர், கோதாவரி, குமரி ஆகிய நவதீர்த்தங்கள் சூழ்ந்திருக்க மையத்தில் வீற்றுள்ளார் என்பதைத் திருநாவுக்கரசர்,

"தாவிமுதல் காவிரிநல் யமுனை கங்கை
சரஸ்வதி பொற்றாமரை புஷ்கரணி தெண்ணீர்
கோவியோடு குமரிவரு தீர்த்தம் சூழ்ந்த
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெம் கூத்தனாரே"

என்று பாடியருள்கின்றார்.

திருமந்திரத்துள் நவதீர்த்தங்கள்

தமிழ் மறையாகிய திருமந்திரத்துள் திருமூலர் நவதீர்த்தங்கள் தென்னாட்டில் இருப்பதனாலேயே அது மிக உயர்ந்ததாகவும் ஞான பூமியாகவும் திகழ்கிறது என்பதனை,

"ஈறான கன்னி குமரியே காவிரி
வேறான நவதீர்த்தங்கள் மிக்குள்ள வெற்பேழும்
பேறான வேதாகமே பிறத்தலான்
மாறான தென்திசை வையகஞ் சுத்தமே"

எனும் பாடலால் குறிக்கிறார். இதில் நவதீர்த்தங்களாகக் குறிக்கப் பட்டவை பொன்முகலி (சுவர்ணமுகி), பாலி (பாலாறு), தென்பெண்ணை, மணிமுத்தாறு, நிவா (பொன்னை), காவிரி (பொன்னி), வைகை, தென்பொருணை (தாம்பர பரணி) குமரியாறு என்பனவாம். இவை வடவேங்கடம் முதல் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகத்தில் ஓடுவனவாகும்.

தீர்த்த தேவதைகள்

புனித தீர்த்தங்களுக்கு இரண்டு உருவம் உண்டு. ஒன்று அணிமணிகள் பூண்ட அழகிய பெண் வடிவம், மற்றது ஓடும் நதியின் வடிவம். புராணங்களில் கங்கை, காவிரி, யமுனை, சரஸ்வதி முதலான நதிகளின் சிறப்புமிக்கப் பெண் வடிவங்களின் திருமேனி அழகைப் போற்றித் துதிக்கும் பாடல்கள் உள்ளன. சிற்ப நூல்களிலும் நதிபெண்களின் உருவங்களை விளக்கும் தியான சுலோகங்கள் உள்ளன. இவற்றின்படி கங்கை, முதலை வாகனத்தில் பூரணகும்பம் தாமரை மலர் ஆகியவற்றை ஏந்தி பவனி வருகிறாள். யமுனை ஆமை வாகனத்தில் நீலோற்பல மலரும் குடமும் ஏந்தி வலம் வருகிறாள். பாண்டிநாட்டுச் சிவாலயங்களில் கங்கையும், யமுனையும் அம்பிகை சந்நிதி வாயிலில் துவாரபாலகிகளாக உள்ளனர்.

கங்கை, யமுனை, கோதாவிரி, பாலாறு, காவிரி, வைகை, குமரி முதலிய அனேக ஆறுகள் உற்பத்தி ஆகும் இடங்களில் அந்த நதி ஒரு கோமுகத்தின் வாய் வழியாக வெளிப்பட்டு ஒரு தொட்டியில் விழுந்து பெருகி ஓடும்படி செய்துள்ளனர். தொட்டியின் மேல்புறம் சிறு ஆலயத்தில் அந்த நதி தெய்வத்தின் திருவுருவம் நிலைப்படுத்தி வணங்கப்படுகிறது. நதிகளேயன்றி குளங்கள், அருவிகள், சுனைகள் முதலியனவும் பெண் வடிவம் தாங்கி அருள்பாலிக்கின்றன. காசிக்கண்டத்தில் "மணிகர்ணிகா" எனும் திருக்குளம் தெய்வ உருவுடன் திகழ்வது குறிக்கப்பட்டுள்ளது. தீர்த்தங்களின் மகாராணியான இவள் அபய முத்திரை கிடாரம்பழம், செங்கழுநீர்ப் பூக்கள் தாங்கி முத்து மாலை அணிந்து பிரகாசிக்கிறாள் என்று அந்நூலில் கூறப்பட்டுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தீர்த்தமாடலுக்குரிய தெய்விக மாதங்கள்

ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி ஆகிய ஐந்து மாதங்களும் நீராடலுக்குரிய மாதங்களாகும். ஐப்பசியில் அசுவினி, கார்த்திகையில் கிருத்திகை, மார்கழியில் திருவாதிரை, தையில் பூசம், மாசியில் மகம் ஆகிய விண்மீன்களின் காலம் ஐந்தும் பௌர்ணமி தினங்களாகும். ஆனியில் தொடங்கும் மழைக்காலம் சிறிது சிறிதாகப் பெருகி ஐப்பசியில் அடைமழையாக மாறும். ஆறுகளில் புதுப்புனல் பொங்கி வரும். அதைத் தொடர்ந்து பனிக்காலம் வரும். இந்த மழைக்காலமும் பனிக்காலமுமே அதிகாலை நீராடலுக்கு உரிய மாதங்களாகும். இந்த ஐந்து மாதங்களில் நீராடு வதைப் புராணங்கள் தனிச்சிறப்புடன் போற்றுகின்றன. ஐப்பசி நீராடலைத் துலாக்காவேரி மகாத்மியமும் மார்கழி நீராடலைத் திருப்பாவை, திருவெம்பாவையும், தைநீராடலைத் தேவாரம், திருவிடைமருதூர்ப் புராணம் முதலியனவும், மாசி நீராடலை மாகபுராணமும் விரிவாகக் கூறுகின்றன.

ஐப்பசி நீராடல்

ஐப்பசி மாதம் துலாமாதம் என்றழைக்கப்படுகிறது. இந்தத் துலாமாதம் முழுவதும் காவிரியில் நீராடி சிவனை வழிபட்டால் அனைத்து செல்வங்களும் கிடைக்கும் என்று காவிரிப் புராணமும் தல புராணங்களும் கூறு கின்றன. மயிலாடுதுறையில் மயூரநாதரும் மங்களாம் பிகையும் ஐப்பசிமாதத்தில் தினமும் அதிகாலையில் காவிரியிலுள்ள துலாக்கட்டத்திற்கு எழுந்தருளி தீர்த்தம் அளிக்கின்றார்கள். ஐப்பசிமாத இறுதிநாளில் நீராடுவது தனிச்சிறப்பு பெற்றுள்ளது. இதனைக் கடைமுகஸ்நானம் என்று அழைக்கின்றனர். ஏராளமான மக்கள் இந்நாளில் நீராடி மகிழ்கின்றனர்.

ஒரு முடவன் துலாஸ்நான மகிமையைக் கேள் விப்பட்டு ஐப்பசி மாதம் நீராட இவ்வூருக்கு வந்தான். அவனால் குறிப்பிட்ட வேளையில் இங்கு வரமுடிய வில்லை. அதற்குள் கார்த்திகைமாதம் பிறந்து விட்டது. அவன் வருந்திச் சிவனைநோக்கி முறையிட்டான். சிவ பெருமான் அவனை கார்த்திகை மாதம் முதல் தேதி யன்று குளிக்கும்படி செய்து அவனுக்குத் துலாமாதத்தில் தீர்த்தமாடிய பலனை அளித்தார். அதையொட்டி கார்த்திகை மாதம் முதல் தேதி காவிரியில் நீராடுவதை "முடவன் முழுக்கு" என அழைக்கின்றனர்.

துலாஸ்நான மகிமை, துலாக் காவேரி புராணம் முதலிய நூல்கள் ஐப்பசிக் காவேரி நீராடலைச் சிறப் பித்துப் பேசுகின்றன.

கார்த்திகை நீராடல்

கார்த்திகை சூரியனுக்குரிய மாதமாகும். சூர்ய தீர்த்தம் உள்ள இடங்களில் கார்த்திகை ஞாயிற்றுக் கிழமைகளில் மூழ்குவோர் சிறந்த கண்ணொளி, அழகிய உடல், சிறந்தஞானம் ஆகியவற்றுடன் விரும்பியதை விரும்பியவாறு பெறுவர் என்று கூறப்படுகிறது.

காஞ்சிபுரத்தில் ஜோதிலிங்கமான கச்சபேசர் ஆலயத்தில் கார்த்திகை மாத ஞாயிற்றுக்கிழமைகளில் சிறப்புவிழாக்கள் கொண்டாடப்படுகின்றன. அப்போது இங்குள்ள இஷ்டசித்தி எனப்படும் சூர்யதீர்த்தத்தில் மூழ்கி அன்பர்கள் கச்சபேசப் பெருமானையும் கரை யிலுள்ள சூர்யலிங்கம், சூரியபகவான் ஆகியோரையும் வழிபடுகின்றனர்.

விரிஞ்சிபுரம் மார்க்கசகாயர் ஆலயத்தில் கார்த் திகை ஞாயிற்றுக் கிழமைகளில் சிறப்பு வழிபாடு செய் யப்படுகிறது. இங்குள்ள சிம்மதீர்த்தத்தில் பிள்ளைவரம் வேண்டி மூழ்கி வழிபடுபவர்களுக்கு பிள்ளைப் பேறு உண்டாகுமென்று நம்பப்படுகிறது. கடைஞாயிற்றுக் கிழமை தனிச்சிறப்புடன் கொண்டாடப்படுகிறது.

காசிக்காண்டம் கார்த்திகையில் காசியில் உள்ள தீர்த்தங்களிலும் கங்கையிலும் நீராடுவதால் கிடைக்கும் பயன்களை விரிவாகக் கூறுகிறது.

மார்கழி நீராடல்

மார்கழி நீராடல் மார்கழி நோன்பு என்றும் பாவை நோன்பு என்றும் அழைக்கப்படுகிறது. இது மார்கழி திருவாதிரையில் தொடங்கித் தைப்பூச நிறைமதி நாளில் முடிவதாகும். இதன் விரிவை அடுத்த பக்கத்தில் காண்க.

தைமாதப் பூசம் புகுந்தாடல்

தைமாதப் பௌர்ணமியான பூச நட்சத்திரத்தில் புனலாடுதல் தனிச்சிறப்புடன் போற்றப்படுகிறது. இத னைப் பூசம் புகுந்தாடுதல் என்று அழைக்கின்றனர். திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமி ஆலயத்தில் தைப் பூச விழா சிறப்புடன் கொண்டாடப்படுகிறது. தேவாரத் தில், "வருத்திய மாதவத்தோர், வானோர், ஏனையோர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வந்து" தைப்பூசத்தில் நீராடி மகிழ்கின்றனர் என்றும் சிவபெருமானே பூச நீராடிப் பொலிந்து அழகாக விளங்குகின்றான் என்றும் திருஞானசம்பந்தர் பாடுகின்றார். திருநாவுக்கரசர் திருவிடைமருதூருக்குப் பூசப் புனலாடல் ஆடவே தாம் வருவதாகக் குறிக்கின்றார். கடுவாய்க்கரைப்புத்தூர் தேவாரத்திலும் பூச நீராடல் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது.

தைப் பூசத்தில் பல ஆலயங்களில் பெருந்திருவிழாவும் தீர்த்தவாரியும் கொண்டாடப்படுகின்றன.

மாசிப் புனலாடல்

மாசிமாதம் - கும்பமாதம் என்றழைக்கப்படுகிறது. இதையொட்டி புனித நீர்நிலைகளில் நடைபெறும் நீராட்டு விழாக்களுக்குக் "கும்பமேளா" என்பது பெயராயிற்று. பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கங்கையுடன் யமுனையும் சரஸ்வதியும் கூடும் சங்கமத் துறையான (அலகாபாத்) (பிரயாகை) திரிவேணி சங்கமத்தில் பெரிய அளவில் கும்பமேளா நடைபெறுகிறது. உலகின் பலபாகங்களில் இருந்தும் லட்சக்கணக்கான மக்கள் இங்கு வந்து நீராடிப் புனிதம் பெறுகின்றனர். சுமார் 40 நாட்களுக்கும் மேலான இவ்விழா சிறப்புடன் கொண்டாடப்படுகின்றது.

இதற்கு இணையாகத் தென்னாட்டில் நடைபெறுவது மகாமகப்பெருவிழா ஆகும். இதுவும் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கும்பராசியில் குரு வீற்றிருக்கும் காலத்தில் குடந்தை மாநகரில் மகாமக தீர்த்தத்தில் கொண்டாடப்படுகிறது.

விசாலமான இத்தீர்த்தக் குளம் கும்பகோணத்தில் நகரின் மையத்தில் அமைந்துள்ளது. குடந்தை நகரிலுள்ள அனைத்து தெய்வங்களும் தீர்த்தவாரி கொண்டாடுவதற்கு இக்குளத்திற்கு மகாமகப் புண்ணிய காலத்தில் எழுந்தருள்கின்றனர்.

மாசிமாத நீராடலின் பெருமைகளை மாகபுராணமும், மாகபுராண அம்மானையும் விரிவாகக் கூறுகின்றன. இவற்றை மாசி மக நீராடலின் போது படிக்கச் சொல்லிக் கேட்பது வழக்கம்.

இந்த ஐந்து மாதத் தீர்த்தமாடல் விழாக்களின் பெருமைகளை இன்னும் அனேக நூல்கள் விரிவாகக் கூறுகின்றன.

❖ ஐப்பசியில் ஆறுகளிலும், கார்த்திகையில் சுனைகளிலும், மார்கழியில் குளங்களிலும், மாசியில் கடலிலும் தீர்த்தமாடுவது சிறப்புடையது. புராணங்களில் மாசிக் கடலாடுதல், பங்குனி உத்திரத்தில் நீராடுதல் முதலியன சிறப்பித்துப் பேசப்பட்டுள்ளன.

பாவை நீராடல்

தமிழர்களின் நெடுநாளைய சமய வழக்கங்களில் ஒன்று தை நீராடலாகும். மார்கழி மாதப் பௌர்ணமியான திருவாதிரையில் தொடங்கி அதற்கு அடுத்த தை மாதப் பௌர்ணமியான பூச நட்சத்திரத்தில் நிறைவுறும் வகையில் இது கொண்டாடப்படுகிறது. பூசத்தில் நிறைவு பெறுவதால் இதனைப் பூசம் புகுந்தாடல் எனவும் அழைக்கின்றனர். தேவாரத்துள் இதனை "பூசம் புகுந்தாடல்" என்றே குறித்துள்ளனர்.

இதில் இளம்பெண்கள் ஒருவரை ஒருவர் எழுப்பிக் கொண்டு கூட்டமாக ஆறு, குளம் முதலிய தீர்த்தக் கரைகளுக்குச் சென்று அந்நீரில் குடைந்தாடி மகிழ்ந்து கரையில் வண்டல் மண்ணால் பாவையைச் செய்து அதற்கு மலரிட்டு நல்ல மழைபெய்யவேண்டும், மாடு கன்றுகள், பெருக வேண்டும், நல்ல கணவனும் மகிழ்ச்சியான வாழ்வும் கிடைக்கவேண்டும் என வேண்டுவர். இதற்குப் பாவை நோன்பு என்பது பெயராகும். இதன் மையச்சடங்கு பெண்கள் நீராடி மகிழ்வதேயாகும். அவ்வேளையில் அந்த நீர் மகாசக்தியின் அருள் வடிவமாக இருப்பதாக நம்பினர்.

ஸ்ரீமாணிக்கவாசகசுவாமிகள், திருவண்ணாமலையில் எழுந்தருளியிருந்தபோது மார்கழி மாதமாக இருந்தது. பெண்கள் கூட்டம் கூட்டமாகச் சென்று நீராடிப் பாவை நோன்பு நோற்பதைக் கண்டார். அதைக் கருத்தில் கொண்டு திருவெம்பாவையைப் பாடினார்.

இதில் பெண்கள் ஒருவரை ஒருவர் எழுப்பி நோன்பு நோற்கச் செல்லுதல், சிவபெருமானை வாழ்த்திப் பாடுதல், நீராடுதல், அவ்வேளையில் பூம்புனல் சிவபெருமானும்-உமாதேவியாரும் போன்று விளங்குவது; அந்தக் குளமே திருக்கோயிலாகத் திகழ்வது. பெண்கள் நல்ல கணவனை அடைய வேண்டி நீராடுதல், ஆகியவற்றை அடிகளார் அழகிய சொல்லோவியங்களாகக் குறித்துள்ளார்.

இதன் பன்னிரண்டாம் பாடலில், "ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆடும் தீர்த்தன் நல்தில்லை சிற்றம்பலத்தே தீயாடும் கூத்தன்" என்று சிவபெருமானையே பெரும் தீர்த்தமாக அவர் குறிக்கின்றார்.

அடுத்தபாடலில் அவர் பெண்கள் மகிழ்ந்து குடைந்தாடும் பெரியகுளத்தினைச் சிவாலயமாகப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பார்க்கின்றார். அங்கு மலர்ந்துள்ள செங்கழுநீர்ப் பூக்கள் அம்பிகையாகவும், தாமரை மலர்கள் சிவபெருமானாக வும், வெண்கொக்குகள் முழுநீறு பூசிய முனிவர்களாக வும், தவளைகள், பறவைகள் ஆகியன எழுப்பும் சத் தம் அடியவர்கள் முழங்கும் அரகர என்ற ஒலியாகவும், நீராட வருவோர் சிவபக்தர்களாகவும் காட்சியளிக்கின் றனர். அதனால் பொய்கையே சிவாலயமாகத் தோன்று கிறது என்கிறார். மேலும் அதில் நிறைந்துள்ள தண்ணீர் சிவபெருமானும் உமாதேவியும் இணைந்து வழங்கும் அருளாக விளங்குகின்றது என்றும் பாடியருள்கின்றார்.

சிவபெருமானின் திருவருளே பராசக்தியாக பெண்உருத்தாங்கி வெளிப்பட்டு அன்பர்களுக்கு அருள்பாலிக்கின்றது. அந்த அருளின் திருவடிவங் களில் ஒன்று மழையாகும். மழையில்லையேல் இந்த உலகமில்லை இதையொட்டியே திருவள்ளுவநாயனார்

"விசும்பின்துளி வீழின் அல்லால் மற்று ஆங்கே
பசும்புல் தலை காண்பரிது"

என்றார். மழைபொழியாது போனால் பசும் புல்லின் நுனியைக்கூடக் காணமுடியாது என்பது இதன் பொருள் சிவபெருமானின் அருள் வடிவான பராசக்தியின் அரு ளைப் போல் மழைபொழிய வேண்டுமென்று பெண்கள் வேண்டுவதாக அடிகள் குறிக்கின்றார்.

பதினாறாம் பாடலில் கடல் நீரை ஆவியாக்கி நீருண்ட மேகமே நீ, எமது பார்வதி தேவியின் திருமேனி யைப்போல் கருத்து, அவளுடைய இடையைப் போல் மின்னல் மின்னி, சிலம்புகள் ஒலிப்பது போல் இடி இடித்து, புருவங்களைப் போன்ற வானவில்லைக் காட்டி அவள் எம்மை ஆளாக உடைய சிவபெருமானின் அடியவர்களுக்கு அருள் புரிவது போல் பெருமழை யாகப் பொழிவாய் என்று கேட்பது படித்து இன்புறத் தக்கதாகும்.

சிவபெருமானை நீர்மயமாகவும், பராசக்தியை அவனுடைய அருள் மழையாகவும் பாடிப் பரவுவது



வேறிடத்தில் காணமுடியாததாகும்.

❁ திருவெம்பாவையை போன்றே திருப்பாவை யில் ஆண்டாள் நல்லமழைவேண்டியும், நல்ல கண வனை வேண்டியும், பெண்கள் பாவை நோன்பு நோற்ப தாகப் பாடியுள்ளாள்.

❁ காளஹஸ்தியில் மார்கழி மாதம் முழுவதும் கொப்பி அம்மன் என்னும் தனியம்மன் அதிகாலையில் வீதிவலம் வருகின்றாள். முன்னாளில் இந்த அம்பிகை யை தலத்தைச் சுற்றியுள்ள திருக்குளங்களுக்கும் பொன் முகலி ஆற்றிற்கும் எடுத்துச் சென்று அதி காலையில் நீராட்டும் வழக்கம் இருந்ததென்று கூறுகின்றனர். இவளோடு இளம் பெண்கள்கூட்டமாகச் சென்று நீராடும் வழக்கம் இருந்ததாகவும் கூறுகின்றனர்.

❁ ஜைன சமயப் புலவர்களும், வேதாந்த அறிஞர்கள் பலரும் திருவெம்பாவை எனும் தலைப்பில் பல நூல்களைப் பாடியுள்ளனர்.

வேதாந்த நூல்களில் ஆனந்தப் பேராற்றில் குடைந்து மகிழ்ந்தாட உயிர்களை அழைக்கும் விதத்தில் பாடல்கள் அமைந்துள்ளன.

தீர்த்தம் பிரசாதமாக வழங்கப்படும் தலங்கள்

சிவாலயங்களில் விபூதியும், திருமால் ஆலயங்களில் தீர்த்தமும் துளசியும், அம்பிகை ஆலயங்களில் குங்குமமும் பிரசாதமாக அளிக்கப்படுகின்றன. ஆனால் காளத்தியிலுள்ள காளத்தீசுவரர் சந்நிதியில் பச்சைக் கற்பூரம் கலந்து பெருமானுக்கு அபிஷேகம் செய்த நீரே பிரசாதமாக அளிக்கப்படுகிறது.

இதுபோன்றே திருச்செங்கோட்டில் மலையின் உச்சியிலுள்ள அர்த்தநாரீசுவரர் சந்நிதியில் இறைவனின் பாதத்தில் ஊறும் நீரே பிரசாதமாக அளிக்கப்படுகிறது. இந்த தீர்த்தத்திற்குத் தேவதீர்த்தம் என்பது பெயராகும். இதைத் தொடர்ந்து அருந்திவந்தால் குஷ்டம் முதலான கொடிய நோய்களும் தீர்ந்துவிடுமென்று நம்பப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருவுருவங்களுடன் கூடிய தீர்த்தங்கள்

சிம்மக்கிணறு -திருவிடைமருதூர்

தென்னகமெங்கும் அமைந்துள்ள தீர்த்தங்களில் பெரும்பாலானவை குளம் அல்லது கிணறுவடிவில் அமைந்தவை. இவை சதுரம் அல்லது வட்டவடிவிலுள்ளன. திருக்குளங்கள் விசாலமாக இருப்பதால் அன்பர்கள் இவற்றில் இறங்கி நீராடி மகிழ நாற்புறமும் படிகள் அமைத்துள்ளனர். கிணறுகளிலிருந்து நீரைக் குடங்களில் முகந்து நீராடுவதே வழக்கமாகும். எனவே இவற்றிற்குப் படிகள் அமைக்கப்படுவதில்லை அபூர்வமாகச் சில இடங்களில் கிணற்றின் அடிவரை எளிதில் இறங்கிச் சென்று நீராடும் வகையில் படிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவை நடைபாவிக் கிணறுகள் என்று அழைக்கப்படுகின்றன. இந்தப் படிகளின் தொடக்கத்தில் பெரிய அளவில் இடபம், யானை, சிங்கம், முதலிய உருவங்களை அமைத்துள்ளனர். இத் திருவுருவங்களின் மார்பில் அமைக்கப்பட்டிருக்கும் வாயிலில் நுழைந்து கீழ் நோக்கிச் செல்லும் படிகள் வழியாக தீர்த்தத்தின் அடிப்பகுதி வரை செல்லலாம்.

சிம்ம தீர்த்தங்கள் எனும் பெயர் கொண்ட தீர்த்தங்களின் நுழைவாயில் பெரியசிங்கத்தின் வடிவில் அமைக்கப்பட்டுள்ளன. விரிஞ்சிபுரம் மார்க்கசகாயர் ஆலயம். குடியாத்தம் கருப்புலீசுவரர் கோயில், கங்கை கொண்ட சோழபுரம் சோழீசர் ஆலயம் திருவிடைமருதூர் மகாலிங்கசாமி ஆலயம் முதலிய ஆலயங்களில் சிங்கவடிவுடன் கூடிய நடைபாவிக் கிணறுகள் இருக்கின்றன. திருவண்ணாமலையில் கிரி சுற்றும் பாதையிலுள்ள சிறிய குளத்தின் படிகளின்மீது பெரிய சிங்க உருவம் அமைந்திருப்பதும் குறிப்பிடத் தக்கதாகும். திருமுருகன் பூண்டியில் இடபத்தின் உட்சென்று நீராடும் வகையில் தீர்த்தம் உள்ளது.

திருக்குளங்களாக விளங்கும் தீர்த்தங்களின் கரையிலும் திருவுருவங்களை அமைக்கும் மரபும் உள்ளது. திருவண்ணாமலை, திருக்கழுக்குன்றம் முதலிய தலங்களில் நந்தி தீர்த்தம் என்பதைக் குறிக்கும் வகையில் குளக்கரையில் நந்தியின் திருவுருவம் பெரிய மேடையில் அமைக்கப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் உலகாணி தீர்த்தத்தின் படித்துறையில் காவல் தெய்வங்களாகப் பெரிய அளவிலான பூதன் பூதகி வடிவங்கள் சுதையால் அமைக்கப்பட்டுள்ளன.

மயிலாடுதுறையிலும் கும்பகோணத்திலும் காவிரிக்கு நடுவேயுள்ள மண்டபத்தில் நந்தியின் உருவம் அமைக்கப்பட்டிருக்கின்றன. மாணிக்கவாசகர் அவதரித்த திருவாதவூரில் ஏரியின் மதகில் காவல் தெய்வங்களாக புருஷா மிருகங்களின் திருவுருவங்கள் அமைக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.,

தீர்த்தக் குளங்களின் நாலாபுறமும் மதில் அமைக்கப்பட்டு அவற்றின் மீது வரிசையாக நந்தியின் உருவங்களும் நான்கு முனைகளில் பூதவடிவங்களும் வாயிலின்மீது அதிகாரநந்தி வடிவங்களும் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

பஞ்சநதிவாணன் - ஐயாற்று அண்ணல்

ஐந்து நதிகள் கூடுமிடம் "பஞ்சநதம்" என்று அழைக்கப்படுகிறது. இந்த இடங்களில் சுவாமி பஞ்சநதீசுவரர் எனும் பெயரில் எழுந்தருளியுள்ளார். வடநாட்டில் காசியிலும் தென்னாட்டில் திருவையாற்றிலும் பஞ்சநதீசுவராகப் பெருமான் வீற்றிருக்கின்றார். காசியில் கங்கா, யமுனா, சரஸ்வதி எனும் குண்டங்களிலிருந்து பெருகி வரும் ஆறுகளுடன் கிரணா, தூத்பாபா எனும் நதிகளும் கலக்குமிடம் பஞ்சநதம் எனப்படுகிறது. அதன் பெருமைகளை காசிகாண்டம் விரிவாகக் கூறுகிறது. கார்த்திகை மாதத்தில் இதில் நீராடினால் புத்ரபாக்யம் கிடைக்கும் என்று நம்பப்படுகிறது. இங்கு பஞ்சநதீசுவரர் ஆலயம் உள்ளது.

தென்னகத்துப் பஞ்சநதீச்சரம் காவிரிக்கரையிலுள்ள திருவையாறு ஆகும். கங்கைநீர், கமலத்தோன் கமண்டலநீர், உமையம்மை கொங்கைநீர், கொண்டல் நீர், குளநந்தி வாய்நுரை நீர் ஆகிய ஐந்தும் கூடிக் காவிரியில் சங்கமமாகும் இடமே ஐயாறு எனப்பட்டது. கங்கைநீர் என்பது மூல லிங்கத்தைச் சுற்றிப் படந்துள்ள ஜடாமண்டலத்திலிருந்து ஊறி வரும் நீர் ஆகும். பிம்மன் தன் கமண்ட நீரால் உண்டாக்கிய கமண்டல தீர்த்தம், அம்பிகையின் முலைப்பால் பெருகி நிறைந்த திருமுலைப்பால் தீர்த்தம், இந்திரன் மேகங்களைக் கொண்டு அமைத்த கொண்டல் தீர்த்தம், நந்தி தீர்த்தம், கங்கை ஆகிய ஐந்து தீர்த்தங்களில் இருந்து உற்பத்தியாகும் ஊற்று நீர் கண்ணுக்குப் புலனாகாமல் பூமிக்கடியிலேயே சென்று இத்தலத்தில் காவிரியில் கலக்கின்றன. இதையொட்டி இறைவன் பஞ்சநதீசுவரர் என்று அழைக்கப்படுகின்றார்.

கொல்லி மலையிலுள்ள சிற்றோடை "ஐயாறு" என்றழைக்கப்படுகிறது. இதனை மீன்பள்ளி ஆறு என்றும் அழைக்கின்றனர். இதில் வண்ணவண்ண மீன்கள் துள்ளி விளையாடுகின்றன. இவற்றிற்கு உணவிட்ட பிறகே சுவாமிக்குப் பூசை செய்யப்படுகிறது.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

முக்கூடலில் மகிழ் முக்கண்ணன்

மூன்று ஆறுகள் ஒன்றாகக் கூடும் இடங்கள் மிகவும் புனிதம் மிக்கதாகப் போற்றப்படுகின்றன. வடநாட்டில் கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய மூன்று நதிகள் கூடுமிடமான அலகாபாத்திற்கு அருகிலுள்ள திரிவேணி சங்கமம் பிரயாகை என்றழைக்கப்படுகிறது. இங்கு, பெருமான் சோமேசுவரர், தீர்த்தேசுவரர் எனும் பெயரில் எழுந்தருளியுள்ளார். இதற்குத் தீர்த்தராஜன் என்பதும் பெயராகும். அனைத்துப் புராணங்களும் இதன் மகிமையை விரிவாகக் கூறுகின்றன.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்தத் திரிவேணி சங்கமத்தில் கும்பமேளா எனப்படும் நீராடும் விழா நடைபெறுகிறது. இதற்கு உலகெங்கிலுமிருந்து லட்சக்கணக்கான மக்கள் வந்து கூடுகின்றனர். இதற்கு இணையாகத் தென்னாட்டில் நடைபெறும் விழா குடந்தை மகாமகப் பெருவிழாவாகும்.

விருத்தாசலத்திற்கு அருகிலுள்ள கூடலை யாற்றூர் தேவாரப் பாடல்பெற்ற பதியாகும்.இங்கு மணி முத்தாறும் வெள்ளாறும் கூடுகின்றன. சங்கமத்துறையில் ஆலயம் உள்ளது. இங்குள்ள இறைவர் இன்னாளில் நர்த்தனவல்லபேசுவரர் என்றழைக்கப்படுகிறார். இந்த இடம் தட்சணப்பிரயாகை திரிவேணி சங்கமம் என்று அழைக்கப்படுகிறது. பிரயாகையில் உள்ளதுபோலவே இங்கும் ஆலமரம் உள்ளது.

இங்கு கங்கை மணிமுத்தாறாகவும், லட்சுமி வெள் ளாறாகவும், நதி உருவம் கொண்டு ஓடிவருவதாகவும் அவர்களுடன் சரஸ்வதிதேவி அந்தர்வாகினியாகப் பிரவேசிக்கிறாள்என்றும்கூறப்படுகிறது.இந்தத் தலத்தின் சிறப்புக்களை இவ்வூர்த்தலபுராணம் விரிவாகக் கூறு கிறது.

பாடல்பெற்ற திருத்தலங்களில் ஒன்று பள்ளியின் முக்கூடலாகும். நன்னிலத்திற்குத் தென்கிழக்கே 12.கி.மீ தொலைவிலுள்ள இத்தலம் வெள்ளாற்றின் கரையில் உள்ளதாகும். ஆலயத்தின் முன்னேயுள்ள தீர்த்தம் முக்கூடல் தீர்த்தம் என்றழைக்கப்படுகிறது. இத்தீர்த்தம் கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய மூன்றின் சங்கம மாகக் கொள்ளப்படுகிறது. இதையொட்டி இது "முக் கூடல் தீர்த்தம்" என்றழைக்கப்படுகிறது. இறைவன் முக்கூடல் நாதர், அம்பிகை மைமேவுகண்ணி. மக்கள் இவ்வூரை குருவிராமேஸ்வரம் என்றழைக்கின்றனர்.

கொங்குநாட்டில் காவிரியோடு பவானியாறும் அமுதநதியும் கலக்குமிடம் "பவானி முக்கூடல்" ஆகும். ஆறுகள் சங்கமமாகும் இடத்தில் பெரிய சிவாலயம் உள்ளது. இறைவன் சங்கமேசுவரர் என்றழைக்கப்படு கிறார். தேவாரத்துள் இத்தலம் நணா என்றும்; இறைவர் கல்வெட்டுகளில் நணா உடையார் என்றும் குறிக்கப்படுகின்றார். (பிரயாகை எனும் திரிவேணி சங்கமத்தில் கங்கையும் யமுனையும் மட்டுமே தெரியும். சரஸ்வதி பூமியின் அடியிலிருந்து வந்து கலக்கிறது. இதுபோலவே பவானியிலும் காவிரியும் பவானியாறும் மட்டுமே கண்ணுக்குத் தெரியும். அமுத நதி என்பது இத்தலத்திலுள்ள அமுதலிங்கத்தின் அடியிலிருந்து அமுத ஊற்றாகப் பெருக்கெடுத்துக் கலப்பதாகக் கூறுகின்றனர். இதற்குத் தட்சிணப் பிரயாகை, திரிவேணி சங்கமம் எனும் பெயர்களும் வழங்குகின்றன).

தொண்டை நாட்டில் பாலாற்றுடன் சேயாறும் வேகவதியாறும் கலக்குமிடம் காஞ்சிபுரத்திற்குக் கிழக்கில் உள்ளது. இந்த இடம் திருமுக்கூடல் என்று அழைக்கப்படுகிறது.

இந்தியாவின் தென்கோடியில் மூன்றுகடலும் சங்கமிக்குமிடம் கன்னியாகுமரியாகும். இங்குச் சிவபெருமான் காசிவிசுவநாதர், குகநாதேசுவர், எனும் பெயரில் எழுந்தருளியுள்ளார்.

மூன்றுமலைகள் கூடியிருப்பதால் குற்றால மலைக்குத் திரிகூட மலை என்ற பெயர் வழங்குகிறது. இம்மலையில் உற்பத்தியாகும் சிற்றாறு எனும் சிறு நதி மலையிலிருந்து அருவியாகப் பொங்குமாகடல் எனும் மலைப்பிளவில் வீழ்ந்து வழிந்து ஓடுகிறது. இதனை சிவமது கங்கை என்றழைக்கின்றனர். இதனுடன் சித்ரா நதியும் கூடுமிடம் முக்கூடல் எனப்படுகிறது. இத்தலத் தின் மீது முக்கூடற்பள்ளு எனும் சிற்றிலக்கியம் பாடப் பட்டுள்ளது.

• குழல்வாய்மொழியம்மை - திருக்குற்றாலநாதர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பால் தீர்த்தங்கள்

உலக வாழ்வில் பால்முக்கியமான பொருளாகும். மானுடம் தாயின் பாலாலேயே வளர்கின்றது. தாய்ப்பால் அதற்கு முதன்மை உணவுப் பொருளாகவும் கடவுளாக வும் திகழ்கிறது.

தாய்ப் பாலுக்கு இணையான இடத்தைப் பெற்றி ருப்பது பசுவின் பாலாகும். பசுவைப் பெரிய தாய் எனும் பொருளில் "கோமாதா" என்றழைக்கின்றோம். தாய்ப் பால் கூட குழந்தைக்கு மட்டுமே உதவுகிறது. ஆனால் பசும்பாலோ நமது வாழ்நாளின் இறுதிவரை உபயோகமாகிறது. மனிதன் இறந்த பின்னும் அவனு டைய எலும்புகள் பாலில் நனைக்கப்படுகின்றன அல் லது சமாதியில் பாலாபிஷேகம் செய்யப்படுகிறது.

வாழ்வியல் சடங்குகள் அனைத்திலும் பசுவின் பால் முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. பசுவின் பாலைக் கொண்டு அபிஷேகம் செய்வதால் தெய்வங் கள் மகிழ்கின்றன. பசும்பால் சிறந்த நிவேதனமாகவும் உள்ளது. கிராம தெய்வங்களுக்குப் படைக்கப்படும் பொங்கலைப் பால் பொங்கல் என்று அழைப்பதுடன் பால் பூசை எனவும் குறிக்கின்றனர்.

பலவிதங்களில் சமய வாழ்வில் முக்கியமான இடத்தைப் பெறும் பால். தீர்த்தமாகவும் விளங்குகிறது. பாற்கடல், பாற்குளம், பாற்கிணறு, பாற்சுனை போன்ற பெயர்களால் அனேக தலங்களில் தீர்த்தங்களாக உள்ளன. இவை ஆதியில் பாலாலேயே அமைந்திருந்த தாகவும் மக்கள் நீராடி மகிழ்வதற்காக இவற்றைச் சிவபெருமான் நன்னீர்த் தீர்த்தங்களாக மாற்றிவிட்டார் என்றும் கூறப்படுகிறது. காமதேனு, கபிலா முதலிய தெய்வப்பசுக்கள் தம்மிடமிருந்து பெருகிய பாலால் தீர்த்தங்களை அமைத்தன என்று தலபுராணங்கள் கூறு கின்றன.

ஒருமுறை கோலோகத்திருந்த ஸுனந்தா, ஸுமனா, ஸுரதி, ஸுபலா, கபிலா எனும் ஐந்து தெய்வீ கப்பசுக்கள் காசிக்கு வந்து சிவபெருமானை தரிசித்தன. அவரைக் கண்ட மகிழ்ச்சியால் அவற்றின் மடியிலிருந்து பால் பெருக்கெடுத்து ஒடிப் பெருங்கடல் போல் தேங் கியது. சிவபெருமான் அதில் நீராட அது நன்னீர் ஆனது. நீராடியபின் அந்தத் தீர்த்தத்தைச் சிவபெருமான் ஆசீர் வதித்தார். அது கபில தீர்த்தம், விருஷப தீர்த்தம், க்ஷீர நதி என்று பலவாறு அழைக்கப்படுகிறது. இதுபோன்ற பல தலங்களில் பசுக்கள் அமைத்த பால் தீர்த்தங்களைக் காண்கிறோம்.

❁ உலகிலுள்ள அனைத்து செல்வங்களுக்கும் அதிபதியான மகாலட்சுமி தேவர்களும் அசுரர்களும் கூடிப் பாற்கடலைக் கடந்தபோது அதிலிருந்து வெளிப் பட்டாள். அவளுடன் காமதேனு (பசு) உச்சைசிரவஸ் (குதிரை) ஐராவதம் (யானை) அரம்பையர், வாருணி, மூதேவி முதலியனவும் வெளிப்பட்டன.

❁ சிதம்பரத்திற்கு அருகிலுள்ள திருக்கழிப் பாலையில் சுவாமி பால்வண்ணநாதர் எனும் பெயரில் வீற்றிருக்கின்றார். இங்குள்ள தீர்த்தம் வெண்மையாக உள்ளது. இதனைப் பால்தீர்த்தம் என்றழைக்கின்றனர்.

❁ திருக்குருகாவூர் வெள்விடைநாத சுவாமி ஆலயத்தில் தை அமாவாசையன்று சுவாமி தீர்த்தம் கொடுக்கும்போது கிணற்றுநீர் பால்போல் வெண்ணிறம் அடைகிறது என்று கூறுகின்றனர்.

திருமுலைப்பால் தீர்த்தம்

உலகைப் படைத்துக் காக்கும் அன்னை பராசக்தி உயிர்கள் மீது அன்புகொண்டு தன்னருளாகத் தனது முலைப்பாலைச் சொரிந்தாள். உண்ணமுலை நாயகியான அம்பிகையின் கருணை வெள்ளமாக வெளிப்பட்ட பால் ஓரிடத்தில் தேங்கித் திருக்குளமாக விளங்கியது. அதற்குத் திருமுலைப்பால் தீர்த்தம் என்பது பெயராயிற்று. திருவண் ணாமலையில், குகை நமச்சிவாயர் கோயிலுக்கு அருகில் திருமுலைப்பால் தீர்த்தம் உள்ளது. காஞ்சியிலும் முலைப் பால் தீர்த்தம் உள்ளது. திருவையாற்றில் அம்பிகையின் திருமுலைப்பால் பெருகி ஒரு தீர்த்தமாக ஆகியது என்று கூறுகின்றனர்.

கொங்கு தண்குமரி என்று குறிக்கப்படும் வைப்புத்தலம் மோகனூர் ஆகும். இங்குள்ள அம்பிகை தேனாயி (மது கரவேணி) என்று அழைக்கப்படுகிறாள். கோயிலுக்கு எதிரே அகண்ட காவிரி ஒடுகிறது. இதனையே குமரி தீர்த்தம் என்று அழைக்கின்றனர். இங்குள்ள மதுகரவேணி அம்பிகையின் மார்பிலிருந்து பால்பெருகி ஒடி காவிரியாற்றில் கலந்ததாம். ஒரு வியாபாரி இந்தப் பாலை விற்க எண்ணிக் காய்ச்சியதால் பால் வடிவது நின்றுவிட்டது. இப்போதும் அம்பிகையின் பாதத்தடியில் இருந்து கண்ணுக்குப் புலனாக வகையில் ஒரு ஊற்றுப் பெருகி ஒடி காவிரியாற்றில் கலப்பதாகக் கூறுகின்றனர். இது திருமுலைப்பால் தீர்த்தம் என்றழைக்கப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பலவகை வடிவான தீர்த்தங்கள்

புனிதமான நீர்நிலைகள் யாவும் இறைவனின் திருமேனிகளேயாகும். பெருங்கடல்கள். வற்றாது ஓடும் ஜீவநதிகள். மழைக்காலத்தில் பெருக்கெடுத்து ஓடிவரும் ஆறுகள். அருவிகள். குளங்கள். ஏரிகள். சுனைகள் யாவும் இறைவனின் பல்வகை வடிவங்களே ஆகும். இதை உணர்த்தும் வகையில் இவற்றின் கரையில் சிவ பெருமான் திருக்கோயில் கொண்டு அருள்பாலிக் கின்றான்.

மனித நாகரிகங்கள் யாவும் ஆற்றின் கரையி லேயே தோன்றியதாகும். எனவே ஆறுகள் மானுட வாழ்வில் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளன. நாகரி கத்தில் சிறப்படைந்த மனிதன் ஆதியில் ஆற்றங்கரை களில் இறைவனுக்குத் திருக்கோயில்களை அமைத்து வழிபட்டான். இவை ஆற்றுத்தளிகள் என்று அழைக்கப் பட்டன. ஆறுகளின் பெயரால் இறைவன் கங்காதீசர். யமுனேசுவரர். பாலீசர். வாருணீசுவரர். காவேரிநாதர். ஆரணீசர் முதலிய பல்வேறு பெயர்களில் அழைக்கப் படுகிறார். திருவையாற்றிலுள்ள ஐயாறப்பர் ஆலயம் தேவாரத்தில் காவிரியின் பெயரால் 'காவிரிக்கோட் டம்' என்று குறிக்கப்பட்டுள்ளது.

ஆறுகள் ஒன்றோடு ஒன்று கூடும் சங்கமத்துறை களில் சிவபெருமான் மகிழ்வுடன் வீற்றிருக்கின்றார். கங்கை. யமுனை. சரஸ்வதி ஆகிய மூன்று ஆறுகள் கூடும் பிரயாகை. காவேரி. அமுதநதி. பவானி ஆகியன கூடும் (பவானி) நணா முதலிய கூடுதுறைகளில் பெரு மான் தனிச்சிறப்புடன் வீற்றிருக்கின்றார். இந்நிலையில் இவருக்குச் சங்கமேசுவரர் எனும் பெயர் வழங்குகிறது.

ஆறுகளுக்கு அடுத்த நிலையில் சிறப்புடன் போற்றப்படுபவை திருக்குளங்கள் ஆகும். ஆற்றங் கரையில் இருந்து குடிபெயர்ந்த மனிதன் நல்ல நீர் நிரம்பிய குளங்களின் கரையில் குடியேறினான். குளங் களைச் சுற்றி அமைந்த ஊர்கள் குளப்பாக்கம். குளமங் கலம் எனப் பலவாறு அழைக்கப்பட்டன. இவ்வூர்களில் எழுந்தருளும் பெருமான் குளந்தையப்பன், தீர்த்தபுரீசர். குளந்தையீசர் எனும் பெயர் பெற்றார். (குளம்+எந்தை = குளந்தை : குளமாக இருக்கும் எனது தந்தை என்பது இதன் பொருள்) குளந்தையீசர் என்பது வடமொழியில் தடாகபுரீசுவரர் என வழங்குகிறது. வடாற்காடு மாவட் டத்திலுள்ள குளத்தூரில் (மடம்) தடாகபுரீசுவரர் ஆலயம் உள்ளது. கயம் என்பதற்குக் குளம் என்பது பொருள். இதையொட்டிக் கயப்பாக்கம், கயத்தூர் முதலிய ஊர்கள் உண்டாயின. காஞ்சிபுரம் மாவட்டத்தில் கயப்பாக்கம் எனும் சிற்றூரும் அதில் தீர்த்தபுரீசுவரர் ஆலயமும் உள்ளன. காலபோக்கில் ஆலயங்களைச் சுற்றி மேலும் பல குளங்களை அமைத்து அன்பர்கள் சிவவழிபாடு செய்தனர். இக்குளங்கள் இவற்றை அமைத்தவர் பெய ரால் சிவகங்கை. பிரமன். விஷ்ணு. திருமகள். வாலி. சக்ரதீர்த்தம் முதலிய பல்வேறு பெயர்களில் அழைக் கப்படுகின்றன.

குளங்களை விட பரப்பில் சிறிய ஆழமான நீர் நிலை கிணறு (கூபம்) ஆகும். கிணறுகளைச் சுற்றி அமைத்த ஊர்கள் கூவத்தூர். கூவல் என்று பெயர் பெற்றன. இத்தலத்தில் வீற்றிருக்கும் பெருமானுக்குக் கூவல்நாதர், கூவலப்பர் என்ற பெயர்கள் வழங்குகின் றன. தென்னகத்து ஆலயங்களில் எண்ணற்ற கிணறு கள் தீர்த்தங்களாக உள்ளன. இவற்றின் சிறப்பு பற்றி இவற்றிற்கு அனேக பெயர்கள் வழங்கப்படுகின்றன. சிதம்பரம் சிற்சபையை ஒட்டியுள்ள பரமானந்த கூபம். திருக்கடவூரிலுள்ள அசுபதிதீர்த்தம். காசிநகரிலுள்ள ஆனந்தவாபி முதலியன கிணறுவடிவிலான சிறந்த தீர்த்தங்களாகும்.

குளங்களைவிடப் பெரிய நீர்நிலைகள் ஏரிகள் எனப்பட்டன. ஏரிகளில் இருந்து நீர் வெளியேறும் பகுதி மதகு எனப்பட்டது. மதகின் அருகில் எழுந்தருளியி ருப்பதால் பெருமான் மதகீசர் என்றழைக்கப்படுகிறார். வடாற்காடு மாவட்ட சீயமங்கலம் தூணாண்டார். கோ யில். குரங்கணிமுட்டம் கொய்யாமலரீசர் கோயில். முத லியவற்றைச் சுற்றிலும் விரிந்து பரந்த ஏரிகள் இருக் கின்றன.

மலைகளிலுள்ள சுனைகளும் அருவிகளும் கூட புராணச் சிறப்புமிக்க தீர்த்தங்களாக விளங்குகின்றன. திருக்குற்றாலம், பாபநாசம் முதலிய மலைத்தலங்களில் அருவிகள் தீர்த்தங்களாக உள்ளன. திருவண்ணாமலை யில் துர்கா தேவி தன் கை வாளால் ஒரு பாறையைப் பிளந்து உண்டாக்கிய கட்கதீர்த்தம் என்ற சுனை உள் ளது. இதன் கரையில் சிவபெருமான் கட்கேசர் எனும் பெயரில் வீற்றிருக்கின்றனர். திருஞானசம்பந்தர் கொடுங் குன்றத்திலிருந்த 'குட்டாச்சுனை' எனும் சுனையைக் குறித்துள்ளார். இது குட்டநோயைத் தீர்க்கும் வல்லமை பெற்றது என்று கூறுவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இயற்கையாகவே பொங்கிவரும் நீரூற்றுக்களும் தெய்வத்தன்மை கொண்டதாகப் போற்றப்படுகின்றன. ஊற்றுக்களின் கரையில் வீற்றிருக்கும் சிவபெருமான் ஊற்றீசுவரர் எனப்படுகிறார்.

இமயமலைச்சாரலில் பனியின் குளிருக்கு நடுவே கௌரிகுண்டம் பத்மாசுரகுண்டம், பிரம்மகுண்டம் முதலிய அனேக வெந்நீர் நீரூற்றுக்கள் உள்ளன. இவை குளிருக்கு நடுவே மக்களுக்கு இதத்தையும் மகிழ்ச்சியையும் அளிக்கின்றன.

தொண்டை நாட்டு இராமகிரி (காரிக்கரை)யில் கண்ணுக்குப் புலப்படாத இடத்திலிருந்து வரும் நீரூற்று ஒரு நந்தியின் வாயிலிருந்து வெளிப்பட்டு ஒரு குளத்தில் விழுந்து ஓடுகிறது. இதன் கரையில் பெருமான் வாலீசர் எனும் பெயரில் வீற்றிருக்கின்றார்.

தீர்த்தங்களில் மிகப்பெரியது சமுத்திரமாகும் சமுத்திரத்திற்கு சாகரம் என்பதும் பெயராகும். இப்பெயரால் இறைவன் சப்தசாகரேசுவரர் என்று அழைக்கப்படுகிறார். மதுரையில் சப்தசாகரேசுவரர் ஆலயம் உள்ளது. காசியில் நான்கு கடல்கள் வழிபட்ட சதுரசாகரதீர்த்தமும் அதன் கரையில் நான்கு லிங்கங்களும் உள்ளன.

கடலுக்கு நடுவில் குதிரைமுகம் கொண்ட வடவாமுகாக்கினி எனும் பெருந்தீ உள்ளது. இதுவே கடல் பொங்கி விடாமல் பார்த்துக் கொள்வதாகப் புராணங்கள் கூறுகின்றன. இதையொட்டி கடலுக்கு அக்னி தீர்த்தம் என்பது பெயராயிற்று. கடற்கரையில் உள்ள அனேக தலங்களில் இறைவன் அக்னீசர் எனும் பெயரில் வீற்றிருக்கின்றார்.

வங்கக் கடலோரம் உள்ள வெடால் எனும் ஊரில் "வடவாமுகாக்கினீசுவரர்" எனும் பெயரில் சிவபெருமான் கோயில் கொண்டுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு கிணறு, ஏரி, சுனை, கடல் பகுதி, ஊற்று நீர் என்ற பலவகையான வடிவங்களில் சிறப்புமிக்க தீர்த்தங்கள் இருப்பதை மகாபுராணங்களால் அறிகிறோம்.

தீர்த்த புராணங்கள்

தெய்வங்களின் பெருமைகளையும் அவை வீற்றிருக்கும் தலங்களின் சிறப்புக்களையும் விளக்கத் தல புராணங்கள் எழுந்ததைப் போலவே திருத்தலங்களில் ஒட்டி அமைந்துள்ள தீர்த்தங்களின் பெருமைகளை விளக்கிக் கூறச் சில புராணங்கள் தோன்றின. இவை 'தீர்த்த புராணங்கள்' என்று அழைக்கப்படுகின்றன.

காவிரியின் பெருமையை விளக்க எழுந்த நூல் 'காவிரிப்புராண'மாகும். பதினெண் மகாபுராணங்களில் ஒன்றான பிரம்மகைவர்த்த புராணத்திலுள்ள செய்திகளை அடியொற்றித் திருமறைக்காடு சிற்றம்பல முனிவரால் 1474 பாடல்களால் இது பாடப்பட்டதாகும். காவிரி வாழ்த்துடன் தொடங்கும் இந்நூல் அனவத்தை என்பவளுக்கு அவனுடைய கணவனான நாதசன்மா என்பவர் காவிரியின் வரலாற்றையும் சிறப்புக்களையும் விவரித்துக் கூறும் வகையில் அமைந்துள்ளது.இதில் அனேக துணைக் கதைகளும் இடம் பெற்றுள்ளன.

மேலும், 1939 ஆம் ஆண்டில் காஞ்சி காமகோடி பீடாபதி ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சுவாமிகள் அருளாணையின் வண்ணம் 'காவேரி ரகசியம்' எனும் நூல் தொகுத்து வெளிடப்பட்டது. காவேரியின் உற்பத்தித்தானமாகி சைய மலைகளில் தொடங்கிக் கடலோடு கலக்குமிடமான பூம்புகார் வரையிலுள்ள சைவ திருத்தலங்கள் வைணவ திருப்பதிகள் ஆகியவற்றின் சிறப்புகள் புராண, இலக்கிய, தோத்திர நூல்களிலுள்ள காவிரியைப் போற்றும் பகுதிகள், உபநதிகளின் கரையிலுள்ள திருத்தலங்கள் காவிரி ஸ்நானம் மற்றும் காவிரி பூஜா விதிகள் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. இடையிடையே அரிய புகைப்படங்களும் இடம் பெற்றுள்ளன.

தென்பாண்டி நாட்டினை வளப்படுத்தும் நதியான தாமிரபரணி ஆற்றின் பெருமைகளை விளக்க எழுந்தது 'பொருனைப்புராணம் என்கிற தாம்பரவருணி மகாத்மியம்' ஆகும். இது பதினெண் புராணங்களில் ஒன்றாகிய சிவபுராணத்தினை அடியொற்றி எழுந்ததாகும். இதில் அகத்தியர் பெருமை அவர் தாம்பரபரணியை உற்பத்தி செய்தது. அதன் கரையிலுள்ள தலங்களின் பெருமை, தீர்த்தமாடுவதின் மகிமை ஆகியன கூறப்பட்டுள்ளன.

காளஹஸ்திக்கு வடக்கிலுள்ள பிரம்மகிரி மலையில் உற்பத்தியாகி ஆந்திரத்தை வளப்படுத்தும் பொன்முகலி ஆற்றின் பெருமையை 'சொர்ணமுகி மகாத்மியம்' விளக்குகிறது. இதில் திருமால் வீற்றிருக்கும் திருப்பதி, காளத்தியில் கொலுவிருக்கும் மணிகண்டீசர், காளத்திநாதர் முதலிய அனேக திருக்கோயில்களின் மகிமைகள் விளக்கப்பட்டுள்ளன.

தனியாக எழுந்த புராணங்களைத் தவிர ஒவ்வொரு தலபுராணத்திலும் தீர்த்தமகிமை உரைத்தது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எனும் பகுதியில் அந்த நாட்டில், தலத்தில் உள்ள ஆறு, ஏரி, குளம் முதலிய தீர்த்தங்களின் பெருமைகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

இவ்வகையில் பெரியபுராணத்தில் காவிரி, வைகை, பாலாறு முதலான ஆறுகளின் சிறப்புக்களும் அனேக தீர்த்தங்களின் பெருமைகளும் விரிவாகப் பேசப்பட்டுள்ளன.

காஞ்சிப்புராணத்தில் கம்பா நதி, வேகவதி, சேயாறு முதலான ஆறுகளின் சிறப்புக்களும் காஞ்சிபுரத்திலுள்ள நூற்றுக்கு மேற்பட்ட தீர்த்தங்களின் சிறப்புக்களும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

தலபுராணங்களில் மட்டுமின்றி நாட்டுப்புற இலக்கியங்களிலும் அந்தந்தப் பகுதியிலுள்ள தீர்த்தங்களின் மகிமை விவரித்துக் கூறப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாகப் பச்சையம்மன் கதையில் சேயாறு உற்பத்தியாகி அம்பிகையின் பூசைக்கு உதவுவது, அதன் கரையிலுள்ள சப்தகரைகண்டம், சப்த கயிலாயங்கள், இளையனார் வேலூர், கடம்பர் கோவில் முதலிய தலங்களின் பெருமைகள் விளக்கப்பட்டுள்ளன.

புனித நீர்நிலைகளின் பெருமைகளை, மட்டுமின்றி மாதவாரியாக தீர்த்தமாடுவதின் பயன்களை விவரித்துக் கூறும் நூல்களும் உள்ளன.

மகரராசியில் சூரியன் சஞ்சரிக்கும் மாசிமாதத்தை வடமொழியில் மாகமாதம் என்பர். மாசி மாதப் பௌர்ணமி நாளில் விதிப்படி நீராடுவது 'மாகநீராடல்' ஆகும். மாகநீராடலின் மகத்துவங்களையும் விளக்க எழுந்த நூல் மாக புராணமாகும்.

இது வடமொழியிலுள்ள பதினெண்புராணங்களில் ஒன்றான பாத்ம புராணத்தின் ஒரு பகுதியாகும். இதனைத் தமிழில் சைவசிரோன்மணியாகிய அதிவீரராம பாண்டியர் 1412 பாடல்களால் பாடியுள்ளார்.

இதில் சிவராத்திரி மகிமை, கார்த்திகை மாதவழிபாடு, திருவாதிரை மகிமை உரைத்தது முதலான அனேக கதைகள் இடம் பெற்றிருப்பினும் வசிட்ட முனிவர் திலீபச்சக்ரவர்த்திக்கு மாசிமாத நீராடுதலின் பெருமைகளை விளக்கிக் கூறும் பகுதியே முதன்மை பெற்றுத் திகழ்கிறது.

மாசிமாத நீராடுதலின் போது இப்புராணத்தை படிக்கச் சொல்லிக் கேட்பதுத், தென்பாண்டி நாட்டிலும் இலங்கையிலும் உள்ள வழக்கமாகும்.

இந்தப் புராணத்தையொட்டி எழுந்த நூல் 'மாகபுராண அம்மானை'. மேற்படி நூலிலுள்ள கருத்துக்களே இந்த அம்மானைப் பாடலிலும் இடம் பெற்றுள்ளன. இதனை இயற்றியவர் மணவை வீரபத்திரனார் ஆவார்.

இது போன்றே 'துலாஸ்நான மகிமை' 'துலாக் காவேரிப் புராணம்' என்னும் நூல்களும் வெளிவந்துள்ளன. இவை துலாமாதம் என்கிற ஐப்பசி மாதத்தில் காவிரியில் தீர்த்தமாடுவதன் சிறப்புக்களை விவரித்துக் கூறுகின்றன.

இதுபோன்ற அனேக நூல்கள் தீர்த்தங்களின் மகிமைகளையும் தீர்த்தமாடுவதால் உண்டாகும் பலன்களையும் தெளிவாகக் கூறுகின்றன.

தவளைகளும் தீர்த்தங்களும்

திரிபுராந்தகத் தலமான திருவிற்கோலம் திரிபுராந்தகேசுவரர் ஆலயத்திற்கு எதிரில் அமைந்துள்ள தீர்த்தம் அக்னி தீர்த்தம் என்றழைக்கப்படுகிறது. இதில் தவளைகளும் மீன்களும் வாழ்வதில்லை. இத்தனைக்கும் இக்குளம் வயல்வெளிக்கு அருகில் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதுபோன்றே வைத்தீசுவரன் கோயிலிலுள்ள சித்தாமிர்த தீர்த்தத்திலும் தவளைகள் வாழ்வதில்லை. சதானந்தர் எனும் முனிவர் இங்கு தவம் செய்து கொண்டிருந்தபோது தன்னைப் பாம்பு விழுங்க வந்ததால் அஞ்சிய ஒரு தவளை அவர் மீது விழுந்து அவருடைய தவத்தைக் கலைத்தது. அவர் கோபம் கொண்டு இனி இதில் தவளைகள் வாழக் கூடாது என்று சாபமிட்டுவிட்டார். அதனால் இத்தீர்த்தத்தில் அவை வாழ்வதில்லை. சேலம் சுகவனேசுவரர் ஆலயத்தின் அருகிலும் தவளைகள் வாழாத தீர்த்தம் உள்ளது. இவற்றை வடமொழியில் அமண்டுக தீர்த்தம் என்று அழைக்கின்றனர்.

கடற்கரையை ஒட்டி அமைந்த மலைகளில் தெய்வீகச் சிறப்புமிக்க சிறுசுனைகள் இருக்கின்றன. இவற்றில் தவளைகள் வாழ்கின்றன. வற்றாத சுனைகளில் வாழும் இந்தத் தவளைகள் தெய்வீகச் சக்தி கொண்டவை என்று நம்புகின்றனர். கர்நாடக மாநிலம் நஞ்சன்கூடு தலத்திற்கு அருகிலுள்ள சிறு மலையில் ஒரு கையளவு உள்ள பள்ளத்தில் ஊறிவரும் நீரில் தவளை உள்ளது. அந்த நீர் வேகமாக எடுக்க எடுக்க சுரந்ததென்றும் தவளையை எத்தனை முறை தூக்கி வெளியே விட்டபோதும் விரைந்து வந்து அந்த நீரில் சேர்த்து விட்டதென்றும் தாம் கண்ட அனுபவக் காட்சியை சிதம்பரம் பிரம்மஸ்ரீ பரமேஸ்வர தீட்சிதர் தெரிவித்துள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தீர்த்தங்கள் தெய்வநிலையங்கள்

உலகப் படைப்பின்போது முதலில் வானமும் அதிலிருந்து வளியும் (காற்றும்) அதிலிருந்து நெருப்பும் அதிலிருந்து நீரும் அதிலிருந்து பூமியும் உண்டானதாகப் புராணங்கள் கூறுகின்றன. உலக அழிவின்போது பூமியின் மீது நெருப்பு மழை பொழிந்து யாவும் அழியும். அந்த நெருப்பையும் அழித்து நீர் எங்கும் நிறைந்திருக்கும். நீரால் உலகம் அழிவுறும் காலமே பிரளயம் எனப்படும். ஒவ்வொரு யுகமுடிவிலும் பிரளயம் உண்டாகி உலகம் அழியும். அந்த வெள்ளத்திலிருந்தே பூமியும் பழையபடி அதில் உயிர்த்தொகுதியும் உண்டாகின்றன. எனவே தண்ணீரே உலகிற்கு முதலும் முடிவுமாக இருக்கின்றது.

இதையொட்டி சமயச் சடங்குகளின் தொடக்கத்திலும் முடிவிலும் தண்ணீர் வழிபடப்படுகிறது. விழாக்கள் தீர்த்த சங்கிரணம் எனும் நீர் எடுத்து வருதலில் தொடங்கித் தீர்த்தவாரி எனும் நீரில் மூழ்கும் சடங்குடன் முடிவடைகின்றன. சிவாலயங்களில் தினமும் காலையில் நீரின் கடவுளான கங்கையை ஆலயத்திற்கு அழைத்துவரும் திருமஞ்சனம் கொண்டு வருதல் எனும் சடங்குடன் பூஜை தொடங்கப்பட்டு, இரவில் தீர்த்தராஜனான பைரவரிடம் பூஜை முடிகிறது. பூஜையில் அகற்றப்படும் நிர்மால்யங்கள் தண்ணீரில் விடப்படுகின்றன.

❁ சிவபூஜாதுரந்தரர்கள் தாங்கள் தினமும் வழிபடும் க்ஷணிக லிங்கங்களைப் பூசை முடிந்தபின் புனிதத் தீர்த்தத்தில் கரைத்துவிடுவது வழக்கம். தினமும் ஓராயிரம் சிவலிங்கங்களை வைத்துவழிபட்ட பாணாசுரன் பூசையின் முடிவில் அவற்றை நர்மதை ஆற்றில் போட்டுக் கொண்டிருந்தான். அவன் தனது வாழ்நாள் முழுவதும் வழிபட்டு ஆற்றில் விட்ட சிவலிங்கங்களே காலப்போக்கில் உறுதிமிக்க கல் லிங்கங்களாக மாறிவிட்டன. அவையே இப்பொழுது கிடைக்கும் பாணலிங்கங்கள் ஆகும்.

❁ ஆண்டுதோறும் கொண்டாடப்படும் விநாயகர் சதுர்த்தியன்று விநாயகரைக் களிமண் அல்லது புற்று மண்ணால் செய்து வழிபட்டபின்னர் அவ்வுருவத்தை அன்று மாலையோ மூன்றாம் நாளிலோ ஆறு, குளம், கிணறு, ஏரி ஆகியவற்றில் விட்டு விடுகின்றனர். சென்னையைச் சுற்றியுள்ள ஊர்களில் விநாயகர் சதுர்த்தியையொட்டிப் பெரிய விநாயகர் சிலைகள் வணங்கப்படுகின்றன. பின்னர், குறித்த நாளில் அந்தச் சிலைகள் அனைத்தையும் சென்னை மெரீனா கடலில் விட்டு விடுகின்றனர். இதுபோன்றே மும்பையில் பெரிய அளவில் விநாயகர் சதுர்த்தி விழா நடத்தப்பட்டு அது முடிந்தவுடன் சிலைகள் கடலில் விடப்படுகின்றன.

❁ இதுபோன்றே கிராமிய வழிபாட்டில் ஆண்டுதோறும் வழிபடப்படும் மாரியம்மன், மொட்டையம்மன், கங்கையம்மன் முதலிய தெய்வ வழிபாட்டிலும் பூசையின் இறுதியில் பூசிக்கப்பட்ட உருவங்களை நீரில் விட்டுவிடுவது வழக்கம்.

❁ கொங்கு மாவட்டத்தில் கிராமியத் தெய்வ விழாக்களின் தொடக்கத்தில் மூன்றுகிளைகளாகப் பிரியும் அடிமரத்தை மேள தாளத்துடன் மலையிலிருந்து வெட்டிவருகின்றனர். இதனை அலங்கரித்து நட்டு அதன் மீது பெரிய அகண்டத்தை வைத்து தீ மூட்டுவர். இதற்குக் கம்பம்போடுதல் என்று பெயர். விழா முடியும் வரை அதில் நெருப்பு எரிந்து கொண்டிருக்கும். விழா நாட்களின் காலையிலும் மாலையிலும் அந்த கம்பத்தைச்சுற்றிவந்து ஆடிப்பாடி, மகிழ்வர். விழாவின் முடிவில் மேளதாளத்துடன் அந்த முக்கிளைக் கொம்பைப் பிடுங்கி எடுத்துக் கொண்டு பெரிய ஊர்வலமாகச் சென்று அருகிலுள்ள ஆற்றில் விட்டுவிடுகின்றனர்.

இவற்றின் மூலம் வழிபாடுகள் யாவும் நீரில் தொடங்கி நீரிலேயே முடியும் வகையில் அமைந்திருப்பதை அறியமுடிகிறது.

❁ மனிதன் தாயின் வயிற்றுக்குள் ஒரு நீர்ப்பையில் கருவாகி உருவாகிறான். இறுதியில் உலகின் தாயான தண்ணீரின் மடியில் சாய்கிறான். இதையொட்டி இறந்தவர்களின் உடலைக் கங்கையில் விட்டு வரும் வழக்கம் உள்ளது.

❁ பல தெய்வங்கள் அவதாரத்தின் முடிவில் நீரில் மறைந்து விடுவதாகவே புராணங்கள் கூறுகின்றன. இராமர் அவதாரத்தின் முடிவில் சரயு நதியில் மூழ்கி மறைந்துவிட்டார் என்று கூறப்படுகிறது. பலராம அவதாரத்தின் இறுதியில் அவர் வெண்ணிறப்பாம்பு வடிவம் கொண்டு மேலைக் கடலின் உள்ளே சென்று மறைந்து விட்டதாகக் கூறப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருக்குளப் பணி செய்த அடியார்கள்

திருக்குளங்கள் யாவும் தெய்வீகத் தன்மை கொண்டவையாகும். இவற்றில் தீர்த்த வடிவில் இறைவன் உறைகின்றான். எனவேஇவையும் சிவாலயங்களே. தீர்த்தக் குளங்களைச் செப்பனிடுதல், படிகட்டுதல், தூர் வாருதல், அதில் தாமரை செங்கழுநீர் அல்லி முதலிய நீர்வகைத் தாவரங்களை வளர்த்தல், மீன், நண்டு ஆகியவற்றிற்கு ஊறு செய்யாதிருத்தல், அன்னம், வாத்து முதலிய பறவைகளை வளர்த்தல் ஆகியனவும் சிவபுண்ணியச் செயல்களாகக் கருதப்படுகின்றன.

ஆண்டாண்டு காலமாக அனேக புண்ணிய புருஷர்கள் புதிய திருக்குளங்களை அமைத்தும், பழையவற்றைத் திருத்தி அமைத்தும் சிறப்புப் பெற்றுள்ளனர். அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான தண்டியடிகள் குளப்பணி செய்து மேன்மை பெற்றதைப் பெரியபுராணம் கூறுகிறது.

திருவாரூரில் பிறந்தவர் தண்டியடிகள். பிறவியிலிருந்தே இவருக்குப் பார்வை இல்லை. இவர் திருவாரூர்ப் பெருமானிடம் பேரன்பு கொண்டு பூங்கோயிலைத் தொழுது மகிழ்ந்திருந்தார். தினமும் ஐந்தெழுத்தை ஓதி ஆலயத்தை வலம் வருவது இவரது வழக்கம்.

ஒருநாள் வலம் வந்து கொண்டிருந்தபோது ஆலயத்திற்கு மேற்கிலிருந்த திருக்குளத்தைச் சுற்றிலும் சமணர்கள் ஆக்கிரமித்து சமணப் பாழிகளைக் கட்டி வருவதை அறிந்தார். அவருள்ளத்தில் இக்குளத்தை ஆழப்படுத்தி அகலப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. பார்வையற்றிருப்பது தனக்குக் குறை என அவர் கருதவில்லை.

குளத்தின் கரையில் ஒரு கோலையும் குளத்தின் நடுவில் ஒரு கோலையும் நாட்டினார். அவற்றைக் கயிற்றால் இணைத்து வழி காட்டியாக அமைத்துக் கொண்டார். கயிற்றைப் பிடித்தபடியே கொஞ்சம் கொஞ்சமாக மண்ணை வெட்டிக் கொண்டுவந்து கரையில் கொட்டினார். அந்த வேளையில் சமணர்கள் அவரிடத்தில் வந்து, "மண்ணை வெட்டும்போது சிற்றுயிர்கள் வதையாகும். அது பாவத்தைத் தரும். ஆதலின் இப்பணியை விடுக" என்றனர்.

தண்டியடிகள், "பெருமக்களே சிவனுக்குச் செய்யப்படும் பணிகள் யாவும் புண்ணியத்தையே தரும். இதை அறியமாட்டீர்களா?" என்றார்.

சமணர்கள் கோபம் கொண்டனர். "அடிகளே நீர் கண்தான் இல்லாத குருடன் என நினைத்தோம். இப்பொழுது அறமொழிகளைக் கேட்காத செவிடன் எனவும் அறிந்தோம் எனக் கேலி செய்தனர். அடிகளார் "நிலையற்றவர்களே சிவனருளால் யான் கண்பெற்றால் என் செய்வீர்கள்" என்றார்.

சமணர்கள், "அப்படி நீர் கண்பெற்றுப் பார்வையை அடைந்தால் நாங்கள் இனி இந்தத் திருவாரூரில் இருப்பதில்லை என்று சூள் உரைத்தனர். அவர்கள் மேலும் கோபமுற்று அடிகளார் வழிகாட்ட நட்டு வைத்திருந்த கழிகளைப் பிடுங்கிக் கயிற்றையும் அறுத்தனர். அவர் கையிலிருந்த மண்வெட்டியையும் கூடையையும் பிடுங்கி வீசிவிட்டுத் தமதிடம் சென்றனர்.

அடிகளார் திருவாரூர் ஆலயத்திற்குள் சென்று, "ஐயனே இன்று என்னைச் சமணர்கள் கேலி செய்தனர். இதனால் எம்மனம் வருந்தி நைகின்றது. எனது மன வாட்டம் தீர அருள்புரியும்" என வேண்டித் தொழுதார்.

பின்னர், திருமடத்திற்குச் சென்று அழுது தொழுது கொண்டு அப்படியே உறங்கியும் போனார். அவருடைய கனவில் பெருமான் தோன்றினார். "அடிகளே உமது கவலையை விடுக. உமக்குப் பார்க்கும் சக்தியை அளிக்கின்றோம். சிவப்பணிக்கு இடையூறு செய்த சமணர்களின் பார்வை மறையக் காண்பாய் அஞ்சாதே" என்று கூறி மறைந்தார்.

அன்றிரவே, மன்னனின் கனவில் தோன்றி "அரசே, நமது குளத்தைச் சீர்ப்படுத்தத் தண்டியடிகள் முயன்றபோது சமணர்கள் அவரை அவமானம் செய்துவிட்டனர். அடிகளார் வருத்தம் கொண்டுள்ளார். நீ சென்று அடிகள் விரும்பியதைச் செய்து முடி" என்றார்.

கண் விழித்த அரசன் சிவபெருமானை வணங்கி அடிகள் இருந்த இடத்திற்கு வந்தான். அவனிடம் அடிகளார், முதல்நாள் நடந்தவற்றையும், சமணர்கள் நீர் கண் பெற்றால் நாங்கள் இனி இந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஊரில் வாழ மாட்டோம் என்று கூறிச் செய்த சபதத்தையும் கூறினார்.

அரசன், ஏவலர்களை அனுப்பிச் சமணர்களை அழைத்துவரச் செய்தான். அவர்களிடம் நடந்தவைகளைக் கேட்டான். அவர்கள் அவற்றை ஒப்புக் கொண்டு மீண்டும் தமது சபதத்தைக் கூறி. அதற்கு உடன்படுவோம் என்றனர்.

அடிகளார் திருவாரூருக்குப் புறத்தேயுள்ள ஓர் குளக்கரைக்கு அனைவரையும் வரும்படிக் கூறினார். மன்னரும் அவனது பரிவாரங்களும் சமணர்களும், பொது மக்களும் அக்குளக்கரையில் கூடினர்.

அடிகளார், "சிவபெருமானுக்கு அடித்தொண்டன் யான் என்பது உண்மையாயின் இக்குளத்தில் மூழ்கிக் கண்பெறுவேன், சிவப்பணிக்கு இடையூறு செய்த சமணர்கள் கண் களை இழப்பர்" என்று கூறினார். பிறகு சிவனை வணங்கி உலகில் உயர்ந்த பொருள் சிவபதமேயன்றிவேறில்லை என்று கூறி, ஐந்தெழுத்தை ஓதிக்கொண்டே அக்குளத்தில் மூழ்கினார். அடிகளார் எழுந்தபோது அவர் கண்ணொளி பெற்றதை அனைவரும் கண்டனர். அதேசமயம் சமணர்களின் பார்வை மறைந்தது.

அரசனும் மக்களும் இந்த அற்புத நிகழ்ச்சியைக் கண்டு அதிசயித்தனர். சமணர்கள் தமது வார்த்தைப் படியே திருவாரூரை விட்டு நீங்கினர். அவர்களுடைய பாழிகளை இடித்து மன்னன் குளத்தை விரிவாக்கினான். அதைக் கண்டு அடிகளார் மகிழ்ந்தார். நீண்டகாலம் திருவாரூர்ப் பெருமானைக் கண்ணாரக் கண்டு ஐந்தெழுத்து ஓதி வாழ்ந்து, ஒரு பங்குனி சதயத் திருநாளில் சிவனடி சேர்ந்தார்.

பன்னிரண்டாம் திருமுறையான பெரியபுராணத்தில் வம்பறாவரிவண்டு சருக்கத்தில் இருபத்தியாறு பாடல்களால் தண்டியடிகள் வரலாற்றைச் சேக்கிழார் பெருமான் அருளிச்செய்துள்ளார்.

பிள்ளையார் வெட்டிய குளம்

திருக்குளப் பணிசெய்த அடியாரான தண்டியடிகளுக்குச் சிவபெருமான் அருள் புரிந்ததைப் போலவே நந்தனார் எனும் அடியவர் திருக்குளப்பணி செய்ய முனைந்தபோது அவருக்குப் பிள்ளையார் உதவியதைக் காண்கிறோம்.

அறுபத்து மூன்று அடியவர்களில் ஒருவரான நந்தனார் எனும் திருநாளைப்போவார் கொள்ளிடத்தின் கரையிலுள்ள ஆதனூர் என்னும் ஊரினர். இவர் திருப்புன்கூர் எனும் தலத்திற்கு எழுந்தருளி அங்கு வீற்றிருக்கும் சிவலோகநாத சுவாமியைக் காணத் திருக்கோயிலின் முன்பு நின்றார். பெரியதாக அமைந்திருந்த நந்தியின் திருவுருவம், சிவலிங்கமூர்த்தியை காண முடியாமல் மறைத்தது. அவர் மனம் வருந்தி நின்றார்.

அவருடைய பெருமையை உலகுக்கு உணர்த்த எண்ணிய சிவபெருமான் நந்தியை நோக்கி, நம் அடியான் எம்மைத் தரிசித்து மகிழ, "சற்றே விலகியிரும் பிள்ளாய்" என்றார். நந்தியும் சந்நிதியை விட்டு விலகியது. நந்தனார் இறைவனைக் கண்டு மிகவும் மகிழ்ந்து சிலநாட்கள் அத்தலத்தில் தங்கியிருந்தார்.

கோயிலுக்கு எதிரேயிருக்கும் பெரிய குளம் தூர் வாராமல் சீர்கெட்டிருந்ததைக் கண்ட நந்தனார். அதனை தூய்மைப்படுத்த விரும்பினார். அவருக்கு உதவ எவரும் முன்வரவில்லை. அவர்மனம் தளராமல் திருக்குளத்தைச் செப்பனிடும் பணியைத் தானே மேற்கொண்டு அயராது உழைத்தார். ஒரு நிலையில் மிகவும் களைத்துச் சோர்ந்தார்.

அவருடைய பக்தியையும் அன்பையும் கண்டு மகிழ்ந்த விநாயகர் அவருக்கு உதவ எண்ணினார். ஒரு வயோதிகக் கூலியாளாக நந்தனாரிடம் சென்று, "அன்பரே, நீர் சற்று ஓய்வெடுத்துக் கொள்ளும். உமது பணியை நான் தொடர்ந்து செய்கிறேன். நீங்கள் உறங்கி எழுந்து புத்துணர்ச்சியுடன் இப்பணியைத் தொடருங்கள்" என்றார். நந்தனார், மண்வெட்டியை அவரிடம் அளித்துவிட்டு கரையில் ஓய்வெடுத்தார். மிகுந்த களைப்பால் அப்படியே உறங்கிவிட்டார்.

விநாயகர் ஒரு நொடியில் குளத்தை வெட்டிச் சீரமைத்துத் தண்ணீரையும் நிறைத்து விட்டு மறைந்தார். கண்விழித்து எழுந்த நந்தனார் மிகுந்த ஆச்சர்யமும் மகிழ்ச்சியும் அடைந்தார். வந்து உதவியது விநாயகர் என்பதை வானொலி மூலம் அறிந்து அந்தக் குளத்தின் கரையில் எழுந்தருளியிருக்கும் பிள்ளையாரை வணங்கி மகிழ்ந்தார்

மயிலாடுதுறைக்கு அருகிலுள்ள வைத்தீசுவரன் கோயில் எனும் தலத்திற்கு நேர் மேற்கில் அமைந்துள்ள தலம் திருப்புன்கூராகும். இங்குள்ள சிவலோகநாதசுவாமி ஆலயத்திற்கு முன்புறம் பெரிய திருக்குளத்தையும் அதன்கரையில் குளம்வெட்டிய பிள்ளையாரையும் காணலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருமுறைகளில் தீர்த்தங்கள்

தமிழ்வேதமாகிய பன்னிரு திருமுறைகளில் தீர்த்தங்கள் சிறப்புடன் பேசப்பட்டுள்ளன. சிவபெருமான் தீர்த்தவடிவில் விளங்குவதை அப்பர்சுவாமிகள் திருவாலங்காட்டு தேவாரப் பதிகத்தில், **"சென்றாடு தீர்த்தங்கள் ஆனார்தாமே"** என்றும், மாணிக்கவாசகர், **"தீர்த்தன் நல்தில்லை சிற்றம்பலத்தே தீயாடும் கூத்தன்"** என்று திருவாசகத்திலும் குறித்துள்ளனர்.

தீர்த்தங்களில் மூழ்கினால் பாவங்கள் தொலையும் என்று திருமுறைகள் தெளிவாகக் கூறுகின்றன. திருவெண்காட்டு முக்குளநீரில் மூழ்கி வழிபட வினை துறக்கும், பேய் அணுகாது, பிள்ளைப் பேறு உண்டாகும் என்று திருஞானசம்பந்தரால் வலியுறுத்திச் சொல்லப் பட்டுள்ளது.

பெண்கள் பாவம் தொலைய நீராடுவதைப் "பாவையர் பாவம் நீங்க... குடையும் பொய்கை வெண்காடு" என்று திருநாவுக்கரசரும், "நீராடுவதால் பாவம் தொலைந்து விஷநோய்களால் துன்புறாமல் சிவனடியில் புகலடையலாம்" என்பதை "நல்ல மடமாதர் அரனாமம் நவிற்றிய திருத்தம் மூழ்க கொல்ல விஷ நோய்களால் துன்புறாமல் அகல்தர புகல்கொடுத் தருளும் கோகரணமே" என்று திருஞானசம்பந்தரும் பாடியுள்ளனர்.

"பூசநீர் பொழியும் புனற் பொன்னி வாசநீர் குடைவார் இடர்தீர்க்கும் வலஞ்சுழி", "நினைத்த வரத்தைத் தரும் பொன்னி," "குடைத்தலை நதிபடிய நின்று பழி தீர நல்கு கோகரணம்" எனவரும் தொடர்களால் தீர்த்தங்களில் மூழ்குவதன் மூலம் இடர் நீங்கும், பழி தொலையும், நினைத்ததை அடையலாம் என்ற கருத்துக்கள் உறுதிப்படக் கூறப்பட்டுள்ளன.

"புனல் பொன்னி தீர்த்தம் மல்கும் திரு ஆனைக்கா", "தீர்த்தம் அறாத திகழ்தெளிச்சேரி" "பாவம் தீர் புனல் மல்கிய பாற்றுறை", "தெளிக்கும் தீர்த்தம் அறாத் திருவாரூர்" போன்ற தொடர்களால் திருத்தலங்களில் பல்வேறு தீர்த்தங்கள் இருப்பதைக் குறித்துள்ளனர்.

மண்ணவர்கள் மட்டுமின்றி விண்ணோர்களும் தீர்த்தங்களில் மூழ்கி வழிபடுகின்றனர் என்பதை, "துறைபல சுனைமூழ்கி வானவர் மகிழ்ந்தேத்து பருப்பதம் பரவுவமே" என்று பருப்பத தேவாரத்திலும், "தடமூழ்கி புக்கரவர் விஞ்சையரும் விண்ணவரும் நண்ணி நக்கரவர் நாமம் நினைவெய்திய நள்ளாறே" என திருநள்ளாற்றுப் பதிகத்திலும் திருஞானசம்பந்தர் அருளிச் செய்துள்ளார்.

திருவிழாக்களின் முடிவில் தீர்த்தவாரி விழா கொண்டாடப்பட்டதை, "உத்திரநாள் தீர்த்தமாக ஒளிதிகழ் ஒற்றியூர். தீர்த்தமாம் அட்டமிமுன் ஏழுநாளும் கூத்தராய் வீதிபோந்தார்" என வரும் தேவார அடிகளால் அறிகிறோம். முன்னாளில் திரு ஒற்றியூரில் திருவாரூரில் நடப்பதைப் போலவே, பங்குனி உத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு விழா நடந்ததை இப்பாடலால் அறியமுடிகிறது. பெருந்திருவிழா இந்நாளில் மாசி மாதம் நடைபெறுகிறது. மேலும் சிலபாடல்களால் அட்டமியில் தீர்த்தவாரி விழா நடைபெற்றதையும், அது விழாவின் கடைநாள் என்பதையும் அறிந்து கொள்ள முடிகிறது.

மக்கள் தைப்பூசநாளில் மகிழ்ந்து நீராடியதை, "இடை மருது அதனில் பூச நாள் புகுந்து புனலாடவே" எனும் அப்பர்வாக்கால் அறிகிறோம். மக்கள் மட்டுமின்றி முனிவர்களும், வானவர்களும் வந்து பூசத்தில் காவிரியில் நீராடியதைத் திருஞானசம்பந்தர் குறிக்கின்றார். இவ்விழா திருவிடைமருதூரில் இன்று வரை சிறப்பாக நடைபெற்று வருகிறது.

தேவாரமாகிய ஏழு திருமுறைகளில் அரிசொல் ஆறு, கங்கை, கடுவாய், கம்பை, காவிரி, பழங்காவிரி, குடத்தலை, கெடிலம், கோட்டாறு, பம்பை, பாலாவி, பாலி (கூவம்) பொன்முகலி, பெண்ணை, மண்ணி, மணிமுத்தாறு, மணிகங்கை, வைகை முதலிய ஆறுகளின் சிறப்புக்களும்;வெள்ளப்பெருக்கில்ஆறுகள்தம்அலைக் கரங்களால் ஏந்திவரும் பொருட்கள் அது வலம் சுழித்து ஓடுதல் முதலிய செய்திகளும் விரிவாகக் குறிக் கப்பட்டுள்ளன.

அப்பர்சுவாமிகள் "தாவிமுதல் காவிரி நல் யமுனை, கோதாவரி என்று தீர்த்தங்களைப் பட்டியலிட்டுப் பாடுகிறார். சுந்தரமூர்த்திசுவாமிகள் குமரி தீர்த்தத்தைக் குறிப்பிடுவதுடன், அன்பர்கள் குருக்ஷேத்திரம், கோதாவரி, குமரி முதலியவற்றில் நீராடி மகிழ்வதையும், தவம் செய்யும் போகரும் யோகரும் அதிகாலையில் காவிரிக்குச் சென்று நீராடுவதையும் குறிக்கின்றார்.

சிவபெருமான் சூலத்தைத் தரையில் ஊன்றியும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சடையிலுள்ள கங்கையை ஓடவிட்டும் இன்னும் பலவாறு தீர்த்தங்களை உண்டாக்கினான் என்பதை அப்பரடிகள், "தீர்த்தங்கள் உருவிப்பார்" என்ற தொடரால் பாடிப் பரவுகின்றார்.

சிவபெருமான் மட்டுமின்றி தேவர்கள் சிவ வழி பாடு செய்யப் பொய்கைகளை உண்டாக்கியதும் குறிக்கப்பட்டுள்ளன. திருநின்றவூரில் திருமகள் பொய்கை உண்டாக்கியதை, "நீலமலர்ப்பொய்கை நின் றியூர்" என்றும்; அம்பரில் பிரம்மன் தன் அன்ன வடி வம் நீங்க அமைத்த பொய்கையை, "அன்னமாம் பொய்கை சூழ் அம்பரானை" என்றும், அயன் பேணும் பொய்கை என்றும் குறிக்கப்படுகின்றன. மேலும் திருச்சி யிலுள்ள "நன்றுடையான், தீயதில்லான்" எனும் பொய் கைகள் திருப்பாச்சிலாச்சிரமத்து "அன்னமாம் பொய்கை" புறம்பியத்துப் புண்டரீகம் மலரும் பொய் கை, பனங்காட்டூர் ஜடா கங்கை முதலியனவும் குறிக்கப் பட்டுள்ளன.

எட்டாம் திருமுறையில் ஒரு திருக்குளத்தைச் சிவாலயமாக உருவகப்படுத்தி மணிவாசகப் பெருமான் பாடியிருப்பதையும் காண்கிறோம்.

பத்தாம் திருமுறையில் திருமூலர் நவதீர்த்தங் களின் மகிமையையும், அவை இருப்பதாலேயே தென் னகம் தூய்மை நிறைந்த பூமியாக விளங்குகிறது என்றும் குறித்துள்ளார். நமக்குச் சிவபெருமானடியே தீர்த்தம் அதுவே நாம் மூழ்கிக் களித்திருக்கவேண்டிய இடம் என்றும் பாடுகின்றார்.

பன்னிரண்டாம் திருமுறையான பெரியபுரா ணத்துள் தென்னகத்து ஆறுகளின் பெருமைகளும் சிறப்புக்களும் பேசப்படுகின்றன காவிரி, தென் பெண்ணை, தாம்பரபரணி, வைகை முதலிய ஆறுகளின் சிறப்புக்களும், பொற்றாமரை கம்பை, மணிகர்ணிகை, கமலாலயம் முதலான பொய்கைகளின் சிறப்புக்களும் மலைகளில் நிறைந்துள்ள சுனைகளின் சிறப்புக்களும் விவரிக்கப்பட்டுள்ளன.

தென்னகத்தில் நாட்டுவளத்துடன் நீர்வளத்தையும் தனிச்சிறப்புடன் விரிவாகக் கூறும் நூல் பெரிய புராண மேயாகும்.

பொற்றாமரைக் குளம்

மலர்களில் சிறந்தது தாமரையாகும். இது வெண்டாமரை, செந்தாமரை, பொற்றாமரை என்று பலவகைப் படுகிறது. இந்திரலோகத்தில் பொன்மலர் மலரும் தாமரைக்குளம் இருப்பதாகப் புராணங்கள் கூறுகின்றன. இந்திரன் பூவுலகில் வந்து சிவவழிபாடு செய்தபோது பொற்றாமரைக் குளங்களை உண்டாக்கினான். மதுரை, திருநெல்வேலி, குடந்தை, திருச்செங்கோடு முதலிய அனேக தலங்களில் பொற்றாமரைக் குளங்கள் உள்ளன. மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தில் மீனாட்சி அம்பிகைக்கு முன்பாக பெரிய திருக்குளமாக பொற்றாமரைக் குளம் உள்ளது. இதில் பொன்முலாம் பூசிய பெரிய உலோகத்தால் செய்த தாமரைப்பூ மிதக்க விடப்பட்டுள்ளது. இதன் கரையில் சிவபெருமான் நக்கீரருக்கு அருள் செய்தான். அவர் "கோபப் பிரசாதம்" எனும் நூலைப் பாடி அருளினார். திருச்செங்கோட்டில் பொற்றாமரை மலரும் பொய்கை இருந்ததாகப் பூந்துறைப் புராணம் குறிக் கின்றது. தேவாரத்துள் குடந்தையிலுள்ள புனித நீர்நிலைகளில் ஒன்றாகப் பொற்றாமரையும் குறிக்கப்பட் டுள்ளது.

தீர்த்தமும் - விருட்சங்களும்

தீர்த்தங்கள் யாவும் மரக்கூட்டம், செடிகொடிகளின் அடியிலிருந்தே உற்பத்தியாகின்றன.கங்கை மானசரோவரம் எனும் சரவணப் பொய்கை (சரவணம் என்பது நாணல் காடு)யிலிருந்து உற்பத்தியாகிறது. அகத்தியர் தருப்பையை மந்திரித்து அனுப்ப அதன் மூலம் உற்பத்தியானதே குசஸ்தலை ஆறு. காவிரி (கன்னடதேச) பிரம்மகிரியில் நெல்லி மரத்தடியிலிருந்து உற்பத்தியாகி ஓடுகின்றாள். சுவர்ணமுகி (பொன்முகலி) ஆறும், ஆந்திர மாநிலத்திலுள்ள பிரம்மகிரி நெல்லிக்காட்டில் உற்பத்தியாகின்றாள். கோதாவிரி பஞ்சவடி (நாசிக்) அருகிலுள்ள குசாவர்த்தம் (தருப்பை வனம்) எனுமிடத்தில் தோன்றுகின்றாள். தென்னாட்டில் ஒவ்வொரு தீர்த்தத்திற்கும் ஒரு விருட்சம் உள்ளது. சில தீர்த்தங்கள் மரங்களின் பெயரால் மருதையாறு, கடம்பை தீர்த்தம், மூங்கிலடி தீர்த்தம் என்ற பெயர்களைப் பெற்றுள்ளன. ஆறுகளின் துறைகள் அங்குள்ள மரங்களின் பெயர்கள் ஆலந்துறை, கடம்பன்துறை என்ற பெயர்களைப் பெறுகின்றன. புராணங்களில் ஒவ்வொரு தீர்த்தத்திற்கும் ஒவ்வொரு மரம் தீர்த்த மரமாகச் சொல்லப்பட்டுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தீர்த்தவாரி விழாக்கள்

சைவ ஆலய பெருந்திருவிழாக்கள் யாவும் நீரோடு தொடர்புடையவையாகும். இவை கலசங்களில் புனிதநீரைச் சேகரித்து எடுத்துவரும் தீர்த்தசங்கிரமணம் எனும் நிகழ்வுடன் தொடங்கித் தீர்த்தவாரி எனப்படும் சடங்குடன் முடிவடைகின்றன. விழாவின் முக்கிய நிகழ்வு இறுதிநாளில் நடைபெறும் தீர்த்தவாரியே ஆகும்.

தீர்த்தத்தை வரித்தல் என்பதே "தீர்த்தவாரி" யாகும். தீர்த்தம் என்பது புனிதமாக விளங்கும் நீர்; வரித்தல் என்றால் உரிமையாகக் கொள்ளுதல் என்பது பொருள். விழாவின் முடிவில் இறைவன் தண்ணீரில் மூழ்கி அதைத் தூய்மைப்படுத்தித் தன்மயமாக்கும் வேளையில் மக்கள் அத்தீர்த்தத்தில் நீராடி தூய்மை பெறுதலே தீர்த்தவாரி விழாவாகும்.

சிவாலயப் பெருந்திருவிழாவின் இறுதி நாளான பத்தாம்நாள் காலையில் தீர்த்தவாரி சிறப்புடன் நடைபெறுகிறது. காலையில் முதலில் நடராசப்பெருமான் சிவகாமி அம்மையுடன் தீர்த்தக்கரைக்கு எழுந்தருளி தீர்த்தம் அளிப்பார். பிறகு சோமாஸ்கந்த மூர்த்தி பரிவாரங்களுடன் யாகசாலைகளில் வைக்கப்பட்ட பாலிகைகளுடன் தீர்த்தக்கரைக்கு எழுந்தருள்வார். அவர் முன்னிலையில் முளைப்பாலிகையின் முளைகள் நீரில் விடப்படும். பிறகு சூலதேவருக்கு அபிஷேகங்களைச் செய்து வழிபட்டபின் சூலதேவரை ஏந்தியவாறு அர்ச்சகர் நீரில் மூழ்குவார். அந்நிலையில் அந்தத் தீர்த்தம் சிவசக்தி மயமாவதால் அதில் மூழ்குவதைப் பெரும் பேறாகக் கருதுகின்றனர்.

தீர்த்தவாரியின்போது தீர்த்தமாடிப் பெருமானை வழிபட்டால்தான் விழாவைக் கண்ட பயன் பூரணமாகக் கிடைக்கும் என்று நம்பப்படுகிறது.

தீர்த்தவாரி விழாக்கள் பெரும்பாலும் ஆலயத்திற்கு முன்னுள்ள திருக்குளங்களிலேயே நடைபெறும். சிறப்பு நாட்களில் சுவாமி அருகிலுள்ள ஆறுகள் (அல்லது) கடலுக்குச் சென்று தீர்த்தம் அளிப்பார்.

பெருந்திருவிழாவின் இறுதிநாளில் மட்டுமின்றி, கிரகணம், மாசிமகம், பங்குனி உத்திரம், சித்ரா பௌர்ணமி, அர்த்தோதயம், மகோதயம் முதலிய புண்ணிய காலங்களிலும் தீர்த்தவாரி விழா கொண்டாடப்படுகிறது.

❋ சில தலங்களில் பெருந்திருவிழாவின் போது இரண்டுமுறை தீர்த்தவாரி விழா நடைபெறுகிறது. திருவாவடுதுறை, மயிலாடுதுறை, திருவெண்காடு, ஸ்ரீ வாஞ்சியம் முதலிய தலங்களில் இதனைக் காண்கிறோம். எடுத்துக்காட்டாக திருவெண்காட்டில் திருவிழாவின் நான்காம் நாளான மாசிமகத்தன்று இறைவன் காவிரி சங்கமத்திற்குச் சென்று தீர்த்தமளிக்கிறார். பத்தாம் நாளில் வழக்கம் போல் காலையில் நடராசரும் நண்பகலில் சோமாஸ்கந்தரும் தீர்த்தம் அளிக்கின்றனர்.

ஸ்ரீவாஞ்சியத்தில் மாசிமாதப் பெருவிழாவில் இரண்டாம்நாள் எமதீர்த்தத்திலும் மாசிமகத்தன்று குப்த கங்கையிலுமாக இருமுறை தீர்த்தவாரி நடைபெறுகிறது. சிவாலயங்களில் சிவமூர்த்தியே தீர்த்தம் அளிப்பார். சிலதலங்களில் முருகன் எழுந்தருளியும் தீர்த்தம் அளிக்கிறார். ஸ்ரீவாஞ்சியத்தில் கார்த்திகை ஞாயிற்றுக் கிழமைகளில் சுப்பிரமணியர் குப்தகங்கையில் தீர்த்தம் அளிப்பதைக் காண்கிறோம்.

பொதுவாக தீர்த்தவாரிக்கு, சோமாஸ்கந்த மூர்த்தியே பரிவாரங்களுடன் எழுந்தருள்வது வழக்கம். சிலதலங்களில் சந்திரசேகரர், பிட்சாடனர் முதலிய மூர்த்தங்களும் தீர்த்தவாரிக்கு எழுந்தருளி தீர்த்தம் அளிக்கின்றனர். திருவாவடுதுறையில் அணைத்தெழுந்தபிரான் எனப்படும் சந்திரசேகர மூர்த்தி தீர்த்தம் அளிக்கிறார். திருவெண்காட்டில் ஆடிமாதம் நடைபெறும் பட்டினத்தார் விழாவின் போது பிட்சாடனர் மணிகர்ணிகையில் தீர்த்தம் அளிக்கின்றார்.

திருவண்ணாமலையில் கார்த்திகை தீபப் பெருவிழாவின் இறுதிநாளான கார்த்திகை தீபத்தன்று அண்ணாமலையாருக்குப் பதில் சுப்பிரமணியசுவாமி வள்ளி தெய்வானையருடன் பிரம்ம தீர்த்தத்தில் தீர்த்தம்



❋ தீர்த்தவாரி விழாவில் நடராசப் பெருமான்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அளிப்பதைக் காண்கிறோம்.

திருமுறைகளில் தீர்த்தவாரி விழா கொண்டாடப் பட்ட செய்தி குறிக்கப்பட்டுள்ளது. திருஒற்றியூரில் பங்குனி உத்திர நாளில் தீர்த்தவாரி நடைபெற்றதை **"உத்திர நாள் தீர்த்தமாக ஒளி திகழும் ஒற்றியூர்"** என்றும், கொருக்கை, வீரட்டானத்தில் அட்டமியை கடை நாளாகக் கொண்டு விழா நடைபெற்றதை **"தீர்த்தமாம் அட்டமிமுன் சீருடை ஏழு நாளும் கூத்தராய் வீதிபோந்தார்"** என்றும் குறிக்கப்பட்டுள்ளன.

மயிலாடுதுறையில் எழுந்தருளியுள்ள மாயூரநாதரும் அபயாம்பிகையும் ஐப்பசி முப்பது நாளும் காவிரிக்கு எழுந்தருளி தீர்த்தம் கொடுக்கின்றனர். அன்பர்கள் இங்குவந்து அவ்வேளையில் தீர்த்தமாடுகின்றனர். ஐப்பசிமாதக் கடைநாளன்று தீர்த்தவாரி விழா பெரிய அளவில் கொண்டாடப்படுகிறது. இதை கடைமுக ஸ்நானம் என்றழைக்கின்றனர். இந்நாளில் மயிலாடுதுறையிலுள்ள பலகோயில்களிலிருந்து சுவாமிகள் காவிரிக்கரைக்கு எழுந்தருள்கின்றனர். காவிரியின் இருகரையிலும் முப்பதுக்கும் மேற்பட்ட சுவாமிகள் வாகனங்களுடன் எழுந்தருள்வது கண்கொள்ளக் காட்சியாகும். திருவாவடுதுறை ஆதீன குருமகாசந்நிதானம் இந்த விழாவுக்கு எழுந்தருளி அன்பர்களுக்கு ஆசியருள்கின்றார்கள். கடைமுகத்திற்கு அடுத்த நாள் (கார்த்திகை முதல் தேதி) முடவன் முழுக்கு எனப்படுகிறது. இந்நாளிலும் அனேகர் தீர்த்தமாடுகின்றனர்.

❀ ஆடிமாதம் பூரநட்சத்திரத்தில் அம்பிகைக்கு ஆடிப்பூரவிழா நடைபெறும். அதிகாலையில் அம்பிகையை அருகிலுள்ள ஆற்றுக்கோ, பெரிய குளத்திற்கோ எழுந்தருளி வைத்து அங்கு அபிஷேகம் நடத்தப்பெறும். அங்கு வரும் பெண்களுக்கு மஞ்சள், நல்லெண்ணை, சிகைக்காய் முதலியவற்றை வழங்குகின்றனர். இதற்கு **"பூரம் ஆராட்டு"** என்பது பெயராகும். இது அம்பிகைக்கு உரிய தீர்த்தவாரி விழாவாகும். காவிரிக்கரையோரம் அமைந்துள்ள திருத்தலங்களில் அம்பிகையை காவிரிக்கு எழுந்தருளச் செய்து நீராட்டி விழா காண்கின்றனர்.

நீரும் நெருப்புமாகி ஆடும் பிரான்

செம்பொருட் சோதித் தீயாக விளங்குபவன் சிவபெருமான். அவன் ஓயாது உலகம் இயங்கும் பொருட்டு ஆனந்தமாநடம் ஆடிக்கொண்டே இருக்கின்றான். அவன் அருளாக வெளிப்பட்ட பராசக்தியின் வடிவமாகத் திகழ்வது தண்ணீராகும். சிவபெருமான் நீரோடு இணைவது சிவசக்தி சங்கமமாகும். இதுவே உலக உயிர்களிடத்தில் பரஸ்பர இன்பத்தை வளர்ப்பதாகும். இதை உணர்த்தவே விழாவின் இறுதி நாளில் நடராசப்பெருமான் தீர்த்தவாரி விழாவுக்கு முதலில் எழுந்தருளி அன்பர்களுக்கு அருள்பாலிக்கின்றார். பின்னரே அத்தலத்திற்குரிய மூர்த்தி தீர்த்தம் அளிக்கும் தீர்த்தவாரி நடைபெறுகிறது.

திருவெம்பாவையில் இறைவன் அருள்மயமான தீர்த்தமாக விளங்குவதால் **"தீர்த்தன்"** என்று அருளிச்செய்த மாணிக்கவாசகர் தொடர்ந்து அவனே பெரும் தீயாக விளங்குகிறான் என்பதால், **"நல்தில்லை சிற்றம்பலத்தே தீயாடும் கூத்தன்"** என்றும் அருளிச்செய்துள்ளார். மேலும் அவனும் அவளும் சேர்ந்து உலகத்தைப் படைத்தும் காத்தும் மறைத்தும் விளையாடுகின்ற அருள் விளையாட்டையும் குறிக்கின்றார்

திருவாவடுதுறையில் அணைத்தெழுந்த பிரான் எனப்படும் சிவமூர்த்தி விழாவின் இறுதிநாளில் எழுந்தருளி தீர்த்தம் அளிக்கின்றார். இவ்வேளையில் தீர்த்தம் சிவசக்திமயமாக விளங்குவதை உணர்த்தவே பெருமான் அம்பிகையைத் தழுவிக் கொண்டுள்ளார் என்று கூறுகின்றனர்.

காவிரியாய் - காலாறாய் - கழியுமாகி

சிவபெருமான் எங்கும் பரந்து விரிந்திருக்கின்ற நிலையை விரிவாகக் கூறித் துதிக்கும் பாசுரம் திருநாவுக்கரசரின் "நின்ற திருத்தாண்டகம்" ஆகும். இதில் பெருமான் கங்கையிலும் புனிதமான காவிரியாய் இருப்பது போலவே அதிலிருந்து கால்பிரிந்து ஓடும் வாய்க்காலாகவும் ஒன்றுக்கும் உதவாத கழியுமாகவும் இருக்கின்றான் என்று குறிக்கின்றார். 'கழி' என்பது கடல்நீர் நிலப்பகுதிக்குள் தேங்கிநிற்கும் நீர்நிலை. இது பரந்து விரிந்திருந்தாலும் குடிக்கவோ விளைநிலங்களுக்குப் பாய்ச்சவோ பயனாவதில்லை. இது நின்ற இடமும் பயனாவதில்லை. கங்கை போன்ற புனிதநீராகப் பெருமான் விளங்குவது போலவே ஒன்றுக்கும் உதவாத நீராகவும் விளங்குகின்றான். இது அவன் அருள் வழங்குவதில் ஏற்றத்தாழ்வு பாராட்டுவதில்லை என்பதைக் காட்டுகிறது என்பர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மருத்துவ குணம் மிக்க தீர்த்தங்கள்

தீர்த்தங்கள் பொதுவான நிலையில், தன்னில் நீராடும் அன்பர்களுக்கு உடல் தூய்மையுடன், மனத் தூய்மையையும் தருகின்றன. சில தலங்களில் அமைந்துள்ள தீர்த்தங்கள் அபூர்வ சக்தி கொண்டுள்ளன. இவற்றில் சில சித்தசுவாதீனமின்மை, மனநலக்குறை ஆகியவற்றை நீக்குகின்றன. சில மலட்டுத்தன்மையை நீக்கிப் பிள்ளைப் பேற்றை அளிக்கின்றன. சில தீர்த்தங்கள் வசியத் தன்மையை அதிகரிக்கச் செய்து திருமணத் தடை, வறுமை ஆகியவற்றை நீக்குகின்றன. இவற்றில் சிலவற்றை இப்பகுதியில் அறிந்து மகிழலாம்.

சிலப்பதிகாரத்தில், கணவனைப் பிரிந்துவாடும் கண்ணகியிடம் அவளுடைய தோழியான தேவந்தி பூம்புகாரின் புறத்தேயுள்ள சோமகுண்டம், சூரியகுண்டம் எனும் தீர்த்தங்களில் மூழ்கி வழிபடின் அவள் கணவன் அவளிடம் திரும்பி வருவான் என்று கூறுகிறாள். இதன்மூலம் இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பே பிரிந்தவர் கூடி மகிழத் தீர்த்தங்களில் மூழ்கி வழிபடும் வழக்கமும் நம்பிக்கையும் இருந்ததை அறிய முடிகிறது.

திருவெண்காட்டிலுள்ள சூரிய தீர்த்தம் சந்திரதீர்த்தம் ஆகியவையே சிலப்பதிகாரத்தில் கூறப்படும் சோமகுண்டம், சூரியகுண்டம் என்று ஆராய்சியாளர் கூறுகின்றனர். இவற்றுடன் அக்கினி தீர்த்தமும் உள்ளது. இத்தலத்துக்கு எழுந்தருளிய திருஞானசம்பந்தர் இத்தீர்த்தங்களை "வெண்காட்டு முக்குளநீர்" என்றழைத்து இதில் மூழ்கினால், "பேய் அண்டாது; பிள்ளைப்பேறு உண்டாகும். இதில் ஐயுற வேண்டா" என்று உறுதிபடக் கூறுகிறார். இந்தத் தேவாரப்பாடல்களில் நம்பிக்கை வைத்து இங்கு வந்து முக்குளங்களில் நீராடி வெண்காட்டாரை வழிபட்ட அச்சுதகளப்பாளர் என்ற சிற்றரசருக்குப் பிறந்தவரே சைவ சித்தாந்தத்தை ஒளியூட்டிப் பரப்பிய மெய்கண்ட தேவ நாயனார். திருவெண்காட்டில் அக்னி தீர்த்தக் கரையில் சிறு தனிச்சந்நிதியில் விநாயகருடன் மெய்கண்ட தேவநாயனாரும் எழுந்தருளியுள்ளார்.

திருமுருகன் பூண்டியில் உள்ள பிரம்மதீர்த்தத்தில் ஒரு மண்டலம் நீராடி ஆலயத்தை வலம்வர, மன சஞ்சலம், சித்தப்பிரமை ஆகியன நீங்கும் என்ற நம்பிக்கை காலங்காலமாக நிலவிவருகின்றது. மனநோயாளிகள் பலர் இங்குத் தங்கி நீராடி வழிபடுகின்றனர்.

வடாற்காடு மாவட்டம் திருவிரிஞ்சிபுரம் மார்க்கசகாயசுவாமி ஆலயத்தில் பெரிய சிம்மதீர்த்தம் உள்ளது. இந்த தீர்த்தத்தில் பெண்கள் கார்த்திகை மாத ஞாயிற்றுக் கிழமைகளில் நீராடி பிராகாரத்தில் உறங்குகின்றனர். அவர்கள் கனவில் அம்பிகை தோன்றி பூ, பழம், பாலாடை முதலியவற்றை அளித்தால் அவர்களுக்கு புத்திரப்பேறு விரைவில் உண்டாகும் என்று நம்புகின்றனர். கார்த்திகை மாதக் கடை ஞாயிற்றுக் கிழமையில் ஏராளமான பெண்கள் இதில் நீராடி ஆலய வளாகத்தில் தங்குகின்றனர். இது காலங்காலமாக இருந்துவரும் நம்பிக்கையாகும்.

மதுராந்தகம் திருவெண்காடீசர் ஆலயத்திற்கு முன்பாக, சிறுகுட்டையாக ஒரு தீர்த்தம் உள்ளது. இதில் மூழ்கி வழிபடக் கருங்குட்டம் வெண்குட்டம் முதலான சருமநோய்கள் தீருமென்று கூறுகின்றனர்.

மயிலாடுதுறையில் துலாக்கட்டத்திற்கு அருகிலுள்ள ஊர் கருங்குயில்நாதன் பேட்டையாகும். இந்நாளில் கர்ணாப்பேட்டை என அழைக்கப்படுகின்றது. இங்குள்ள சத்திபுரீசுவரர் ஆலயத்ினையொட்டி கருணா தீர்த்தம் உள்ளது. இதில் மூழ்கிவரத் தோல் நோய்கள் நீங்கும் என்று கூறப்படுகிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு குட்டநோயாளி ஒருவர் தொடர்ந்து ஓராண்டு காலம் மூழ்கி அந்தநோய் நீங்கப் பெற்றார் என்று அன்பர்கள் குறித்துள்ளனர்.

திருத்தினைநகர் எனப்படும் தீர்த்தனகிரியில் சிவக்கொழுந்தீசர் ஆலயத்திற்கு அருகில் அமைந்துள்ள தாமரைக்குளத்தில் நீராடிவந்தால் குட்டநோய் தீரும் என்று சொல்லப்படுகிறது.

அக்னி வழிபட்டுப் பேறுபெற்ற தலமான அன்னியூரிலுள்ள அக்னி தீர்த்தத்தில் மூழ்கி இறைவனை வழிபட்டால் இரத்தக்கொதிப்பு, உஷ்ணரோகம் முதலிய நோய்கள் நீங்கும் என்று நம்புகின்றனர்.

தலையாலங்கானம் என்னும் வரலாற்றுப் புகழ்பெற்ற தலத்திலுள்ள தீர்த்தத்தில் மூழ்கி வழிபட்டுவர வெண்குட்டம் தீரும் என்கின்றனர்.

திருப்பயற்றூர் எனும் தலத்திலுள்ள தீர்த்தத்தில் மூழ்கினால் கண்ணொளி கிடைக்கும் என்று நம்புகின்றனர். இக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள ஓர் கல்வெட்டு கண்ணோயால் வருந்திய பஞ்சநதவாணன் என்பவன் இத்தலத்திலுள்ள தீர்த்தத்தில் மூழ்கி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அந்நோய் நீங்கப் பெற்றுக் காணிக்கையாக நிலம் அளித்துள்ளான் என்ற செய்தியைத் தெரிவிக்கிறது.

காஞ்சிபுரம் கச்சபேசுரர் ஆலயத்திலுள்ள தீர்த்தம் இஷ்டசித்தி என்பதாகும். இதில் மூழ்கி இதன் கரையிலுள்ள சூரியனை வழிபட்டால் இழந்த கண்ணொளியைப் பெறலாம் என்பது நம்பிக்கையாகும். வடநாட்டு அரசன் காஞ்சியில் தங்கிப் படித்து வந்தபோது கண்களை இழந்தான். அவன் பெரியோர்களின் ஆலோசனைப் படி இஷ்டசித்தி தீர்த்தத்தில் மூழ்கிக் கச்சபேசரரையும் சூரியனையும் வழிப்பட்டு வந்ததன் பயனாக கண்ணொளியை மீண்டும் பெற்றான். இதனை நினைவூட்டும் வகையில் மயூக சதகம் நூலை பாடியுள்ளான். இதனை சூரிய சதகம் என்றும் அழைப்பர்.

இதுபோன்று மருத்துவகுணம் மிக்க அனேக தீர்த்தங்கள் தென்னகமெங்கும் உள்ளன.

பேரூர் நச்சுப் பொய்கையும் ரசவாத தீர்த்தமும்

கோயம்புத்தூரின் ஒரு பகுதியாக திகழ்வது பேரூர். இது கொங்குநாட்டுச் சிதம்பரம், அரசம்பலம், பட்டீச்சரம் எனப் பலவாறு அழைக்கப்படுகிறது. இங்கு முப்பத்திரெண்டுக்கும் மேற்பட்ட தீர்த்தங்கள் இருப்பதாகப் புராணங்கள் கூறுகின்றன. இவற்றில் ஒன்று நச்சுப் பொய்கைத் தீர்த்தமாகும். இதன் தண்ணீரை அருந்தினால் மரணம் உண்டாகும். அதனால் அதனை மூடி அதன்மீது பட்டி விநாயகர் சந்நிதியை அமைத்துள்ளனர். மேலும் பேரூர் பட்டீசர் கோயிலுக்கு வடக்கே அமைந்துள்ள வடகயிலாயம் எனும் கோயிலில் பிரம்ம தீர்த்தம் என்ற கிணறு உள்ளது. இதில் செப்புக்காசுகளை இட்டு வைத்தால் அதன் களிம்பு நீங்கிப் பளபளப்பாக மாறுகிறது. சித்தர்கள் இக்கிணற்று நீரை விட்டு மூலிகைகளை அறைத்துச் செம்போடு சேர்த்துப் புடமிட்டு பொன்னாக்கினர் என்று செவிவழிச் செய்திகள் கூறுகின்றன.

"ஊறல் அமர்ந்த உமாபதி"

இயற்கையாக ஊறி வரும் தண்ணீருக்கு ஊற்று என்பது பெயர். மணற்பாங்கான இடங்களிலும் பெரும் பாறைகளுக்கு இடையிலேயும் இயற்கையான நீரூற்றுக்கள் அமைந்துள்ளன. கொடும் கோடையில் சுற்றுப்புறத்திலுள்ள நீர்நிலைகள் வறண்டுவிட்டபோதிலும் இந்த ஊற்றுகளில் தண்ணீரின் அளவு குறையாமலும் கூடாமலும் நீர் பொங்கி வருவது இயற்கையின் அதிசயமாகும். காஞ்சிபுரம் மாவட்டத்தில் இத்தகைய ஊற்றுகள் பல உள்ளன. பாடல் பெற்ற திருத்தலமான திருஊறலில் (தக்கோலம்) பூமிக்கு அடியில் உற்பத்தியாகி வந்த நீரை ஒரு நந்தி உருவத்தின் வாய் வழியாக வெளிப்பட்டு ஆலயத்தை இடமாக வலமாகச் சுற்றிக் கொண்டு ஓடி ஒன்று சேர்ந்து, மீண்டும் மற்றொரு நந்தியின் வாய் வழியாக வெளியேறி ஒரு குளத்தில் விழுந்து பின்னர் ஓடி அருகிலுள்ள ஆற்றில் விழும்படி செய்திருந்தனர். இந்நாளில் இந்த அமைப்பு பாழ்பட்டுவிட்டது. இதற்கு அருகிலுள்ள ராமகிரி எனும் தலத்தில் மலைக்கு அடியில் ஊறி வரும் நீர் ஒரு நந்தியின் வாய் வழியாக விழுந்து குளத்தை நிறைத்தபின் மற்றொரு நந்தியின் வாய் வழியாக வெளிப்பட்டு ஓடுவதைக் காண்கிறோம். இத்தீர்த்தத்தின் கரையில் மகா பைரவர் ஆலயம் சிறப்புடன் திகழ்கிறது. ஆந்திர மாநிலத்தில் அனேக சிவாலயங்கள் ஊற்றுடன் தொடர்பு கொண்டுள்ளன.

திருச்சி மாவட்டம் லால்குடி வட்டத்தில் ஊட்டத்தூர் எனும் ஊரில் தனியாக நந்திதேவருக்கு பெரிய சந்நிதியுள்ளது. இவருடைய வாயிலிருந்து ஒரு ஊற்று பெருகி வழிந்து கொண்டிருக்கின்றது. இதிலிருந்தே நந்தியாறு உற்பத்தியாகி ஓடுகிறது என்கின்றனர். நந்தியாறு இறுதியில் வெள்ளாற்றில் கலந்து விடுகிறது.

வெள்ளிப் பனிமலையாகிய இமயத்தின் சாரலில் ஆங்காங்கே வெந்நீர் ஊற்றுக்கள் உள்ளன. கேதாரநாதர் ஆலயத்திற்குச் செல்லும் வழியிலுள்ள கௌரிகுண்டம் தீர்த்தபுரியிலுள்ள பஸ்மாஸுரகுண்டம் முதலியவை சிறந்த வெந்நீர் ஊற்றுகளாகும்.

"திருவடியில் ஊறி வரும் தீர்த்தம்"

ஏறத்தாழ 1075 அடி உயரம் கொண்ட செங்குத்தான மலை திருச்செங்கோடாகும். இதன் உச்சியில் உமையொரு பாகனாகச் சிவபெருமான் (அர்த்த நாரீசுவரர் கோலத்தில்) எழுந்தருளியுள்ளார். இவருடைய பாதத்தடியில் ஒரு அடி நீளம் ஒரு அடி அகலம் ஒரு அடி ஆழம் கொண்ட சிவ பள்ளம் உள்ளது. இதில் எப்போதும் நீர் சுரந்து கொண்டே இருக்கிறது. இதைச் சங்கால் முகந்துப் பிரசாதமாக அளிக்கின்றனர். அள்ள அள்ளக் குறையாத அமுத ஊற்றாக இப்பள்ளம் உள்ளது. இது மருத்துவ குணங்கள் நிரம்பியதாகும். நெடிய மலையின் முகட்டில் சுரந்துவரும் இந்த நீர் இயற்கையின் அதிசயங்களில் ஒன்றாகும். இதனைத் தேவ தீர்த்தம் என்றழைக்கின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தீர்த்தக் கரைகளில் நடந்த அற்புதங்கள்.

சமயவரலாற்றில் அனேக அற்புத நிகழ்ச்சிகள் தீர்த்தக்கரைகளில் நடைபெற்றதாகப் புராணங்கள் கூறுகின்றன. குறிப்பாகச் சமய குரவர் நால்வர் வாழ்விலும் தீர்த்தக்கரைகள் சிறப்பான இடத்தைப் பெறுகின்றன. தீர்த்தக்கரையில் நடைபெற்ற அற்புதங்கள் சிலவற்றை இப்பகுதியில் காணலாம்.

❁ சீர்காழியில் பிரம்ம தீர்த்தக்கரையில், அம்மையே. அப்பா என்றழுத மூன்றுவயதுக் குழந்தையான திருஞானசம்பந்தருக்குச் சிவபெருமான் ஆணையின் வண்ணம் உமையவள் தனது திருமுலைப்பாலை பொற்கிண்ணத்தில் அளித்தாள். அப்பாலையுண்ட பெருமான் சிவஞானம் கைவரப் பெற்று "தோடுடைய செவியன்" என்று பாடத்தொடங்கினார். அவர் அருளிய பாடல்கள் பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகளாகத் திகழ்கின்றன.

❁ திருக்கயிலையைக் காணும் ஆவலில் அதன் அடிவாரம்வரை சென்ற அப்பரடிகள் மிகவும் துன்பங்களை அடைந்தார். அப்போது சிவபெருமான் ஒரு வயோதிகராக அவர் முன் தோன்றி. அன்பரே! கயிலையைக் காண்பது கடினம். நீர் தென்னகம் மீள்க என்றார். அப்பரடிகள். "ஐயனே நான் மாளும் இவ்வுடல் கொண்டு கயிலையைக் காணாது மீளேன்" என்று உறுதிபடக் கூறித் தனது பயணத்தைச் சிரமத்துடன் தொடர்ந்தார்.

அவருடைய உறுதியைக் கண்டு மகிழ்ந்த பெருமான். "அடிகளே இக்குளத்தில் மூழ்குக. எழும் போது கயிலையைக் காண்பீர்கள்" என்றார். அடிகளார் அவர் சொற்படியே அங்கே மூழ்கினார். திரும்ப எழுந்த போது தாம் திருவையாற்றுக் குளத்தில் இருக்கக் கண்டார். அங்கே களிறும் பிடியும். மந்தியும்கடுவனும். ஆண்மானும்பெண்மானும். அன்னமும். மட அன்னமும் என இணை இணையாகத் தோன்றின.சிவபெருமான் உமையுடன் கயிலை மலையில் வீற்றிருக்கும் கோலத்தில் காட்சி நல்கினார். அதைக் கண்டு மகிழ் வெய்திய அடிகளார் "மாதர் பிறைக் கண்ணியானை" என்ற பதிகத்தைப் பாடினார்.

அவர் எழுந்த திருக்குளம் திருவையாறு ஐயாறப்பர் ஆலயத்திற்கு வடக்கே அமைந்துள்ளது. இந்நாளில் இதை உப்பங்குளம் என அழைக்கின்றனர். இதன் கரையிலுள்ள விநாயகர் கோயிலில் அப்பர் சந்நிதி உள்ளது. இதில் அப்பர் கயிலையைக் கண்டு மகிழ்வது ஓவியமாக தீட்டப்பட்டுள்ளது. திருப் புகலூரிலுள்ள ஒரு கல்வெட்டு திருநாவுக்கரசரைக் "குளிச்செழுந்த நாயனார்" என்று குறிப்பதும் இங்கே எண்ணத்தக்கதாகும்.

❁ சுந்தரமூர்த்தி சுவாமிகள் கொங்கு நாட்டு அவிநாசி சென்றபோது ஒரு மடுவில் பல ஆண்டுகளுக்கு முன்பாக முதலை விழுங்கிய பாலகனை அவர்கள் பெற்றோர்கள் மகிழத் திரும்பி அளிக்குமாறு சிவனிடம் வேண்டினார். அவர் வேண்டியவண்ணம் மழை பொழிந்து அந்த மடுவில் வெள்ளம் வந்து அவ் வெள்ளத்தில் முதலை வந்து. அது தான் விழுங்கிய பாலனை உமிழ்ந்தது. பெற்றோர்கள் மகிழ்ந்தனர். அந்த மடுவை அவிநாசியில் இன்றும் காணலாம்.

மேலும் சுந்தரமூர்த்திகள் திருமுதுகுன்றம் சென்று வழிபட்டபோது சிவபெருமான் அவருக்குப் பொற்கட்

சுந்தரர் முதலைவாய் பிள்ளையை மீட்டது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

டிகளை அளித்தார். சுந்தரர், "பெருமானே! இவற்றை எவ்வாறு சுமந்து செல்வேன். இவற்றை இங்குள்ள மணிமுத்தாற்றில் இட்டுவிடுகின்றேன். மீண்டும் இவற்றைத் திருவாரூரிலுள்ள கமலாலயத்தில் எடுத்துக் கொள்ள அருள்புரிக" என்றார். சிவபெருமானும் அப்படியே ஆகட்டுமென்றார். சுந்தரர் பல தலங்கள் வழிபட்ட பின் திருவாரூருக்கு வந்தார்.

தியாகேசப் பெருமானை வணங்கி பலரும் காண திருவாரூர் பெரிய குளமான கமலாலயத்தின் ஈசான மூலையில் மூழ்கி, பொற்கட்டிகளை எடுத்தார். அந்தத் தங்கக் கட்டிகளை உரைகல்லில் உரைத்து மாற்று பார்த்து கூறிய விநாயகர் மாற்றுரைத்த பிள்ளையார் என்ற பெயரில் அக்குளக்கரையில் வீற்றிருக்கிறார். இவருடைய ஆலயத்தின் மேலே சுந்தரர் "ஆற்றில் பொற் கட்டிகளை இடுதல், கமலாலயத்தில் மீண்டும் எடுத்தல், விநாயகர் மாற்றுரைத்தல் முதலிய வரலாற்றை விளக் கும் சுதைச் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த வரலாற்றை அடிப்படையாகக் கொண்டே, "ஆற்றில் கெடுத்துக் குளத்தில் தேடிப் பெறுமாறு போல" என்ற பழமொழியும் தோன்றியது.

சுந்தரமூர்த்தி சுவாமிகளின் உடலில் வெப்பு நோய் உண்டானபோது அவர் திருத்துருத்தி சொன்னவாறு அறிவார் ஆலயத்திலுள்ள ஒரு குளத்தில் மூழ்கி எழ அவருடைய நோய் நீங்கியதாகத் தலபுராணம் கூறுகிறது. இதையொட்டி அத்தீர்த்தம் சுந்தரதீர்த்தம் என்று அழைக்கப்படுகிறது.

திருஒற்றியூரில் கண்களை இழந்த சுந்தரர் காஞ்சியில் ஏகம்பரரை வழிபட்டு இடது கண் பார்வையைப் பெற்றார். பின்னர் திருவாரூர் சென்று துவாய் மொழி நாதரை வணங்கி அங்குள்ள குளத்தில் மூழ்கி வலது கண்பார்வையைப் பெற்றார் என்று தலபுராணம் கூறுகிறது.

❀ தம் மனைவி "எம்மைத் தீண்டுவீராகில் திருநீல கண்டம்" என்று சொன்ன, ஆணைமொழியால் மனைவியைத் தீண்டாது வாழ்ந்த திருநீலகண்ட நாயனாரும் அவர் மனைவியும் இறைவன் ஆணைப்படி சிதம்பரம் திருப்புலீச்சரத்தின் முன்னேயுள்ள குளத்தில் மூழ்கி இளமையுடன் எழுந்தனர். அந்த தீர்த்தம் "இளமையாக்கிய தீர்த்தம்" என்றழைக்கப்படுகிறது. இதன் படித்துறையில் திருநீலகண்டரும் அவர் மனைவியும் வயோதிகக் கோலத்துடனும் குளத்தில் மூழ்குதல் பின்னர் இளமைக் கோலத்துடன் எழுதல் அவர்களுக்குப் பெருமான் காட்சியளிப்பது ஆகியன புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளன. இவர்கள் பணி செய்த புலீச்சுவரர் ஆலயம் இந்நாளில் இளைமையாக்கினார் கோயில் என வழங்குகிறது.

❀ திருத்தலையூர் எனும் தலத்திலுள்ள குளத்தில் கழுத்தளவு நீரில் நின்று ஸ்ரீருத்திரத்தை ஓதிய உருத்திரபசுபதி நாயனார் வீடுபேறு பெற்றார். இத்தலம் இந்நாளில் திருத்தளூர் என வழங்குகிறது.

❀ திருவாரூரில் திருக்குளப்பணி செய்து பேறு பெற்றவர் தண்டியடிகள். பிறவியிலேயே கண்பார்வை அற்றவராக விளங்கிய அடிகள். ஆரூர்ப் பெருமான் அருளால் யாவரும் காணத் திருக்குளத்தில் மூழ்கி கண்கள் பெற்றதைப் பெரியபுராணம் தெரிவிக்கிறது.

இவ்வாறு தீர்த்தக்கரைகளில் நடைபெற்ற அனேக அதிசய நிகழ்ச்சிகளை மகாபுராணங்களும் தலபுராணங்களும் விரிவாகக் கூறுகின்றன. தீர்த்தங்கள் இந்த அற்புத நிகழ்ச்சிகளுக்குச் சாட்சியாக அமைந்துள்ளன.

பொற்றாமரைக் குளத்தில் தோன்றிய புனிதன்

திருத்தருமபுர ஆதீனத்தில் பூஜா மூர்த்தியாக விளங்கி வரும் ஆலாவாய் அண்ணலாகிய சொக்க மூர்த்தியும் நீரினின்று கிடைத்த மூர்த்தியேயாவார். இந்த ஆதீனத்தின் குரு முதல்வரான குருஞானசம்பந்தர் இளம் வயதில் தம்தாய்தந்தையருடன் மதுரைக்குச் சென்று தங்கியிருந்தார். ஒரு சமயம் அவர் சொக்கலிங்கப்பெருமானை வழி பட்டுப் பொற்றாமரைக் குளக்கரையில். சிவபூசை செய்யும் அடியவர்களைக் கண்டு மகிழ்ந்து தாமும் அவர்களைப் போல் சிவபூசை செய்ய விரும்பினார். அன்றிரவு சிவபெருமான் அவர் கனவில் தோன்றி, "அன்பனே! நாளை பொற்றாமரைக் குளத்தின் ஈசான மூலையில் மூழ்குக. நாம் உமக்குக் கிடைப்போம்" என்றார். அதன்படியே மறு நாள் குருஞானசம்பந்தர் இறைவனைத் தொழுது பொற்றாமரைக் குளத்தில் மூழ்கினார். அவர் திருக்கரத்தில் சொக்கநாதர் பூஜா பெட்டகத்துடன் வந்து சேர்ந்தார். அன்றிலிருந்து குருஞானசம்பந்தர் தொடங்கி இம்மடத்தில் வழிவழியாக குருமார்களால் அவர் சிறப்புடன் வழிபடப்பட்டு வருகிறார்.

தண்நிறை செல்வி உமாதேவி உடனாய செழுநீர்த் திரளாம் சிவபெருமான் அருளினால் அன்பர்கள் எல்லா நலன்களும் பெற்று இனிது வாழ்க!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவமஞ்சரி

சிவபெருமானுக்கு சொல்லால் கட்டப்பட்ட திருக்கோயில்
சிவபெருமானின் எல்லையற்ற பெருமைகளை இயன்றவரை பேசும் நூல்